வரலாற்றில் பிறந்த வைணவம்

வெளியீடு:

அருள்மிகு சார்ங்கபாணிசுவாமி திருக்கோயில்

திருக்குடந்தை.

ஸ்ரீ :
ஸ்ரீ கோமளவல்லீ நாயிகா ஸமேத
அபர்யாப்தாமிர்த பரபிரம்மணே நமக:

வரலாற்றில் பிறந்த வைணவம்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியார்
கும்பகோணம்.

மு. செல்லபெருமாள், B. Com.,
செயல் அலுவலர்

வெளியீடு :

ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமி தேவஸ்தானம்
கும்பகோணம்.

உரிமை] 1973 [விலை 12—00

பொருளடக்கம்.

பக்கம்

முகவுரை	I
பதிப்புரை	III
நூனமுகம்	VI
உதவிய நூலகள	X
Abbreviations	XIV

I தோற்றுவாய்

1	மதங்கள் அநாதி	1
2	எதற்கும வேதமே அடிப்படை	2
3	வேதகாலம	2
4	முத்தொழில்கள்	4
5	வைணவததோற்றம்	5
6	மத உணாச்சிக்கு வரலாற்றறிவு தேவையா ?	6
7	அஞ்ச வேண்டா	7
8	விஞ்ஞானமும், மதமும்	7
9	வேதமதம	8
10	வர்ண தர்மம இல்லை	9
11	கவிகள் வாககில் வரலாற்றுண்மை	,,
12	ஞானிகள் சிந்தனை	,,
13	மதாசாரியர்தம பொறுப்பு	10
14	ஆராயச்சிவேணடும	,,
15	வைணவத்தைப்பறறிய பொதுவான கருத்துக்கள	,,
16	வடஇந்திய விண்ணகரங்கள்	12
17	வேறுபாடு	,,
18	தமிழகத்திலுளள வைணவத்தின் நிலை	,,
19	வடகலை — தென்கலை	13
20	தென்னாட்டு வைணவம்	14

பககம்

21 பஜனை முறை இல்லை 14
22 இராமாநுஜர் கருத்து ,,
23 நாராயணு என்னும நாமம் 15
24 வேத உபநிடதங்களில் வழிபாடு 16
25 ஆகமங்களில் — வழிபாடு ,,

II தமிழ்நாட்டு வைணவ வரலாற்றுச் சுருக்கம்

1 வேதமே மூலாதாரம் 17
2 தொடக்க வளர்ச்சி ,,
3 நாதமுனிகள பிரசாரம் 18
4 இராமாநுஜர் ,,
5 ஆகமக்கலபபு 19
6 இராமநுஜர் வரை வைணவக் கொளகை வளர்ச்சி ,,
7 விககிரக வழிபாடு 21

III தமிழ்நாட்டு ஆலய வழிபாட்டின் தனிப்பெருமை

1 தமிழ்நாட்டில் ஆலய வழிபாட்டுத் தொன்மை 22
2 ஆலயங்களது ஆக்கம் ,,
3 ஆலயங்களின் சிறப்பு 24
4 விக்கிரக வழிபாடு 25
5 உருவவழிபாட்டில் மனநிறைவு ,,
6 பூசை விழாக்கள புகுதல் 26
7 பயன் வேறு ,,
8 விஞ்ஞான வழியில் கடவுட் சிந்தனை 27
9 யுக்திவாதங்களுக்கு அப்பாறபட்டது கடவுள் தத்துவம 28
10 கடவுள் பறறி கருத்துப் பன்மை 29
11 இராமாநுஜரும சங்கரரும ,,
12 உணர்வரிது இறைநிலை 30

		பக்கம்
13	வேத விளககம்	30
14	இரட்டை வழி	,,
15	உருவ வழிபாடு பகுத்தறிவுக்கு முரண்பட்டதன்று	31
16	மனத்தின் மாண்பு	32
17	இன்பதுன்ப உணர்வுகள்	33
18	பிரும்மானந்தப் பேறு	34
19	தியான நிலையில் இறைவழிபாடு	35
20	உருவ வழிபாட்டில் தெய்வ பாவனை ஊன்றுதல்	36
21	அழகுணர்ச்சியிடைத் தெயவ வுணர்ச்சி	,,
22	தெய்வ அழகு உலகியல அழகின் வேறுபடுதல்	36
23	ஆலயத்தின் அழகுத்தோற்றம்	,,
24	ஆலயம் அக உலகத்தை ஆட்கொள்ளும் பணி	37
25	விக்கிரகம் பற்றி ஆகமம கூறுவது	38
26	பூசனை முதலியன	39
27	விக்கிரக வழிபாட்டின் சிறப்பு	,,
28	ஆலயமே பிரசாரமேடை	40
29	அர்ச்சாவதாரமே இறைவனது மந்திர வடிவம்	41
30	ஆண்டுப பெருவிழா	,,
31	திருவிழா முடிவு நாள்	42
32	திருவிழாக்களில் மக்கள	42
33	மூவகைப் பூசனைகள்	43
34	அர்ச்சனை	44
35	அரசர்தம் நன்றிக்கடன்	,,
36	மக்களே கோயிற் பாதுகாவலர்	45
37	உடல நலம் பேணுவதும் கோயில்	,,
38	விககிரகக காட்சி	,,
39	தலபுராணம்	46

		பக்கம்
40	ஆழ்வார்களால் தலபுராணக கதைகள் புறக்கணிக்கப்பட்டமை	46
41	பலகோயில்கள் எதற்கு	47
IV	**வைணவம் பற்றிய வரலாற்றுச் சான்றுகள்**	
1	தமிழகத்துக கோயில் வளம்	48
2	சுடுமண் முதலியவற்ருல கோயில் எடுககப்பட்டமை	,,
3	சங்க இலக்கியத்துள் கடவுளர்	49
4	ஆழ்வார்கள் காலத்துக் கோயில்கள்	52
5	கோயில்களின் அமைப்பு வளாச்சி	,,
6	கல்வெட்டுச்சான்று	,,
7	அறியபபடுவன	53
8	வரலாறு ஓரளவு புலப்படும்	,,
9	கோவில்களுக்கு ஆக்கம்	54
10	பிற்கால அமைப்புக்கு ஆகமம் பிரமாணமாகாது	,,
11	மதவேறுபாடின்றிக் கோயிலகள் பேணப்பட்டமை	55
12	திருமால் விக்ரகம்	56
13	பஞ்சவீர வழிபாடு	,,
14	இனி சங்ககாலத்துக்குப்பின் தமிழ கதத்தில் ஆட்சி செயத பல்லவா கால விண்ணகரங்கள் பற்றி நோக்குவோம பலலவர்களது சமயப் பொறை	57
15	பல்லவர்காலத்து ஆழ்வார்கள்	,,
16	பல்லவர் காலதது வைணவ நிலையைக் கல்வெட்டுக்கள் வாயிலாகக் காண்போம்	58
17	இனி, சோழர் கால கலவெட்டுகளை நோக்குவோம	61
18	இனி பாணடியர்காலக் கல்வெட்டுக்களை நோக்குவோம்	63

பக்கம்

19 இனி திருப்பதி தேவஸ்தானத்தார் வெளியிட்டுள்ள கல்வெட்டுத்தொகுப்பிலிருந்து கிடைக்கும் செயதிகள் பற்றி நோக்குவோம் 71
20 திருமலைக்கோயில் பல்லவ அரசர்தம் கல்வெட்டுககள் 71
21 அரசிகள்தம் திருப்பணி 72
22 திருவரங்கம கோயில கலவெட்டுக்கள் 72
23 திருமலைக்கோயில் பாதுகாபபு ,,
24 குடந்தை சார்ஙகபாணிஸவாமி கோயில் 73
25 திருவரங்கக்கோயில் கல்வெடடுச் செய்திகள் பிற ,,
26 திருவரங்க ஆலய நிர்வாகம் 74
27 இராமாநுஜரை இணைத்தலாகாது 75
28 சோழர்தம் மதிறபணி ,,
29 காலப்போககிற் புகுந்தவை ,,
30 பாகவத சம்பிரதாயம 76
31 வெளிநாட்டவர்தம ஈடுபாடு 77
32 பாரத நாட்டு மனனர்கள்தம் ஈடுபாடு 78
33 இனி வங்காளத்திலும அஸ்ஸாமிலும் வைணவம் எப்படியிருந்தது என்பது பற்றி நோக்குவோம் 87
34 கிழக்காசியப் பகுதிகளில் 94

V **ஸ்ரீவைணவ சம்பிரதாயமும் ஆலயங்களும் 97--100**

1 தமிழ்நாட்டு வைணவம் ஆலயத் தொடர்பற்றது 97
2 கோயில் நிர்வாகம் ,,
3 ஆசாரிய பிமபப் பிரதிஷ்டை ,,

பக்கம்

4 புதியன புகுதல் 98
5 ஆசாரியர்களைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்பு 99

VI பாஞ்சராத்திர ஆகமம்

1 இருவகை ஆகமங்கள் 101
2 பாஞ்சராத்திரம் பரவியமை ,,
3 பாஞ்சராத்தர அமைபபு 102
4 ஆகமச் செய்திகள வெளிவந்தமை 106
5 வேதமும், ஆகமமும 107
6 ஆகமமும் வைணவ ஆசாரியர்களும் ,,
7 ஏகாயன வேதம் 108
8 ஆகமதகையும், உடன் பட்டமை 110
9 ஆகம நூலகளின் காலம ஆப்டே கூற்று 111
10 ஆகமக்கொளகையினர் நிலை 112
11 பாஞ்சராத்திரத்தில சேர்க்கைகள் 114
12 ஆகமக் கொள்கைகளுககுள்ள பெயர்கள் ,,
13 பாஞ்சராததிர வளர்ச்சி 116

VII வ்யூகக் கொள்கை 119—122
VIII அவதாரக் கொளகை 123—126
IX பஞ்சவீர பூஜை 127—128
X பாஞ்சராத்திரத்தில் காணும் வழிபாட்டு முறையில் அமைந்துள்ள சிததாந்தங்கள் 129—130
XI பஞ்சாயதன பூஜை 131—132
XII விக்ரஹ வழிபாட்டின் பிறப்பும், வரலாறும 131—137
XIII உத்சவமூர்த்தி முதலியன 138—141
XIV உபநிடதங்களும் ஆகமங்களும் 141—144
XV பனனிரண்டு வ்யூகங்கள் 145—147

XVI வேறுவ்யூகங்கள்

1 விபவாவதாரங்கள் 148
2 ஆகம தெய்வக்கொளகை 150
3 பாத்ம சமஹிதை 153
4 ஆலயஙகளின அமைப்பு ,,
5 சமஹிதைகளில் காணப்படும் மற்ற பிமபஸமபந்தமான விபரங்கள் 155
6 ஆகமங்களும் விக்கிரகவழிபாடும் 156

XVII **தமிழ் நாட்டில் வைணவத்தின் சிறப்பான கருத்துக்கள்**

1 வேதத்தில விஷ்ணு 161
2 உபநிடதககூற்று 162
3 புராணங்களின் கூற்று ,,
4 ஒரேதெய்வககொள்கை 163
5 வேதாந்தங்களும், உருவவழிபாடும் 164
6 மும்மூர்த்திக்கொள்கை 165
7 சிந்தனேயாளர் செயல 166
8 வேதத்தின் பல தெய்வக்கொள்கை 167
9 கதைகள் 168
10 பிரும்மமும, கடவுளும் ,,
11 கருத்துக்களின் வளர்ச்சி 169
12 வேத, புராண, ஆகம வைணவம 170
13 ஆகம வைணவததின் தனித்த நிலே 171
14 வைணவ வேதாந்தக் கொள்கைகள 172
15 தமிழ்நாட்டு வைணவம் ,,
16 மூன்றுவகை நூலகள் 173
17 தமிழ்நாட்டு வைணவப்போக்கு 174
18 ஆசாரியர்கள் கருத்துக்களின் அடிபப்படை 175
19 குருபரமபரைக் கதைகள 177
20 ஆசாரியன் பெருமை 178
21 ஆசாரியனும், ஸ்ரீவசன பூஷணமும் 179
22 இறைவனின் ஐவகை நிலேகள் 180

23	அர்ச்சையிலும ஆசாரியன உயாந்தவன் எனபது	பக்கம் 182
24	ஆசாரியனை அடைய ஆறுபடிகள்	,,
25	வைணவத்தில் ஆலய வழிபாடு	183
26	சிந்தனையின் சிறப்பு	,,
27	தெய்வக்கருததில் சிந்தனை	184
28	பகவானின் கருணை	185
29	கடவுளுடைய பெருமை	187
30	இறைவனைத திருப்தி செய்தல	188
31	கர்மாவும் கருணையும்	,,
32	யுக்தியும் நம்பிககையும்	189
33	சிரவணம, மனனம், தியானம் என்பவை	191
34	மயக்கமும திருததப்பட்ட அறிவும	192
35	மனனமும் தியானமும்	193
36	ஞானமும், பக்தியும	194
37	பிரபத்தி மார்க்கம்	195
38	ராமானுஜரும், பிற்பட்ட ஆசாரியர்களும்	196
39	அகங்காரம	,,
40	திருமகள் பற்றிய கருத்து	198
41	மகாலக்ஷ்மியின் தொழில	200

XVIII லக்ஷ்மி தத்துவம்

1	முகவுரை	204
2	சிறப்பு	,,
3	ஆலயத்தில் பெண் அர்ச்சைகள்	,,
4	ஆசாரியர்களும, லக்ஷ்மிதத்துவமும்	206
5	ஆழ்வார்களும், லக்ஷமியும்	208
6	தேவிகள மூவர்	209
7	நீளாதேவி	,,
8	மூர்த்தம், அமூர்த்தம்	210
9	லக்ஷ்மி அம்சம்	,,

பக்கம்

10 ஸ்ரீ தத்துவம்-வேதாந்த தேசிகர் ,,
11 ஸ்ரீ சொற்பொருள் லக்ஷ்மி தத்துவத்தின் உற்பத்தி 212
12 விஷ்ணுபத்நி ,,
13 பூஸிக்தம், நீளாஸிக்தம் ,,
14 ஆகமங்களில் லக்ஷ்மிதத்துவம 214
15 இயற்கையை வழிபடுதல் 216
16 பெணதெயவம் 217
17 பெண்-முழுமுதற்கடவுள் 218
18 மகாலக்ஷ்மியின் உற்பத்தி 219
19 மோட்சம் பற்றி கருத்து 230
20 அன்பு நெறியும, அனுபவமும் 231
21 பகவத் கைங்கர்யக் கொள்கை 233
22 பாகவத கைங்கர்யம 236

XIX ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் வளர்ச்சி

1 முன்னுரை 239
2 ஆச்சார்ய பரம்பரை 240
3 ஆசாரியர்கள் கொள்கைகள் ,,
4 பரமை காந்திகொள்கை 241
4 நாராயணனே முதல் ஆசாரியன் 242
6 ஆசாரிய பரம்பரையும, சம்பிரதாய விரிவும் 243
7 ஆகமங்களும, ஆழவாரர் பாசுரங்களும் 244
8 பிரஸ்தானத்திரயம் ,,
9 சம்பிரதாயத்துக்குப் பயன் படும் நூல்கள் 245
10 நமமாழ்வார் 246
11 வைதீக வைணவம் 248
12 நாதமுனிகள் நூல்கள் 249
13 ஆளவந்தார் நூல்கள் ,,
14 இராமநுஜர் நூல்கள் 251

பக்கம்

15 ராமாநுஜருக்குப் பின் வைணவம் 255
16 வேதாந்த தேசிகர் நூல்கள் 256
17 கூரத்தாழ்வார் மரபு ,,
18 வைணவப்பிரசாரம் 257
19 ரகஸ்ய நூல்கள் ,,
20 ஆலயமும், வைணவமும் 258
21 வைணவமும், சமயமும் 260

XX ஸ்ரீ வைணவ சம்பிரதாயம்

1 சம்பிரதாயக் கருத்துக்கள் 262
2 வேதாந்தத்தத்துவம்,முப்பொருள்கள் ,,
3 விசிஷ்டாத்துவைதம் 264
4 அர்த்த பஞ்சகம் 265
5 தன்னைபபற்றி அறிதல் ,,
6 ஈசுவர தததுவம் 268
7 இறைநிலையின் குணங்களின் இரு கூறுகள 270
8 சேஷ சேஷி பாவம் ,,
9 படைப்புக்கு முன்னும் பின்னும் இறை நிலை 273
10 இறைவனின் உருவம் 275
11 சிருஷ்டி காலம் 275
12 போக விபூதி 276
13 உபய விபூதி நாயகன ,,
14 அவதாரம் ,,
15 பரம் 278
16 வ்யூகம் 279
17 அந்தர்யாமி 280
18 ஆச்சை ,,
19 ஈசுவர லீலை 281
20 மகாலக்ஷ்மி 282
21 புருஷகாரமும், ஸ்ரீஎன்பதன் பொருளும் 283

		பக்கம்
22	புருஷகரத்துக்கு உரிய குணங்கள்	284
23	ஆனமவர்க்க நிலை	285
24	ஆனமாவின் மூன்று வகை	286
25	பிரகிருதி	,,
26	காலதத்துவம்	287
27	தத்துவ ஞானத்தின்பயன்	,,
28	பிரபத்தி மார்க்கம்	288
28	பிரபன்னனின சுபாவம்	289

XXI மோக்ஷம், பேரின்பம் பெறுவது

1	மோட்சத்திற்கு இடையூறுகள்	294

XXII ஆழ்வார்களின் பாடல்கள்

2	நாலாயிர திவ்வியப் பிரபந்தம்	297
3	ஆழ்வார் அநுபவத்திறம்	
4	திருக்கடைக் காப்பு	298
5	பரிபாடலும், ஆழ்வார் பாடலும்	,,
6	கூட்டமும் பிரிவும்	299
7	சடகோபர் பொதுநோக்கு	,,
8	பாடற் செய்திகள்	300
9	பாடல்களில மன்னன் பெயர்	301
10	தல புராணங்கள்	,,
11	பரிபாடல் வேண்டுவது	302
12	குரு பரம்பரையும், வரலாறும்	303
13	வியாகயானஙகள்	304
14	ஆழ்வாா பாடல்களுக்கு ஏற்றம்	,,
15	மணிப்பிரவாள நடை	305
16	நெற்றியில் போட்டுக்கொள்ளும் அடையாளம்	307
17	ஸம்பிரதாய கதைகளின் நிலை	311
18	வைணவதீக்ஷை	313

		பக்கம்
19	திருமங்கை மன்னன் சொல்லும் புதுக்கதை	,,
20	வைணவத்தில் பகவானின பெயர்களுக்குள்ள இடம்	315
21	ஆசார்யார்களின் வழி	316
22	பிறபெயர்கள்	317
23	அஷ்டாக்ஷரியும், துவாதசாக்ஷரியும்	318
24	பகவான் என்ற பெயர்	319
25	கடவுள் இலக்கணம்	321
26	கீதைசசெய்தி	323
27	விஷ்ணு சஹஸ்ரநாமம்	324
28	ஆழ்வார்கள் கொடுக்கும் பெயர்கள	,,
29	முடிவுரை	327
30	சொற்களின் விளக்கம்	I
31	பிழை திருத்தம்	VIII

முகவுரை.

நாட்டிற்கு வழிகாட்டும் நற்பணியினை ஆற்றுபவர் வர்களில மதபோதகர்கள், பள்ளி ஆசிரியர்கள், பத்தி-ரிகை ஆசிரியர்கள், நூல் ஆசிரியர்கள், நாடக ஆசிரியர்-கள் முன்னணியில் நிர்பவர்களாகும். இந்த வகையில் இவ்வாலய அறங்காவலர் குழுவும், அறநிலையத்துறை தஞ்சை துணை ஆணையர் அவர்களும், குடந்தை உதவி ஆணையர் அவர்களும் வைணவம் சம்மந்தமான ஒரு நல்லநூலை இவ்வாலயம் மூலமாக வெளியிட விரும்-பினர்கள். அவ்வண்ணமே குடந்தை அக்னிஹோத்ரம் திரு உ. வே. ராமானுஜ தாதாசாரியார் அவர்கள் மூலம் மேற்படி நூலை எழுதக்கேட்டு அவற்றை தஞ்சை சரஸ்வதி மஹால் செயலாளர் திரு நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் மற்றும் திருவையாறு திரு கோபால் அய்யர் அவர்கள் அடங்கிய பதிப்பு குழுவை அமைத்து பதிப்பாய்வு செய்து ஈண்டு இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

இந்நூல் வெளிவர வித்திட்டவரும் அதன் வளர்ச்-சியில் இடையராது எங்களுக்கு ஊக்கமளித்தவருமான குடந்தை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் உயர்திரு ஆர். அர்ச்சுனன் அவர்களுக்கும் இவ்வாக்கப்பணிக்கு உறுதுணையாய் இருந்த தஞ்சை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் உயர்திரு வி. எஸ். கோதண்டபாணி அவர்களுக்கும், ஆணையாளர் உயர்திரு K. S. நரசிம்மன், B.A.B.L., I.A.S. அவர்களுக்கும் இவ்வரலாற்று ஆய்வுக் குழுவினர்களான

தஞ்சை சரஸ்வதி மஹால் செயலாளர் உயர்திரு நீ. கந்தசாமி பிள்ளை, திருவையாறு தமிழ்க்கல்லூரி பண்டித வித்வான் கோபால் அய்யர் அவர்களுக்கும், இவ்வரலாற்றை எழுதிய ஆசிரியர் உ. வே. அக்னி-ஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியர் அவர்களுக்கும் இவ்வரலாற்றை அச்சிட்டுதந்த குடந்தை ஸ்ரீ ராமா பிரிண்டிங் ஒர்க்ஸ் அவர்களுக்கும் மற்றும் இந்நூல் வெளிவர உதவியாய் இருந்த அனைவருக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன். அன்பர்கள் இந்நூல் வழிசென்று நின்று பயன்பெற வேண்டுகிறேன்.

மு. செல்லபெருமாள், B. Com.,
இறை பணியாளன்.

பதிப்புரை.

"அவரவர் தமதமது அறிவுஅறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்;
அவரவர் இறையவர் குறைவுஇலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே."
(திருவாய்மொழி)

தெய்வமணம் இடைவிடாது கமழும் நமது தமிழகத்தில், மக்களுடைய நல்வாழ்விற்கும் ஞானவளர்ச்சிக்கும், திருக்கோயில்கள் தொடர்ந்து செய்துவரும் பணிகள் பல; அவற்றுள், தெய்வ உணர்ச்சியின் வழி உலகத்தை நல்ல நெறியில் நிற்கச்செய்வது முதன்மையானதாகும். இந்த முதற் பணியைப் பலவழிகளால், மன்பதை நிலைமைக்கும், சூழலுக்கும், காலப்போக்கிற்கும் ஏற்ற வண்ணம் திருக்கோயில்கள் செய்து வருகின்றன. இக்காலத்து மனநிலை, எதையும் ஆராய்ந்து அறிய வேண்டும் என்னும் போக்கில் மிகுந்த ஆர்வமுடையதாக இருக்கின்றமையால், திருக்குடந்தை, திருவோங்கு ஆராவமுதன் விண்ணகரத்தார் (கும்பகோணம் ஸ்ரீ சார்ங்பாணி ஸ்வாமி தேவஸ்தானத்தார்) வைணவத்தின் வரலாற்றை ஆராய்ச்சி முறையில் உலகம் தெரிந்து நலம் பெறவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன், "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் இந்த அரிய ஆராய்ச்சி நூலைத் தக்காரைக்கொண்டு எழுதுவித்து, வெளியிடத் துணிந்தார்கள். ஆராய்ச்சி முறையில் சமயதத்துவங்களையும் வளர்ச்சியையும் விளக்குவதற்காகத் திருக்கோயில்களின் ஆதரவில் வெளிவரும் முதல்நூல் இதுவே. வைணவத்தைப் பல கோணங்களிலிருந்து காய்தல், உவத்தல் அகற்றி ஆய்ந்து வெளிவரும் முதல்நூலும் இதுவேயாகும்

இந்த நூலின் ஆசிரியர் திருக்குடந்தை ஸ்ரீ உ. வே. ச்ருதி, ஸ்ம்ருதி, கல்பசூத்ர, இதிகாச புராண உபயமீமாம்ஸா விசாரத, அக்னி ஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியர் ஸ்வாமிகள் அவர்களைத் தமிழகம் முழுவதுமே அல்லாமல, வேதம் பயிலப்பெறும் நாடுகள் அனைத்தும் நன்கு அறியும். இவர்கள் எழுதாக்கிளவி வழிநின்று எழுநா வணங்கும் இயல்பினம். வேதத்தின் ஆழ்ந்த அகன்ற கருத்துக்கள் அனைத்தையும் கேட்பவர் உள்ளமெல்லாம் உருகி, உயரும் வண்ணம் விளக்கும் வீறுபடைத்தவர். வேறுபடும் சமயங்கள் அனைத்தும், விளங்கு பரம்பொருளின் விளையாட்டே அன்றி, மாறுபடுவன அல்ல என்ற உறுதி உடையவர்; எனினும், மறைவழி நின்று மாலடி மறவா மாண்பினர். எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அவ்வப்பொருள்களின், மெய்ப் பொருளைக் காணும் மேதையர். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய ஆசார்ய புருஷபீடத்தை அலங்கரித்துக் கொண்டு சிஷ்யர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஸம்பிரதாய கரன்தங்களை உபதேசித்து வருகின்ற அப்பெரியார் "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற நூலை, உலகிற்கு உண்மையைத் தெரிவிக்கவேண்டும் என்ற ஒருபெருங் காதலினல், நமக்கு அளித்துள்ளார். இந்நூலின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு தனித்த ஆராய்ச்சி நூலாக, வெளிவர வேண்டிய அரிய கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. இந்நூல், நம்மை, கேளாதன எல்லாம்கேட்கச்செய்கிறது; அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் நிலைக்களனுக உள்ள ஆராவமுதன் திருவடிக்கு மீளா ஆசையையும் விளைவிக்கின்றது.

மேற்பார்வையாக பார்க்கும் பொழுது, இந்தநூல் தெய்வத்தின் தோற்றம், வளர்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சியோ எனப் பலர் ஐயுறக்கூடும். இந்நூல், தெய்வ உணர்ச்சி, திருமால் என்னும் தத்துவத்தின் அடிப்படை

யில் நின்று எவ்வாறெல்லாம் காலத்திற்கும், நாட்டிற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப மக்கள் உள்ளத்திலும், உறையிலும், செயலிலும் வளர்ந்து வந்துள்ளது என்பதைப் போதிய சான்றுகளுடன் எடுத்துக்காட்டி, தெய்வ உணர்ச்சி வளம்பெற்று நிலை என எழுந்த ஆராய்ச்சியாகும் இந்நூலில் நாற்பது பக்கங்களுக்கு மேலாகக் கல்வெட்டு களைக்கொண்டு, வைணவ வளர்ச்சியைக் காட்டியிருக் கின்றார்.

வேதம் ஆகமம், உபநிடதம் மறை நூல்கள் இதி காசம் புராணம், அருளிச்செயல், சங்கநூல் அதன் விளக் கங்கள் முதலியவற்றில் பொதிந்துள்ள திருமால் தொடர் பான நுண்ணிய கருத்துக்களை எல்லாம், எல்லா மக்களும் எளிதில் உணருமாறு எளிய, இனிய செந்தமிழ் உரை நடையில் அமைந்துள்ளது. இந்த அரிய ஆராய்ச்சிநூலை ஆக்கித்தந்த சுவாமிகளுக்கும், இதனை ஆக்குதற்கு ஊக்கம் தந்த ஸ்ரீ சார்ங்கபாணி தேவஸ்தான அறநிலையக் காப்பாளர்களுக்கும், நிர்வாக அதிகாரி திரு செல்லபெருமாள், B. Com , F. S. A. A. அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த ஸ்ரீ ராமா பிரிண்டிங் ஒர்க்ஸ், அச்சகத்தாருக்கும், இவற்றிற்கெல்லாம் தோன் றுத்துணையாக நின்று துணைபுரிந்த உதவி ஆணையாளர் சைவத்திரு அருச்சுனன், B. A. அவர்களுக்கும் தமிழகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. இவ்வாறு, தெய்வத் தொடர்பான நூல்கள் பல தோன்றுவதற்குத் துணைபுரிக என தெய்வத் திருவருளை வழுத்திநிற்கின்றேன்.

நீ. கந்தசாமி.

நான்முகம்.

தமிழ்நாட்டு வைணவத்தின் வரலாற்றை விளக்கும் இந்த நூல் குடந்தை ஸ்ரீ சார்ங்கபாணி தேவஸ்தானத்தின் வேண்டுகோளின்படி எழுதப்பட்டது. முழுவதும் வரலாற்றுக் கருத்துக்களை வெளியிடும் இந்த நூல் வரலாற்றுணர்ச்சியோடு வைணவத்தை தெரிந்து கொள்ளுபவர்களுக்கு உதவிசெய்ய எழுதப்பெற்றுள்ளது. இந்த நிலையில் தமிழ்நாட்டு வைணவத்தைச் சேர்ந்த நூல்களில் இதுதான் முதல் நூல் என்பது மிகையாகாது. வைணவம் என்ற கொள்கை விஷ்ணுவை முழுமுதற்கடவுளாக வைத்து வழிபட வகைசெய்வது இவ்வித வைணவம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகி பாரததேசம் முழுவதும் பரவி நிற்கின்றது. பொதுவான வைணவக் கொள்கைகளை தமிழ்நாட்டு வைணவம் பின்பற்றுவதுடன் தனியான சிறப்போடும் திகழ்ந்து வருகிறது. வேதத்தை அடிப்படையாகக் கொண்ட வைணவம் என்ற முறையில் அநாதியாக இது இருந்தும் ஆகமங்கள், தமிழ்நாட்டுப் பண்பாடு இவை களோடு கலந்து கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டில் புது உருவத்தோடு தமிழ்நாட்டு வைணவம் தலை எடுத்தது.

பதின்மூன்றும் நூற்றாண்டுவரை வந்துள்ள ஆசாரியர்கள் வழியாக வளர்ந்துள்ள கருத்துக்களை தமிழ்நாட்டு வைணவம் உட்கொண்டுள்ளது. தமிழ்நாட்டு வைணவம் மூன்று இடங்களில் உற்பத்தியாகி ஒன்றாகக்கலக்கிறது. ஒன்று வேதம், ஸ்மிருதி, இதிகாச புராணங்கள் முதலிய வடமொழி நூல்கள், இரண்டாவது ஆலயவழிபாடு விக்ரக வழிபாடு இவைகளுக்கு வழிவகுக்கும் தனி மத வேதாந்த கருத்துக்களோடு நிற்கும் பாஞ்சராத்ர ஆகமம்: மூன்றாவது தமிழ்மொழி, தமிழ்நாட்டு மரபு இவைகளை பின்

பற்றிய ஆழ்வார்களின் அருளிச் செயல்கள்; இவைகளின் உதவியைக்கொண்டு ஆசாரியர்கள் தமிழ்நாட்டு வைணவத்தை உருவாக்கினுர்கள். நாதமுனிகளிடமிருந்து பிறப்பைப்பெற்று ஆளவந்தாருடைய நூல்களால் வளர்ச்சியை அடைந்து இராமாநுஜருடைய நூல்களால் பாதுகாக்கப்பட்டது வைணவ தரிசனம் என்று வேதாந்த தேசிகர் கூறுவர். இராமாநுஜருடைய காலத்திற்குப் பிறகுதான் தமிழ்நாட்டு வைணவம் தன்முழு உருவைப் பெறுகிறது. பிறகு வந்த ஆசாரியர்கள் ஆழ்வார்களுடைய பாடல்களை வேதங்களாகக்கொண்டு 'மணிப்பிரவாள' நடையிலும் தனி வடமொழியிலும் நூல்கள் எழுதியுள்ளார்கள்.

தமிழ்நாட்டு வைணவத்தின் கருத்து இங்குதான் விறுவிறுப்பைப் பெறுகிறது. அதற்கு முன் இது அத்வைத கருத்துக்களை மறுப்பதிலேயே பெரும்பாலும் ஈடுபட்டது. ஆலயவழிபாடு விக்ரக வழிபாடு இவைகளை வற்புறுத்தும் ஆகமங்களையும் தமிழ்நாட்டு வைணவம் உட்கொண்டு விட்டதால் இதற்கும் ஆலயத்திற்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டுவிட்டது. ஆனுல் ஆலயங்கள் ஆகம அடிப்படையில் இன்றுவரை தனித்தே இயங்கி வருகின்றன. இவைகளுக்கு தமிழ்நாட்டு வைணவத்தின் கொள்கையோடு நேராக உள்ள உறவுமிகக்குறைவு. இன்று ஆலயவழிபாட்டின் அம்சமாக தமிழ்நாட்டு வைணவம் இருப்பதாகத் தோற்றமளிப்பதால் தமிழ்நாட்டு வைணவத்திற்கும் ஆலயத்திற்கும் உள்ள உறவு எப்பொழுது ஏற்படுகிறது என்பதையும் வரலாற்று வழியில் தெரிந்துகொள்வது பலவழியிலும் பயனுள்ளதாக இருக்கும். தமிழ்மொழியில் உள்ள நூல்கள் கல்வெட்டு .செப்பேட்டுச் சான்றுகள் இவைகளை ஆராய்ந்து பார்த்தால்வைஷ்ணவாச்சாரியர்கள் நூல்கள் எழுதுவதற்கு வெகுகாலம் முன்பே விஷ்ணுவழிபாடு ஆலய வழிபாடு இவை தமிழ்நாட்டில் இருந்து வந்திருப்பது தெரியவரும்.

இந்த நூலின் முக்கியமான நோக்கம் தமிழ் நாட்டு ஆலய வழிபாட்டின் அடிப்படைக் கருத்துக் களை நூல்களை, அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞான வழியில் விளக்குவது. (23-பக்கம்) தமிழ்நாட்டு ஆலயவழிபாட்டின் தனிப்பெருமையை இங்கு காணலாம். ஆலயவழிபாடு பாரதநாடு முழுவதும் எப்படி பரந்து நின்று வந்திருக்கிறது என்பதைக் கல்வெட்டுக்கள் செப்பேடுகள் நாணயங்கள் சிலைகள் இவைகளின் உதவிகளைக்கொண்டு விளக்கப்படுகிறது. வைணவ சம்பிரதாயம் அநாதியான ஆலயங்களில் எப்பொழுது உட்புகுகின்றது. (97) என்பதும் விளக்கப்படுகின்றது. பாஞ்சராத்ர ஆகமங்களுடைய தனித்த கொள்கைகள், அவைகளின் வரலாறு, நோக்கம் இவை ஆகம ஸம்ஹிதைகளின் உதவிகளைக்கொண்டு வரலாற்று அடிப் படையில் விளக்கப்படுகிறது (101-160). வைணவத் தின் சிறப்பான கருத்துக்கள் அவைகளின் பிறப்பு வளர்ச்சி இவை விளக்கப்படுகின்றன (162). இலக்குமி தத்துவத்தின் வரலாறு (204) விரிவாக விளக்கப்படுகிறது. தமிழ்நாட்டு வைணவத்தின் கொள்கைகளின் விளக்கத்தைக் (240) காணலாம். கொள்கைகளின் வரலாறு, அவைகள் உருவாகும் வழி, தத்துவத்ரயம் தத்துவஹிதம், புருஷார்த்தம் என்ற பொருள்கள் விளக்கப் பட்டுள்ளன. நெற்றியில் போட்டுக்கொள்ளும் குறியைப் பற்றின விளக்கத்தையும் வரலாற்று அடிப்படையில் காணலாம்.

சோழ பல்லவ பாண்டிய அரசர்கள் தமிழ்நாட்டில் வைணவம் வளர ஆசாரியர்களுடைய காலத்திற்கு முன்னாலேயே எப்படி உதவியுள்ளார்கள் என்பதையும் இங்கு காணலாம். வேதங்கள் இதிகாச புராணங்கள் வைணவ சமய ரகஸ்ய நூல்கள் இவைகளின் உதவியைக் கொண்டு விஷயங்கள் விளக்கப்படுவதோடு கல்வெட்டு கள் செப்பேடுகள் போன்ற வரலாற்றோடு கலந்துள்ள செய்திகளும் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்

டுள்ள சிந்தனையும் இந்த நூலுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இதுவரை வெளிவராத பல புதிய கருத்துக்களையும் நூல்களில் மறைந்துள்ள பல செய்திகளையும் இங்கு காணலாம். மக்கள் இந்த நூலை படித்து வைணவத்தில் புத்துணர்ச்சி பெறுவார்கள் என்று நம்புகிறேம். இந்த நூலை எழுதி வெளியிட உதவிய குடந்தை ஸ்ரீ சார்ங்கபாணி தேவஸ்தானத்தாருக்கு எனது நன்றி உரித்தாகுக. அடிமுதல் நுனிவரை இந்த நூலை உருவாக்கப் பலவழிகளில் உதவிய மதிப்பிற்குரிய பதிப்புக்குழு அங்கத்தினர்களுக்கும் குறிப்பாகப் புலவர் பெருமான், தஞ்சை ஸரஸ்வதி மஹால் லைப்ரரியின் செக்ரட்டரி ஸ்ரீ கந்தசாமி பிள்ளை அவர்களுக்கும் திருவையார் வித்வான் ஸ்ரீ கோபாலய்யர், M. A. அவர்களுக்கும் என்னுடைய நன்றி உரித்தாகுக.

இந்த நூலை எழுத உதவிய நூல்களின் ஆசிரியர்கள், பதிப்புக் கழகங்கள் எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அக்னிஹோத்ரம்

ராமாநுஜ தாதாசாரியார்

இந்நூலை எழுதுவதற்கு உதவிய நூல்கள்.

ரிக்வேதம்
யஜுஸ் ஸம்ஹிதை
யாஸ்கநிருக்தம்
உபநிடதங்கள்
பாஞ்சராத்ர
ஆகம சம்ஹிதைகள்
பகவத்கீதை
இராமாயணம்
பாரதம்
விஷ்ணுபுராணம்
பாகவதம்
பிரம்மசூத்திரம்
திரு நாராயணீயம் (பாரதம்)
நியாயவைசேஷிக தரிசனம்
ஸாங்க்ய காரிகை
ஆகமப்பிராமாண்யம்
சதுச்ஸ்லோகி
ஸ்தோத்ர ரத்னம்
ஸித்தித்திரயம்
ஸ்ரீ பாஷ்யம்
வேதார்த்தஸங்கிரஹம்
கீதா பாஷ்யம்
கத்யத்திரயம்
பெரியவாச்சான் பிள்ளை
உரைகள் ரகஸ்யங்கள்
மாமுனிகள் உரைகள்
ஸ்ரீஸ்தவம்
ஸ்ரீவசன பூஷனம்
ஸ்ரீ குணரத்னகோசம்
அஷ்டாதச ரகஸ்யங்கள்
ஸ்ரீமத் ரகஸ்த்ரயஸாரம்
வேதாந்ததேசிகர்
அருளிய ஸ்தோத்திரங்கள்
சில்லரை ரகஸ்யங்கள்
ஆசார்ய ஹிருதயம்
புறநானூறு
மணிமேகலை
சிலப்பதிகாரம்
பதிற்றுப்பத்து
பரிபாடல்
திருமுருகாற்றுப்படை
பெரும்பாணாற்றுப் படை
நாலாயிரதிவ்ய ப்ரபந்தம்
ஆறாயிரப்படி
ஒன்பதனாயிரப்படி
பன்னிரண்டாயிரப்படி
இருபத்தி நான்காயிரப்படி
முப்பத்திஆறாயிரப்படி
பாண்டியர் வரலாறு
(சதாசிவ பண்டாரத்தார்)
சோழர்கள் வரலாறு
ஆழ்வார்களின் காலநிலை
(மு. ராகவ அய்யங்கார்)
சோழவம்சசரித்திர
சுருக்கம்
T.A. கோபிநாத்ராவ், M.A.
தென்னிந்திய கோவில்
சாசனங்கள்
தென்னாட்டுதிருக்
கோயிற் கல்வெட்டுக்கள்
(V. S. குருசாமி தேசிகர்

1 A History of Tirupati - Volumes I and II by Dr. S. Krishnaswamy Iyengar.

2 Archaeological Society of South India Transaction for the year 1959-60.

3 Aspects of Early Vishnuism by J. Gonda.

4 Cholas- by K. A. Neelakanta Sastri.

5 Evolution of Hindu Sects by Sudhakar Chattopadhyaya.

6 Early History of the Spread of Vaishnavism in South India (Dr. S. K. Iyengar)

7 Encyclopaedia of Religion & Ethics.

8 History of the Pallavas of Kanchi by R. Gopalan, M. A.

9 History of the Vaishnavism by Gopinatha Rao.

10 Indian Iconography by Gopinatha Rao.

11 Introduction to the Paancharathra and the Ahirbudhnya Samhita by Otto Schrader, Ph. D.

12 Kancheepuram in early South Indian History by T. V. Mahalingam.

13 Krishna Problem :- Dhandekar.

14 Madras Kali Bari Souvenior February 1970.

15 Main and Parivara Shirines some Aspects. Transactions of the Archlogical Society of South India. (by K. V. Soundararajan)

16 Materials for the study of the early History of the Vaishnava Sect (Hem Candra Ray Chaudhri)

17 Pancharaathra Praasaada Prasaadanam. (by H. Daniel Smith.)

18 Perennial Philosophy by Aldous Haxly.

19 Physics & philosophy by Sir James Jeens.

20 Ramanuja on the upanishads by S. S. Raghava Chariar, M. A.

21 Reason and belief by Sir, Oliver Lodge.

22 Religious Tolerance A. Historic perspective by R. Nagaswamy.

23 Reconciliation of Science and Religion by (Sir Oliver Dodge)

24 Sankara and Shanmatha Souvenior, published in connection with the confrence on Sankara and Shanmatha.

25 Siminar on inscriptions.

26 Sri Vysa Vidwat Sadas from Souvenior on words.

27 Studies in the South Indian Temple Complex (T. V. Mahalingam)

28 Science and Religion-B. B. C. Lectures by Eminet Scientists.

29 Ten Pondian Copperplates.

30 The Bengal Vaishnavism and Modern life by Kanai Lall Dutt and Kshetra Mr. Purkayastha

31 The Nageswara Swami Temple, Kumbakonam by (T. V. Mahalingam)

32 The Origin and Development of Vaishnavism by Mrs. Swira Jaiswal M. A. Ph. D.

33 The Philosophy of Paancharathra by Dr. S. R. Bhatt.

34 The Researcher - Volumes VII - IX 1966-68.

35 The Simhachalam Temple by
Dr. K. Sundaram, M. A. (Hons) Ph. D.

36 The Srirangam Temple art and Archilecture by Dr V. N. Hari Rao, M. A. Ph. D.

37 Thirumala - Tirupati Devasthanam Inscriptions.

38 Vaishnavism Saivism and minor religious systems by Sir R. G. Bandharkar.

39 Vaishnava sects Saiva sects Mother worship by Swami Tattwananda.

40 Vedhantha Desika by Dr. Satyavarata Singh.

41 Yamuna's Agama Praamanyam Translation by Proff Van Buttimen

42 Yamuna and Visishtadvaita by
Dr. M. Narasimhachari, M. A. Ph. D.

43 Vaishnava Iconography by H. Daniel Smith and K. K. Venkatachari.

44 Information of Sarangapani Temple inscriptions Supplied by T. S. Aravamudhan.

ABBREVIATIONS.

A.B.O.R.I.	Annals of the Bhandarkar Oriental Research Insititute.
A.S.I.A.R.	Archaeologicial Survey of India, Annual Reports.
	Allan J. Catalogue of the Coins of Ancient. India.
C.I I.	Corpus Inscriptionum Indicarum.
D H.I.	Development of Hindu Iconography.
E.I.	Epigraphica India.
G.T.G.	Glory that was Gurjara Desa.
Ind. Arch.	Indian Archaeology, A Review.
J.R.A.S.	Journal of the Royal Asiatic Society of Great Britain and Ireland.
J.B.O.R.S.	Journal of Bihar and Orissa Research Society.
M A.S.I.	Memoirs of the Archaeological Survey of India.
M.E.V.S.	Materials for the Study of early History of Vaishnava Sects.
Sel. Ins	Sircar Select Inscriptions.
S.S.I	South Indian Inscription.

ஸ்ரீ :

வரலாற்றில் பிறந்த வைணவம்

தோற்றுவாய்,

உலகில் உள்ள மதங்கள் யாவுமே ஒரு காலத்தில் தோன்றிப் பிறகு முறையாக வளர்ச்சியுற்று வந்தனவாகும். இம் முறையிலேயே தமிழ்நாட்டு வைணவமும் ஒரு காலத்தில் தோன்றி வளர்ந்து இன்றுள்ள நிலையை எய்தியுள்ளது என்பது உளங்கொளத்தக்கது.

மதங்கள் அநாதி :

பொதுவாகக் கற்றுவல்ல மக்களும் தத்தம் மதங்கள் காலங்கடந்தவை, வரலாற்றுணர்ச்சிக்கு அப்பாற் பட்டவை என்றும் அவற்றின் தொன்மை காலக்கணக்கினைக் கடந்தது என்றும் கூறுவதனாலேயே, தம் மதங்களின் பெருமை நிலைநிறுத்தப்படுவதாகக் கருதுகின்றனர். ஆனால் மனிதனின் ஆராயும் ஆற்றல் நாடோறும் பெருகி வரும் இந்நாளில், எதனையும் வரலாற்று உணர்ச்சியோடு நோக்கும் கண்ணோட்டம் பெருகி வருதலின், மதத் தொடர்புடைய நூல்களில் காணப்படும் அகச்சான்றுகள், புறச்சான்றுகள், கல்வெட்டுச்சான்றுகள் முதலியவற்றை அடிப்படையாகக் கருதிக்கொண்டு அவ்வந்நூல்களின் காலத்தை ஆராய்ந்து அறுதியிட்டு, அவ்வறுதியின் வாயிலாக அவ்வம் மதங்கள் தோன்றிய காலத்தையும் ஆராய்ந்து முடிவுசெய்யும் எண்ணம் உறுதிப்பட்டு வருதலைக் காண்கிறோம்.

எதற்கும் வேதமே அடிப்படை :

மத சம்பந்தமாக வரையப்படும் நூல்கள் எல்லாவற்றிற்கும் வேதமே அடிப்படை என்ற கொள்கையை நம் முன்னோர் வலியுறுத்தி வந்துள்ளனர். வேதத்தை முதல் நூலாகக் கொண்டு வழிநூல் சார்புநூல்களாகத் தோற்றமெடுத்தவையே அற ஒழுக்க நூல்கள் (ஸ்மிருதி), இதிகாச புராணங்கள், சமய நூல்கள் முதலியனவாகும். வேதக் கருத்துக்கள் இவற்றில் இருப்பதனாலேயே இவற்றின் காலமும் வேத காலத்தை ஒட்டியது என்று கூறுதல் பொருந்தாது. விஞ்ஞான அறிவு நாடோறும் வளர்ந்து வருகின்ற இக்காலத்தில், எந்த நூலை எடுத்தாலும் அதன் அகப்புறச் சான்றுகளைக் கொண்டு, நமக்கு முன்னமே உறுதி செய்யப்பட்டுள்ள நாட்டு வரலாற்றுக் கால அடிப்படையில் அந்த நூலின் காலத்தையும் அறுதியிட்டுக் கூறும் எண்ணம் ஏற்பட்டுவிட்டதால், வேதத்தின் வழிநூல் சார்புநூல்களாகிய ஏனையவற்றின் காலமும் வேத காலமும் ஒன்றே என்று எண்ணிய எண்ணம் மாற வேண்டிய காலம் வந்துவிட்டது.

வேதகாலம் :

வேதத்தில் காணப்படும் சில வரலாற்றுக் குறிப்புகளை உட்கொண்டு வேதங்களின் காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் அறுதியிட்டு வருகின்றனர். ஆனால் இங்ஙனம் அறுதியிடுதல் இந்து மதத்தில் தொன்று தொட்டு வரும் அடிப்படைக்கோட்பாட்டோடு முரண்படுவதையும் காண்கிறோம். கிறிஸ்தவம், இஸ்லாமியம் போன்ற மதங்கள் அவற்றை நிறுவிய சான்றோர் காலத்தையே தம் தோற்றக்காலமாகக் கொண்டிருப்பதால், அவைகளினது காலத்தைக் கணக்கிடுவதில் சிக்கல் எதுவும் இல்லை. இம் மதங்களில், இறைவன் ஒருமுறைதான் உலகினைப் படைத்தான் என்ற கொள்கை, அடிப்படைக் கொள்கையாக அமைந்திருத்தலின், இவற்றின் கருத்துப்படி வரலாற்றில் நிகழ்ச்சிகள் யாவும் ஒரே தடவைதான் நிகழ்ந்

திருத்தல் கூடும் என்பது உறுதிப்படவே, கால ஆராய்ச் சிக்கு இம் மதங்கள் சிக்கல் தருவதில்லை. ஆனால் இந்து மதத்தில், இறைவன் உலகினை ஊழிதோறும் படைக் கின்றான்; ஊழிதோறும் அழிக்கின்றான்; ஓர் ஊழியில் நிகழ்ந்த நிகழ்ச்சியே பிறிதோர் ஊழியிலும் மீண்டும் நடைபெறுகிறது; ஊழிதோறும் இராமாயண பாரதங்கள் போல்வன நிகழ்கின்றன என்ற கருத்து அடிப்படையாக உள்ளது. ஒவ்வோர் ஊழிக்கண்ணும் பல சதுர் யுகங்கள் கழிகின்றன. மக்களின் அறவுணர்வை அடிப்படையாகக் கொண்டு அறவுணர்வு சிறிதும் பிறழாது அமைவது கிருத யுகம்; நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காடு அறவுணர்வு அமைவது திரேதாயுகம்; ஐம்பது விழுக்காடு அற உணர்வு பரவியுள்ளது துவாபரயுகம்; இருபத்தைந்து விழுக்காட்டளவே அறவுணர்வு காணப்படுவது கலியுகம்! கலியுக இறுதியில் அறவுணர்வு அடியோடு தகர்க்கப் பட்டுவிடும்; அப்பொழுது இறைவன் அவதாரம் செய்து, அறத்துக்குப் புறம்பானவற்றை அடியோடு அழித்து, மாசற்ற அறவுணர்வு மீண்டும் தலையெடுக்கச் செய்து கிருதயுகத்தை அமைப்பான்; மீண்டும் இந்நிலை சிறிது சிறிதாக மாறித் திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகங் களைத் தோற்றுவிக்கவே, மீண்டும் கிருதயுகத்தை அமைக்க இறைவனுடைய அவதாரம் நிகழும். இவ் வாறு சதுர்யுகங்கள் பலமுறை திரும்பத் திரும்ப வந்த பிறகே ஊழி என்று சொல்லப்படும் பிரளயம் ஏற்பட, அக்காலத்தில் உலகமே அழிந்துவிடும்; இறைவன் உயிர்கள் அழியாத வகையில் அவற்றைத் தன்னிடத்துப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு மீண்டும் உலகைப் படைக்கிறான்; ஆதலின் ஒரு சதுர்யுக நிகழ்ச்சியே, அடுத்த சதுர்யுகத்திலும் நிகழும் என்ற கருத்து இந்து சமயத்தில் காணப்படுவதால், வேதத்தில் காணப்படும் வரலாற்று நிகழ்ச்சி எந்தச் சதுர்யுகத்தில் நிகழ்ந்தது என்றுஅறுதியிட்டுக் கூறமுடியாது. ஆதலின், இன்றைய வரலாற்று அறிவினைக் கொண்டு வேதத்தின் காலத்தைக்

கணக்கிடுதல் கூடாது என்ற எண்ணமும் கற்றவரிடை மதக்கோட்பாட்டின் அடிப்படையில் இருப்பதைக் காண்கிறோம்.

முத்தொழில்கள் :

உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் இறைவன் அவ்வப்போது செய்து வருகின்றான் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே மிகவும் பழமையானது. கடவுளை ஒத்துக்கொள்ளும் வேதாந்திகள் இம் முத்தொழில்களையும் இறைவனே செய்து வருகின்றான் என்று ஒத்துக்கொள்ளுகின்றனர். கடவுளை ஒத்துக்கொள்ளாதவர்களும், உலகத் தோற்றம், பாதுகாப்பு, அழிவு இவற்றிற்குக் காரணமாக ஒரு பேராற்றல் நம் அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்று குறிப்பிட்டுக் கடவுள் என்ற சொல் ஒன்றைத் தவிர மற்றவற்றை ஒத்துக்கொள்ளுகின்றனர். அவர்கள் கருத்துப்படி, இயற்கை பல்வேறு உருவைப் பெறுவதே உலகத் தோற்றம், இயற்கையில் பழையன கழிந்து புதியன புகுதலே இயற்கையின் வளர்ச்சி, இயற்கையின் உருவம் அழிவதே உலக அழிவு என்று குறிப்பிடுவதை உணர்கிறோம். இன்றுள்ள இயற்கையைக் கூர்ந்து நோக்கி அதன உள்ளது சிறத்தல் (பரிணமம்) நிலையை நுனித்து உணரும் விஞ்ஞானிகளும் அதன் அழிவைப் பற்றியும் ஓரளவு கணித்து உரைக்கின்றனர். எங்ஙனமாயினும், இவ்வியற்கையில் காணப்படும் படைப்பு, காப்பு, அழிப்பு என்ற முத்தொழில் நிகழ்ச்சியும் எல்லோருக்கும் உடன்பாடே. மனிதனுடைய அறவழிப் பண்பாட்டில் மாற்றங்களும் திருத்தங்களும் காலத்தை ஒட்டி ஏற்படுவதைக் காண்கிறோம். அறவழிக்குப் புறம்பான பண்பாடு பெருகப் பெருக, உலகம் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை உறுதியாக அறியலாம். அறவழிக்குப் புறம்பே எவ்வளவு தொலைவு செல்லுகிறானோ, அவ்வளவுக்கு அவன் மனிதப் பண்பு நீங்கி விலங்

குணர்வு உடையவனுகின்ருன். அறவழிப் பண்பாட்டை நிலைநிறுத்தவே, இறைவன் யுகங்கள் தோறும் அவதாரம் செய்கிருன் என்பது சான்ருேர் கொள்கை. பிரமனுக இருந்து உலகைப் படைத்து, விஷ்ணுவாக இருந்து உலகைக் காத்து, உருத்திரனுகி உலகை அழிக்கும் கடவுள், காத்தல் தொழிலை மேற்கொண்டுள்ள விஷ்ணுவின் அமிசமாகவே, அறத்தை நிலைநாட்ட யுகந்தோறும் அவதாரம் செய்கிருன். அவன் செய்துள்ள அவதாரங்கள் கணக்கில் அடங்கா. ஆயினும், அவற்றுள் பத்து அவதாரங்கள் பிரசித்தமானவை என்று குறிப்பிடுகின்றனர்.

வைணவத் தோற்றம் :

முத்தொழில் செய்யும் மும்மூர்த்திகளுள் காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்துத் தோன்றிய மதம் விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொள்ளும் வைணவ மதமாகும். இக் கொள்கைக்கும் அடிப்படை வேதமே எனினும், வைணவக் கருத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சி, அவ்வளர்ச்சிகளைத் தெரிவிக்கும் நூல்களின் காலம், அக்கால வரலாற்றில் காணப்படும் உண்மைகள் ஆகியவற்றை நோக்க, வைணவம் வேத காலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகிப் படிப்படியாகப் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து ஓர் ஆசார்யனை ஒப்புக்கொண்டு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கியதும், தன் வளர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளது என்பது புலனுகின்றது. வைணவம் பற்றிய அடிப்படையான வேதக் கருத்துக்களுக்கும், வைணவ ஆசாரியர்கள் சொல்லும் கருத்துக்கும் இடையே மாறுதல்களை நோக்க, வேத காலத்திற்குப் பிறகே வேதம் இட்ட வித்தில் வளர்ந்த வைணவமதமாகிய மரம், பிற்காலச் சிந்தனையாளர்களால் செழிப்பான பெருமரமாக வளர்க்கப்பட்டது. அதனுள்ளும் தமிழ் நாட்டு வைணவம் என்ற பெருங்கிளை, விஷ்ணுவையே பரம்பொருளாகக்கொண்ட அடிப்பாட்டில் வேதாந்தக்

கொள்கை - பத்தி மார்க்கக் கொள்கை - அறநெறி - திரு நெறி பற்றிய கொள்கைகள் - தனிப்பட்ட தருக்கமுறைக் கொள்கை - என்னும் இவற்ருேடு கி. பி. 9ஆம் நூற்ருண் டில் தோன்றிய நாதமுனிகள் காலத்தில் தழைத்துக குலுங்கி, பின்னர் வேதாந்த தேசிகரோடு ஒரு கிளையாக வும், மணவாள மாமுனிகளோடு ஒரு கிளையாகவும் கவடு பட்டு, வேதங்கள் ஸ்மிருதிகள் இதிகாச புராணங்கள் ஆழ்வாராதிகள் அருளிய பாசுரங்கள் இவற்ருலும் ஆக மங்களாலும் உரம்பெற்று, காலட்சேப கூடங்களில் பூத்து, இன்று விண்ணகரங்களில் பழுத்துப் பயன் தரு வதைக் காண்கிருேம். இன்று ஆலயம் வைணவம் இரண்டும் பிரிகக முடியாத தொடர்புடையனவாயிருப் பினும், ஆகமத்தையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்ட ஆலய வழிபாடே வைணவம் என்று கூறுதல் சாலாது. வைணவமானது ஆகமமே அன்றி வேதம், புராணம் முதலிய மற்ற பிரமாணங்களையும் கொண்டுள் ளது. ஆகவே, வேதம், புராணம், இதிகாசம், ஆகமங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஆழ்வாராதிகள் பாசுரங் கள், வைணவ சாத்திர நூல்கள் இவற்றை உரை கல்லா கக் கொண்டு வைணவத்தை வரலாற்றுவழிக் காண்பது பயன்தரும் செயல்களுள் ஒன்ரும்.

1. மத உணர்ச்சிக்கு வரலாற்றறிவு தேவையா ?

மத உணர்ச்சிக்கு வரலாற்றறிவு தேவையில்லை என் பதே பலருடைய கருத்தாகும். தெய்வம் காலத்துககு அப்பாற்பட்டது என்பது உண்மையாயினும், தெய்வ உணர்ச்சி மனிதனுடைய மனத்தில் வேரூன்றிப் பல காலம் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டுப் பலவகை விரிவுகளையும் வழிவகைகளையும் மேற்கொண்ட நிலை காலத்தை ஒட்டி நிகழ்வதாகலின், அன்றும் இன்றும் என்றும் உள்ள தெய்வம்பற்றி மனிதன் கொண்டுள்ள கருத்துக்களையும், அவை மாற்றமும் விரிவும் பெற்ற விதங்களையும் வரலாற் றுக் கண்கொண்டு நோக்குவது தெய்வ உணர்ச்சிக்கு அரண் தரும் செயலாகவே அமைவதாகும்.

அஞ்சவேண்டா

வரலாற்றுக்கு அப்பாற்பட்டு முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாம் தெய்வம், இன்றும் புதியன வாக எடுக்கப்படும் கோயில்களை உகந்தருளி அடியார்களுக்கு அருள்செய்து வருவதும், தெய்வாம்சம் உடைய சான்றோர் பலர் மறைவுக்குப் பின்னும், தெய்வாம்சம் உடைய பல பழைய இடங்களின் மறைவுக்குப் பின்னும், இன்றும் தெய்வாம்சம் உடைய பெரியோர் பலர் தோன்றியிருப்பதும், தெய்வாம்சம் உடைய புது இடங்கள் பல தோன்றிவருவதும், தெய்வம் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்ப் பழமையோடு புதுமையும் பொருந்தி இலங்கும் இயல்பை தெரிவிக்கின்றன. எனவே, மதங்கள் தொடர்பான வரலாற்றுராய்ச்சி தெய்வ நம்பிக்கைக்கு ஊறுதருமோ என்று அஞ்சுதல் வேண்டா. உண்மையை நோக்குமிடத்து, எந்தஎந்தக் காலங்களில் தெய்வ நம்பிக்கை எப்படி எப்படி இருந்துவந்திருக்கிறது, எந்த எந்தக் காலங்களில் எவ்வெச் சான்றோர்கள் எவ்வெவ்வாறு ஐயமும் திரிபும் நீக்கித் தெய்வ நம்பிக்கையை வளர்த்துள்ளார்கள் என்பனவற்றை அறிந்துகொள்வதால் தெய்வநம்பிக்கை தெளிவோடு உறுதிபெறும் என்பது திண்ணம்.

விஞ்ஞானமும் மதமும்

முதல் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு, விஞ்ஞானத்தோடு மதம் ஒத்துப்போக வேண்டும் என்ற நிலை ஏற்படவே, விஞ்ஞான வழியில் 'மதமும் விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் ஜூலியஸ் அக்ஸ்லி, ஹெட்டிஸ்டன், ஹால்டன் முதலிய விஞ்ஞானிகள் ஆராயத் தலைப்பட்டனர். சர் ஆலிவர் லாட்ஜ் போன்ற புகழ்பெற்ற விஞ்ஞானிகள் மதக் கொள்கைகளையும், விஞ்ஞானத்தையும் ஒன்றுபடுத்தி, Reason and Belief என்ற தலைப்பில் பல நூல்கள் எழுதி வெளியிட்டதன் பயனாக, இன்று கிறித்தவ மதம் புத்துணர்ச்சி பெற்றுப் புத்துருவில் அறிவாளிகளின் உள்ளத்தை ஈர்த்து வருதலைக் காண்கின்றோம்.

வேதமதம்

வேதம், ஸ்மிருதிகள் இவற்றின் கொள்கைகள் உருவாகப் பல நூற்றுண்டுக்காலம் கழிந்திருக்கும். அக்னியில் ஹோமம் பண்ணி மிகப்பெரிய யாகங்கள் செய்யத் தலைப்பட்ட காலத்தில் உபநிடதங்கள் தோன்றி இச்செயல்களில் புரட்சியை உண்டாக்கி, இச் சடங்குகள் செய்வதைக் காட்டிலும் ஞானமார்க்கமே மேம்பட்டது என்று அறுதியிட்டன. ஞானமார்க்கத்தைப் பின்பற்றி முன்னேறுவது என்பது சான்றோர் சிலருக்கன்றி ஏனைய பொதுமக்களுக்கு எளிய செயல் அன்று. ஆகவே, உபநிடதத்தில்கூறப்பட்ட பிரமத்தில் ஈடுபட்டுத் தியானம் வாயிலாகப் பக்தி செய்வது என்ற முறை கையாளப்படலாயிற்று. அதுவும் பிற்காலத்து அரியதொரு செயலாகவே, 'ஒன்றுக்கும் பற்றுத அடியேனைக் குறை தீர்த்துக் காக்கவேண்டும்' என்று சரணுகதி பண்ணும் பிரபத்தி மார்க்கம் பின்பற்றப்பட்டது. இதனைவிட எளிய மார்க்கம் இன்ருதலே, இதுவே நிலைத்து நிற்கிறது. ஆகவே, கர்மாவில் ஆரம்பித்த வேதக்கருத்து இன்று பிர பத்தி மார்க்கத்திற்கு நம்மை அழைத்துச் செல்வதை வரலாற்று முறையில் காண்கிருேம். வேதம் எல்லாக் கருத்துக்களுக்கும் நாயகமான பெரிய கருவூலமாக இருப்பதால், எந்தக் கருத்தை வெளியிட்டாலும் பெரியோர்கள் அக்கருத்து வேதத்தில் இருப்பதாகக் குறிப்பிடுவதைக் காணலாம். உண்மையில் பிரபத்திமார்க்கமே வேதம் குறிப்பிடும் வழியானுல், வேத காலத்திலேயே அக்கொள்கை பின்பற்றப்பட்டிருக்கும். ஆதலின், உண்மை அஃதன்று. பிற்காலச் சிந்தனையாளர் தம் எண்ணத்தில் உருவான கருத்துக்களையே வேதத்திற்கும் உடன்பாடு என்று சுட்டிக்காட்ட முற்படுகிருர்கள். தெய்வீகக் கருத்துக்களுக்குக் காலத்தை ஒட்டிச் சிறப்போ சிறப்பின்மையோ கிடையாது. நல்ல கருத்து என்று ஒன்று தோன்றினுல், நன்மக்களால் அஃது ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் கொண்டுவரப்படும்.

வர்ண தர்மம் இல்லை

வேதம் குறிப்பிட்ட கர்ம தத்துவம், வர்ணத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாதலின், கர்ம தத்துவம் மறைந்ததோடு வர்ணதருமத்தின் முக்கியத் துவமும் மறையவேண்டியதே. மிகச் சிறிய அளவிலேயே வர்ண தர்மம் வாழ்ந்து வருகிறது. பொதுவான இந்து மதம் ஞானமார்க்கம், பக்திமார்க்கம், சமயகொள்கை இவை வர்ணதர்மத்தை அண்டி நிற்கவில்லை. ஞான தத்துவம், பக்தி பிரபத்திதத்துவங்கள் வர்ணக்கொள்கை யோடு தொடர்புடையவை அல்ல. ஆகவே, இப்பொழுது வர்ணதர்மம் தன் முக்கியத்துவத்தை இழந்து சமுதாய தருமமாக நடைமுறையில் இருந்துவருகிறது. இது வரலாறு காட்டும் செய்தியாகும்.

கவிகள் வாக்கில் வரலாற்றுண்மை

வைணவ வரலாற்றை உணர்வதற்குக் கவிகள், வேதாந்திகள், மதாசாரியர்கள் என்ற மூவகைச் சிந்தனை யாளர்தம் கருத்துக்கள் நமக்குக் கருவியாக உள்ளன. கற்பனையுலகில் சஞ்சரித்துக்கொண்டு திவ்ய தேசங் களில் அர்ச்சாவதாரமூர்த்திகளைத் தரிசித்து ஆனந்தப் பட்டு, அம்மூர்த்திகளை இராமன் கண்ணன் முதலிய அவதாரங்களாகக் கற்பனையில் கண்டு அம்மூர்த்திகளிடம் அவ்வவதார திருவிளையாடல்களை ஏறிட்டுப் பாசுரம் பாடிக் கற்பனையுலகில் இறைவனைக் கூடியும் பிரிந்தும் முறையே மகிழ்ந்தும் துயருற்றும் வாழ்ந்த திவ்வியக் கவிகள்வாக்கில், அரசர்கள் ஊர்கள் பற்றிய செய்திகளில் சிறிதளவு வரலாற்றுத் தொடர்பான செய்தியே புலனுதல் கூடும்.

ஞானிகள் சிந்தனை

அங்ஙனமே, ஞானிகள் மேன்மேல் தோன்றும் கருத் துக்களை அடிப்படையாகக் கொண்டு புதிது புதிதாகச் சிந்திக்கிறுர்கள். சிந்தனைஉலகிலேயே திளைக்கும் இவர் கள் சிந்தனையில் வரலாறு தலைநீட்ட இடமே இல்லை.

மதாசாரியர்தம் பொறுப்பு

மதாசாரியர்களுடைய பொறுப்பு முன்கூறிய இரு நிலையினரைவிட மிக மேம்பட்டதாகும். சிந்தனையோடு மட்டும் நில்லாமல் சில வழிமுறைகளைத் தாமும் பின்பற்றி பிறரையும் பின்பற்றச் செய்யவேண்டிய பொறுப்பு இவர்களுக்கே உண்டு. இவர்கள் மற்றவர் கருத்துக்களைப் பூர்வபக்ஷமாகக் கொண்டு மறுத்துத் தம் கருத்துக்களைச் சித்தாந்தம் செய்யும் நிலையிலுள்ளவர்கள். ஒரு காலத்தில் பழக்கத்தில் இருந்த கொள்கை மறுகாலத்தில் மறுக்கப் படுவதும் உண்டு. இங்ஙனம் தெய்வக் கொள்கைகளில் ஏற்படும் பலவித மாற்றங்கள், எந்த எந்தக் காலங்களில் எவ்வெவ்விதமாகத் தெய்வக் கொள்கை மக்கள் சிந்தனையில் இடம் பெற்றிருந்தது என்று அறியும் வரலாற்று உணர்ச்சிக்கு இடந்தருகின்றன.

ஆராய்ச்சி வேண்டும்

எந்த எந்தக காலத்தில் தெய்வ சிந்தனை மக்களிடையே எப்படி எப்படி இருக்கிறது, மனித வரலாற்றோடு எப்படி எப்படி இணைந்து எப்படி எப்படி உரு மாற்றம் பெற்றுத் தற்போதைய நிலைக்கு வந்துள்ளது என்று ஆராயும் வரலாற்று ஆராய்ச்சியால் சிந்தனையில் தெளிவு மிகுந்து தெய்வ நம்பிக்கை உறுதியுறும் என்பது திண்ணம்.

2. வைணவத்தைப் பற்றிய பொதுவான கருத்துக்கள்

வைணவம் என்ற சொல் வேதத்திலேயே காணப் படும் சொல். (யஜுர் வேதம் - முதல் காண்டம் - இரண்டாவது பிரஸ்னம் - இரண்டாவது அநுவாதம்) எனினும் அஃது அஸ்ருவோளுரு கருத்தில் பயன்படுத்தப் பட்ட சொல்லாகும். விஷ்ணுவை மட்டும் வழிபடுவது என் பதும், விஷ்ணுவே பரதெய்வம் என்பதும் பின்னர் வந்த கொள்கைகளாம். விஷ்ணுவையே பர தெய்வமாகக்

கொள்ளும் மதமே வைணவம் என்ற பெயரில் வழங்கு கிறது. வைணவம் என்ற பிரிவில் இன்று பாரத தேசத் தில் 74 பிரிவுகள் உள்ளன என்று சுவாமி தத்வாநந்தா என்பவர் (The Vaishnava Sects - The Saiva Sects- Mother worhip) கணக்கிட்டுக் கூறியுள்ளார். வங்காள வைணவம், அஸ்ஸாம் நாட்டு வைணவம், குஜராத்தி வைணவம், மகாராஷ்ட்ர வைணவம் எனப் பிரதேசங் களை ஒட்டி வைணவம் சிலசில வேறுபாடுகளோடு நிலவி வருகிறது. ராமாநந்தர் வாயிலாக இராமனுடைய வழி பாடும், வல்லபர் வாயிலாக கண்ணனுடைய வழிபாடும் வடநாட்டில் பரவலாயின. இவர்கள் பக்தி மார்க்கத்தைப் பரப்பி நாம சங்கீர்த்தனம் வாயிலாகவே உய்வு காணலாம் என்று நிறுவியவர்கள். ஆதலின், இவர்களைப் பின் பற்றும் வடநாட்டு வைணவர்கள், இராமனுடைய பிம்பத் தையே வைத்துக்கொண்டு பஜனை செய்வதிலேயே மன நிறைவு காண்கின்றனர். வல்லபரைப் பின்பற்றுபவர்கள் சுத்தாத்வைத வேதாந்தத்தையும், மத்துவரைப் பின் பற்றுபவர்கள் துவைதத்தையும், சைதன்யரைப் பின் பற்றுபவர்களும், நிம்பார்க்கரின் சம்பிரதாயத்தினரும் அசிந்த்ய பேதா பேதத்தையும் அடிப்படையாகக் கொண்ட வைணவர்களே ஆவர். வேதாந்தக் கருத்துக் களைப் பின்பற்றினாலும், மதக்கொள்கைகளில் வைணவத் தைப் பின்பற்றுபவர்களும் உள்ளார்கள். மராட்டிய வைணவர்கள் பண்டரிபுரத்திலுள்ள விட்டலரைத் தங்கள் தெய்வமாகக் கொண்டவர்கள். ஸ்ரீ பாகவதத் திலும், துளஸிதாஸ் ராமாயணத்திலும் திளைத்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பஜனை மடங்களில் இராமன், கண்ணன் இவர்களுடைய பிம்பத்தை வைத்துக்கொண்டு கூட்டங்கூட்டமாகத் தியானம், பஜனை இவற்றில் திளைத்து மன அமைதி காண்பவர்கள் பலர். ஆதலின், இவர்களுக்கு ஆலயங்களுக்குச் செல்லவேண்டியது அவ்வளவு இன்றியமையாத செயலன்று. ஆலய வழி பாடும் இவர்களுக்குப் புறம்பானதன்று. இவர்கள் தங்கள் கொள்கைகளை எந்த ஆலயத்திலும் சுமத்துவதில்லை;

எந்த ஆலயம் எந்த முறையைப் பின்பற்றி நிகழ்ந்தாலும், அதுபற்றிக் கவலைப்படுவதும் இல்லை.

வடஇந்திய விண்ணகரங்கள்

கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் சந்திரகுப்த மௌரியனுடைய அரசாங்கத்தில் தூதராய் இருந்த மெகஸ்தனிஸ் வடமதுரையைச் சுற்றிப் பல விண்ணகரங்களும், சிவாலயங்களும் இருந்தனவாகக் குறிப்பிட்டுள்ளான். ஆனல் இடைவிடாது ஏற்பட்ட முஸ்லீம் படையெடுப்பால் விண்ணகரங்களும் சிவாலயங்களும் சேதமுறவே, மக்கள் ஆலயங்களில் கொண்ட சிரத்தையை மாற்றிப் பக்திமார்க்கத்தில் ஈடுபட்டுப் பல குழுக்களாகப் பஜனை மடங்களில் தியானம், பஜனை செய்வதையே பின்பற்றத் தொடங்கினர். வட இந்தியாவில் அருகிக் காணப்படும் விண்ணகரங்களில் ஆடம்பரமான நித்திய பூசனைகளுக்கோ, திருவிழாக்களுக்கோ, சாத்திரம் ஆகமம் இவற்றைப் பின்பற்றிச் செய்யப்படும் மந்திரச் சடங்குகளுக்கோ அதிக இடம் இல்லை. பூரி, பதரி போன்ற திருப்பதிகளில் தனிப்பட்ட ஆகம விதிகள் பின்பற்றப் படுகின்றன.

வேறுபாடு

தமிழ் நாட்டில் ஊருக்கு ஊர் பெரிய விண்ணகரங்களும், ஆலய விழாக்களும் பலவர்கக் காணப்படுகின்றன. பக்தி நெறியில் திளைத்த ' கபீர்தாஸ் ' போன்றவர்கள் வடநாட்டில் ஆலய வழிபாட்டை வெறுக்கவும் துணிந்துவிட்டனர். நெற்றியில் குறியிட்டுக் கொள்வதிலும் வடநாட்டவருக்கும் தமிழகத்தவருக்கும் இடையே வைணவத்தில் வேறுபாடு காணப்படுகிறது.

தமிழகத்திலுள்ள வைணவத்தின் நிலை

' மாசு யோயே! மாசு யோயே!
மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி
மணிதிகழ் உருவின் மாசு யோயே ' எனவும்,

'நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லது
ஏறுதல் உண்டோ வீறுபெறு துறக்கம்'

எனவும் திருமாலுடைய பரத்துவத்தைச் சங்ககாலம் தொட்டே முழங்கிவரும் தமிழ்நாட்டு வைணவம், ஆழ்வா ராதிகளுடைய பாசுரங்களால் வீறுபெற்று, நாதமுனிகள் முதல் வேதாந்த தேசிகர், லோகாசாரியர் வரையில் உள்ள சிந்தனையாளர்களால் கடவுள், ஆன்மா, வீடு, பேறு இவற்றைப் பற்றிய விரிவான கருத்துக்களோடு மிக உயரிய நிலையில் வளர்ந்து நிற்கிறது.

வடகலை - தென்கலை

தமிழ்நாட்டு வைணவம் இன்று வடகலை, தென்கலை என்ற இரு கூறுகளாக இயங்கி வருகிறது. நெற்றியில் திருமண் இட்டுக்கொள்ளுவதில் காணப்படும் சிறிது வேற்றுமையே இவர்களை வெளிப்படையாகப் பிரித்து அறிய உதவுகிறது. இருசாராரும் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார், இராமாநுஜர் இவர்களையே தங்கள் மூல புருஷர்களாக ஏற்றுக்கொள்ளுகின்றனர். இராமா நுஜருடைய நூல்களுக்கும் கருத்துககளுக்கும் பொருள் கூறுவதிலேயே இவர்களிடையே வேற்றுமை நிலவுகிறது. வடகலை தென்கலை ஆசாரியர்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட எந்த நூலிலும் வடகலை தென்கலை என்ற பெயர் கள் காணப்படவில்லை. இருசாராரும் வேதங்களையும் ஆழ் வார்கள் அருளிச்செயல்களையும் ஒப்புககொண்டு, வேத மரபினையும் வைணவ மரபினையும் பின்பற்றிய போதிலும், அடிப்படைக் கொள்கையளவிலேயே சிறிது வேறுபடு கின்றனர். தமிழ் மொழியில் உள்ள ஆழ்வார் அருளிச் செயல்களில் உள்ள வேதாந்தக் கருத்தையும், வடமொழி வேதாந்தக் கருத்தையும் சமமாக ஒப்புக்கொள்ளும் உபய வேதாந்திகள் இருசாராரிலும் உளர். காஞ்சிபுரம் கல் வெட்டில் 'உபயவேதாந்த ப்ரதிஷ்டாபனாசார்ய' என்ற தொடர் காணப்படுகிறது. 'உபய வேதாந்த' என்ற விருது ஸ்ரீரங்கநாதனால் வேதாந்ததேசிகருக்கு முதல்முதல் வழங்கப்பட்டதாகப் பிரதிவாதி பயங்கரம் அண்ணன்

கூறுகிறுர். வடநாட்டில் ‘உபய வேதாந்த’ என்ற விருது கொண்ட வைணவர்கள் இருப்பதாக அறியக்கூடவில்லை.

கர்நாடகத்திலுள்ள வீர சைவர்கள், உபநிஷத்துக்கள், ஆகமங்கள் என்ற இரண்டின் வேதாந்தத்தையும் அறிந்தவர்கள் என்ற கருத்தில், தங்களை உபயவேதாந்திகள் என்று கூறிக்கொள்கின்றனர். (சித்தாந்தசேகரம்)

தென்னுட்டு வைணவம்

வேதம் வைதிக மரபுகள் இவற்றைப் பின்பற்றுவதோடு ஆழ்வாருடைய பாசுரங்களையும் அடி ஒற்றி, ஆகமங்களையும், ஆலய வழிபாட்டையும் சேர்த்துக் கொண்டு, தென்னுட்டு வைணவம் ஆலயத்தோடு இன்று பிரிக்கமுடியாத தொடர்பு கொண்டு விளங்குவதைக் காண்கிறோம்.

தென்னுட்டு வைணவம் காலட்சேப கூடங்களில் வளர்ந்து எப்பொழுது ஆலயங்களோடு இரண்டறக் கலந்த தொடர்பு கொண்டது என்பதனை வரலாற்று உணர்ச்சியோடு நோக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

பஜனைமுறை இல்லை

வடநாட்டு வைணவ முறையில் காணப்படும் நாம ஸங் கீர்த்தனம், பஜனை முறை ஆகியவை, பக்தியை அடைய உபாயமாகுமேயன்றி இவைகளே பக்தியல்லவென்றும், இவற்றுல் வீடுபேறு கிட்டாது என்றும், உபநிடதத்தில் கூறியபடி தனித்திருந்து உபாசனம் பண்ணுவதே பக்தி எனவும், அதுவே வீடுபேற்றுக்கு வழி எனவும் இராமானுஜர் கருதுவதால், தென்னுட்டு வைணவத்தில் பஜனை முறை சிறந்த இடம் பெறவில்லை.

இராமானுஜர் கருத்து

இராமானுஜர், பஜனை பண்ணுவதை விட ஆலயத்தைப் பெருக்கிக் கோலமிட்டு விளக்கேற்றுதல் முதலாக இறைவனுடைய சுற்றுலாவின்போது வேதபாராயண

கோஷ்டி, திவ்விய ப்ரபந்த கோஷ்டி இவற்றில் கலந்து கொள்ளுதல் வரையில் உள்ள தெய்வ கைங்கரியங் களுக்கே முதலிடம் தருகிருர். ஆழ்வாருடைய பக்தியில் ஆலய வழிபாட்டுத் தத்துவம் பக்தி தத்துவம் என்பன பிரிக்க முடியாமல் சேர்ந்திருப்பது உண்மை எனினும், ஆழ்வார்கள் ஆலயங்களிலுள்ள பிம்பங்களை இழியும் துறையாகக் கொண்டு மனத்தால் அவதார விசேடங்களை அனுபவித்து அவ்வனுபவத்திலேயே கூட்டம் பிரிவு இவற்றைக் காண்பதனுல், இராமாநுஜர் ஆழ்வாருடைய பக்தி தெய்வீக உணர்ச்சியைப் பெறுதற்குரிய அடிப் படையேயன்றி வீடுபேறு அளிக்கவல்ல பக்தி ஆகாது என்று கருதுகிருர். பின்வந்த பேருரையாசிரியர்களும், ஆழ்வார்கள் வர்ண தர்மங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆதலின், உபநிஷத்துக்களில் கூறப்பட்ட பக்தியோக நெறியை அவர்கள் பின்பற்ற இயலாததால், அவர்கள் பிரபத்தி யோகநிஷ்டர்கள்தாம் என்று விளக்கம் கூறு கின்றனர். ஆனுல் இக்காலத்தில், ஆலய வழிபாடு சிறப்பாக அமைந்துள்ள தமிழ்நாட்டில் ஆலயங்களுக்குச் சென்று வலம் வருவதும், பிம்பங்களைக் கண்ணுல் கண்டு களிப்பதும், மாத வருட உற்சவங்களில் கலந்துகொள் வதுமே, தமிழ் நாட்டுப் பக்தி மார்க்கமாக விளங்குவதைக் காணலாம்.

நாராயணு என்னும் நாமம்

தெய்வத்திற்குப் பலபல பெயரிட்டுப் பலபல முறை யில் வழிபாடு கூறும் வேதத்திலிருந்து, ‘விஷ்ணுவே ஒரே கடவுள்’ என்று அறுதியிடும் வைணவம் எப்படித் தோன்றியிருத்தல் கூடும் என்ற ஆராய்ச்சி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. விஷ்ணு என்ற சொல்லினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த வைணவம், பரம் பொருளின் பெயராக விஷ்ணு என்பதனை முக்கியமாகக் கொள்ளாமல், நாராயணன் என்ற பெயரையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

வேத உபநிடதங்களில் வழிபாடு

வேதத்தில் யாகங்களே சொல்லப்பட்டுள்ளன. வேதத்தில் உருவ வழிபாடு சொல்லப்படவில்லை. யாகங்களில் மந்திரங்களைச் சொல்லி அக்நியில் நெய்யையோ மற்ற பொருள்களையோ இடுவதுதான் வேதம் குறிப்பிடும் வழிபாடாகும். ரிக்வேதத்தில் தெய்வங்களைப் புகழ்ந்து பேசும் மந்திரங்கள் காணப்படுகின்றன. சாம வேதம் ரிக்வேத மந்திரங்களை இசையோடு சாற்றுகிறது. மூன்று வேதங்களும் சேர்ந்தே யாகங்களை நடத்துகின்றன. உபநிடதங்கள் கருத்தளவில் தெய்வக் கொள்கைகளை அறிவித்துத் தியானத்துக்கு வழிவகுக்கின்றன. இவை இன்றுவரை வழக்காற்றிலும் அருதியாவது காணப்படுகின்றன. இவற்றையும் நோக்கி, இன்று கோயில்களில் காணப்படும் ஆகம வழிபாட்டினையும், அதற்கு ஆதாரமான நூல்களையும் நோக்கும்போது, எந்தச் சூழ்நிலையில் வேதநிலைமாறி ஆகமங்களின் ஆதிக்கம் வலிமையுற்றது என்பதனை அறிதற்கண் வேட்கை எழுதல் இயற்கையே.

ஆகமங்களில்

ஆகமங்கள் வாசுதேவன், ஸங்கர்ஷணன் என்ற பெயர்களுக்கே சிறப்பான நிலையை வழங்குகின்றன. ஒவ்வொரு திருத்தலத்திலும் உள்ள விஷ்ணுவின் பெயரும் வெவ்வேறாக வழங்கப்படுகிறது. இயற்கையில் கடவுளை வைத்து வழிபாடு செய்தலை வற்புறுத்தும் வேத மதத்திலிருந்து ஆலய வழிபாடு பிறந்த விதம், வர்ண தர்மங்களில் நிற்கும் வேத மதத்தில், ஆகமங்கள் வெளியிடும் ஆரவாரம் இடம் பெற்ற விதம், தமிழ்நாட்டு வைணவத்தில் எங்கெங்கிருந்து எவ்வெப் புதுமரபுகள் இடம் பெற்றன என்பன ஆராயத் தக்கனவாம்.

தமிழ்நாட்டு வைணவ வரலாற்றுச் சுருக்கம்

வேதமே மூலாதாரம்

தமிழ் நாட்டு வைணவம் தனக்கு வேண்டிய அடிப்படைக் கருத்துக்களை வேதத்திலிருந்து பொறுக்கி எடுத்துக்கொண்டுள்ளது. ஆசாரியர்கள் தங்கள் வைணவக் கொள்கைகளை விளக்க வேதவாக்யங்களைச் சான்று காட்டுவதால், வைணவத்திற்கு வேதமே மூலாதாரம் என்பது தேற்றம். அவ்வாறே இதிகாச புராணக் கதைகளும் நடைமுறைக்குத் தேவைப்படுகின்றன. வருண தருமங்களுக்கும் ஆச்சிரம தருமங்களுக்கும் ஸ்மிருதிகளே ஆதாரமாக உள்ளன அக்நியில் ஹோமம் செய்து தெய்வங்களை வழிபடும் கொள்கைக்கு வைணவம் வேதத்தைப் பின்பற்றுகிறது. 'விக்கிரக வழிபாடு' 'ஆலய வழிபாடு' என்பனவற்றிற்கு வைணவம் ஆகமத்தைப் பின்பற்றுகிறது. சிறிய அளவில் விக்கிரக ஆராதனையைத் தொடங்கிய ஆகமங்கள், பிறகு தனியான வேதாந்தக் கொள்கைகள், மதக்கொள்கைகள் இவற்றோடு வளர்ந்து முடிவில் வைதிக மதத்தோடு உறவு கொண்டாடி, அக்நியில் ஹோமம் செய்வது முதலியவற்றை உட்கொண்டு மிகப்பெரிய அளவில் ஆலயபூஜைகளை வளர்த்துப் பலவிதத் திருவிழாக்களுக்கும் பூஜைகளுக்கும் வழி வகுத்துவிட்டன.

தொடக்க வளர்ச்சி

வைணவ சம்பிரதாய ஆசாரியர்கள் விஷ்ணு புராணத்தை அடிப்படையாகக் கொண்டு வைணவ மதத்தைத் தொடக்கத்தில் வளர்த்தனர். உபநிஷத்துக்களில்

கூறப்படும் உருவம் இல்லாத பிரும்மத்தை உருவமுடைய விஷ்ணுவாக ஆக்கி, குணம் இல்லாத பிரும்மத்தைக் குணமுடையதாக விளக்கிய பெருமை விஷ்ணு புராணத்தைச் சாரும்.

நாதமுனிகள் பிரசாரம்

நாதமுனிகள் வரையில் இருந்த வைணவம் விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்று சொல்லும் அள வோடு நின்றுவிட்டது. வைதிக மதக் கருத்துக்கள் எல்லாவற்றிற்கும் விஷ்ணுதான் பரதேவதை என்ற அடிப்படையில் பொருள்கூறி வந்தவர்களே, அல்லாமல், மத வேதாந்த தர்மத்துறையில் விஷ்ணுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பாஞ்சராத்தர ஆகமத்தைப் பின்பற்றியவர்களும் நாதமுனிகள் காலத்தில் இருந்தனர். வைதிக மதத்திலிருந்து பாஞ்சராத்ர ஆகம் மதம் வேறுபட்டது என்று புறக்கணித்தல் கூடாது எனவும், அதனையும் வைதிக மதக் கொள்கையை ஒத்த வேறொரு சிறந்த கொள்கையாகவே பாவிக்கவேண்டும் எனவும் நாதமுனிகள் பிரசாரம் செய்துவந்தார்

இராமானுஜர்

நாதமுனிகள் பெயரரான ஸ்ரீ ஆளவந்தார் பாஞ்சராத்திரக் கொள்கைகளை ஆதரித்து நூல் எழுதியுள்ளார். அவருடைய மகனாரின் பெண் மரபில் தோன்றிய இராமானுஜர் பிரும்மசூத்திரம் பாஞ்சராத்ர அதிகரணத்தில் பாஞ்சராத்திரக் கொள்கைகளைப் பாதுகாத்து உரை எழுதினார். முன் இருந்த பிரும்மசூத்திர உரையாசிரியர்கள் பாஞ்சராத்திர ஆகமத்தில் வேதத்துக்கு எதிரான கொள்கைகள் இருப்பதைச் சுட்டியுள்ளனர். ஆதலின், இராமானுஜர் காலம்வரை ஆகமக் கொள்கைகளும் ஆழ்வாராதிகள் பாசுரங்களும் தமிழ்நாட்டு வைணவத்தில் கலக்கவில்லை என்று தெரிகிறது. இராமானுஜரே தம் காலத்தில் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களை மேற்கொண்டு

வைணவக் கொள்கைகளை வளர்த்தார் என்று 'கோயி லொழுகு' 'வேங்கடாசல இதிகாசமாலா' 'குருபரம்பரா ப்ரபாவம்' முதலிய நூல்கள் குறிப்பிடும் செய்திக்கும், உபநிடதம் கூறும் பக்தியோக மார்க்கத்தைத் தம் நூல் களில் வலியுறுத்திய இராமாநுஜர் சரணாகதிகொள்கைக்கு காரணமாயிருந்தார் என்று குறிப்பிடுவதற்கும் அவர் நூல்களில் அகச்சான்றுஎதுவும் இன்மையால், இராமாநுஜர் சீடர்களுக்கு இரகசியமாக உபதேசம் செய்யவே, அச் சீடர்கள்வாயிலாகவெளிப்பட்ட செய்தியே 'குருபரம்பரை' முதலியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறும் சமா தானம் வேதாந்த தேசிகராலேயே ஒத்துக்கொள்ளப்பட வில்லை. நூல்களில் ஏராத தனியான ரகஸ்ய சம்பிரதாயம் கிடையாதென்று சம்பிரதாய பரிசுத்தி என்ற நூலில் கூறுகிறர். எந்தச்சிறப்புச்செய்தியும் பொதுச்செய்தியோடு முரண்பட்டதாயிருத்தல் கூடாது. இக்கால ஆராய்ச்சி யாளர்களுள் J **A.B. Van Buitenen** என்பார் இராமாநுஜர் ஆலய வழிபாட்டோடு நேருக்கு நேராகச் சம்பந்தப்பட்ட தாகத் தெரியவில்லை எனவும், ஸிம்மாசலம் கோவிலைப் பற்றி நூல் எழுதும் காலத்தில் டாக்டர் சுந்தரம் என்பார் ஆலயவழிபாட்டை இராமாநுஜர் வகுத்தார் என்பது தவறு எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகமக் கலப்பு

இராமாநுஜருக்குப் பின் வந்த ஆசாரியர்கள், வைதிக மதக்கொள்கைகளோடும், ஆகமக் கொள்கைகளையும் ஆசரணைகளையும் கலந்ததோடு, ஆழ்வார் அருளிச் செயல்களையும் தங்கள் கொள்கைக்கு மேற்கோளாகக் கொண்டு வைணவத்தை வளர்த்துள்ளனர்.

இராமாநுஜர் வரை

வைணவக்கொள்கை வளர்ச்சி

இனி வைணவக் கொள்கை வளர்ச்சிபற்றி நோக்கு வோம். நாதமுனிகளே தத்வத்ரயம் என்று கூறப்படும் ஜீவாத்மா, இயற்கை, கடவுள் என்ற முப்பொருள்களை முதலான உண்மைகளாகக் கண்டுபிடித்தார். 'கடவுள் நாராயணனே' என்பது நாதமுனிகள் கண்ட முடிவு

ஸ்ரீ ஆளவந்தார் தம்முடைய சித்தித்ரயம் என்ற நூலில் தத்வத்ரயத்திற்கு எதிராக உள்ள அத்துவைதக் கொள் கைகளைக் கண்டித்து அவற்றை நிறுவுவதோடு, மகா லக்ஷ்மியையும் வழிபடுகிறார். இராமாநுஜர் தம் நூல் களாகிய ஸ்ரீ பாஷ்யம், கீதாபாஷ்யம், வேதார்த சங்கிரகம் என்ற நூல்களில் தத்துவத்திரயங்களை நிறுவதோடு, ஈசுவரதத்துவத்திற்கு மற்ற இரண்டும் உடலாக அமைந்து சரீர சரீரி பாவத்தில் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கும் நிலையை விளக்கிக் கூறி, சரீரியாகிய பிரும்மம் நாராயணனே என்று நிறுவி, ஜீவாத்மாவும் இயற்கையும் சேர்ந்துள்ள பிரும்மம் ஒன்றுதான் என்ற விசிஷ்டாத்துவைதக் கொள்கையை வெளியிடுகிறார். ஆழ்ந்து கவனித்தால் சரீர சரீரி பாவம் ராமாநுஜரின் நூல்களிலேயே உருவாகிறதென்று தெறிகிறது. அத னோடு உருவம் இல்லாத பிரும்மத்துக்கு அழகான ஆண் உருவம் கொடுத்து, ஆடையுடுக்க செய்து, அவனோடு பெண் உருவில் உள்ள மகாலக்ஷ்மியையும் சேர்த்து, பரிவாரங்கள், இருப்பிடங்கள் இவற்றை விரிவாக வரு ணித்து, வைணவத்தை உருவாக்குகிறார். பக்தியால் வீடுபேறடையலாம் என்று கூறிய முதல் ஆசாரியர் இராமாநுஜரே. சரணாகதியை இராமாநுஜர் ஒருவாறு ஒப்புக்கொண்டபோதிலும், அதை மோட்ச சாதநமாகக் குறிப்பிடவில்லை. அதனாலேயே இராமாநுஜருடைய ஞானபுத்திரரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் மோக்ஷ உபாயங்கள் கர்ம ஞானபக்திகள் தாம் என்றும், ஆழ்வார் கள் பக்தியோக நிஷ்டர்களே என்றும் குறிப்பிடுகிறார். இராமானுஜர் கூறும் பக்தி பொதுமக்கள் நினைக்கும் பக்தி இல்லை. உபநிஷதம் கூறும் உபாஸனையே.

இராமாநுஜருக்குப் பின் வந்த ஆசாரியர்களுடைய கொள்கைகள் சில இராமாநுஜருடைய கொள்கைகளுக்கு முரண்பட்டாலும், வைணவத்தை விரிவாக வளர்த்த பெருமை அவர்களைச் சாரும். முரண்பட்ட கொள்கை களாக நூல்கள் வாயிலாக அறியக் கிடப்பன யாவும்,

தாம் இராமாநுஜரிடமிருந்து இரகசிய சம்பிரதாயத்தால் அறிந்தனவே என்று கூறத் தொடங்கிவிட்டனர். இவர்கள் பக்தியை விடுத்துப் பிரபத்தியையே மோட்ச சாதனமாகக் கொண்டதனுல் ஆழ்வார்களில் தலை சிறந்த நம்மாழ்வாரைப் பிரபன்ன சந்தான கூடஸ்தர் ஆக்கிவிட்டனர். முக்கியமாகப் பிரபத்திதான் உபாயம், 'அர்ச்சாவதாரம் முடிவான அவதாரம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. 'ஆலயங்களில் உள்ள அர்ச்சைகளும் கடவுளுடைய அவதாரமே. அங்குச் செய்யும் பணிதான் உண்மையான தெய்வத் தொண்டு' என்று கூறி ஆலய வழிபாட்டை வைணவத்தின் உயிர்நாடியாக்கிவிட்ட, பிற்பட்ட ஆசாரியர்கள் தங்கள் கருந்துக்களை வெளியிடத் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். ஆழ்வார், எம்பெருமானுர், உடையவர் என்று இவர்கள் குறிப்பிடும் சொற்கள் கல்வெட்டுக்களில் சிவ பெருமானுக்கும் திருமாலுக்கும் பொதுவாக உபயோகப்பட்ட சொற்கள்; எனினும், இவர்கள் காலத்துக்குப்பின் இவை வைணவத்திற்கே உரிய சிறப்புச் சொற்களாகக கொள்ளப்பட்டுவிட்டன. கல்வெட்டுப் பற்றிய செய்திகளைத் தனியே நோக்குவோம்.

விக்கிரக வழிபாடு

ஈஜிப்ட் முதலிய நாடுகளில் ஒரு காலத்தில் விரிவாக இருந்த உருவவழிபாடு அறிவு வளரவளரக் குறைந்து அழிந்துபோகவும், தமிழ்நாட்டில் அறிவு வளர வளர விக்கிரக வழிபாட்டு முறை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்துகொண்டே இருக்கிறது. இன்னும் தமிழகத்தில் விஞ்ஞானிகள், வேதாந்திகள், பக்தர்கள் ஆகிய எல்லாத்திறத்தாரும் விக்கிரக வழிபாட்டால் பயன் பெற்று வருதலைக் காண்கிறேம். நிலையான அடிப்படையில் அமைந்துள்ள இந்நாட்டு விக்கிரக வழிபாட்டுமுறை என்றும் நின்று நிலவக்கூடியதாகும். ஆகவே, இத்தகைய நிலைவேறுடைய விக்கிரக வழிபாட்டின் அடிப்படைக் கருத்துக்களைக் கவனிப்பது அவசியமாகிறது.

தமிழ்நாட்டு ஆலய வழிபாட்டின் தனிப் பெருமை

தமிழ்நாட்டில் ஆலய வழிபாட்டுத் தொன்மை

தமிழ் நாட்டில் ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படும் சங்ககாலத்துக்கு முன் பிருந்து இன்றுவரை ஆலய வழிபாடு தொடர்ந்து வந்துள் ளது. காவிரிப்பூம்பட்டினம் மதுரை, திருமாலிருஞ்சோலை ஆகிய இடங்களில் ஆலய வழிபாடு சிறப்பாக நடந்தது என்று சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் முதலியன இயம்புகின்றன. சங்க காலத்திலேயே ஆலயங்களில் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. ஆழ் வாராதிகள் காலத்தில் ஆலய வழிபாடும் திருவிழாக் கோலமும் மிகச் சிறந்த நிலையில் இருந்திருக்கின்றன. அரசாட்சி மாறினாலும் ஆலய வழிபாட்டுக்கு இடையூறு எதுவும் ஏற்பட்டிலது. வெளி மதத்தினர் படையெடுப் பைப் பெரும்பாலும் அறியாத தமிழகத்து மக்கள் ஆலயங் களைத் தங்கள் பொதுவுடைமையாகக் கருதி பாதுகாத்து வந்ததாலும் ஆலய வழிபாடு தமிழகத்தில் வேரூன்றி விட்டது. ரிக் வேதத்துக்கு அடுத்தபடியாக, உலக இலக்கியங்களில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் அருளிச்செய்த பாடல்கள்தாம் வேறுமொழியில் மத அடிப்படையில்அமைந்துள்ள இலக்கியச்சுவை நிறைந்த பக்திப் பாடல்களாம். இவற்றாலும் ஆலய வழிபாடு மக்கள் உள்ளத்தில் ஆழங்காற்பட்டது.

ஆலயங்களது ஆக்கம்

தமிழ்நாட்டில் சிதைந்த ஆலயங்கள் பல புதுப்பிக்கப் படுகின்றன; புதிய ஆலயங்களும் கட்டப்படுகின்றன.

பண்டு அரசரும் அரசியரும் பெருநிலக்கிழாரும், அரசியல் அதிகாரிகளும் கோயில்களுக்கு பெருஞ் செல்வத்தை அர்ப்பணம் செய்துள்ளனர். இக்காலத்திலும் பொதுமக்கள் பலரும் கோயிலுக்குத் தம் செல்வத்தை வழங்குவதைக் காண்கிறோம். தமிழர்களின் வாழ்வு உருவ வழிபாடு, விக்கிரக வழிபாடு, கோயில் வழிபாடு இவற்றோடு இரண்டறக்கலந்துவிட்டது. வடநாட்டில் உள்ள பக்தி மார்க்கம் தனிப்பட்ட மனிதனுடைய சிந்தனைச் செயலாகிவிட்டதால், அங்கு ஆலய வழிபாட்டிற்கு அதிகச் சிறப்பு இல்லை. தமிழ் நாடு இந்நிலையில் வடநாட்டிலிருந்து முற்றும் வேறுபட்டு விளங்குகிறது. ஆலயத்துக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சி தொன்றுதொட்டுத் தமிழ்மக்கள் உள்ளத்தில் வேரூன்றி விட்டது. சிங்களவர் தென்பாண்டி நாட்டின்மீது படையெடுத்த காலத்தில் ஆலயங்களை அழித்துள்ள செய்தி ஆலம்பாக்கம் கல்வெட்டால் புலனாகிறது. இடிக்கப்பட்ட ஆலயங்கள் விரைவில் புதுப்பிக்கப்பட்ட செய்தியையும் காண்கிறோம். தன்னைப்போல் மற்றவர்களும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் ஒருவன் கோயில் கட்டி அதன் நித்திய நைமித்திகக் கிரியைகளுக்கு நிபந்தம் விட்டு அதனைப் பொதுமக்கள் பராமரிப்பில் விட்டுவிடுவதால், கோயில் ஆக்கம் கருதிப் பொது மக்கள் பொறுப்புணர்ச்சி மிகுகின்றது. ஏற்றத் தாழ்வு உணர்ச்சி இல்லாமல் மத அடிப்படையில் மக்கள் சமத்துவத்தோடு வழிபட்டுத் தெய்வ உணர்வைப்பெறும் பொது இடமாகக் கோயில் அமைவதால், இங்கு நடைபெறும் பூசனைகளும் நாட்டின் பொது நன்மையை நாடியே செய்யப்படுவனவாக உள்ளன. ஆண்டவனைக் கோயிலில் கண்டு தெரிசித்து மன அமைதி பெறுவதும், திருவிழாக்களில் கலந்துகொண்டு இறைவனுடைய பேரழகில் திளைத்து மகிழ்வதும் பொதுமக்களின் அன்றாட இயல்பாகிவிட்டன. உபநிடதங்கள் நிர்க்குணப் பிரும்மமாகக் கூறும் கடவுளைப் புராணங்களும் இதிகாசங்களும் அவதார புருஷனாகக் காட்ட, அவனை யோகியர் தங்கள்

உள்ளத்திலும், பக்தர்கள் தங்கள் பஜனையிலும் கொண்டு மகிழும் நிறைவைப் பொதுமக்கள் ஆலய வழிபாட்டின் மூலம் எளிதில் பெற்று அமைதியுறுகிறார்கள்.

ஆலயங்களின்சிறப்பு

மதங்கள் பலவற்றிடையே கொள்கைகள் வேறுபாட்டால் பிணக்குகள் பல ஏற்படினும் எல்லா மதங்களும் மேம்பட்ட பரம்பொருள் ஒன்று உண்டு; அதனை வழிபட்டு வாழ்வதே வாழ்க்கைப் பயன் என்று கூறுவதில் மாறுபடுவதில்லை. வாழ்க்கையில் மேடுபள்ளங்களைக் கண்டு அலுத்துப் போகும் உள்ளத்திற்குத் தெய்வ வழிபாடு அமைதியைத் தருகிறது. தெய்வ நம்பிக்கை உள்ளத்தில் இருந்தால் மட்டும் போதாது; அதனைச் செயல்களில் காட்டவே ஆலய வழிபாடும் விக்கிரக வழிபாடும் பின்பற்றப் படுகின்றன. உலகியலிலும் நாம் உற்றார் உறவினரிடம் அன்புடையோம் என்பதை உள்ளத்தளவிலேயே அடக்கிக்கொள்ளாமல் நம் சொற்கள் செயல்கள் மூலம் வெளிப்படுத்துவதுபோல, தெய்வ நம்பிக்கையும் ஆலய வழிபாட்டின்மூலம் வெளிப்படுகிறது. வாழ்க்கை நம்பிக்கையாலேயே நடைபெறுகிறது. வாழ்க்கை சிறப்பதற்குத் தன்னம்பிக்கைக்கு இணையாகத் தெய்வ நம்பிக்கையும் கை கொடுக்கிறது. சிந்தனை அளவில் நிற்பவன் பாராட்டப்படுவதில்லை. நல்ல சிந்தனையைச் செயற்படுத்துபவனே பலருடைய பாராட்டுதலையும் பெறுகிறான். சிந்தனை அளவில் நிற்பது அவனுக்கு மட்டுமே உள்துணையாக பயனை உண்டுபண்ணும் சிந்தனையின் விளைவாக ஏற்படும் செயல்கள் பிறருக்குப் பயன்படுவதே. வெளித்துறையில் நின்று இவனுக்கும் பயன்படும். தெய்வ நம்பிக்கையும் சிந்தனையளவில் நில்லாது செயற்படற்குத் தமிழ்நாட்டு ஆலயங்கள் நிலைக்களன்களாக உள்ளன. சிந்தனையிலேயே திருப்தியடையும் ஞான யோகத்தைவிடச் சிந்தனையைச் செயற்படுத்தும் கருமயோகமே, மனித உடலைப்பெற்று உலகியலில் உழன்று திரியும் பொதுமக்களுக்கு ஏற்றதாகும் என்பதே பகவத்கீதையின் கருத்தாகும்.

விக்கிரக வழிபாடு

அதனாலேயே மேல்நாட்டு வேதாந்திகளில் சிலர் வெறும் சிந்தனையை மட்டும் தூண்டும் வேதாந்தம் பயன் அற்றது எனவும், வாழ்நாளுக்குத் தேவையான அளவில் தான் தத்துவசிந்தனை வேண்டும் என்று கூறுகின்றனர். விஞ்ஞான வாழ்க்கை மனிதனை அங்கும் இங்கும் அலையச் செய்யும் இன்றைய உலகில், தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு ஆழ்ந்திருக்கும் தெய்வ சிந்தனையோடு ஒன்றி யிருத்தல் எளிதன்று. சிந்தனையைச் செயலளவில் விரி வாக்க, உலகம் முழுதும் இறைவன் பரந்துள்ளான் என்ற அடிப்படையில் செய்யப்படும் எந்தச்செயலும் கர்மயோக மாகித் தெய்விக உணர்ச்சியை எளிதில் அடைய வழி வகுக்கிறது என்று ஈசாவாகிய உபநிஷத்தும் கீதையும் குறிப்பிடுகின்றன. அத் தெய்வ உணர்ச்சி உறுதிப்பட விக்கிரக வழிபாடு பெருந்துணையாகிறது.
கடவுள் எங்குமுள்ளான் என்ற உணர்ச்சிக்கு ஆலயங் களும் விக்ரஹ வழிபாடும் பயிற்சிக் கூடங்கள்.

" பெண்ணின் நோக்கும் சுவையின் பிறர்பிறர்க்கு
எண்ணி நோக்கி இயம்பரும் இன்பத்தைப்
பண்ணின் நோக்கிய பராசுமு தைப்பசுங்
கண்ணின் நோக்கினர் உள்ளம் களிக்கின்றார் "

என்ற நிலையில் இராமனைக்கண்டு களித்த முனிவர்கள் அவன் கண்ணனாக அவதரித்தபோது கோபியர்களாகத் தோன்றி அவனைச் சுற்றி சுற்றி வந்து அவனோடு பேசி யும் அவன் குழலோசையைக் கேட்டும் மன நிறைவுற் றனர் என்ற சிறிய இதிகாசமும் நினைவுகூறத்தக்கது.

உருவ வழிபாட்டில் மனநிறைவு

உருவமில்லாத இறைவன், மக்களின் தெய்விக உணர்ச்சியை வளர்க்கவே அவதாரம் செய்தார். அவ் வவதார காலத்திற்குப் பிற்பட்டுத் தோன்றியவர்களும் தெய்விக உணர்வோடு வாழ்வதற்கே இறைவன் ஆலயங்

களில் விக்ரஹ வடிவில் காட்சி வழங்கிக்கொண்டிருக் கிருர். அவனே நமக்கு எல்லாவித உறவும் ஆவான் என்ற எண்ணத்தோடு இறைவனே வணங்கும் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியோடு தத்தம் உடைமைகளை இறைவ னுக்குக் காணிக்கையாக வழங்கி மனநிறைவு அடை கிருர்கள். இறைவனுக்குப் பிம்பம் கூடாது என்று வற் புறுத்தும் கிறித்தவர்களும் தவப்பெரியார்களுக்குச் சிலை வைத்து வழிபாடு செய்கின்றனர். முகமதிய மதம் நீங்க லான எல்லா மதங்களும் உருவ வழிபாட்டிற்குப் புறம்பாக இல்லை. ஆனல் அவர்களும் மசூதிகளிலும் மெக்கா விலும் மன நிறைவை அடைகிருர்கள்.

பூசை விழாக்கள் புகுதல்

நாகரிகம் மிக்க இக்காலத்திலும் சில கருத்துக்களை விளக்கச் சில செயல்களைப் பின்பற்றுகிரேம். பழகப் பழகக் கருத்துக்கும் செயலுக்கும் உலக வழக்கில் உறவு ஏற்பட்டு விடுகிறது, எடுத்துக்காட்டாக, மரியாதையைத் தெரிவிக்க மாலைசூட்டுகிரேம். மரியாதைக்கும் மாலைக்கும் இயற்கையில் எந்தத்தொடர்பும் இல்லை. எனினும், மரியா தைக்கும் மாலைக்கும் பழக்கத்தால் தொடர்பு ஏற்பட்டு விட்டது. அதுபோல, நூல்களில் கருத்தளவில் நிற்கும் தெய்வத்திற்கு அழகான உருவைக் கொடுத்து, அத் தெய்வத்தினிடம் நாம் கொண்டுள்ள அன்பைப் பூசை விழாக்கள் முதலியவை வாயிலாக வெளிப்படுத்துகிரேம். கடவுளுக்கு உருவமே இல்லை என்று கூறும் சில மதவாதி கள், மனிதனிடம் காணப்படும் கருணை, கண்ணேட்டம் முதலிய குணங்களேயும், மனிதனுடைய செயல்களையும் கடவுளுக்குச் சொல்லிவைத்துப் பின் அத்தகைய கடவு ளுக்கு உருவம் கிடையாது என்று கூறுவது சிந்தனைக்குப் பொருந்துவதாக இல்லை.

பயன்வேறு

மனிதன் விக்கிரகங்களில் கடவுளைக் கண்டு வழி பட்டு வாழ்க்கைப் பயன்களைப் பெறுவதாலேயே ஆலய

வழிபாடு குன்றுது சிறந்து வருகிறது. மனிதன் தனக்குத் தேவையானவற்றை இறைவனை வேண்டி அவன் அரு ளால் பெறுகிருன். இறைவனை

'கூடும் அன்பினில் கும்பிடவே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்'

என்ற நிலையில் வழிபடுவது உலகியல் கடந்த ஞானி களுக்கு ஏற்குமேயன்றி, வாழ்க்கையின் அன்ருடத் தேவைகளை நிறைசெய்து வாழவிரும்பும் பொதுமக்களுக்கு ஏலாது. ஆகவே, பொதுமக்கள் இறைவனை வேண்டி ஞல் நம் நேரிய செயல்கள் கைகூடும் என்ற எண்ணத் திலேயே இறைவழிபாடாற்றுவது கண்கூடு.

விஞ்ஞான வழியில் கடவுட் சிந்தனை

விஞ்ஞானம் இயற்கையில் மறைந்திருக்கும் பல புதுப்புதுச் செய்திகளைக் கண்டுபிடித்து உதவியுள்ளது. விஞ்ஞானம் முன்னேற முன்னேற, மனிதனின் கடவுள் சிந்தனையும் முன்னேறிக்கொண்டே வருகிறது. பழங்காலத்தில் சாத்திரங்கள், தோத்திரங்கள் இவற்றைக் கொண்டு கடவுளைச் சிந்தனை செய்தனர். இக்காலத்தில் அவற்ருேடு விஞ்ஞான வழியும் தேவைப்படுகிறது. விஞ்ஞ்ரன வழியில் தெய்வ சிந்தனையை வளர்க்க, மத தத்துவத்தை விளக்குமியல் Philosophy of Religion, Science of Religion, Science of Comparity of Religion, Psychology of Religion, History of Religion என்ற துறைகளில் மதங்கள் பல்கலைக் கழகங்களில் ஆராயப்பட்டுப் பல நூல்கள் வாயிலாக வெளிப்போந் துள்ளன. விஞ்ஞானத்தால் தூய்மையாக்கப்பட்டுள்ள மதக்கொள்கைகளையே நாகரிகம் மிகுந்த அறிவாளிகள் ஏற்றுக்கொள்கிருர்கள். விஞ்ஞானிகள் இப்பௌதிக உலகம் தவிரத் தெய்விக உலகம் ஒன்று உண்டு என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். விஞ்ஞான வளர்ச்சி உலகத்துப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்க்க முடி யாது போயினமையின், அதுவே பேராற்றலுடையது

அன்று; அதனின் மிக்க பேராற்றல் ஒன்று உலகை இயக்கி வருகிறது. அதுவே கடவுள் தத்துவம் என்பது முடிவாகிறது.

யுக்திவாதங்களுக்கு அப்பாற்பட்டது கடவுள் தத்துவம்

கடவுள் என்ற தத்துவத்தைத் தன் அறிவின் அநுமானத்தால் யாரோ ஒருவன்தான் தொடக்கத்தில் கண்டுபிடித்திருக்க வேண்டும். அஃது ஆட்டுவிக்க ஆடும் அடிமைகளே உயிரினங்கள் என்று அன்று கண்ட உண்மை, உலகம் முழுவதும் பரவி இன்று தெய்விக உணர்ச்சியின் அடித்தளமாக உள்ளது. குரு உபதேசங்களும், யுக்தி வாதங்களும் சாதாரண மனிதனின் கடவுள் நம்பிக்கையை ஆக்கவும் இல்லை; வளர்க்கவும் இல்லை; அதனை அழிக்கவும் முடியாது. கடவுள் நம்பிக்கை மனிதனின் பாரம்பரிய சொத்து. கடவுள் தத்துவம் யுக்தி வாதங்களுக்கு அப்பாற்பட்டது. ரூஸ்பர்க் என்ற மெய்ஞானி யுக்தியைக் கடந்தால் கடவுளைக் காணலாம் என்ற கூறிய செய்தி, சங்க காலத்தில் 'புலம்பிரிந்துறையும் நலம்பெறு சேவடி' — (முறுகாற்றுப்படை) என்ற தொடரில் காணப்படுகிறது. உலக அநுபவங்களுக்குக் கையாளப்படும் யுக்திவாதங்களைக்கொண்டு உலகுக்கு அப்பாற்பட்ட கடவுளை அறுதியிட்டுக் கூற முடியாது என்பதைச் சிந்தனையாளர் அனைவரும் நன்கு அறிவர். யுக்தி வாதங்கள் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுமேயன்றித் தெய்வக் காட்சி வழங்கமாட்டா. யுக்தி வாதங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்து கொண்டே இருப்பினும், அவை அறிவாளிகளின் பொழுது போக்காக அமைகின்றனவே யன்றி, கடவுள் தத்துவத்தைச் சிக்கலின்றி அனைவரும் ஒத்துக்கொள்ளும் வண்ணம் இயம்பும் ஆற்றலைப்பெறவில்லை; இனியும் பெறுதல் இயலாது. 'அம்சகுஹ்யம்' என்ற தோத்திரம் 'வாதப் பிரதிவாதம் செய்பவர்களுக்கு இடம் கொடுத்துக்

கொண்டேதான் அப்பால் இருந்துகொண்டு இருசாராருக்கும் மயக்கந்தரும் கடவுளின் சக்திக்கு' வணக்கம் கூறுகிறது.

கடவுள் பற்றிய கருத்துப் பன்மை

வேதம், 'கடவுள் மனித அறிவுக்கு எட்டாதது; உருவமோ, பெயரோ, குறிப்பிட இடமோ இல்லாதது' என்று கூறியபினனும், சிந்தனையாளர்கள் பல வகையாகத் தோன்றிக் 'கடவுளுக்கு உருவம் இல்லை, குணம் உண்டு' எனவும், 'குணம் இல்லை, உருவம் உண்டு' எனவும், 'உருவம் உண்டு, பெயர் இல்லை' எனவும், 'உலகத்திற்கு அப்பால் கடவுளுக்கு வான மண்டலத்தில் எல்லாம் உண்டு' எனவும், 'கடவுள் வானமண்டலத்தில் மட்டும் இல்லை, எங்கும் உண்டு' எனவும், 'அன்பைச் செலுத்தினால் கடவுளை உள்ளத்திலேயே காணலாம்' எனவும் தொடங்கி, முடிவாகக் கடவுளைப் பற்றிச் சொல்ல முடியாது என்ற முடிவிற்கே வந்தனர்.

இராமாநுஜரும் சங்கரரும்

பாரத மதாசாரியார்களில் இராமாநுஜர் ஒருவரே 'கடவுளுக்கு உருவம், குணம் இவை யாவும் உண்டு; மனித உலகில் காணப்படும் எல்லாம் கடவுளுக்கு உண்டு; ஊர் உண்டு; பேர் உண்டு; பத்தினி உண்டு; பரிவாரம் உண்டு. ஆனால் இவை யாவும் உலக இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையிலேயே உண்டு; கடவுளுக்கு யாவும் அப்ராகிருதமானவை; கடவுளுடைய குணங்களை மனிதன் அனுபவிக்க முயலலாம்; ஆனால் அவை எல்லை கடந்தன ஆதலின், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை' என்று கூறுகிறார். ஸ்ரீ சங்கரர், நூல்களையும் சொற்களையும் கடந்த பிரும்மத்தை அறியவே, பிரும்மம் அல்லாதனவற்றை விளக்குவதற்காக நூல்கள் எழுந்த வாற்றை விளக்கியுள்ளார். மக்களின் மனதைக் கவரக் கூடிய உருவ வழிபாட்டையும் இரண்டாம் பக்ஷமாக ஓம்பியுள்ளார்.

உணர்வரிது இறைநிலை

பக்தர்களாகிய நாயன்மார்களும் ஆழ்வார்களும், கடவுளுடன் கூடிக் கலந்து நமக்குப் புலனாகும் சொற்களில் கடவுளை வருணித்தபோதும், மடிபிடித்துக் கேட்குங்காலத்தில் இறைநிலை உணர்வு அரிது என்றே கூறிவிட்டனர். இறைவனிடம் திருப்பெருந்துறையில் இருந்த மரத்தடியில் ஞானோபதேசம் பெற்ற மணிவாசகரும் 'ஏது அவன் ஊர், ஏது அவன் பேர், யார் உற்றார், யார் அயலார், ஏது அவனைப் பாடும் பரிசு' என்றே பேசுகிறார். கேனோபநிஷத் 'கடவுளைத் தெரிந்துகொள்ள முடியாது என்ற அறிவே கடவுளை அறியும் அறிவு' என்று கூறிவிட்டது.

வேத விளக்கம்

வேதம் கடவுளைப் பற்றி விளக்க ஒரு தனியான வழியை வகுக்கிறது. 'கடவுளுக்கு உருவம் இல்லைதான்; ஆனால் உருவம் உண்டு; பெயர் இல்லைதான்; ஆனால் பெயர் உண்டு' என்று வேதம் கூறுவது மதங்களிடையே சமரசத்தை உண்டுபண்ணுவதுதால் இறைவனை எந்த வடிவத்தில் வணங்கவும் எந்தப் பெயரிட்டு அழைக்கவும் வழிகிடைக்கிறது.

இரட்டை வழி

கடவுள் மனிதனோடு தொடர்பு கொண்டு அவனுக்கு அருள் செய்து, அவனோடு தொடர்பு கொண்டு அவனைத் தெய்வீக வழியில் முன்னேறச் செய்யவே உருவம் எடுக்கிறார் என்று சிலரும், உருவமில்லாத கடவுளுக்கு மனிதன் தன் தியானத்தால் ஓர் உருவம் கொடுத்து அதனை வழிபடுகிறான் எனச் சிலரும் கூறும் கருத்துக்களுக்கெல்லாம் வேதம் கூறும் 'கடவுளுக்கு உருவம் இல்லைதான்; உருவம் உண்டு' என்ற இரட்டைக் கொள்கை சிந்தனையை விரிவாக்கிக் கொள்ள வழி வகுத்துள்ளது. இவ்விரட்டை வழியே ஆழ்வாராதிகள் அருளிச் செயல்களுக்கு வழிவகுத்தது

பொய்கையாழ்வார்,

'தமருகந்தது எவ்வுருவம் அவ்வுரு வந்தானே
தமருகந்தது எப்பேர் மற்றுஅப்பேர் — தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பதே
அவ்வண்ணம் ஆழியான் ஆம்' எனவும்,

நம்மாழ்வார்,

'அவரவர் தமதமது அறிவழி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்'

'யாதுமோர் நிலைமையன்னெ
அறிவுஅரிய எம்பெருமான்
யாதுமோர் நிலைமையன்னெ
அறிவு எளிய எம்பெருமான்'

'ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற'
எனவும் கூறுவது காண்க

உருவ வழிபாடு
பகுத்தறிவுக்கு முரண்பட்டதன்று

இறைவனுக்கு உருவம், ஊர், பேர் இவையில்லை என்ற கொள்கையை வேதாந்தம் விளக்கவும், உண்டு என்ற கொள்கையை விளக்கும் மதங்களுக்கும் வேதாந்தம் அடிப்படையாக உதவுகிறது. உருவமே இல்லாத கடவுள் உலக உருவிலும், உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும், முப்பத்து முக்கோடி தேவர் உருவிலும், அடியார் வேண்டும் உருவிலும் வரும் செய்தி இதிகாச புராணங்கள் வாயிலாக வெளிப்பட்டுப் பொதுமக்களும் கடவுள் சிந்தனையில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. பகுத்தறிவு அறிவாளிகளுடைய கலையறிவிற்கு ஏற்றவாறு மாறுபடுவதால், பொதுமக்களின் பகுத்தறிவிற்கு ஏற்ற வகையில்; மனித உளப்பாங்கை உட்கொண்டு அவன் குறைகள் தீர்ந்து மன நிம்மதி அடையும் வகையில், மத

நூல்கள் இறைவனுக்கு வடிவம், குணம், செயல்கள் இவற்றைக் கொடுத்துப் பொதுமக்களைத் தெய்வ சிந்தனையில் ஆழ்த்துகின்றன. ஆதலின், மதநூல்கள் வெளியிடும் உருவ வழிபாடு முதலியன பற்றிய செய்திகள் பகுத்தறிவைப் பயன்படுத்திப் பயன் பெறுதற்காகவே அமைந்தனவாகும்.

மனத்தின் மாண்பு

மற்ற உயிரினங்களுக்கு இல்லாத வகையில் இறைவன் மனிதனுக்கு அருளியுள்ள ஓர் அகத்துறுப்பு மனம் என்பது. அஃது இயற்கையில் மிகவும் தூய்மையானது. மனம் என்ற உறுப்பு உடலில் எங்கு இருக்கிறது என்பது உடற்கூறு வல்லவர் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. நல்ல சிந்தனையால் மனம் தூய்மையுறுகிறது. கெட்ட சிந்தனையால் மனம் மாசு படிகிறது. மனிதனுடைய தனி வாழ்விலும் சமுதாய வாழ்விலும் அவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் மனம்தான். மனத்தில் தெய்வபாவம் தலையெடுக்கும்போது, விக்ரஹங்களிடத்தில் கல்லையும் மண்ணையும் நோக்காது மனம் தெய்விக உணர்வைப் பெறுகிறது. மனம் வேறு புத்திவேறு என்று சிலரும், புலன்களை இயங்கச் செய்வதே மனம் என்று சிலரும், அறிவு புலன்களோடு செயற்படும் அளவில் மனம் ஆகிறது, ஆதலின் அறிவும் மனமும் புத்தியும் ஒன்றே என்று சிலரும் கூறுகின்றனர். எனவே, மனம் பற்றித் தெளிவான கருத்து இன்னும் உறுதிப்படவில்லை எனினும், மனம் என்ற ஒன்று இருப்பது மட்டும் மறுக்க முடியாத செய்தியாகும். மனம் அறிவின் பக்கத்தைச் சார்ந்தது என்பதும் முடிந்த முடிவு. ஆதலின், ஞானிகள் சிலர், உலகத்தை அறிவது எனவும் அறியப்படுவது எனவும் இரண்டாகப் பகுக்கிறார்கள். அறிவு என்பது மனித வர்க்கத்தினிடத்து மாத்திரம் முதிர்ந்து காணப்படுகிறது. விலங்குகள் முதலியவற்றின் அறிவு முதிர்ச்சி அடையவில்லை.

இன்பதுன்ப உணர்வுகள்

மனிதன் தன் அறிவைக்கொண்டு உலகப் பொருள்களிடத்துத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு தன் மனத்தினுல் சிந்தித்து நல்லனவற்றையோ தீயனவற்றையோ செய்வதில் ஈடுபடுகிருன்; தனக்கு எது இன்பம் தருமோ அதன்கண் ஈடுபட்டு, எது துன்பம் தருமோ அதனேடு தொடர்பு கொள்வதை விடுக்கிருன். இன்பம் துன்பம் என்பன ஒவ்வொரு மனிதனுடைய மனத்திலும் ஏற்படும் தோற்றமே. ஆதலின், ஒருவனுடைய இன்பம் மற்றவனுக்குத் துன்பமாகவும், ஒருவனுடைய துன்பம் மற்றவனுக்கு இன்பமாகவும் இருக்கலாம். துன்பம் என்பது தனித்த பொருளன்று. எதனுல் இன்பம் கிடைக்கிறதோ அது துன்பம் தரும் பொருள் என்று மனித மனம் கருதுகிறது. ஒரு காலத்தில் இன்பம் தருவதாகத் தான் கருதிய பொருளேயே மற்ருெரு காலத்தில் துன்பத்தின் நிலைக்களனுக அவன் கருதுகிருன்.

'இன்னு தம்மஇவ் வுலகம்
இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே'

— *புறநானூறு.*

என்றபடி, இன்பமும் துன்பமும் கலந்த உலக வாழ்க்கை மனிதனுக்குத் தனித்த இன்பத்தை நல்காது. ஆதலின்,

'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்ருேர் உறுவது'

— *மணிமேகலை 2 : 64-67.*

என்பது முடிந்த முடிவாதலின், வேதாந்த சாஸ்திரம் உலகத்தோடு ஒட்டிவாழும் வரையில் வாழ்க்கைச் சிக்கல்களுக்கும் பரிகாரமே இல்லையென முடிவு செய்து உலகப் பற்றுக்களை விடுக்குமாறு குறிப்பிடுகிறது.

பிரும்மானந்தப் பேறு

உலகப் பற்றறுத்தலின் சிந்தனை அளவில் ஏற்படும் நிம்மதி 'பிரும்மானந்தம்' என்று வேதாந்தத்தில் கூறப்படுகிறது. இந்தப் பிரும்மானந்தம் ஆகிய தெய்விக உணர்ச்சியை உலகப்பொருள்களோடு தொடர்புகொண்டவாறு அடையவேண்டும் என்று ஆசைப்படுவது பொது மக்களுக்கு இயல்பே. உலகப் பற்றறுத்துப் பிரும்மானந்தத்தில் திளைக்கும் ஞானிகள் பதினாயிரவரில் ஒருவர் இருக்கலாம். ஆனால் அந்நிலை பொதுமக்களுக்கு ஏலாது ஆதலின், உலகச் சூழ்நிலையில் இருந்துகொண்டே இறை உணர்ச்சியில் திளைத்துப் பிரும்மானந்தத்தை அடைய விக்கிரஹங்களிடையே தெய்விக வடிவைக் கண்டு, அவற்றைப் பூவிட்டு வழிபட்டு, அதனைப் பலவாறு தோத்தரித்துதான் எண்ணிய எண்ணங்கள் ஈடேறப்பெற்று மனத்தில் ஆனந்தம் அடைகிறான் மனிதன்.

தியான நிலையில் இறை வழிபாடு

தியான நிலையில் இறைவனை வழிபடுவோர்களுக்கும் தியானம் உறுதிப்பட உருவ வழிபாடுதான் உதவுகிறது. ஆழ்வார்கள் விக்கிரகங்களைக் கண்ணால் கண்டு, மனத்தால் தியானித்து, தியான நிலையில் இறைவன் தோன்றுவதையே கூட்டமாகக் கொண்டு மகிழ்ந்தும், தியான நிலையில் இறைவன் தோன்றாததையே துன்பமாகக் கொண்டு வருந்தியும் உளம் உருகிப் பாசுரங்கள் வரைந்துள்ளனர். வெளியிலுள்ள விக்கிரகங்கள் அளவிலேயே அவர்கள் சிந்தனை சென்றிருப்பின், விக்கிரக வடிவில் எப்பொழுதும் இறைவனைக் காணும் வாய்ப்பு இருப்பதால், தாங்கள் பிரிதல்துன்பத்தை அநுபவிக்கவேண்டியதான தேவை இல்லாது போயிருக்கும்.

உருவ வழிபாட்டில் தெய்வபாவனை ஊன்றுதல்

பொதுமக்கள் விக்கிரகங்களை கல் என்றோ மண் என்றோ கருதாமல், அவற்றினிடத்துத் தெய்வ

சிந்தனையை ஆழமாகப் பதித்து, அவற்றை வழிபாடு செய்து பயனடைகின்றனர். நாம் நம் குழந்தைகளை எலும்பு, தசை, தோல், இரத்தம் இவற்றாலாகிய உயிர்ப் பொருள் என்று எண்ணுது, நம் உயிர்போலக் கருதி அவற்றினிடத்து அன்பைச் செலுத்திஇன்புறும் செயலே, சற்றுமேம்பட்ட நிலையில் நம்மால் தெய்வத்தினிடம் கொள் ளப்படுகிறது. விக்கிரகங்களிடத்தில் தெய்வ பாவனை வேரூன்றிவிட்டதால் பல்லாயிரக் கணக்கான கோயில்கள் நிலைத்து நிற்கின்றன. புதியனவாகவும் எடுப்பிக்கப்படு கின்றன. திருப்பதி வேங்கடாசலபதி கோயிலுக்குச் சென்று பார்த்தால் ஆலய வழிபாடும் விக்கிரக வழிபாடும் எப்படி மனிதன் உள்ளத்தில் தெய்வ சாந்நித்தியத்தை உருவாக்கியுள்ளன என்பதைக் கண்கூடாகக் காணலாம். உலக நடையில் பல திறங்களில் உழலும் மனித உள்ளங் களுக்குச் சிறிது நேரமாவது தெய்வ சிந்தனை கிடைப்ப தற்கு இன்று ஆலய வழிபாடு, விக்கிரக வழிபாடு தவிர எளிய மார்க்கம் வேறென்றும் இல்லை. மனித இனத்தில் குறைபாடு இல்லாதவரே இல்லை. மனிதன் தன் மனத் தில் உள்ள குறைகளை முழுமையாக வாய்விட்டு வேறொரு மனிதனிடம் கூற இயலாது. அவன் தன் குறைகள் முழு வதையும் விக்கிரக வடிவில் காட்சி வழங்கும் இறைவ னிடமே கூறி ஆறுதல் பெறுகிறுன்; கதாகாலட்சேபங் களைக் கேட்கும் நேரத்தில் தன்னை மறந்து தெய்வத்தின் குணங்களிலும் செயல்களிலும் ஈடுபட்டு, அடியார்க்கு அருளும் இறைவன் வைகுந்தவாஸனுதன் நிலையைவிட்டு உலகில் நமக்கெல்லாம் அருள்செய்யக் கொண்டுள்ள அர்ச்சாவதாரமான விக்கிரக நிலையில் இருந்து தன்னை வழிபட்டார் தமக்கு தவருது அருள்பாலிப்பான் என்ற உறுதிபெற்று, விக்கிரக வழிபாட்டில் ஈடுபடுகிருன். மற்ற யுகங்களில் கடுமையான தவமும் தியானமும் வழங்கும் பயனைக் கலியுகத்தில் கதாகாலட்சேபங்கள் வழங்கு கின்றன என்ற கருத்தும், இறைவன் அர்ச்சாவதாரமாய் அருள் செய்யவே ஆகமங்களை அருளிச் செய்துள்ளான் என்ற கூற்றும் இறைவன் எளிவந்து அருளும் திறத்தை வெளிப்படுத்துகின்றன.

அழகுணர்ச்சியிடைத் தெய்வவுணர்ச்சி

அழகான பொருள்களைக்கண்டால் தன் மற்ற செயல்களை மறந்து அப்பொருள்களின் அழகில் ஈடுபட்டு ஆனந்தப்படுவது மனித இயற்கை. மனிதனுடைய அழகுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே ஆகமங்கள் அழகான விக்கிரகங்களை அமைத்து, அவற்றிற்கு அழகாக அலங்காரம் செய்து, அழகுக்கு அழகு செய்வாரைப் போல ஆடம்பரமாகத் திருவிழாக் கொண்டாடி, மனிதன் அழகு உணர்ச்சியால் தெய்வ உணர்ச்சியை உறுதிப் படுத்திக்கொள்ள வழி வகுக்கின்றன. கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனுடைய அழகான உருவம், அழகான பேச்சு, அழகான விளையாட்டு என்பன அனைவரையும் அவனிடத்துக் கவர்ந்த செயலைச் சுகப்பிரும்மம் வருணித்துப் பூரித்துப் போகிறார்.

தெய்வ அழகு உலகியல் அழகின் வேறுபடுதல்

ஐம்பொறிகளுக்கும் உணர்ச்சி தரும் அழகுபோலன்றித் தெய்வத்தின் அழகு ஆறுவதாகிய மனத்திற்கும் நல்லுணர்ச்சி வழங்குகிறது. அழியும் உலகப் பொருள்களின் அழகுபோலாது என்றும் அழியாது கணந்தோறும் புதுப்புது அழகுணர்ச்சி தரும் தெய்வத்தினுடைய அப்ராக்ருத சௌந்தர்யத்தில் ஈடுபட்ட ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவ்வழகு தம்மை ஈர்த்து ஆட்கொண்ட திறத்தைப் பல பாசுரங்களால் பாடிப் பரவுகிறார்கள். பொதுமக்கள் அத்தகைய அப்ராக்ருத சௌந்தர்யத்தை இறைவனுடைய விக்கிரகங்களில் கண்டு அவ்வழகினால் ஈர்த்து ஆட்கொள்ளப்படுகின்றனர். முகம்மதிய மதத்தைச் சேர்ந்த ஸூஃபீக்கள் தங்களுடைய பக்திமார்க்கத்தில் அழகுக்கே முதலிடம் கொடுத்துள்ளனர்.

ஆலயத்தின் அழகுத் தோற்றம்

ஆலயத்தின் கோபுரம் முதல் கர்ப்பக்கிருகம் ஈறான ஒவ்வொரு பகுதியும், இடையிடையே வாகனங்கள்

முதலியனவும் தத்தம் அழகால் மனிதனின் சிந்தனையை ஈர்த்துக் கருவறையினுள் இருக்கும் அப்ராக்ருத ஸௌந்தர்ய ஸ்வரூபனாகிய இறைவனிடம் அழைத்துச் செல்கின்றன. ஆகமங்கள் கோயிலின் ஒவ்வோருஉறுப்பும் அழகாகச் செய்யப்படவேண்டிய விதிகளை விரிவாக எடுத்து இயம்புகின்றன. ஜபமந்திரம், ஹோமம் என்பன எவ்வளவு இன்றியமையாதனவோ, அவ்வளவு இறைவனுடைய அலங்காரம் இன்றியமையாதது. பல்லவர் காலத்துக் குகைக் கோயில்கள் முதல் விஜயநகர நாயக்க மராட்டியர் காலத்துக் கற்கோயில்கள் வரை உள்ள எல்லா ஆலயங்களும் சிற்பக் கருவூலங்களாய் அழகின் அடிப்படையிலேயே மக்களை ஆண்டவனிடம் ஆற்றுப் படுக்கின்றன. திருவிழாக் காலங்களில் உற்சவ மூர்த்தங்கள் அலங்காரம் செய்யப்பட்டு இன்னிசையுடன் வீதி உலா வருதல்மூலம் மக்கள் மனத்தைக் கவரும்செய்தியும் ஆகமங்களில் வலியுறுத்தப்படுகிறது.

ஆலயம் அக உலகத்தை ஆட்கொள்ளும் பணி

வானளாவிய கோபுரத்தைச் சேய்மையில் காணும் போதே உள்ளத்தில் தெய்வ சிந்தனை மேலோங்குகிறது. கோபுரங்கள் தம் வானளாவிய தோற்றத்தால் தம்மைக் காணும் மனிதன் உள்ளத்தில் தீய சிந்தனையைப் போக்கித் தெய்வ சிந்தனையைப் புகுத்துவதால், இவை சமுதாயத் துறையில் காவல்துறை செய்யும் பணியைச் செய்வதனையேக் காண்கிறோம். திருடன் ஒருவன் திருடப் போகும்போது காவல் துறையினரைக் காண நேரின், அவ்வெண்ணத்தை விடுத்து வீடு திரும்பும் நிலை புற உலகில் காண்கிறோம். அக உலகில் காவல் துறையினர் எதனையும் செய்தல் இயலாது. புற உலகிலும் கொடியதான அக உலகில் ஐம்பொறிகளையும் மனத்தையும் தீய வழியில் செல்லாமல் தடுத்து ஆட்கொள்ளும் பணியை ஆலயங்களிலுள்ள தெய்வ விக்கிரகங்கள் செய்து வருகின்றன. தமிழ்நாட்டில் ஊர்தோறும் சிறிதும் பெரிதுமாக

அமைந்த பல கோயில்கள் அவற்றைக் கடந்து செல்லும் நேரத்தில் உள்ளத்திலுள்ள களங்கத்தை மாற்றித் தூய் மையை அளித்து மக்கள் உள்ளத்தை உயர்த்துகின்றன.

விக்கிரகம் பற்றி ஆகமம் கூறுவது

இறைவனைப்பற்றிப் பெரியோர் வாயிலாகவும் கதைகள் வாயிலாகவும் கேட்டுத் தனக்கு உண்டாகின்ற அன்பைப் பூர்த்தி செய்துகொள்ள மனிதனுக்கு விக்கிரக வழிபாடு அமைந்துள்ள சிறப்பை ஆகமம் குறிப்பிடுகிறது; மனிதன் இருக்கும் இடத்திற்கு வந்து அவனுக்கு எளிமையில் உதவவே இறைவன் விக்கிரக உருவம் கொண்டுள்ளான் என்பதையும் தெரிவிக்கிறது. விக்கிரக உருவில் உள்ள அர்ச்சாவதாரம் இருட்டறையில் ஏற்றி வைக்கப் பட்ட விளக்கு என ஆசாரியர்கள் குறிப்பிடுகிறார்கள். பிம்ப வழிபாட்டைப் பற்றி பெரியோர்கள் 'மதம் பிடித்த யானையிடம் எச்சரிக்கையாகப் பழகுவதுபோலப் பழகி, இளவரசனைப்போல மரியாதை காட்டி, வீட்டிற்கு வரும் விருந்தாளியைப்போல உபசரித்துப் பழகுக' என்று குறிப்பிடுகிறார்கள்.

கிறித்தவ மதம் கடவுளைத் தந்தையாகவும் உலகத்தில் உள்ளவர்களை உடன் பிறந்தவராகவும் குறிப்பிட்டது. கடவுளைத் தந்தை என்ற கொள்கையைத் தாய் இல்லாமல் தந்தை எப்படித் தனித்து உலகைப் படைத்தல்கூடும் என்று குறை கூறுகிறார்கள். வேதம் எல்லாவித உறவி னரும் கடவுளே என்று கூறுகிறது. நாவுக்கரசர் 'அப்பன் நீ அம்மை நீ' எனவும், நம்மாழ்வார் 'தஞ்சமாகிய தந்தையொடு தானுமாய்' எனவும் விளக்குகின்றனர். உற்றார் உறவினரிடம் அன்பு செலுத்திப் பழகிய மனிதனுக்கு எவ்வித உறவுமுறையிலும் இருக்கும் கடவுளிடம் அன்பு செலுத்துவது எளிது. சிறந்த விருந்தினரைத் தக்க வழியில் மரியாதையோடு உபசரிக்கும் முறைகளையெல்லாம் நாம் இறைவனிடம் பக்தியோடு பின் பற்றுகிறோம்.

பூசனை முதலியன

தொடக்கத்தில் பூக்களை மட்டும் இட்டுச் செய்யப் பட்டு வந்த பூசனை பிற்காலத்தில் பெரிதும் விரிவடைந்து விட்டது. தெய்வத்தைத் தன்மயமாக்குவதற்குச் செய்யும் செயல் என்று பொருள்படும். ஆராதனம் என்ற சொல் லும் பூசைக்கு வழங்கப்படுகிறது. உற்சவம் என்ற சொல் மனிதனிடத்திலுள்ள ஆனந்தத்தை வெளியிடச் செய் வது என்ற பொருளுடையது. மனிதனுக்கான விழாக் களையும் உற்சவம் என்ற பெயரால் அழைப்பதும் உண்டு. உறவினருக்கு உணவிடுவதுபோல இறைவனுக்கு நைவேத்தியம் செய்கிருன். அச்சொல் உணவைக் குறிப்பிடும் குறிப்புச்சொல்லாகவே கொள்ளப்படுகிறது. உற்சவங்களை அதிக ஆடம்பரத்தோடு கொண்டாடு வதால் மனிதனுடைய கவனம் முழுதும் தெய்வத்தினிடம் ஈர்க்கப்படுகிறது. இறைவனுடைய பிரசாதமாகப் பெறும் துளசி, விபூதி, தீர்த்தம், சடாரி சாத்துதல் முதலிய மனித னுக்கு மன நிம்மதியை அளிக்கின்றன.

விக்கிரக வழிபாட்டின் சிறப்பு

பக்தி தத்துவத்தில் சிரவணம், கீர்த்தனம், ஸ்மர ணம் என்பன விக்கிரகங்கள் இல்லாமல்கூட நிகழ்த்தப் படலாம். ஆனுல் அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், பாத சேவனம் என்பனவற்றிற்கு விக்கிரக வழிபாடு இன்றி யமையாதது. ஆதலின், பக்தி தத்துவமும் தென்னுட்டில் ஆலய வழிபாட்டால் சிறப்புற்றுள்ளமை தெளிவாகும்.

ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களில் அர்ச்சாவதார மாகக் கடவுள் இருக்கும் திறத்தைப் பிள்ளை லோகாசாரி யார் 'அர்த்த பஞ்சகம்' என்ற இரகசிய நூலில் "தனக் கென ஓர் உருவமும் ஒரு பெயரும் அன்றிக்கே அடியவர் உகந்த வடிவே வடிவாகவும், அவர் இட்ட பெயரே பெய ராகவும், எல்லாம் அறிந்தவனுக இருக்கச் செய்தே ஆற்றல் ஒன்றும் அறியாதவனைப் போலவும், பேராற்றலை

உடையவனுய் இருக்கச் செய்தே ஆற்றல் அற்றவனைப் போலவும், எல்லாப் பொருள்களுக்கும் பிறர் ஒருவரை வேண்டாதவாறு தன்னிடம் நிறம்பியிருக்கச் செய்தே ஒன்றனை விரும்புபவனைப்போலவும், யாவரையும் காப்பவனுய் இருக்கச் செய்தே பிறரால் காக்கப்படுபவனைப் போலவும், தானே தனிப்பெரும் தலைவனும் தன்மையையும் கண்ணுக்குப் புலனுகும்படி மிகவும் எளியனுய்க் கோயில்களிலும் இல்லங்களிலும் எல்லாக் காலத்தும் எல்லா இடங்களிலும் இருக்கும் நிலை' என்று குறிப்பிட்ட செய்தி விக்கிரக வழிபாட்டின் சிறப்பை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுவதாகும்.

ஆலயமே பிரசார மேடை

மற்ற மதங்களைப்போலப் பிரசார மேடைகளைத் தேடாமல் இந்துமதம் கோயில்களையே பிரசார பீடமாகக் கொண்டு இறை உணர்வைப் பொதுமக்களிடையே பரப்புகிறது. உற்சவங்களும் சிறப்புப் பூசைகளும் தெய்வ உணர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள பிரசாரமே. பழங்காலத்தில் பொதுமக்கள் நன்மைக்காகச் செய்யப்பட்ட யாகங்களின் இடத்தை இப்பொழுது ஆலயவழிபாடு கைக்கொண்டுள்ளது. தனிப்பட்ட ஒருவன் ஆலயத்தை எடுப்பித்தாலும், அதனைப் பொதுவுடைமையாக்கி மக்கள் யாவரும் அதனுல் பயனடையச் செய்வதே ஆலய நிர்மாணத்தின் கோட்பாடாகும். ஆலயங்களில் நடக்கும் பூசனையும் விழாக்களும் அவற்றைக் கட்டினவன் நன்மைக்காக அன்றி உலக நன்மைக்காகவே நிகழ்கின்றன. தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மனிதனும் தனித்தனி விக்கிரகங்களை வைத்துக்கொண்டு வழிபாடு ஆற்றுவது இயலாத செயல் என்பதற்காகவே விக்கிரக வழிபாட்டின் பொதுவிடமாக ஆலயம் அமைந்துள்ளது. அரசியல் கட்சிகளின்கீழ் மக்கள் ஒன்றுபட்டுப் பின் மனக்கசப்பினுல் பிரிந்துபோகும் நிலை தெய்வ சிந்தனையினுல் மக்கள் ஒன்றுபட்டு வழிபாடாற்றும் ஆலய வழிபாட்டில் நிகழ்வதில்லை.

அர்ச்சாவதாரமே இறைவனது மந்திர வடிவம்

அர்ச்சாவதாரத்தில் நாம் விரும்பினுல் இறைவன் தாஞகவே வந்து விக்கிரகத்தில் இறங்கிவிடுகிருன் என்று சாத்திரம் பொதுவாகக்கூறுகிறது. இறைவனின் சக்தியை ஆவாகனம் மூலம் தான் வரவழைக்க முடியும் என்று ஆகமம் கூறுகிறது. ஸ்ரீவைகுந்தத்திலுள்ள பெருமாளைச் சம்புரோக்ஷண காலத்தில் பூஜகர் தம்முடைய இதயத்தில் ஆவாகனம் பண்ணி, அங்கிருந்து கும்பத்திற்கும் கும்பத்திலிருந்து விக்கிரகத்துக்கும் ஆவாகனம் செய்யப்படுகிறது. உற்சவ காலங்களில் தெய்வ சக்தி மூலமூர்த்தியிலிருந்து உற்சவ மூர்த்திக்கு ஆவாகனம் செய்யப்பட்டு, உற்சவம் முடிந்ததும் மீண்டும் மூலமூர்த்திக்கே திருப்பிச் செலுத்தப் படுகிறது. அவ்விதமே சம்புரோக்ஷண காலத்தில் அக்நியிலும் பகவானை ஆவாகனம் செய்து பூசை செய்கிருர்கள். மூலமூர்த்திக்குச் செய்யும் பூசனை வழியே அக்நியில் பூசனை செய்யும்போதும் பின்பற்றப்படுகிறது. கும்பத்தில் பகவானுடைய சக்தி நேராக இறங்காமல் கூர்ச்சம் வாயிலாகவே இறங்குகிறது. புதிதாகக் கட்டப்படும் கோயிலில் தெய்வசாந்நித்யத்தை வரவழைக்க வேத மதக் கொள்கைகள் சில கலந்த இந்த ஆகமக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. இங்கு அவதாரங்களாகிய இராமாவதாரம், கிருஷ்ணுவதாரம் போன்றவை பகவானுடைய மந்திரவடிவம் ஆகிறது.

ஆண்டுப் பெருவிழா

ஆலயங்களில் ஆண்டுப் பெருவிழா ஒவ்வோராலயத்திற்கும் ஏதாவது ஒரு மாதத்தில் நிகழ்த்தப்படுகிறது. கொடியேற்றத்தோடு தொடங்கும் திருவிழா பெரும்பாலும் திருத்தேரோட்டத்தோடு நிறைவுறுகிறது. இவ்விழா 10 நாட்களுக்குக் குறையாமல் நடைபெறுகிறது. அந்த அந்த ஊர்த் தலபுராணத்தைப் பின்பற்றியும் ஐதீகங்களைப் பின்பற்றியும் வாகனங்களிடையே சில வேறுபாடு

கள் காணப்படுகின்றன. இவற்றிற்கு உரிய விளக்கங்கள் ஆகம நூல்களில் இல்லை. இரு வேளைகளிலும் வாகனங் களிலும் பல்லக்குகளிலும் பெருமாள் திருவீதியுலா வருகிறார். கொடியேற்றத்திற்குப் பிறகு கொடியைக் கடைசிநாள் விழாவன்று இறக்கும் வரை ஊர்மக்கள் வெளியூருக்குப் போகக்கூடாது என்ற முறை எல்லோரும் தவறாது திருவிழாவில் கலந்துகொள்ளுதல் வேண்டும் என்பதற்காக ஏற்பட்டதேயாம். விழாக் காலங்களில் இறைவனுக்கு நிவேதனம் செய்வதுபோலவே, அவ னுடைய பரிவார தேவதைகளுக்கும், துர்தேவதைகளுக் கும் அன்னம் கொடுக்கப்படும். இங்ஙனம் கொடுக்கப் படும் அன்னம் நிவேதனம் என்ற பெயரால் வழங்காமல் 'பலி' என்ற பெயராலேயே அழைக்கப்படும்.

திருவிழா முடிவுநாள்

திருவிழா முடிவுநாள் அன்று, யாகத்தின் முடிவில் செய்யப்படுவதுபோன்ற 'அவபிருத ஸ்நானம்' என்ற தீர்த்தவாரி நிகழும். விழாத் தொடக்க நாளன்று பூசகர் காப்புக் கட்டிக்கொண்டு இறைவனுக்கும் காப்புக் கட்டு கிறார். திருவிழாக் காலங்களில் பூசகர் கடுமையான நெறியோடு இருக்கிறார். அத்திருவிழா நாட்களில் எந்தத் தீட்டு வந்தாலும் பூசகரை அசுத்தப்படுத்தாது. விழா முடிவு நாளன்று இறைவனைத் திருமஞ்சனம் ஆட்டுகிறார் கள். இந்த நீராட்டு ஆறுகளிலேயே நிகழும். இறைவன் திருமஞ்சனமாடும் அந்நேரத்தில் அவ்வாற்று நீருக்குத் தனிப் புனிதத் தன்மை ஏற்படும். ஆதலின், பொதுமக்கள் யாவரும் நீராட்டுவிழாவில் கலந்துகொண்டு அந்நேரத்தில் அவ்வாற்றில் நீராடி இறைவன் அருளைப் பெறுகின்றனர். இச்செய்தி பழந்தமிழ் நூலாகிய சிலப் பதிகாரத்திலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

திருவிழாக்களில் மக்கள்

திருவிழாக்களில் ஊர்மக்கள் தம் உற்றார் உறவின ருடன் தவறாது நாள்தோறும் கலந்துகொள்ளவேண்டும்.

ஆயிரம் பிரசங்கம் தரும் தெய்விக உணர்வை ஒரு திருவிழா எளிதில் பெறச் செய்யும். விழாவில் கலந்து கொள்ளும் மக்களும் நல்ல ஆடை அணிகலன்களோடு வருதல் வேண்டும் என்று ஆகமம் கூறுகிறது. ஆலயத்திற்குத் தெய்வ வழிபாட்டிற்குச் செல்லும்போது யாவர்க்கும் மேலாம் அலகிலாச் சீருடையணிந்து யாவர்க்கும் கீழாம் அடியேன் செல்கிறேன் என்ற எண்ணம் வேண்டும். திருவிழாக்களில் கலந்து கொள்ளும்போது நான் இறைவனுடைய பரிவாரங்களில் ஒருவன் என்ற தலையெடுப்புடன் இருத்தல்வேண்டும். திருத்தேர் விழாவை வடநாட்டார் 'யாத்திரை விழா' என்று அழைக்கின்றனர். அன்று இறைவன் தேரில் ஏறி யாத்திரை போவதாக ஐதீகம். தேர் வடம் பிடிக்கும்போது சாதி வேறுபாடுகள் மறைய யாவரும் இறைவனுடைய அடியவர்கள் என்ற தெய்வ சிந்தனையே தலையெடுப்பதைக் காணலாம்.

மூவகைப் பூசனைகள்

ஆலயப் பூசனைகள் நித்தியம், நைமித்திகம், காமியம் என்ற மூன்று கூறுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

பிர்மோத்ஸவம் என்று சொல்லப்படும் ஆட்டைப் பெருவிழா தொடக்கத்தில் பிரமனால் தோற்றுவிக்கப் பட்டது என்பது மரபு. நித்ய வழிபாடு முதல் ஆட்டைப் பெருவிழா ஈருக, இடையே உள்ள வசந்தோற்சவம் முதலிய உற்சவங்கள் யாவும் நித்தியம் என்ற தலைப்பில் அடங்கும். அர்த்தோதயம், மஹோதயம் முதலிய அருமையான புண்ணிய தினங்களில் நிகழும் விழா நைமித்திகம் ஆகும். காமியம் ஒன்றே தனிப்பட்ட மனிதன் நலம் கருதிச் செய்யப்படும் வழிபாடாகும். ஏனைய யாவும் உலக நலன்குறித்து அமைவனவே. நித்திய பூசை எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படக்கூடாது. நித்திய பூசை நேரம் அல்லாத நேரத்திலேயே காமியம் செய்யப்படும். நித்திய பூசையும் பூரணமான தெய்வத் தன்மையை அடையவேண்டுமானால், ஆகமங்கள் கூறுவது போல ஹோமத்தில் தொடங்கி விரிவாகச் செய்யப்பட வேண்டியதாகும்.

அர்ச்சனை

ஆலயங்களில் செய்யப்படும் அர்ச்சனை வழிபாட்டின் ஒரு கூறுபாடு என்றே ஆகமம் கூறுகிறது. திருப்பதி முதலிய தலங்களில், தனிப்பட்ட மனிதன் விரும்பினாலும் பூசை நேரங்கள் தவிர ஏனைய நேரங்களில் அர்ச்சனை செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. அவரவர் தத்தம் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமைந்த வழிபாடே பொதுவாக அர்ச்சனை எனப்படும். அர்ச்சனை என்ற சொற்பொருள் வழிபாடு என்பதே. இறைவனுடைய திருப்பெயரைச் சொல்லித் துளசியையோ பூவையோ இறைவன் திருவடிகளில் சேர்ப்பது எளிய முறைப் பூசையாகும். இதற்கு ஆகமங்கள் தேவையில்லை. இந்த எளியமுறைப் பூசையைப் பலரும் தத்தம் இல்லங்களில் முன்னும் செய்து வந்தனர்; இன்றும் செய்கின்றனர். தனிப்பட்ட மனிதனின் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பளிப்பதே அர்ச்சனை. ஆராதனத்தின் அங்கமாக வருவது மந்திர புட்பம், அர்ச்சனை என்பது பொதுமக்களுக்காக கையாளப்படும் தனி வழி.

அரசர்தம் நன்றிக் கடன்

இறைவனை உலகின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கும் அரசனாகக் கருதி அவனுக்கு ராஜோபசாரம் செய்து, அவனுக்கு விருப்பமில்லாத செயல்களைச் செய்வதற்கு மனிதன் அஞ்சி ஒதுங்குகிறான். இறைவன் அரசனுக்கும் அரசனாக இருப்பதனால், போரில் வெற்றி பெற்ற முற்கால மன்னர்கள் தங்கள் நன்றிக் கடனைச் செலுத்த இறைவனுக்குக் காணிக்கைகள் பல செலுத்தி விழா எடுத்தனர். தமிழக மன்னர்கள் தங்கள் வெற்றிகளுக்கு அடையாளமாக வெற்றித் தூண்கள் நடவில்லை; ஆலயத் திருப்பணிகள் செய்து கோபுரங்களை எடுப்பித்தனர்.

மக்களே கோயிற் பாதுகாவலர்

பிற்காலத்தில் 'கோயில்' என்ற சொல் அரசனுடைய அரண்மனையைக் குறிக்கவே தோன்றிற்று. அரசன், தன் இருப்பிடத்தை விட அரசர்க்கெல்லாம் அரசனுக இருக்கும் இறைவனுடைய ஆலயமே மக்கள் நலனுக்கு உகந்தது என்ற கருத்தால், இறைவனுடைய இருப்பிடத்தைக் கட்டி அதனையே கோயில் என்ற பெயரில் வழங்கச் செய்தான். பண்டைத் தமிழ் மன்னர்களின் அரண்மனைகள் இருந்த சுவடுகூடத் தென்படவில்லை. ஆனால் அவர்கள் எடுப்பித்த நூற்றுக்கணக்கான கோயில்கள் இன்னும் பொதுமக்களுக்கு இறை உணர்வை அளித்துப் பாதுகாக்கும் கருவூலங்களாகக் காட்சியளிக்கின்றன. அரசர்கள் ஆலயப் பாதுகாவலைப் பொதுமக்களிடம் வழங்கியதும், மக்களின் ஆலயப் பாதுகாப்புப் பற்றிய பொருப்புணர்ச்சியை மிகுவித்தது.

உடல்நலம் பேணுவதும் கோயில்

பூசைக்குப் பயன்படும் வில்வம் துளசி என்பன மருந்துச் சக்தி உடையன. அடியார்களுக்கு வழங்கப்படும் தீர்த்தம் குங்குமப்பூ, கிராம்பு, ஏலம் முதலிய மருந்துப் பொருள்களின் கலப்புடையது. பூசைக் காலங்களில் எந்த எந்தப் பாத்திரங்களை எவ்வெவற்றிற்குப் பயன்பகுத்தவேண்டும் என்று ஆகமம் கூறுகிறது. எனவே, ஆலயம் மனிதனுடைய உள்ளத் தூய்மையோடு உடல் நலத்தையும் பாதுகாக்கப் பயன்படுவதும் உணரலாம்.

விக்கிரகக் காட்சி

ஆலய விக்கிரகங்களை அடிப்படையாகக் கொண்டு ஆழ்வாராதிகள் இராமாவதாரம், கிருஷ்ணுவதாரம் ஆகியவற்ற்றை அனுபவித்தது போலவே, விக்கிரகங்களின் துணையால் சாதாரண மனிதனும் அவதாரச் சிறப்புக்களை மனக்கண்ணுல் கண்டு மகிழும் வாய்ப்பையும் ஆலயங்கள் வழங்குகின்றன.

தலபுராணம்

கோயில்களுக்குத் தலபுராணங்கள் விஜயநகர மன்னர்கள் காலத்திலேயே தோன்றின என்று இக்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆனால் சில தலங்களுக்குப் புராணங்கள் பழங்காலத்திலேயே தோன்றி விட்டன. அவைபற்றியச் சுவடுகளை நாயன்மார்களின் பாடல்களிலும் காணலாம். தலபுராணங்கள் வெறும் கதைகள் என்று கூறி ஒதுக்குதல் கூடாது. எந்தத் தத்துவத்தையும் கதைவாயிலாகக் கூறினால்தான் அது உள்ளத்தில் நன்கு பதியும். கதைகள் குழந்தைகளுக்கே பொருத்தமானவை என்பாரும் உளர். நமக்கு வயது மிகுந்தபோதும், இறைவன் பற்றிய தத்துவத்தில் நாம் இன்றும் குழந்தைகளின் அறிவிலேயே இருப்பதால், நமக்கும் தத்துவ விளக்கக் கதைகள் தேவையேயாம். பொய்க்கதைகளாகிய நாவல், சிறுகதை ஆகியவற்றைச் சுவைத்து படிக்கும் நமக்கு, கருத்துக்களைக் கதைகள் வாயிலாக விளக்குவது மிகப் பொருத்தமே என்ற செய்தியை 'ஆலிவர் லாட்ஜ்' என்ற விஞ்ஞானி பெரிதும் ஆதரித்துப் பேசுகிறார். பழைய கல்வெட்டுகளில் இறைவனின் கோவில்கள் க்ருகம், விண்ணகரம் என்றே குறிப்பிடப்படுகின்றன.

ஆழ்வார்களால் தலபுராணக் கதைகள் புறக்கணிக்கப்பட்டமை

இதிகாச புராணங்களின் கருத்துக்களைப் பலபடியாகப் பாடும் ஆழ்வாராதிகள் தலபுராணக் கதைகளை விட்டுவிட்டதன் அடிப்படை ஆராய்ச்சிக்குரியது. திருவரங்கநாதன் இக்ஷ்வாகு வம்சத்து மன்னர்களால் பூசிக்கப்பட்ட செய்தி ஆழ்வார்களால் சுட்டப்படுகிறது. தலபுராணங்கள்வளர்ந்தபிறகு தோன்றிய வேதாந்ததேசிகன் திருவரங்கக்கோயிலை 'அம்புயத்தோன் அயோத்தி மன்னருக்கு அளித்த கோயில்' என்று குறிப்பிடுகிறார். (மீமாம்சகர்களும் கதையை முழுதும் கொள்ளாது கதையில் உள்ள கருத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றனர்.) தொண்டரடிப்பொடித் தவிர மற்ற

ஆழ்வார்கள் இக்கதைக்கு முக்யத்வம் ஏன் கொடுக்கவில்லை என்று புரியவில்லை.

பல கோயில்கள் எதற்கு ?

ஒரு கோயில் போதாதா? பல கோயில்கள் எதற்கு என்ற வாதமும் உண்டு. மனிதனுடைய மனப்போக்குப் பலபடியாக இருப்பதால், பல கோயில்களில் இறைவன் பல வடிவங்களில் இருந்து அவனவன் விரும்பும் வடிவில் ஆட்கொள்கிறுன் என்பதைக் காட்டவே பல கோயில்கள் தோன்றியுள்ளன ; பெருகியுள்ள மக்கள் கூட்டம் நெடுந்தொலைவு செல்ல வேண்டாமல் அண்மையிலேயே அனுபவிக்கும் வகையில் அந்த அந்தத் தலங்களில் இருந்து அருள் பாலிக்கின்றன. பொருளாதாரம் ஒரே இடத்தில் தேங்கி இருந்தால் ஏற்படும் ஆபத்து ஒரே இடத்திலேயே கோயில் இருக்குங்காலும் நிகழக்கூடியது. எங்கும் பரந்த இறைவன் பல இடங்களில் கோயில் கொண்டு தன்னை நாடிவரும் அடியவர் எந்த ஊரினராயினும், எந்த நாட்டினராயினும், எந்த மொழியினராயினும் தவருது அருள்சுரக்கின்ருன். அவன் ஆன்மாக்களைத் தன்பக்கம் கவர்ந்துகொண்டு அநுக்ரகம் செய்கிருன் என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

வைணவம் பற்றிய வரலாற்றுச் சான்றுகள்

தமிழகத்துக் கோயில் வளர்

ஒரு காலத்தில் சிறப்பாகத் திகழ்ந்து பின் சுவடு அற்றுப்போன எகிப்து முதலிய நாடுகளின் விக்கிரக ஆலய வழிபாடுபோலன்றிப் பாரதநாட்டு விக்கிரக ஆலய வழிபாடு நாள்தோறும் வளர்ந்துகொண்டே வந்திருக் கிறது. அந்நியர் ஆக்கிரமிப்பால் பாரதநாட்டின் வட பகுதியில் ஆலயங்கள் பற்றிய சிரத்தை மக்களுக்குக் குறைந்துபோயிற்று. ஷேர்னிங்க் என்ற வரலாற்று ஆசிரியர் காசிநகர் பற்றி 'இந்துக்களின் புனித க்ஷேத் திரம்' என்ற பெயரில் எழுதிய நூலில் காசிநகரில் மாத் திரம் 1454 கோயில்கள் இருந்தன என்று தெரிய வருவதாகக் குறிப்பிடுகிறுர். அந்நியர் ஆக்கிரமிப்பால் அவை பெரும்பாலும் சுவடற்றுப் போயின. அத்தகைய ஆக்கிரமிப்பு எதுவும் இல்லாதபடி இயற்கையமைப்பால் அமைதியுற்று வாழும் தமிழகத்தில் சங்க காலத்துக்கு முன்பிருந்த வழக்காற்றில் இருந்துவரும் ஆலய வழிபாடு காலம் செல்லச் செல்லப் பெரிதாக வளர்ந்து 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்று அறவுரை கூறும் அளவுக்குச் சிறந்துள்ளது.

சுடுமண் முதலியவற்றல் கோயில் எடுக்கப்பட்டமை

பழங்காலக் கோயில்கள் மிகச் சிறிய அளவில் சுடு மட் கோயில்களாகவும் மரக் கோயில்களாகவுமே இருந்

துள்ளன. கி. பி. ஐந்தாம் நூற்ருண்டை ஒட்டிய பல்லவர் காலம் தொட்டுத்தான் கருங்கல் செங்கல் இவற்றைக் கலந்து எடுக்கப்படும் கலப்புக்கோயில்களும், குடைபோகம் எனப்படும் குகைக் கோயில்களும், பின் கருங்கற்களை அடுக்கிக் கட்டப்படும் கோயில்களும் தோன்றின.

சங்க இலக்கியத்துள் கடவுளர்

புறநானூறு என்ற சங்க நூலின் 56ஆம் பாடலில்

'ஏற்றுவலன் உயரிய எரிமருள் அலர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் ருேனும்
கடல் வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெம் நாஞ்சில் பனை க்கொடியோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயில் உயரிய மாறுவென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்'

எனச் சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் என்ற நான்கு தெய்வ வருணனைகள் உள்ளன. இப் பாடல் பாண்டியனைப் பற்றியதாகும்.

சேரர்களைப்பற்றிய பதிற்றுப்பத்து என்ற நூலின் 21ஆம் பாடலில்

'வண்டூது பொலிதார் திருஞெமர் அகலத்துக்
கண்பொரு திகிரி கமழ்குரல் துழாஅய்
அலங்கற் செல்வன் சேவடி பரவி
நெஞ்சுமலி உவகையர் துஞ்சுபதிப் பெயர'

எனத் திருமால் வழிபாடு விளக்கப்பட்டது.

ஏழாம் பதிற்றுப்பத்தின் பதிகத்தால் திருமால் அடிய வர்களுக்கு அரசனுல் நிலங்கள் நிவந்தமாக விடப்பட்ட செய்தி புலனுகிறது.

'மாய வண்ணனை மனனுறப் பெற்றவர்க்கு
ஓத்திர நெல்லின் ஒகந்தார் ஈந்து'

என்ற அவ்வடிகளை நோக்குக.

திருமுறுகாற்றுப்படையிலும் திருமால்

'பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள் கொடிச் செல்வன்'

என்று குறிக்கப்படுகிறான்.

பெரும்பாணாற்றுப்படையில்,

'காந்தளஞ் சிலம்பில் களிறுபடிந் தாஅங்குப்
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்'

எனத் திருவெஃகாவில் கிடந்த திருக்கோலத்தில் காட்சி வழங்கும் திறம் பேசப்படுகிறது.

பரிபாடல் 15ஆம் பாடலில் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற பாண்டிய இளவரசன்,

'நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லது
ஏறுதல் உண்டோ வீறுபெறு துறக்கம்' எனவும்,

'அரிதில்பெறு துறக்கம் மாலிருங்குன்றம்
எளிதில் பெறல் உரிமை ஏத்துகம் சிலம்ப'

'அது, மாயோன் ஒத்த இன்னிலைத்தே' எனவும்,

'இருங்குன்றத்து அடியுறை இயைகெனப்
பெரும் பெயர் இருவரைப் பரவுதும் தொழுதே'
எனவும்,

திருமால் வீடுபேறு அருளும் திறத்தையும், திருமாலிருஞ்சோலை மலைச் சிறப்பையும், கண்ணனையும் பலராமனையும் வணங்குவதே உய்யும்வழி என்பதனையும் குறிப்பிடுகிறான்.

சிலப்பதிகாரத்துள்

சங்ககாலத்துக்குப்பிற்பட்ட சிலப்பதிகாரம்

'வீங்குநீர் அருவி வெங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசைச்......
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்'

'விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருஅமர் மார்பன் கிடந்த வண்ணமும்'

எடுத்து விளக்கும் முகத்தான் திருப்பதியிலும், திருவரங்கத்திலும் நிகழ்ந்த ஆலய விக்ரக வழிபாட்டை இயம்புகிறது.

அந்நூலில் புகார் நகரில்

'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை நேமி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்'

இருந்தனவாகக் குறிப்பிடப்படுகின்றன.

மதுரைமாநகரில்,

'நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்,
உவகைச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்'

இருந்தமை தெரிவிக்கப்படுகிறது; கோயிலுக்கு நியமம், நகரம், கோட்டம் என்ற வேறு பெயர்கள் இருந்தமையும் போதருகிறது.

சேரர் தலைநகராம் வஞ்சியில் சிவபெருமான் கோயிலும், ஆடகமாடத்து அரிதுயில் அமர்ந்த திருமால் கோயிலும் இருந்தமை அந்நூலுள் சாற்றப்படுகிறது.

ஆழ்வார்கள் காலத்துக் கோயில்கள்

சங்க காலத்தை ஒட்டிச் சற்றுப் பிற்பட்ட காலத்தில் சோணாட்டை ஆண்ட செங்கணான் 'எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகம் ஆண்டான்' எனவும், அவன் திருநறையூர் மணிமாடத்தைச் சேர்ந்து திருமாலை வணங்கினான் எனவும் திருமங்கை மன்னன் பாசுரங்கள் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகார காலத்தை அடுத்துவந்த ஆழ்வார்கள் 'வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேன் அல்லேன்; ஆய்கொண்ட சீர்த்தி ஆழிப்பிரான் எனக்கே உளன்' என்ற கோட்பாட்டோடு இறைவனுடைய திருக்கோயில்கள் பலவற்றையும் பாடியுள்ளனர் இவர்களுடைய பாசுரங்களால் இவர்கள் காலத்தில் பல விஷ்ணு ஆலயங்கள் திருவிழாச் சிறப்புக்களோடு பொலிவு பெற்றிருந்த செய்தி புலனாகிறது.

கோயில்களின் அமைப்பு வளர்ச்சி

மகேந்திரவர்மன் காலத்தில் (கி. பி. 600-625) திருமாலுக்கு மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் என்ற தலங்களில் குடைகோயில்கள் அமைக்கப்பட்டன. இராசசிம்மன் (680—700) காலத்தில் மகாபலிபுரத்துக் கடற்கரைக்கோயில் எடுக்கப்பட்டது. பல்லவர்காலக் கோயில்கள் கருப்பக்கிருகம், அர்த்த மண்டபம் என்ற உறுப்புக்களை உடைய சிறிய கற்கோயில்களே. இராசராசன் I (985-1014) கருவரை விமானத்தை உயர்ந்த அளவில் எடுப்பித்தபின்னரே, கோயில்களின் புறமதில்களுக்கு உயரிய கோபுரங்கள் கட்டும் வழக்கம் மிகுதிப்பட்டது. பிற்பட்ட சோழர்கள் காலத்திலும், பாண்டியர்கள் காலத்திலும், விசயநகர மன்னர்கள் காலத்திலும் மகாமண்டபங்களும், ஏனைய மண்டபங்களும் விரிவாக்கப்பட்டன.

கல்வெட்டுச் சான்று

சங்ககாலக் கோயில்களின் அமைப்பைப் பற்றி உணர வரலாற்றுச் சான்றுகள் இல்லை எனினும், பல்லவர்

காலம்தொட்டுத் தமிழகத்தில் தோன்றிய கோயில்கள் தம்மிடத்து வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்களால் தாமே வரலாற்று ஏடுகளாக உதவுகின்றன. பல்லவர் காலம் தொட்டுப் பிற்பட்ட நாயக்கர் மராட்டியர் காலம் வரை கோயில் பரப்பு விரிவடைந்ததோடு சிற்ப நுணுக்கங்களும், தெய்வ ஆராதனைகளும், திருவிழாக்களும் ஒருசேர விரிவடைந்துள்ள செய்திகளை வரலாற்று வாயிலாக அறிகிறோம்.

அறியப்படுவன

இவற்றை நோக்குமிடத்துத் தமிழகத்தில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகவே சைவமும் வைணவமும் மக்களுடைய இன்றியமையாத மதங்களாகி விரோத மனப்பான்மையை விடுத்து இயங்கிவந்துள்ள செய்தியும், அரசு மாற்றங்களால் ஆலயங்களுக்குத் தீங்கு வரவில்லை என்ற செய்தியும், அரசர்கள் தாம் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும், இரு மதங்களையும் சமநோக்குடனேயே பரிபாலித்துள்ளனர் என்ற செய்தியும், வற்புறுத்தி மத மாற்றம் செய்யும் தேவை தமிழகத்தில் இல்லை என்ற செய்தியும், வாதப்பிரதிவாதம் நடந்ததாகத் தெரிவிக்கும் சான்று எதுவும் இல்லை என்ற செய்தியும் போதரும்.

வரலாறு ஓரளவு புலப்படும்

ஆலயங்கள் ஊர்ச்சபையார் கண்காணிப்பிலேயே இருந்து வந்துள்ளன. அரசரும் உயர் அதிகாரிகளும் ஏனை யோரும் தாம் வழங்கும் அறக்கட்டளைகளை அக்கோயில் சபையார் வாயிலாகவே செய்துவந்தனர். எந்த ஆகமப் படி அக்கோயில்களில் பூசை செய்யப்பட்டது என்பதனை அறிவதற்குப் போதிய சான்றுகள் இல்லை, ஆலயங் களில் எந்தச் சம்பிரதாயம் பின்பற்றப்பட்டு வந்தது என்பதனையும் அறிதல் இயலவில்லை. பிற்காலத்தில் ஆலயங்களுக்கு ஏற்பட்ட தலபுராணங்கள் வரலாற்றுக் குப் பெரும்பாலும் பயன்படமாட்டா எனினும், அவற்றில்

காணப்படும் சிற்சில குறிப்புக்கள் வரலாற்றை அறிவதற்குப் பெரிதும் உதவுவனவாகும்.

கோவில்களுக்கு ஆக்கம்

மனித நாகரிகம் வளர வளர ஆலயங்களிலும் வளர்ச்சி கட்டிட அளவிலும், இறைவனுடைய அணிகலன்கள் அமைக்கும் அளவிலும், இறைவனுடைய அலங்காரங்கள், வாகனுதிகள் அமைக்கும் அளவிலும் மிகவும் முன்னேறிவிட்டன. அரசர்கள் தத்தம் வெற்றிகளைச் சிறப்பிக்கப் பழைய ஆலயங்களை விரிவாக்கினர்; சிலவற்றை புதுப்பித்தனர்; சிலவற்றைப் புதியனவாக எடுப்பித்தனர்; பொதுமக்களும் ஆலயங்களை நிர்மாணித்து ஆலயங்களின் அன்றுடச் செலவுகளுக்கு நிலங்கள் வழங்கினர். போரில் நாட்டை வென்ற மன்னர்களும் அந்நாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு நன்கொடைகள் வழங்கிக் கோயில்கள் திறம்படச் செயலாற்ற வாய்ப்பளித்துளனர். தென்னுட்டுக் கோயில் கல்வெட்டுக்களைப்போலவே, வடநாட்டு மன்னர்கள் அவ்வப்போது வெளியிட்ட காசுகளும், மக்கள் நிலைபற்றி அறியக் கருவிகள் ஆகின்றன. சிற்ப அமைப்பு, கட்டிட அமைப்பு, விக்கிரக அமைப்பு இவற்றைக்கொண்டு கோயில்கள் காலத்தை நன்கு உணர்ந்துகொள்ளலாம்.

பிற்கால அமைப்புக்கு ஆகமம் பிரமாணமாகாது

பழங்கால ஆலயங்களில் மூல விக்கிரகத்தைத் தவிர உற்சவ விக்கிரகங்களுக்கு இடமே இல்லை. ஆழ்வார்களால் பாடப்பட்டன மூல விக்கிரகங்களே. கருப்பக்கிருகத்தில் ஒரே மூர்த்தியே இருந்துவந்தது. ஆலயம் வளர வளர ஆகமங்களும் வளரத் தொடங்கின. ஆலயங்களின் அடிப்படை அமைப்புக்கு ஆகமங்களைப் பிரமாணமாகக் கொள்ளலாமேயன்றி, பின்னர் ஏற்பட்ட விரிவான ஆலய அமைப்புக்களுக்கு ஆகமங்கள் பிரமாணம் ஆக

மாட்டா ஆகமங்களில் மூல விக்கிரகம், கருப்பக்கிருக விமானம் இரண்டிற்கும் சமமான முக்கியத்துவம் உண்டு. கும்பாபிஷேக காலத்தில் தனித்தனியே மூல விக்கிரகம், விமானம் இவற்றிற்குக் கும்பங்கள் வைத்துத் தனித் தனியே கும்பாபிஷேகம் செய்வார்கள் இந்தச் சிறப்பு கோபுரங்களுக்குக் கிடையாது. கோபுர அமைப்பு பிற் பட்டதாதலின் ஆகமங்கள் அவற்றிற்குத் தனிச்சிறப்பு வழங்கவில்லே. பிரகாரங்களுக்கு உள்ள சிறப்பே கோபுரங்களுக்கும் வழங்கப்படுகிறது.

மத வேறுபாடின்றிக் கோயில்கள் பேணப்பட்டமை

சேர சோழ பாண்டியர் ஆட்சிக்குப் பின் தமிழகத் தில் பல்லவர் ஆட்சியிலும், போசளர்கள், கங்கர்கள், சளுக்கியர்கள் ஆகியோர் தொடர்பிலும் தமிழகத்தில் சைண மதமும் பௌத்த மதமும் பரவத் தொடங்கின. எனினும், பௌத்தம் விரைவில் மங்கிவிடச் சைணமே சிறிதளவு நிலேத்து நின்றது. சைணர்கள் ஆங்காங்குத் தீர்த்தங்கரர்களுக்கு ஆலயங்கள் நிறுவினர் கடாரத்து மன்னனுன மாறவிஜயோத்துங்கவர்மன் நாகப்பட்டினத் தில் தந்தையார் பெயரால் நிறுவிய சூளாமணி வர்ம விகாரத்துக்கு இராசராசன் I ஆணேமங்கலம் என்ற கிராமத்தைப் பள்ளிச்சந்தமாக வழங்கியுள்ளான். பிற் காலச் சோழர்கள் போலவே விசயநகர மன்னர்களும் சைணப் பள்ளிகளே ஆதரித்து அவற்றின் பராமரிப்பிலும் கவனம் செலுத்தினர். சிரவணபெல்குலா என்ற இடத் தில் கி. பி. 1368ல் வெட்டப்பட்ட கல்வெட்டு ஜைனக் கோயில்களே வைணவர்கள் சீர்குலேத்தவற்றுக்காகத் திருமலேயைச் சேர்ந்த தாதர்கள் வீடுவீடாகச் சென்று பணம் சேகரித்து இடிக்கப்பட்ட ஜினுலயத்தைப் புதுப் பித்து அக்கோயில் நன்கு நடைபெறுவதற்குத் திரு நாராயணபுரம் முதலிய பதினெட்டு மாவட்டத்து வைண வர்களும் எட்டுத் திருப்பதித் தாதர்களும் பொறுப்பேற்ற செய்தியும், பொறுப்பை மீறுவது அரசத் துரோகமும்

சங்கத் துரோகமும் சமுதாயத் துரோகமும் ஆகும் என்று கூறப்பட்ட செய்தியும், அவ்வாணைப்படித் திருமலையில் இருந்து தாதர்கள் வந்து சைணக்கோயில்களைப் புதுப் பித்துக் கொடுத்த செய்தியும் விளக்கப்பட்டுள்ளன. இதனால் மதவேறுபாடின்றி ஆலய பரிபாலனம் தமிழக மன்னர்களால் சிறப்புற நடத்தப்பெற்றமை தேற்றம்.

திருமால் விக்கிரகம்

பழங்காலத்தில் திருமாலுடைய விக்கிரகங்களில் பள்ளிகொண்ட விக்கிரகத்தில் உந்தியில் தாமரை காணப் படுவது இல்லை. நின்ற திருக்கோல விக்கிரகத்திற்கு முன்பே கிடந்த திருக்கோல விக்கிரக வழிபாடு ஏற்பட் டிருக்கவேண்டும் என்று திரு. சௌந்தரராசன் கூறுகிறார். மிகப்பெரிய அநந்தசாயி விக்கிரகம் திருமயத்திலும், நாமக்கல்லிலும் காணப்படுகின்றன. எட்டாம் நூற்றாண்டு வரை திருமாலின் நின்ற திருக்கோலத்தில் ஆண் உருவம் ஒன்றுதான் இருந்துவந்திருக்கிறது. ஒன்பதாம் நூற்றாண் டுக்கு முன்பிருந்த அநந்தசாயி விக்கிரகத்தோடு பூதேவி மட்டுமே இருந்திருக்கிறாள். அதற்குப் பிறகுதான் பரி வாரங்களுக்குத் தனி ஆலயம் கட்டும் வழக்கம் ஏற்பட் டிருத்தல் வேண்டும். அநேகமாக ஆலயங்களில் திரு மகளுக்குத் தென்மேற்கிலும் ஆண்டாளுக்கு வடமேற் கிலும் தனிக்கோயில்கள் வகுக்கப்பட்டன.

பஞ்சவீர வழிபாடு

வடநாட்டிலிருந்த பஞ்சவீர வழிபாடு தமிழ்நாட்டி லும் பரவியிருத்தல் வேண்டும். திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோயில், நாச்சியார்கோவில் என்ற திருத்தலத்திலுள்ள ஸ்ரீநிவாசப்பெருமாள்கோயில், திருச் சானூர் வேணுகோபாலசுவாமி கோவில், தேரழுந்தூர் கோஸகன் கோயில், திருத்தாங்கலில் உள்ள மலைக் கோயில் இவைகளில் ஒருகாலத்தில் பஞ்சவீர வழிபாடு இருந்துவந்திருக்கிறது என்பது ஆராய்ச்சியால் புலனாகும் செய்தியாகும்.

இனி, சங்க காலத்துக்குப் பின் தமிழகத்தில் ஆட்சி செய்த பல்லவர் கால விண்ணகரங்கள் பற்றி நோக்குவோம்.

பல்லவர்களது சமயப் பொறை

கி. பி. 3-ஆம் நூற்றுண்டு முதல் 9-ஆம் நூற்றுண்டு வரை பல்லவர் காலமாகும். பப்பஸ்வாமி காலம் முதல் (கி.பி. 225) நந்திவர்மன் (கி.பி. 550) முடிய முதற்பகுதி யாகும். சிம்மவிஷ்ணுவின் காலம் முதல் (கி. பி. 575) பரமேசுவரவர்மன் காலம் (கி.பி.715) முடிய இரண்டாம் பகுதியாகும். இரண்டாம் நந்திவர்மன் காலம் முதல் (கி. பி. 717) அபராஜிதன் காலம் (கி. பி. 898) முடிய மூன்ரும் பகுதியாகும். பல்லவர்கள் தங்கள் சிறப்பைக் கூறும்போது தாம் பிர்மாவிடமிருந்து தோன்றியவர் என வும், பாரத்வாஜ கோத்திரத்தினர் எனவும் கூறிக்கொள்ளு கின்றனர். இவர்கள் சிவபக்தர்களாகவும், வைணவர் களாகவும், பௌத்தர்களாகவும் இருந்திருக்கின்றனர். புத்தவர்மன் (275-300) பௌத்தன் என்பதும், ஸ்கந்த வர்மன், நந்திவர்மன், தந்திவர்மன், பரமேசுவர வர்மன் முதலியோர் சைவர்கள் என்பதும், விஷ்ணுகோபன், சிம்மவிஷ்ணு, நரசிம்ம வர்மன் முதலியோர் வைணவர் கள் என்பதும் அவரவர் பெயர்களாலேயே புலப்படு கின்றன. இவர்கள் தாம் எந்தத் தெய்வத்தை வணங்கிய போதும், ஏனைய தெய்வ வழிபாடுகளையும் ஆதரித்தே வந்துள்ளனர்.

பல்லவர் காலத்து ஆழ்வார்கள்

ஆழ்வார்களுள் பொய்கையார், பூதத்தார், பேயார் என்ற முதலாழ்வார்களும், திருமழிசையாழ்வாரும் திருமங்கை மன்னனும் பல்லவர் அரசில்வாழ்ந்தவர்களே இவர்களுக்கு மங்கைமன்னன் பரமேசுவர விண்ணகரம், திருவல்லிக்கேணி, திருக்கடல்மல்லை இவற்றைப் பாடும் போது பல்லவ அரசனைப் பற்றிக் குறிப்பிடுகிருர்.

'பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேசுவர விண்ணகரம்,
வெண்குடை நீழற் செங்கோல் நடப்ப விடைவெல்கொடி
வேற்படை முன்றுயர்த்த, பண்புடைப் பல்லவர்கோன்'
பார்மன்னு தொல்புகழ் பல்லவர்கோன்'

முதலாகப் பல்லவனைப் புகழ்கிறார்.

பல்லவர் காலத்து வைணவ நிலையைக் கல்வெட்டுக்கள் வாயிலாகக் காண்போம்.

விஜயஸ்கந்த வர்மனின் தேவி சாருதேவி விஜய தீர்த்தவர்மனுடைய ராஜமாதாவாக அரசாண்ட காலத்தில் தாலூரா என்ற இடத்தில் நாராயணனுக்குக் கோயில் கட்ட ஏற்பாடு செய்துள்ளாள். (Ep In.Vol. 8 Page 143)

விஷ்ணுகோபனின் புதல்வன் சிம்மவர்மன் தன்னுடைய கல்வெட்டின் தொடக்கத்தில் திருமால் வழிபாடு செய்கிறான். விஷ்ணுகோபன் கண்டுகூரா என்ற கிராமத்தில் உள்ள விஷ்ணுஹரா என்ற கோயிலில் வெட்டுவித்த கல்வெட்டில் வடநாட்டுக் குப்த மன்னர்களைப் போலத் தன்னையும் பரமபாகவதன் என்று குறிப்பிட்டுக் கொள்ளுகிறான். (In. An. Vol. II. Page 80)

மகேந்திரவர்மன் மகேந்திரவாடி என்ற ஊரில் மகேந்திர தடாகத்தின் கரையில் மகேந்திர விஷ்ணுக் கிருகத்தை எடுப்பித்தமை கல்வெட்டால் புலனாகிறது. (Ep In. Vol 17 P. 152 F) இம்மன்னனே மண்டகப்பட்டில் குடைந்துள்ள கோயிலில் திருமால் விக்ரகமும் உள்ளது. (Ep In. Vol P. 14)

மகாபலிபுரத்துச் சலசயனப் பெருமாள் கோவிலில் 'நரபதி ஸிம்மவிஷ்ணுகிருகம்' என்ற தொடர் காணப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கனால் இக் கோயிலுக்கு நரசிம்ம சதுர்வேதிமங்கலம் தானம் செய்யப்பட்டது.

காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள்கோயில் இரண்டாம் நந்திவர்மனால் எடுப்பிக்கப்பட்டது. இங்குப் பல கல்வெட்டுக்கள் உள. (S I I. Vol. IV Page 10 F)

விஜயநந்தி விக்கிரமவர்மன், தண்டந்தோட்டத்தில் சிவன் விஷ்ணு இவர்கள் ஆலய பூசைகளுக்கு ஏற்பாடு செய்ததோடு, ஆலய மண்டபத்தில் மகாபாரதம் பாராயணம் செய்யவும் ஏற்பாடு செய்துள்ளான்.
(S. I. I. Vol. II Page 517)

பரமேசுவர வர்மன் கோயிலில் பாரதம் பாராயணம் செய்ய நிபந்தம் விட்ட செய்தி செப்பேடுகளில் காணப்படுகிறது.

மகாபலிபுரத்து ஆதிவராகப் பெருமாள் ஆலயத்தில் உள்ள இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டு அக்கோயிலை அவனே எடுப்பித்த செய்தியை வெளியிடுகிறது. (Ep. Coll. 6 6 of 922)

திருவரங்கத்தை அடுத்த திருவெள்ளறை என்ற ஊரில் உள்ள புண்டரீகாக்ஷி பெருமாள் ஆலயத்தில் தந்திவர்மனுடைய கல்வெட்டுக் காணப்படுகிறது.
(Ep. Coll. 74 of 1898)

உத்தரமேரூரில் உள்ள வைகுந்தப் பெருமாள் ஆலயத்தில் தந்திப்போத்தரையனுடைய 9ஆம் ஆண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. (Ep. Coll. 74 of 898)

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் கருவறைச் சுவரில் தந்திவர்மனுடைய 26-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட தானம் பற்றிய கல்வெட்டுக் காணப்படுகிறது.
(Ep. Ind. Vol. 8 P. 291)

உத்தரமேரூரில் உள்ள வைகுந்தப் பெருமாள் ஆலயத்தில் தந்திவர்மனின் 21ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் காணப்படுகிறது. (Ep. Coll. 61 1896)

திருவேங்கடக் கோட்டத்துக் கடவூர் நாட்டுத் திருச் சொகினூரில் உள்ள பெருமானடிகளின் திருவிளங்கோயி லில் நந்திவர்மன் II-ன் 51ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் காணப்படுகிறது.

தெள்ளாறெறிந்த நந்திவர்மனின் (III) 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு காஞ்சிபுரத்திலுள்ள உலகளந்த பெருமாள் கோயிலில் காணப்படுகிறது.

மதுராந்தகத்தை அடுத்த திருமுக்கூடலில் உள்ள வெங்கடேசப் பெருமாள் ஆலயத்திலுள்ள நிருபதுங்க வர்மனின் 24ஆம் ஆண்டுக் கல்வெட்டு அவ் விஷ்ணு கோயிலுக்குத் தங்கம் வழங்கிய செய்தியைக் குறிக்கிறது.

மாமல்லபுரத்தில் மகிஷாசுர மர்த்தனி குகையில் திருமாலின் கிடந்த திருக்கோலமும் செதுக்கப்பட்டு உள்ளது. ஆதிவராகனின் குகை 'பரமேசுவர மகாவராக விஷ்ணு கிருகம்' என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டு உள்ளது. இக்குகையில் ஹரிஹர உருவமும் காணப் படுகிறது. தசாவதாரங்களைப் பற்றிக் குறிப்பிடும் இக் குகையில் உள்ள கல்வெட்டில் புத்தரும் ஓர் அவதார மாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இரண்டாவது நரசிம்மன் காலத்து வராக குகையில் வராக நாராயணன் சிற்பம் காணப்படுகிறது.

மாமல்லபுரத்துக் கடற்கரை ஆலயங்களில் ஒன்று விஷ்ணுவுக்காக ஏற்பட்டுள்ளது.

பல்லவர்கால விண்ணகரங்கள் க்ஷத்திரிய சிகாமணி பல்லேசுவர கிருகம், ராமசிம்மபல்லேசுவர கிருகம், நரபதி சிம்ம பல்லவேசுவர கிருகம் என்றுற்போலப் பெயரிடப் பட்டுள்ளன.

காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் திருவிக்கிரமன், நரசிம்மன் இவர்களின் உருவங்கள் காணப்படுகின்றன.

நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த 'பைரபுனி குண்டா' என்ற இடத்திலுள்ள குகை பரமேசுவர விஷ்ணுகிருகம் என்று குறிப்பிடப்படுகிறது. வாதாபி யிலும் விஷ்ணு விக்கிரகம் அமைந்த குகைகள் உண்டு. இவை சளுக்கியர் காலத்தவை.

திருச்சி மலையிலுள்ள குகை ஒன்று திருமால் சிற்பத் தைக் கொண்டுள்ளது. புதுக்கோட்டையைச் சார்ந்த திருமயத்துக் குகைக் கோயில்களில் ஒன்று திருமா லுடைய கோயிலாகும்.

இவற்ருல் பல்லவர்கள் காலத்தில் விஷ்ணுக் கிருகங் கள் பலவாக அமைக்கப்பட்டுத் தெய்வ ஆராதனத்திற் குப் பலவகை நிவந்தங்கள் விடப்பட்ட செய்தியை ஓரளவு உணரலாம்.

இனி, சோழர்கால கல்வெட்டுக்களை நோக்குவோம்.

திருமங்கை மன்னன் தம் திருநறையூர்ப் பதிகத்தில், எண்தோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்த கோச் செங்கட் சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர் மணி மாடம் என்பதைப் பல பாசுரங்களில் குறிப்பிடுகிருர்.

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்துக் கல்வெட்டு ஒன்று விக்கிரமசோழன் ஆட்சியில் (கி.பி. 112) வைகுந்த விண்ணகர ஆழ்வாருக்கு நிலம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. (S. I. I. Vol. 5 No. 702).

தஞ்சை மாவட்டத்து மன்னுர்குடி இராசகோபால சுவாமி கோவில், குலோத்துங்கன் I காலத்ததாய், குலோத்துங்க சோழ விண்ணகரம் என்று பெயரிடப் பட்டது. (S. I. I. Vol. 6 No. 57)

ஆந்திரப்பிரதேசத்துக் கடப்பை மாவட்டத்திலுள்ள நந்தலூரில் எடுக்கப்பட்ட குலோத்துங்க சோழ விண்ணகரத்திற்குரிய நிலத்தின் எல்லைகளைக் கல்லில் வெட்டும்படிக் குலோத்துங்கன் II சிற்றரசர்களில் ஒருவனை மதுராந்தக சாத்தபிச்சோடி ஆணையிட்ட செய்தியைக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. (A.R.E. 57/of 1907)

முதற் குலோத்துங்கன் காலத்தில் திருக்கோவலூர் திருவிடைக்கழி ஆழ்வாருக்கு நந்தாவிளக்கு அளிக்கப்பட்டதைக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. (S. I. I. Vol. VII No 133) அதே மன்னன் ஆட்சியில் அப்பெருமானுக்கு அர்த்தசாம சந்திக்கு அரிசி வழங்கப்பட்ட செய்தியைப் பிறிதொரு கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. (S. I. I. Vol. VII No. 134)

முதல் இராசேந்திரன் காலத்தில் தென் ஆற்காட்டு மாவட்டத்துச் சிங்கவரத்திலுள்ள பள்ளிகொண்ட பரமேசுரசுவாமிக்கு நந்தாவிளக்கு அமைக்கப்பட்ட செய்தி உணரப்படுகிறது. [S. I. I. Vol. XVII No. 249]

வட ஆற்காட்டு மாவட்டத்துத் திருமால்புரத்தில் பரகேசரிவர்மன் காலத்தில் அந்தணருக்கு அமுதுசெய்விக்க நிவந்தம் விட்ட செய்தியைக் கல்வெட்டொன்ருல் அறிகிரேம். [S. I. I. Vol. XIX No. 197]

மற்ருெரு கல்வெட்டு பரகேசரி வர்மன் காலத்தில் கோவிந்தப்பாடி பெருமானடிகள் ஆலயத்திற்கு அளிக்கப்பட்ட தருமத்தைக் குறிப்பிடுகிறது. [S. I. I. Vol. XIX No. 2 0]

பராந்தக சோழனின் 29ஆம் ஆண்டில் திருச்சானூர் கோயிலுக்கு நந்தாவிளக்கு அமைக்க மலைநாட்டைச் சார்ந்த ஒருவன் 40 கழஞ்சுப் பொன் மூலதனமாக வைத்த செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது.

[I. A. D. 935]

திருப்புல்லாணி தாசன் என்பவரால் திருப்பதி வேங்கடேசுவரர் ஆலயம் புதுப்பிக்கப்பட்டபோது, வீர நரசிம்ம யாதவராயனின் ஆணைப்படி பல கல்வெட்டுக் கல் புதுப்பிக்கப்பட்டன. அவற்றுள் 14ஆம் கல்வெட்டு முதல் இராசராசனின் 14ஆம் ஆண்டில் சேரமானுடைய பெண்ணும் பொன்மாளிகையில் துஞ்சினவள் எனப்படு வாளுமான அரசி 52 கழஞ்சுப் பொன், 6 வயிரக்கல், 28 முத்துக்கள் ஆகியவற்றைப் பெருமானுக்கு இராச ராசனின் அதிகாரி அருளாட்சி என்பவன்மூலம் வழங்கிய செய்தி காணப்படுகிறது.

16ஆம் எண்ணுடைய முதல் இராசராசனின் 23ஆம் ஆண்டுக் கல்வெட்டால், கங்கைகொண்டசோழ மரும்ம மாராயன் 26 கழஞ்சுத் தங்கத்தை உத்தராயண சங்க ராந்தி காலத்தில் சுவாமிக்கு அபிஷேகம் செய்ய மூதலன மாக வழங்கியுள்ளான் என்பதும், நென்மலி நாட்டைச் சேர்ந்தவன் இக்கொடையாளி என்பதும் புலனுகின்றன.

இராசேந்திர சோழன் I காலத்திய திருப்பதி அடி வாரத்திலுள்ள கபிலேசுவரர் ஆலயக் கல்வெட்டு, கோட்டமங்கலத்து அதிகாரி திருவேங்கடமுடையான் ஆலயத்தில் வழிபாடு சம்பந்தமாக ஏற்பட்ட சிக்கலைத் தீர்த்த செய்தியை வெளியிடுகிறது. [கி.பி. 1018]

குலோத்துங்கன் I ஆட்சியான [கி.பி. 1070-1118] 48 ஆண்டுகளிலும் திருவரங்க ஆலயத்தில் கல்வெட்டுக் கள் காணப்படுகின்றன. திருவரங்கக்கோயிலில் ஆழ்வார் களுடைய பாசுரங்களைப் பாட இவன் ஏற்பாடு செய்துள் ளான். [S. I. I. Vol. III No. 70 P. 48–152]

இனி, பாண்டியர்காலக் கல்வெட்டுக்களை நோக்குவோம்.

ஆலம்பாக்கத்துக் கோயில் கல்வெட்டொன்று சிங்களர்கள் பாண்டியநாட்டிலிருந்த பல கோயில்களை

இடித்ததால், கோயில்களைப் பாதுகாக்கவே, குலசேகர பாண்டியன் போர்புரிந்தான் என்று தெரிவிக்கிறது.

பாண்டியகாலச் சமய நிலையையும் ஆலயங்களையும் பற்றிப் பாண்டியர் வரலாறு என்ற நூலில் சதாசிவ பண்டாரத்தார் பல ஆதாரங்களுடன் குறிப்பிடுகிறார்.

திங்கள்தோறும் முழுமதி நாட்களில் திருவிழாக்கள் நடைபெற்றன அரசர்களும் தலைவர்களும் தம் பிறந்த நாட்களில் விழாக்கள் நடத்துவதற்கு இறையிலி நிலங்களும் பொருளும் அளித்துள்ளனர். நாடோறும் சிவாலயங்களிலும் விண்ணகரங்களிலும் தேவாரமும் திவ்விய ப்ரபந்தமும் இன்னிசையுடன் ஓதுவதற்கு ஆன்றோரால் நிபந்தங்கள் விடப்பட்டன. இசை, நடனம், கூத்து என்பன பெரிதும் வளர்ச்சியுற்றன. சிற்பம் வல்லாரும், ஓவியம் வல்லாரும், அணிகலன் செய்பவரும், செப்புத் திருமேனியும் கற்படிவங்களும் செய்பவரும், நன்கு ஆதரிக்கப்பட்டனர். [பாண்டியர் வரலாறு பக். 195]

பாண்டியர் காலத்துச் செப்பேடுகள் பல அரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. நெடுஞ்சடையனின் வேள்விக்குச் செப்பேட்டின் பன்னிரண்டாவது சுலோகம் பரமபுருடன் நாராயணனைப் பற்றிச் சொல்கிறது. சீவரமங்கலச் செப்பேடு மும்மூர்த்திகளையும் வழிபட்டுத் தொடங்குகிறது. இரண்டாவது சுலோகம் வேதமாகிய கருடன்மீது பகவான் ஏறியிருக்கிறான் என்று தெரிவிக்கிறது. நெடுஞ்சடையனின் சின்னமனூர்ப் பெரியசாசனம் பதினைந்தாவது சுலோகம் லக்ஷ்மியையும் நாராயணனையும் பற்றிச் சொல்லுகிறது. வீரபாண்டியனின் சிவகாசிச் சாசனம் மும்மூர்த்திகள் வழிபாட்டுடன் தொடங்குகிறது.

ஆய்க்குல மன்னர்களின் பார்த்திபசேகரபுர சாசனம் யாதவ குலத்தில் கிருஷ்ணன் பிறந்ததைத் தெரிவிக்கிறது; விஷ்ணு பட்டாரகரைப் பிரதிட்டை செய்து பார்த்திபசேகரபுரம் என்று அவ்வூருக்குப் பெயரிட்டான் என்று கூறுகிறது.

கருநந்தடக்கனின் திருப்பிறப்புச்சாசனம் (9ஆம் நூற்றுண்டு) 'நமோ நாராயணுய' என்று சொல்லித் தொடங்குகிறது.

சீவரமங்கல செப்பேடு அரசன் திருமால்போன்று விளங்குகின்றுன் என்று கூறுகிறது.

நெடுஞ்சடையன் பராந்தகன் தன்னை 'பரம வைஷ்ணவன் தானுகி நின்றிலங்கு மணிமுடி நிலமன்னவன்' என்று கூறிக்கொள்கிருன்.

சீவரமங்கலச் செப்பேடு அவன் கொங்குநாட்டைக் கைப்பற்றியபின் அங்குக் காஞ்சிவாய்ப் பேரூர்ப்புக்குத் திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோயிலாக்கிய செய்தியை வெளியிடுகிறது.

வேள்விக்குடிச் செப்பேடுகளின் இறுதியில் வைணவ தரும சுலோகங்கள் காணப்படுகின்றன.

நெடுஞ்சடையன் பராந்தகன் ஆட்சியின் முற்பகுதியில் அமைச்சனுக நிலவிய காரிமாறன் என்பவன் மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலையில் திருமாலுக்கு ஒரு கற்றளி அமைத்து அதில் நரசிங்கப்பெருமானை எழுந்தருளிவித்தான். அவன் காலத்தில் முடிவடையாத நீர்தெளித்தலை அவன் தம்பி செய்துமுடித்தான். [E. I. Vol. VIII Page 319)

தமிழ் நாட்டை ஆண்ட பல்லவர், சோழர், பாண்டியர் கால ஆலயங்கள் பற்றிய செய்திகளை நோக்கினேம். இனி, தமிழ் நாட்டில் ஆங்காங்கு காணப்படும் கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கும் செய்திகளைத் தொகுத்துக் காண்போம். இவை தமிழ் நாட்டு அரசாங்கம் வெளியிட்டுள்ள கோயில் சாசனங்களிலிருந்து அறியப்படுவனவாகும்.

கோவிந்தராசசுவாமி கோயிலில் வைகானச சூத்திரப்படி பிரதிட்டை செய்து திருவாராதனம் பண்ண கி. பி. 1539-ல் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஸ்ரீரங்கராயன் கி. பி. 1644-ல் இசுகோயிலின் முன் மண்டபம் சந்நிதி கோபுரம் இவற்றை எடுப்பித்தான்.

42ஆம் எண்ணுடைய கல்வெட்டு, திருக்கோவலூரில் திருவிடைக்கழிப் பெருமாள் நிலத்திற்கும் வீரட்டானேசுவரர் நிலத்திற்கும் ஏற்பட்ட பரிவருத்தனையைக் குறிக்கிறது. இது குலோத்துங்கன் I காலத்துக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் திருமால்கோயில் மூலப் ப்ருத்தியன் சேனபதி ஆழ்வார் என்பதும், சிவன் கோயில் மூலப் ப்ருத்தியன் சண்டேசுர தேவன் என்பதும், கட்டப்பட்டுள்ளன. 57ஆம் கல்வெட்டு, சோழமண்டல விண்ணகரப் பாதுகாப்புக்காகக் கிருஷ்ணதேவராயர் பதினாயிரம் பொன் அளித்த செய்தியை இயம்புகிறது.

அதே மன்னன் தன் அரசு பெருகுவதற்காகக் கிராம தேவதைகளுக்கும் துர்க்காதேவிக்கும் பூசை, அமுதுபடி, நந்தாவிளக்கு இவை நிலைபெறச்செய்த ஏற்பாடுகள் 58ஆம் கல்வெட்டால் வெளியாகிறது.

64ஆம் கல்வெட்டு, இராசராச சேதியரான் வேண்டுகோளின்படி அரசன் பல்லவராயன் மூலம் திரு இடைக்கழி ஆழ்வாருக்கு நிலம் அளித்த செய்தியையும், 65ஆம் கல்வெட்டு, அப்பெருமானுக்கு விக்கிரம பாண்டியன் காலத்து நந்தாவிளக்கு அளித்த செய்தியையும் கூறுகின்றன.

139ஆம் கல்வெட்டு, திருவெண்ணெய்நல்லூர், வைகுந்தப் பெருமாள் கோயிலில் விக்கிரமபாண்டியன் சந்தி என்ற அறக்கட்டளைக்காகவும் உற்சவம் நடந்துவதற்காகவும் நிலம் விட்ட செய்தியை இயம்புகிறது. 1454ல் அக்கோவில் மடைப்பள்ளிக்கு உறங்காவில்லிதாசன் தானம் செய்த செயலும் அறியப்படுகிறது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னூர் கோயிலில் கிருஷ்ணதேவராயரின் காலத்துச் சாசனம் [எண் 143] வீரநாராயண நல்லூர் அழகியமன்னூர்க்குக் காலசந்தி உபயத்திற்கு [கி. பி. 1341] ஏற்பாடு செய்த தைக குறிப்பிடுகிறது. [143]

திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியதேவன் நாச்சியாருக்கும் பள்ளிகொண்டருளிய பரமஸ்வாமிக்கும் காலசந்திபூசை முதலியவற்றிக்கு ஏற்பாடு செய்தமை 147ஆம் கல்வெட்டால் வெளியாகிறது.

தாயாருடைய புண்ணியத்திற்காகச் சதாசிவராயர் தானம் செய்த செயல் 150ஆம் கல்வெட்டால் புலனு கிறது.

குலசேகர தேவன் பராக்கிரம பாண்டியன் காலத் தைச் சேர்ந்த 161ஆம் கல்வெட்டு, வடபெருங்கோயில் பள்ளிகொண்டருளிய பரமஸ்வாமிக்கும் சூடிக்கொடுத்த நாச்சியாருக்கும் உற்சவத்திற்கு ஏற்பாடு செய்த செயலை வெளியிடுகிறது.

கோனேரின்மை கொண்டான் பிரம்மதேவன் என்பான் வேதவிருத்தி மகாபாரதவிருத்தி சோதிடவிருத்தி வைத் திய விருத்தி பண்ணிசை விருத்தி இவற்றிற்கு நிபந்தம் விடுத்தசெய்தி 170ஆம் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது.

சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு மகாசபை யாரைப்பற்றித் தெரிவிக்கிறது.

208ஆம் கல்வெட்டு, கோவை மாவட்டத்துச் சேவூர் வேங்கடரமண சுவாமி கோயிலில் வல்லவதேவன் என்ற போசள அரசனுடைய (கி.பி. 1339) செயல் பற்றிக் குறிப்பிடுகிறது.

சுந்தரப்பாண்டியன் காலத்து 209ஆம் கல்வெட்டு, அழகிய பெருமாளுக்கு வழங்கப்பட்ட நிவந்தம் பற்றி அமைந்துள்ளது. வீரபாண்டியன் காலத்தில் வடபரி சாரன நாட்டு வியாபாரிகள், மணவாள ஆழ்வார் நாச்சியார் இவர்களைப் பிரதிட்டை செய்ததை 214ஆம் கல்வெட்டு இயம்புகிறது.

ஈரோடு அரங்கநாதசுவாமி ஆலயத்தில் அச்சுதராயர் காலத்ததாகிய 248ஆம் கல்வெட்டு, பள்ளி கொண்ட ஆழ்வார் கோயிலில் பூசையும் சாத்துபடியும் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியை அறிவிக்கிறது.

249ஆம் கல்வெட்டு, கின்னத்தூர் லக்ஷ்மிநாராயணப் பெருமாள், வீரபாண்டிய விண்ணகரம் என்ற இடத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அமுது செய்வதற்கு ஏற்படுத்திய அறக்கட்டளை பற்றி அமைந்தது.

265ஆம் கல்வெட்டு, கொடுமுடி வரதராசப்பெருமாள் கோயிலும் குளமும் விக்கிரம சோழனால் நிர்மாணிக்கப் பட்ட செய்தியைச் சாற்றுகிறது

போசளமன்னன் வல்லபதேவன் காலத்தில் அரசனுடைய நலத்திற்காகக் கருமாணிக்கப் பெருமாளுக்குக் கொங்குப்பு நாட்டவர் கொடுத்த தர்மம் பற்றிய கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது.

சாளுவ நரசிங்கராயன் காலத்திய 348ஆம் கல்வெட்டு, பேரருளாளனையும் பெருந்தேவித் தாயாரையும் பிரதிஷ்டை செய்த செய்தியை எடுத்துரைக்கிறது.

349ஆம் கல்வெட்டு, ஹரிஹரன் புக்கன் காலத்தில் வேத மடத்தில் துறவிகளுக்குப் பிக்ஷையிடுவதற்குச் செய்த ஏற்பாடுபற்றி அமைந்தது.

360ஆம் கல்வெட்டு, அச்சுததேவ மகாராயனும் அவன் அரசியும் வரதராசனை வணங்கித் துலாபாரம் ஏறிய செய்தியை நுவல்கிறது.

363ஆம் கல்வெட்டு, அம்மன்னன் அப்பெருமானுக்கு இரத்தினம் இழைத்த சங்கு சக்கரம் அபயஹஸ்தம் திருநாமம் ஆகியவற்றைச் சமர்ப்பித்த செய்தியை எடுத்துரைக்கிறது.

கோதண்டன் என்ற மன்னன் தன் பெயரால் கோதண்டராமன் கோயில் கட்டியதாக அறிகிறோம்.

368ஆம் கல்வெட்டினால், வேங்கடபதி தேவன் குமார தாதாசாருக்கு அக்நிஷ்டோம யாகம் பண்ணி யாகசாலைக்குப் பெருமாள் எழுந்தருளும்போது, தார பூர்வமான தானம் செய்த செயலை அறிகிறோம்.

மாமல்லபுரமான ஜகந்நாதபுரத்து நகரமும் சபையும் சேர்ந்து பரமேசுவர விஷ்ணுகுலத்தாழ்வாருக்கு நிலம் கொடுத்த செய்தி 500ஆம் கல்வெட்டில் காணப்படுகிறது.

மதளவராக விஷ்ணுகிருகத்து ஆழ்வாருடைய சுதர்சனப் பெருமாளுக்கு, வேங்கடபதி தேவமகாராயனின் காரியகர்த்தரான தளவாய் திருமலைநாயக்கன் உற்சவத்தில் சகஸ்ரநாம அர்ச்சனைக்குச் செய்த ஏற்பாடு பற்றி 503ஆம் கல்வெட்டு அமைந்துள்ளது.

540, 543ஆம் கல்வெட்டுக்கள், குமாரதாதாசாரியாருக்கும் ஸ்தலத்தாருக்கும் ஏற்பட்ட உடன்பாடுபற்றி அமைந்தவை.

சுந்தரப்பெருமாள் கோயிலில் சோழமன்னர் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. அங்கு விரூபாக்ஷ தேவ மகாராயன், தேவதேவமகாராயன் ஆகியோர் கல்வெட்டுக்களும் (558—560) உண்டு.

உடையார்பாளையம் வரதராசப்பெருமாள் கோயில் இராசேந்திரசோழ தேவன் காலத்துத் தோன்றியதாகும்.

இராமராமதேவ மகாராயர் காலத்தில், கொண்ட சமுத்திரம் என்ற ஊரில், அரசனின் இராயசத்தால், கிருஷ்ணதேவராயர் புண்ணியத்திற்காகக் கோயில் ஒன்று கட்டப்பட்டதாக அறிகிறோம்.

தாழக்கொம்பு என்ற ஊரில் உள்ள கல்வெட்டு, மார்கழி அத்தியயன உற்சவத்தில், இதிகாச புராணம் ஸ்ரீபாஷ்யம்—திருவாய்மொழி—ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம்—சுந்தரராஜஸ்தவம்—ராமாயணம் — பாகவதம்— முதலிய பலநூல்கள் பாராயணம் செய்யப்பட்ட செய்தி பற்றி அமைந்ததாகும். 390ஆம் எண்ணுடைய ஒரு கல்வெட்டில் ஆழ்வார் திருநட்சத்திரம், ஆசாரியர் திரு நக்ஷத்திரம் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

413ஆம் கல்வெட்டில் காஞ்சி வரதராசருக்கு இட்டிலி நைவேத்தியம் கூறப்படுகிறது.

ஸ்தலவீரப் பெருமாள் கோயில் கல்வெட்டில் (502) சகஸ்ரநாம அர்ச்சனை ஜபிக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக் கும், திருத்துழாய் எடுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் மாதச்சம்பளம் ஏற்பாடு செய்யப்பட்டமை கூறப்பட்டு உள்ளது.

சாத்தார் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மாலை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டதை 590ஆம் கல்வெட்டுக் கூறுகிறது.

1073ஆம் கல்வெட்டு, விஜயாதித்தனுடைய மகன் விஷ்ணுவர்த்தனன் விஷ்ணுபூஜை, பிரதிஷ்டை இவற்றைச் செய்து நாட்டைக் காத்த செயலைக் குறிக்கிறது.

உத்தம வீரராகவசுவாமியின் ஆலயம் சிலகாலம் துருக்கர் வசம் இருந்தது என்று ஒரு கல்வெட்டு (1357) குறிப்பிடுகிறது.

793ஆம் கல்வெட்டு, கரிகாலன் என்பவன் கோயி லைக் கட்டி முப்பதாயிரம் வேலி நிலம் தானம் செய்த செய்தியை வெளியிடுகிறது. இக்கரிகாலன் சங்ககாலக் கரிகாலனின் வேறுபட்டவன்.

2117ஆம் கல்வெட்டு, சோழ கேரள விண்ணகரப் பெருமாள் கோயில் என்ற கோயிலொன்றைத் தன் பெயரால் எடுப்பித்தலைக் கோனேரின்மை கொண்டான் விரும்பிய செய்தியை வெளியிடுகிறது.

இனி, திருப்பதி தேவஸ்தானத்தார் வெளியிட்டுள்ள கல்வெட்டுத் தொகுப்பிலிருந்து கிடைக்கும் செய்திகள்பற்றி நோக்குவோம்.

திருமலைக்கோயில்
பல்லவஅரசர்தம் கல்வெட்டுக்கள்

சோழர்காலத்துக்கு முற்பட்டுத் தமிழகத்தை ஆண்ட மகேந்திரவர்மன்—கட்கமல்லன் — நந்திவர்மன்—ஆகிய பல்லவ மன்னர்களுடைய கல்வெட்டுக்களும், சோழ மன்னர் பராந்தகன் — இராசராசன் — இராசேந்திரன் — குலோத்துங்கன் I—விக்கிரமசோழன் – இராசேந்திரன் III ஆகியவர் கல்வெட்டுக்களும், பாண்டியருள் சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டுக்களும், தெலுங்குப் பல்லவர்களில் விஜயகண்டபாலன் — இராச கண்டபாலன்—யாதவராயர்களில் திருக்காளத்திதேவர்— வீரநரசிங்க ராயர் — விசயநகரமன்னர்களில் புக்கராயர்— ஹரிஹரராயர் — தேவராயன் — மல்லிகார்ச்சுனன் — கிருஷ்ணதேவராயர்—வேங்கடபதி ராயர்—சதாசிவராயர் —அச்சுதராயர்—ஆகியோர் கல்வெட்டுக்களும் திருமலைக் கோயில் அச்சுதராயர் ஆகியோர் கல்வெட்டுக்களும் திருமலைக்கோயிலில் காணப்படுகின்றன.

அரசிகள்தம் திருப்பணி

அரசிகள் பலர் திருப்பதிப் பெருமானுக்குப் பணி செய்துள்ளனர். நந்தா விளக்கு எரிக்கவும், ஆலய வழி பாடு நடத்தவும், கொடித்திருநாள் நடத்தவும் நிவந்தம் விட்டுள்ளனர். காடவப் பெருந்தேவி என்பவள், பெரு மாள் அடிகளுக்குக் கர்மார்ச்சை கொண்டருளித் திரு விளங்கோயில் எழுந்தருளிவைத்துள்ளார். பராந்தகன் மனைவி, வீரநரசிம்ம யாதவராயருடைய மனைவி ஆகி யோர் திருப்பணிகள் பல செய்துள்ளனர் (18). திருவாய் மொழி பாராயணம் (15), குலசேகர ஆழ்வாரின் பிர திஷ்டை (36), உடையவர் எம்பெருமானுர் கோயிலுக்குக் கர்த்தராக ஒருஜீயர் இருந்தமை, அங்குத் திருநட்சத்திரம் சாத்துமாலை நடக்க ஏற்பாடு செய்யப்பட்டமை (63), ஆழ்வாருடைய திருநக்ஷத்திரங்களைக் கொண்டாடுவது (68), சடகோபஜீயருக்கு மடம் கட்ட இடம் கொடுத்தது (83) போன்ற செய்திகள் இக் கல்வெட்டுத் தொகுப்பில் காணப்படுகின்றன. இராமானுஜ கூடத்துக்குக் கர்த்த ராகக் கந்தாடை இராமானுஜர் என்பவர் சொல்லப் படுகிருர்.

திருவரங்கம்கோயில் கல்வெட்டுக்கள்

ஸ்ரீரங்கம் கோயிலில் நானூற்றுககு மேற்பட்ட கல் வெட்டுக்கள் உள்ளன. சோழர், பாண்டியர், ஒரிஸா தேசத்தவர்கள், விஜயநகர மன்னர்கள், போசனர், தஞ்சை, மதுரை நாயக்கர்கள், கர்நாடக நவாபுகள் ஆகி யோர் காலத்தைச் சார்ந்தனவே இக்கல்வெட்டுக்கள் யாவும் என அறிகிருேம்.

திருமலைக்கோயில் பாதுகாப்பு

முஸ்லீம்களுடைய ஆக்கிரமிப்புக் காலத்தில் (கி. பி. 1781—90) ஆயிரம் இராசபுத்திரர்கள் ஸ்ரீரங்கம் கோயிலைக் காத்தனர் என அறிகிருேம். இருதடவைகள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய ஹைதர் அலியும்,

திப்புசுல்தானும் ஸ்ரீரங்கம் கோயிலை ஆக்கிரமித்திருந்தார்கள் எனத் தெரிகிறது. கி. பி. 1801ல் கர்நாடக நவாபு விடமிருந்து ஜான்வாலஸ் என்பவர் நிர்வாகத்தை ஏற்றார் பிறகு 1841ல் கோயில் நிர்வாகம் தலத்தாரிடம் கொடுக்கப்பட்டது.

குடந்தை சார்ங்கபாணிஸ்வாமி கோயில்

கும்பகோணம் சார்ங்கபாணிஸ்வாமி கோயிலும் திப்புசுல்தான் காலத்தில் சிலகாலம் ஆக்கிரமிப்பில் இருந்ததாக அறிகிறோம். இக்கோயில் மூன்றாம் இராசராசன் (கி. பி. 1222), விருபண்ண உடையார் (கி. பி. 1385), பூபதி உடையார் (கி. பி. 1403), லக்கண்ணன் (கி. பி. 1440), தனநாயகன் பெத்தரிப்பா (கி.பி. 1444), கிருஷ்ணதேவராயர் (கி.பி 1513), சதாசிவராயர் (கி. பி. 1553), ரகுநாதநாயக்கர் (கி.பி. 1634) இவர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கி.பி. 1834ல் ஆங்கில அரசின் ஆட்சி தொடங்குகிறது.

திருவரங்கக்கோயில்

கல்வெட்டுச் செய்திகள் பிற

ஸ்ரீரங்கத்தில் பராந்தகன் காலக் கல்வெட்டுத் 'திருவரங்கத்துச் சபை' பற்றிக் குறிப்பிடுகிறது.

குலோத்துங்கன் I திருப்பள்ளி யெழுச்சி பாடவும், திருவாய்மொழி ஓதவும் ஏற்பாடு செய்துள்ளான். (61 of 1892). திருவானைக்காவுக்கும் திருவரங்கத்துக்கும் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட நிலத்தகராறு தீர்க்கப்பட்டது.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1216-38) ஆட்சியில் 9-வது ஆண்டில், ஒரியா தேசத்தவரிடமிருந்து திருவரங்க ஆலயத்தை விடுவித்ததாக அறிகிறோம்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி 1250-60), நரசிம்மனுக்கும் விஷ்வக்ஸேனருக்கும் திருவரங்கத்தில் தனிக்கோயில் கட்டியுள்ளான்.

போசளமன்னன் இராமநாதன் மூன்றும் பிராகாரத்தில் ஒரு சாலையைக் கட்டியுள்ளான். அச்சாலையைப் பாதுகாக்கும் பொறுப்பு கருடவாகன பண்டிதன் என்பானிடம் ஒப்படைக்கப்பட்டது. (80 of 1936).

இரவிவர்ம குலசேகரன், கலியுகராம சதுர்வேதி மங்கலத்தையும், சடாவர்மன் சுந்தரபாண்டியன் II (கி. பி. 1303) கோதண்டராம சதுர்வேதிமங்கலத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

கோயில் நிர்வாகம் சரிவர நடக்கவில்லை என்ற தாபத்தால் சில ஏகாங்கிகளும் ஜீயர்களும் கோபுரத்திலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்துகொண்டதாகவும் அறிகிறோம். [804 of 1936]

கும்பகோணத்தில் கி. பி. 1377ல் ஹரிஹரன், 'குலோத்துங்க சோழநல்லூர்க் கட்டளை' என்று சிறுகாலை காலசந்தி ஆகியவற்றிற்கு ஆராவமுதாழ்வானுக்கு ஏற்பாடு செய்துள்ளான்.

திருவரங்க ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் காலத்துக்கு ஏற்பக் கோயில் சபையாரிடமோ அரசப் பிரதிநிதிகளிடமோ இருந்து வந்துள்ளது. அவரவர்கள் காலத்துக்கு ஏற்பத் திறம்பட நிர்வாகம் செய்துவந்தனர். ஆலயம் அரசருடைய ஆளுகைக்கு உட்படாத பொது சொத்தாகவே இருந்து வந்தது. மாலிக்காபூர் காலத்திலும் திப்புசுல்தான் காலத்திலும் ஏற்பட்ட குழப்பம் காரணமாக ஆலய நிர்வாக வரலாறு தொடர்பாகக் கிடைக்கவில்லை.

இராமாநுஜரை இணைத்தலாகாது

ஸ்ரீரங்கம் இராமாஜர் கூறிய ஏற்பாட்டின்படி நிர்வாகம் செய்யப்பட்டு வருவதாகக் கொள்ளுவதற்குக் கல்வெட்டுச் சான்று எதுவும் இல்லை. இராமாநுஜர் காலத்துக்குப் பிறகு திருவரங்கத்தில் பலமாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. பல புதிய உற்சவங்கள் தொடங்கப் பட்டுள்ளன. புதிய பிம்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. புதிய மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. அவ்வவ்வரசன் காலத்தில் சிலருக்கு வழங்கப்பட்ட சலுகைகள், அரசு மாறியபின் தாமே வழக்கற்றுப் போய்விட்டன. அரசு மாறினும் ஆகமங்களோடு இணைந்த செய்திகளே என்றும் மாருமல் நிலைத்து நிற்பன. திருவரங்கக் கோயிலோடு இராமானுஜரை இணைப்பதற்கு வரலாறு சிறிதும் இடம் தரவில்லை. இராமாநுஜரின் பெருமையைத் திருவரங்க ஆலய நிர்வாகத்தோடு இணைத்துப் பேசுவது கற்பனையின் விசித்திரமேயாம்.

சோழர்தம் மதிற்பணி

இன்று திருவரங்கம் ஏழு பிரகாரங்களை உடையதாக விளங்குகிறது. சித்திரைவீதி கலியுகராமன் திருவீதி எனவும், உத்திரவீதி திருவிக்கிரமன் திருவீதி எனவும், அகளங்கண் திருவீதி எனவும் பெயரிடப் பட்டுள்ளன. முதல் குலோத்துங்கன் மகன் விக்கிரமனே அகளங்கண் எனப்படுவான் ஆதலின், சோழமன்னர்கள் மதில்களைக் கட்டியுள்ளனர் என்பது போதருகிறது.

காலப்போக்கிற் புகுந்தவை

கோயில்களில் பூசை உற்சவம் இவற்றை நடத்த ஆகமங்களே முன்னின்று வழிகாட்டுகின்றன. இவை சம்பிரதாயத்துக்கு அப்பாற்பட்டவை. பூசை நைவேத்தியம் ஆனபிறகு இன்னுருக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று ஆகமம் ஆணையிட்டிருப்பதாகத் தெரியவில்லை. கோஷ்டி என்ற கொள்கை மிகச் சமீப காலத்திலேயே

ஏற்பட்டதாகும். பழங்காலச் சான்றுகள் நிர்வாகத்தைப் பற்றியே உள்ளன. 'விட்டவன் விழுக்காடு' என்று சிலருக்குக் கொடுக்கச் சொல்வதெல்லாம் காலப்போக்கில் மாறவேண்டியனவே. ஆகமப்பிரமாணமான செய்திகளே என்றும் மாருமல் இருக்கத்தக்கனவாம்.

இனி, பாரதநாட்டின் மற்ற பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், விக்கிரகங்கள், நாணயங்கள் இவற்றின் உதவியைக் கொண்டு வைணவம் வடபாரதத்தில் எந்த எந்தக் காலங்களில் எப்படி எப்படி இருந்தது என்பதனைக் கவனிப்போம்.

பாகவத சம்பிரதாயம்

தொடக்கக் காலத்தில் பாஞ்சராத்திர வழிபாடு விருஷ்ணிகளிடம் மட்டும் காணப்பட்டாலும், அது நாராயண வழிபாடு விஷ்ணு வழிபாடு இவற்றுடன் சேர்ந்தபிறகு எல்லோருடைய மதமாகவும் ஆகிவிட்டது. வேதத்தையே வற்புறுத்துபவர்கள் பாகவத மரபுக்கு முழுதும் இடம் கொடுத்து வாசுதேவ நாராயண வழிபாட்டை மேற்கொண்டு பாகவத சம்பிரதாயம் என்ற பெயரால் வைணவத்தைப் பின்பற்றத் தொடங்கினர்.

கி. மு. முதல் நூற்றுண்டிலேயே அரசர்கள் பாகவத சம்பிரதாயத்தைச் சேர்ந்தவராகி விட்டனர்.

கௌதமீபுத்ர சாதகர்நி என்ற அரசன், தன்னைப் பாகவதனுகச் சொல்லிக்கொண்டு, தன்னுடைய ஆட்சியின் 12வது ஆண்டில் கருடக்கம்பம் நாட்டியுள்ளான். [A. E 1 A. R. 19 3-19 4. Page 190]

மற்ருெரு பாகவத மன்னன், முதல் நூற்றுண்டில், நாராயண வாடிகையில், சங்கர்ஷணன் வாசுதேவன் இவர்களுடைய கோயிலுக்குப் பிராகாரம் கட்டியுள்ளான். இம்மன்னன் பராசரகோத்திரத்தைச் சேர்ந்த பெண்ணின் மகன். இவன் அசுவமேத யாகம் செய்து 'ஸர்வதாதா' என வழங்கப்பட்டதாகவும் அறிகிருேம். [Sarkar Sale. In. P. 91-2]

வெளிநாட்டவர்தம் ஈடுபாடு

கிறிஸ்து அப்தத்தை ஒட்டிப் பாரதத்திற்கு வந்த வெளிநாட்டவர் சைவ வைணவங்களில் ஈடுபட்டுப் பின் பற்றத் தொடங்கினர்; கிருஷ்ணனைத் தங்கள் 'ஹிராக்ஸ' என்ற தெய்வத்துடனும், சங்கர்ஷணனைத் தங்களுடைய 'டயோனஸஸ்' என்ற தெய்வத்துடனும் ஒன்றுபடுத்திக் கொண்டுவிட்டனர்.

பெஸ் நகர்க் கல்வெட்டு, கி. பி. முதல் நூற்றுண்டில் கிரேக்கநாட்டுத் தூதனுன 'ஹெலியோட்ரஸ்' என்பவன் தன்னைப் பாகவதனுகச் சொல்லிக்கொண்டு பகவான் வாசுதேவனுக்குக் கருடக்கொடி எடுத்த செய்தியை எடுத்துக்கூறுகிறது, [A R. A. S. 1909. P. 1053-59]

கி. பி. முதல் நூற்றுண்டைச்சார்ந்த 'மகாக்ஷத்ரபன் ரஜ்ஜுவுலாவின்' என்ற மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் 'தோஷா' என்ற வெளிநாட்டுப் பெண், வாசுதேவன்—சங்கர்ஷணன்—பிரத்யும்நன்—அநிருத்தன் — சாம்பன் என்ற ஐந்து தெய்வங்களுக்கும் பஞ்சவீரர் கோயில் கட்டியுள்ளான் என அறிகிறோம். [E I. 24, No. 27. 1]

மகாக்ஷத்ரபன் ஷோடாஸன் என்பவன், தன் ஆட்சி அகன்று விரிவடைவதற்காகத் தெய்வத் திருவருளை வேண்டி, வாசுதேவன் ஆலயத்திற்குப் பெரிய வாயில் ஒன்று கட்டியதாகக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. [E I. 24 No 27-7]

குஷான மன்னர்கள் பௌத்தர்களாகவும் சமணர்களாகவும் இருந்தபோதிலும், அவர்களிடையே வாசுதேவன் முதலிய வைணவப் பெயர்களும் காணப் படுகின்றன.

ஹுவிஷ்கர்களுடைய தாரசுகளில் ஒரு தெய்வ வடிவம் ஒரு கையில் சக்கரத்தையும் மற்றொரு கையில்

ஊர்த்துவ லிங்கத்தையும் வைத்துக் கொண்டிருப்பதாகக் காணப்படும் காட்சி, பிற்கால ஹரிஹர வழிபாட்டுக்கு அடிகோலியாக உள்ளது.

[பானர்ஜி D. H. I. P. 123—124]

தோசாரியன் எழுத்திலுள்ள கல்வெட்டு ஒன்று, நான்கு கைகளில் முன் இரு கைகளும் கூப்பியவாறு நிற்கும் தெய்வ உருவங்களை 'மிஹிரன்' 'விஷ்ணு' 'சிவன்' என்று குறிப்பிடுகிறது. [பானர்ஜி D. M. I. P. 124]

புற மதத்தவரான சாகர்களின் கொடையைத் தெரி விக்கும் நாசிக் கல்வெட்டில் காணப்படும் பெயர்களில் விஷ்ணுவின் பெயர்களும் சேர்ந்துள்ளன.

ஆபீர அரசன் ஈசுவரசேனன் சாகர்களைச் சேர்ந்த 'விஷ்ணுதத்தா' என்ற பெண்ணினுடைய கொடையைப் பதிவு செய்துள்ளான்.

சௌகான மரபைச் சேர்ந்த சிற்றரசனுன மகாராஜா விஷ்ணுதாஸனின் புதல்வன் உதயகிரியில் விஷ்ணு பிம்பத்தை ஏற்படுத்தியுள்ளான். (fleet c. II, III, No.37) இவர்கள் யாவரும் வெளிநாட்டவர்களே.

பாரதநாட்டு மன்னர்கள்தம் ஈடுபாடு

ஸ்கந்தகுப்தனின் ஜுநாகர் கல்வெட்டு, 'சக்ரபாலி தன்' என்ற பெயரைக் குறிப்பிடுகிறது. (Sarkar Sec. In. P. 308)

குஷான மன்னர்கள், விருஷினிகளைப் போலவே தங்கள் முன்னேருக்கு படிவங்கள் அமைத்துக் கோயில் கட்டி அவற்றிற்குத் தேவகுலம் என்று பெயரிட்டுள்ளனர். [A. S. I. A. R. 191 , 12]

பாஞ்சாலக் காசுகளிடை [கி.மு.30 முதல் கி.பி. 400] வரை அக்நிமித்திரன் காசுகளில் அக்நி உருவமும், விஷ்ணுமித்ரன் காசுகளில் விஷ்ணு உருவமும் காணப் படுகின்றன. [Sarkar A.I.U.P. 727]

குப்தர்களுடைய காசுகளில் வில்லும் கையுமாக விஷ்ணுவின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. [ஆலன். குப்தர்களின் காசுகள் பக். 122]

குப்த மன்னர்கள், தங்களை விஷ்ணுவின் அம்சமாகக் கூறிக்கொண்டு, தங்கள் காசுகளில் விஷ்ணுசகஸ்ரநாமங் களில் ஒன்றான '*நிகரிலாவீரன்*' என்ற பொருளுடைய வடசொற்றொடரையும் செதுக்கியுள்ளனர். இதனை ஸ்கந்தகுப்தன் காசுகளில் காணலாம். [Saikal Sel. In. P. 313]

பீஹாரில் காணப்படும் ஸ்கந்தகுப்தனின் கற்கம்பத் திலும் '*நிகரிலா வீரன்*' என்ற பெயர் காணப்படுகிறது. *[ஷை P. 318]*

அரசனைத் திருமாலோடு ஒப்பிட்டுக் கூறுதலாகிய தமிழ்நாட்டுப் பழக்கமான 'பூவைநிலை' என்பது வட நாட்டிலும் காணப்பட்டதால், ஈரான் என்ற இடத்தில் காணப்படும் விஷ்ணுபிம்பங்கள் சமுத்திரகுப்தன்போலக் காணப்படுகின்றன. உதயகிரியில் காணப்படும் விஷ்ணு வின் வராக பிம்பமும் சந்திரகுப்தன் துருவசேனையைத் தூதுவிட்டதுபோலக் காணப்படுகிறது. [ஜயஸ்வால் — A. B. O. R. S. 18 Page 33]

சகஸ்ரநாமம் 'தெய்வங்களுக்குள் தெய்வம்' என்று விஷ்ணுவுக்குக் கூறிய அடைமொழியைக் குமாரகுப்தன் தன் பெயருக்கு முன் சேர்த்துக்கொண்டுள்ளான்.

[Saker Sel. In 280]

குமாரகுப்தனின் காசுகளில் 'பிரத்யக்ஷமான நரசிம் மன் போல' என்று காணப்படும் அடைமொழி நரசிம்ம அவதாரத்தை நினைப்பூட்டுகிறது. (ஆலன் பக். 72)

சிற்றரசர்களான யௌதேயர்கள், ஔதும்பர்கள், குணிந்தர்கள், காட்ரவர்கள், மாலவர்கள், உத்தேஹிகர் கள் ஆகியவர் காசுகளில் காத்தியாயனி உருவமும், சிவ உருவமும், இடப உருவமும், சிவாலய உருவமும் செதுக்கப்பட்டிருப்பதால் இவர்கள் சிவ வழிபாட்டினர் என்பது தேற்றம்

விஷ்ணுவை ஸ்ரீ பூமிநாயகன் என்று சொல்லுவது போலக் குப்தர்களுக்குப் பின்வந்த சளுக்கியர்கள் தங்களை 'ஸ்ரீ பிருதிவி வல்லப' என்று சொல்லிக்கொள் கிறார்கள்.

குர்ஜார பிரதிகாரஅரசன் மிகிரஅரசன் மிகிரபோஜன் தன்னுடைய பெயரோடு 'ஆதிவராகன்' என்ற அடை மொழியைச் சேர்த்துக் கொள்கிறான். அவனுடைய காசுகளின் ஒரு பக்கத்தில் சங்கு சக்கரங்களுடன் கூடிய வராக மூர்த்தி வடிவமும், 'ஸ்ரீமத் ஆதிவராக' என்ற எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

[முன்ஷி T. T. G. 123]

சம்பாவில் ஆண்ட பிற்கால மன்னர்களுள் ஒருவ னான பூதிவர்மன் படாகங்காக் கல்வெட்டு அவனைப் 'பரமதைவதன்' என்று குறிப்பிடுகிறது.

[E. I. 30. No. 12. P. 677]

அந்தவரம் செப்பேடு அரசனை 'அநந்த சக்தி' என்று குறிப்பிடுகிறது. [E I. 28. No. 3]

சமுத்திரகுப்தன் காசுகளில் கருடனின் அடை யாளம் காணப்படுகிறது. அவனுக்குப் பின் வந்த சந்திர குப்தன் II, குமார குப்தன், ஸ்கந்த குப்தன் ஆகியோர் தங்களைப் 'பரமபாகவதன்' என்று கூறிக்கொள்கின் றனர். [Sarkar Sec. In. 275]

வராகமிகிரர் பாகவதர்கள் தாம் விஷ்ணுமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று குறிப்பிடுகிறார். [பிருகத் சம்ஹிதை - 59—19]

மைத்ரா குடும்பத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்களில் 'பரம பாகவதா' என்ற சொல் காணப்படுகிறது. மகாராஜா துருவசேனன் தன்னைப் 'பரமபாகவதன்' என்று குறிப்பிடுகிறான். மகாராஜா தாராபட்டன் என்பவன் தன்னை 'பரம ஆதித்ய பக்தன்' என்று கூறிக்கொள்கிறான்.

மகாராஜா சௌரி என்பவன் தேவிக்குக் கோயில் கட்டிக் குளம் வெட்டுவித்த செய்தியைக் குறிப்பிடும் கல்வெட்டு, விஷ்ணு வணக்கத்தோடு தொடங்குகிறது. (E. I. 30—22. 1, 2)

மௌகாரி அரசன் அநந்தவர்மன், கி. பி. ஆறுவது நூற்றுண்டில் கிருஷ்ணன், சிவன், துர்க்கை இவர்களுக்குக் கோயில் எடுப்பித்துள்ளான். (E. I. P. 187)

அனிதா என்கிற இடத்தில் காணப்படும் செப்பு அச்சு மௌகாரி ஈசுவர வர்மனின் பாட்டன் கி.பி. 554ல் விஷ்ணுவோடு ஒப்பிட்டுப் பேசப்படுவதைக குறிக்கிறது. (c. i. i.—III—No. 47)

ஸங்ஹோபன் என்ற பாகவத மன்னன் வர்ண தர்மத்தை நிறுவியுள்ளான். (c. ii—III—No. 52, 39)

பெஷாவர் கண்காட்சியில் காணப்படும் கல்வெட்டு பிராம்மண வாசுதேவனைக் குறிப்பிடுகிறது. (c.ii. No. 81)

கி.பி. 424ல் தோன்றிய கல்வெட்டொன்று, விஷ்ணு பாத்தில் மூன்று வைசிய சகோதரர்கள் கோயில் கட்டியிருப்பதைக் குறிப்பிடுகிறது. (பண்டர்கார் M. A. S. I. No. 4. P. 120—121)

நிபுபாலன் என்ற செல்வன் 'கோசுமுகேசுவரர்' 'சுவேத வராக சுவாமி' இவர்களுக்குக் கோயில் கட்டியுள்ளான். (Sankar Sale In. P. 32)

தங்களுடைய தந்தை சிவாநந்தன் என்பவனால் கட்டப்பட்ட கோவிந்தசாமி கோயிலுக்குக் கோயிலா, பாஸ்கரன்என்றஇரண்டுஉழவர்கள் நிலம் விட்டுள்ளனர். (Sarkar Sale. In. P. 327)

தச்சு வேலை செய்பவர்களும் 'ஹரி' 'கிருஷ்ண தத்தா' என்ற பெயர் உடையவராகக் காணப்படுகின்றனர். (புரோச்—A.S.I.A.R. 1903-4)

வாயுபுராணம், சாம்பவதி என்ற நகரில் மூவருணத் தாரும் விஷ்ணுவை வழிபட்டு வந்ததாகக் கூறுகிறது (வாயு புராணம் 99—105)

ஸுல்தான்பூர்ச் செப்பேட்டில் காணப்படும் 90 பெயர்களில் 22 வைஷ்ணவப் பெயர்களாய் உள்ளன.

வாசுதேவ — கிருஷ்ண வழிபாடு முதன் முதல் யர்தவர்களிடமே உண்டாயிற்று என்று கியர்ஸர் கூறுகிறார். (I.A. 1908. P. 252)

சந்தா என்பவரும் இதைப் பின்பற்றுகிறார்கள் என்று கூறுகிறார் ராயசௌத்ரி. (E.H.V.S.) இவர் யமுனை நதிச் சமவெளியில் தான் இவ்வழிபாடு முதல் முதல் ஏற்பட்டது என்ற கருத்தினர்.

சூரசேனர் என்ற இனத்தாரிடம் வாசுதேவ வழிபாடு இருப்பதை மெகஸ்தனிஸ் குறிப்பிடுகிறார்.

இவற்றால், கி மு.4ஆம் நூற்றாண்டிலேயே மதுரைக்கு அருகில் வாசுதேவ வழிபாடு பிரபலமாயினமை தேற்றம்

சுங்க அரசர்கள் காலத்தில் பாகவத சம்பிரதாயம் பெருவழக்கில் இருந்தமை, ஐந்தாவது சுங்க அரசன் கௌதமீபுத்ரன் காலத்து வந்த கிரேக்க தூதனான ஹெலிடோடஸ் என்ற வெளிநாட்டவன், பலகாலம் தக்ஷசீலத்தில் தங்கித் தன்னைப் பாகவதன் என்று கூறிக் கொள்வதால் புலப்படும். (பண்டர்கார் A. S. I. A. R. 1913—14)

விள்ளக்கலில் கிடைத்த பனைமரம், மீன் அடையா ளங்கள், அங்குச் சங்கர்ஷண பிரத்யும்னரின் வழிபாடு இருந்ததைத் தெரிவிக்கின்றன. இங்கு லக்ஷ்மி சிலை ஒன்றும் கிடைத்துள்ளது.

விதிசா அரசனுன ரேவதி என்பான் உருவம் ஆணும் பெண்ணுமாகக் கையில் கருடக்கொடியுடன் குதிரை யேறிச் செல்வது போலக் காணப்படுகிறது.

(A.S.I.A.R. 1924-25 P. 128)

குவாலியருக்கு அருகில் கிடைத்துள்ள பனைமரம் போன்ற அடையாளம் அங்கு கி. மு. முதல்நூற்றுண்டில் சங்கர்ஷண வழிபாடு இருந்ததைக் குறிப்பிடுகிறது.

மத்தியப் பிரதேசத்தின் பிலாஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த புரஹிகார் என்ற இடத்தில், பிராமி எழுத்தோடு கூடிய, நான்கு கைகளை உடைய, கி. மு. முதல் நூற்றுண் டைச் சேர்ந்த சிலை ஒன்று கிடைத்துள்ளது. இஃது ஆலயத்தின் முக்கிய தேவதையோ, பரிவார தேவதையோ என்று முடிவு செய்ய இயலாவிடினும், சக்கர அடையாளத்தைக் கொண்டு இது விஷ்ணு சிலையே என்பது உறுதியாகிறது.

ராஜஸ்தானில் காணப்படும் கோஷரண்டி கல் வெட்டு வாயிலாக, அங்கு வாசுதேவ சங்கர்ஷண வழி பாடு இருந்தமை புலனுகிறது. நாராயண வாடிகா என்ற பெயர்மூலம் அங்கு நாராயண வழிபாடு இருந்தமையும் புலனுகிறது.

முதல் நூற்றுண்டைச் சேர்ந்த நாநாகாட் குகைக் கல்வெட்டுத் தொடக்கத்தில் சங்கர்ஷண வாசுதேவ வழிபாட்டைக் காட்டும் சுலோகம் காணப்படுகிறது.

(Sarkar Sal. In. No. 73)

மதுரையில் கி. மு. முதல் நூற்ருண்டைச் சேர்ந்த பழைய மக்களின் காசுகளில் விஷ்ணுமித்ரன், ராமதத்தன், சேஷதத்தன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. கி. பி. இரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த ஒரு சேஷ சங்கர்ஷண உருவமும் கிடைத்துள்ளது.

பாஞ்சால விஷ்ணுமித்ரன் காசுகளில் விஷ்ணு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. (ஆலன் B.M.C.C.A. i)

சாக—குஷானர் காலத்துச் சிலேகள் அவர்கள் காலத்தில் வைணவச் சிலேகள் எவ்வாறு அமைக்கப்பட்டன என்பதைத் தெரிவிக்கின்றன.

கி. பி. முதல் நூற்ருண்டைச் சேர்ந்த ‘ சோதாஸன் ’ என்பவன் கி. பி. 17ல் வழங்கிய கல்வெட்டு, விருஷ்ணி வம்சத்தைச் சார்ந்த பாகவத சம்பிரதாய முக்கிய தேவதைகளாக பஞ்சவீரருக்கு கோயில் கட்டிய செய்தியை அறிவிக்கிறது. (E. I. 24 No. 27)

வஸு என்பவன் வாசுதேனுடைய பிம்பத்தையும் தோரணம் முதலியவைகளையும் உண்டாக்கிய செய்தி மற்ருெரு கல்வெட்டால் புலனுகிறது. (A. B. R. S. 34 of 1955 P. 45)

குஷான மன்னர் காலத்தைச் சேர்ந்த கற்சிலேகளாக வடமதுரைக் கருகில் கிடைத்துள்ள பல சிலேகளிடை வசுதேவர் கிருஷ்ணனைக் குழந்தையாக எடுத்துக் கொண்டு யமுனையைத் தாண்டியது, கண்ணன் கோவர்த்தனத்தைத் குடையாகப் பிடித்தது போன்ற சிலேகளும் உள்ளன.

வடமதுரை கண்காட்சிச் சாலேயில் உள்ள சிலேகளில் 14 சிலேகள் குஷானர் காலத்து விஷ்ணு சிலேகள் என்று வி. எஸ். அகர்வால் முடிவு செய்துள்ளார்.

எட்டுக் கைகளையுடைய விஷ்ணு பிம்பம் ஸான் குகையில் காணப்படுவதாக வாஜ்பாய் குறிப்பிடுகிருர்.

வடமதுரையில் உள்ள விஷ்ணு கோயிலில் சேஷ கிருஷ்ணனின் உருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

விஷ்ணுவின் பிரீதிக்காக வேதத்தில் கூறப்பட்டுள்ள திரிராத்ரம் என்ற பெயருடைய யாகம் செய்யப்பட்டதாக ராஜஸ்தானத்தைச் சேர்ந்த பர்னலா என்ற ஊரில் காணப்படும் யூபஸ்தம்பத்தில் எழுதப்பட்டுள்ளது, (E. 3. 26. 12 B) இது வைதிக கர்மாவை அடிப்படையாகக் கொண்ட வைணவமாகத் தோன்றுகிறது.

உதயபூர் அண்மையில் உள்ள நந்தஸா என்ற இடத்தில் காணப்படும் யூபஸ்தம்பத்தில், பிர்மா, இந்திரன், பிரஜாபதி, விஷ்ணு இவர்களுக்குக் கோயில் கட்டிப் பிறகு யாகம் செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸாதவாகனர் காலத்துக்கல்வெட்டுக்களில், விஷ்ணு பாலித, விஷ்ணுபால, விஷ்ணுதத்த, விஷ்ணுஸ்ரீ, விஷ்ணு தண்டி முதலிய பெயர்கள் காணப்படுகின்றன.

ஹரியானாவில் ஷிஸார் மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் இடத்தில் அமைந்த ஓர் கல்வெட்டு, பகவத் பக்தனான ஆசார்ய சோமநாதன் என்பவன் பகவானுக்கு ஒரு கோயில்கட்டி இரண்டு குளங்கள் வெட்டிய செய்தியைத் தெரிவிக்கிறது. (E. I. 3—67)

லூடியானா மாவட்டத்தில் காணப்படும் சில பொம்மைகள் சங்கரநாராயண, விஷ்ணுவாசுதேவ என்ற பெயர்களோடு காணப்படுகின்றன.

கந்த குப்தன் உத்தரப்பிரதேசத்தில் விடாரி என்ற இடத்தில் சாரங்கீ என்ற சிலையைச் செய்துவைத்ததாக ஒரு கருங்கற் கம்பக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

அலகபாத் மாவட்டத்தில் கத்வா என்ற இடத்தில் உள்ள தசாவதார ஆலயத்தின் நடைபாதையில் உள்ள கல்வெட்டு, அநந்தசாயிக்குக் கோயில் கட்டப்பட்ட செய்

தியை வெளியிடுகிறது. இது கி. பி. 468ல் தோன்றியது. அநந்தசாயி என்பது சங்கர்ஷணனையும், சித்ரகூட ஸ்வாமி என்பது இராமனையும் குறிப்பனவாம்.

அலகபாத் மாவட்டத்தில் காணப்படும் அச்சுக்களில் விஷ்ணுவின் சக்கரமும், 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்ற எழுத்துக்களும் காணப்படுகின்றன.'

பிடாலில் கிடைத்துள்ள அச்சுக்களில் பெரும்பான்மைய சைவத்தையும் வைணவத்தையும் சேர்ந்தவை. இவற்றில் நரசிம்மாவதாரம், வாமனாவதாரம், திருவிக்கிரமாவதாரம், காளிங்க நர்த்தனகிருஷ்ணன் சிலைகள் காணப்படுகின்றன.

உத்தரப்பிரதேசம் பஜ்னாவில் காணப்படும் 4 கைகளை உடைய பகவானின் விக்கிரகம் குப்தர் காலத்தது.

அலிகார், இராமன்கோட் முதலிய இடங்களிலும் விஷ்ணு விக்கிரகங்கள் இருந்தன என்று அறிகிறோம். சாரநாத் கண்காட்சிச் சாலையில் கோவர்த்தனதாரி சிலை காணப்படுகிறது. நைனிடாலில் திருவிக்கிரமாவதாரச் சிலை இருக்கிறது. வைணவத்தில் இப்பொழுது கலந்து உள்ள லக்ஷ்மி உருவம் கஜலக்ஷ்மி சிலையாகக் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. குப்தர் காலத்திய நாலு தலையுடைய வைகுந்த சதுர்மூர்த்தி உருவமும் கிடைத்துள்ளது. இவ்விக்கிரகத்தில் கொப்பூழிலிருந்து தோன்றும் தாமரைப்பூவில் பிரமா காணப்படுகிறார். பக்கத்தில் மதுகைடபர் சிலைகள் உள்ளது.

ஜான்ஸியில் கி.பி. ஆறும் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்ட தசாவதார ஆலயம் பஞ்சாயதன சம்பிரதாயத்தைச் சேர்ந்தது. இக்கோயிலில் ஸ்ரீதேவி பூதேவி சமேத சேஷசாயி நாராயணன் பிம்பம் செதுக்கப்பட்டுள்ளது. இங்குக் கஜேந்திரமோக்ஷமும் செதுக்கப்பட்டிருக்கிறது.

ஜோத்பூருக்கு அருகில் கி. பி. 4ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த கோயில் வாயிற்படியில் கிருஷ்ணுவதாரத்தின் ஐந்து லீலைகள் செதுக்கப்பட்டுள்ளன. (பண்டர்கார் A.S. I. A. R. 1405—6—136) இவ்வாயிற்படி ஜோத்பூர் கண்காட்சிச்சாலையில் இருக்கிறது.

பிகானீரில் முதல் நூற்றுண்டைச்சேர்ந்த கோவர்த்தன உத்தாரண கல்வெட்டுச் சித்திரம் ரங்கமஹாலில் காணப்படுகிறது.

மௌகரீ அரசன் அநந்தவர்மன் ப்ரவரகிரிக்குகையில் வாசுதேவ கிருஷ்ணனுக்கு ஆலயம் எடுப்பித்துள்ளான்.

பஸரா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டமண் அச்சுக்களில் கஜலக்ஷ்மி சின்னமும், ஸ்ரீ விஷ்ணுபாத நாராயணஸ்வாமி—ஓம் நமோ பாகவதே வாசுதேவாய—சக்ரதாஸ — ஓம் நமோ நாராயணய — கிருஷ்ணதத்த, கேசவதத்த—ஹரிதாஸ — ஹரிகுப்த — கேசவநாராயண தத்தர் வராகதத்தர் — விஷ்ணுவர்ம — முதலிய சொற்றொடர்களும் காணப்படுகின்றன. பிலோச் கண்டுபிடித்துள்ள 139 அச்சுக்களில் 60 அச்சுக்கள் வைணவம் பற்றியவை.

இனி, வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் வைணவம் எப்படியிருந்தது என்பதுபற்றி நோக்குவோம்.

வங்காளத்தைச் சேர்ந்த பங்கூரு மாவட்டத்து ஸுஸுனியா மலையில் மகாராஜா சந்திரவர்மா கி. பி. 4ஆம் நூற்றுண்டில் ஒரு சக்கரத்தைச் செதுக்கியுள்ளான்.

பயிகிராம் செப்பேடு, கி. பி. 448ல் கோவிந்தசுவாமி ஆலயத்திற்கு நிலம் வாங்கி விடப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

விஷ்ணு பத்ர, ராமக, நேமிபால, ஸ்ரீபத்ர முதலிய பெயர்கள் இங்கு வைணவம் பெற்றிருந்த செல்வாக்கை விளக்குகின்றன.

தாமோதர்பூர் செப்பேடு (5ஆம் நூற்றுண்டு) அமிர்ததேவன் என்பவன் சுவேதவராக சுவாமிக்கும், சத்திர நிர்வாகத்திற்கும் நிலம் விடுத்த செய்தியை வெளியிடுகிறது.

கிழக்கு வங்காளத்துத் திப்போரா மாவட்டத்தில் பிரத்யும்நேசுவரன் ஆலயம் இருந்த செய்தியை ஆறும் நூற்றுண்டைச் சேர்ந்த செப்பேடு வெளியிடுகிறது. பிரத்யும்நன் சிவனும் விஷ்ணுவும் கலந்த உருவாகும்.

மகாராஜா விஜசேனனின் தியோபாராக் கல்வெட்டில் பிரத்யும்நேசுவரன் என்ற பெயர் காணப்படுகிறது.

K. N. தீக்ஷித் என்பவருடைய கண்டுபிடிப்புகளில் கிருஷ்ணலீலை பற்றிய பல பிம்பங்கள் கிடைத்துள்ளன.

பர்த்துவான் மாவட்டத்தைச் சேர்ந்த சைதான்பூர் என்ற இடத்தில் விஷ்ணு உருவமுடைய சிற்பம் கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாமில் கௌஹாத்திக்கு அண்மையில் நீலாசல மலையில் பலபத்ரசுவாமிக்கு மகாராஜா வீரேந்திர வர்மன் ஒரு கோயில் ஏற்படுத்தியுள்ளான். (E. I. 31. No. 10) இவன் குப்தர்களின் சிற்றரசருள் ஒருவன்; நாக வமிசத்தைச் சேர்த்தவன்.

ஐந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த தாமோதர்பூர் செப்பேடு, நேபாளத்தில் கோநமுக சுவாமி சுவேத வராக சுவாமி இவர்களுக்கு ஆலயம் இருந்த செய்தியை வெளியிடுகிறது.

காட்மாண்டுவைச் சேர்ந்த நாராயணசுவாமி ஆலயத்தோடு தொடர்புடைய மகாதேவன் என்ற

அரசனுடைய ஏடுகள், அங்கு வைணவம் எப்படிப் பரவி யிருந்தது என்ற செய்தியை வெளியிடுகின்றன. அவற் றில் பகவான் மார்பில் ஸ்ரீ வத்ஸத்தை அடையாளமாகக் கொண்ட ஹரி என்று குறிப்பிடப்படுகிருன்.

இரண்டாம் சந்திரகுப்தனுடைய உதயகிரிக் கல் வெட்டு, 8 கைகள் 12 கைகள் உடைய ஒரு தெய்வத் தைக் குறிப்பிடுகிறது. பழைய குடிமக்கள் தாயை வழி படும் பழக்கம் நிலவிய இப்பகுதியில் வைணமும் 5ஆம் நூற்ருண்டில் கலக்கிறது.

கி. பி. 423ஐச் சேர்ந்த கல்வெட்டு, விச்வவர்மன் என்பவன் அங்கு (உதயகிரிப் பகுதியில்) விஷ்ணுவுக்கு ஒரு கோயிலும், அம்மன்களுக்குக் கோயிலும் கட்டிய செய்தியை வெளியிடுகிறது. (c i. III No. 3) இங்கு விஷ்ணுவுக்கு ஹரிபட முதலிய பெயர்கள் காணப்படு கின்றன.

மத்தியப் பிரதேசத்து ஸௌகார் மாவட்டத்தைச் சேர்ந்த இரான் என்ற இடத்தில், வராகர் கோயிலின் பக்கத்தில் பெரிய சிலையை உடைய விஷ்ணு கோயிலின் கம்பத்தில் சமுத்திரகுப்தனுடைய கல்வெட்டுக்கள் உள்ளன.

புத்தகுப்தன் காலத்துக் கல்வெட்டு மஹாராஜ மாத்ருவிஷ்ணு என்பவன் திருமாலுக்கு ஒரு கருடகம்பம் நாட்டிய சிறப்பை விளக்குகிறது. இந்த மாத்ரு விஷ்ணு வின் தந்தை ஹரிவிஷ்ணு; அவன் தந்தை வருண விஷ்ணு; அவன் தந்தை பெயர் இந்திர விஷ்ணு. நான்கு தலைமுறையாக வைணவம் தொடர்ந்து வருதலை இச் செய்தி புலப்படுத்துகிறது. (Sarkal Sal. .n. P. 326) இக்கல்வெட்டு, கருடக் கொடியுடைய பகவான் வழிபாட் டோடு தொடங்குகிறது.

இரான் என்ற இடத்துக் கல்வெட்டு (c. ii. 3 No. 36) மாத்ருவிஷ்ணுவின் தம்பி தயைவிஷ்ணு வராகாவதாரம்

பண்ணி உலகத்தைக் காப்பாற்றிய நாராயணனுக்குக் கோயில் கட்டிய செய்தியைக் குறிப்பிடுகிறது. இதற்குச் சிறிது காலத்துக்குமுன் (கி. பி. 410) கோபராசன் என் பவன் பெயரில் ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது.

கி. பி. 404ல் நந்தசாரில் குப்தர் காலத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு விஷ்ணு வழிபாட்டோடு தொடங்குகிறது. இங்கே விஷ்ணு ஆயிரம் தலை உடையவராகவும் நான்கு சமுத்திரங்களையும் படுக்கையாகக் கொண்டவராகவும், வருணிக்கப்படுகிறார். (E.I. 12 No. 35) இங்குப் பகவான் வாசுதேவன் உலகத்தில் இருப்பவன், அளவிட முடியாத வன், பிறக்காதவன், எங்கும் பிறப்பவன் என்பதுபோன்ற அநேக கருத்துக்கள் கல்லில் வெட்டப்பட்டுள்ளன; பகவானுடைய விசுவரூபமும் வருணிக்கப்படுகிறது.

மந்தசாரில் காணப்படும் பந்துவர்மன் காலத்தைச் (கி. பி. 473) சேர்ந்த கல்வெட்டு, கௌஸ்துவத்தை மார்பில் கொண்ட சாரங்கீ என்ற விஷ்ணுவின் உருவைக் குறிக்கிறது. (Sarkar. Sel In. P. 296)

மகாராஜ்ய கௌரி என்பவனைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு, 'ஜிதம்பகவதா' என்று தொடங்கிக் கருட வாகனத்தில் போகிற சக்கரபாணியை வழிபடுகிறது. (Sarkar E. I 33 P. 205)

அதே இடத்தைச் சேர்ந்த கி பி. 532ஆம் ஆண்டுக் கல்வெட்டு, வராகதாசன் என்பவன் ஹரியின் அவதாரம் என்று சொல்லப்படுவதைக் குறிக்கிறது. (Sarkar Sel. In. 389)

குவாலியரைச் சேர்ந்த இசாகாட் என்ற ஊரில் காணப்படும் கடோத்கஜ குப்தாவின் (கி. பி. 435) கல் வெட்டு, ஐந்து சகோதரர்கள் சேர்ந்து ஒரு (விஷ்ணு) கோயில் கட்டிய செய்தியைத் தெரிவிக்கிறது. (E. I 26. No. 11)

விதர்ப்ப நாட்டைச் சேர்ந்த மகாராஷ்டிரத்திலும் வைணவம் சிறந்து விளங்கியது. இரண்டாம் சந்திர குப்தன் மகள் பிரபாவதிகுப்தாவின் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. இவளுடைய சம்பந்தத்தால் இவள் கணவனை வாகாடக மகாராஜா இரண்டாம் ருத்ரசேனனும் சைவனாக இருந்தும் திருமாலை வழிபட்டதாகத் தெரிகிறது. இவன் சக்கரபாணியின் அருளால் ஐச்வரியத்தை அடைந்ததாகக்குறிப்பிடுகிருன். (Sarkar. Sec. In. P 420) பிரபாவதி குப்தா கோவிலுக்கு நிலக்கொடை தந்த செய்தி ஒரு கல்வெட்டால் புலனுகிறது. (P. 413)

ரித்பூர் செப்பேடு ராமகிரி சுவாமியினுடைய திருவடியிலிருந்து கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (P. 415)

நாராயணராஜன் என்பவன் தன் தெய்வத்தின் அருளைப்பெற அன்னசத்திரத்திற்கு இடம் வழங்கிய செய்தி புலனுகிறது.

மகாராஜா ஜயநாதன் என்பவனுடைய கல்வெட்டு (கி. பி. 496) அவனால் கட்டப்பட்ட விஷ்ணுகோயில் பலி–சத்ரா இவைகளுக்காகவும், பிராமணர்களுக்காகவும் நிலதானம் பண்ணிய செய்தியைத் தெரிவிக்கிறது. (c. ii. 3. No. 27)

விஷ்ணு நந்தி என்பவனால் கட்டப்பட்ட விஷ்ணு கோயிலுக்கு ஜயநாதன் என்பவனால் நிலம் வழங்கப் பட்டது. அதே கல்வெட்டு, புஷ்டிகா என்ற பெயருடைய பெண் தெய்வ ஆலயத் திருப்பணிக்காகவும் வழிபாட்டிற்காகவும் ஒரு கிராமம் கொடுக்கப்பட்ட செய்தியை இயம்புகிறது. இதற்கு நிலம் வழங்கியவன் பரமபாகவதனாகி யசங்ஷோபன் என்று சொல்லிக்கொள்வதாலும், இக்கல்வெட்டு வாசுதேவ நாராயணன் இவர்களை வழிபட்டுத் தொடங்குவதாலும், இப்பெண்தெய்வம் லக்ஷ்மியே என்று ப்ளீட் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிருர். (c. ii—II No. 28)

கி. பி. 513ல் தோன்றிய செப்பேடு, மகாராஜா சர்வ நாதன் பகவான் ஆதித்ய பட்டாரகர் கோயிலுக்கு 'ஆச்ரமக' என்ற கிராமத்தை வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது.

படகாட் என்ற இடத்தில் விஷ்ணுவின் பாத மூலத் திற்குக் கோயில் கட்டப்பட்டது. (E. I 21 No. 24) இது மத்தியப்பிரதேசத்தில் வல்தாத் என்ற இடத்தில் உள்ளது. ஹரி, விஷ்ணு, புருஷன், வாசுதேவன் என்ற பெயர்கள் இங்குக் காணப்படுகின்றன.

உல்பூர் மாவட்டத்தில் திருமாலின் நின்ற திருக் கோலமும், பாம்பில் கிடந்த திருக்கோலமும், கல்லில் குடையப்பட்ட சிற்பங்களாகக் காணப்படுகின்றன. (In. Arch 1960-61) இவை ஆறும் நூற்றுண்டைச் சார்ந்தவை.

ஸ்கந்தகுப்தன் காலத்தைச் சேர்ந்த ஜுனகரில் காணப்படும் 'வானரக்' கல்வெட்டுக்களால் அங்கு வைணவம் எப்படிப்பரவியிருந்தது என்பதை அறியலாம். (E. I—III No 37) இக் கல்வெட்டு, திருமாலைப் புகழ்ந்து தொடங்குவதோடு, இன்று ஜயத் என்ற மலையின்மேல் 'சக்ரப்ருத்' என்ற பெயருடைய விஷ்ணுவுக்கு மிகுந்த பணச் செலவில் ஒரு கோயில் கட்டப்பட்டதைக் குறிக் கிறது.

சக்ரபாதிதா என்பவன் விஷ்ணுவின் திருவடிகளில் தன்னை அர்ப்பணம் செய்துகொண்டு அப்பாதங்களை அடைந்ததாகக் கூறப்படுகிறது. இங்குள்ள கற்சிலை ஒன்று கேசி என்ற அசுரனைக் கிருஷ்ணன் வதம் செய்த தைக் தெரிவிக்கிறது.

துவாரகையில் விஷ்ணு ஆலயம் இருப்பதாக விஷ்ணு புராணம் கூறுகிறது. (விஷ்ணு புராணம் V — 36, 37) அநுபுத்தரை மகாபாகவதர் என்று குறிப்பிடு கிறது.

மேற்கு இந்தியாவில் சைவமும் வைண்வமும் அடுத் தடுத்து வளர்ந்த நிலேயும், அவற்றிற்கு இடையே ஏற்பட்ட போட்டிகளும் அஜந்தா குகைச் சிற்பங்களால் புலனுகின்றன.

கி. பி. ஐந்தாம் நூற்ருண்டைச் சேர்ந்த தைகூடக மகாராஜாக்களின் காசுகள் அவர்களைப் பரம வைஷ்ண வர்கள் என்று தெரிவிக்கின்றன.

கோவாவில் காணப்பட்ட ஒரு செப்பேட்டில் வராக உருவம் காணப்படுகிறது.

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த குண்டூரைக் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டில் ஆண்ட தாமோதர வர்மன் பௌத்தனுயினும் விஷ்ணுவின் பெயரை வைத்துக் கொண்டிருக்கிருன்.

சாலங்காய அரசன் தன்னைப் பாகவதன் என்று சொல்லிக்கொள்கிருன். கலிங்க நாட்டையாண்ட கிழக் குக் கங்கர்கள், பித்ருபக்தர், மாத்ரா எல்லோரும் வைண வர்கள். பித்ருபக்த குடும்பத்தைச் சேர்ந்த சண்டவர்மன் தன்னைப் பரமபாகவதனுகச் சொல்லிக்கொள்வதைப் பௌப்லி செப்பேடு குறிப்பிடுகிறது. (E. I. 27. No. 8) அதே வம்சத்தைச் சேர்ந்த மகாராஜா நந்த பரபஞ்சன வர்மன் என்பவனும், ஸ்ரீகாகுளத்துக்கு அருகில் உள்ள சிங்குபுர சாசனத்தில் தன்னைப் பரமபாகவதன் என்று குறிப்பிடுகிருன். (E. I. 4. P. 143)

மாத்ர அரசர்களில் மகாராஜா ப்ரபஞ்சன வர்மன் பகவத் ஸ்வாமி நாராயணனின் பக்தன் என்று தெரிய வருகிறது. கி. பி. ஆரும் நூற்ருண்டைச் சேர்ந்தவன் கார்த்திகை, ஏகாதசி விரதத்தை முடித்துக்கொண்டு தானம் செய்கிருன் (E. I 30—20)

அநந்தசக்தி வர்மனின் செப்பேடு, அவன் கமலா நிலயனுன பகவானின் திருவடித் தாமரையை வழி படுபவன் என்று குறிப்பிடுகிறது. (E. I. 28. No 39)

மாத்ர அரசர்கள் தங்களைப் பரம தைவதம் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். (E. I. 28. No. 31)

நரசிங்கப்பள்ளி செப்பேட்டில் பரம மகேசுவரனான கங்கவமிச அரசன் நாராயணனை வழிபடுவதற்குச் செய்த ஏற்பாட்டைக் குறிப்பிடுகிறது. (E. I. 23. No. 10) இது நாராயணன் ஏழு கடல்களிலும் படுத்துக்கொண்டிருக்கிறான் எனவும், சாம வேதத்தின் ஏழு ஸ்வரங்களையும் பாடினான் எனவும் குறிப்பிடுகிறது.

கி. பி. ஆறும் நூற்றாண்டில் சபலபுரம் என்ற இடத்தில் இருந்த கங்க மன்னர்கள், தங்களைப் பரம பாகவதர்களாகச் சொல்லிக்கொள்வதோடு, தங்கள் அச்சுக்களில் கஜலக்ஷ்மி உருவத்தையும் பதித்துக் கொண்டுள்ளனர். இவ்வம்சத்து மன்னன் பிரசன்ன மாத்ர என்பவனுடைய தங்கக் காசுகளில் கருடன், சங்கு, சக்கரம் என்பவை பொறிக்கப்பட்டுள்ளன.

விஷ்ணுகோபன் என்ற கங்க வம்ச அரசன் வைணவத் துறவியாக வாழ்ந்தவன்.

ரேணுகுண்டாச் செப்பேடு கங்க அரசனான மகாதேவன் பத்மநாபனை வழிபட்டுத் தொடங்குவதாக அமைந்துள்ளது. (E. I. 14. No. 24)

சளுக்கியர்கள் தங்கள் அச்சுக்களில் வராக உருவத்தைப் பொறிப்பதனையும், தங்கள் செய்திகளை வராகாவதாரத்தை வழிபட்டே தொடங்குவதையும் வழக்கமாகக் கொண்டனர். பாதாமியைச் சேர்ந்த குகைகளில் வைஷ்ணவச் சிற்பங்கள் பல உள்ளன.

கிழக்காசியப் பகுதிகளில்

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின் வைணவம் கிழக்கு ஆசியாவிற்கும் பரவ ஆரம்பித்து விட்டது.

பூர்ணவர்மனின் பாறைக் கல்வெட்டு விஷ்ணுவின் பாதத்தைப்போல் அமைந்துள்ளது.

மலாய் நாட்டில் கிடைத்துள்ள ஒரு தங்க நகையில் கருடாரூ விஷ்ணு உருவம் காணப்படுகிறது. இது செலின்சிங் என்ற இடத்தில் கிடைத்தது. இதன் காலம் கி. பி. 320 எனக் கூறுகின்றனர். அதே இடத்தில் விஷ்ணு வர்மன் என்ற பெயருடைய அச்சும் கிடைத்திருக்கிறது.

கி. பி 514ல் கம்போடியாவில் அமைந்த கல்வெட்டு குலப்பிரபாவதி என்ற அரசியைப் பாதுகாக்குமாறு விஷ்ணுவைப் பேரளவில் வருணித்து வழிபட்டுத் தொடங்குகிறது. இவ்வரசியின் புதல்வனுன குணவர்மன் சக்கரதீர்த்த சுவாமி என்ற பெயரோடு விஷ்ணுவின் திருவடி அடையாளங்களை விதிமுறைப்படி நிறுவினுன்.

கம்போடியாப் பகுதிக் கல்வெட்டுக்களில் ஹரி, நாராயணன், மாதவன், ஸ்ரீபதி என்ற பெயர்களும் பாகவதர்கள் என்ற பெயரும் காணப்படுகின்றன. (முஜூம்தார்—கம்போடியாக் கல்வெட்டு—எண் 2)

காம்போஜ அரசன் ருத்ரவர்மனின் கல்வெட்டு அவனைத் திருவிக்கிரமாவதாரமாக வருணிக்கிறது. (ஸ்ரீநிவாசாசாரி J. O. R. Madras II 1928 Page 15)

பர்மாவைச் சேர்ந்த அரிமர்த்தனபுரம் என்ற ஊரில் கி. பி. 147ல் நாநாதேசி விண்ணகர ஆழ்வார் என்ற பெயருள்ள விஷ்ணுகோயில் இருந்ததாக அறிகிறோம். இதைக் குறிப்பிடும் கல்வெட்டு முகுந்தமாலை சுலோகத்தோடு தொடங்குகிறது.

சைனுவைச் சேர்ந்த பூசியான் மாகாணத்தில் சுவான் என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டு, கி. பி. 128-ல் சம்பந்தப்பெருமான் என்பவன் சைகான் என்ற அரசனின் க்ஷேமத்தை வேண்டிக் கட்டிய சிவன்

கோயிலில் சிவவிஷ்ணு புராண நிகழ்ச்சிகளை அமைத்த செய்தி புலனாகிறது.

சளுக்கிய மன்னர்கள் பகவான் நாராயணனிடமிருந்து வராக அடையாளத்தைப் பெற்றதாக அவர்களுடைய செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. இவர்கள் சுவாமி மகாசேனரிடமிருந்து அருள்பெற்றவர்கள்என்றும், சப்த மாதாக்களால் காப்பாற்றப் படுபவர்கள் என்றும் குறிக்கப்பட்டாலும், இவர்கள் நாராயணனிடம் பக்தியை காண்பிக்கத் தவறியதில்லை. சளுக்கிய மன்னன் மங்கலேசன் வாதாபியில் நாராயணனுக்கு ஒரு சிறந்த குகைக் கோயில் அமைத்துள்ளான்.

நாகார்ஜுன கொண்டாவில் ஆவீர மன்னன் வசுசேனன் என்பவன் காலத்தில் (கி. பி. 3ஆம் நூற்றாண்டு) அஷ்டபுஜஸ்வாமிக்கு அத்திமரத்தால் படிவம் செய்து சுவேதகிரியில் பிரதிஷ்டை செய்து கோயில் எடுக்கப் பட்ட செய்தி அறியப்படுகிறது.

இதுகாறும் கூறியவற்றால், வைணவம் பாரததேசம் முழுதும், பாரதத்தைக் கடந்தும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பரவியிருந்த செய்தியும், அது பலவிடங்களிலும் பல வகைகளில் வளர்ந்த செய்தியும், ஆலயங்களும் விக்கிரகங்களும் பலவகைகளில் அமைந்த செய்தியும், விஷ்ணுவின் திருநாமங்கள் பலவகையாகப் பலவிடங்களில் பேசப்பட்ட செய்தியும், வைணவ ஆலய விக்கிரக வழிபாடு பாரததேச மக்களின் பக்தி நெறியைப் பரப்புவதற்காக இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொடங்கப்பட்டு முறையான வளர்ச்சியை அடைந்துள்ள செய்தியும் பல கல்வெட்டு, செப்பேடு, நாணயம், இலக்கியம் இவற்றின் வாயிலாக நிறுவப் பட்டன.

—:—

ஸ்ரீ வைணவ சம்பிரதாயமும் ஆலயங்களும்

தமிழ்நாட்டு வைணவம் ஆலயத் தொடர்பற்றது

ஆசாரியர்களுடைய கருத்தில் உருவாகி உபதேச பரம்பரையிலேயே தனியாக வளர்ந்துவந்த தமிழ்நாட்டு வைணவத்திற்கும், ஆகமங்களையும் ஆகம சம்பிரதாயங்களையும் நேராகப் பின்பற்றி வந்த ஆலயங்களுக்கும் நேரான தொடர்பு கிடையாது. இந்தச் சம்பிரதாயத்திற்கு விஷ்ணு ஆலயத்தில் ஆகமப்படித் தனி இடம் கிடையாது.

கோயில் நிர்வாகம்

கோயில் நிர்வாகம் தொடக்கத்தில் ஊர்ப் பொதுச் சபையாரிடமே இருந்தது. கோயில் நிர்வாகம் பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகர மன்னர், நாயக்கர் ஆட்சியில் அரசப்பிரதிநிதிகள் வாயிலாகவும் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. ஆலய நிர்வாக அதிகாரிகள் ஸ்ரீகாரியம் செய்வோர் எனப்பட்டனர். ஆகமமே ஆட்சி புரியும் கோயில் உள்துறையில் மத சம்பந்தமான மற்ற கொள்கைகளுக்கு இடமில்லை.

ஆசாரிய பிம்பப் பிரதிஷ்டை

சற்றுப் பிற்பட்ட காலத்திலேயே கோயில்களில் ஆசாரியருடைய பிம்பங்களைப் பிரதிஷ்டை செய்வதும் திருநட்சத்திரத்தைக் கொண்டாடுவதும் தொடங்கியுள்ளன. பின்னர் அவையும் ஆலய உள்துறையோடு சேர்ந்துவிட்டன.

புதியன புகுதல்

ஸ்ரீரங்கம் முதலிய கோயில் கல்வெட்டுக்களைக் கவனித்தால், சில இடங்களில் நைவேத்தியத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் 'விட்டவன் விழுக்காடு' என்று பெயர் வைத்து ஒரு பாகத்தைத் தனிப்படுத்திச் சிலரிடம் கொடுக்குமாறு சொல்கிருர்கள். அச்சுதராயன் கல்வெட்டிலேயே இச்செய்தி முதன்முதலில் காணப்படுகிறது. (C. F. E I. 29) இக் கல்வெட்டிலும் பரம்பரை பாத்தியமாகச் சொல்லும் இடம் பழைய கல்வெட்டை அழித்துப் புதிதாகச் செதுக்கப்பட்டுள்ளதாகக் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் கூறுகின்றனர். பிரசாதமோ, தீர்த்தமோ இவற்றை யாருக்கு எப்படி கொடுக்க வேண்டும் என்ற முறை சோழர்கள் காலம் வரை இல்லை.

குலோத்துங்கன் காலத்தைச்சேர்ந்த ஒரு கல்வெட்டு (கி.பி. 1088) திருமஞ்சன தீர்த்தத்தை எப்படி எந்தச் சமயத்தில் கொடுக்கவேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. (S. I. I. Vol. III—No. 70) காஞ்சீபுரத்துக் கல்வெட்டொன்று முதலாழ்வார்கள் பிறந்த கேட்டை நாளன்று பெருவிழாக் கொண்டாட ஏற்பாடு செய்த திறத்தைக் குறிப்பிடுகிறது. (S.I.I 1893)

இராமாநுஜகூடத்தில் ஸ்ரீ வைணவர்களுக்கு அன்னமிடுவதற்குத் தேவராய மழவராயன் காலத்துக் கல்வெட்டொன்று (S I. I. 106 of 1937-38) வழிவகுத்துள்ளது. அதுவே, தீர்த்த மரியாதையை மறுபடியும் ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கிறது.

பிற்கால விஜயநகர மன்னர்களும் நாயக்கர்களும் வைணவ சம்பிரதாயத்தைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டபடியால், ஆகமத்தில் இடம் இன்று எனினும், வைணவ சம்பிரதாயத்தைப் பின்பற்றின சில காரியங்களுக்கு ஆலயத்தில் இடம் கொடுக்கப்பட்டது.

புக்கராயன்காலத்து மைசூரைச் சார்ந்த சிரவண பெலகுலாக் கல்வெட்டு, வைணவர்கள் சமணக் கோயிலை யும் பொறுப்போடு பாதுகாக்குமாறு ஆணையிடுகிறது.

திருமயம் கல்வெட்டு, அரச அதிகாரிகள் சைவ வைணவப் பூசலைச் சமாதானம் செய்த செய்தியைத் தெரிவிக்கிறது. இது சுந்தரபாண்டியன் காலத்தது.

ஆசாரியர்களைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்பு

ஆசாரியர்களைப் பற்றி விரிவான செய்தி எதுவும் கல்வெட்டுக்கள் வாயிலாகப் புலப்படவில்லை. இளையாழ் வான் கலிங்கராயன் என்பவன் கி. பி. 1141-ல் காஞ்சீ புரத்தில் உடையவருக்குப் பிம்பம் ஒன்று அமைத்தான் என்பது கல்வெட்டால் உணரப்படுகிறது. இராமாநுஜ நூற்றந்தாதி பாடிய திருவரங்கத் தமுதனாரைப் பற்றிய கல்வெட்டுத் திருக்கோவிலூர் ஆலயத்திலுள்ளது. (E. I. 315 of 1919) வேதாந்த தேசிகருடைய சீடரான பிரமதந்தரஸ்வதந்த்ரா என்பவர் இராமானுஜருடைய தர்சனத்தைப் பிரசாரம் செய்ய ஒருமடம் நிறுவிய செய்தி (கி. பி. 1359) காஞ்சிபுரம் வரதராசசுவாமி கோயில் கல்வெட்டால் அறியப்படுகிறது. (E. I. 2536)

திருப்பதிக் கல்வெட்டில் அழகிய மணவாளஜீயர் என்ற பெரியாரின் பெயர் வருகிறது.

மாறவர்மன் காலத்தைச்சேர்ந்த ஆழ்வார் திருநகரிக் கல்வெட்டில் அழகியமணவாள ஜீயர் என்ற பெயர் காணப்படுகிறது.

விசயநகர மன்னன் வேங்கடபதிராயன் காலத்தில் குமாரதாததேசிகன் என்ற ஆசாரிய புருஷனிடம் பல ஆலயங்களின் நிர்வாகப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

தஞ்சை நாயக்கர்கள் தஞ்சை மாவட்ட வைணவ ஆலயங்களின் வைதிக நிர்வாகத்தை அங்கிருந்த ஒரு குமார தாதாசாரியாரிடம் கொடுத்ததாகத் தெரிகிறது.

ஸ்ரீரங்கத்திற்கு வந்து தங்கியிருந்த நாயக்கர்கள் ஸ்ரீரங்கத்தில் பல ஏற்பாடுகளை நேராகவே செய்துள்ளனர் என்பதும் அறியப்படுகிறது.

எனவே, ஆகம முறையையே தொடக்கத்தில் பெரிதும் அடியொற்றி அமைந்த ஆலயங்களின் கல் வெட்டுக்களில், ஆசாரியர்கள் பற்றி அறிவதற்கு மிகக் குறைந்த வாய்ப்பே காணப்படுகிறது என்பதும், ஆசாரி யர்களைப் பற்றி எழுதப்பட்ட கதைகளுக்குக் கிடைத் துள்ள ஒரு சில கல்வெட்டுச் சான்றுகளும் துணைபுரியும் நிலையில் இல்லை என்பதும் புலப்படுகின்றன.

இனி, ஆலய வழிபாட்டுக்கு அடிப்படையான ஆகமம் பற்றி நோக்குவோம்.

ஸ்ரீ :

பாஞ்சராத்திர ஆகமம்

இருவகை ஆகமங்கள்

இன்று தமிழ் நாட்டில் ஆலய வழிபாட்டுக்கு வைஷ்ணவ சம்பிரதாயத்தில் இருவகை நூல்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. ஒருவகை நூல்களுக்கு பாஞ்சராத்ரம் என்றும், மற்றொரு வகை நூல்களுக்கு வைகாநசம் என்றும் பெயர். இவைகளில், ஆலயங்களில் பெரும்பாலானவை வைகாநச ஆகமத்தைப் பின்பற்றுபவை என்று தெரிகிறது. ஆனால் வைகாநச ஆகமத்தின் கொள்கைகள் வேத நெறியையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சாரியர்கள் இதற்குத் தனியான முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை. ஆலயங்களில் நடைபெறும் பூஜையோ, திருவிழாக்களோ, வேதமந்திரத்தைக் கொண்டு வைகாநசர்களால் செய்யப்படுகின்றன. கல்வெட்டுக்களில் வைகாநசத்தைப்பற்றிப் பிரஸ்தாபம் காணப்படுகிறது. சிதம்பரம் கோவிந்தராஜன் ஆலயத்தைப் புதுப்பித்த ஒரு அரசன் வைகாநச ஆகமப்படிப் பிரதிஷ்டை நடந்ததாகத் தெரிவிக்கிறான். பார்ப்பன ஊர்களிலும் வைகாநச ஊர்களிலும் சிரமணர்களின் ஊர்களிலும் (S. II. Volume 3, P. 1415) என்று ராஜராஜதேவர் காலத்துக் கல்வெட்டு வைகாநசர்களைத் தனியாகக் குறிப்பிடுகிறது.

பாஞ்சராத்திரம் பரவியமை

ஆனால், பாஞ்சராத்திரம் என்ற மற்ற வகை நூல் தமிழ்நாட்டில் மிகவும் சிறப்பான இடத்தை பெற்று

விட்டது. இதற்குக் காரணம் தமிழ்நாட்டு வைணவ ஆசாரியர்கள் தங்களுடைய அடிப்படையான கொள்கைகளுக்கு இதையே நம்பியிருப்பதாகும். இதிலிருந்து பல மேற்கோள்களை ஆசாரியர்கள் எடுப்பதால் இது மிகவும் பிரசாரமாகிவிட்டது. வைகாநச ஆகமம் மிகவும் புராதனமானதாக இருந்தும், ஆகமங்களைப்பற்றி நூல் எழுதிய ஆளவந்தாரோ, அல்லது பாஞ்சராத்ர ஆகமங்களை ஆதரித்துப் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதிய இராமானுஜரோ, இதைப்புற்றிக் குறிப்பிடவே இல்லை. ஆனல் வேதாந்த தேசிகர் மட்டும் தம்முடைய நூலான பாஞ்சராத்திர இரக்ஷையில் இதைப்பற்றிக் குறிப்பிடுகிருர். பாஞ்சராத்திர ஆகமம் தமிழ்நாட்டு வைணவத்தோடு கலந்திருப்பதால் அதைப்பற்றித் தனியாக நாம் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவை பலரால் பல காலங்களில் எழுதப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

பாஞ்சராத்ர அமைப்பு

பாஞ்சராத்ர ஆகமம் பல ஸம்ஹிதைகள் உருவத்தில் பல பெயர்களோடு காணப்படுகிறது. பகவானே ஆகமங்களை உபதேசித்தான் என்ற கொள்கை பொதுவானது. இதனல் இன்று காணப்படும் எல்லா ஸம்ஹிதைகளுமே பகவான் நேருக்கு நேரக உபதேசித்தான் என்று கொள்ளமுடியாது. சில ஸம்ஹிதைகளில் பகவான் நேருக்கு நேராக உபதேசிப்பதாக காணப்படுவது உண்மை. ஆனல் இதைக்கொண்டு எல்லா ஸம்ஹிதைகளுமே பகவானிடமிருந்து வந்தன என்று கொள்ள முடியாது. லெக்ஷ்மீ, பிரம்மா, ருத்திரன் முதலிய தெய்வங்களும் பலரிஷிகளும் ஸம்ஹிதைகளுக்கு கர்த்தாக்களாக சொல்லப்படுகிருர்கள். ஆகமக் கொள்கைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. ஆலயவழிபாடு, விக்ரஹ வழிபாடு இவை ஆகம நூல்களின் முக்கியமான நோக்கம் என்ற கருத்து இருந்து வந்தாலும், உட்புகுந்து கவனித்தால் இந்த நோக்கத்தோடு மட்டும் ஆகமங்கள் ஏற்படவில்லை என்று தெரிகிறது. ஆகமத்தில் காணப்படும்

அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் ஒருவாறாக ஆகமக் கொள்கைகளை தெரிந்துகொள்ள பயன்படுகிறது. மகாபாரதத்தின் சாந்திபர்வாவிலுள்ள நாராயணீயம் (மோட்ச தர்மம்) என்ற இடத்தில் காணப்படும் கருத்துக்கள் ஆகமக் கொள்கைகளின் வரலாற்றிற்கு மிகவும் பயன்படுகின்றன. நாராயணீயம் என்ற இடத்தில் வைணவம் சம்பந்தமான சிறப்பான கருத்துக்களை பார்க்கிறோம். படைப்பு, அவதாரம் இவைகளில் புதிய கொள்கைகளை இது வெளியிடுகிறது. சுவேதத் த்வீபம் என்ற இடத்தில் நாராயணனையே எப்போதும் தொழுது வரும் பரமைகாந்திகள் இருந்து வருவதாகவும் அவர்கள் தனிப்பெருமை வாய்ந்தவர்கள் என்றும் உலக வாழ்க்கையை துறந்தவர்கள் என்றும் பெருமை படுத்தி பேசுகின்றது. ஒருவனே தெய்வம்! ஒன்றே குலம்! ஒன்றே குறிக்கோள்! என்ற பரமைகாந்தி தர்மம் இங்குதான் விளக்கப்படுகிறது. உபரிசரவஸு என்ற அரசனின் வாயிலாக பாகவத தர்மம் இங்கு சொல்லப்படுகிறது.

பாகவத தர்மம், பாஞ்சராத்ரக் கொள்கைள் இரண்டும் ஒன்றுதான். பாகவத தர்மப்படி 'அகிம்ஸை' தலைசிறந்த கொள்கை. நாராயணனே வழிபடத் தகுந்தவன். 'வியூகம்' என்ற பெயரில் பகவான் தனிச் சிறப்போடு நான்கு விதமாக இருந்து வருகின்றான். பாகவதர்களுடைய கர்மா வேதத்தில் சொல்லப்படும் கர்மாவைக் காட்டிலும் தனியானது. இப்படித் தனிப் புராணக் கொள்கையோடு தனியான கர்மாக் கொள்கையோடு இருந்த அநாதியான ஆகம தர்மங்கள் காலக் கிரமத்தில் மறைந்துவிடவே துவாபரயுகம் முடிந்து கலியுகத்தினுடைய ஆரம்பத்தில் சங்கர்ஷண உருவத்தில் உள்ள பகவானே பாகவத சாஸ்திரத்தை ரிஷிகளுக்கு உபதேசிக்கிறான் என்று கூறப்படுகிறது. ஆகவே ஒரு மதத்திற்கு வேண்டிய எல்லாக் கொள்கைகளுடன் நாராயண வழிபாட்டை முக்கியமாகக் கொண்ட மதம் பகவத் சாஸ்திரம் என்ற பெயரில் கலியுக ஆரம்பத்தில் உதயமாகிறது

என்று தெரிகிறது ஆரம்பத்தில் நாராயண வழிபாடு கர்மாக்கள் மூலமாகவே நடந்து வந்திருக்கிறது என்றும் அக்காலத்தவர்கள் யாகங்களைச் செய்துவந்தார்கள் என்றும் அந்த யாகங்களில் ' பசு ஹிம்ஸை ' கிடையாது என்றும் தெரிகிறது. இங்கு விக்கிரஹ வழிபாடு ஆலய வழிபாடு இவைகளைப் பற்றின குறிப்புக்கள் காணப் படாததனுல் பிறகுதான் இவை சேர்ந்திருக்கின்றன என்று முடிவு செய்ய இடமேற்படுகிறது.

விக்ரஹ வழிபாடு, 'ஆலய வழிபாடு' இவைகள் தாம் ஆகமத்திற்கு முக்கியமான நோக்கம் என்ருல் எடுத்த எடுப்பில் விக்ரஹ வழிபாட்டைப் பற்றி சொல்லியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் வேதாந்தக் கொள்கை, மதக் கொள்கை, கர்மக் கொள்கை இவைகளிலுள்ள தனிவழிகளை ஆகமம் வெளியிடுவது அதன் வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகுந்த இடத்தைக்கொடுக்கிறது. பரமைக் காந்திகள் நாராயணன் ஒருவனையே தெய்வமாகக் கொண்டு மற்றவர்களுக்கு தெய்வத்தன்மை கிடையாது என்று மறுப்பவர்கள். அவ்விதமே மற்றவர்கள் உலக வாழ்க்கையில் துறவியாக மற்றவர்கள் தொடர்பு அற்று தனித்து வாழ்ந்து மோட்சம் என்ற ஒரே குறிக்கோளையே மனதில் கொண்டு நடக்கும் இவர்கள் மறந்தும் புறம் தொழா மாந்தராவார்.'' இந்தக் கொள்கைக்கும் ஆலய வழிபாட்டுக் கொள்கைக்கும் உறவு வெகுதூரத்தில் நிற்கின்றது. ஆலயவழிபாடு, விக்ரஹ வழிபாடு இவைகள் பொதுமக்களின் இம்மைக்கும் மறுமைக்கும் உதவ ஏற்பட்டது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு குறிக்கோள்களையும் அணைய உதவுவன. ஆகவே பரமை காந்தி தர்மமும் ஆம்லய வழிபாடும் ஒன்றுபட இடமில்லை.

பாகவத தர்மம் வேறு, ஆலயவழிபாட்டை வகுக்கும் ஆகமங்களின் தர்மம் வேறு. தனியாகத் தோன்றிய இரண்டும் பிற்காலத்தில் ஒன்றுகக் கலந்துள்ளன என்று சொல்லவும், ஒரு காலத்தில் முக்தியை மட்டும் குறிக்

கோளாகக் கொண்டிருந்த இந்த மதம் காலக்கிரமத்தில் மற்ற நோக்கங்களையும் உட்கொண்டு எல்லா மக்களுக்கும் பொதுவான இம்மை வாழ்க்கையில் நன்மையைத் தேட ஆலய வழிபாட்டை வகுக்கிறது என்று சொல்லவும் இடமேற்படுகின்றது அதனால் ஆகம நூல்களில் புராதன மானவை வேதாந்தக் கொள்கையோடும் யோகமார்க்கக் கொள்கைகளோடும் நின்றுவிடுகின்றன. கிரியா மார்க்கத்தில்தான் ஆலய வழிபாடு வருகிறது. அதனாலேயே பிற்காலத்து ஆகமங்கள் ஞானம், யோகம், கிரியை, சரியை என்று நான்கு பாதங்களில் கொள்கைகளை வகுக்கும்போது கிரியா பாதத்தை மூன்றாவது பாதமாக வகுக்கின்றன. ஆலய வழிபாடு ஒன்றுதான் முக்கிய மான நோக்கமாக இருந்தால் கிரியாபாதத்தை முதலில் சொல்லி மற்றவைகளை பிறகு சொல்லியிருக்கலாம். உபநிஷத்திலுள்ள வேதாந்தக் கொள்கைகளையும் யோக சாஸ்திரத்திலுள்ள யோகக் கொள்கைகளையும் அப்படியே பின்பற்றுவதாயிருந்தால் இவர்கள் ஞானபாதம், யோக பாதம் இவைகளைத் தனியாகச் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. தங்களுடைய கருத்துக்களை முதலில் சொல்லி அந்த அடிப்படையிலேயே ஆலய வழிபாட்டையும் விக்கிரஹ வழிபாட்டையும் தெரிவிக்கிறார்கள் என்று தெரிகிறது. சில ஸம்ஹிதைகளில் மிகுந்த தெளிவுள்ளவர்களுக்கு ஞானமார்க்கம் யோக மார்க்கம் இவைகள் சொல்லப்படுகின்றன. இவற்றைப் பின்பற்றும் ஆற்றல் இல்லாத பாமர மக்களுக்கு விக்ரஹ வழிபாடு, ஆலய வழிபாடு இவை ஏற்பட்டன என்றும் கூறப்படுகின்றன. இதைக் கொண்டுதான் கடவுளை மனதில் த்யானம் பண்ணுவதற்கு சக்தியில்லாத மக்களுக்கு விக்ரஹ வழிபாடு சொல்லப்படுகிறது என்ற பழமொழியும் ஏற்பட்டுள்ளது. ஆகமங்கள் கிரியைகள் சம்பந்தப்பட்ட வரையில் வேத வழிகளை சிறிது பின்பற்றினாலும் போட்டி எண்ணத்தோடு புதிதான கர்மாக்களை உருவாக்கி புதிதான மந்த்ரங்கள் (நாம மந்த்ரங்கள்) முத்திரைகள் இவைகளையும் சேர்க்கச் சொல்லுகின்றன.

பல நாம மந்திரங்கள் ஆகமங்களின் படைப்பாக அமைந்துள்ளன. யந்த்ரங்கள், முத்திரைகள் இவை தந்த்ர சாஸ்திரங்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. அதனுல் இன்றுள்ள ஆகமக் கொள்கைகள் தனித்த தெய்வக் கொள்கையோடு கர்மா, யந்த்ரம், முத்திரை இவைகளோடுள்ள ஒரு மதமாக இருந்து வருகிறது. வேதாந்தக் கொள்கை, யோகக் கொள்கைஇவை காலக்கிரமத்தில்வேதக்கொள்கையோடு ஒன்ருகி விட்டதால் கிரியா மார்க்கம் மட்டும்தான் இன்று ஆகமங்களில் மிஞ்சியுள்ளது.

ஆகமச் செய்திகள் வெளிவந்தமை

இந்த நூல்கள் வடமொழியிலேயே இதுவரை இருந்து வந்திருக்கின்றன ஆனல் கோயில்களில் பூஜைகள் செய்யும் ஒரு சமுதாயத்தினிடமே இந்நூல்கள் இருந்து வந்திருப்பதால் வடமொழி வல்லுனர்கள்கூட இதைப்பற்றிப் பூரணமாக ஆராய்ச்சி செய்யவில்லை. சமீபத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் ஆகம சிற்பசதஸைக் கூட்டி ஆகமங்களைப் பற்றிச் சர்ச்சை செய்யச் சொல்லிக் கட்டுரைகளும் வாசிக்கச் செய்து ஆகமங்களைப் பற்றியும் பூஜையைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய வகை செய்து, மக்களுக்கு ஆலய வழிபாட்டில் சிரத்தையை உண்டு பண்ணி அதற்குப் புத்துயிர் கொடுத்தார்கள். ஆராய்ச்சி அளவில் ஆகம நூல்களை ஆராய்ந்து முதன் முதலாக ஷார்டர் என்பவர் அஹிர்புத்னிய சம்ஹிதை என்ற ஆகமத்தைப் பதிப்பித்து அதற்கு மிகவும் தெளிவான ஒரு அணிந்துரையை விஸ்தாரமாக எழுதியுள்ளார் சமீப காலத்தில் ஸ்மித் என்ற அமெரிக்க ஆசிரியர் ஆகமங்களைப் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்து மறைந்துள்ள அநேக ஆகமங்களின் ஏட்டுப் பிரதிகளை ஒன்று சேர்ந்துள்ளார். பொதுவாக ஆகமங்களுடைய பொருளடக்கத்தைப் பற்றி ஸ்ரீ கே. கே. வெங்கடாச்சாரியார் என்பவருடன் சேர்ந்து ஒரு நூலையும், காஞ்சி வரதப்

பட்டருடன் சேர்ந்து மற்றொரு நூலையும் எழுதி ஆலயத்தினுடைய சிற்பத்தைப் பற்றியும், சிலைகள் செய்வதைப் பற்றியும் விளக்கியுள்ளார். வைணவத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்புகுந்த பல அறிவாளிகள் வைணவத்திற்கும் பாஞ்சராத்திர ஆகமத்திற்கும் நெருங்கிய உறவு இருப்பதாகச் சிறிது சிறிதாக ஆராய்ச்சி செய்துள்ளனர். இதைப்பற்றி பல கட்டுரைகள் பல ஏடுகளில் வந்துள்ளன. பாஞ்சராத்திர ஆகமம் வடநாட்டில் பிறந்திருந்தாலும், வடமொழியிலேயே 'இருந்தாலும் இன்று தமிழ் நாட்டு ஆலயங்களையே அடைக்கலமாகக் கொண்டு வாழ்கின்றது.

வேதமும், ஆகமமும்

ஆகமங்கள் வடநாட்டில் மட்டும் இருந்தவரை அவைகள் வேதாந்த கொள்கையையும், மந்திரம், முத்திரை இவைகள் சம்பந்தமான கொள்கைகளையுமே அடிப்படையாகக் கொண்டு இருந்திருக்கின்றன என்று தெரிகிறது. வடநாட்டிலேயே ஆகமக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு இருந்து வந்திருக்கின்றது என்பதும் தெரிகின்றது. பட்டகுமாரிலர் என்ற மீமாம்சகர் ஆகமங்களுடைய கருத்துக்கள் வைதீகமதத்திற்கு புறம்பானவை என்று கூறுகிறார். ஸ்ரீ சங்கரரும், பிரம்மசூத்ர பாஷ்யத்தில் ஆகமங்களின் வேதாந்தக் கொள்கைகள் வேதத்தின் கொள்கையோடு முரண் படுவதைத் தெரிவிக்கிறார். சங்கரரைப் பின்பற்றிய பிரம்மசூத்திர உரை ஆசிரியர்கள் பாஞ்சராத்ர கொள்கைகளை ஒப்புக்கொள்ளாமலே தங்கள் நூல்களை எழுதியுள்ளார்கள். கடைசியாக வந்த அப்பையத்தீக்ஷிதரும் இதனுடைய கொள்கைகள் வேதத்திற்கு எதிரானவை என்று கூறுகிறார்.

ஆகமமும், வைணவ ஆசாரியர்களும்

பாஞ்சராத்ர ஆகமங்களை ஆதரித்துத் தமிழ் நாட்டில் முதலில் நூல் எழுதியவர் ஸ்ரீ ஆளவந்தார். அவர்

தன்னுடைய பாட்டனாராகிய நாதமுனிகள் தம்முடைய சிஷ்யர்கள்மூலம் பாஞ்சராத்ர ஆகமத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்துள்ளார் என்று தெரிவிக்கிறார். ஆனால் நூல் மூலம் பாஞ்சராத்ரத்தை ஆதரித்து முதல் முதல் பேசியவர் ஆளவந்தார்தான்.

ஏகாயன வேதம்

பாஞ்சராத்திர ஆகமம் தனியான வேதாந்த கருத்துக் கருத்துக்களையும் தெய்வக் கொள்கைகளையும் சொல்லித் தனக்கு மூலமாக ஒரு தனி வேதம் இருந்து வருகின்றது என்றும் சொல்கிறது. அந்த வேதத்திற்கு ஏகாயனம் என்று பெயர். அந்த வேதம் மற்றவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள வேதம்போல் இல்லாததாலும் எல்லா மக்களிடையேயும் பிரசாரத்தை அடையாததினாலும் அதை அடிப்படையாக கொண்டுள்ள பாஞ்சராத்ர ஆகமத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று சிலர் சொல்கிறார்கள். ஏகாயனம் என்ற சொல்லுக்கு வடமொழியில் ஒன்றையே குறிக்கோளாக கொண்டது என்பது பொருள். ருக்வேதம் முதலியவை பல தெய்வக் கொள்கையுடன் இருப்பதால் அவைகளுக்கு மாறாக ஒரே தெய்வக் கொள்கையோடு ஏகாயனம் என்ற பெயருடன் ஒரு வேதம் தோன்றியது. அந்த வேதம் மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வேதம்போல் இல்லாததால் எல்லா மக்களிடையேயும் பிரசாரத்தை அடையவில்லை.

வடநாட்டில் காஷ்மீரத்திலிருந்த உத்பல வைஷ்ணவன் என்பவன் ஸ்பந்த ப்ரதீபிகைஎன்ற தன்னுடைய நூலில் “ பாஞ்சராத்திரஸ்ருதி ” “ பாஞ்சராத்திர உபநிஷத் என்ற நூல்களின் பெயரைச் சொல்லி சில மேற்கோள்களைக் காண்பிக்கிறான்.

உத்பலர் ஏகாயன ஸ்ருதி என்று சொல்லாதது கவனிக்கத்தக்கது. வேதாந்த தேசிகரும் ரஹஸ்யாம் நாயம் ரஹஸ்யாம் நாயப்ராம்மணம் என்று ஏகாயன வேதத்தை குறிப்பிடுகிறார்.

இனி ஏகாயந வேதத்தைப்பற்றி பாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் கூறுவதைக் கவனிப்போம். (மார்க்கண்டேய சம்ஹிதை) "மூலவேதத்தைப் பின்பற்றி இங்கு கர்மாக்கள் சொல்லப்படுகின்றன". (விஷ்ணு சம்ஹிதை 22) "பெரிய வேதமாகிற மரத்திற்கு ஏகாயன வேதம் மூலமானது, ரிக்வேதம் முதலியவை அதனுடைய கிளைகள்". (ஈசுவர சம்ஹிதை 124) "ஏகாயனம் என்ற வேதம் வேதங்களுடைய தலையில் இருப்பது". (ஸ்ரீ ப்ரசன சம்ஹிதை 238) "பாஞ்சராத்திரலுள்ள வேதம் உத்தமமானது, ரிக்வேதம் முதலிய மூன்று வகையாக உள்ள வேதங்கள் நடுத்தரமானவை". (லக்ஷ்மீ தந்த்ரம் 2236) "மோட்சத்தைப் பற்றி மட்டும் சொல்லுவதால் சாத்வத விதியே ஏகாயனம் என்று சொல்லப்படுகிறது". (பரமேசுவர சம்ஹிதை 156) "மூல வேதமான காண்வ மாத்யந்தின சாகைகளை கற்றுக்கொள்ளுங்கள்". (பாத்ம சம்ஹிதை) இவற்ருல், பாஞ்சராத்ர சம்ஹிதைகளுக்கு மூலமானத் தனியான ஒரு வேதமிருப்பதாக ஒப்புக்கொள்வது வெளியாகிறது. பாத்ம சம்ஹிதையைக் கொண்டு கவனித்தால், சுக்லயஜுர் வேதத்தைச் சேர்ந்த காண்வ மாத்யந்தின சாகைகள்தான் ஏகாயந வேதம் என்று தெரிகிறது. ஆனுல், ஆளவந்தார், வேதாந்த தேசிகர் இவர்களுடைய கருத்துப்படி இது தனியான வேதம் என்றே கொள்ளவேண்டி வருகிறது. அப்பைய தீட்சிதர் ஏகாயனவேதம் என்று ஒரு நூலே கிடையாது என்று மறுக்கிருர்.

காணப்படும் வேதங்களிலுள்ள கருத்துக்களையே அது கொண்டிருக்குமானுல் அது பாஞ்சராத்திரத்திற்கு மூலமான வேதமாக இருக்கமுடியாது. ஏனென்ருல் இப்போது காணப்படும் வேதங்களின் கருத்தே வேறு. ஆகமங்களின் கருத்தே வேறு. தனித்த கருத்தோடு பாஞ்சராத்திரத்திற்கு மூலமான ஒரு வேதம் இருக்குமானுல் அது மற்ற வேதங்கள் போல் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வேதமாக இருக்க முடியாது

என்று பாஞ்சராத்திர அதிகரண கல்பதருபரிமளத்தில் தீக்ஷிதர் கூறுகிறுர். சிவார்க்கமணி தீபிகையிலும் விளக்கிக் கூறுகிறுர்.

எது எப்படியிருந்தாலும் பாஞ்சராத்திரங்களுக்கு மூலமாக அமைந்துள்ள ஏகாயன வேதம் ஆளவந்தார் காலத்திற்கு முன்பே மறைந்துவிட்டது என்று தெரிகிறது. அத்யயன பரம்பரையில் ஆகமக்காரர்களிடம்கூட அது காணப்படவில்லை என்று அப்பைய தீக்ஷிதர் கூறுகிறுர். 700 வருடத்திற்கு முன்னிருந்த வேதாந்த தேசிகர் காலத்திலும் ஏகாயன வேதம் முழுவதுமிருந்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீபாஷ்யத்திற்கு உரை எழுதிய சுதர்சன பட்டர் என்பவர் ஏகாயன வேதத்திலிருந்து சில மேற்கோள்களைத் தம்முடைய உரையில் காண்பிக்கிறுர். ஆகமங்கள் பகவானிடமிருந்தே நேரில் வந்தன என்று குறிப்பிட, இதை பகவத் சாஸ்திரம் என்று சொல்லுகிறுர்கள்.

ஆகமத்தையும் உடன்பட்டமை

வேதத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படவில்லை என்ற ஆக்ஷேபத்தை நிராகரித்து அவர்களுடைய தனித்த கொள்கைகளையும் மற்ற கொள்கைகளையும் வழிபாட்டிற்கு ஏற்ற கொள்கைகளாக நாம் ஆதரித்து ஆக வேண்டும் என்று ஆகமப்ராமாயணத்தில் ஆளவந்தார் கூறுகிறுர். அங்கு விஸ்தாரமான வேதாந்த கொள்கையைப்பற்றிச் சர்ச்சை நடக்கவில்லை. ஆனுல் ஆலயங்களில் பூஜை செய்வது ஒப்புக்கொள்ளக்கூடியதா? பிம்பங்களுக்கு நிவேதனம் செய்ததைப் பிறகு நாம் எடுத்துக் கொள்ளலாமா? ஆகமவாதிகள் தனியான கர்மாக்களைச் சொல்லித் தனி ஒழுக்கத்தோடு ஆலயங்களினூடே நின்று விடுவதால் அவர்களைச் சேர்த்துக் கொள்ளலாமா? என்று சர்ச்சை செய்து அவர்களுடைய கொள்கையையும், செயல்களையும் ஆதரிக்கலாம் என்று கூறிவிட்டார். ஏகாயனவேதம் என்பது மற்ற வேதங்களைப்போல் ஒரு

வேதமாக இருக்கலாம் என்றுகூறி, அதனை அடிப்படை யாகக் கொண்டு தோன்றியுள்ள இந்த ஆகமங்களை ஒப்புக்கொள்வதில் தவறுதல் இல்லை என்று சொல்லி விட்டார். ஏகாயன வேதத்தை காஷ்மீர ஆகமம் என்று அவர் மனத்தில் கொண்டு பேசுவதாகத் தெரிகிறது. அவருக்குப்பின் வந்த இராமானுஜரும் அவர்களுடைய கொள்கைகளை ஆதரித்துப் பேசுகிறார். சங்கரரும் ஆகமக் காரர்களுடைய தனிக் கொள்கையான பஞ்சகாலப்ர கிரியை என்ற கொள்கையை ஆக்ஷேபிக்கவில்லை என்று கூறிவிட்டார். இராமானுஜருக்கு பின்வந்த ஆசாரியர்கள் அந்த கொள்கைகளைத் தாங்களும் ஆதரித்து தங்களு டைய மதக் கொள்கையோடு கலந்துகொண்டு விட்டார் கள். அதனால் தமிழ்நாட்டு வைணவக் கொள்கைகளிலும் ஆசரணைகளிலும் ஒழுக்கங்களிலும், பெரிய மாறுதல் ஏற்படவே, இன்று வைணவத்தினுடைய பெரும் பான் மையான ஆசரணைகள் ஆகமத்தையே பின்பற்ற ஆரம் பித்துவிட்டன.

ஆகம நூல்களின் காலம்

ஆப்டே கூற்று

பேராசிரியர் ஆப்டே என்பவர் இப்போதுள்ள ஸம்ஹிதைகள் கி. பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டுவரை உள்ள காலத்தில் பிறந்தவை என்று நினைக்கின்றார். (ஒன்பதாவது ஆகம, சிற்ப, வியாச பாரத சதஸ் மலர் 1970. பக்கம் 54) பாஞ்சராத்ர சம்ஹிதைகளுக்கு மூலமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஸாத்வதம், பௌஷ்கரம், ஜயாக்கியம், என்ற மூன்று சம்ஹிதைகளுமே கி. பி. மூன்றும் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டுவரை உண்டாகியிருக்கலாம் என்றும் 'அகிர்புத்னிய' சம்ஹிதை ஐந்தாவது நூற்றாண்டுக்கு பிற்பட்டது என்றும் கூறுகிறார். 'பௌஷ்கர' சம்ஹிதை யில் ஆலய வழிபாடு ஆரம்பிக்கிறது க்ஷேத்ரங்களை 'ஸ்வயம்வ்யக்தம்' சைத்தம் 'மானுஷம்' என்ற பாகுபாடு செய்து பேசுவது தெளிவாகத் தெரிகிறது. ஜயாக்கிய

சம்ஹிதையில் மேலும் ஆலய வழிபாடு வளர்ந்திருப்பதும் நோக்கத்தக்கது. அகிர்புத்னிய சம்ஹிதை ஆலய வழிபாடுடன் சம்பந்தப்படவில்லை என்று குறிப்பிடுகிறார்.

ஆகமக் கோள்கையினர் நிலை

தனி வேதாந்தக் கொள்கை தனி தெய்வக்கொள்கை இவைகள் ஒருபுறமிருக்க, தனியான கர்மாக்களோடும் தனியாக ஆசரணைகளோடும் இருப்பது வைதகி ஆசரணைகளோடு ஒத்துப்போக முடியவில்லை. இதனால் பாஞ்சராத்ர ஆசரணைகளைப் பின்பற்றி வந்தவர்கள் தனியாகவே பாவிக்கப்பட்டு வந்துள்ளார்கள். அவர்கள் ஆலயங்களில் பூஜை செய்வதையும் பிம்பங்களைப் பாதுகாப்பதையுமே தங்களுக்குத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

இவர்களுடைய தனித்த நிலை வெகுகாலம் வரையில் இருந்துவந்துள்ளது. பிறகு அவ்விதக் கொள்கையுள்ளவர்கள் மறைந்துவிட்டார்கள் என்று தெரிகிறது. இன்று ஆலயங்களில் பூஜை செய்பவர்கள் வைதிக மதத்தைப் பின்பற்றுபவர்களே. இவர்கள் ஆகமிகர்கள் இல்லை. ஆகமிகர்களுக்கு ஆலயபூஜை சுதர்மம். இன்றுள்ளவர்கள் தொழிலுக்கு அதை மேற்கொண்டுள்ளவர்கள். ஆலய பூஜைகளுக்கு மட்டும் ஆகமத்தைப் பின்பற்றுகிறார்கள். ஆகமங்களை மட்டும் பின்பற்றித் தங்களுடைய கர்மாக்களையும், கோயில் பூசைகளையும் செய்து வந்தவர்களை 'சுத்தயாஜி' என்று வேதாந்த தேசிகர் குறிப்பிடுகிறார். இவர்கள் மற்றவர்களைப்போல் பல தேவதைகளை வழிபடாமல் விஷ்ணு ஒருவனையே வழிபட்டு ஒரே தேவதை சம்பந்தம் உள்ள ஆகம கர்மாக்களையும் செய்து ஆசரணைகளையும் பின்பற்றி வந்ததால் இவர்களை சுத்த யாஜி என்று குறிப்பிட்டார். இன்றுள்ள வைணவர்கள் எல்லோரும் மிச்ரயாஜிகள்தான் என்று குறிப்பிடுகிறார். மிச்ரயாஜி என்பர்கள் வேதக் கொள்கைகளையும் ஆகமக் கொள்கைகளையும் கலந்துகொண்டவர்கள், ஆகமக் கொள்கைகளையும் பின்பற்றி வேதங்களில் சொல்லப்படும் கொள்கைகளையும பின்பற்றுவதால் இவர்கள் மிச்ரயாஜி

ஆகிருர்கள். வேதத்தைப் பின்பற்றுபவர்கள் கர்மாக் களைச் செய்யும் காலத்தில் வேதமந்திரங்களைப் பயன் படுத்துகிருர்கள். வேத மந்திரங்கள் பல பெயருள்ள தெய்வங்களைச் சொல்வதால் இங்கு விஷ்ணுதான் முழு முதற் கடவுள் என்ற கொள்கைக்கு இடமில்லாமல் போகிறது. அதனுல் அங்கு மிச்ரயாஜிகள் அந்தந்த தெய்வங்களுக்கு உள்ளுக்குள்ளே விஷ்ணுதான் இருந்து வழிபாட்டை ஏற்கிருர் என்று சொல்கிருர்கள்.

ஆனுல், மறைந்துபோன சுத்தயாஜிகளின் கர்மாக் களில் விஷ்ணு ஒருவனே நேருக்கு நேராக தெய்வமாக வருவதால் அவர்கள் நேருக்கு நேராகவே ஆகம மந்திரங் களால், ஆகம வழியிலேயே அவனை வழிபட்டு வந்திருக் கிருர்கள். இன்றையதினம் ஆலயத்தில்பூஜை சய்பவர்தம் முடைய வீட்டுக் கர்மாக்களுக்கு வேதம் ஸ்மிருதி இவை களைப் பின்பற்றி ஆலய வழிபாட்டுக்கு ஆக மங்களைப் பின்பற்றுகிருர்கள். அவ்விதமே வைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்த மற்றவர்களும் தங்களுடைய நித்யநைமித்திக கர்மாக்களை வேதமந்திரங்களைக் கொண்டே செய்துகொண்டு அதற்கு விரோதமில்லாத காலங்களில் ஆகம கர்மாக்களையும் செய்து வருகிருர்கள்.

ஆகமங்கள் தனிக்கொள்கையோடு இருப்பதற்கு அடையாளமாகத் தனியான தீக்ஷை சொல்லப்படுகிறது. அந்தத் தீக்ஷை பெற்றவர்கள்தாம் ஆலயங்களில் பூஜை செய்யலாம். சாதாரண வைதிகர்களுக்கு பூஜையில் அதிகாரம் கிடையாது. சாதாரணமாக வைதிகர்களும் தங்களுடைய வைஷ்ணவ காரியத்திற்காகச் சமயதீக்ஷை என்பதைச் செய்து கொள்கிருர்கள். இவர்களுக் குச் சமய தீக்ஷை ஆகம ரீதியில் கர்மாக்களைச் செய்ய அவசியமாக இருந்தாலும், பூணூல் போட்டுக்கொள்வது முதலிய கர்மாக்களை இவர்கள் வேத வழியிலேதான் செய்து வருகிருர்கள். பாஞ்சராத்ர ஆகமத்தையே தனிப் பட்ட வாழ்க்கைக்கும் ஆலய வழிபாட்டுக்கும் பின்பற்று பவர்கள் இன்று ஒருவரும் இல்லை.

பாஞ்சராத்திரத்தில் சேர்க்கைகள்

ஆகமங்களை வரலாற்று வழியில் பார்த்தால் ஆதி காலத்தில் ஆகமங்கள் வேதத்தை எதிர்த்தே நிற்கின்றன என்பது புலப்படும். பிறகு வேதக் கொள்கைகளுக்கும் இடம் கொடுக்கின்றன. அதற்குப் பிறகு வந்த சம்ஹிதை கள் வைதிக ஒழுக்கத்திற்கும், கர்மங்களுக்கும் பரிபூரண மாக இடம் கொடுத்துவிட்டன என்று தெரிகிறது. வேத மந்திரங்கள் பல தேவதைகளைப் பற்றி சொல்வதாலும், விஷ்ணுவுக்கு உரித்தான மந்திரங்களும் வேறு கொள்கை யோடு அமைந்திருப்பதாலும், தங்களுக்கு வேத மந்திரம் வேண்டாம் என்று சொல்லி பாஞ்சராத்திர நாம மந்திரங் களுக்கு ஆகமம் முக்கியத்துவத்தைக் கொடுத்துவிட்டது. தங்களுடைய வழிப்படி புதிதான ஸம்ஸ்காரங்களையும் வகுத்துவிட்டது.

அதுமட்டுமல்லாமல், தனித்தனியான கருத்துக்கள் கொண்ட முத்திரைகளும் அங்கு முக்கியமாக இருக்கின் றன. இதைக்கொண்டு பாஞ்சராத்திர தந்திரம் என்றும் இதைச் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. தமிழ் நாட்டிற்கு வந்த பிறகு ஆலயங்களோடு இது பூரணமாகக் கலக்கும் காலத்தில் அக்னியில் ஹோமம் பண்ணுவது என்று அக்னியில்வழிபடுவதையும்விக்ரகவழிபாட்டோடு ஆகமக் காரர்கள் கலந்துகொண்டு விட்டார்கள். ஆலய வழிபாடு, விக்ரக வழிபாடு இவைகளுக்கு இன்று ஆகமம்அடிப்படை யாக இருப்பதால் ஆலயம் சம்பந்தப்பட்ட வரையிலும் இந்த ஆகம நூல்களைப்பற்றிக் கவனித்துத்தான் ஆக வேண்டும்.

ஆகமக் கொள்கைகளுக்குள்ள பெயர்கள்

பாஞ்சராத்திர ஆகமக்கொள்கைகளுக்குக் பாஞ்சராத்திர கொள்கைகள் என்ற பெயரும் சாத்வதவிதி, பாகவத தர்மம், சித்ர சிகண்டி சாஸ்த்ரம், பாஞ்சராத்ர தந்த்ரம், வைணவ தர்மம் என்பதுபோன்ற பல பெயர்கள் இருந்து வருகின்றன. சாத்வத க்ரியா மார்க்கம் என்ற பெயரும்,

இருந்து வருகிறது. ஆகமம் என்ற சொல் வடமொழிச் சொல். புதிதாக வந்தது என்ற பொருளில் இது வழங்கப் படுகிறது. வைதிக மதத்திற்கு இந்த நூல்களின் கொள்கை தனியான இடத்திலிருந்து புதிதாக வந்திருப் பதால் இந்தப் பெயர் வந்திருக்கிறது என்றும் கூறலாம். ஆனால் நடைமுறையில் ஆகமம் என்ற சொல் பொதுவாக தெய்வத்தன்மையுள்ள சொல் வடிவிலுள்ள நூல்களை குறிப்பிடுவனவாகவும் ஆகிவிடுகிறது. வேதம் வேறு ஆகமம் வேறு என்ற கருத்து இரண்டிற்கும் கொள்கை அளவில் உள்ள வேறுபாட்டைத் தெரிவிக்கிறது. ஆனால் பிற்காலத்தில் ஆகமம் என்ற சொல்லால் வேதமும் சொல்லப்படுவதைப் பார்க்கிறோம். சாத்வதர்களிடை நிலவி வந்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நிற்பதால் சாத்வத விதி என்று இது கூறப்படுகிறது. ஆனால் பிற்காலத்தில் சாத்வத என்ற சொல் ஒரு இனத்தை குறிப்பிடுவதை விட்டுவிட்டு தெளிவான அறிவுள்ளவர்கள் என்ற பொருளில் ஆகமங்களிலேயே வழங்கத் தொடங்கிவிட்டது.

பகவானே நேருக்கு நேராக உபதேசித்தான் என்ற கொள்கை அடிப்படையாக இருப்பதால் பகவத் சாஸ்த்ரம் என்றும் கூறப்படுகிறது. சப்தரிஷிகள் 'சித்ர சிகண்டி கள்' என்று கூறப்படுகிறார்கள். ஒரு காலத்தில் அவர் கள் மூலம் இந்த சாஸ்திரம் வெளி வந்திருப்பதால் சித்ர சிகண்டி சாஸ்த்ரம் என்று சொல்லப்படுகிறது. வேதத் திலுள்ள விஷ்ணு என்ற சொல்லை வாசுதேவனோடு சேர்த்து காலக்கிரமத்தில் விஷ்ணு என்ற சொல்லை முக்கியமானதாக ஆக்கி பேசுவதால் வைணவ தர்மம் என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. அவ்விதமே வேதத்தி லுள்ள பகவான் என்ற சொல்லை எடுத்துக்கொண்டு அதை அடிப்படையாகக் கொண்டு உருவம் குணங்கள் இவைகளை விளக்கி, தனியான தெய்வமாக ஆக்கி பேசும் பண்பாட்டின்மூலம் பகவான் என்ற சொல்லும் விஷ்ணு வையே குறிப்பிடுவதாக ஆகிவிடுகிறது. அதனால்

பகவானைச் சேர்ந்த தர்மம் என்ற முறையில் பாகவத தர்மம் என்ற பெயருள்ளதாகவும் ஆகிவிடுகிறது. பாஞ்சராத்திரம் என்ற சொல் ஐந்து நாட்களைக் குறிப்பிடுகின்றது. ஐந்து நாட்களில் பகவான் ஐந்து பேர்களுக்கு உபதேசித்தார் என்ற பொருள் கிடைக்கிறது. பகலில்லாமல் இரவு வராது. அதனால் ராத்திரி என்ற சொல் பகலும் இரவும் உள்ள நாளைக் குறிக்கிறது.

விககேந்திர ஸம்ஹிதை, அநந்தன் — கருடன் — விஷ்வக்ஸேனர் — கபாலி — ப்ரம்மா இவர்கள் பகவானிடமிருந்து ஐந்து தினங்களில் உபதேசம் பெற்றார்கள் என்று கூறுகிறது. மகா சாந்த்குமார சம்ஹிதை ப்ரஹ்மா — இந்திரன் முதலியவர்கள் ஐந்து நாட்களில் உபதேசம் பெற்றார்கள் என்று குறிப்பிடுகிறது.பல சம்ஹிதைகள் அறியாமையைப் போக்க ஏற்பட்ட சாஸ்த்ரம் என்ற பொருளிலேயே பாஞ்சராத்திரம் என்னும் சொல் ஏற்பட்டதாகக் கூறுகின்றன.

சுவீராஜெயஸ்வால் என்பவர் (Origin & Development of Vishnimism) இதைப் பற்றிச் சர்ச்சை செய்யும் போது ஷார்டரைப் பின்பற்றி 5 விதமாக பகவான் இருப்பதால் இந்தப் பெயர் வந்திருக்கலாம் என்று கூறுகிறார். அவர் மேற்கோளாக எடுக்கும் அகிர்புத்னிய சம்ஹிதையில் ஐந்து அவதாரங்களைப்பற்றின ப்ரஸ்தாபம் இல்லை. பஞ்சராத்ரம் என்பது ஐந்து தினங்களில் செய்யப்படும் ஒரு தனியான வேத வேள்வி. இது சத்ரமில்லை. இதை விளக்கிக் கூறும் கதையில் நாராயணன் என்ற சொல் வருவதால் இதைப் பாஞ்சராத்ரம் என்று கூறுவதோ, பாஞ்சராத்திரக் கொள்கைகளுக்கு மூலம் என்று கூறுவதோ ஏற்கக்கூடியதன்று. 5 விதமாக பகவான் இருக்கிறார் என்ற கொள்கை மிகவும் பிற்காலத்தியது.

பாஞ்சராத்திர வளர்ச்சி

இந்தச் சம்ஹிதைகள் தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு படிப்படியாக வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆதி

காலத்தில் சிறிய அளவில்தான் ஆலயங்களில் இவை சம்பந்தப்பட்டிருந்தன. ஆனால் காலக்கிரமத்தில் மக்களுடைய ஆதரவு, உற்சாகம் இவை பெருகப் பெருக வழிபாட்டு வழிகளும் பெருக, அவற்றிற்கான சம்ஹிதைகளும் பெருகிவிட்டன. சம்ஹிதைகள் பிற்காலத்தில் வளர்ந்துள்ளதற்கு உரிய அடையாளத்தை நாம் கண்கூடாக பார்க்கிறோம். பாஞ்சராத்ர நூல் விளக்கம் என்ற நூலில் வெங்கடாச்சாரியும், ஸ்மித்தும் — சம்ஹிதைகளில் சடகோபர், இராமானுஜர், வேதாந்த தேசிகர், இவர்களை ஆகமங்கள் குறிப்பதால் இவர் காலத்துக்குப் பிறகே சில ஆகமங்கள் உண்டாகி இருக்கின்றன என்று கருதுகிறார்கள்.

உபேந்திர சம்ஹிதை முதலிலேயே நாதமுனி யாமுனர் (ஸ்ரீ ஆளவந்தார்) வேதாந்த தேசிகர் இவர்கள் வரலாற்றைக் கூறுகிறது. (அத்யாயம் 5 முதல் 8) மற்றொரு சம்ஹிதை (ப்ரஹத் ப்ரம்ம சம்ஹிதை) தென்கலை சம்பிரதாயப்படி திருமண் போட்டுக்கொள்வதையும் சொல்லுகிறது. இங்கு வேதாந்த விஷயங்களைக் கூறும் நாலாவது பாதம் இராமானுஜரின் நடையைப்போன்று அமைந்துளதோடு இராமானுஜர் பிறக்கப் போகிறார் என்று கூறுவதாகவும் தெரிவிக்கிறது

மேலும், தென்னாட்டுக்கு வந்த இந்த சம்ஹிதைகள் அந்தந்த க்ஷேத்திரத்தோடு ஐக்கியமாகிவிட்டதும் தெரிகிறது. தோத்தாத்திரி அல்லது வானமாமலை, மேல்கோட்டை, ஸ்ரீரங்கம் முதலிய ஊர்களைக் குறிப்பிடும் ஆகமங்கள் மிகமிகப் புராதனமானவை என்று ஒப்புக்கொள்ள முடியாது. மேலும் ஈசுவர சம்ஹிதை, பரமேசுவர சம்ஹிதை முதலிய நூல்களில் ஆழ்வார்களுடைய பாடல்கள், திராவிட ச்ருதி (தமிழ் வேதம்) என்று குறிப்பிடப்பட்டு யாகசாலையில் அவைகளுக்கு இடமும் அளிக்கப்படுவதால் அநேக சம்ஹிதைகள் ஆழ்வார் காலத்துக்குப் பிற்பட்டன என்பதும் தெளிவாகிறது.

மேலும் தனிப்பட்ட மனிதனின் ஒழுக்கத்தைச் சொல்லும் காலத்தில் நெற்றியில் போடவேண்டிய பல குறிகளைச் சொல்லுகின்றன. இவைகள் புராதனமானவை ஆகா என்பதும் தேற்றம். ஆகம ஸம்பிரதாயத்திலேயே மூன்று ரத்னங்கள் என்று குறிப்பிடப்படும், ஜயாக்யம், சாத்வதம், பௌஷ்கரம் என்ற இவை மூன்றும் ஆலய பூஜைகளுக்கான விதிகளை விஸ்தாரமாகச் சொல்ல வில்லை. இப்பொழுதுள்ள சம்ஹிதைகளில் பாத்மசம் ஹிதை ஒன்றுதான் பூரணமாகக் காணப்படுகிறது. இது காலத்தால் மிகவும் பிற்பட்டது என்று தெரிகிறது. அவ் விதமே ஸ்ரீபிரச்னசம்ஹிதை என்றஒன்றும் கும்பகோணத் திலும், திருமோகூரிலும் பின்பற்றப்படுகிறது. புராதன மான ஸ்ரீப்ரசந சம்ஹிதை ஒன்று இருந்து வந்திருப்பதாக வேதாந்த தேசிகருடைய நூலிலிருந்து அறிகிறோம்.

வ்யூகக் கோள்கை

பாஞ்சராத்ர ஆகமத்தின் வேதாந்தக் கொள்கையில் முதலாக நிற்பது வ்யூகக் கொள்கை. 'வ்யூகம்' என்ற சொல்லுக்கு பிரிந்து நிற்பது என்று பொருள். ஒரே தெய்வம் நான்கு விதமாக தன்னை வகுத்துக்கொண்டு நிற்கின்றது என்பது இதன் அடிப்படையான பொருள். வாசுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்று நான்கு விதமாக ஒரே கடவுளே இருக்கிறார் என்ற கொள்கை ஆகமத்திற்கு அடிப்படையானது. இந்த நான்கு வ்யூகங்களிலும் இருந்து ஏனைய விஷ்ணு மூர்த்தங்களும் உண்டாகின்றன என்று அவர்கள் கூறு கிறார்கள். வாசுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்ணன், அநிருத்தன் என்ற நான்கு உருவங்களுக்கும் சமமான நிலையைக் கொடுக்கவே வ்யூகம் என்ற கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. நான்கு விதமாக பகவான் இருந்து வருகிறார் என்ற அடிப்படையில் உபாசனம் செய்வது என்ற முறையை சாதுராத்ம்ய உபாசனம் என்று ஆகமங்கள் பரக்க பேசுகின்றன. கடவுள் ஒருவர்தான் என்ற உபநிஷத்தின் கொள்கைக்கும் நாலுவிதமாக இருந்து வருகிறான் என்ற கொள்கைக்கும் உறவே கிடையாது.

அதனாலேயே பாஞ்சராத்ர ஆகமத்தின் தெய்வக் கொள்கை உபநிஷத்தின் கொள்கையிலிருந்து வேறு பட்டு நிற்கின்றது. பஞ்சவீர பூஜையைப் பின்பற்றி சிந்தனை செய்ய ஆரம்பித்த ஆகமவேதாந்திகள் சிந்தனை செய்து வ்யூகக் கொள்கையை கண்டுபிடித்துள்ளார்கள் என்று தெரிகிறது. உபநிஷத்திற்குப் போட்டியாக இந்த சிந்தனை வளர்ந்திருப்பதால் ஆகம வேதாந்திகளும் சாதுராத்மிய உபாசனம் என்ற கொள்கையை வளர்த்துள்ளார்கள். வழிபாட்டில் மட்டும் நின்றிருந்த சாத்வதர்

களின் கொள்கை வேதாந்திகளின் கைக்கு வந்த பிறகு உபாசனமாக மாறிவிட்டது. காலக்கிரமத்தில் இந்த உபாசனமும், பலவித விஷ்ணுமூர்த்தி உபாசனங்களுக்கு இடம் கொடுத்துவிட்டது.

பிறகு காலக்கிரமத்தில் இந்த உபாசனம் நான்குவித விக்ரஹ வழிபாட்டிற்கு கருத்தளவில் இடம் கொடுத்து விட்டது. அதிலிருந்து விக்ரஹ வழிபாடும் பலவழிகளில் வளர்ந்துவிட்டது. ஆனால் அடிப்படையான நான்கு வ்யூகக் கொள்கையை கைவிடாமலே ஆகமம் பேசுவது மிகவும் கவனத்திற்குரியது. நான்கு வ்யூகக் கொள்கை கடவுள் இலக்கணத்தோடு சேர்க்கப்பட்டு வாசுதேவன் முழுமுதற்கடவுள், அவனே சங்கரஷண, ப்ரத்யும்ன, அநிருத்த ரூபமாக மூன்று அவதாரங்களைச் செய்து அழித்தல், பாதுகாத்தல், படைப்பு என்ற தொழில்களைச் செய்கிறான் என்று சொல்லுகிறார்கள். எளிய நடையிலிருந்த பஞ்சவீரபூஜை வேதாந்திகளின் கைக்கு போய் கடவுள் இலக்கணத்தை உட்கொண்டு வேதாந்தக் கொள்கையாக மாறி, உபாசனமாகவும் மாறிவிட்டது. பலவித உருவங்களை உட்கொண்டு பல மந்திரங்களை உருவாக்கி, பல உபாசனங்களையும் வகுத்துவிட்டார்கள். வ்யூகக் கொள்கையில் வரும் பெயர்கள் கிருஷ்ணாவதாரத்தோடு சம்பந்தப் படுவது வரலாற்று உண்மை. வாசுதேவர் கிருஷ்ணனே. சங்கர்ஷணன் அவருடைய அண்ணன், ப்ரத்யும்னன் பிள்ளை. அநிருத்தன் பேரன்.

தெய்வம் ஒன்றாக இருக்கவேண்டுமா பலவாக இருக்கலாமா என்பது பெரிய சர்ச்சை. மதக் கொள்கையின் சரித்ரத்தை கவனித்தோமானால் முதலில் பல தெய்வக்கொள்கை இருந்துவந்து, பிற்காலத்திலேயே ஒரு தேவதை கொள்கை உதயமாகிறதென்று தெரிகிறது. பல தேவதைக் கொள்கையும் ஆதி புருஷர்கள் எங்கெல்லாம் தெய்வ சக்தியை உணர்ந்தார்களோ அங்கெல்லாம் ஒரு தெய்வத்தை கற்பித்ததால் ஏற்

பட்டது. பல தேவதைக் கொள்கையில் அலுத்துப் போன பிறகு, யாராவது ஒருவரை தலைவராகக் கொண்டு மற்றவர்களை அவனுக்கு கட்டுப்பட்டவர்களாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதயமாகிறது. கிரேக்கர் களின் மத சரித்திரத்தில் இதைக் கண்கூடாக காண் கிறோம். உலக உதாரணத்தைக் கொண்டு இவ்வித எண்ணம் உண்டாகிறது. பலர் ஒருவனிடம் கட்டுப்பட வேண்டும். இந்நிலையில்தான் முதற் கடவுள் என்ற கொள்கை உதயமாகிறது.

ஆனால் ஏற்றத் தாழ்வுகளை ஒப்புக் கொண்டாலும் இதுவும் ஒரு வழியில் பல தேவதை கொள்கையாகத்தான் நிற்கிறது. அதனால் ஒரே கடவுள் தான். பல கிடையாது என்று மத சீர்திருத்த ஆசார்யர்கள் கூற ஆரம்பித்தனர். பழங்கால கொள்கைகளை மாற்றி புதிதாக ஒரே தேவதை கொள்கையை வற்புறுத்தினர். பைபிளின் பழைய ஏற்பாட்டு ஆசார்யர்கள், மஹமத் இவர்கள் இந்த வகுப் பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் காலத்தில் இருந்த வரலாற்று நிலை இவர்கள் இப்படி சிந்திக்க நிர்பந்தித்த தென்றும் தெரிகிறது. வேதங்களில் காணப்படும் பல தேவதை கொள்கை தனிவழியில் நிற்கிறது. தெய்வீக உணர்ச்சி தோன்றிய இடங்கள் எல்லாவற்றிலும் தெய் வத் தன்மையை வேதம் கற்பிக்கவில்லை. ஆனால் வேத ரிஷிகள் தங்களுடைய சிந்தனையில் கடவுளை உருவமாக்கி அவனுக்கு ஒரு இலக்கணத்தை ஏற்படுத்திக்கொண்டு இயற்கையிலோ இயற்கைக்கப்பாலோ வைத்துக் கடவுளை, தொழவேண்டுமென்று தோன்றிய பல இடங்களில் வழி பட்டு வந்தார்கள். கடவுள் இலக்கணம் ஒன்றுதான். ஆகையால், இதை பல இடத்தில் வைத்துத் தொழுவதில் தவறுதல் இல்லை. இது பல தேவதை வழிபாடாகாது.

பாஞ்சராத்ராகமம், வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற நான்கு தெய்வங்களை வழிபடச் சொல்வதால் பல தேவதைக் கொள்கையா, ஒரே தெய்வம் என்ற கொள்கையா என்ற ஐயம் உண்டா கிறது இயல்பு.

கூர்ந்து கவனித்தால் இது ஒருவகையில் ஏகதெய்வக் கொள்கையாகவும், மற்ருெரு வகையில் நான்கு இடங்களில் மட்டும் ஒப்புக்கொள்ளப்பட்ட பல தெய்வக் கொள்கையாகவும் ஆகிறது. தங்களுக்கு தெய்வ உணர்ச்சி ஏற்பட்ட எல்லா இடங்களிலும் தெய்வத் தன்மையை ஒப்பாததால் இதைக் கட்டுப்பாடில்லாத பல தெய்வக் கொள்கையாகச் சொல்ல முடியவில்லை. கடவுள் தத்துவத்தை ஒன்ருக ஒப்பி அது நான்கு இடங்களில் பரவி நிற்பதாகக் கூறுவதால் தெளிவான ஏக தெய்வக் கொள்கையாகவும் கொள்ள முடியவில்லை. இது தனிச் சிறப்பு வாய்ந்த தெய்வக் கொள்கை. இது தான் வ்யூகக் கொள்கை என்று சொல்லுகிருர்கள். கடவுள் தத்துவம் ஒன்றுதான். ஆனல், அது தன்னை நான்குவிதமாக வகுத்துக்கொண்டு நிற்கிறதென்று விளக்கம் கூறப்படுகிறது.

தெய்வ உணர்ச்சி தோன்றிய எல்லா இடங்களிலும் தெய்வத் தன்மையைக் கற்பிப்பதென்ற அடிப்படையில் இது அமையவில்லை. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற கடவுள் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டும் அமையவில்லை. ஆனல் வழிபாட்டிற்கு உரியவன் என்ற முறையிலேயே இங்கு கடவுள் தத்துவம் உதயமாகிறது.

ஆரம்ப காலத்தில் வ்ருஷ்ணி வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய முன்ஞேர்களில் தலைமையான நான்கு புருஷர்களை அவர்களுடைய காலத்திற்குப் பிறகு சிலைவைத்து வணங்கலாஞர்கள். இதை அடிப்படையாகக் கொண்டு சிந்தனை வளரும் காலத்தில் நான்கு பெயர்களுக்கும் சமமான நிலையைக் கொடுக்கவும் மற்றவர்களுக்குத் தெய்வத்தன்மை கிடையாதென்றும் மறுக்கவும், வியூகக் கொள்கை கையாளப்படுகிறது. வழிபாட்டிற்கு எண்ணிக்கை நிர்பந்தம் கிடையாது. அதனல் பாஞ்சராத்ராகம வழிபாட்டிற்கு வ்யூகக் கொள்கை நடு நாயகமாக விளங்குகிறது.

அவதாரக் கோள்கை

வ்யூகக் கொள்கையைப் போல் அவதாரம் என்ற கொள்கையும் ஆகமங்களில் முக்கியமான இடத்தை பெற்றிருக்கிறது. வ் யூ க க் கொள்கைக்கு பிறகுதான் இந்த கொள்கை பிறக்கிறது என்று தெரிகிறது. ஒரே தெய்வம் நான்கு இடங்களில் இருக்கிறது. என்ற கொள்-கை சிறிது காலமிருந்து வந்து பிறகு வாசுதேவனை முதற் கடவுளாகக் கொண்டு புராணங்களுடைய மும்மூர்த்தி களிடத்தில் அநிருத்தன், பிரத்யும்னன், சங்கர்ஷணன் இவர்கள் உண்டானுர்கள் என்று சொல்லி வாசுதேவ ருடைய அவதாரமாக மற்ற மூவர்களும் ஒப்பப்படுகிருர் கள். அவதாரம் என்ற சொல்லுக்கு கீழ் இறங்குவது என்று பொருள். கீழ் இறங்குவது என்பது மேலிடத்தில் வஸ்துவிற்கு குறிப்பிடப்படுகிறது. ஒரு பொருள் மேலிடத் தில் இருந்து அதுவே கீழ் இறங்குவது என்ற கருத்து அவதாரம் என்று சொல்லிலிருந்து கிடைக்கிறது. தன் னுடைய இடத்திலிருந்து கீழ் இறங்குவதும் தன்னுடைய உருவத்தை மாற்றி கீழ் நிலையிலுள்ள பல உருவங்களை எடுப்பதும் அவதாரக் கொள்கையின் அடிப்படையான கருத்து. பிறக்கும் இயல்பில்லாமல் உயர் நிலையிலிருந்த தெய்வம் தாழ்ந்துள்ள நிலையை அடைந்து பிறப்பை எடுப்பதும் அவதாரக் கொள்கையைச் சார்ந்தது. இந்தக் கொள்கையும் உபநிடதக்கருத்தோடு ஒத்துப்போகக் கூடியதில்லை.

உபநிடதம் ப்ரம்மம் பிறக்காதது என்றும் ஒரே நிலையி லேயே எப்பொழுதும் இருந்து வருகிறது என்றும் கூறு கிறது. ப்ரம்மம் ஒருகுறிப்பிட்ட உருவத்தோடு இருந்தால், குறிப்பிட்ட இடத்திலிருந்தால் மேலிருந்து கீழ் இறங்கும். அப்பொழுது அவதாரக் கொள்கையை பிரம்மத்தினிடத்

தில் ஏறிடலாம். அவ்விதமில்லை, பிரும்மத்திற்கு தனியான இடமும் இல்லை. உருவமில்லை, தனியாக தன் இயற்கையை மாற்றிக்கொள்ளாது. வைணவர்கள் உபநிடத்தின் பிரம்மக் கொள்கையையும் ஆகமங்களின் அவதாரக் கொள்கையையும் ஒப்புக்கொள்ளுவதால் இரண்டையும் சமரசப்படுத்த மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த அவதாரக் கொள்கையின் அடிப்படை புராணங்களிலும் பரவிட்டது. ஆனால் வைணவம் சம்பந்தப்பட்ட வரையில் எங்கிருந்து எந்த அவதாரம் உண்டாகிறது. என்ற கருத்தை வெளியிடுவதில் வேற்றுமை காணப்படுகிறது. புராணங்கள் ஸ்ரீவைகுண்டத்திலுள்ள பகவானே அவதாரம் பண்ணுகிறான் என்று கூறுகின்றன.

ஆனால் ஆகமங்கள் தங்கள் வழியிலேயே அவதாரங்களை விளக்குகின்றன. வ்யூகங்களிலிருந்துதான் அவதாரங்கள் ஏற்படுகின்றன என்று ஆகமங்கள் கூறுகின்றன. ஆகமங்களில் அவதாரம் என்ற கொள்கை பிறந்திருந்தாலும் அது இன்றைய ஹிந்து மதத்திற்கு ஜீவநாடியாக ஆகிவிட்டது. பிறப்பில்லாதவன் ; பிறக்கிறான். மாறுதலடையாதவன் ; மாறுதலை அடைகிறான். என்பது சிக்கல் நிறைந்த கொள்கைதான். யார் எந்த வழியில் அவதாரங்களை விளக்கினாலும், கொள்கையளவில் அது வேரூன்றிவிட்டது. மறுக்க முடியாதது. அவதாரக் கருத்தை கீதை விளக்கும் வழியை கவனிப்போம்.

கீதையில் நான்காம் அத்தியாயம் அவதாரக் கொள்கையை வெளியிடுகிறது. பகவான் அருச்சுனனிடம் ' நான் புதிதாக ஒன்றையும் இப்பொழுது உபதேசிக்கவில்லை. ஆதியில் விவஸ்வானுக்கு நான் இதனை உபதேசிக்க அவன் மநுவுக்கும், மநு இக்ஷ்வாகுக்கும் உபதேசிக்க, இப்படிப் பரம்பரையாக வந்த யோகத்தை ராஜரிஷிகள் அறிவார்கள். வெகு காலத்திற்குப் பிறகு மறைந்போன யோகத்தை இன்று நான் உனக்கு உபதேசிக்கிறேன் ' என்கிறார். கிருஷ்ணன் ஆதிகாலத்தில்

விவஸ்வானுக்கு எப்படி உபதேசித்திருக்க முடியும் என்ற வினுவுக்கு விடையாக, தமக்கும் அருச்சுனனுக்கும் பல பிறப்புக்கள் உண்டு என்று கூறி, நான் பிறப்பு இறப்பு அற்றவனுக, உயிர்களைக் காப்பவனுக இருந்தாலும் என்னுடைய தனியான இயற்கையைப் பின்பற்றி என்னுடைய மாயையால் (பிரகிருதி) நான் பிறக்கிறேன்' என்று குறிப்பிடுகிருர். தர்மம் தளர அதர்மம் ஓங்கும் போது தீயோரை ஒறுத்து நல்லோரைப் பாதுகாத்துத் தர்மத்தை நிலைபெறச் செய்யத் தாம் பிறப்பதாகப் பகவான் கூறுகிருர். விஷ்ணு புராணத்திலும் உலக நன்மைக்காக இறைவன் நம் உடம்புபோல் அல்லாத தெய்வ உடல் எடுத்துச் செய்யும் அவதாரம் கூறப்படுகிறது. ஸ்ரீ பாகவதத்திலும் அடியார்களைக் காக்க இறைவன் அவதாரம் செய்வது கூறப்படுகிறது.

பகவான் உலகமாகவே ஆகிவிடுவதால் உலகில் உள்ளன எல்லாம் பகவானுடைய அவதாரம் எனினும் உலகப் பொருள்களில் பகவான் அந்தர்யாமியாகவே கலந்திருப்பதால் அவற்றை அப்பெயரிட்டு அழைப்பதில்லை. இறைவன் மாயா சம்பந்தமில்லாமல் தானே எடுக்கும் அவதாரம் ஆகமங்களில் 'சுத்த சிருஷ்டி' என்று கூறப்படுகிறது. அவதாரக் கருத்துக்களை வெளியிடும் ஆகமங்கள் பத்மநாபன் முதலான 36 அவதாரங்களைச் சொல்லுகின்றன. விஷ்ணுவின் தசாவதாரங்களும், இந்த 36க்குள் அடங்கும். மக்களின் தெய்வ நம்பிக்கை எங்கெங்கு இருந்து வருகிறதோ அவையவை அவதாரங்களின் இருப்பிடமாய் அமைந்தன.

மேம்போக்காகப் பார்க்குமிடத்து ஆகமங்களே அவதாரக் கொள்கைகளை முதல் முதல் வெளியிடுவனவாகத் தோன்றினும் கூர்ந்து நோக்குமிடத்து வேதங்களே அவதாரக் கொள்கைக்கு அடிப்படையாகும் என்பது பெறப்படும். சுக்ல யஜுர் வேதத்திலுள்ள புருஷ ஸூக்தத்தின் இரண்டாம் அநுவாகத்தில் 'பிறக்காதவன் பிறக்கிருன்' என்ற ஒரு கருத்து காணப்படுகிறது.

யூபத்தில் கயிறுகட்டும் பொழுது சொல்லப்படும் விஷ்ணு வைச் சேர்ந்த மந்திரம் ஒன்று 'அவன் பிறந்து கொண்டு பெருமையை அடைகிருன்' என்று கூறுகிறது. இக் கருத்துக்களின் விளக்கமே அவதாரம் என்று ஏற்படு கிறது. தெய்வக்கொள்கை வேறு, வேதாந்தக் கொள்கை வேறு. உபநிஷத்தின் வேதாந்தக் கொள்கைப்படி அவதாரம் கிடையாது. வேதத்தில் காணப்படும் தெய் வக் கொள்கைப்படி கடவுளுக்கும் பிறப்பு உண்டு என்று ஏற்படுகிறது.

பஞ்சவீர பூஜை

வ்யூகக் கொள்கை ஒருபுறம் இருக்க பஞ்சவீர பூஜை என்ற வழிபாட்டு முறையும் சாத்வதர்(விருஷ்ணிகள்)களிடம் ஆதிகாலத்தில் இருந்து வந்திருக்கிறது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். பஞ்சவீரர்கள் வேறு யாருமல்ல. நான்குவ்யூகத்தில்காணப்படும்தெய்வங்களே. ஆனால் ஐந்தாவதாக கிருஷ்ண பரமாத்மாவின் மற்றொரு பிள்ளையான சாம்பன் அல்லது கண்ணனின் உடன் பிறந்தாளான சுபத்திரை இவர்களை சேர்த்து பஞ்ச வீரர்களாக ஆக்கி இவர்களை வழிபடும் கொள்கைக்கு பஞ்ச வீர பூஜை என்று பெயரிட்டார்கள் என்று தெரிகிறது. இப்பொழுதும் இது கிருஷ்ண பரமாத்மாவின் குடும்பத்தோடு நின்றுவிட்டது. பஞ்சவீர பூஜையை வைகான ஆகமமும் பிற்காலத்தில் எடுத்துக்கொண்டு ஐந்து மூல விக்ரஹங்களுக்கும் வேறு பெயரைச் சொல்லுகின்றது. சமீபத்திலுள்ள நாச்சியார்கோவிலில் மூலஸ்தானத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிம்பங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். ஆராய்ச்சியாளர்கள் பெரிய கர்ப்ப கிரகங்கள் உள்ள கோவில்களில் ஆதிகாலத்தில் பஞ்சவீரபூஜை இருந்திருப்பதாக கருதுகிறார்கள். ஒரு குடும்பத்திலேயே அடங்கிவந்த விக்ரஹ வழிபாட்டுக் கொள்கை இரண்டாயிரம் வருடங்களில் எப்படி வளர்ந்திருக்கிறது என்பதை நூல்கள் மூலமாகவும் கல்வெட்டுக்கள் மூலமாகவும் ஆலயங்கள் மூலமாகவும் நாம் பார்க்கிறோம்.

ஆலயத்தின் அடிப்படையாக அமைந்துள்ள நான்கு தெய்வங்களை இன்றும் ஆலய வழிபாடு கைவிடாமலே வளர்ந்துள்ளது. உற்சவங்கள் பூஜைக்ள் எவ்வளவு வளர்ந்திருந்தாலும், நான்கு வ்யூகங்களின் பெயர்களைத் தான் இன்றும் முக்கியமாக பயன்படுத்துகிறார்கள்.

ஹோம மந்த்ரங்களும் நான்கு வ்யூகங்களைத்தான் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஸ்தல புராணங்கள் இதிகாச புராணங்கள் இவை மூர்த்திகளுக்கு பல பெயர்களைச் சொன்னாலும் நான்கு வ்யூகங்களிலேயே இவை அடக்கப்பட்டுள்ளன. இன்றும் புதிதாக ஒரு ஆலயத்தைக் கட்டி நம் இஷ்டப்படி பெயர் உருவங்களை தெய்வத்திற்கு கொடுத்தாலும் இவையும் நான்கு வ்யூகக் கொள்கையிலேஅடக்கப்பட்டுவிடுகின்றன. ஆதிகாலத்திலிருந்த பஞ்சவீர பூஜையின் அடிப்படைக் கொள்கைகள் விரிவான அடிப்படையில் அமைந்திருப்பதால் எல்லா விஷ்ணு தெய்வங்களையும் உட்கொள்ளும் சக்தி அதற்கு வந்துவிட்டது. அதுமட்டுமல்லாமல் பஞ்சவீர பூஜையின் சம்பிரதாயம் இன்னும் பின்பற்றப்படுவதற்குக் காரணம் அதன் வலிமையே. நான்கு வ்யூகங்களுடைய உருவம் பெயர் இவை மாற்றப்பட்டு இன்று வேறு உருவம் பெயர் இவைகளோடு இருந்தாலும் அதை வ்யூகங்களின் பெயர்களைக் கொண்டே குறிப்பிடுவது பஞ்சவீர பூஜையின் வலிமையைத் தெரிவிக்கிறது.

பாஞ்சராத்ரத்தில் காணும் வழிபாட்டு முறையில் அமைந்துள்ள சித்தாந்தங்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட மூல பேரங்களை வைத்து வழிபடும் வழியை பஞ்சவீர வழிபாட்டில் பார்த்தோம். பிற்காலத்தில் அநேக மூலபேரங்களை வைத்து வழிபடும் கொள்கைக்கு மிகுந்த ப்ரபல்யம் ஏற்பட்டு சித்தாந்தங்கள் என்ற பெயரால் நான்குவிதமாக வளர்த்து விட்டது. பிற்கால ஆகமங்களில் மந்த்ர சித்தாந்தம், ஆகம சித்தாந்தம், தந்த்ர சித்தாந்தம், தந்த்ராந்த்ர சித்தாந்தம் என்று நான்கு வகையாக சித்தாந்தங்களை பிரிந்திருக்கின்றன. இவைகளுடைய மூர்த்தி மந்திரங்களே வேறு; மூர்த்திகளின் அமைப்பே வேறு; பூஜாவழிபாட்டின்வழியேவேறு. அந்தந்த சித்தாந்தங்களின் தீட்சை பெற்றவர்களே அந்த சித்தாந்தங்களின்படி பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஆலயத்தில் பூஜை பண்ணலாம். ஒரு சித்தாந்தத்தில் தீட்சை பெற்றவர் மற்ளுரு சித்தாந்தப்படி நடந்துவரும் ஆலயத்தில் பூஜை செய்தால் பெரிய பிராயசித்தம் உண்டு. மறுபடியும் பிரதிஷ்டை பண்ணவேண்டும், இவைகளில் ஆகம சித்தாந்தம் மோட்சத்தை மட்டும் கொடுக்க ஏற்பட்டது. மந்திர சித்தாந்தம் அஷ்ட ஐஸ்வர்ய சித்தியையும் மோட்சத்தையும் கொடுக்க ஏற்பட்டது. தந்த்ர சித்தாந்தம் தர்மார்த்த காமம் மோட்சம் என்ற நான்குவித குறிக்கோளையும் அடையச் செய்வது. தந்த்ராந்தரசித்தாந்தம் விரும்புவதை கொடுக்கக் கூடியது. (ஹயக்ரீவ ஸம்ஹிதை) ஒரே மூல மூர்த்தியை முக்கியமாகக்கொண்டு ஸ்ரீ முதலான மூர்த்திகளை பரிவாரமாகக் கொண்டு பூஜை நடக்கும் இடத்திற்கு

மந்த்ர சித்தாந்தம் என்று பெயர். இங்கு மூலமூர்த்தி உருவோடு இருக்கவேண்டும். மற்ற பரிவாரங்கள் விக்ரஹத்தில் இருந்தாலும் இருக்கலாம். இல்லாமல் போனுலும் போகலாம். வாசுதேவன் முதலான நான்கு வ்யூகங்களை சமமாக வைத்து பாவித்து வழிபடும் மார்க்கத்திற்கு ஆகம சித்தாந்தம் என்று பெயர். ஒன்பது மூர்த்திகளையும் முக்கியமாக பாவித்து அவைகளுடைய அங்கமாக பன்னிரண்டு மூர்த்திகளையும் அவர்களுடைய அவதாரங்களையும் அவதார கூட்டங்களையும் வேறு மூர்த்திகளுடைய கணங்களையும் திக்தேவதைகளுடனும் லெக்ஷ்மீ முதலான தேவிகளோடும் கூட வழிபாடு நடத்தும் கொள்கைக்கு தந்த்ர சித்தாந்தம் என்று பெயர்.

தந்த்ராத்திர சித்தாந்தத்தில் ஒன்றுமுதல் பல முகங்களுள்ள மூர்த்தி முக்கியமானதாக விளங்குகிறது. ஒரு முகம் அழகான உருவமுள்ளதாயும் மற்ருெரு உருவம் சிம்மம்போல் உருவமுள்ளதாயும் இருக்கும். ஒரே மூர்த்தி இங்கு முக்கியமானதாகும் இதற்கு தந்த்ராத்திரம் பெயர். இந்த சித்தாந்தங்களைப்பற்றி வேதாந்த தேசிகர் பாஞ்சராத்ர ரக்ஷை என்ற நூலில் விஸ்தாரமாக சர்ச்சை செய்து எல்லா சித்தாந்தங்களும் மோட்சத்தை அடைவதற்கு வழிகள்தான் என்று முடிவு செய்கிருர். அவருடைய காலத்தில் இவ்வித சித்தாந்தங்களைப் பற்றின சர்ச்சை பலமாக இருந்திருக்கிறது என்று தெரிகின்றது. பத்ம ஸம்ஹிதை பரமேஸ்வர ஸம்ஹிதை, பௌஷ்கர ஸம்ஹிதை போன்றவை இந்த சித்தாந்தங்களுக்கு வேறுபட்டு இலக்கணங்களை கூறுகின்றன. ஆனுல் இன்று இவ்வித கொள்கைகளின் சுவடையே காணேம். எங்கும் ஒரே மூலமூர்த்தியை வைத்து வழிபடுவது என்ற பழக்கமே தங்கி நிற்கிறது. ஒரேவிதமான பூஜையே எல்லாவிடத்திலும் நடப்பதால் தந்த்ரங்கள் கலப்பதற்கு இடமேயில்லாமல் போய்விடுகிறது.

—::—

மேலும் பாஞ்சராத்ர நூல்களின் ஆரம்ப காலத்தில் சித்தாந்தங்கள் என்ற பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட பல பிம்பங்களை வைத்து வழிபடச் சொல்லப்பட்டிருப்பது போல் 'பஞ்சாயதன பூஜை' என்ற கொள்கையும் ஆரம்ப காலத்தில் இருந்து வந்திருக்கிறது என்று தெரிகிறது. பஞ்சாயதன பூஜை என்ற கொள்கை 'பஞ்சவீர பூஜையைப்' பின்பற்றி வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ஸ்மிருதிகளில் காணப்படும் இந்த பஞ்சாயதன பூஜை பல தெய்வங்களைச் சமமாக நினைத்து தொழுவது தான். இவர்கள் எல்லோரும் வேதத்தில் காணப்படும் தேவதைகள் தான். பிற்கால ஆகமங்களிலும் பஞ்சாயதனபூஜை இடம் பெற்றிருப்பதாக ஆலய சிற்ப ஆராய்ச்சி வல்லுநர் சௌந்தரராஜன் கருதுகிறார். பஞ்சாயதனம் மட்டும் அல்ல, 'நவாயதன பூஜை' (ஒன்பது இடங்களில் பிம்பங்களை வைத்துத் தொழுவது) 'துவாதசாயன பூஜை' (பன்னிரண்டு இடங்களில் பிம்பங்களை வைத்துத் தொழுவது) என்ற அளவுக்குப் பூஜை வளர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. 'ஹயசீர்ஷ' பாஞ்சராத்திரத்தில் ஆதிகாண்டத்தில் இதைப்பற்றின தகவல் இருப்பதாக அவர் கூறுகிறார். அதன்படி விஷ்ணு, வாசுதேவன் நடுவிலும், வாமனன் தெற்குத் திக்கிலும், நரசிம்மன் வடமேற்குத் திக்கிலும், ஹயக்ரீவன் ஆக்னேயத்திலும், வராகன் ஈசான திக்கிலும், வைக்கச் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. வராகனுடைய ஸ்தானத்தில் நாராயணனுடைய பிம்பத்தைவைத்து மற்றொரு பஞ்சாயதனம் விகல்பமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நடுவில் நாராயணன், அம்பிகை தென்கிழக்கு, சூரியன் தென்மேற்கு, பிரம்மா வடமேற்கு, லிங்கம் வட

கிழக்கு என்ற முறையும் உண்டு. இந்த இரு வழிகளிலும் விஷ்ணு ப்ரதானமாக இருப்பது கவனிக்கத்தக்கது. இவ்விதப் பழக்கம் பத்தாவது நூற்றுண்டு வரை தொடர்ந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. நவாயதன பூஜையில் புருஷோத்தமன் நடுவிலும், சத்யபாமா தென்கிழக்கிலும், அம்பிகா தென்மேற்கிலும், சரஸ்வதி வடமேற்கிலும், பத்மா வடகிழக்கிலும் சொல்லப்பட்டிருக்கிருர்கள். லக்ஷ்மி, வைச்ரவணன், மாத்ரு கணங்கள், ஸ்கந்தன், ஈசானன், கணேசன் இவர்கள் நவக்கிரகங்கள் இவைகளும் இடம் பெறுகின்றன. தசாவதாரங்கள் வடபகுதியிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனல், இந்த வழியை வகுக்கும் ஆகமத்தில் இவ்வித ஆலயங்களுக்குக் கும்பாபிஷேகத்தைச் செய்யக் காவேரி ஆற்றின் பக்கம், பீகார், அஸ்ஸாம், ஒரிசா, காஞ்சி, காஷ்மீரம் முதலிய இடங்களிலிருந்து பூஜகர்களை வரவழைக்கக்கூடாது என்று சொல்லப்படுகிறது. இந்தப் பழக்கத்திற்குக் கங்கை சமவெளிதான் முக்கியமான இடமாகக் காணப்படுகிறது உதயப்பூர் சமீபத்திலுள்ள நாகாலா என்ற இடத்தில் பல பிம்பங்கள் மூல பிம்பங்களாகவைக்கப்பட்டுள்ளசெய்திகாணப்படுகிறது.இவ்வித பல பிம்பங்களுள்ள ஆலயங்கள் அங்கு மிகுதியாகஉள்ள செய்தியும் அறிவிக்கப்படுகிறது. பிரம்மா, துர்க்கை, நரசிம்மன் இவர்களுடைய தலைமையில் உள்ள ஆலயங்களிலும் பல பிம்பவழிபாடுகள் இருந்து வந்திருக்கின்றன. அவ்விதமே ராகவராமன், பரசுராமன், பலராமன் இவர்கள் மூன்றுபேரும் சேர்ந்தாற்போல் வழிபடபட்டிருக்கிருர்கள். பல பிம்பங்களை வைத்துத் தொழும் பழக்கம் பஞ்சவீர பூஜையின் விளைவாகத்தான் ஏற்பட்டது என்பதை மறுக்கமுடியாது. குஜராத்திலுள்ள விஷ்ணு பஞ்சாயதனம் போல் பல பஞ்சாயதன பூஜை பல இடங்களில் வளர்ந்திருக்கிறது. துவாரகையிலுள்ள ஆலயத்திலும் விஷ்ணு பஞ்சாயதனம்தான் இருந்திருக்கிறது. ப்ரத்யும்னன், புருஷோத்தமன், த்ரிவிக்ரமன், வேணிமாதவன் இவர்களும் மற்றும் பல பிம்பங்களும் இருந்து வந்திருக்கின்றன. அங்கேயே குசேசுவர்மாதவன் என்று பெயருள்ள பிம்பமும் இருந்து வந்திருக்கிறது. (Main and Parivara SHIRINES SOME ASPECTS. Transactions of the Archalotogical Society of South India.)

விக்ரஹ வழிபாட்டின் பிறப்பும், வரலாறும்

பாஞ்சராத்ர கருத்துக்களுக்கு 'சாத்வத் விதி' என்ற பெயர் இருப்பதால், விக்ரஹ வழிபாடு அவர்களிடமிருந்து தான் ஆரம்பமாகிறது என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. அவர்கள் எந்த சூழ்நிலையில் எந்த நோக்கத்தோடு எவ்விதம் விக்ரஹ வழிபாட்டை ஆரம் பித்தார்கள் என்று ஆராய்வது மிகவும் அவசியமாகிறது. பாஞ்சராத்ர சம்ஹிதைகள் நாராயணீயம் மற்ற ஸ்மிருதி கள் இதிகாசங்கள், புராணங்கள், கல்வெட்டுக்கள் இவை களை ஆழ்ந்துகவனித்தால் சிலஉண்மைகள் வெளியாகின் றன. வரலாற்று ஆசிரியர்கள் இவைகளை அடிப்படையா கக் கொண்டுதான் வைணவத்தினுடைய வரலாற்றை உருவாக்குகிறுர்கள். ஆலய வழிபாட்டிற்கு மூலமாக அமைந்துள்ள வ்யூகங்கள் வாசுதேவ, சங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தன் என்று குறிப்பிடப்படுகிறுர்கள். இவர்களில் வாசுதேவன் என்பவர் கண்ணன்தான் சங்கர்ஷணன் என்பான் அவருடைய அண்ணனை பலராமன் ப்ரத்யும்னன் பகவானின் பிள்ளை, அநிருத்தன் பகவானுடைய பேரன். இந்த நான்கு பேர்களும் கிருஷ்ணனுடைய குடும்பத்தோடு சம்பந்தப்பட்டிருப் பதால் கிருஷ்ணவதார காலத்திற்கு பிறகுதான் இவர்களை வழிபடும் கொள்கை உருவாகியுள்ளது என்று நினைக்க வேண்டி வருகிறது.

கிருஷ்ணனுடைய இனம் சாத்வத இனம் என்று கூறப்படுகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் இந்த கருத்து தெளிவாகச் சொல்லப்படுகிறது. சாத்வதர்கள் வேத கால மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஐத்ரேயே

ப்ராம்மணத்தின் மூலம் அறிகிறோம். ஆகவே, சாத்வதர்கள், வரலாற்றில் பிறந்து வளர்ந்தவர்கள் என்றும் அவர்களுடைய இனத்தில் கண்ணன் பிறந்தான் என்றும் தெரிகிறது. கண்ணனுடைய வீரச் செயல்கள் அவருடைய இனத்திற்கு பெருமையை அளித்துள்ளது. அவ்விதமே சங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் இவர்களுடைய வீரச் செயல்களும் சாத்வதர்கள் உயர மிகவும் உதவியுள்ளது. இவர்களுடைய வீரச் செயல்களை சங்க கால தமிழ் நூல்களிலும் நாம் பார்க்கின்றோம். இவர்களால் மேன்மையடைந்த சாத்வதர்கள் அவர்களுடைய காலத்திற்குப் பிறகு அவர்களுக்கு சிலையை வைத்து வழிபட ஆரம்பித்தார்கள் என்று தெரிகிறது.

வாசுதேவன் முதலானவர்களின் உருவம் அவர்களுக்குத் தெரிந்திருந்ததினால் அவர்களுக்கு பிம்பம் அமைப்பது எளிதாகிவிட்டது. அந்த உருவம் உள்ள பிம்பங்களை வைத்து புஷ்பங்களால் அர்ச்சித்து அவர்கள் தங்களுடைய அன்பை காண்பித்து வந்தார்கள். உயிரோடிருந்தால் எப்படி பணிவுடன் நடந்துகொள்வார்களோ அப்படியே விக்ரஹங்களை உபசரித்து வந்துள்ளார்கள். முழுக்காட்டி துணி உடுத்தி பூச்சூட்டி சந்தனம் பூசி தூப தீபங்களைகாட்டிவந்துள்ளார். இதுதான் பூவினால்செய்யப் படும் பூசை. தன்னுடைய அன்பையும் மரியாதையும் பூச்சொரிவது மூலம் தெரிவிக்கும் இந்த எளிதான கர்மாவைதான் ஆழ்வார்களும் தங்களுடைய பாடல்களில் வழிபாடாகக் குறிப்பிடுகிறார்கள். எளிதான இந்த முறை மக்களின் கவனத்தைக் கவர்ந்து வளர ஆரம்பித்தவுடன்; அறிவாளிகள் உட்புகுந்து இதன் வேதாந்தக் கொள்கையை வகுக்க ஆரம்பிக்கிறார்கள். அக்னியை வளர்த்து ஓமம் பண்ணும் பழக்கமுள்ள வேதமதத்தினர் இதை எடுத்துக் கொண்டார்கள். வேதத்தில் காணப்படும் பண்பாட்டில் விக்ரஹ வழிபாடு கலக்கவேயில்லை. கலந்திருந்தால் வேதகர்மாக்களுக்கு பிரயோகம் எழுதிய கல்ப சூத்திரக் காரர்கள் இதை விட்டிருக்கமாட்டார்கள். சுத்த

மாகச் செய்யும் ச்ரௌதகர்மாவில் அக்னிமூலம் வழிபாடு காணப்படுகிறதேயன்றி விக்ரஹ வழிபாடு காணப்பட வில்லே. ரிக்வேதத்தில் மரப்பதுமைகள் எடுத்துக்காட் டாக சொல்லப்பட்டுள்ளன. தெய்வத்திற்கு விக்ரஹங் கள் சொல்லப்படவில்லே. உபநிஷத்துக்கள் உருவமில் லாத ப்ரம்மத்தை த்யானம் பண்ண வற்புறுத்திலுைம் கர்மகாண்ட மந்த்ரங்களில் கடவுள் தத்துவத்திற்கு அழகான உருவம் மனித உருவம் குணங்கள் இவைகள் சொல்லப்படுகின்றன.

இயற்கையில் கடவுள் தத்துவத்தை வைத்து அனுப வித்தாலும் கடவுளே கருணைக் கடலாகவும் அறிவுள்ள சக்தியாகவும் கொண்டாடி பேசுகிருர்கள். உருவமுள்ள கடவுளே மனித உறவில் வழிபடச் செய்ய கர்மகாண்டம் வழிவகுக்கிறது. ஆனால் ஓரிடத்திலாவது பிம்பத்தைப் பற்றி மறைமுகமாகக் கூட கூறவில்லே. குறிப்பிட்ட தர்மத்தை விளக்கவந்துள்ள இதிகாச புராணங்களும் ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவைகளே தங்கள் கொள்கையில் சேர்த்துக் கொள்ளவில்லே.

சில இடங்களில் புராணங்களில் ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவை குறிப்பிடப்படுவது அந்தந்த காலத்தின் நிலேமையைத்தான் விளக்கும். புராணங்களின் அடிப்படைக் கொள்கையோடு விக்ரஹ வழிபாட்டிற்கு நேர் உறவு கிடையாது. உதாரணமாக ருக்மணி கல்யாண காலத்தில் ருக்மணி துர்கையை பூஜித்ததாக பாகவதம் தெரிவிக்கிறது. ஆனால் சீதா கல்யாணத்தில் இவ்வித வரலாற்றை நாம் பார்க்க முடியவில்லே. ஆகவே ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவை வேதம் ஸ்மிருதிகள் இதிகாச புராணங்கள் இவைகளுக்குப் பிறகு தெய்வ வழிபாட்டில் வந்து கலக்கின்றன என்று தெரிகிறது.

எளிய நடையில் விருஷ்ணிகளிடம் இருந்துவந்து விக்ரஹ வழிபாடு, ஆடம்பரமான தெய்வக் கொள்கை

களையோ வேதாந்தக் கொள்கைகளையோ பின்பற்றி ஏற்பட்டதன்று. சாத்வதர்களின் விக்ரஹ வழிபாடு காஷ்மீரத்தில் வேதாந்தக் கருத்துக்களோடு இணைகிறது. வேதாந்த ரீதியில் உபாசனையாக மாறி த்யானத்திற்கு மட்டும் உதவுகிறது. உபநிஷத்துக்களின் கருத்துக் களோடு சேர்ந்து மலர்ந்துவிடுகிறது. ஆனால் பொது மக்களிடை பரவிவந்த விக்ரஹ வழிபாடு வெகுநாள்வரை வடநாட்டில் வாழ்ந்திருந்து காலக்கிரமத்தில் மறைந்து விட்டது.

ஆனால் அதே வழிபாட்டுக்கொள்கை தமிழ்நாட்டை அடைந்த பிறகு மிகவும் பெரியதாக வளர்ந்து, எல்லா விஷ்ணு மூர்த்தங்களையும் உட்கொண்டு, பல உருவில் வணங்கப்பட்டு இன்றும் வாழ்ந்து வருகிறது. தமிழ் நாட்டில் சங்க காலத்தில் இருந்த ஆலயங்களை ஆராய்ந் தால், வ்யூகங்களுடைய பெயராலேயே ஆலயங்கள் இருந்து வந்திருப்பது தெரிகிறது காவிரிப்பூம்பட்டினத் திலும் மதுரையிலும் கண்ணனுடைய அண்ணன், பலராமனுக்கு (சங்கர்ஷணன்) ஆலயம் இருந்தாக சிலப் பதிகாரம் முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன. நக்கீரர் பலராமனையும், அவருடைய குணங்களையும் உவமையில் குறிப்பிட்டு பேசுகிறார். ஆனால் வாசுதேனுக்கு தனியான ஆலயம் இருந்ததாகத் தெரியவில்லை. பலராமனுடைய வழிபாடு காலக்கிரமத்தில் பல பெயர்களோடு இன்று காணப்படும் தெய்வ வழிபாட்டிற்கு இடம் கொடுத்து மறைந்துவிட்டது என்று தெரிகிறது. பரிபாடல் திருமாலிருஞ் சோலையில் பலராமனுக்கு ஆலயம் இருந்த தாக குறிப்பிடுகிறது.

காலக்கிரமத்தில் நான்கு வ்யூகங்களில் ப்ரத்யும்னன்' அநிருத்தன் இவர்களுடைய வழிபாடு சிறிது சிறிதாக மறைந்து வாசுதேவ சங்கர்ஷணன் இவர்கள் வழிபாட் டில் போட்டி ஏற்பட்டு பாமர மக்கள் சங்கர்ஷண வழிபாட்டை கைக்கொண்டு விட்டார்கள். வாசுதேவ

வழிபாடு நாராயண வழிபாடோடு ஒன்ருக ஆகி பலவித தெய்வக் கொள்கைகளுக்கு இருப்பிடமாக ஆகிவிட்டது. இன்று தமிழ்நாட்டில் பலராமனுக்கு ஆலயமில்லாமல் போனதற்குக் காரணம் மதவரலாற்றில் ஏற்பட்டுள்ள மாறுதல்களேதான். பல உருவில் ஆலயங்களில் கண்ணன் வழிபடப்படுகிருன். ஆனல் பலராமனுக்கு தனியாக ஆலயமில்லாமல் போனதற்கு புராணங்கள் பலராமனை தாழ்த்தி கூறியதுதான் காரணம். பலராமனுக்கு கலப்பைதான் ஆயுதம் என்று கூறுவதால் இவர் உழவர்களின் தெய்வமாக ஆகிவிட்டார். பனைமரக் கொடி அவனைச் சார்ந்தது. விசிறியும் அவனுடைய அடையாளம். அதுமட்டுமல்லாமல் பாகவதத்தில் பலராமனுடைய பண்பாட்டில் முன்கோபம் கள்குடிப்பது இவைகளையும் சேர்த்துவிட்டார்கள். இதனுலும் பலராமன் வழிபாடு மறைந்து விட்டதென்று கூறவும் இடமேற்படுகிறது.

உத்சவ மூர்த்தி முதலியன

நான்கு வ்யூகங்களுக்கும் நான்கு பிம்பங்களை வைத்து தொழும் பழக்கம் இருந்து வந்ததையும் 'பஞ்ச வீர பூஜை,' 'பஞ்சாயதன பூஜை' போன்ற பல மூர்த்திகளை வைத்து வழிபடும் பழக்கம் இருந்து வந்திருப்பதை நாம் கவனித்தோம். ஆனால் இந்த மூர்த்திகள் ஓரிடத்தில் வைத்தே பூஜிக்கப்பட்டு வந்துள்ளார்கள். இவர்களை வெளியில் கொண்டுவந்து உத்சவம் நடத்தியதாகத் தெரியவில்லை. பல மூர்த்தங்களை வைத்து பூஜிப்பது என்ற கொள்கை காலக்கிரமத்தில் ஒரு மூலமூர்த்தியில் வந்து நின்றுவிட்டது. இதற்குப் பிறகு மூர்த்தியை வெளியில் கொண்டுவந்து வீதிதோறும் எழுந்தருளப் பண்ணி, எல்லா மக்களும் தரிசனம் செய்ய வகை செய்யவேண்டும் என்ற நோக்கம் உண்டான காலத்தில் மூலமூர்த்தியை அசையா மூர்த்தியாகச் செய்து வெளியில் உத்சவங்களுக்கு போய்வர தனியான மூர்த்தியை வைக்க ஆரம்பிக்கிறார்கள். இதற்கு உத்சவ மூர்த்தி என்று பெயர். சிற்ப சாஸ்திரங்களும் ஆகமங்களும் உத்சவ மூர்த்திக்கான இலக்கணங்களை கூறுகின்றன.

ஆனால் இந்த மூர்த்தி மூலமூர்த்தியைக் காட்டிலும் வேறுபட்டதில்லை. அதோடு நெருங்கிய தொடர்புள்ளது. இதற்கும் சம்புரோக்ஷண காலத்திலும், புரோக்ஷணம் நடந்து சுத்தி ஏற்பட்டாலும் மூல மூர்த்தியிலேயே முக்கியமான சக்தி இருந்து வருகிறது. அந்த சக்தியை உத்சவ மூர்த்தியில் வரச் செய்துதான் உத்சவ மூர்த்தியை வெளியில் கொண்டு போகிறார்கள். மூல மூர்த்தியிலிருந்து உற்சவ மூர்த்திக்கு சக்தி வந்த பிறகு மூலமூர்த்தியை மட்டும் தரிசனம் செய்யக் கூடாது

என்ற கட்டுப்பாடும் இருந்து வருகிறது. உத்சவ காலங்களில் உத்சவ மூர்த்தியைத்தான் தரிசனம் பண்ண வேண்டும்.

உத்சவ மூர்த்தியை ஏற்படுத்தியது போல் மற்றொரு மூர்த்தியையும் ஆகமங்கள் கற்பிக்கின்றன. அந்த மூர்த்திக்கு கர்மார்ச்சை என்று பெயர். இது அன்றாட பூசைக்காக மட்டும் ஏற்பட்டுள்ள மூர்த்தி. இவரை வெளியில் கொண்டுவரக் கூடாது. மூலமூர்த்தத்திற்கு நேருக்கு நேராக பூஜை கிடையாது. கர்மார்ச்சையில் தான் பூஜை செய்யவேண்டும். அபிஷேகம் செய்வதற்கு ஒரு தனியான மூர்த்தியை வைத்துக்கொள்ளச் சொல்லுகிறார்கள். இதற்கு 'ஸ்னபன பேரம்' என்று பெயர். ஆறுகளிலோ குளங்களிலோ நடைபெறும் திருமுழுக்காட்டு உத்சவத்திற்கு இவர்தான் வருகிறார். அவ்விதமே ஒவ்வொருநாளும் ஆலயங்களில் பலி (தெய்வங்களைக் குறித்து அன்னத்தைப் போடுவது) விதிக்கப்பட்டுள்ளது. கோயிலுக்குள் பல இடங்களில் இவ்விதம் செய்யப்படுகின்றது. அவ்விதமே உத்சவ காலங்களில் நான்கு வீதிகளிலும் பலி கொடுக்கப்படுகிறது. பலி கொடுக்கும் காலத்தில் ஒரு மூர்த்தியைக் கூடக்கொண்டு போகச் சொல்லுகிறார்கள். இதற்கு 'பலிபேரம்' என்று பெயர்.

சயனமூர்த்தி என்று ஊஞ்சல்களில் படுக்கவைக்க ஒரு மூர்த்தி தனியாக இருந்து வருகிறது. ஸ்ரீ ப்ரச்னம் (14), ஈசுவர ஸம்ஹிதை (277), நாரதீயம் (28), பாத்ம ஸம்ஹிதை (18), விஷ்வக்ஸேந ஸம்ஹிதை (17) அநிருத்த ஸம்ஹிதை (75) குமார ஸம்ஹிதை (6) இவைகளில் இதன் விபரங்கள் காணப்படுகின்றன. இவைகள் வெகு காலத்திற்கு பிறகுதான் ஆலயங்களில் வருகின்றன. அநேகமாக கி. பி. 15, 16 நூற்றாண்டுகளுக்கு பிறகுதான் முக்கியத்துவத்தை பெறுகின்றன. ஆழ்வார்கள் பாடல்கள் எல்லாம் மூலமூர்த்தியை மட்டும் பற்றியவை என்று தேரிந்ததே. உத்சவ மூர்த்தி,

மூலமூர்த்திபோல் இருக்கவேண்டும் என்ற கருத்து பொதுவாக இருந்தாலும் பல இடங்களில் உத்சவ மூர்த்தியின் உருவம் வேறுபட்டு நிற்கின்றது. ஒரே மூலமூர்த்தியின் சக்தியே உத்சவமூர்த்திக்கு வந்த பிறகு அங்கு வேறு பெயர் வரக் காரணம் இல்லை. அதனால் மூல மூர்த்தியின் பெயரே உத்சவ மூர்த்திக்கும் பெயராக இருக்கவேண்டிய அவசியம் உண்டு.

ஆனால் அனுபவத்தில் இதை நாம் பார்க்க முடிய வில்லை. மூலமூர்த்தியின் பெயரே வேறு; உத்சவ மூர்த்தியின் பெயரே வேறு என்று தெரிகிறது. குறிப் பிட்ட பெயர்கள் முக்கியத்துவம்பெறுவதெல்லாம் உத்சவ மூர்த்தி வந்த பிறகுதான். அதற்குமுன் பெயர்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆகம ரீதியில் மூலபேரம் யாராயிருந்தாலும் உத்சவபேரம் யாரா யிருந்தாலும் அவர்கள் ஆகம பாஷையில் வாசுதேவன் என்றே குறிப்பிடுகிறார்கள். பெயர்களில் வரும் தடுமாற் றம் எல்லாம் பிற்காலத்தியதே. ஆகமங்கள் இவைகளை அங்கீகரிக்கவில்லை ஐந்து பேரங்கள் உள்ள ஆலயங் கள் தான் முதல்தரமானவை என்றும், நான்கு பேரம் உள்ளது அடுத்தபடியானது என்றும், மூன்று பேரங்கள் உள்ளது அதற்கு அடுத்தபடியானது என்றும், இரண்டு பேரம் உள்ளது அதற்கும் அடுத்தபடியானது என்றும், ஒரு பேரம் உள்ளது கடைசி படியானது என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. கடைசி பக்கத்தில் மூலபேரம் மட்டும்தான் சொல்லப்படுகிறது. ஒரே பேரம் உள்ள இடத்தில் மூலபேரத்தில்தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் ஆலயத்தின் உள்ளே புகுந்தவுடன் மூல பேரத்திலுள்ள சக்தியை மற்ற நான்கு பேரங்களிலும் வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டு அங்கு வந்துள்ள சக்திகளை வைத்துக்கொண்டு அவை யவைகளால் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து கொண்டு இரவில் எல்லாக் காரியங்களும் முடிந்த பிறகு மூல பேரத்திற்கு திரும்பவும் போகச் செய்யவேண்டும்.

இது இன்றும் இருந்து வரும் முறை. ஆனல் பல ஆலயங்களில் ஐந்து பேரக் கொள்கை தெளிவாக விளங்கவில்லை.

அவ்விதமே மக்களுக்கும் தெய்வத்திற்கும் அப்போ தைக்கப்போது நேருக்கு நேராக சம்பந்தம் வரும்படி செய்ய பாதுகை அல்லது 'சடாரி' என்ற ஒரு. கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. பலனை அடை கிருன் என்பதற்கு அடையாளமாக சடாரி வைக்கப்படு கிறது. வேதாந்த தேசிகர் ரெங்கநாதனுடைய பாதுகை யின் பெருமையை விளக்கி பாதுகா ஸஹஸ்ரம் எழுதி யிருப்பதால் அதற்கு புராதணத்துவம் உண்டு எனத் தெரிகிறது. இதற்கு சடாரி, சடகோபன் என்று கொடுக் கப்படும் பெயர்கள் ஒரு குறிப்பிட்ட கொள்கையை விளக்க ஏற்பட்டது. பாதுகையை தலையில் வைத்துக் கொண்டால் மறுபடியும் தாயின் வயிற்றில் பிறக்க வேண் டாம் என்ற கருத்தைக் கொண்டுதான் சடகோபன் என்று பெயர் பெறுகிறது. சடகோபத்தையும் நம்மாழ்வாரையும் ஒன்றுபடுத்தி பேசுவது கவி கற்பனையை அடிப்படை யாகக் கொண்ட பக்தியின் வெளி அடையாளம்தான். தெய்வத்தை விட்டுப்பிரியாத பாதுகையை தலையில் வைப்பதும், மக்களை திருப்தி பண்ணவே ஏற்பட்டது. ஆகமங்கள் இதற்கு இடங்கொடுக்கா. ப்ரதிஷ்டையான சடாரியை மற்ற மனிதர்களுடன் ஸம்பந்தப்படுத்துவது அசுத்திக்குக் காரணமாகும். இன்றும் மைலன் பரகால மடத்தில் சடாரியை மனிதன் தலையோடு சம்பந்தப் படுத்துவது இல்லை.

உபநிடதங்களும் ஆகமங்களும்

வ்யூகம் அவதாரம் என்ற தனிக் கொள்கையோடு இருந்துவந்த ஆகமங்கள் பிற்காலத்தில் உபநிடதத்தின் வழியை பின்பற்றி பேசத் தொடங்குகின்றன. உபநிடதங்களுக்கு உரித்தானதாகக் காணப்படும் 'பிரம்மம்' என்ற சொல்லை தங்களுடைய தெய்வத்திற்கு வைத்து பேசுகின்றன. உபநிஷத்தின் பல கொள்கைகளை அப்படியே எடுத்துக்கொண்டு விட்டன. சாதுமாத்மிய உபாசனம் (நான்குவிதமாக தெய்வத்தை வழிபடுவது) என்ற கருத்து மறைந்துபோய் பிரம்மத்தை அறிவ தாலேயே விடுபெறலாம் என்று கூறுகின்றன. மிகப் பழையதாகஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சாத்வதம்,ஜெயாக் கியம் முதலிய நூல்களே பிரம்மம் என்ற சப்தத்தை உபயோகப்படுத்த ஆரம்பித்துவிட்டன. உபநிடத்துக் களுடைய செல்வாக்கின் காரணமாக சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் என்ற சிறப்பான பெயர்கள் ஜீவன் ஆங்காரம் மனஸ் தத்துவங்களாக வேதாந்தக் கொள்கை பின்பற்றி விளக்கப்படுகின்றன. உபநிடத்தின் கருத்துக்கள் ஆகமங்களில் உட்புகுந்த பிறகு 'அத்வைத', 'துவைத', 'விசிஷ்ட்டாத்வைத' கருத்து வேற்றுக்கும் இடம் ஏற்பட்டுவிட்டது.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் பரமபத பங்க ரஹஸ்யத்தில் பாஞ்சராத்ர ஆகமக் கொள்கைகளுக்கு அத்வைதம் பேதாபேத வாதம் இவைகளைப் பின்பறி விளக்கம் கூறிய வர்கள் இருந்திருக்கிறுர்கள் என்று குறிப்பிடுகிருர். ஆகம ஞான பாதத்தில் அத்வைத கொள்கைதான் சொல்லப்படுகிறது என்று அதை விளக்கி சமீப காலத் திய S. R. பட் என்பவர் ஒரு நூலை எழுதியுள்ளார். ஆக

மங்களில் காணப்படும் உபநிடதக் கருத்துகளை இங்கு விளக்குவோம். பிரம்மம் நிராமயம் (ஜயாக்கியம் 56-1) அட்சரம், அவ்யயம், அருமரூப சம்வேத்யம் (ரூபமில்லை அரூபமில்லை - அஹி. 60-1) உருவம் இல்லாதவன் உருவத்தை அடைந்தான் (ஜயா. 4-20) உலகத்தையே உருவமாகக் கொண்டது. மாயையினால் உருவமுள்ள தாகிறது; முடிவில்லாதது; சத்துமில்லை; அது அசத்து மில்லை (ஜயா. 4-63) உருவமுள்ள வஸ்துவும் இல்லை; உருவமில்லாததும் இல்லை. முடிவில்லாதவன் இடம் காலம் இவைகளால் அளவிடமுடியாதவன். (லக்ஷ்மீ தந்த்ரம் 28) அட்சரமாகிய பிரம்மம் ஆதியில்லாதது, முடிவில்லாதது பரப்பிரம்மம் என்று சொல்லப்படுகிறது.

உருவத்தினாலோ பெயரினாலோ அறியமுடியாதது. மனது வாக்கு இவைகளுக்கு விஷயமாகாதது. அதற்கு முன்னும் இல்லை; பின்னும் இல்லை. மேலும் இல்லை; இரண்டு பக்கங்களும் இல்லை. அது நீண்டதும் இல்லை; குறுகியதும் இல்லை. அது மெல்லியதும் இல்லை; பருத்ததும் இல்லை. எல்லா உபாதிகளிடமிருந்தும் விலகி நிற்பது (லக்ஷ்மீதந்த்ரம் 274, 49, 53.) வாக்கை தாண்டி நிற்பது பேச்சை தாண்டி நிற்பது, தன்னையே தான் அறிந்து கொண்டது இருக்கிறது என்று மட்டும் சொல்லப்படும் பரம்பொருள்.

பிடிப்பில்லாதது, புலன்களுக்கு அப்பாலானது (ஜய. ஸம். 5, 297.) வாழ்க்கையின் முடிவான லட்சியம் வாழ்க்கையின் பயனைப்பெற உயர்ந்தவழி (ஜய. ஸம். 4, 61.) எப்பொழுதும் சாந்தமாகவே இருப்பவன், மாறுதல் இல்லாதவன், தொடர்ந்து இருப்பவன் (லக்ஷ். தந்த். 2, 8.) அலையில்லாத கடல் போன்றவன் (லக்ஷ். தந்த். 2, 10) ஆபத்தில்லாதது (அகின். ப. 2, 23) எல்லாச் செயல்களுக்கும் அப்பாற்பட்டது. (ஜ. ஸம், 4, 81.) எல்லாக் காரணத்திற்கும் காரணம் (அக்ர். பூ. 2. 62.) அறிவு வடிவானவன், அலையில்லாத கடல்

லெ. தந்த். 1, 1.) இன்பத்தை முடிவாக உடையவன் (ஜெ. ஸம். 5, 30.) அறிவு வடிவானவன் (அகிர். பூ 2, 22.) ஒருவிதக் கெட்ட குணமும் இல்லாதவன், ஆனந்த உருவன் (ஜ. ஸம். 4, 60.) குணமில்லாதவன், குணத்தை அனுபவிப்பவன் (ஜ. ஸம். 2, 65,) எங்கும் பரந்துள்ளவன் (4, 2.) முடிவான குறிக்கோள் (அகிர். ப. 4, 116, 117.) கண்ணுடியில் காணப்படும் உருவத் திற்கு எப்படித் தனியான நிலை கிடையாதோ அவ்விதமே பகவானும் இருந்து வருகிருர். நெருப்பு, இரும்பு உருண் டையில் இருப்பதுபோல் இருப்பான். (அகிர். 4, 83, 86.) குடத்திற்குள் இருந்த வெளி, குடம் உடைந்த உடனே எப்படி மறைந்து விடுகிறதோ இயற்கைக் காரணமாக ஒரு உருவை அடையும் இறைவன் இயற்கை மறைந்ததும் பிரம்மமாக ஆகிவிடுகிருன். அகிர். 4, 83-92.) பிரம்மா முதல் ஸ்தம்பம் என்ற பொருள் வரை உள்ள எல்லாம் பொய் (அகிர் 2, 3.) அற்ப புத்தி யுள்ளவர்கள் பல கண்ணுடிகளில் ஒரே உருவத்தைப் பார்ப்பதுபோல் ஒரே ஆத்மா பல உருவங்களாக இயற்கை யில் பார்க்கப்படுகிறது. அறிவில்லாதவர்கள் பலவிதமாகக் கடவுளைப் பார்க்கிருர்கள். குணமில்லாதவனுயிருந்தும் தன் விருப்பப்படி குணங்களை அடைகிருன். (ல. தந். 3, 9-2, 27, 35.) சித் உருவத்திலுள்ள அது இருக்கிறது. என்றும் சொல்லமுடியாது. இல்லையென்றும் சொல்ல முடியாது (ல. தந்த். 4, 2.) நடனமாடுகிறவன், பல உருவத்தைத் எடுப்பதுபோல் நானும் உலகத்தைப் பார்ப் பதற்காகப் பல உருவை எடுக்கிறேன். (லெ, தந்த். 2, 56, 27.)

பன்னிரண்டு வ்யூகங்கள்

நான்கு வ்யூகங்கள் என்ற கொள்கை ஒரு பக்கத்தில் வளர்ந்து வரும் காலத்தில் பன்னிரண்டு வ்யூகங்கள் என்ற ஒரு கொள்கை வேறிடத்திலிருந்து வந்து சேரு கிறது. கேசவன், நாராயணன், மாதவன். கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன், ரிஷிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்ற பன்னிரண்டு பெயர்க்ள் இந்த கூட்டத்திலிருந்து வரு கின்றன. இவர்களை அவதாரமாகக் கொள்ளாமல் முதல் அடிப்படையான வ்யூகத்திலேயே சேர்த்திருப்பதற்கு காரணம் புரியவில்லை. இந்த பன்னிரண்டு பெயர்களின் சொற்கள் தனிப் பெருமையோடு விளங்குகின்றன. இந்த பன்னிரண்டு பெயர்களும் எப்படி உருவாகி ஒன்று சேர்ந்தன என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இப் பெயர்களுக்கு நடுவில் நாராயணன். விஷ்ணு என்ற இரண்டு பெயர்கள் காணப்படுகின்றன. இதிலுள்ள நாராயண சப்தம் பிற்காலத்தில் தனிப்பெருமை பெற்று மற்ற எல்லாவற்றையும் அடக்கிவிட்டது. அவ்விதமே விஷ்ணு என்ற சப்தமும் வேதங்களிலிலிருந்லு எடுத்துக் கொள்ளப்பட்டது என்று தெரிகிறது. பன்னிரண்டு என்ற எண்ணிக்கையை கொண்டு பார்த்தால் பன்னி ரண்டு மாதங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இருந்திருக் கிறது என்று தெரிகிறது. மகா சனத்குமார ஸம்ஹிதை (36/33) இந்த பன்னிரண்டு பெயர்களும் பன்னிரண்டு மாதங்களின் தேவதைகளின் பெயர்கள் என்று குறிப் பிடுகிறது. (அதிதேவதை).

சூரியனுக்கும் மாதங்களுக்கும் சம்பந்தம் உண்டு. சூரியனைத்தான் விஷ்ணு என்று வேதம் கூறுகிறது.

சூரியனையும், நாராயணனையும் ஒன்றுபடுத்தி பேசும் பழக்கம் இருந்து வருவதால் வேதத்திலுள்ள விஷ்ணு தத்துவத்தை சிந்தனை பண்ணியவர்கள் இந்த பன்னி ரண்டு வ்யூகக் கொள்கையை வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவைகள் ஒரு பக்கத்தில் தனியாக வளர்ந்திருக்கிறது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் கேசவன் முதலான பன்னிரண்டு பெயர்களைக் கொண்டு அவர்களை பெருமை படுத்தி வழிபடுகிறார்கள். ஆனால் ஆழ்வார்கள் நான்கு வ்யூகம் என்ற கொள்கையை எங்கும் வெளியிடவில்லை. அவர்களுடைய பெயர்களையும் நேருக்கு நேராகச் சொல்லவில்லை. வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும் னன், அநிருத்தன் என்ற பெயர்களைக் கொண்டு அவரவர்களுக்கு தனியான பாடல்களும் சொல்லப்பட வில்லை. கேசவன் முதலான பன்னிரண்டு பெயர்களைக் கொண்டு வழிபடும் ஆழ்வார்கள் அங்கும் வ்யூகம் என்ற கொள்கையை சொல்லவில்லை.

பன்னிரண்டு வ்யூகங்கள் என்ற கொள்கை பிரபல மாக இருந்ததால் அதை ஒத்துக்கொண்டு பேசவேண்டிய அவசியம் ஆகமங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. நான்கு வ்யூகக் கொள்கை விருஷ்ணிகளுடைய வழிபாட்டி லிருந்து கிளம்புகிறது. பன்னிரண்டு வ்யூகக் கொள்கை வேதத்தில் காணப்படும் விஷ்ணுவின் வழிபாட்டிலிருந்து வருகிறது. ஆனால் பன்னிரண்டு வ்யூகக் கொள்கை உள்ளவர்கள் காலக்கிரமத்தில் நான்கு வ்யூகக் கொள் கைக்கு வழிவிட்டு விட்டார்கள் என்று தெரிகிறது. ஆகமங்கள் பன்னிரண்டு வ்யூகங்களை 'வ்யூகாந்திரம்' 'மூர்த்தியந்திரம்' (வேறு வ்யூகங்கள், வேறு விஷ்ணு மூர்த்திகள்) என்று சொல்லுகின்றன. வாசுதேவ னிடமிருந்து கேசவன், நாராயணன், மாதவன் இவர் களும், சங்கர்ஷணனிடமிருந்து கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன் இவர்களும், பிரத்யும்னனிடமிருந்து த்ரி விக்ரமன், வாமனன், ஸ்ரீதரன் இவர்களும், அநிருத்த னிடமிருந்து ரிஷிகேசன், பத்மநாபன், தாமோதரன் இவர்

களும் உண்டானதாக ஆகமங்கள் கூறுகின்றன. இவர்களுடைய உருவங்கள், ஆயுதங்கள் இவைகளை த்யானம் பண்ணவேண்டிய முறை இவைகளை ஆகமம் விஸ்த்தாரமாக விளக்கி பேசுகிறது. இங்கு ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். பன்னிரண்டு வ்யூகக் கொள்கையில் யார் முக்கியமானவர்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பிற்காலத்தில் பிரபலமாக ஆகிய விஷ்ணு, நாராயணன் என்ற இருவர்களும் இங்கு மற்றவர்களோடு சேர்ந்திருக்கின்றார்களே தவிர தனியான இடத்தைப் பெறவில்லை. ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு நாராயணன் என்ற பெயர் முக்கியத்துவத்தை பெற்ற பிறகு நான்கு வ்யூகக் கொள்கையில் முக்கியமாக நிற்கும் வாசுதேவனும் இவனும் ஒத்துப் போகவேண்டிய அவசியம் வந்துவிட்டது. வாசுதேவன் தான் நாராயணன். நாராயணன்தான் வாசுதேவன் என்று பரிமாற்றம் ஏற்பட்டுவிட்டது. இந்த வரலாற்று உண்மையை ஆலயங்களில் இன்று நாம் பார்க்கிறோம்.

பூஜை செய்யும் காலங்களில் மந்த்ர புஷ்பம் என்று ஒருகிரியைகூறப்படுகிறது. இதற்கு மந்த்ரங்களைச்சொல்லி பூக்களை சொரிவது என்று பொருள். தனியாக புஷ்பங்களைக்கொண்டு உபசாரம் செய்வதைக் காட்டிலும் இதற்குள்ள வேறுபாட்டை காண்பிக்க மந்த்ரபுஷ்பம் என்று சொல்லுகிறார்கள் மந்த்ர புஷ்பங்களை சமர்பிப்பதில் ஒரு வரிசையை இன்று பூஜகர்கள் கையாளுகிறார்கள். முதலில் நான்கு வ்யூகங்களின் பெயர்களைச் சொல்லி அர்ச்சனை செய்த பிறகுதான் பன்னிரண்டு வ்யூகங்களின் பெயரைச் சொல்லி அர்ச்சனை செய்கிறார்கள். அதற்கு பிறகுதான் ஸ்தலபுராண ரீதியாக உள்ள பெயர்களையோ சஸ்கர நாமத்திலுள்ள பெயர்களைக் கொண்டோ அர்ச்சனை செய்கிறார்கள்

வேறு வ்யூகங்கள்

கேசவன் முதலிய 12 வ்யூகங்களைப்போல வேறு 12 வ்யூகங்கள் 'வித்யேசுவரன்' என்ற பெயரில் இருப்பனவாக விக்கேந்திர சம்ஹிதை [218] தெரிவிக்கிறது. பாத்ம சம்ஹிதை இதைப் பின்பற்றுகிறது. வ்யூக வாசுதேவனிடமிருந்து மற்ரெரு வாசுதேவனும் அவனிடமிருந்து புருஷோத்தமனும், அவனிடமிருந்து ஜனர்த்தனனும், சங்கர்ஷணனிடமிருந்து மற்ரேர் சங்கர்ஷணனும், அதோக்ஷஜன், உபேந்திரன் என்ற இருவரும், அநிருத்தனிடமிருந்து மற்ரெரு அநிருத்தனும் அச்சுதன், கிருஷ்ணன் என்ற இருவரும் உண்டானர்கள்.

கேசவன் முதலிய பன்னிருவரும், இப்பன்னிருவரும் சேர்ந்து உபமூர்த்திகளாக உபாசனத்திற்குக் கொள்ளப்படுகிருர்கள்.

விபவாவதாரங்கள்

இவற்றிற்குமேல்தான் விபவ அவதாரங்கள் என்ற கொள்கை பிறக்கிறது. இந்த அவதாரங்கள் 36 அல்லது 39 என்று கணக்கிட்டுள்ளனர்.

விபவாவதாரங்கள்

1. பத்மநாபன்
2. துருவன்
3. அநந்தன்
4. சத்தியகாமன்
5. மதுசூதனன்
6. வித்யாதிதேவன்
7. கபிலன்
8. விசுவரூபன்
9. விகங்கமன்
10. க்ரோடாத்மன்
11. வடபாவகதிரசின்
12. தர்மன்
13. வாகீசுவரன்
14. ஏகார்ணவசாயி
15. கமடேசுவரன்
16. வராகன்

17. நரசிம்மன்
18. பியூஷதாரணன்
19. ஸ்ரீபதி
20. காந்தாத்மன்
21. ராகுஜித்
22. காலநேமிக்நன்
23. பாரிஜாதஹரன்
24. போகநாதன்
25. காந்தாத்மன்
26. தத்தாத்ரேயன்
27. நயக்குரோதசாயி
28. ஏகங்குஸ்காத்மன்
29. வாமனதேகன்
30. திருவிக்கிரமன்
31. நரன்
32. நாராயணன்
33. ஹரி
34. கிருஷ்ணன்
35. பரசுராமன்
36. ராமதநுர்த்தரன்
37. வேதவிது
38. கல்கி
39. பாதாரிகேசன்

இவைகள் விபவாவதாரங்கள் என்று சொல்லப்படுகின்றன. இவற்றில் பகவான் தன் உயிரைப் பற்றிக் கொண்டு தேவர் மனிதர் விலங்குகள் இவர்களுடைய சாதியில் பிறக்கிறுன். சில அவதாரங்கள் ஆவேசாவதாரங்கள் எனவும், கௌண அவதாரங்கள் எனவும், வழங்கப்படுகின்றன. வீடு பேறு தருவது முற்குறிப்பிட்ட அவதாரங்களின் உபாசனேயே. கௌணமான அவதார உபாசனே ஏனேய அறம் பொருள் இன்பம் நல்குவன. கௌணமான (இரண்டாந்தரமான) அவதாரங்களில் பகவான் முன்னரே ஓர் உருவம் எடுத்துள்ள ஆன்மாக்களில் தன் சக்திமூலம் உட்புகுந்து தொழிற்படுகிறுன். பிர்மா, சிவன், புத்தன், அருச்சுனன், பரசுராமன் போல்வன இத்திறத்தன.

முக்கியமாகப் பத்து அவதாரங்களே புராணங்களில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. நாராயணனிடத்தில் ஹம்ஸம், கூர்மம், மத்ஸ்யம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், தநுர்த்தரராமன், வேதவிது, கல்கி என்ற இவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நெருப்பில் இருந்து பொறி கிளம்புவதுபோலப் பகவானிடமிருந்து அவதாரங்கள் உண்டாகின்றன என்று ஆகமம் கூறுகிறது. எல்லா அவதாரங்களும் அநிருத்தனிடமிருந்தே உண்டாயின

என்று 'விச்வக்சேந சம்ஹிதை' கூறுகிறது. ஆனால் பாத்ம சம்ஹிதை—மத்ஸ்யம் கூர்மம் வராகம் இவை வாசுதேவனிடமிருந்தும், நரசிம்மம் வாமனன் ஸ்ரீராமன் பரசுராமன் இவை சங்கர்ஷணனிடமிருந்தும், பலராமன் பிரத்யும்நனிடமிருந்தும், கிருஷ்ணன், கல்கி, விருக்ஷங்கள் இவை அநிருத்தனிடமிருந்தும் உண்டான அவதாரங்கள் என்று கூறுகிறது. அகிர்புத்யசம்ஹிதை, விச்வக்சேன சம்ஹிதை போன்றவை விபவாவதாரத்தை விரிவாகக் கூறுகின்றன.

ஆகம தெய்வக் கொள்கை

பொதுமக்கள் எங்கெங்குத் தெய்வ நம்பிகை வைத்திருந்தார்களோ அவைகள் எல்லாவற்றையும் ஒரு தெய்வத்தின் கீழ்க் கொண்டு வர அவதாரக் கொள்கை பெரிதும் பயன்படுகிறது. விச்வக்சேந சம்ஹிதை அர்ச்சாவதாரம் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. பாஞ்சராத்ர ஆகமத்தின் தெய்வக் கொள்கை வேதாந்தக் கொள்கையில் ஒரு புதுத் திருப்பத்தை உண்டாக்கிவிட்டது. ஆகம தெய்வக் கொள்கை மூர்த்தி பேதங்களை ஏற்றுக் கொண்டு வழிபாடு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டது.

ரிக் வேத மந்திரங்கள் எந்தத் தெய்வத்தை வருணித்தாலும் 'அவன் உலகைப் படைத்தான், பாதுகாக்கிறான்' என்று கூறும் வழக்கத்தை ஆகமக்காரர்களும் தங்களுடைய உபாசன மூர்த்திக்கு ஏற்றிச் சொல்லத் தொடங்கி விட்டனர். அதனாலேயே ஆகமங்களில் 'சிருஷ்டப்பிரகரணங்கள்' உண்டாகின்றன. பகவானுடைய அவதாரங்கள் சுத்த சிருஷ்டி எனவும் உலகப் படைப்புக்கள் அசுத்த சிருஷ்டி எனவும் வழங்கப்பட்டன.

இறைவன் இயற்கைக்கு வெளியே இருந்து இயற்கையைப் படைத்தும், இயற்கையின் பொருள் ஒவ்வொன்றிலும் தான் இருந்துவருகிறான். படைப்புக்குக் காரணமான கடவுள் காரியமாகிய படைப்பிலும் கலந்திருக்கிறார் என்று முடிவு செய்துவிட்டனர்.

வேதாந்திகளான பாஸ்கரன் முதலிய பலரும் கடவுளே உலகமாக ஆகிவிடுவதால் உலகம் என்ற கருத்து வெறும் தோற்றமே என்ற கருத்தினர். இவர்கள் பேதாபேத வாதிகள் எனப்படுவர். வேதாந்திகள் உலக வாழ்வில் குறையைக் கண்டு அவைகளிலிருந்து விடுபட நினைக்கும் உள்ளத் துறவிகளாகின்றனர். ஜடமான இயற்கையைக் கடவுள் இயக்கி அவனோடு தொடர்பு கொள்ளுகிறான் என்று துவைதிகள் கூறுகின்றனர். அறிவற்ற இயற்கையும் அறிவுள்ள ஆன்மாவும் இறைவனால் இயக்கப்படுவதாக விசிட்டாத்துவைதிகள் கூறுகின்றனர்.

பௌத்தர்கள் நிலையாக ஆன்மாவையோ இயற்கையையோ எடுத்துக்கொள்ளாத சூனியவாதிகள்.

சாங்கியர்கள் அறிவில்லாத இயற்கைக்கு அடிப்படையான அவ்யக்தம், மகத், அகங்காரம் என்பனவற்றையும், அகங்காரத்தின் கூறுகளாகிய மனிதனுடைய உறுப்புக்கள், மனம், பஞ்சபூதங்கள் இவற்றையும் ஒப்புக் கொண்டு ஆன்மா, இயற்கை இரண்டையும் சுட்டி இயற்கை தானாகவே இயங்குவதாகக் குறிப்பிடுகிறார்கள். அறிவுள்ள ஆத்மா அறிவற்ற இயற்கையை அண்டி நொண்டி, குருடன் தோளில் ஏறிப் பிச்சை ஏற்பதுபோல் வாழ்க்கை நடத்துவதாகக் கூறுகிறார்கள்.

ஆன்மாவுக்குப் புண்ணிய பாவ வசத்தால் பிறப்பை ஏற்றுக்கொள்ளும் இவர்கள் கடவுளை ஒத்துக்கொள்வது இல்லை. இவர்கள் இயற்கையோடு நிற்பதால் இயற்கை வேதாந்திகள் எனப்பட்டனர்.

நியாயவைசேடிகர்கள் ஆன்மா, இயற்கை, தெய்வம் என்பனவற்றை ஒத்துக்கொண்டு இயற்கையைக் கடவுளே படைத்துக் காத்து அழிக்கிறான் என்கின்றனர். இவர்கள் யுக்தி வாதத்தால் தங்கள் அறிவு ஆற்றலுக்கு அடையாளமாகவே கடவுளை ஒப்புக்கொள்கின்றனர். வழிபாட்டிற்காகக் கடவுளைக் கண்டுபிடிப்பதாகச் சொல்லவில்லை.

உபநிடதவாதிகள் யுக்தியைக் கைவிட்டு நூல்கள் சொல்லும் உபாசனையால் கடவுள் தத்துவத்தைப் பெற லாம் என்கிறார்கள்.

இவற்றை எல்லாம் பற்றிக் கவலைப்படாமல் பொது மக்கள் தங்கள் வழிபாட்டுக் கொள்கையைத் தாங்க ளாகவே வகுத்துக்கொண்டனர். பொதுமக்களின் தெய் வக் கொள்கையோடு, வேதாந்தக் கொள்கை ஒத்துப் போக வேண்டிய நிலை ஏற்பட்டது.

வெறும் யுக்தி வாதமான வேதாந்தம் சிந்தனையாள ருக்கு விருந்தே ஒழிய பொதுமக்கள் உள்ளத்திற்கு அமைதி தருதல் இயலாது. யுக்திக்கு முதலிடம் கொடுத்த சார்வாகர்கள் 'ஆத்மா இல்லை, தெய்வம் இல்லை' என்ற முடிவுக்கு வந்தனர். பௌத்தர்கள் 'ஆத்மா உண்டு, கடவுள் இல்லை' என்றனர். இயற் கையே அழிவற்றது என்றனர் சிலர்; அழிவுடையது என்றனர் சிலர்; இயற்கையே பொய் என்றனர் சிலர்.

இந்திய வேதாந்திகள் யுக்தி, சுருதி (நூல்கள்) அநுபவம் என்ற மூன்றையும் அடிப்படையாகக்கொண்டு பொதுமக்களின் தெய்வ வழிபாட்டை அங்கீகரித்து விட்டனர். வழிபாடு பொதுமக்களின் சிந்தனைக்கு ஏற்றாற்போல வளர்ந்துள்ளது. இது தெய்வ நம்பிக்கை யின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

பாஞ்சராத்ர ஆகமங்களில் தெய்வ நம்பிக்கையை வளர்க்கவும் தெய்வ வழிபாட்டை உறுதிப்படுத்தவும் பத்து வகைச் செய்திகள் உள்ளன என்று ஷார்டர் கூறுகிறார்.

1. அடிப்படையான வேதாந்தக் கொள்கைகள்.

2. தெய்வ சக்தியை உண்டுபண்ணக் கூடிய மந்திர சாத்திரக் கருத்துக்கள்.

3. தெய்வ சக்தியை உண்டுபண்ணக் கூடிய யந்திரங்கள்.

4. யோக சித்திகள்.

5. யோகம்.

6. ஆலயம் கட்டுவது.

7. பிம்பங்களைப் பிரதிஷ்டை செய்வது.

8. சம்ஸ்காரங்கள்.

9. வர்ணாச்ரம தர்மங்கள்.

10. உற்சவங்கள்.

பாத்ம சம்ஹிதை

இது ஆலயத் தொடர்பான எல்லாச் செய்திகளையும் உட்கொண்ட முழுமையுடையது. ஆலயத்திற்கு உரிய நிலத்தைத் தேர்ந்தெடுப்பது, கிராமத்தில் தெருக்களின் கணக்கு இவை குறிக்கப்பட்டுள்ளன.

ஆலயங்களின் அமைப்பு

பஞ்சமூர்த்திகளைக் கிராமத்தின் நடுவிலும், நோய்களைப் போக்கும் சூரியனைக் கிழக்கிலும், சௌந்தர்யம், சௌபாக்கியம், இவற்றைக் கொடுக்கும் காமனைத் தென் கிழக்கிலும், பூதங்களுடைய நிர்ப்பந்தங்களை விலக்கும் முருகனைத் தெற்கிலும், இடையூறுகளை விலக்கும் விநாயகனைத் தென்மேற்கிலும், புத்திமுத்திகள் வழங்கும் ஸ்ரீ பூமிஸமேத விஷ்ணுவை மேற்கிலும், வாழ்நாளை வளரச் செய்யும் துர்க்கையை வடமேற்கிலும், தனதான்யங்களைப் பெருக்கும் குபேரனை வடக்கிலும், ஞானத்தைப் பெருக்கும் ஈசுவரனை வடகிழக்கிலும் கிராமத்தினுள் ஆலயம் வகுத்து வழிபடுவதோடு, குழந்தைகளுக்கு ஆபத்து வராமல் பாதுகாக்கும் மகாமோடிக்கு ஆலயம் கிராமத்திற்கு வெளியே தென்கிழக்கிலும், கிராம தேவதைகள் மக்களைப் பாதுகாக்கச் செய்யும் சாஸ்தாவுக்கு ஆலயம் கிராமத்துக்கு வெளியே தென்மேற்கிலும், பைசா

சங்களை விலக்கும் மாத்ரு கணங்களை வெளியே வடக்கி லும் கோயில்கட்டி வழிபடவேண்டும். கிராமத்தின் நடு விலேயே விஷ்ணு கோயில் இருக்கவேண்டும். கேசவன் முதலிய 12 மூர்த்தங்களையும், மத்ஸயம் முதலிய தசாவ தாரங்களையும் இடையிடையே வைக்க வேண்டும். விஷ்ணு ஆலயமே முதலில் கட்டப்படவேண்டும்.

ஆலயம் கட்டுதற்குரிய நிலத்தை ஆழ உழுதல், பூமியின் கீழ் இருக்கும் அசுத்தப் பொருட்களை அப்புறப் படுத்துதல், பாலாலயம் செய்துதான் மூல பிம்பங்களைப் பிரதிட்டை செய்தல், அதற்கான சிலைகளை நன்கு பரிசோதித்து எடுத்துக்கொள்ளுதல் முதலியன விரிவாகப் பேசப்பட்டுள்ளன. கருங்கற்கோயில் உத்தமம். செங்கற் கோயில் மத்திமம். மரக்கோயில் அதமம். மட்கோயில் அதமாதமம். ஒரே பொருளாலேயே கோயில் கட்டுவது மிகவும் உயர்ந்தது. கருவறை நாற்கோணமாகவோ, மண்டலமாகவோ, நீண்ட நாற்கோணமாகவோ நீண்ட மண்டலமாகவோ அமையலாம்.

ஆலயத்தை அவரவர் சக்திக்கு ஏற்பச் செலவிட்டு அமைக்கலாம். கருவரை கட்டுவதற்கான வழிகள் விரி வாகக் கூறப்பட்டுள்ளன. விமானங்கள், வைஜயந்தம், புஷ்பகம், சுதர்சனம், ஸ்வதிகம் முதலாகப் பலவகையாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன. நாகரம், திராவிடம், வேஸரம் என்ற மூன்றுவித விமானங்களின் இலக்கண மும் சுருக்கமாகவே சொல்லப்பட்டுள்ளன. பிரகார நிர்மாணம், அர்த்த மண்டபம், நிருத்த மண்டபம் முதலிய பலவித மண்டப நிர்மாணங்களுக்கும் முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

விமானங்களிலும் கோபுரங்களிலும் வைக்கப்பட வேண்டிய தேவதைகளைப் பற்றிச் சிற்ப சாத்திரம் விரி வாகப் பேசுகிறது. மடைப் பள்ளி, வெளியே பக்தர் களுக்கு மடங்கள் முதலியனவும் ஆகமங்களில் குறிப் பிடப்பட்டுள்ளன.

மூல பேரத்திற்கு எதிர்த்தாற்போல் பக்ஷிராஜனை அமைத்து, மற்ற இடங்களில் சூரியன், சந்திரன், காமன், பிரமன், விநாயகன், ஷண்முகன், துர்க்கை, குபேரன், சங்கரன், க்ஷேத்திரபாலகர் போன்றவர்களை அமைக்கும் இடங்களும் நன்கு காட்டப்பட்டுள்ளன.

சம்ஹிதைகளில் காணப்படும் மற்ற பிம்ப ஸமபந்தமான விபரங்கள்

பாஞ்சராத்ர ஆகமத்தின் மற்ற சம்ஹிதைகளில் பிம்பங்களை ஏன் பிரதிஷ்டிக்கவேண்டும் என்ற கருத்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஒரே ஆலயத்தில் பலவித மூர்த்தங்கள் அமைந்திருப்பதற்கு உரிய விவரங்கள் பேசப்படுன்றன. பிம்பஸ்தாபனம் செய்வதுப்பற்றி விஷ்ணுதிலகம், விஷ்ணு தத்துவம், அநிருத்தன், ஈசுவரன் முதலிய சம்ஹிதைகள் கூறுகின்றன

வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் முதலான பிம்பங்களையும், தசாவதாரங்களை யும் பிம்பமாகச் செய்தல்வேண்டும். அங்ஙனமே பன்னி ரண்டு மூர்த்திகளுக்கும் ஸ்ரீ முதலான பெண் தெய்வங் களின் பிம்பங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. பலவித லக்ஷ்மி உருவங்களும், மார்க்கண்டேய சம்ஹிதையில் உள்ள நாரதீயம், விச்வக்சேனம் முதலிய பகுதிகளும் கவனிக்கத்தக்கவை. விஷ்ணுவுக்கு மகாவிஷ்ணு, சயன விஷ்ணு, லக்ஷ்மிநாராயணன், ச்ரியப்பதி, யக்ஞவராகன், ஹரி, உபேந்திரன், புருஷோத்தமன், ஜகந்நாதன், ஜனார்த்தனன், அச்சுதன், ஹயக்ரீவன், யக்ஞமூர்த்தி, ஹம்ஸம் முதலிய திருவுருவங்கள் சொல்லப்படுகின்றன.

அனந்தன், கருடன், விச்வக்சேனன், சுதர்சனன் முதலிய பரிவார தேவதைகளும், ஆவரண தேவதை களும் குறிப்பிடப்படுகிறார்கள்.

வைகாநச ஆகமங்களில் நவக்கிரகங்கள் கோயிலில் ஸ்வக்கப்படும் இடங்கள் சொல்லப்படுகின்றன.

நவக்கிரகங்களை அடிப்படையாகக்கொண்ட விக்ரக வழிபாடு வைணவத்துக்குப் புறம்பானதன்று. நவக்கிரஹப் பிரதிஷ்டை வைணவ வழிப்பாட்டிற்குப் புறம்பானது என்பது தவருன கருத்தேயாம். பாஞ்சராத்ர ஆகமங்களில் நவக்கிரக நியாஸ ஹோமம் தனியாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீக்கும் பூமிக்கும் தனிப்பிம்பங்கள் சொல்லப்பட்ட போதிலும் நீலாவுக்குத் தனி பிம்பம் சொல்லப்படவில்லை. துளசிதான் நீலா என்று வனசர சம்ஹிதை (18—48) குறிப்பிடுகிறது.

ஆகமங்களும்
விக்ரக வழிபாடும்

ஞானபாதம், யோகபாதம், இவற்றிற்குப் பிறகே கர்ம பாதத்தைப் பேசும் பாஞ்சராத்திர ஆகமங்கள் ஞானம், யோகம் ஆகிய கடுமையான வழிகளைப் பின்பற்றி இறைவனை அடைய முடியாத பொதுமக்களுக்கே ஆலய வழிபாடு ஏற்பட்டுள்ளது என்று கூறிவிட்டது.

விஷ்ணு சம்ஹிதை, (39—49) வேதமந்திரங்களாலேயே சூரிய மண்டலத்திலுள்ள விஷ்ணுவைத் தியானம் பண்ணவேண்டும். அவ்விதமே அக்னியிலும் ஹோமம் பண்ணவேண்டும். தியானம் பண்ணும்போது உருவத்தை மனத்தில் கொண்டு தியானிப்பது எளிது என்று கூறி விக்ரக வழிப்பாட்டுக்கு வழி வகுத்துள்ளது.

ஸ்ரீ பிரச்ன சம்ஹிதை யோக மார்க்கத்தின் கடுமையை எடுத்துரைத்து பக்தர்கள் பெருமானை வழிபட எளியமார்க்கம் ஒன்று வேண்டிய லக்ஷ்மிக்கு பெருமாள் பிம்பங்களில் ஆராதனை செய்யும் வழியை வகுத்தார் என்று நான்காவது அத்தியாயத்திலும், தேவர்களின் பிரியத்துக்கு இணங்கி அர்ச்சையாகப் பெருமாள் எழுந்தருளி அவர்களுடைய பூசைகளை ஏற்றுக்கொள்கிருர் என்று 18-ஆம் அத்தியாயத்திலும் கூறப்படுகிறது.

ஆனுல் தொடக்கத்தில் வீட்டில் சாதாரணமாக ஏற்பட்ட பிம்பவழிபாடு கோயில்களுக்கு வந்ததும்

மந்திரம் மூலமும், ஆகமம் விதிக்கும் கர்மாக்கள் மூலமும் தான் பிம்பங்களுக்குச் சாந்நித்யம் வரும் என்ற நிலைக்கு வந்துவிட்டது.

பாத்ம சம்ஹிதை ஞானமார்க்கம், யோகமார்க்கம் இவற்றில் அதிகாரம் இல்லாதவர்களுக்கே ஆலய வழி பாட்டைக் கிரியா மார்க்கத்தில் (2) சொல்லுகிறது என் பதும் கவனிக்கத்தக்கது. ஆலயங்களைப் பொதுவாக எல்லா மக்களுக்கும் தேவையானது என்று ஆகமங்கள் குறிப்பிடவில்லை.

பிற்கால ஆகமங்கள் பெரிய அளவில் நாட்டை ஆளும் அரசர்களுக்கு ஆலய நிர்மாணத்தைக் கடமை யாக்கி ஆலய நித்திய பூசை விழாக்களைப் பொதுவாக நாட்டு நன்மைக்கு உரியனவாக்கி விட்டன.

பிம்பத்திற்குச் சாந்நித்யம் மந்திரத்தால் ஏற்படுகிறது என்ற இடத்தில் மந்திர சாஸ்திரங்கள் ஆலய வழிபாட் டில் விக்கிரகங்களில் கலக்கின்றன. தியான சுலோகங் கள் பிம்பத்தில் தனத்தில் பதியச் செய்கின்றன. மனத் தில் சாஸ்திரம் வகுத்த வழியில் ஜயம் பண்ணுவதே தெய்வவழிபாடு. மனிதன் மனிதனுக்குச் செய்யும் உப சாரம் போலத் தெய்வ அளவில் செய்யப்படும் உபசாரமே பூசையாகும். ஆலயங்களில் உள்ள பிம்பங்களை வெறும் உருவமாகக் கருதாமல் மந்திரத்தால் சாந்நித்யம் பெற்ற தாகக் கொண்டே வழிபடுதல் வேண்டும். ஆனுல் இறை வன் தானே தன்கருணையால் மனிதன் வழிபடும் விக்கிர கத்தில் அர்ச்சாவதாரமாக வருகிருன் என்ற கொள் கையை நோக்க, மந்திர சாஸ்திரங்கள் விக்கிரக வழிபாட் டோடு கலக்கும் வரை அர்ச்சனைக்கு மக்களின் வேண்டு கோளே முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும். மந்திர சாத்திரங்கள் ஆலயத்தில் கலந்தபிறகே அர்ச்சையாகிய மூர்த்தி மந்திர மூர்த்தியாகவும் ஆகியிருத்தல் வேண்டும்.

விக்கிரகப் பிரதிஷ்டை காலத்தில் வைகுந்தத்தில் இருந்து பகவான் அர்ச்சகரின் ஹிருதயத்தில் மந்திரமய மாக வந்து சேர்ந்து அங்கிருந்து கும்பத்தில் இறங்கி, அக்னியிலும் கலந்து பின் மந்திரங்களால் பிம்பத்தில் சேர்ந்து பின் நாள்தோறும் மந்திரங்களாலே வழிபடப் படுகிருர்.

ஆலயங்களில் நித்திய பூசை நாட்டுப் பொது நன் மைக்கே அமைந்தது. தனிப்பட்டவர் நலன்கருதிச் செய்வது, நித்திய பூசைக்குப் பின் செய்யப்படும் காமிய பூசையே. பூசை செய்பவர் முதலில் யோகத்திலிருந்து தம் மனத்தில் பகவானைப் பூசைசெய்துவிட்டே பிம்பங் களைப் பூசை செய்கின்றனர்.

கோயிலில் மூலமூர்த்தி நிலையாக உள்ளது. ஆனுல் கோயில்களுக்கு வெளியே திருவுலா முதலியவற்றிற்கு உற்சவ மூர்த்திகள் பிறகு ஏற்பட்டன. உற்சவ மூர்த்தி களுக்கு மூலமூர்த்தியிலிருந்தே தெய்வத் தன்மை தற்காலிகமாக ஏற்றப்படுகிறது. உற்சவமூர்த்தி வீதி உலா வரும்போது மூலமூர்த்தியை வழிபடக்கூடாது என்று ஆகமம் கூறுகிறது. உற்சவ மூர்த்தி உற்சவ காலங்களுக்கே உரியது. மூலமூர்த்தி நித்திய பூசைக்கு உரியது. மூலமூர்த்தியைத் தவிரப் பலி அர்ச்சை, ஸ்நான அர்ச்சை என்றுற்போல ஐந்து மூர்த்தங்கள் உள்ள கோயிலே உயர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் குறைந்த அளவு ஒரு மூர்த்தியாவது ஒவ்வோர் ஆலயத் திலும் மூலமூர்த்தியைத் தவிர உற்சவ மூர்த்தியாக இருக்கும். ஐந்து மூர்த்திகள் கோட்பாடு பிற்கால ஆகமங்களிலேயே உள்ளது.

உற்சவ காலங்களில் கும்பம், மண்டலம், பிம்பம், அக்னி இவைகளில் வழிபட வேண்டும். அந்த அந்த உற்சவங்களுக்குத் தனித்தனியான கும்பம் வைத்து வழி படவேண்டும். இன்றுள்ள ஆலய வழிபாட்டில் வேத நெறியைப் பின்பற்றி அக்னியில் ஹோமம் செய்கின்றனர்.

கும்ப ஜலத்திலும் வழிபாடு நடக்கிறது. மந்திர சாத்திரங்களைப் பின்பற்றிப் பிம்பங்களிலும் யந்த்ரங்களிலும் பூசை நிகழ்கிறது. மக்களுடைய மனத்தைத் திருப்திசெய்ய வெளிப்படையாக அலங்காரம் செய்து வழிபடுகின்றனர்.

பூசை, உற்சவம் பற்றிய விரிவான செய்திகளை ஆகமங்களில் காணலாம்.

இதுகாறும் ஆகமங்களின் தோற்றம், வளர்ச்சி, கலப்பு, இன்றைய நிலை இவற்றை நோக்கினோம்.



வைணவம்

பாரத தேசம் முழுதும் பலவகை நிலைகளில்
பரவியிருந்தாலும் தமிழ் நாட்டிலேயே வைணவத்
தின் சிறப்பான கருத்துக்கள் பலவும் பல நூல்
கள் வாயிலாகச் சிறக்கக் காணப்படுவ
தால் அக்கருத்துக்களின் தோற்றம்,
வளர்ச்சி, முடிந்த முடிவு இவற்
றைப்பற்றி வரலாற்றுக் கண்
கொண்டு ஆராய்வதும்
இன்றியமையாததாகலின்
தமிழ்நாட்டின்
சிறப்பான வைணவக் கருத்
துக்களை அடுத்த பகுதியில்
ஆராய்வோம்.

தமிழ்நாட்டில் வைணவத்தின் சிறப்பான கருத்துக்கள்

வேதத்தில் விஷ்ணு

வேதத்தில் விஷ்ணு என்கிற தெய்வம் சொல்லப் படுகிறது. நூறு மந்திரங்களுக்குமேல் விஷ்ணுவைப் பெரிதும் ஏற்றிப் புகழும் மந்திரங்கள் காணப்படுகின்றன. வேதத்தில் காணப்படும் விஷ்ணு தனியான தேவதையா? அல்லது பரந்த கடவுள் தத்துவத்தில் ஒரு அம்சமா? என்பது நாம் முடிவு பண்ணவேண்டிய விஷயம். பல தேவதைகள் உண்டு என்ற கொள்கைதான் வேதத்தில் காணப்படுகிறது என்று மேனாட்டு வேத ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்களிலேயே தலைசிறந்து விளங்கிய 'மாக்ஸ் முல்லர்' வேதத்தில் பல தேவதைக் கொள்கைகள் கிடையாது. ஆனால் அந்த அந்தச் சமயத்திற்கு அந்த அந்த தேவதையாக ஒரே கடவுளையே ஏற்றிச் சொல்லுகிறார்கள்; இது ஒரு புதிதான பல தேவதைக் கொளகை என்று கூறிவிட்டார். ஆனால் நம்முடைய இதிகாசப் புராணங்கள் வேதங்களில் பல தேவதைகள் புகழப்பட்டிருப்பதாகவே கூறுகின்றன. அவ்விதத் தேவதைகளில் விஷ்ணுவும் ஒருவர். ஆனால், இந்த விஷ்ணு வேறு யாருமில்லை; சூரியன் தான் என்பது வேத மந்திரங்களிலிருந்து வெளியாகிறது. அந்த விஷ்ணுவும் மற்ற தேவதைகளோடு சமமான நிலையில் இருந்து வருகிறாரே தவிரத் தனியான பெருமையுடன் இருப்பதாகத் தெரியவில்லை. வேத உரை ஆசிரியரான யாஸ்கர் சூரியன்தான் விஷ்ணு என்று கூறிவிட்டார்.

உபநிடதக் கூற்று

உபநிஷத்துக்கள் ஒரே தெய்வம் என்ற கொள்கையைச் சொல்லும் காலத்தில் அந்தத் தெய்வத்தைப் பிரம்மம் என்றே சொல்லுகின்றது. அந்தப் பிரம்மம் குணமில்லாதது என்றும் சிறப்பான இயற்கை இல்லாதது என்றும், தன்னுடைய இயற்கைக்குமேல் வேறு குணங்கள் உடையதன்று, தனக்கு ஒப்பாகவோ மேலாகவோ வேறு பொருள்களை உடையதும் அன்று என்றும் அத்வைதிகள் சொல்லிவிட்டார்கள். ராமானுஜர் அந்த பிரம்மத்திற்குக் குணம் உண்டு, உருவம் உண்டு என்று விளக்கம் கூறினர். யார் எந்த விளக்கம் கூறினலும் பிரம்மம் என்பது பிரம்மம்தான்; அதற்குத் தனியான பெயரில்லை.

புராணங்களின் கூற்று

பிறகு வந்த புராணங்கள் பிரம்மம் என்று குறிப்பதை விட்டு வேத நூலிலே காணப்படும் விஷ்ணு என்ற பெயரை முக்கியமாக வைத்துப் பேச ஆரம்பித்தன. பெரும்பான்மையான புராணங்கள் விஷ்ணுவை தங்களுடைய முக்கிய தெய்வமாகக் கொண்டுள்ளன. உபநிஷத்தில் சொல்லப்படும் பிரம்மம் விஷ்ணுதான் என்று வேதவியாசரின் தகப்பனுரான பராசரர் விஷ்ணு புராணத்தில் கூறினர். இதனல் விஷ்ணு என்ற பெயரோடு ஒரு கொள்கை உருவாக ஆரம்பித்துவிட்டது. விஷ்ணுதான் உலகத்தைப் படைக்கிருர். விஷ்ணுதான் உலகத்தைப் பாதுகாக்கிருர். விஷ்ணுதான் உலகத்தை அழிக்கிருர் என்று கடவுள் இலக்கணத்தை விஷ்ணுவினிடத்தில் ஒன்றுபடுத்திப் பல புராணங்கள் பேசுகின்றன. இதனல் விஷ்ணுக் கொள்கை தனியாக உருவாகியது. புராணங்களில் சொல்லப்படும் மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு. சிவன் இவர்களில் விஷ்ணு பாதுகாக்கும் தெய்வமாகக் கொள்ளப்பட்டிருப்பது விஷ்ணுவின் தனிச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக நிற்கிறது. வேதத்தில் சொல்லப்படும் தெய்வங்களுக்குச் சரீரம் உண்டா

இல்லையா என்றுக் கேட்டுக்கொண்டு யாஸ்கர் "இல்லை" என்றும் "உண்டு" என்றும் இரண்டு கட்சிகளையும் எடுத்துக்கொண்டு மூன்றுவதாக ஒரு கட்சியாகச் சரீரத்தை எடுக்கலாம். இயற்கையில் சரீரமில்லாதவர் களாகவும் இருக்கலாம் என்று சமாதானப்படுத்திவிட்டார். புராணங்களில் தேவதைகளுக்குச் சரீரம் உண்டு என்ற கொள்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டே பல கதைகள் ஏற்பட்டுவிட்டன. அந்த அந்தத் தெய் வங்களுக்கு உருவம், ஆயுதம், தொழில் இவைகள் விரி வாகச் சொல்லப்படுகின்றன. தேவதைகளுக்குச் சரீர முண்டா இல்லையா என்ற பிரச்சினையைப் பிற்காலத்தில் வியாசர், ஜைமினி இவர்கள் எடுத்துக்கொண்டு "புராணக் கதைகள் கருத்துக்களை விளக்க ஏற்பட்டுள்ள கதைகளாக ஆகிவிட்டதால் சரீரம் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை" என்று ஜைமினியும், சரீரம் உண்டு, நமக்கு அத்தேவதைகள் நன்மை தீமைகளைச் செய்யலாம் என்று வியாசரும் கருதுகிறார்கள்.

ஒரே தெய்வக் கொள்கை

வேதத்திற்குப் பிறகு ஒரே தேவதை வேண்டும் என்ற கொள்கை மிகவும் வளர்ந்துபோகவே தேவதை களில் விஷ்ணுவிற்குச் சிலர் முக்கியத்துவம் கொடுத்தார் கள். சிவனுக்குச் சிலர் முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதுதான் வைணவம், சைவம் என்ற பெயரோடு மதம் மிகவும் வளர்ந்துவிட்டது. புராணங்களில் பெரும் பான்மையான புராணங்கள் விஷ்ணுவைப் பற்றிச் சொல்லுவதாலும், புராண காலங்களில் அவதாரக் கொள் கைகள் முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றுவிட்டதாலும் பாதுகாக்கும் தெய்வம் என்ற முறையாலும் விஷ்ணுவிற்கு பிற்காலத்தில் முதலிடம் கிடைத்திருக்கிறது. எப்படி விஷ்ணு வேதகாலத்திற்குப் பிறகு முதல் தெய்வம் ஆனார் என்பது பெரியபிரச்சினை. ஒரு தனித்தெய்வம் வேண்டும் என்ற கொள்கை வேதகாலத்திற்குப் பிறகு உண்டாயிற்று

என்பது திண்ணம். மக்கள் தங்களிஷ்டப்படி வேதத்தில் காணப்படும் விஷ்ணுவைக் கற்பித்துத் தங்களிஷ்டப்படி ஓர் உருவையும், பெயரையும் அவருக்குக் கொடுத்து வணங்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் வரலாற்றின் ரீதியில் என்ன நடந்திருக்கின்றது என்பது புரியவில்லை. மற்ற தேவதைகள் எல்லோருக்கும் விஷ்ணுதான் தெய்வம் என்று கூறிவிட்டார்கள். இது ஏதாவது ஒரு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். விஷ்ணுவிற்கு ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் வீரம் நிறைந்த வகுப்பினரிடமிருந்து இந்தக் கொள்கைகள் வந்திருக்கலாம் என்று தெரிகிறது. இந்த விஷ்ணு பொதுமக்களுடைய கருத்தில் தோன்றினவர் தான். சர்வ வல்லமையுடைய கடவுளுக்கு ஆயுதங்கள் எதற்கு என்ற கேள்வி பிறப்பது இயற்கை. அடியார் களைப் பாதுகாப்பதற்காக ஆயுதங்கள் இருக்கின்றன. ஆயுதங்கள் மூலம்தான் பகவானும் இயங்க முடியும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இது ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஆகமங்கள்தான் இந்த விஷயத்தில் உதவியைச் செய்திருக்கின்றன.

வேதாந்தங்களும், உருவ வழிபாடும்

உருவம் இல்லாத கடவுளுக்கு நிலையான உருவத் தைக் கொடுக்க வேண்டும். இருப்பிடத்தைக் கொடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கருத்தில் தோன்றிய கருத்துக்களைச் சமாதானத்திற்காகவே சான்றோர்கள் ஒப்புக்கொண்டனர் என்று தெரிகிறது. அதனாலே வேதாந்திகள் பிரம்மத்திற்குச் சரீரத்தையே ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் காலத்தை ஒட்டிப் பிரம்மத் திற்கு உருவத்தை ஒப்புக்கொண்டவர்களை வேதாந்திகள் ஒப்புக்கொண்ட பிறகு தங்கள் கருத்துக்கு இணங்கச் சரீரம், ஆயுதம் இவைகளுக்குப் பொருள்கூற ஆரம்பித்து விட்டார்கள். 'பாஞ்சராத்ர' ஆகமங்களிலேயே இந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ வேதாந்ததேசிகரும்

'ரஹஸ்யத்ரயஸாரம்' மூலமந்திராதிகாரத்திலும் இந்தக் கருத்துக்கு இடங்கொடுத்துப் பேசுகிறார்.

"புருடன் மணிவரமாகப் பொன்று மூலப்
பிரகிருதி மறுவாக, மான்றண்டாகத்
தெருண் மருள்வான் மறைவாக, வாங்காரங்கள்
சார்ங்கஞ்சங் காகமனந் திகிரி யாக
இருடீக்ங் கவீரைந்துஞ் சரங்க ளாக
விருபூத மாலைவன மாலை யாக,
கருடனுரு வாகமறை யின்பொருளாங் கண்ணன்
கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின் றானே"

இங்குக் கருடவாகனத்தில் பரமபுருஷனான பகவான் இருக்கிறான் என்று கருத்து வேதாந்தக் கொள்கைகளுக் கிணங்க விளக்கப்படுகிறது. வேதாந்தக் கொள்கைப் படி ப்ரகிருதி, மஹத், அஹங்காரம் இவைகள் பரம் பொருளின் அம்சமாக ஒப்புக்கொள்ளப்பட்டு இவை பகவானுடன் சேர்ந்தே இருப்பதைக் கொண்டு கௌஸ் துபமணி ஜீவன், மூலப்ரகிருதி, மறு மஹத் கதை என்றாற்போலக் கடவுளின் உருவத்திற்கு வேதாந்தக் கொள்கையைப் பின்பற்றி விளக்கம் கூறப்படுவது கவனிக்கத்தக்கது. உபநிஷத்தின் உருவமில்லா தெய்வக் கொள்கைக்கும் பாமரமக்களின் உருவமுள்ள தெய்வக் கொள்கைக்கும் சமரஸம் பண்ணிவைக்கும் விஷ்ணு புராணம் இந்த இடத்தில் வழிகாட்டியாக நிற்பது கவனிக்கத்தக்கது.

மும்மூர்த்திக் கொளகை

புராணங்கள் கதைகளை விளக்க வந்தாலும் அவை களால் யார் உயர்ந்ததெய்வம் என்று முடிவுபண்ணமுடிய வில்லை. விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகச் சொன்ன வர்கள் மற்ற தேவதைகளை அடியோடு மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் எல்லோருக்கும் மேலுள்ள தெய்வம் இவர்தான் என்று சொல்லிவிட்டார்கள். அவ்விதமே உபநிடதத்தில் உருவமில்லாத பிரும்மமும் உருவுள்ள

விஷ்ணுவும் ஒன்ருகிவிட்டன. அந்த விஷ்ணுவே உலகத்தைக் காக்கிருன், படைக்கிருன், அழிக்கிருன் என்ற கடவுள் இலக்கணமும் விஷ்ணுவோடு சேர்ந்து விட்டது. ஆனுல் படைப்பது, காப்பது, அழிப்பது என்பது ஒரே கடவுள் செய்ய முடியாததனுல் மும்மூர்த்தி களைக் கற்பித்துக்கொண்டு ப்ரும்மா படைப்பிற்காகவும், விஷ்ணு பாதுகாப்பிற்காகவும், சிவன் அழிப்பதற்காகவும் ஏற்பட்ட கடவுள் என்று சொல்லி மும்மூர்த்திகளும் கடவுள்தான் என்ற கொள்கை உருவாகிறது. ஆனுல் மும்மூர்த்திகளுக்கு நடுவில் இருப்பதினுல் விஷ்ணுவி னுடைய அதிகாரம் குறைந்து விடுவதால் கடவுள் இலக்கணம் விஷ்ணுவினிடத்தில் முழுவதும் இல்லாமல் போய்விடுவதினுல் அந்த குறைவைத் தவிர்ப்பதற்காக மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவே மும்மூர்த்தி களுக்கும் மூலம். அவர் மூலக்கடவுளாக இருப்பது மட்டுமில்லாமல் மும்மூர்த்திகளில்ஒருவராகவும் அவதாரம் செய்திருக்கிருர் என்றும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸ்தோத்திரத்தில் வெளியிடுகிருர்.

சிந்தனையாளர் செயல்

கருத்துக்கள் சிந்தனையாளர்களின் சிந்தனையில்தான் உருவாகின்றன. நூல்களுக்கு, கருத்துக்களுக்கு இணங்க வியாக்யானம் கூறுகிருர்கள். கருத்துக்களை ஆழ்ந்து கவனிக்குங்காலத்தில் அவை இப்படி வளர்ந்து இருக்க லாம் என்று ஊஹிக்க இடமேற்படுகிறது. அடிமுதல் முடிவரை ஒரே கொள்கையே இருந்திருக்குமானுல் வியாக்கியானத்திற்கு இடமேயில்லை. வேதத்தில் ஸ்தூலமாகக் காணப்படும் கருத்துக்களுக்கும் பிற்கால கருத்துக்களுக்கும் தர்க்கரீதியில் முரண்பாடு காணப்படு வதால் ஏதாவது ஒரு வகையில் இரண்டையும் பொருந்த வைக்க ஒரு சமாதானம் சொல்லித்தான் ஆகவேண்டும். வேதம் என்பது எல்லாக் கருத்துக்களுக்கும் அடிப்படை யாக அமைந்துள்ளது. மேலும் ஒருவகையில் கருத்துக் களின் 'தொகுப்பே' என்பது நிச்சயமாகத் தெரிகிறது.

வேதத்திற்குப் பிறகு சிந்தனையாளர்கள் பிறக்காது போனாலும் இருப்பதை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கட்டுப்படுத்தி யிருந்தாலும் சிந்தனை மூலமாகத் தகராறு ஏற்பட இடமில்லை. சிந்தனை என்பது சிந்தனையாளர்கள் கையில் இருப்பதனாலும் அவர்களைக் கட்டுப்படுத்த ஒரு அதிகாரியும் இல்லாதிருப்பதனாலும் அதை யாரும் தடுக்கமுடியவில்லை. சிந்தனையை அதன் இஷ்டப்படி விட வேண்டியது, விவேகிகள் செய்யக் கூடிய காரியம்.

வேதத்தின் பல தெய்வக்கொள்கை

வேதத்தில் பல தேவதைகள் கொள்கை இருக்கிறது என்று மக்கள் நினைத்துவிடப் போகிறார்களே என்று சந்தேகப்பட்டு, வேதமே, வேதத்தில் பல தெய்வக் கொள்கைகள் கிடையாது; கடவுள் ஒருவனே; அவன் ஒருவனே பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறான் என்று முடிவு சொல்லிவிட்டது. இந்த அடிப்படையிலேயே ஹிந்துமதம் இயங்கி வந்தால் இதற்கு ஆபத்தே கிடை யாது. இதன்கண் சிக்கல்களையும் காணமுடியாது. கடவுள் ஒருவன்தான், அவனை நாம்தான் பல உருவங் களுடன் பல பெயர்களுடன் கற்பிக்கிறோம் என்பது ஏற்பட்டுவிடுகிறது. இதை ரிக்வேதமே "ஏகம் சந்தம் பகுதா கல்பயந்தி" என்று சொல்லிவிட்டது. ஆனால் இந்தக் கொள்கை பின்பற்றப்பட்டால், மும்மூர்த்திகள் முப்பத்து மூன்று தேவதைகள், முப்பத்துமூன்று கோடி தேவதைகள் என்ற விரிவான கொள்கைகளும், இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டுள்ள புராணங் களின் கொள்கைகளும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும். சிலர் இந்தக் கருத்திலேயே நின்று புராணங்கள், "கருத்தை விளக்கும் கதைகள்" என்று கூறிவிட்டார்கள்.

கதைகள்

வேதத்தில் காணப்படும் வழியில் தெய்வத்தை ஒப்புக்கொள்ளுபவர்களும் புராணங்களை ஒப்புக்கொண்டு விளக்கம் கூறுவதில் பின்வாங்க மாட்டார்கள். சிந்தனையில் உருவாகிய முதிர்ந்த அறிவு இருக்கும் வரை விளக்கம் எதற்கும் கூறுவது சிரமமாகவே இருக்காது. வேதத்தில் காணப்படும் நூற்றுக்கணக்கான கதைகளை மீமாம்ஸகர்கள் விளக்கத்திற்காகக் கையாளப்பட்ட கதைகள் என்று கூறிவிட்டார்கள். உபநிஷத்துக்களில் காணப்படும் கதைகளும் இந்த நிலையிலேயே நிற்கின்றன. இந்த வழியிலேயே புராணக் கதைகளும் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. இவர்களுக்கு வேதாந்தத்தோடு தகராறு ஏற்பட இடமில்லை. பிரும்மம் ஒன்றுதான் என்றும் அது பல என்பது கற்பனைதான் என்றும், வேதாந்தமும் கூறுவதால் உபநிடதத்தின் பிரும்ம வாதமும், இதுவும் ஒத்துப்போவதற்கு இடமேற்படுகிறது.

பிரும்மமும், கடவுளும்

வேதாந்திகள் பிரும்மம் கடவுளாக ஆக முடியாது என்று நினைத்துக் கடவுள் தத்துவமே சிந்தனையின் கற்பனை என்று கூறிவிடுகிறார்கள். ஆனால் கடவுள் கொள்கைக்காரர்கள் பிரும்மக் கொள்கையோடு சேர்ந்து, எங்களுடைய கடவுள்தான் அந்தப் பிரும்மம் என்று கூறுகிறார்கள். இவையெல்லாம் கருத்தளவில் ஏற்படும் மாறுபாடுகளே தவிர தத்துவத்தில் ஒரு மாறுபாட்டையும் ஏற்படுத்தமாட்டா. கடவுள் என்ற தத்துவம் கருத்திலிருந்து உருவாகியதா? அல்லது தானே தனியாக நிற்கிறதா என்ற கேள்விக்கு எல்லா மதக்காரர்களும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். மனிதனுடைய கருத்துக்கு இடங்கொடுத்து விட்டதால் அது தன்னிஷ்டப்படி இயங்கி வருகிறது. கருத்துக்களை நூல்களில் சொல்லிவிட்டால், அக்கருத்துக்களை நாம் அறியும்போது அவற்றை மதிப்பிட்டு அவற்றின் மாறுதல்களையும் கவனிக்கத்தான் வேண்டி வருகிறது.

கருத்துக்களின் வளர்ச்சி

வேதாந்திகளுல் சிலர் பிரும்மம் ஒன்றுதான் சத்யம். மற்றது எல்லாம் கல்பிதமென்று சொல்லிவிட்டார்கள். இவர்களுக்குச் சிக்கல்கள் மிகக் குறைவு. ஆனல் அந்தப் பிரும்மத்தைக் கடவுளாகக் கொண்டு உருக் கொடுத்து, உலகோடும், வாழ்க்கையோடும் சம்பந்தப் படுத்தும்போது பல பிரச்சனைகள் தாமாகவே உண்டா கின்றன. பல கருத்துக்களை ஒரே நூலே கூறுவதாக இருந்தால் அவைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. நூற்றுக்கணக்கான ஆயிரக் கணக் கான நூல்களில், நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் உள்ள அறிவாளிகளின் கருத்துக்களை ஒழுங்குபடுத்திப் பேசுவது என்பது எளிய காரியம் அன்று. பல நூற்றுண்டு களில் பல சூழ்நிலையில் உண்டான கருத்துக்களை ஒன்று படுத்திப் பேசுவது நம்முடைய சாமர்த்தியத்தைக் காண் பிக்குமே தவிர உண்மையைப் பிரதிபலிக்காது. நமக்கு உண்மை வெளிவர வேண்டும் என்ற ஆசையிருந்தால் கருத்துக்களுடைய வரலாற்றை உணர்ந்து யுக்தி மூல மாக கருத்துக்கள் எப்படி அமையமுடியும் என்று சிந்தித்து முடிவு செய்வதுதான் நியாயமான காரியம். விஷ்ணு என்ற கொள்கையை வேதம்தான் சிந்தனை யாளர்களுக்கு அளிக்கிறது. அந்த விஷ்ணு என்ற சொல் வெவ்வேறு சூழ்நிலையில் எப்படி எப்படி இருந் திருக்கிறது என்பதை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். வேதங்கள் பிரத்தியட்சமாக இருப்பதால் அவற்றின் கருத்துக்களைக் கண்டுபிடிக்க நாம் தனியாக முயல வேண்டுவதில்லை.

நம்முடைய கருத்துக்குத் தகுந்தாற்போல் வேதங் களுக்குப் பொருள் கொள்ள வேண்டுமா? அல்லது அங்கு இருப்பதை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமா? என்று அவரவர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும். வேதத்திலுள்ள கருத்துக்களுக்குத் தானே விளக்கம் கூறுகிறேன் என்றுல் இது தன்னுடைய

கருத்தை ஸ்தாபித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியாகு மேயன்றி, உண்மையான கருத்தாகாது. இந்த நிலையி லேயே வேதத்திற்குப் பின் வந்த சிந்தனையாளர்கள் தம் கருத்தை ஒட்டியே வேதத்திற்குப் பொருள் கூறு கிறார்கள். சைவ சிந்தனையாளர்கள் சிவன் தான் வேதத் தில் சொல்லப்படுகிறான் என்கிறார்கள். விஷ்ணு சிந்தனை யாளர்கள் விஷ்ணுதான் வேதத்தில் சொல்லப்படுகிறான் என்கிறார்கள். வேதம் சிவன், விஷ்ணு என்ற இரண்டு பெயர்களைக் கொடுத்துவிட்டதால் இவர்களுக்கு இந்த வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் இவர்கள் சிவன், விஷ்ணு என்ற கருத்துக்களுக்கு முழுவதும் வேதத்தை எதிர்பார்க்கவில்லை. வேறு ஏதாவதொரு உற்பத்தி ஸ்தானத்திலிருந்து உண்டான கருத்துக்களை உருவாக்கிக் கொண்டு அந்தக் கருத்துக்கள் முழுவதையும் வேதங் களில் எதிர்பார்ப்பது இவர்களுடைய சிரத்தையைத்தான் எடுத்துக் காட்டும்.

வேத, புராண, ஆகம

வைணவம்

வேதத்தில் காணும் வைணவம் மற்றவைகளை மறக் காமல் விஷ்ணுவை வழிபடுவதையே சொல்லுகிறது. வைணவம் என்ற சொல் வேதங்களிலேயே வந்திருப் பதைப் பார்க்கிறோம். ஆனால் இது பிற்காலத்தில் எப்படி எந்த நோக்கத்தில் கையாளப்பட்டதோ அந்த நோக்கத் தில் வேதத்தில் வரவில்லை என்று தெரிகிறது. புராணங் களிலுள்ள வைணவம் விஷ்ணுதான் உலகத்தைப் படைத்தார், காப்பாற்றுகிறார், அவர்தான் உலகத்தை அழிப்பதும் என்ற கொள்கையை வெளியிடுகிறது. புராணங்கள் தாங்கள் கடைபிடித்த வழிகளில் இந்தத் தத்துவத்தை விளக்குகின்றன. ஆனால் இவைகளும் கர்ம தத்துவம் சம்பந்தப்பட்டவரையில் வேதத்தின் பொதுவான கொள்கைகளையே பின்பற்றுகின்றன. இதற்குப் பிறகு வந்த சைவ, வைணவக் கொள்கைகள் தங்களுடைய தெய்வத்திற்குத் தனியானச் சிறப்பைக்

காண்பிக்கவேண்டும் என்ற தனியான நோக்கத்தோடு தனியான கொள்கையோடு தலை எடுக்கின்றன. இவைகள்தான் ஆகமங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஆகம வைணவத்தின் தனித்த நிலை

ஆகமங்கள் தங்களுக்கு மூலமாக இப்போதுள்ள வேதங்களைச் சொல்லுவதில்லை. அதற்குப் பதிலாகத் தங்களுடைய ஆகமங்கள், தங்களுடைய தெய்வத்தின் வாயிலிருந்து நேரே பிறந்ததாகச் சொல்ல ஆரம்பிக்கின்றன. இவைகள் தங்களுடைய தெய்வத்திற்குத் தனியான சிறப்புள்ள ஒரு பெயரைக் கொடுத்து மதம், கர்மா, ஒழுக்கம், சம்பந்தப்பட்ட கொள்கைகளிலும் தனித்து நிற்கின்றன. இதுதான் ஆகம வைணவம் என்று கூறப்படுகிறது. பொதுவான கொள்கைகளைக் காட்டிலும் தனித்த கொள்கைகளில் மக்களுக்கு ஈடுபாடு ஏற்படுவது இயல்பானதால் ஆகமக் கொள்கைகளில் விஷ்ணுவை முக்கியமாகக் கொள்பவர்களுக்குப் பற்றுஏற்படுவது இயற்கையே. கருத்தளவில் மட்டும் ஆகமங்கள் நின்றிருந்தால் சிக்கலே வாராது. தனியான அனுஷ்டானத்தோடு அவை இருப்பதால் வேத அனுஷ்டானத்தை அவர்கள் பின்பற்றுவதா? ஆகம அனுஷ்டானத்தைப் பிற்பற்றுவதா? என்ற சிக்கலில் வேதத்தை முக்கியமாக நினைப்பவர்கள் கருத்தளவில் மட்டும் ஆகமங்களை ஒப்புக் கொண்டு அனுஷ்டானத்தில் வேதத்தைப் பின் பற்றுகிறார்கள். மற்றும் சிலர் வேதத்தையே அடியோடு புறக்கணித்து ஆகம அனுஷ்டானங்களைப் பின் பற்றுகின்றனர். சிலர் முடிந்த வரையில் இரண்டையும் பின் பற்றுகின்றனர். தமிழ்நாட்டு வைணவத்தில் ஆகமம் உட்புகுந்து விட்டதால் வைணவம் இரண்டு விதமாகப் பிரிந்தது. ஒரு சிலர் ஆகமங்களைப் பின்பற்றி வேதத்தின் கொள்கைகளைக் கைவிட்டார்கள். மற்றும் சிலர் வேதத்தைப் பின்பற்றி ஆகமங்களை கைவிட்டார்கள்.

இந்த நிலையெல்லாம் வேதம் ஆகமம் இவைகளுக்குப் பிறகு வந்த ஆசாரியர்களிடம் காணப்படும் செய்தியாகும்.

வைணவ வேதாந்தக் கொள்கைகள்

அத்வைதக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆசாரியர்களும் தங்களை வைணவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அத்வைதக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆசாரியர்களும் தங்களை வைணவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். தமிழ்நாட்டு வைணவம் இந்த இரண்டு வேதாந்தக் கொள்கைகளுக்கு நடுவிலிருந்துகொண்டு 'விசிஷ்டாத்வைதம்' என்று பெயர் பெற்றுள்ளது. வேதாந்தக் கொள்கைகளுக்கும் விஷ்ணு தெய்வக் கொள்கைகளுக்கும் சம்பந்தமேயில்லை. தெய்வக் கொள்கை ஒரு தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டு அவனுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவை விளக்குகிறது. வேதாந்தக் கொள்கை முடிவான உண்மையை விளக்க ஏற்பட்டுள்ளது. ஆனாலும் வேதாந்தம் வைணவத்தோடு சேரும்காலத்தில் வைணவர்கள் தங்களுடைய முடிவான பொருள் அந்த விஷ்ணு என்று சொல்லிக் கொள்கிறார்கள். தனிப்பட்ட கடவுள கொள்கைக்கும், கடவுள் உருவில்லாதது என்ற வேதக் கொள்கைக்கும் சமாதானம் ஏற்பட இடமேயில்லை; ஆனாலும் தங்கள் வழியில் நின்று வேதாந்தக் கொள்கைக்காரர்கள் தெய்வக் கொள்கைகளோடு ஒத்துப் போகிறார்கள். அருவான பிரும்மம்தான் உருவத்தை அடைகிறது என்று சிலர் கூறுகிறார்கள். உருவம் உள்ள கடவுளை வழிபட்டுத்தான் அருவ நிலையை அடைய முடியும் என்று சிலர் நினைக்கிறார்கள்.

தமிழ்நாட்டு வைணவம்

இது விசிஷ்டாத்வைத வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. அநேகவிதமான ஆகமங்களுடைய

ஆகமங்களுடைய கருத்திற்கும் பூரணமான முக்கியத்துவம் கொடுக்கிறது. வேதம், ஆகமம் வேதாந்தம் இவைகளை அடிப்படையாகக் கொண்ட வைணவக் கொள்கை இந்தியாவில் பல பாகங்களிலும் இருந்து வருகிறது. ஆனால், தமிழ்நாட்டு வைணவம் நாட்டு மொழியாக உள்ள தமிழ் மொழியையும் ஒப்புக்கொண்டு தமிழ்மொழியிலுள்ள ஆழ்வார்களுடைய பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. இவ்வித வைணவம் நாதமுனிகள் காலத்திலிருந்து வேதாந்த தேசிகர் காலம் வரை வளருகிறது. ஒவ்வொரு ஆசாரியரும் ஒவ்வொரு நூலை எழுதி அதில் தங்கள் கருத்துக்களை ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மட்டும் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் காலத்தில் பிற்பட்டு வந்த ஆசாரியர்கள் தங்களுக்கு முன்னால் வந்த ஆசாரியர்களின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கி. பி. 10-ல் இருந்து 14 வரையுள்ள நான்கு நூற்றாண்டுகளில் வந்துள்ள ஆசாரியர்கள் பல நூல்களை எழுதியுள்ளார்கள், ஒரே ஆசாரியரே எல்லாக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. ஒவ்வொரு நூலிலிருந்தும் ஒவ்வொரு கருத்து வெளியாகிறது.

மூன்றுவகை நூல்கள்

நூல்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். முதலாவது வகை நூல்கள் : மற்ற கொள்கைகளைக் கண்டித்து வாதப் பிரதிவாதங்களை விளக்கி வேதாந்தக் கொள்கைகளை தக்கரீதியில் எழுதப்பட்ட நூல்கள் விளக்கஇரண்டாவது வகை நூல்கள் ரகசிய நூல்கள்.இவை ப்ரமாணங்களின் அடிப்படையில் உருவாகியுள்ள கருத்துக்களை மூன்று மந்திரங்களில் ஏறிட்டுக் காண்பிக்கும் நூல்கள் மூன்றாவது நூல்கள் ஸ்தோத்திரங்கள். தங்கள் இஷ்ட தெய்வத்தைப் புகழ்ந்து பாடுவன. வேதாந்தக் கருத்துக்களை வெளியிடும் நூல்களுக்கு நோக்கம்—பிற மதங்களைக் கண்டித்துத் தங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேதாந்தக் கருத்துக்களில் தெளிவு உண்டுபண்ணுவது ஆகும், அவ்விதமே ரஹஸ்யங்கள் தங்களுடைய கருத்துக்களை

மந்திரங்களில் ஏறிட்டுக் காண்பித்து மந்திரங்களை ஜபிக்கும் காலத்தில் கருத்துக்களை ஞாபகமூட்டுவதே. வழிபாட்டு நூல்கள தங்களுடைய கருத்துக்கிணங்க கடவுளை வழிபட்டு அவைகளைக் கையாண்டால் குறிப்பிட்ட பயனைப்பெறலாம்என்றுகூறும் நூல்கள்வழிபாட்டுப் பாடல்கள் முன்பே பல இருந்தும் தங்களுடைய கருத்துக்களில் பொதுமக்களின் கவனத்தைக் கவர இந்த வழி மீண்டும் கையாளப்பட்டுள்ளது. ஸ்தோத்ரங்கள் கருத்தை வெளியிடுவதோடு மட்டும் நின்றிருந்தால் இவை கருத்துக்காக மட்டும் பின்பற்றப்பட்டிருக்கும்.

ஆனுல், அப்படி இல்லாமல் பயனையும் சொல்லி விட்டதால் வழிபாட்டு நூல்களாக ஆகிவிடுகின்றன. பண்டே வழிபாட்டு நூல்கள் பல இருப்பதால் இவைகளின் நிலை என்ன என்று நிர்ணயிக்க முடியவில்லை.

ஆகவே, ஸ்தோத்திரங்கள் கருத்தை வெளியிடக் கையாளப்பட்ட நூல்கள் ஆயினும் பயனில்லாதவற்றை மனிதன் செய்ய விரும்பமாட்டான் ஆதலின் அவன் கவனத்தைக் கவரவே பயன் சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும். தம்முடைய பெயர், பயன் இவைகளை அடையாளமாகக் கொண்ட நூல்கள் கருத்துக்களைப் பரப்ப ஏற்பட்ட நூல்கள் என்றுதான் சொல்லவேண்டி வருகிறது. ஸ்தோத்திரத்தைப் படித்தவுடன் குறிப்பிட்ட பயன் உடனே கிட்டும் என்று சொல்வது மக்களுடைய நம்பிக்கையைப் புது வழியில் திருப்பச் செய்யும் புது முயற்சிதான்.

தமிழ்நாட்டு வைணவப் போக்கு

தமிழ்நாட்டு வைணவம் ஆகமம்போல் தனது கொள்கையைத் தனியாக உருவாக்கியிருந்தால் தமிழ் நாட்டின் வரலாறு வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனுல் அப்படியில்லை. கர்மாக்களுக்கு வேதங்களிடம் போகச் சொல்லுகிறுர்கள். வர்ணுச்சிரம தர்மத்திற்கு ஸ்மிருதிகளிடம் போகச் சொல்லுகிறுர்கள். அடிப்படையான

வேதாந்தக் கொள்கைகளுக்கு உபநிடதங்களிடம் போகச் சொல்லுகிறார்கள். கதைகளுக்கு இதிகாசப் புராணங்களிடம் போகச் சொல்லுகிறார்கள். இவர்கள் உருவாக்கியன எல்லாம் கருத்து நிலையிலேயே இருந்து வருகின்றன. விஷ்ணு உருவம்தான் கடவுள். ஆனால் அவன் சரீரமுள்ளவன். மனிதன் போலுள்ளவன் என்று சொல்லி மனித நிலையில் பகவானை நிருபித்து மனித வாழ்க்கையில் உள்ள அம்சங்களைப் பகவானிடத்து ஏறிட்டுக் காண்பித்து மனித வாழ்க்கையோடு தெய்வக் கொள்கைக்கு நெருங்கிய உறவைக் காண்பிப்பதுதான் இவர்கள் கருத்துமூலம் செய்துள்ள உபகாரம்.

ஒரு வகையில் ஏற்கெனவே உள்ள நூல்களுக்கு வியாக்கியனமாக அமைந்துள்ள மதமென்று இதை ஒருவாறு கூறலாம். இந்து மதத்தில் ஆசாரியன் என்ற கருத்து குறுகிய பொருளில் இருந்து வருகிறது. பழையதை கண்டித்து புதிதான ஒன்றை தங்களின்படி இவர்கள் கூறமுடியாது. இந்த நிலையில் வேதம், ஸ்மிருதி, இதிகாச புராணங்கள், ஆகமங்கள், ஆழ்வார்களுடைய பாடல்கள் இவைகளுக்கு விளக்கம் கூறும் வகையில்தான் ஆசாரியனுடைய கடமை அமைந்துள்ளது.

ஆசாரியர்கள் கருத்துக்களின் அடிப்படை

தமிழ்நாட்டு வைணவம் முழுவதும் வேதம் காட்டியுள்ள வழியிலேயே போகவில்லை. முழுவதும் ஆகமம் காட்டியுள்ள வழியிலேயும் போகவில்லை. முழுவதும் புராணங்கள் காட்டியுள்ள வழியிலேயும் போகவில்லை. வைணவ ஆசாரியர்கள் தங்களுடைய கருத்துக்கிணங்கக் கூடிய மேற்கோள்களை வேதம், ஆகமம், இதிகாசங்கள் இவைகளிலிருந்து ஆங்காங்கு எடுக்கிறார்கள். தங்களுடைய கருத்திற்கிணங்க வசனங்களுக்கு உரை கூறுவதோடு, நடந்த நிகழ்ச்சிகளுக்கும் தங்கள் கருத்துக் கிணங்க விளக்கமும் கூறுகிறார்கள். ஆசாரியர்களின் கருத்துக்களுடைய பொதுவான நோக்கங்கள் மிகவும்

பரந்தவையாகக் காணப்படுகின்றன. உலக வாழ்க்கையில் துன்பம் என்பது எல்லோருக்கும் இருப்பதால் எல்லோருக்கும் துன்பத்திலிருந்து கரையேற வழிதேட வேண்டும். மக்கள் உலக வாழ்க்கையில் மிகவும் ஈடுபட்டிருப்பதால் சுலபமான வழியில் அவர்கள் மோட்சத்தை அடைய வழிகாட்டவேண்டும். கடவுள் கொள்கை புரியாமலிருப்பது மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை வெட்டி விடுகிறது.

ஆகவே மனிதனுக்குப் புரியும் வகையில் தெய்வக் கொள்கை அமைய வேண்டும். வர்ணாச்சிரம தர்மம் என்ற அடிப்படையில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் பல காரணங்களால் மனிதனுடைய மனத்தில் உயர்ந்தவன் என்ற உணர்ச்சியையும் தாழ்ந்தவன் உணர்ச்சியையும் உண்டுபண்ணிச் சமுதாய வாழ்க்கையை பாழாக்கி விடுகிறது. எல்லோரும் ஒன்று என்று எண்ணத்தை உண்டுபண்ணவேண்டும். மோட்சம் என்பது வெறும் கருத்தளவில் நிற்காமல் செயல்களில் காண்பிக்க வேண்டியதாக இருக்கவேண்டும். மோட்சம் என்பது மனிதனுக்குப் புரியாத நிலை அன்று. பாமரனும் புரிந்துகொள்ள வேண்டும். ஏராளமான நூல்களைப் படித்துக் கஷ்டப் படக்கூடாது. மிகவும் எளிய நடையில் கருத்துக்களை மனிதன் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது போன்றவை ஆசாரியர்களின் கருத்துக்களின் அடிப்படையாக அமைந்துள்ளன.மற்றொரு முக்கியமான அம்சமும் மிகவும் குறிப்பிடத்தகுந்தது. தான் மிகவும் உயர்ந்தவன் என்று நினைக்கும் எண்ணத்தால் ஏற்படக்கூடிய தீமைகளை அகற்றத் தான் அடிமை என்ற உணர்ச்சி பெறல் வேண்டும். ஆண்டவனுக்கு அடிமை என்ற உணர்ச்சி பெறல் வேண்டும். ஆண்டவனுக்கும் அடிமை அடியார்களுக்கும் அடிமை என்ற உணர்வு வேண்டும். இந்த அடிமை உணர்ச்சி மனிதனுடைய அகங்காரத்தை அடியோடு மாற்றி அமைத்து மனத்தில் சாந்தியைக் கொடுப்பது. கடவுளுக்கு மட்டும் அடிமை

என்று நினைத்தால் இது கருத்தளவில் மட்டும் நின்று விடும். அப்படி அல்லாமல் அடியார்களுக்கும் அடியனுக நிற்பது உலக வாழ்க்கையிலும் பிரதிபலித்துத் தூய் மையை உண்டு பண்ணும்.

குரு பரம்பரைக் கதைகள்

இவர்களுடைய அடிப்படையான கருத்துக்களுக்கு மூலமாக அமைந்துள்ளவை குரு பரம்பரை நூல்களில் காணப்படும் கதைகள். இதிகாசப் புராணங்களில் ஒவ் வொரு நோக்கத்தோடு ஒவ்வொரு கதை அமைந்திருப்ப தால் இவைகளைக் கொண்டு வைணவக் கருத்துக்களை விளக்க முடியவில்லை. ஆகவே ஆசாரியர்களுடைய காலத்தில் நடந்த அநேக சம்பவங்களைக் குருபரம்பரை என்ற நூலில் ஒன்று சேர்ந்துப் புராணத்திற்குப் பதிலாக அதை வைத்துக்கொண்டு விட்டார்கள். வைணவக் கொள்கைகள் புரட்சிகரமானவைகளாக இருப்பதினுல் சமுதாயத்தில் எப்படி இந்தப் புரட்சி பிரதிபலித்தது என்று பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. அநேகமாக குரு பரம்பரைக் கதைகள் இரண்டே அடிப் படையில் அமைந்திருக்கின்றன என்று கூறலாம். ஒன்று தெய்வத் தன்மை. ஜாதிக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்டது என்பது மற்ருென்று. எவ்வளவு ஆபத்து வந் தாலும் விஷ்ணு ஒருவனே தெய்வம் என்ற கருத்தை மாற்றிக்கொள்ளக் கூடாது என்பதாம். எனவே, மற் ருெரு தெய்வத்துடனே அல்லது தெய்வத்தைச் சேர்ந்த வர்களுடனே எந்த வழியிலும் சேர்ந்தால் ஆத்மாவிற்கு அழிவு ஏற்படுமென்று சொல்லப்படுகிறது. மகரிஷி களுடைய கருத்துக்களில் பூரணமான வைணவத்தைப் பார்க்க முடியாததினுல் கருத்துக்களிலேயே நின்று பேசும் ஆச்சாரியர்கள் தனியான இடத்தைப் பெற்று விட்டார்கள்.

ஆசாரியன் பெருமை

நூல்களில் உள்ள கடவுளை நிர்ணயம் பண்ண இவர்களால் முடியவில்லை. யுக்தியைக் கொண்டு நூல்களுக்குப் பொருள் விளக்கிக் கொள்ளவும் சக்தியில்லை. நேரில் தெய்வத்தையும் பார்க்க முடியவில்லை. ஆசாரியன்தான் நேரில் காணப்படும் தெய்வம். அவனருள் இருந்தால் போதும் என்ற கொள்கை தமிழ் நாட்டு வைணவத்தின்தனிச்சிறப்புவாய்ந்த கொள்கையாக ஆகிறது ஆசாரியன் என் சொல்பல பொருள்களில் வழங்கப் பட்டிருக்கிறது. பூணூல் போட்டு வேதங்களைச் சொல்லிக் கொடுத்தவன் ஆசாரியன் என்று சொல்லப்படுகிறான். ஒரு எழுத்தை சொல்லிக் கொடுத்தவனும் ஆசாரியன் என்று சொல்லப்படுகிறான். யாரிடம் படிக்கிறோமோ அவன் அந்த விஷயத்தில் ஆசாரியன் ஆகிறான். ஆனால் தமிழ்நாட்டு வைணவ சம்பிரதாயத்தில் ஆசாரியன் என்ற சொல் மிகவும் சுருங்கிய கருத்தோடு நிற்பதைப் பார்க்கிறோம். மோட்சத்தை அடையக்கூடிய மார்க்கத்தை யார் காண்பிக்கின்றானோ அதற்கான மந்திரத்தை யார் உபதேசம் செய்கின்றானோ அவனே ஆசாரியன். ஆசாரியன் ஒருவன்தான் இவனுடைய நெருங்கிய உறவினர். ஏனென்றால் இவனுடைய ஆத்மாவை அவனே கரையேற்றுகிறான். உபதேசம் செய்து நல் வழியில் செலுத்தி மோட்சம் அடையும் வரையில் இவனுக்கு இம்முறை வழிகாட்டியாக நிற்கிறது. ஆசாரியருக்கு மற்றொரு பெருமை ஆசாரியப் பரம்பரையில் வருவது. இதனால் ஆசாரியன் முன் ஆசாரியர்களுடைய திருவடி சம்பந்தத்தைப் பெற்று அந்தப் பரம்பரை அழியாமல்நிற்பதற்குக்காரணமாகிறான்.வேதங்கள்ஆசாரியனைத் தெய்வமாக வழிபடு என்று மாத்திரம் கூறின. (ஆச்சாரிய தேவோபவ). ஆனால் இந்த ஆச்சாரிய வழிபாடு தானே நேரில் மோட்சம் கொடுக்கிறது என்று 'ஸ்ரீவசனபூஷணத்தில்' லோகசாரியரும் சொல்லுகிறார்.

ஆசாரியனும்

ஸ்ரீவசனபூஷணமும்

ஸ்ரீவசனபூஷணம் என்ற நூல் வைணவ சம்பிரதாயத்திற்கு ஏற்பட்டுள்ள நூல்களில் தலைசிறந்து விளங்குவது. இதற்கு மணவாள மாமுனிகளும் உரை எழுதியுள்ளார். இங்கு உள்ள ஒன்பதாவது பிரகரணத்தில் கடைசி கருத்துக்களில் தமிழ்நாட்டு வைணவ சம்பிரதாயத்தில் ஆசாரியன் எப்படி சொல்லப்பட்டிருக்கிறன் என்பது விளக்கப்பட்டுள்ளது. அவருடைய வாக்கியத்தை அப்படியே எடுத்து எழுதுவோம். ஆச்சாரிய அபிமானம் தான் ப்ரபத்திபோல உபாயாந்திரங்களுக்கு அங்கமுமாய்ச் சுதந்திரமுமாய் இருக்கும். (464) பக்தியில் அசகதனுக்கு ப்ரபத்தி. ப்ரபத்தியில் அசத்தனுக்கு இது (465) பிரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும். பின்பு புஷ்பிதமாக்கும். அனந்தரம் 'பல பர்யந்தமாக்கும் (466). மனிதன் கோடானுகோடி ஜன்மாக்களை எடுத்துப் புண்ணிய பாபங்களைச் சம்பாதித்து வாழ்நாளின் நோக்கத்தையே தெரிந்துகொள்ளாமல் உலக வாழ்க்கையிலே கிடைத்தவைகளை அனுபவித்துச் சுகம் வேண்டும் என்ற நோக்கத்தோடு வாழ்நாளை ஆரம்பித்துத் துக்கத்தில் முடித்து ஓடி ஓடிப் பல பிறப்பும் பிறந்து ஏதோவொரு காரணத்திஞல் நல்ல ஜன்மாவை எடுத்து நல்வழியில் போகவேண்டும் என நினைத்தாலும் இடையூறுகள் ஒரு புறம் இருக்க, இவஞல் செய்ய முடியாதவைகளைச் செய்யச்சொல்லி அவன் அதைக்கண்டு திகைப்படைந்து சோதிக்கும் காலத்தில் எம்பெருமான் "உன்னை விடுவித்துக் கொள்ள நீ முயல வேண்டா ; நானே உன்னை விடுவிக்கிறேன் என்ற சரணுகதி வழியையும் பகவான் காண்பித்து, அதுவும் புரியாமல் நிற்கும் காலத்தில் இந்த ஆசாரியாபிமானம் என்ற உபாயத்தைக் ஆசார்யர்கள் காண்பித்து, நீ செய்யவேண்டியது ஒன்றுமில்லை, நீ அவனுடைய அபிமானத்திற்குப் பாத்திரமாயிருந்தால் போதும். அந்த எண்ணமே உனக்குமோட்சத்தைக் கொடுக்கும் என்றும், நீ அவனை

நினைக்கவேண்டியது இல்லை; அவன் உன்னை நினைக்கும்படி செய்தாலே போதும். இதுவே மோட்சத்திற்குச் செல்லும் வழி என்று கூறும் ஸ்ரீவசனபூஷணக் கருத்து தமிழ்நாட்டின் வைணவக் கருத்தின் சிகரமாக விளங்குகிறது. இதை விளக்குங் காலத்தில் லோகாச்சாரியார் சொல்லும் கருத்து மிகமிக உயர்ந்தது. பக்தியில் சக்தியில்லாதவனுக்கு ப்ரபத்தி என்ற எளிய உபாயம். அந்த உபாயத்தையும் கைக்கொள்ள முடியாதவனுக்கு ஆசாரிய அபிமானம் ஒன்றே மோட்சத்தைக் கொடுத்து விடும் என்று கூறுகிறார்.

இந்த ஆச்சாரிய அபிமானம் ஸ்வரூபத்தைத் தளிர்க்கச் செய்யும். பிறகு தானாகவே பயனை அடையச் செய்யும். ஆச்சாரிய அபிமானம் ஒன்றே போதும். "அதை நம்பினால் போதும்" என்று சொல்வது ஆசாரியர்களுக்கு மக்களிடமுள்ள ஆழங்கண்டுபிடிக்கமுடியாத கருணையைத் தெரிவிக்கிறது. எத்தனை நூல்களை எந்தக் காலங்களில், எத்தனை பேரிடம் கற்க முடியும்? படித்தது முழுவதும் புரியவேண்டும். புரிந்ததும் சிந்தனையில் சேர்ந்துவிடவேண்டும். அவரவர்கள் தங்கள் நூல்களில் தங்கள தங்கள் சித்தாந்தங்களை வற்புறுத்திச் சொல்லும் கருத்துக்ளாகிற காடுகளில் உட்புகுந்து வெளிவர முடியாமலே பல அறிவாளிகள் வாழ்நாளைப் பாழாக்கிக்கொண்டு விட்டார்கள். வேதாந்ததேசிகரும் நூல்களைப் படிப்பதன் மூலம் மனிதன் தெளிவு பெற முடியாது, படிக்கப்படிக்கச் சாத்திரங்கள் கஷ்டத்தைக் கொடுப்பதோடு சிந்தனையில் குழப்பத்தையே உண்டுபண்ணும். இவைகளைத் தவிர்க்க ஒரே வழி ஆசாரியனை அடைவது என்பதுதான் என்று கூறுகிறார். ஆசாரியன் எம்பெருமானின் ஆறுவது அவதாரமாகக் கூறப்பட்டுள்ளான்.

இறைவனின்
ஐவகை நிலைகள்

உருவமில்லாத கடவுளிடம் இருந்த குறை உருவத்தோடு ஸ்ரீவைகுண்டத்தில் விளங்கிவரும் ரூபத்தில்

தீர்ந்துவிட்டது. அந்தப் பரரூபம் நான்கு சுவர்களுக்கும் நடுவிலுள்ள ஜலம்போல் எல்லோருக்கும் எல்லா காலத் திலும் நெருங்கமுடியவில்லை. அந்த குறையை நிவர்த் திக்க எம்பெருமான் வியூகமாக உருவம் எடுத்தார். அந்த உருவம் இந்த லோகத்திலேயே இருந்தாலும் 'க்ஷீராப்தி போல்' அடைய முடியாததாக இருந்துவிட்டது. இந்தக் குறையை நீக்க பகவான் விபவாவதாரம் செய்தார். ஆனால் அந்த ராமன், கிருஷ்ணன் உருவத்திலிருந்த அவதாரங்கள் அந்த அந்தக் காலத்தில் உள்ள மக்களுக்கே பயன்பட்டதால் மழையினால் ஆற்றில் ஜலம் பெருகும்போது இருந்தவர்களுக்கு அந்த ஜலம் பயன் படுவதைப் போல, சிலருக்குத்தான் பயன்பட்டது. மற்ற காலம், மற்ற தேசங்களில் இருந்தவர்களுக்கு அது பயன் படவில்லை. இந்தக் குறையை நிவர்த்திசெய்ய அவனவ னுடைய ஹிருதயத்திலேயே பகவான் தன் உருவைக் காட்டி அவரவரைக் கரையேற்ற முயல்கிறான். அவ் விதம் தன்னுடைய உள்ளத்தில் எழுந்தருளியிருக்கும் பகவானை யோகத்தினால்தான் பார்க்க முடியும். அந்த யோகத்தைப் பின்பற்றுவது கஷ்டம். அதனால் பகவான் எப்போது தரிசனம் கொடுப்பான் என்பது நிச்சயம் இல்லை.

இந்தக் குறையை நிவர்த்திக்க வீடுகளிலோ, ஆல யங்களிலோ பிம்பங்களில் வந்து உட்கார்ந்து நாமிருக்கும் இடத்தை தன்னிருப்பிடமாகக் கொண்டு, அடியார்களுக் குப் பராதீனனாக இருந்து நம் கண்ணுக்கு எப்போதும் கண்டுகளிக்கக் காட்சி கொடுத்து அர்ச்சாவதாரம் செய் தான். ஆகவே, இந்த அவதாரத்திற்கும் ஒரு குறை யுண்டு. பிம்பத்தில் வந்துள்ள தெய்வம் நம்முடைய அன்புக்கு போக்கு வீடாக இருக்கலாமே தவிர நம்மோடு கூடிக் கலந்துபேசி, நம் வருத்தங்களைக் காதுகொடுத்துக் கேட்டு, நம்மை ஆசுவாஸம் பண்ணிப் பேசமுடியாது. அர்ச்சாவதாரத்தில் பகவான் பேசியதே கிடையாது. பிம்பங்களிலிருந்தபடியே பேசினால் உலகத்திற்கு ஆபத்து ஏற்படும் என்ற 'ஷட்விட்சப்ராம்மணம்' கூறுகிறது.

அதனுலேயே அர்ச்சகர் மூலமாகவே அர்ச்சாவதாரத்தில் பகவான் தன் கருத்தைத் தெரிவிக்கிருன் என்ற சம்பிரதாயம் இருந்து வருகிறது.

அர்ச்சையிலும் ஆசாரியன் உயர்ந்தவன் என்பது

இந்தக் குறையை நிவர்த்திக்கப் பகவான் ஆசாரியனுக அவதாரம் பண்ணுகிருன். ஆசாரியன் சிஷ்யனேடு நெருங்கிப் பழகிப் பேசி அவனுடைய குறைகளை ஆச்வாஸப்படுத்துகிருன் ஆசாரியன் பேசும் தெய்வம். நடமாடும் தெய்வம் என்று சொல்வது மிகையாகாது. பல்லாயிரக்கணக்கான வருடங்களில் பல இடங்களில் வளர்ந்து ஒவ்வொரு இடத்திலிருந்து ஒவ்வொரு கருத்தை பெற்று உருவாகி வளர்ந்த வைணவம் தமிழ் நாட்டில் வந்து எளிய மக்களுக்குத் தகுந்தாற்போல் மிகவும் எளிய வழியில் அமைந்தது தமிழ் நாட்டின்மனிதப் பெருமைக்கு சான்ருகும்.

ஆச்சாரியனை அடைய ஆறுபடிகள்

ஆசாரியனை அடைவது என்பது ஆறுபடிகளில் ஏறினுல்தான் கிடைக்கும் என்று வேதாந்த தேசிகர் கூறினுர். இவனை எம்படியாவது நம்மையடையச் செய்ய வேண்டும் என்றிருக்கும் ஈசுவரனின் கருணை முதல்படி கருணை மிகுதியால் இவன் கடவுளை அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யாததையும் கடவுள், செய்ததாகக் கொள்கிருன்; இது இரண்டாவது படி. அப்படி தற்செயலாக கிடைத்துள்ள ஸுகிருத்தை அடிப்படையாகக் கொண்டு பகவத் கடாக்ஷத்தால் கருவிலேயே கிரு உடையவனுக ஆவது மூன்ருவது படி. அதன் விளைவாக ஸாதுக்களிடத்தில் த்வேஷம் இன்மை ஏற்படுவது நான்காவது படி. அதன் விளைவாக ஸாதுக்களிடம் கவனத்தைச் செலுத்துவது ஐந்தாவது படி. அதன்

விளைவாக ஸாதுக்களுடைய சம்பாஷணம் கிடைப்பது. ஆருவது படி. இந்த ஆறு படிகளில் ஏறிவந்தவர்களுக்குத்தான் ஒரு ஆசாரியனுடைய அருள் கிடைக்கிறது. இவ்விதம் தமிழ்நாட்டு ஆச்சாரியர்கள் கருத்து, கடுமையான கருத்துக்களை எளிமையாக ஆக்குவதிலேயே நிற்கின்றது.

வைணவத்தில் ஆலய வழிபாடு

ஆலய வழிபாட்டை தங்களுடைய கொள்கைகளில் சிகரமாக வைத்துக்கொண்டதும் வைணவத்தில் எளிமையில் உயர்ந்த அம்சம். கண்ணுக்கு நேராகக் கடவுளைக் காண்பித்து அவனுக்குக் கைங்கர்யம் செய்வதை வாழ்நாளில் பயன் என்று கூறுவது தமிழ்நாட்டின் பல்லாயிரக் கணக்கான வருடங்களாகப் பழகி வந்துள்ள ஒரு பழக்கத்தை இவர்கள் பின்பற்றிச் சிந்தித்து வந்திருப்பதை வெளியாக்குகிறது. அவ்விதமே சிந்தனைக்குப் பூர்ணமாக இடங்கொடுத்து அது எங்கே கொண்டுவிட்டாலும் பயமின்றி அங்கு செல்லும் தைரியம் தமிழ்நாட்டு ஆசாரியர்களைச் சார்ந்தது

சிந்தனையின் சிறப்பு

உலக அநுபவத்தையும் யுக்தியையும் அடிப்படையாகக் கொண்டு சிந்திப்பது அவசியம்தானு என்பது சிந்தனையாளர்களிடமுள்ள பெரிய பிரச்சினை. சிந்தனையே வேண்டாம் என்று சொல்லிவிட்டால் மனிதனுடைய சிந்தனைச் சக்தி இருக்கும் இடம் தெரியாமல் மறைந்துவிடும். பகவான் மனிதனுக்குச் சிந்தனை சக்தியைக் கொடுத்ததும் பயனற்றதாகிவிடும். சிந்தனை என்பது உலக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டது. மேலும், மனிதப் பண்பாடு சிந்தனையில்தான் உருவாகிறது. சிந்தனை என்பது மனிதனுக்குமட்டும் கிடைத்துள்ள வரம். இதைப் பயன்படுத்தித்தான் மனித நாகரிகம் இன்று வரை வளர்ந்துவருகிறது.

சிந்தனை உயர்ந்த கருவியாக இருந்தாலும் அது கருத்துக்களைக் கல்பித்துக்கொண்டே போவதில் சில இடங்களில் அனுகூலம் உண்டு. உதாரணமாக ஒரு மனிதனின் தனி சிந்தனையில் எவ்வளவு வேண்டுமானாலும் கல்பிக்கலாம். சிந்தனை வளர்வதை யாரும் தடுக்க முடியாது. அவ்விதமே கண்ணுக்குத் தெரியாத கடவுளைப்பற்றிச் சிந்திக்கும் காலத்திலும், சிந்தனையை யாரும் கட்டுப்படுத்த முடியாது.கட்டுப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை.

தூய உள்ளத்தில் தோன்றும் கருத்தில் உதயமாகும் கடவுள் கொள்கையை வளர்க்கச் சிந்தனையே வேண்டும். இதற்கு எல்லையே கிடையாது. ஆனால் உலகத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் சிந்தனைகளுக்கு உலக அனுபவம் எதிராக இருந்தால் சிந்தனை தொடர்ந்து போகமுடியாது. விஞ்ஞான சாத்திரம் ப்ரத்தியட்சத்தை அடிப்படையாகக் கொண்டு நிற்பதால் அனுபவத்திற்கு விரோதமாக எந்த யுக்தியும் வளர முடியாது. அனுபவ விரோதமாக சிந்திப்பவனைப் பயித்தியம் பிடித்தவன் என்று மக்கள் சொல்லிவிடுவார்கள்.

தெய்வக் கருத்தில் சிந்தனை

யுக்தியையே நம்பி வாழும் வேதாந்தக் கருத்திலும் கண்ணுக்குத் தெரியாத கடவுளைப் பற்றிய சிந்தனையிலும் யுக்தியை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைக்குப் பூர்ண இடமுண்டு. தெய்வக் கருத்தில் சிந்தனை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போகலாம். யுக்தி தன்னை அழைத்துக் கொண்டு போகும் இடத்திற்குப் போக வேண்டும் என்று கருத்தைத் தமிழ்நாட்டு ஆசாரியர்கள் தங்களுடைய கருத்து உணர்ச்சியில் காண்பித்து விட்டார்கள். கடவுளைச் சர்வ வல்லமை உடையவனாகவும், கருணைக் கடலாகவும் ஒப்புக்கொண்டுவிட்டால்

அவன் ஆன்மாக்களிடமிருந்து எதைத்தான் எதிர்பார்ப் பான்? அவாப்த ஸமஸ்த காமனுக உள்ள (எல்லா விரும்பியவைகளையும் அடைந்தவன்) அவனுக்கு ஜீவாத் மாவிடமிருந்து புதியதாகக் கிடைக்கக்கூடியது ஒன்றும் கிடையாது.

சங்கிலியால் மனிதனைக் கட்டிப்போட்டு 'நீ நட' என்று எந்த அறிவாளியும் சொல்லமாட்டான். ஜீவாத்மா அறிவில்லாதவன், சக்தியில்லாதவன், புண்ணிய பாபங் களால் கட்டுண்டவன். இந்த உண்மையை உணர்ந்த ஆசாரியர்கள் பகவானை மகிழ்விக்க நீ ஒன்றையும் செய்ய வேண்டாம். கருணுமூர்த்தியான அவன் தன்பேராகவே தானுகவே உன்னைக் காப்பாற்றுவான் என்று கூறி விட்டார்கள்.

ஆன்மாவின் நிலையை உணர்ந்த தெய்வமும் ஜீவாத்மாவைப் பார்த்து, நீ அதைச் செய்தால்தான் மோட்சம் கொடுப்பேன் என்ருே, ஒரு பயனைக் கொடுப் பேன் என்ருே சொல்லக்கூடாது. இப்படிச் சொன்னுல் அந்தத் தெய்வம் உண்மையை உணராத தெய்வமாக ஆகிவிடும்.

பகவானின் கருணை

தமிழ் நாட்டு வைணவ ஆசாரியர்கள் பகவா னுடைய குணங்களில் கருணையைத்தான் முக்கியமாகக் கொள்ளுகிருர்கள். அந்தக் கருணை என்ற குணத்தை நடுநாயகமாகக் கொண்டுதான் மற்ற குணங்கள் இயங்கு கின்றன என்று ஒரு தனியான கொள்கையை வகுத்து விட்டார்கள். கருணை காரணமாகவே உலகத்தைப் படைக்கிருன். கருணை காரணமாகவே உலகத்தைப் பாதுகாக்கிருன். அழிப்பதும்கூடக் கருணையின் காரியமே. தனிப்பட்ட கடவுளை ஒப்புக்கொண்ட மனிதர்களுக்கு உலகத்தைக் கடவுள் ஏன் படைத்தான் என்பது பெரிய பிரச்சினையாக ஆகிவிட்டது. படைத்த உலகை ஏன் அழிக்கிருன் என்பதும் பெரிய பிரச்சினை. இந்தக் கேள்

சிந்தனை உயர்ந்த கருவியாக இருந்தாலும் அது கருத்துக்களைக் கல்பித்துக்கொண்டே போவதில் சில இடங்களில் அனுகூலம் உண்டு. உதாரணமாக ஒரு மனிதனின் தனி சிந்தனையில் எவ்வளவு வேண்டு மானாலும் கல்பிக்கலாம். சிந்தனை வளர்வதை யாரும் தடுக்க முடியாது. அவ்விதமே கண்ணுக்குத் தெரியாத கடவுளைப்பற்றிச் சிந்திக்கும் காலத்திலும், சிந்தனையை யாரும் கட்டுப்படுத்த முடியாது.கட்டுப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை.

தூய உள்ளத்தில் தோன்றும் கருத்தில் உதயமாகும் கடவுள் கொள்கையை வளர்க்கச் சிந்தனையே வேண்டும். இதற்கு எல்லையே கிடையாது. ஆனால் உலகத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் சிந்தனைகளுக்கு உலக அனுபவம் எதிராக இருந்தால் சிந்தனை தொடர்ந்து போகமுடியாது. விஞ்ஞான சாத்திரம் ப்ரத்தியட்சத்தை அடிப்படையாகக் கொண்டு நிற்பதால் அனுபவத்திற்கு விரோதமாக எந்த யுக்தியும் வளர முடியாது. அனுபவ விரோதமாக சிந்திப்பவனைப் பயித்தியம் பிடித்தவன் என்று மக்கள் சொல்லிவிடுவார்கள்.

தெய்வக் கருத்தில் சிந்தனை

யுக்தியையே நம்பி வாழும் வேதாந்தக் கருத்திலும் கண்ணுக்குத் தெரியாத கடவுளைப் பற்றிய சிந்தனையிலும் யுக்தியை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைக்குப் பூர்ண இடமுண்டு. தெய்வக் கருத்தில் சிந்தனை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போகலாம். யுக்தி தன்னை அழைத்துக் கொண்டு போகும் இடத்திற்குப் போக வேண்டும் என்று கருத்தைத் தமிழ்நாட்டு ஆசாரி யர்கள் தங்களுடைய கருத்து உணர்ச்சியில் காண்பித்து விட்டார்கள். கடவுளைச் சர்வ வல்லமை உடையவனாக வும், கருணைக் கடலாகவும் ஒப்புக்கொண்டுவிட்டால்

அவன் ஆன்மாக்களிடமிருந்து எதைத்தான் எதிர்பார்ப்பான்? அவாப்த ஸமஸ்த காமனுக உள்ள (எல்லா விரும்பியவைகளையும் அடைந்தவன்) அவனுக்கு ஜீவாத்மாவிடமிருந்து புதியதாகக் கிடைக்கக்கூடியது ஒன்றும் கிடையாது.

சங்கிலியால் மனிதனைக் கட்டிப்போட்டு 'நீ நட' என்று எந்த அறிவாளியும் சொல்லமாட்டான். ஜீவாத்மா அறிவில்லாதவன், சக்தியில்லாதவன், புண்ணிய பாபங்களால் கட்டுண்டவன். இந்த உண்மையை உணர்ந்த ஆசாரியர்கள் பகவானை மகிழ்விக்க நீ ஒன்றையும் செய்ய வேண்டாம். கருணாமூர்த்தியான அவன் தன்பேராகவே தானுகவே உன்னைக் காப்பாற்றுவான் என்று கூறி விட்டார்கள்.

ஆன்மாவின் நிலையை உணர்ந்த தெய்வமும் ஜீவாத்மாவைப் பார்த்து, நீ அதைச் செய்தால்தான் மோட்சம் கொடுப்பேன் என்றோ, ஒரு பயனைக் கொடுப்பேன் என்றோ சொல்லக்கூடாது. இப்படிச் சொன்னுல் அந்தத் தெய்வம் உண்மையை உணராத தெய்வமாக ஆகிவிடும்.

பகவானின் கருணை

தமிழ் நாட்டு வைணவ ஆசாரியர்கள் பகவானுடைய குணங்களில் கருணையைத்தான் முக்கியமாகக் கொள்ளுகிருர்கள். அந்தக் கருணை என்ற குணத்தை நடுநாயகமாகக் கொண்டுதான் மற்ற குணங்கள் இயங்குகின்றன என்று ஒரு தனியான கொள்கையை வகுத்து விட்டார்கள். கருணை காரணமாகவே உலகத்தைப் படைக்கிருன். கருணை காரணமாகவே உலகத்தைப் பாதுகாக்கிருன். அழிப்பதும்கூடக் கருணையின் காரியமே. தனிப்பட்ட கடவுளை ஒப்புக்கொண்ட மனிதர்களுக்கு உலகத்தைக் கடவுள் ஏன் படைத்தான் என்பது பெரிய பிரச்சினையாக ஆகிவிட்டது. படைத்த உலகை ஏன் அழிக்கிருன் என்பதும் பெரிய பிரச்சினை. இந்தக் கேள்

வியைக் கேட்டுக்கொண்டே உபநிடத்து சொன்ன சமாதானம் மனிதனின் சிந்தனைக்கு திருப்தியை அளிக்கவில்லை. 'பகவானின் விளையாட்டாக உலகப் படைப்பு இருந்து வருகிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் பகவானுடைய பொழுதுபோக்கு அல்லது போகம் என்று சொல்லுகிறார்கள்'. என்ற இரண்டு கருத்துக்களை எடுத்துக் கூறிய உபநிடந்து இரண்டையும் மறுத்துப் படைப்பதும், அழிப்பதும் அவனுக்கு இயல்பாக அமைந்துவிட்டது என்று முடிவு கூறிற்று. தமிழ்நாட்டு ஆசாரியர்கள் அதற்கு ஒருபடி மேலே செல்லுகிறார்கள். கருணை உருவாகவே உள்ள கடவுள் செய்யும் எந்தக் காரியமும் கருணையின் செயலாகத்தான் இருக்க முடியும். ஆகவே, படைப்பதோ, பாதுகாப்பதோ அவன் கருணையினால்தான். எம்பெருமானுக்கு எவ்வளவு பெருமையிருந்தும் கருணையில்லாமல் போனால் அவை விளங்கா.

தமிழ்நாட்டு வைணவத்தைச் சுருங்கக் குறிப்பிடுவதானால், பகவானுடைய கருணையை நடுவாகக் கொண்ட மதம் (Religion of Grace) என்று குறிப்பிட்டு விடலாம். வேதாந்த தேசிகரின் தயாசதகம் இங்கு கவனிக்கத் தக்கது. கடவுளின் குணங்களில் கருணை என்று ஒன்று உண்டு. அந்தக் கருணை தலை தூக்கிக் காரியம் செய்ய ஆரம்பித்தால் எதுவும் எதிர்த்து நிற்க முடியாதுஎன்று ஏற்படுகிறது. கருணை என்ற குணம்ஆன்மாவை ஈசனிடத்தில் "வா வா" என்று அழைக்கிறது. கடவுளை நெருங்க ஆரம்பித்த ஆத்மா அவனுடைய பெருமையையும் தன்னுடைய தாழ்மையையும் கண்டு விலக ஆரம்பிக்கிறான். ஆனால், சிறிது நின்று யோசித்தவுடன் ஒரு தைர்யம் பிறக்கிறது. கருணை பகவானிடம் நிரம்பியிருப்பதால் தனக்குக் கிடைக்காதது ஒன்றும் இல்லை. எவ்வளவு தவறுகள் தன்னிடம் இருந்தாலும் அவனுடைய் கருணை எல்லாவற்றையும் இருக்கும் இடம் தெரியாமல் செய்துவிடும் என்ற உணர்வு ஏற்படவே கடவுளை நெருங்குகிறான். கருணையை முன்னிட்டு கடவுளும் பாதுகாக்கிறான்.

கடவுளுடைய பெருமை

ஆசாரியர்கள் கடவுளுடைய பெருமையை மிகவும் வளர்த்து விட்டார்கள். உலகிலுள்ள எல்லாத் தெய்வக் கொள்கைக்காரர்களும் ஆன்மாவைக் காட்டிலும் எம்பெருமானுக்குப் பெருமை உண்டு என்று நினைக்க பகவானுடைய பெருமையை மிகமிகப் பெரிதாகச் செய்து மலைபோல் ஆக்கிவிட்டார்கள். இந்த நிலையில் அவனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் காலத்தில், ஆன்மாவோ, ஆன்மாவின் சக்தியோ இருக்கும் இடமே தெரியவில்லை. இந்நிலையில் கடவுளுக்காகக் கர்மாக்களைச் செய்வது என்ற கொள்கையே பொருத்தம் இல்லாததாகவும், பொருளில்லாததாகவும் ஆகிவிடுகிறது. கர்மாக்களைச் செய்வதால் கடவுளைத் திருப்தி பண்ண முடியாது. ஏராளமான பணங்களைச் செலவழித்துப் படாதபாடு பட்டால்தான் கடவுள் கருணையைக் காட்டுவானா? அவ்விதமே கடவுளை அடைய யோகாப்பியாசம் செய்ய வேண்டியதும் அவசியம்தானா? சரீரத்தை வாட்டி வதக்கி வீடு வாசல்களை மறந்து அவனையே நினைக்கும் யோகத்தை அவன் கேட்கிறானா? என்ற வினாக்கள் எழுவது இயற்கையே. பக்திகூட ஒரு வழியில் பகவானுடைய ஆதரவுக்காகச் செய்யப்படுகிறது என்றே தோன்றுகிறது. கீதையில் பகவான்: (ஆர்த்த: ஜிக் அர்த்தார் தீ ஞாஸு: ஞானிச பரதர்ஷப) ஐஸ்வர்யத்தை வேண்டியும் இழந்த ஐஸ்வர்யங்களைப்பெறவும்பக்தியைச் செய்யலாம் என்று கூறுகிறார்.

இறைவனைத் திருப்தி செய்தல்

இந்நிலையில் பகவானைத் திருப்தி பண்ணிவைக்க ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டும் என்று ஏற்படுகிறது. இது பகவானுக்குப் பெரிய பாரம் இல்லை. ஆனால் ஆன்மாவிற்குத் தாங்கமுடியாத பாரம். பகவான் சர்வேசுவரனாக இருப்பதினால் அவன் எல்லாவற்றையும் தன்

ஆளுகையில் உட்கொண்டிருக்கிறார். அவன் சர்வ வல்லமை உடையவன். அபார கருணாமூர்த்தி. இந்த நிலையில் அவன் ஏதாவது ஒன்றை ஆன்மாவிடமிருந்து எதிர்பார்ப்பது அவனது பெருமைக்கு மாசாகத்தான் போய்விடும். அதனால் பகவானுடைய பிரியத்தை அடைவதற்காக ஒன்றையும் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று தான் பக்தியை அடிப்படையாகக் கொண்டால் முடிவு செய்யவேண்டி வரும்.

நாம் பகவானை உத்தேசித்து எதைச் செய்தாலும் அது கடவுளுக்கு இல்லாத பொருள் அன்று. எல்லாம் பகவானைச் சேர்ந்ததாக இருக்குங்காலத்தில் இவனுடைய தாக பகவானுக் கொடுக்கும்படியாக நம்மிடம் ஒன்றும் இல்லை என்றுதான் யுக்திமூலம் முடிவு ஏற்படுகிறது. பகவானைத் திருப்திபண்ணிவைக்க ஏற்பட்டுள்ள கர்மாக் களும் உண்மையில் பகவானைத் திருப்திபண்ணிவைக்க மாட்டா. நமக்குப் பகவானிடம் உள்ள அன்புக்குக் கொடுக்கும் பொருளை நம்முடையதாக நாம் நினைத்ததை மறந்துநிற்பதுதான் பகவானுக்குநாம் கொடுப்பதுஎன்பதே யுக்தியை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டுள்ள முடிவு. நாம் எதைச் செய்தாலும் பகவானுக்கு இது ஒரு வியாஜமாகத்தான் ஆகிறது என்பது முடிவாக ஏற்பட் டுள்ள உண்மையாகும்.

கர்மாவும் கருணையும்

நாம் செய்யும் கர்மாக்களுக்கு பலன் ஏற்படுகிறதா? அல்லது கடவுளின் கருணை காரணமாகப் பலன் கிடைக் கிறதா? என்ற கேள்வி பிறக்கும்போது நம்முடைய கர்மா இருக்கும் இடம் தெரியாமல் போகவே அவன் கருணைதான் முன் நிற்கிறது. கருணை என்பது பகவா னுடைய இயற்கையான குணம். அதனால் பகவா னுடைய ஆதரவைப் பெறுவதற்காக நாம் ஒன்றும்செய்ய வேண்டா. பகவானே தானாகவே நமக்கு வேண்டிய வற்றைக் கொடுக்கிறான் என்ற முடிவை ஸ்ரீ வைஷ்ணவ

ஆசாரியர்கள் தைரியமாக ஒப்புக்கொண்டுள்ளனர். பகவானுடைய ப்ரீதிக்காகச் செய்யவேண்டியது ஒன்றுமேயில்லை என்றும், நாம் செய்யும் கர்மா அறிவில்லாததனால் அது பயனைக் கொடுக்காது. அறிவுள்ள ஈசுவரன் கருணைக் கடலாக இருப்பதனால் அவன் ஒருவனே நாம் விரும்பியதை அடையப் போதும் என்றும் "சித்தோ பாயம்" என்ற ஆசாரியர்களின் கொள்கை தெரிவிக்கிறது.

எம்பெருமானை உபாயமாகப் பற்றிய பிறகு நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது கடவுளுடைய பெருமைக்கு மாசை உண்டுபண்ணும். ஆதலினால் உபாயங்களைப் பற்றிச் சிந்திக்கவே வேண்டாம் என்றும், சிந்தித்தால் பாபம் உண்டு என்றும் பெரியோர்கள் கூறி விட்டார்கள். இதனால் கர்மாக்களிலேயேபிறந்து கர்மாவை அனுஷ்டித்து அதிலேயே வளர்ந்து பெரிய கர்மாக்களைசெய்து பழக்கப்பட்ட பாரதப்பண்பாட்டில்பகவானுக்காக ஒன்றுமே செய்யவேண்டாம் என்பது முடிவாகி விட்டது. பகவான் தன் பேருகவே உலகத்தைப் படைக்கிருன், பாதுகாக்கிருன், அழிக்கிருன் என்ற கொள்கை ராமானுஜருடைய சேஷ சேஷிபாவத்தில் விளைவாக ஏற்பட்டுள்ளது.

யுக்தியும் நம்பிக்கையும்

இவை ஒன்றுக்கொன்று இயற்கையிலேயே முரண்பட்டு நிற்கின்றன. கடவுளின் கொள்கை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டுள்ளது. இங்கு யுக்தியைச் சேர்த்தால் தீராத ஐயம்தான் ஏற்படும் என்று பலர் நினைக்கிருர்கள். யுக்தி எங்கே கொண்டுவிடும் என்பது பௌத்தர்களிடம் பார்த்தோம். யுக்தி ஒன்றையே அடிப்படையாகக்கொண்டு வாழும் பௌத்த மதம் "அநேக இல்லைகளையே" உண்டுபண்ணி விட்டது. கடவுள் இல்லை. ஆத்மாக்களும் இல்லை. உலகம் இல்லை என்று சொல்லி சர்வ சூன்யவாதத்தில் போய் முடிந்து

விட்டது. ஆனால் சர்வ சூன்யவாதம் யுக்திக்குப் பொருந்தியதாகயிருந்தாலும் மக்கள் எளிதில் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதனால் சர்வ சூன்ய வாதம் வரையில் வளர்ந்த புத்த மதம் பிற்காலத்தில் புத்தருக்குச் சிலைவைத்து வணங்க ஆரம்பித்து, மக்களுடைய வழியில் நின்று, யக்ஷர்கள், கந்தர்வர்கள், ராட்சசர்களையும் இவர் கள் ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியம் வந்து விட்டது. இது யுக்தி வாதத்திற்கு ஏற்பட்ட பெரிய தோல்வி. அவ்விதமே அத்வைத வாதம் பிரும்மம் ஒன்றே சத்யம் என்றுகூறி மற்றெல்லாவற்றையும் மறுத்துவிட்டது.

ஆனால் பொதுமக்களிடம் உள்ள நம்பிக்கையை அடியோடு அழிக்க முடியாததனால் உலக நிலையில் மற்ற வர்கள் ஒப்புக்கொண்டு விட்டதையும் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டுவிட்டது. யுக்தியின் உதவியினால் வாதம் செய்வதால், ஒன்றுமே நிலைத்திருக் காது என்று பிரும்ம சூத்திரக்காரரே பயப்படுகிறார். சாங்கிய வேதாந்திகள் யுக்தியின் உதவியைக் கொண்டு ஆன்மாவையும் உலகத்தின் காரணத்தையும் கண்டு பிடித்து விடுவோமென்று மார்தட்டினார்கள். அவர்களு டைய யுக்தியைக் கண்டிக்கும் காலத்தில் பிரும்ம ஸூத்திரக்காரர் யுக்தியைத் (தர்க்கத்தை) தூஷித்து வெறும் தர்க்கங்களால் ஸ்திரமான நிலையை உண்டு பண்ண முடியாது என்று கூறிவிட்டார். ஆனாலும் அவர் பிரும்ம சூத்திரங்களில் வேறு மதங்களைக் கண்டிக்கும் போது யுக்தியைக் கையாளுகிறார் யுக்தியைக் கொண்டு மதாந்தங்களைக் கண்டிப்பவர்கூடத் தம்முடைய கொள் கைகளைப் பாதுகாக்க நூல்களையே அடைக்கலம் அடை கிறார்கள். ஆனால் நூல்களை அடைக்கலம் அடைவத னாலும் மட்டும் இந்தப்பிரச்சினை தீர்ந்துவிடாது. நூல்கள் தாங்களாகவே பொருள்களைக் கொடுக்கமாட்டா. யுக்தி யைக் கொண்டுதான் நூல்களில் பொருள்கூற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

யுக்தி கருத்துக்களை வளர்க்கும் காலத்தில் தன் இஷ்டப்படி உருவாகிவிடுகிறது. ஆகவே, நூல்களை ஒப்புக்கொண்ட பிறகும்கூட யுக்தி தன் விஷமத்தைக் கைவிடுவதில்லை. யுக்தியினுலேயே கொள்கைகளை நிர்ணயம் பண்ண முடியாததனுல், ஒரு கொள்கை நிர்ணயமான பிறகு அதை ஆதரிக்கவேண்டுமானுல், யுக்தியைச் சொல்லலாம் என்று மனு கூறுகிருர். இது செய்யும் கிரிசைகளில் மிகப் பொருந்தும். உதாரணமாக சந்தியாவந்தனம் என்பது ஒரு கர்மா. ஆயிரம் வருடங்கள் யுக்திவாதம் பன்னினுலும் சந்தியாவந்தனம் பண்ண வேண்டும் என்று ஸ்தாபிக்கவே முடியாது. ஆனுல், பண்ணவேண்டும் என்று தீர்மானம் ஆன பிறகு, அதை ஆதரித்து,ஏன் சந்தியாவந்தனம் செய்யவேண்டும் என்று யுக்திகளைக் கொண்டு விளக்கம் கூறலாம். இங்கு செய்வது ப்ரத்யட்சமாக இருப்பதனுல் யுக்தி இதை ஒரு நாளும் மறுக்க முடியாது. மறைக்கவும் முடியாது. இந்த நிலையில் கர்மானுஷ்டானம் ப்ரத்யட்சமாக இருப்பதனுல் யுக்தி தன்னிஷ்டப்படி இயங்க முடியவில்லை. ஆனுல் தெய்வக் கொள்கைகள் வேதாந்தக் கொள்கைகள் என்பன அப்பிரத்தியட்சமாக இருப்பதாலும் யுக்தியை நம்பியே வாழ்வதாலும் கட்டுக்கடங்காத யுக்தியை கையாள்வதாலும் தெய்வீகக் கருத்து எங்கேயும் செல்ல தயாராகிவிட்டது. தெய்வம் உண்டு என்ற அடிப்படையில் யுக்தியைவளர்த்து இந்த யுக்தி கொண்டு விடும் இடத்திற்குப் போக ஆசாரியார்கள் தயாராகி விட்டார்கள். அதன் காரணமாகவே முடிவான பல கொள்கைகள் தமிழ் நாடு வைணவத்தில் சேர்ந்து விட்டன.

சிரவணம், மனனம் தியானம் என்பவை

ச்ரவணம் (கேட்டது) மனனம் (சிந்தனை செய்வது) நிதித்யாசனம் (த்யானம்). சரவணம் என்பது பிறரிடமிருந்து கேட்பது; மனனம் என்பது யுக்தியில் உதவி

யைக் கொண்டு சிந்தனையை வளர்ப்பது. நிதித்தியாசனம் என்பது ஒரே கருத்தைத் தொடர்ந்து திரும்பத் திரும்ப நினைப்பதே. இந்த மூன்றுவகை உபாயங்களை உபநிடத்துக்கள் சொல்லின. இவை கேள்வி, விமரிசனம், பாவனை என்று திருக்குறளிலும் இடம் பெற்றுள்ளன. வெறும் நூலறிவு இருந்தால் மட்டும் போதாது என்ற கருத்தோடு ராமானுஜர் தம் கொள்கையில் இவை மூன்றுக்கும் இடம் கொடுத்துவிட்டார். இவை மூன்றும் பொது மக்களுக்குப் பயன் படாதன. படித்தவர்களும் அறிவாளிகளும் பொழுது நிரம்ப உள்ளவர்களும் தான் இந்த வழியில் நிற்க முடியும். கர்மாக்கள் வெளிக் காரியத்தோடு மட்டும் நிற்பவை. அவை மிகவும் எளியவை, ஏனென்றால் இவற்றிற்கு வெளிப்பொருள் மனித முயற்சி இவைமட்டும் இருந்தால் போதும்.

ஆனால், சிந்தனையிலேயே வளரும் மனிதனுக்கு இவை மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. அதனால் இவற்றை விட்டு விட்டு நினைவு அளவில் ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இதை கீதையில் பகவான் விளக்கி பேசுகிறார். நீ எவ்வளவு வெளிக் கார்யங்களைச் செய்தாலும் அவை நன்கு நிறைவேற மனிதப் பண்பாட்டில் சிந்தனை முக்கியமானதாக அமைந்திருப்பதினால் மனிதன் தன்னுடைய முயற்சியை நினைவு வரை கொண்டுபோக வேண்டும் என்று கூறுகிறார்.

மயக்கமும் திருத்தப்பட்ட அறிவும்

நினைவு அளவில் உள்ள குணதோஷங்களால்தான் மனிதனுக்கு நன்மை தீமைகள் வருகின்றன என்று முடிவு செய்த உபநிடத்து நினைவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வழியை வகுத்தது. அதனால்தான் மனிதன் கஷ்டப்படுகிறான். திருத்தப்பட்ட அறிவால் இந்தக் கஷ்டம் தானாகவே விலகிவிடும் என்று உபநிடதங்கள் கூறிவிட்டன. இந்த விளக்கம் எளிய நடையில் உள்ளது.

உலக வாழ்க்கையில் நாம் இதை நேரில் பார்க்கிறோம். ஒரு பழுதையைப் பார்த்து பாம்பு என்று நினைக்கிறோம்; பயப்பட்டு ஓட ஆரம்பிக்கிறோம். இதை அடிப்படை யாக்கொண்டு பல கற்பனைகள் மனிதனின் புத்தியில் உண்டாகின்றன. இதற்கு மூலகாரணமாக இருப்பது தவறான அறிவு ஒன்றே. பார்க்கப்பட்டது பழுதை என்று தெரிந்துகொள்ளாமல் பாம்பு என்று நினைத்துவிட்டான். இந்த அடிப்படையிலேயே எல்லா குழப்பங்களும் ஏற் பட்டன. இதற்குப் பரிகாரம் திருத்தப்பட்ட உண்மை யான அறிவே. அது வந்துவிட்டால் பாம்பாக நினைத்த தால் ஏற்பட்டுள்ள எல்லாக் குழப்பங்களும் தானாகவே விலகிவிடும். இந்த எடுத்துக்காட்டை மனத்தில் கொண்டுதான் உபநிடதங்கள் தம் கருத்துக்களை பெரிய அளவில் வளர்க்கின்றன. மனிதன் தன்னைத் தவறுத லாக நினைத்தான், கஷ்டப்படுகிறான். தன்னைப்பற்றி யுள்ள அறிவை திருத்திக்கொண்டு விட்டால் கஷ்டங்கள் தாமாகவே விலகிவிடும் என்று உபநிடத்து கூறுகின்றன. இந்த எளிய கொள்கைக்கு ஒரு கர்மா வேண்டியது இல்லை; ஒரு த்யானமும் வேண்டாம்; ஒரு பூஜையும் வேண்டியது இல்லை; ஒரு ஆசரணையும் வேண்டியது இல்லை.

மனனமும் தியானமும்

ஆனால் ராமானுஜர் இந்த எளிய கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை. தன்னைத் தவறுதலாக நினைக் கிறான். அது உண்மைதான், ஆனால் இந்த தவறுதலான எண்ணத்திலேயே பல பிறப்புகளில் மனிதன் ஊறி விட்டான். தவறுதல்களை அடிப்படையாகக் கொண்ட சூழ்நிலையிலேயே இருந்து வருகிறான். ஒரு தடவை தன் கருத்தைத் திருத்திக்கொண்டாலும் மறுபடியும் மறு படியும் தவறானக் கருத்தைக் கொண்ட வாழ்க்கையே வந்து கொண்டு இருக்கிறது. இதற்குக் காரணம் இவனுடைய எண்ணங்களே. இவனுடைய தவறான எண்ணங்கள் இன்று புதிதாக ஏற்பட்டவையல்ல.

தவருன எண்ணத்தின் வாசனையிலேயே இவன் ஊறி விட்டான், ஒவ்வொரு தடவையும் பிறந்து கணக்கற்ற பிறப்பைப் பெற்று இந்த வாசனையை உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டான்.

ஆகவே நூல்களின் மூலம் விஷயங்களைத் தெரிந்து கொள்வதினுலோ ஒருவனிடத்தில் உபதேசத்தைப் பெறுவது மூலமாகவோ கோடிக்கணக்கான ஜன்மாக்களில் வளர்ந்த வாசனையை அழிக்க முடியாது. உபதேசமோ நூல்கள் மூலம் ஏற்படும் அறிவோ அந்தக் கணத்தில் தவருன எண்ணத்தை விலக்கப் பயன்படும். ஆனுல் மற்ற சமயங்களில் பயன்படாது என்று உணர்ந்து தன்னைப் பற்றின நல்லறிவை அடிப்படையாகக்கொண்டு மனம், தியானம் இவைகளை ராமானுஜர் மிக விரிவாக வளர்த்துவிட்டார். ஸ்ரீ பாஷ்யத்தில் ' லகு சித்தாந்தம் என்ற இடத்தில் இதை நாம் பார்க்கிருேம். மிகவும் விரிவாக, ஒரு சிலருக்கு பின்பற்ற முடிந்ததாய் உள்ள கடுமையான சாதனத்தைத்தான் ராமானுஜர் வகுத்தார். அதற்குக் காரணம் யுக்தியைக் கொண்டு அவர் சிந்தித்ததே. இங்குதான் அத்வைதிகளும் ராமானுஜரும் வேறுபடுகிருர்கள்.

ஞானமும் பக்தியும்

அத்வைதிகள் ஞானத்தினுல்தான் மோட்சம் சித்திக்கும் என்றனர். ராமானுஜர் அது கிடையாது; அது பக்தியாக உருவாக வேண்டும் என்று சொன்னுர். பக்தி என்பது அறிவு என்ற நிலையில் மனதின் செயலாக நின்று அன்பு என்ற நிலையில் உணர்ச்சியையும் உட்கொண்டு விட்டது. ஆனுல் ராமானுஜர் உபநிடதத்தில் சொல்லும் வழிகளைப் பின்பற்றி அந்த வழியில்தான் பக்தியைச் செய்யவேண்டுமென்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டார்.

பிரபத்தி மார்க்கம்

பிற்கால ஆசாரியர்களால் இவ்வழியைப் போற்ற முடியவில்லே. அவர்களுக்குச் சிந்தனே அளவில் யுக்தி எந்த இடத்தில் கொண்டுபோய் விடுகிறது என்ற கவலே இல்லே. மக்கள் நிலேயிலிருந்து கருத்துக்களே உருவாக்கி அந்த நிலேயில் சிந்தனே செய்து அதற்குத் தகுந்தாற் போல் யுக்திகளேயும் கண்டுவிட்டார்கள். எல்லோரும் மோட்சம் அடையவேண்டும். எல்லோரும் கஷ்டப் படுகிருர்கள். ஆகவே, இதற்கு உபநிடத்தில் கூறப் படும் பக்தி சிறிதுகூடப் பயன்படாது. ஏனென்ருல் எல்லா மக்களும் எளிதாக அந்தப் பக்திமார்க்கத்தில் போகமுடியாது என்று இந்தக் குறையை மனத்தில் கொண்டு ப்ரபத்தி என்ற உபாயத்தை உருவாக்கினுர்கள். இங்கு த்யானம் வேண்டா; மனனம் வேண்டா; உப நிடத்தில் சொல்லும் உபாசனேயும் வேண்டா. ஈசுவர வரனுடைய பெருமையை உணர்ந்து தன்னுடைய தாழ்மையை உணர்ந்து தன்ஞல் ஒன்றும் ஈசுவரனே அடையச் செய்ய முடியாது என்று உணர்வதே ப்ரபத்தி. இது இருந்தால் போதும்; இதஞல் மோட்சத்தை எல் லோரும் அடைந்துவிடலாம்.

ஈசுவரனேப் பற்றி இவன் பூர்ணமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லாததினுல் நூல்கள் மூல மாகவும் உபதேசம் மூலமாகவும் கடவுளேப்பற்றி விரிவாகப் படிக்கவோ, கேட்கவோ அவசியமில்லாமல் போய் விட்டது. ஈசுவரன் ஒருவன் இருக்கிருன், அவனுக்குத் தான் அடிமை என்று அறிவு இருந்தால் போதுமானது. இந்த அறிவு இருந்தால் தாஞகவே கடவுளேச் சரணம் அடைவான் என்று கூறும் இந்த மிகவும் எளிய நடைக்கு இறங்கினுர்கள். எந்த அறிவும் இவனுடைய மோட்சத் திற்குச் சாதனமில்லே. அறிவு பெற்றுள்ள மனிதஞக இருக்கிருன் என்பதற்காகத்தான் ஆன்ம அறிவு அவசிய மாகிறது. ஆஞல் இது இவனுக்கோ ஈசுவரனுக்கோ ஒரு பயனேயும் உண்டுபண்ண ஏற்பட்டுள்ளதன்று

என்று கூறிவிட்டார்கள். மனிதனுடைய நிலையிலிருந்து பார்த்து மட்டும் இந்த முடிவை எடுக்க அவர்கள் வர வில்லை. கடவுள் நிலையில் இருந்து இதைக் கவனிக்கிறார் கள். கடவுள் தனக்காகத்தான் இயங்குகின்றான் என்ற கொள்கை உருவாகிவிட்டதால் ஜீவாத்மாவை ரட்சிப்பது தன் பேராகவேச் செய்யப் போகிறான். இங்கு ஆன்மா விற்கு இடமே கிடையாது என்று கூறிவிட்டனர்.

ராமாநுஜரும் பிற்பட்ட ஆசாரியர்களும்

ராமாநுஜர் ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் உயிர் மெய் போன்ற பிரிக்க முடியாத உறவைச் சொல்லி ஜீவாத்மா வையும் பரமாத்மாவையும் உடலும், ஆன்மாவுமாகச் சேர்த்து கடவுள் ஒருவன்தான் என்ற முடிவைச் செய் தார். ஆனால் பிற்கால ஆசாரியர்கள் கடவுளே ஆன் மாவை ரட்சிக்கக் கடமைப்பட்டுள்ளான், உடையவன் தானே உடைமையைப் பாதுகாப்பான். ஆன்மா செய்ய வேண்டியதொன்றுமில்லை என்று கூறிவிட்டார்கள். இந்த முடிவான கருத்தைக் கண்டுபிடித்த ஆசாரியர்கள் இதைத் தைரியமாகத் தங்கள் நூல்களில் எழுதிவிட்டார் கள். அதுமட்டுமன்று; இந்தக் கொள்கையை பழக்கத் திலும் கொண்டுவந்து விட்டனர். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஒரு வகுப்பினர் இந்தக் கொள்கையை இன்றும் பின்பற்றுகிறார்கள். பக்தி வேண்டா பக்தியைச் செய்யமுடியாது; ப்ரபத்தியே போதும். ப்ரபத்தியும் அறிவினிலேயே நின்றால் போதும். அந்த அறிவும் மனிதனை இருப்பதால்தான் வேண்டும் என்று கூறி விட்டார்கள். ராமாநுஜர் வகுத்த பக்தி மார்க்கத்தில் சில குறைகளை இவர்கள் காண்கிறார்கள்.

அகங்காரம்

நான் என்ற நினைவு வந்தால்தான் பக்தியில் ஈடுபட முடியும். மிகப் பெருமை வாய்ந்த கடவுளின் அடிமை யாக அல்லது கடவுளிலேயே அடங்கினவனாகத்தான்

ஆகிவிட்டதால்தான் என்று தன்னைப் தனிப்படுத்தி நினைக்க இடமேயில்லை. தான் என்ற எண்ணம் எந்த வழியிலும் எங்கு தலைதூக்கினாலும் அது ஆபத்தை உண்டுபண்ணிவிடும். அதனால் நன்மையைவிடத் தீமையே உண்டாகும் என்று நினைக்கிறார்கள். இதை ஒரு அழகான உதாகணத்தில் ஆசாரியர்கள் காண்பிக் கிறார்கள். 'மதிராபிந்து மிச்ரமான சாத கும்ப தீர்த்த சலிலம்போல் அங்கார மிச்ரமான உபாயாந்தரம்' என்று பிள்ளான் கூறுவதாக லோகாசாரியார் கூறுகிறார். குடம் தங்கக் குடம்தான், அதில் கங்கா ஜலம் இருந்து வருகிறது. ஆனால் அது கள்ளினுடைய ஒரு திவலை யோடு கலந்தாலும் அசுத்தமாக ஆகிவிடுகிறது. அவ் விதமே பக்தி எவ்வளவு அழகாக இருந்தாலும், பக்திக்கு விஷயமான கடவுள் எவ்வளவு பரிசுத்தமாக இருந்தாலும் "நான்"என்று சிறிய உணர்வு தலைதூக்கியவுடனே தூய பக்தி அசுத்தமாகிறது என்று கூறிவிட்டார்கள். ஆளவந் தாருடைய கருத்தாக 'ஆறுயிரப்படி குரு பரம்பரையில்' சொல்லுவதும் மிகவும் கவனிக்கத்தக்கது. "தன்பேற் றிற்கு த்வரிக்கையும் "ஸ்வரூப ஹானி; எம்பெருமானே ரட்சகன் என்று இருப்பதும் ஸ்வரூப ஹானி எம்பெரு மானே ரட்சியன் என்று இருக்கையும் ஸ்வரூபஹானி" என்று கூறுகிறார்.

பூர்ண அறிவைப் பெற்ற பிறகும் நான் என்ற எண்ணம் எங்கு தலைதூக்கினால் பூர்வ ஜன்ம பாபம்தான் இந்த எண்ணத்தை உண்டாக்கும் ஆதலினால் நான் என்ற எண்ணம் உண்டானால் அது பண்டை வல்வினை யின் விளைவுதான். நான் என்ற எண்ணம் இருந்தால் தான் பகவானை அடைவது தன்னுடைய குறிக்கோள் என நினைக்க முடியும்; ஆகவே பகவானைத் தன் குறிக்கோள் என்று நினைப்பதும் கூடாது என்று ஆசாரி யர்கள் கூறுகிறார்கள். "பகவத் விஷயத்திலே பிரந்த புருஷார்த்தம்" என்ற புத்தி பண்டை வல்வினை என்று நம்பிள்ளைக் கூறுகிறார். அகங்காரம் எவ்வளவு ஆபத்தை

உண்டுபண்ணுகிறது என்பதை எவ்வளவு ஆழமாக இவர்கள் சிந்தித்திருக்கிருர்கள் என்பதை இது வெளியாக்குகிறது. ராமாநுஜர் பதினெட்டுத் தடவை திருக்கோட்டியூர் நம்பியிடம் கீதார்த்தத்தைக் கேட்கப்போனுர் என்றும் பதினெட்டாவது தடவையில்தான் அவர் 'நான்' என்பதை விட்டுப் பேசினுர் என்றும் அதன்பிறகுதான் அவருக்கு உபதேசிக்கப்பட்டது என்று கூறும் விளக்கக் கதையும் இங்கு உதவுகிறது.

திருமகள் பற்றிய கருத்து

அகங்காரம் கடவுளிடமிருந்து ஆத்மாவைப் பிரிப்பதினுல் இந்த 'அகம்' என்கிற எண்ணத்தைப் பெரிய பாவமாக எண்ணுகிருர்கள். ஆழ்வார்கள் பகவானைக் கடவுளாக ஒப்புக்கொண்டு அவனே நம்மைப் பாதுகாக்கிருன் என்ற கொள்கையிலேயே நின்றுவிட்டார்கள். பகவானுடைய கருணையைப் பற்றி பேசும் எல்லா மதங்களுமே இந்த நிலையிலேயே நின்று பேசுகின்றன. ஆனுல் பகவானேடுகூட இருக்கும் மகாலக்ஷ்மிக்கு என்ன பங்கு என்று சொல்ல முடியவில்லை. நூல்களோ மகாலக்ஷ்மி பகவானை விட்டுப் பிரியமாட்டாள் என்று கூறுகின்றன. இந்த நிலையில் அவளின் தனித்த நிலைக்கு ஏதாவது ஒரு வழி சொல்லித்தான் ஆகவேண்டும். மகாலக்ஷ்மி என்பவள் எப்படி உண்டானுள்? அந்தக் கருத்துக்கு அடிப்படை என்ன? என்பதைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் பல கருத்துக்களை வெளியிடுகிருர்கள். நஞ்ஜியர் "அதிதீ, ச்ரத்தா" "மேதா" முதலிய பெயருள்ள வேதப்பெண் தெய்வங்களும் மகாலக்ஷ்மி தான் என்று கூறுகிருர். ஆனுல் புராணங்களில் லக்ஷ்மீ "ப்ரக்ருதி" என்ற பொருளின் உருவம்தான் என்றும், வித்யையின் உருவம்தான் என்றும், மாயையின் உருவம் தான் என்றும் பலவிதமாகச் சொல்லப்படுகிருள். "ஜகந்மாதா" என்ற பெயர் உலகத்தின் மூலப்பொருள் என்ற கருத்திலேயே வந்திருக்கிறதென்று தெரிகிறது.

தாயிடமிருந்து குழந்தை வருவதுபோல் ப்ரகிருதியி லிருந்து உலகம் வருகிறதென்று ஒப்பப்படுகிறது. விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள் என்று கூறும் விஷ்ணு புராணம் லக்ஷ்மியைப் பல உருவில் வர்ணிக்கிறது வேதத்தில் உள்ள விஷ்ணு என்ற சொல் நாராயண, வாஸுதேவ சொற்களோடு ஒன்ருக ஆகிவிட்டதால் இந்த லக்ஷ்மி தத்துவமும் ''விஷ்ணு'' ''நாராயணன்'' ''வாஸுதேவன்'' என்ற முக்கியமான மூன்று பெயர் களுடன் சேர்ந்து விட்டதால் விஷ்ணுவுக்கும் லக்ஷ்மி தான் பத்நீ, நாராயணனுக்கும் லக்ஷ்மி தான் பத்நீ, வாஸுதேவனுக்கும் லக்ஷ்மி தான் பத்நீ என்று ஏற்பட்டு விட்டது. இதன் விரிவை லக்ஷ்மி தத்துவம் என்ற இடத் தில் காணலாம். ஸம்பிரதாய நூல்களில் லக்ஷ்மி கருத்து எப்படி உதயமாகிறது என்பதைக் கவனிப்போம். லக்ஷ்மி கொள்கைக்கு ஸ்ரீ ஸூக்தம், விஷ்ணு புராணம் இவை மூலப்ரமாணமாக நிற்கின்றன. இரண்டும் ஸ்ரீ அல்லது லக்ஷ்மியின் பெருமையைச் சொல்லுகின்றன. ஆனுல் ஸ்ரீஸூக்தம் நிலையான வேதம் இல்லை. ஆதலால் இதற்கும் மூலம் மற்ருெரு வேதமாகும் என்றும் ஆசாரியர்கள் கூறுகிருர்கள்

ஆக விஷ்ணு தத்துவத்திற்கு வேதத்தை மூலமாகக் கொண்டதுபோல, லக்ஷ்மி தத்துவத்திற்கும் வேதம் தான் உதவுகிறது. வேதத்தில் ''ஸ்ரீ'' ''லக்ஷ்மி'' முதலிய பெயர்கள் உருவக முறையில் ஒரு பெண் தெய் வத்தைக் குறிக்கிறது. ''விஷ்ணு பத்நீ'' என்ற சொல் லும் பரவி நிற்கும் அரசி என்ற வேறு ஒரு பொருளில் வந்துள்ளது. இந்தச் சொல் வரும் மந்திரத்தை நீலா ஸூக்தம் என்று சொல்லி வருகிருர்கள் இந்த மந்திரத் தில் சிவையாக ஆகவேண்டுமென்று முடிவுரை காணப் படுகிறது. ஆனுல் சிவ ஸம்பந்தம் வந்துவிடுமோ என்ற பயத்தால் முழு மந்திரத்தைச் சொல்லும் பழக்கம் இல்லாமல் போய்விட்டது. மற்ற எல்லாவித அவதாரங் களிலும் இவள் கூடவே வருகிருள். ஆங்காங்கு வேறு

வேறு பெயர்களும் உருவமும் கொண்டு காணப்படுகிருள். ஸ்ரீயாக மட்டுமில்லாமல் பூமியாகவும் நீலா என்ற பெயருள்ளவளாகவும் இருக்கிருள்.

ஆழ்வார்கள் மூன்றுவிதமாக உள்ள பகவானுடைய மனைவிகளை அடிக்கடிச் சொல்லுகிருர்கள். ஆனல் அந்தந்த ஊர்களைப் பற்றிப் பாடுங்கால் ஸ்தல புராண ரீதியில் வரும் பத்நிகளின் பெயர்களை சொல்ல வில்லை. ஸ்ரீ, பூ, நீலா என்ற தத்துவங்களும் வேறுவேறு இடங்களில் உற்பத்தியாகி வந்து சேர்ந்துள்ளன என்பது வரலாறு மூலம் தெரிகிறது. சதுச்லோகியில் ஸ்ரீயை ஆளவந்தார் வழிபடுகிருர். ஸ்ரீ தத்துவத்தை ஆழ்வானும் வழிபடுகிருர். ஸ்ரீ குணரத்ந கோசத்தில் பட்டரும் வழிபடுகிருர். ஸ்ரீஸ்துதியில் வேதாந்த தேசிகர் வழிபடுகிருர். பூ ஸ்துதி, "கோதாஸ்துதி" மூலம் பூதேவி, நப்பின்னையின் அவதாரமான கோதை இவர்களையும் வேதாந்த தேசிகர் வழிபடுகிருர். ச்ருதி, ஸ்மிருதி, புராணங்கள், பாகவதம் ஆகியவற்றின் லக்ஷ்மி சம்பந்த மாகக் கருத்துக்களை ஒழுங்குபடுத்திப் பேசவந்த ஆசார்யர்கள் தங்களுடைய நூல்களில் முடிவாக லக்ஷ்மிக்கு இடம் கொடுக்க முடிவு பண்ணுகிருர்கள். ராமாநுஜர் பகவான் நாராயணனுக்குத் தனியான "பத்நீ" உண்டு என்பதோடு மட்டும் நின்றுவிட்டார்.

பிற்பாடு வந்த ஆசார்யர்கள், எந்த நிலையில் பத்நீ என்று விளக்கம் கூறுகையில் வேறுபட்டுப் பேசுகிருர்கள். வைஷ்ணவ சம்பிரதாய ஆசார்யர்களுக்கு இது பெரிய பிரச்னையாகிவிட்டது. இந்தச் சிக்கலை ஏதாவது ஒரு வழியில் தீர்த்துவைக்க வேதாந்ததேசிகர் சதுச்லோகி வியாக்யானத்தில் படாதபாடு படுகிருர்.

மகாலக்ஷ்மியின் தொழில்

மகாலக்ஷ்மியைப் பெண் உருவாகச் சொல்லி விஷ்ணுவோடு சேர்ந்தபிறகு அவளுக்கு என்ன தொழில்

என்பதை யாரும் நிர்ணயம் பண்ணவில்லை. புராணங்களின் பொதுக் கருத்துக்களே காணப்படுகின்றன. மறையில் விஷ்ணு பத்நி என்ற சொல் காணப்பட்டாலும் அது பரவி நிற்கும் அரசி என்றுதான் குறிப்பிடுகிறது. மகாலக்ஷ்மி பெண்ணுருவில் இருப்பதால் பெண்களுக்குள்ள தனியான குணங்களை அவளோடு சேர்த்து யாரும் சிந்தித்தது இல்லை. ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்கள் பெண் என்றும் மகாவிஷ்ணுவின் பத்நி என்றும் சொல்லிய பிறகு அவளுக்கு ஏதாவது தொழிலைக் கொடுத்தாக வேண்டும் என்று சிந்தனை செய்து நமக்கும் மகாவிஷ்ணுவுக்கும் நடுவில் நின்று நமக்காகப் பரிந்து பேசுகிறாள் (புருஷகாரம்)என்றுபுதிதானகருத்தைஉருவாக்குகிறார்கள். மனிதஉருவைக்கடவுளுக்குக்கொடுத்தபிறகு, அவருக்கு ஒரு மனைவியையும் கற்பித்த பிறகு, உலக வாழ்க்கையில் உள்ள அநேக அம்சங்களை அங்கு கற்பிப்பது இவர்களுக்கு எளிதானதாக ஆகிவிட்டது. தம்பதி (கணவன் மனைவி) என்ற உறவை ஏற்படுத்திய பிறகு மகாலக்ஷ்மிக்கு மதிப்புக் கொடுக்க ஆசாரியர் தயங்கவில்லை. இவள் பெருமையை விளக்குவதற்காக விஷ்ணுவின் பெருமையைச் சிறிது இறக்கத் தயங்கியதும் இல்லை. மகாலக்ஷ்மி என்ற கொள்கை தேவி வழிபாட்டின் வழியாக முக்கியத்தும் பெற்றிருக்கிறது.

ஆனால் மகாலக்ஷ்மியை மகாவிஷ்ணுவோடு சேர்த்த பிறகு இவளைப் பர்த்தாவிற்குக் கட்டுப்பட்ட பெண்ணாக ஆக்கிவிட்டார்கள். லக்ஷ்மீ தத்துவத்தைப் பகவானோடு பிரியாத தத்துவமாகச் சொன்ன ராமானுஜர் லக்ஷ்மிக்குத் தனியான கார்யத்தைச் சொல்லவில்லை. அவருக்கு முன் வந்த ஆளவந்தாரும், பின்வந்த ஆழ்வானும் லக்ஷ்மியின் தொழிலை வகுத்துக் கூறவில்லை. ஆனால் பின்வந்த ஆசாரியர்கள் லக்ஷ்மியின் தொழிலை தெளிவாக விளக்குகிறார்கள்.

கணவனுக்கும் குழந்தைகளான ஜீவ வர்க்கத்திற்கும் நடுவில் உள்ள தாயாக இவள் நிற்கிறாள்.

பகவானிடத்தில் இவளுக்கு அடக்கியாளும் தன்மையும் உண்டு. தன்னுடைய குழந்தைகளான ஜீவ வர்க்கத்தினிடம் பரிபூர்ண வாத்ஸல்யமும் உண்டு. மகாலக்ஷ்மிக்கும் விஷ்ணுவிற்கும் உள்ள உறவையும், மகாலக்ஷ்மி புருஷகாரமாக அமைந்திருப்பதையும் வெகு அழகாக ஸ்ரீவசனபூஷணம் என்ற நூலில் லோகாசாரியார் விளக்குகிறார். நமக்காகப் பரிந்துபேசும் தன்மை இவளுக்கு இருப்பதை அங்கு விளக்குகிறார். தகப்பனாக இருந்தாலும் கடவுளுக்குப் புருஷன் என்ற இயற்கையைப் பின்பற்றிக் கோபம் வருகிறது. அப்பொழுது ஆன்ம வர்க்கங்களுக்காக மகாலக்ஷ்மி பரிந்து பேசுகிறாள். பகவான் கோபத்தை அடக்கிக் கொள்ளுகிறார். மகாலக்ஷ்மி தத்துவத்திற்குப் பெருமை கொடுக்க அளவற்ற உயர்ந்த குணங்கள் உள்ள விஷ்ணுவுக்கும் கோபம் என்ற மாசை கற்பிக்கிறார்கள். இந்தக்கருத்து தமிழ் நாட்டு வைணவத்திற்கு ஜீவக்களையானது என்று சொல்வதில் தவறுதல் கிடையாது. 'ஸ்ரீ குண ரத்ன கோசம்' என்ற பராசர பட்டரின் நூல் உலக வாழ்க்கையில் உள்ள கணவன் மனைவியின் உறவை அடிப்படையாகக் கொண்டு மகாலக்ஷ்மிக்கு பரிந்துபேசும் சக்தி இருந்து வருகிறது என்பதை வெகு அழகாக விளக்குகிறது.

இந்தக் கருத்தை ராமாயணத்திலும் ஆசாரியர்கள் ஏறிட்டுக் காண்பிக்கிறார்கள். லக்ஷ்மியின் அவதாரமான சீதைகூட இருந்ததனால் காகாசுரன் தலைபெற்றான். இவள் கூட இல்லாததனால் ராவணன் தலை போயிற்று என்று கூறுகிறார்கள். ஸ்ரீ வேதாந்த தேசிகர் உலக அனுபவத்தைக் கொண்டு மகாலக்ஷ்மி பரிந்து பேசுபவளாக ஆகிறாள் என்று கூறுகிறார். ஆன்ம வர்க்கங்கள் தங்களுடைய தவறுதல்களை உணர்ந்து கடவுளிடம் நெருங்க முடியுமா என்று ஏங்கி நிற்கும் காலத்தில் மகாலக்ஷ்மி கூட இருப்பதுதான் இவர்களுக்குத் தைர்யத்தை ஊட்டுகிறது என்று கூறுவதில் தவறு இல்லை. மகாலக்ஷ்மியின் பெருமையை விளக்க, அவள் முகஜாடையை

உணர்ந்துகொண்டே, கடவுள் உலகைப் படைக்கிருன் என்று கூரத்தாழ்வான் ஸ்ரீ ஸ்தத்தில் கூறுகிருன். மகாலக்ஷ்மியைப் பத்நியாகச் சொல்லிப் பகவானை அவனுக்குக் கட்டுப்பட்டவளுகச் சொல்லும் இவர் களுடைய கருத்து உலக வாழ்வில் கணவன் மனைவிய ரிடை எவ்வளவு நெருங்கிய உறவு உள்ளது என்பதைக் காட்டுகிறது. இனி, லக்ஷ்மி தத்துவத்தை விரிவாக நோக்குவோம்.

லக்ஷ்மி தத்துவம்

முகவுரை

லக்ஷ்மி தத்துவம் ஒரு பழமையான கொள்கை ஸ்ரீ, லக்ஷ்மி என்ற இரு சொற்களும் ஒரே கருத்தைத் தெரிவிக்கின்றன. வேத மந்திரங்களிலும், பிரா மணங்களிலும், பிற்பட்ட கிருஹ்ய சூத்திரங்களிலும், இதிகாச புராணங்களிலும் வைணவ சைவ சாக்த ஆகமங்களிலும் மந்திர சாத்திரங்களிலும் லக்ஷ்மி தத்துவத்தின் தொடர்பு உள்ளது.

சிறப்பு

வைணவ ச்ம்பிரதாய ஆசாரியர்கள் லக்ஷ்மியை நாராயணனுடைய பத்நி எனக் கொள்கின்றனர். விஷ்ணு வோடும் மற்றவர்களோடும் சம்பந்தப்படுத்தப்பட்டுப் பல கதைகளில் வரும் லக்ஷ்மியின் சிறப்பு 'லக்ஷ்மி சஹஸ்ர நாமத்திலும்' மந்திர சாத்திரங்களிலும் விரிவாகக் கூறப்படுகிறது. இதிகாசங்கள், புராணங்கள், மந்திர சாத்திரங்கள், சிற்ப சாத்திரங்கள் இவை அவளுக்குப் பலவேறு வகையான உருவங்களைக் கூறுகின்றன. இவளுக்குப் பலவித உருவமுடைய பெண் தெய்வங்கள் பரிவாரமாக உள்ளன. உலகில் பெண்கள் யாவரும் மகாலக்ஷ்மியின் அம்சமென்று விஷ்ணுபுராணம் கூறு கிறது. பௌத்தமும் லக்ஷ்மி கொள்கையை ஏற்றுக் கொண்டுளளது. வைணவ ஆகமங்கள் படைப்புக் கொள்கையில் லக்ஷ்மிக்கு இடங்கொடுத்துள்ளன. பொது வாக வேதாந்திகள், பக்தர்கள், பொருள் வேட்கைமிக்க

வர்கள் எல்லோரும் லக்ஷ்மி தத்துவத்தில் ஈடுபட்டுப் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இதைப்பற்றி முடிவான கருத்தை வெளியிடமுடியாது என்று பெரியோர்கள் கூறுவதை வேதாந்த தேசிகர் 'சதுஸ்லோகி' யின் விளக்கவுரையில் குறிப்பிடுகிறார். பல காலங்களில் பல நிலைகளில் ஏற்படும் கருத்துக்களை அப்படி அப்படியே கொள்ளாமல் எல்லாம் ஒன்றே என்று இணைக்க முயல்வதிலேயே சிக்கல் ஏற்படுகிறது. உடல் நலத்துக்கு இம்மைக்குப் பயன் படுவனவும் சரி, ஆன்ம நலனுக்கு மறுமைக்குப் பயன்படுவனவும் சரி, இரண்டும் லக்ஷ்மியாகவே கருதப்படுகின்றன. *(பாரதம் 131, 120)*

மகாபாரதத்தில் லக்ஷ்மி விஷ்ணுவோடு மட்டும் ஒரு குறிப்பிட்ட உருவத்தோடும் ஏனைய இடங்களில் கருத்தளவிலும் இருப்பதாகக் கூறப்படுகிறாள். கருத்துக்களுக்கும் உருவம் கொடுத்து வழிபடவும் வழிகள் வகுக்கப்பட்டு உள்ளன. எனினும் விஷ்ணுவிடம் உள்ள லக்ஷ்மி உருவம் ஏனைய இடத்து உருவங்களில வேறுபட்டதே.

ஆலயத்தில் பெண் அர்ச்சைகள்

விஷ்ணு ஆலயங்களில் விஷ்ணு உருவத்தின் இரு புறங்களிலும் பெண் உருவத்தில் இரு பிம்பங்கள் இருப்பதோடு, தனிக்கோயில் நாச்சியார் பிம்பமும் உண்டு. அந்தந்தக் கோயில் பெருமாளுக்கு அந்தந்த நாச்சியார் மனைவி. பெருமாள், நாச்சியார் இவர்களுக்குக் கோயில் தோறும் தனிப் பெயர்கள் உண்டு. பல கோயில்களில் தாயாருக்குத் தனி பூசை, தனி நைவேத்தியம், தனியான திருவிழாக்களைக் காண்கிறோம். ஆலயங்களில் முக்கியமான ஆண் பிம்பமும் பெண் பிம்பமும் ஒரே பீடத்தில் எழுந்தருளுவதை ஆகமங்கள் அனுமதிக்கவில்லை. கர்ப்பக்கிருகத்தினுள்ளோ பக்கத்திலோ இருப்பதையும் அனுமதிக்கவில்லை. இரு பக்கங்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி இருக்கும்போது தனிக்கோயில் நாச்சியார் ஒவ்

வோர் ஊருக்கும் தனித்தனிப் பெயருடன் இருக்க வேண்டிய தேவை நமக்குப் புலனுகவில்லை. இவர்கள் தவிரப் பெருமாள் பிம்பத்தின் மார்பிலும் லக்ஷ்மி இருக்கிருள். மார்பில் உள்ள லக்ஷ்மியை லயார்ச்சை எனவும், பக்கத்தில் உள்ளவர்களைப் போகார்ச்சை எனவும், தனிக் கோயில் நாச்சியாரை காம்யார்ச்சை எனவும் பெயரிட்டு அழைக்கின்றனர். அர்ச்சகர்கள் கோயிலின் பிரதான பிம்பத்தை ஸ்ரீ பூமி நீலா ஸமேத என்ற மூன்று பத்நிகள் உடைய பகவானுகவே எல்லாக் கோயில்களிலும் குறிப்பிடுகிருர்கள் எனினும் நீலாவுக்குத் தனிஉருவம் ஆலயங்களில் கற்பிக்கப்படவில்லை.

பெண் உருவத்தைத் தனியாக வழிபடும் தேவி வழிபாடு பரவிய பின்னரே தனிக்கோவில் நாச்சியார் வழிபாடு ஏற்பட்டிருக்க வேண்டும். வேதாந்த தேசிகர் தனிக்கோயில் நாச்சியாருக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் மட்டும் செய்யலாம் என்று குறிப்பிடுவது கொண்டு அவர் காலத்திலேயே தனிக்கோயில் நாச்சியார் பிரபலமான செய்தி புலனுகிறது. இவற்ருல் லக்ஷ்மி தத்துவம் விரிவான பெண் தெய்வ வழிபாட்டிற்கு அடிகோலி விட்டதை அறிகிருேம்.

இனி, லக்ஷ்மி தத்துவம் பற்றி வரலாற்று வாயிலாகக் கிடைக்கும் கருத்துக்களைக் கவனிப்போம்.

ஆசாரியர்களும் லக்ஷ்மி தத்துவமும்

புராண இதிகாச காலங்களுக்கும் வெகு பிற்பட்டே (கி. பி. 13-ம் நூற்ருண்டு) வைணவ சம்பிரதாயம் வருவதால் லக்ஷ்மியை விஷ்ணு விட்டுப்பிரியாத மனைவியாகக் கொண்டதோடு லக்ஷ்மி இல்லாத நாராயணன் நாராயணனே அல்லன் என்று கூறும் நிலைக்கு வந்துவிட்டனர். அஷ்டாக்ஷரத்தில் லக்ஷ்மியின் நேரான தொடர்பு இல்லாததனுல், நேருக்கு நேராக லக்ஷ்மி சம்பந்தம் உடைய 'த்வயம்' என்ற

மந்திரத்தில் முன் வாக்கியத்திலும் பின் வாக்கியத்திலும் ஸ்ரீ என்ற சொல்லைச் சேர்த்து அக்குறையை நீக்கி விட்டார்கள். ஸ்ரீ, நாராயணன், ஆன்மவர்க்கம் இவற்றின் உறவை விளக்கிப் பல கருத்துக்கள் ரஹஸ்ய கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளன. ஒருசாரார் விஷ்ணு பத்நியாயினும் லக்ஷ்மியை ஆன்ம வர்க்கத்தில் சேர்த்து விட்டனர். மற்றொரு சாரார் விஷ்ணுவை விட்டுப்பிரியாத ஈசுவரியாயினும் அவருக்கு அடங்கினவளே என்று கூறினர். ஆளவந்தார் தம் சதுஸ்லோகியில் லக்ஷ்மியின் பெருமை விஷ்ணுவால் கூட அறியமுடியாதது என்கிறார். கூரத்தாழ்வார் ஸ்ரீ ஸ்தவம் என்ற நூலில் லக்ஷ்மியின் முக ஜாடையைப் பார்த்தே ஏற்றத் தாழ்வு நிறைந்த உலகைப் பகவான் படைக்கிறான் என்கிறார். லக்ஷ்மியின் பெருமையை, லக்ஷ்மியாலும் அறிய முடியாது. கணவனை விஷ்ணுவாலும் அறிய முடியவில்லை என்று கூறுவதும் கவனிக்கத்தக்கது.

பட்டர் ஸ்ரீ குணரத்தகோசம் என்ற நூலில் லக்ஷ்மி பகவானுடைய கோபத்தை அடக்குகிறாள். அவளுடைய பெண்மைக்குப் பணிந்து நாராயணன் ஆன்மவர்க்கத்தைக் காப்பாற்றுகிறார் என்கிறார். வேதாந்த தேசிகர் 'ஸ்ரீ ஸ்துதி' யில் பகவானையும் லக்ஷ்மியையும் திவ்ய தம்பதிகளாகக் குறிப்பிட்டு அவர்கள் வைகுந்தத்தில் சதுரங்கம் ஆடுவது போன்ற செயல்களையும் குறிப்பிடுகிறார். இவ்வித லக்ஷ்மி தத்துவம் காலக்கிரமத்தில் வளர்ந்து கொண்டே வந்திருப்பதைக் குறிப்பிடுகின்றன.

ஆசாரியர்கள் ரகஸ்ய நூல்களில் ச்ரீ என்ற சொல்லின் பொருளை விஸ்தாரமாக விளக்குகின்றனர். புருஷகாரம் என்ற கருத்தை அடிப்படையாக்கொண்டு பல விளக்கங்கள் காணப்படுகின்றன. ஆனால் இந்த கொள்கை, இயற்கை, யுக்தி, லோகாநுபவம் இதையே அடிப்பவையாகக் கொண்டதென்று வேதாந்த தேசிகர் கூறுகிறார். இதனால் மூலநூல்களில் இக்கருத்து இடம்பெற

வில்லை என்று ஏற்படுகிறது ஆனால் மணவாள மாமுனிகள் பாஞ்சராத்ர நூலை மேற்கோளாகக் காண்பிக்கிறார்.

நாராயணனே முழுமுதற் கடவுள் என்ற கொள்கையிலுள்ள வேகத்தால் லக்ஷ்மியை ஜீவகோடியில் சேர்த்து ச்வரித்தன்மையை மறுப்பவர்கள் இரண்டாம் பக்ஷமாகத்தான் ஒப்புகிறார்கள்.

ஆழ்வார்களும் லக்ஷ்மியும்

லக்ஷ்மி பகவானிடம் உள்ளடங்கியிருப்பதால் அவளைப்பற்றி வேதம் தனியாகக் குறிப்பிடவில்லை என்று கூறும் பட்டர், வேதத்தில் காணப்படும் விஷ்ணு பத்நி என்ற தொடர் மகாலக்ஷ்மியைக் குறிப்பிடுகிறது எனவும், இதனை ஸ்ரீ ஸுக்தர் விரிவாகப் பேசுகிறது எனவும் மற்றோரிடத்தில் விளக்கிக் கூறுகிறார். ஆழ்வார்கள் பகவானோடு லக்ஷ்மியைச் சேர்த்துப் பல பாடல்களில் பேசியிருந்தும் தனிப்பட்ட முறையில் லக்ஷ்மி ஸ்தோத்திரம் செய்யவில்லை. ஆசாரியர்கள் லக்ஷ்மியைப் பற்றிப் பேசும் செயல்கள், பகவானைக் கருணைக் கடலாக அநுபவிக்கும் ஆழ்வார்களுடைய கருத்துக்கு பகவானின் கோபத்தை லக்ஷ்மி அடக்கினாள் என்ற கொள்கை ஒத்தில்லை. தன் அடியார் திறத்துத் தாமரையாளாகிலும் சிதகுறைக்குமேல், 'என் அடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்று உகப்பர்' தம் பெருமாள் என்று குறிப்பிடும் ஆழ்வார்கள் மனநிலை, ஆன்மாக்களுக்குப் பரிந்துரை கூறிப் பகவானுடைய கோபத்தைத் தணிக்கும் லக்ஷ்மியாகப் பிற்கால ஆசாரியர்கள் கூறும் கருத்துக்கு இது ஒத்ததாக இல்லை. பகவான், லக்ஷ்மி, ஆத்மாக்கள் இவர்களைக் கணவன், மனைவி, குழந்தை உறவில் அமைத்துப் பல கருத்துக்களையும் ஆசாரியர்கள் உலகியலை ஒட்டி வளர்த்துவிட்டனர்.

தேவிகள் மூவர்

பகவானுக்கு லக்ஷ்மி மட்டும் மனைவியல்லள். பூமியும் நீளாதேவியும் மனைவியாகக் கூறப்பட்டுள்ளனர். பகவானுக்கு ஒரே பத்நிதான் இருக்கவேண்டும் என்ற கருத்தில் "மற்றவர்கள் லக்ஷ்மியின் அவதாரம்தான்" என்று வேதாந்த தேசிகர் கருதுகிறார்.

நீளாதேவி

நீளா என்ற பெயர் கருநிறமுடையவள் என்ற பொருள் உடையது. இவளைத் தமிழ் நூல்கள் 'பின்னை' என்று குறிப்பிடுகின்றன. லக்ஷ்மி, பூதேவி இவர்களுக்குப் பின் வந்தவள் என்று பொருள். லக்ஷ்மியும் பூமியும் குறிப்பிட்ட அவதாரத்தோடு சம்பந்தம் உடையவரல்லர். பின்னை கண்ணனுடைய மாமன் மகள். ஆயர் மடமகள் எனப்படுபவள். ஏழு காளைகளை வென்று இவளைக் கண்ணன் மணந்துகொண்டதாக ஆழ்வார் 'காம்பணை தோள் பின்னைக்கா ஏறுடன்ஏழ் செற்றதுவும்' என்று குறிப்பிடுகிறார். வடமொழிப் புராணங்களில் இவளுக்கு இடம் இல்லை. ஸ்ரீ பாகவதத்தில் கூறப்படும் கண்ணனுடைய தேவிகள் எண்மரில் இவளும் ஒருத்திபோலும். ஆண்டாளுடைய பாதத்தில் இருந்து குழந்தை கிருஷ்ணனுக்கே நப்பின்னைமனைவிஎன்பதுஏற்படுகிறது பாஞ்சராத்ர ஆகமங்களில் வைகுந்தத்தில் லக்ஷ்மிக்கே பகவான் பக்கத்தில் இடம் சொல்லப்படுகிறது. ஏனைய இருவரும் லக்ஷ்மியின் அவதாரமானதால் இவர்களுக்கு அவதார காலத்தில் பூலோகத்தில் இடம் இருக்குமே தவிர வைகுந்தத்தில் இடம் ஏற்பட வாய்ப்பு இல்லை. கிருஷ்ணவதாரத்தில் தோன்றிய நப்பின்னை வைகுந்தத்தில் எப்படி இடம் பெற்றிருக்க முடியும் என்பது புலப்படவில்லை. ஆண்டாளை நப்பின்னை அம்சம், லக்ஷ்மி அம்சம், பூமி அம்சம் என்றுக்கொள்ளுவதெல்லாம் கருத்தளவில் ஏற்பட்டதே. ராமாநுஜர் இயற்றியதாகக் கூறப்படும் கத்யரயம் என்ற நூலில் ஸ்ரீ பூமிநீளா நாயகன் என்ற தொடர் காணப்படுகிறது. ஆனால் அவருடைய வேதாந்த சங்கிரகத்தில்

'மகிஷி' என்ற ஒரு மனைவிதான் குறிப்பிடப்படுகிருள். அதனுல் பிற்காலத்தில் கருத்தளவில் லக்ஷ்மிதத்துவமே பூமி, நீளாவாகப் பரவியது என்று கருதவேண்டியுள்ளது. பொதுவாக மகாலக்ஷ்மியின் அநுக்கிரகம் இல்லாமல் ஒன்றுமில்லை என்று தேவியின் கருணைக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது.

மூர்த்தம், அமூர்த்தம்

பகவான் வடிவுடையவனுகவும், வடிவற்றவனுகவும் உள்ளான். அவன் வடிவு எடுத்து எங்கு பிறந்தாலும், அங்கு லக்ஷ்மியும் இடத்திற்குத் தகுந்தாற்போல ஒரு பெண்ணுருவத்தோடு தோன்றுகிருள் என்று ஆளவந்தார் கூறுகிருர். இங்கு பிரம்மம் உருவுடையது, உருவில்லாதது என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

லக்ஷ்மி அம்சம்

லக்ஷ்மி கடாக்ஷத்தால் பகவான் மேம்பட்டவன் ஆகிருன் என்று கூரத்தாழ்வான் கூறுகிருர். ஐச்வர்யம், ஸௌந்தர்யம் (உறுப்பழகு) லாவண்யம் (பொது அழகு) இவையெல்லாம் லக்ஷ்மியின் கடைக்கண் பார்வையால் வருவதால் இவற்றை உடையவனை ஸ்ரீயோடுகூடியவன் என்று குறிப்பிடுகிருர்கள். அறிவு மிக்கவன், சரசுவதி கடாக்ஷம் உடையவன் என்கிறேம். அந்தச் சரசுவதியும் லக்ஷ்மியின் அடிமை என்கின்றனர். பிரளய காலத்திற்குப் பிறகு லக்ஷ்மியின் கடாக்ஷத்தால்தான் உலகம் திரும்பப் பழைய நிலையை அடைகிறது என்றெல்லாம் கூரத்தாழ்வார் கூறுகிருர்.

ஸ்ரீ தத்துவம் —
வேதாந்த தேசிகர்

லக்ஷ்மியையும் பகவானையும் பத்நியாகவும் பதியாகவும் கொண்டு ஆன்மாக்களைக் குழந்தைகளாகக் கொண்ட பிறகு அந்த அடிப்படையில் தோன்றும் பல பிரச்சினை

களைத் வேதாந்ததேசிகர் ஆராய்கிறார். மற்ற ஆசாரியர்கள் போல் லக்ஷ்மிக்கு புருஷகாரம் என்ற நிலைஉண்டென்று கூறுவதோடு நாராயணனோடுபிரியாதமனைவிஎன்றநிலையி உபாயமாகவும் ஆகிறாள் என்கிறார். அவர் வேத வாக்கியங்கள், இதிகாச புராணங்களையும், பாஞ்சராத்ர ஆகமம், லக்ஷ்மி ஸ்தோத்ரம் இவைகளை விரிவாக ஆராய்ந்து கடைசியாக லக்ஷ்மி விஷயமாக ஐந்துவிதக் கொள்கைகளை வெளியிட்டு இவற்றுள் ஒன்றைப் பின் பற்றலாம் என்று கூறிவிட்டார்.

1. லக்ஷ்மியின் ஸ்வரூபம் அணு. அவள் ஜீவன்களில் ஒருத்தி.

2. விபு. (எங்கும் பரந்தவள்) ஆனாலும் ஜீவன்களில் ஒருத்தி.

3. விபு. ஆனால் சித் (ஜீவன்) அசித் (இயற்கை) என்ற இரண்டிலும் சேராதவள்.

4. விபு. ஈச்வர கோடியைச் சேர்ந்தவள். ஆனால், பகவானைப்போலக் கொள்ளத்தக்க ஈசுவரி அல்லள்.

5. விபு. ஸாக்ஷாத் ஈச்வரியே.

இவற்றை நோக்க வேதாந்ததேசிகர் காலம் வரை ஸ்ரீ தத்துவம் வரையறையின்றியே சென்றிருந்தை அறிகிறோம். மேலும் தத்துவ விளக்கத்தில் ஐந்துவகை கருத்து வேற்றுமைகளும் நீக்கமுடியாத அளவு நிறைந்திருப்பதும் உணரத்தக்கது. இந்தத் தத்துவ விசாரம் எப்படியிருப்பினும் மகாலக்ஷ்மி பல நிலைகளில் பல உருவங்களுள் இருந்து ஆலயங்களில் சிறப்பான இடம் பெற்றுப் பக்தர்களைக் காப்பாற்றி வருவது கண்கூடு. ஆதலின் இத் தத்துவ விசாரம் இன்றியே பொதுமக்கள் அவளை விஷ்ணு பத்நியாகப் பக்தியோடு ஆராதித்து வருவதைக் காண்கிறோம்.

ஸ்ரீ சொற்பொருள்

லக்ஷ்மி தத்துவத்தின் உற்பத்தி

லக்ஷ்மி என்ற சொல் வேதத்தில் அருகியே காணப் படுகிறது. ஸ்ரீ என்ற சொல் பல இடங்களில் செல்வம், அழகு, ஒளி, பெருமை வாய்ந்தது, வலிமை, செழிப்பு, வளர்ச்சி, மாண்பு முதலிய பல கருத்துக்களில் வந்துள் ளதேயன்றி ஒரு தெய்வத்தின் பெயராக வரவில்லை. பிராம்மணங்களில் ஸ்ரீ என்ற சொல் நன்மை என்ற பொருளில் வந்துள்ளது.

விஷ்ணுபத்நி

ஸ்ரீ ஸூக்தத்தில் ஸ்ரீ லக்ஷ்மி என்ற இரண்டு சொற் களும் ஒன்றுசேர்ந்து விடுகின்றன. வேதங்களில் சரஸ் வதி, அதிதி, சினிவாலி, ருஹூ முதலிய பெண் தெய்வங் கள் வழிபடப்படுகின்றன. சர்வப்ரஷ்டம் என்ற் பெய ருடைய யாகத்தில் 33 எண்ணிக்கை உடைய ஒரு ஸ்தோமத்தைப் பெண் தெய்வமாக வழிபட வேண்டும் என்று கூறும் யஜுர் வேதப் பகுதியில் வந்துள்ள மந்திரத்தில் காணப்படும் ‘விஷ்ணு பத்நீ’ என்ற சொல் உலகத்தின் தலைவி என்ற பொருளில் வருகிறதேயன்றி பட்டர் குறிப்பிடுவதுபோல லக்ஷ்மி என்ற கருத்தில் வர வில்லை.

பூஸூக்தம்

நீளாஸூக்தம்

அதர்வ வேதத்தில் நம் கண்ணுக்குத் தென்படும் பூமியைத் தெய்வமாகக் கொண்டு 64 ரிக்குகள் கொண் டுள்ள பூஸூக்தம் என்று ஒன்று இருக்கிறது. அதை விட்டு ஸர்பராகஜி மந்திரத்தை (பூமில பூம்ளா) பாஞ்ச ராத்ர ஆகமம் பூமிஸூக்தமாக அங்கீகரித்துப் பேசுகிறது. யஜுர்வேதத்தில் திருவோண நட்சத்திரத்தைத் தெய்வ மாக வணங்கும்போது கூறப்படும் மந்திரத்தில் காணப் படும் விஷ்ணுபத்நி என்ற சொல்லைக்கொண்டு அம் மந்

திரத்தை 'நீளாஸூக்தம்' என்று சில ஆகமங்கள் குறிப் பிடுகின்றன. எது எங்ஙனமாயினும் ஸ்ரீ என்ற சொல் விஷ்ணுவின் மனைவி என்ற பொருளிலோ் தெய்வம் என்ற பொருளிலோ வேதத்தில் வழங்கப்படவில்லை.

ஸ்ரீ ஸூக்தம் — வேத ஸம்ஹிதைகளுக்குப் பிற்பட்ட காலத்தில் ஸ்வரங்களில் சிறிது மாறுதல்களோடு அங்கீ கரிக்கப்பட்ட 'கிலம்' என்ற பகுதியில் ரிக் வேதத்தின் கிலமாகிய ஸ்ரீஸூக்தத்தில் 15 ரிக்குகள் உள்ளன. இவை கருத்துக்களுக்குப் பெண் உருவம் கொடுத்து வழிபடும் மந்திரங்கள். விசிஷ்டாத்துவைத வேதாந்தத்தின் மூல புருஷர்களில் ஒருவரான 'திராவிட பாஷ்யகாரர்' கடவு ளுக்கு நித்யமான உருவம் உண்டு என்று கூறுவதால் அவர் கொள்கைப்படி ஸ்ரீ ஸூக்தம் பெண் தெய்வத்தின் உருவை வழிபட அமைந்ததாகும்.

'யாஸ்கர்' வேதத்தில் சொல்லப்படும் தேவதை களுக்கு உருவம் உண்டா? இல்லையா? என்று சர்ச்சை பண்ணுகிறார். வியாசருடைய சிஷ்யரும் வேதக் கருத்தை விளக்க ஏற்பட்டுள்ள மீமாம்ஸா சாஸ்திரத்தின் மூல புருஷருமான ஜைமினி தேவதை தத்துவத்துக்கு உருவமே கிடையாது என்று கூறிவிட்டார். ஆக வேதக் கருத்துக்களை விளக்க இந்த இருவர்களின் கருத்துப்படி வேதத்தில் காணப்படும் தெய்வங்களின் உருவங்கள் உருவக அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்று ஏற்படுகிறது.

வேத மந்திரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் உருவம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி மந்திரம் ஒன்று தான். அதனாலேயே மீமாம்ஸகர்கள் அந்தச் சொற் களால் தேவதைகள் சொல்லப்படும் காலத்தில் சொற் பொருளைப் பற்றிக் கவலைப்படவேண்டா. சொல்லுருவமே தேவதையாக நிற்கிறது என்று கூறிவிட்டார்கள். அநாதி யான வேதமந்திரங்களுக்கு மனிதன் அவன் இஷ்டம் போலப் பொருள் கொள்ளுவதை வேதம் தடுக்கவில்லை.

ஸ்ரீ ஸூக்தம் வேதமந்திரம் என்ற முறையிலேயே அதற்குத் தனியான சிறப்புண்டு. அதில் ஸ்ரீ என்பது ஒரு தனியான பெண் உருவமே என்ற கருத்தும் அது கருத்துக்குக் கொடுக்கப்பட்ட உருவுகமே என்ற கருத்தும் நிலவி வருகின்றன. ஸ்ரீமான், லக்ஷ்மிவான் முதலிய சொற்களை நோக்க ஸ்ரீ என்பது செல்வம் முதலிய பல பொருள்தரும் பொதுச் சொல்லாகவே கொள்ளக் கிடக்கிறது. ஸ்ரீஎன்று லக்ஷ்மியைமட்டும்குறிக்கும்சொல்லானால் ஸ்ரீமான் என்ற சொல் பகவான் ஒருவனையே குறித்தல் வேண்டும். நடைமுறையில் அப்படியில்லை.

கருத்தளவில் இருந்த ஸ்ரீக்குப் பிற்காலத்தவர் லக்ஷ்மி என்ற வடிவம் கொடுத்துப் பகவானோடு சேர்த்து விட்டனர் என்பதே ஆராய்ச்சியாளர் துணிவு.

ஆகமங்களில் லக்ஷ்மி தத்துவம்

ஆகமங்களில் காணப்படும் லக்ஷ்மி தத்துவக் கொள்கை தனியாகவேநிற்கிறது அகிர்புத்நீய சம்ஹிதையும் (6—25 ;9—31)யும், லக்ஷ்மீ தந்திரமும் (7—9—10) ஸ்ரீவைகுந்தத்தில் லக்ஷ்மி அல்லது ஸ்ரீ என்ற ஒருத்திதான் பகவானை விட்டு என்றும் பிரியாத, பகவானுடைய சக்தியாக இருக்கிறாள் என்று கூறுகின்றன. வைணவ ஆசாரியர்கள் இக்கருத்துடைய 'வைகுண்டே பது லோகே ஸ்ரீயாஸார்தம்' என்ற செய்யுளை இன்றும் மந்திர புஷ்பத்தில் பூஜா காலத்தில் சொல்லி வருகிறார்கள். பகவான் லக்ஷ்மியோடுதான் ரக்ஷகனாயுள்ளான் என்ற லக்ஷ்மியா ஸஹ ஹ்ருஷீகேச: தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: என்ற இந்த ஆகமத் தொடரையும் ஆசாரியர்கள் அடிக்கடி கையாளுகிறார்கள். பகவான் எந்த உருவம் எடுத்தாலும் இந்தச் சக்தி தொடர்கிறது. பகவானுக்கு உரிய ஆறு குணங்களும் இந்தச் சக்திக்கும் உண்டு. விஷ்ணுவின் எல்லா அம்சங்களிலும் நிறைந்து நிற்கும் சக்தி 'நாராயணிசக்தி' என்று வழங்கப்படுகிறாள்.

இவ்ள் ஸ்வதந்திரமானவள் ; நித்யை, பூர்ணை, பரவி நிற்பவள். அவள் மூலம் உலகம் பார்க்கப்படுவதால் அவளுக்கு 'லக்ஷ்மி' என்றும் பெயர். காலம், புருஷன் இவை வெளிவராத நிலையிலும், தாமரைப் பூப்போல இருப்பதால் 'பத்மா' என்றும் பெயர். விஷ்ணுவின் ஆற்றல் உருவில் இருப்பதால் 'விஷ்ணு சக்தி' என்றும் பெயர். விஷ்ணுவின் இயற்கையைக் காப்பாற்றுவதால் 'விஷ்ணு பத்நி' என்றும் பெயர் சொல்லப்படுகிருள் (அஹிர்-3)

இவ்வாறு பேசும் ஆகமங்களில் பிற்பட்டுத் தோன்றியவை 'ஸ்ரீ வைகுந்தத்தில் பகவான் ஆண் உருவத்தில் இருப்பதுபோல சக்தியும் பெண் உருவத்தில் உள்ளார். பக்தர்கள் அவ்விருவரையும் அனுபவிக்கிருர்கள். பரிவார தேவதைகள் என்ற பெயரில் பெண் உருவத்தில் உள்ள பல சிறு தேவதைகளும் அங்கு இருக்கின்றனர். புஷ்டி என்ற பூதத்துவமும் நீளாதத்துவமும் ஆழ்வார்கள் காலத்துக்குப் பிற்பட்ட பாஞ்சராத்ர சம்ஹிதைகளில் இடம் பெற்றுள்ளன.

விஹகேந்திர சம்ஹிதை (2—8) ஸ்ரீ பூமி நீளா மூவரையும் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்று குறிப்பிடுகிறது.

பாஞ்சராத்ர ப்ரகாச சம்ஹிதை கி பி. 12ஆம் நூற்ருண்டைச் சார்ந்தது. அது ஸ்ரீ சக்தி ஸாத்விக குணமுடையவர்களையும், பூசக்தி ராஜஸகுணமுடையவர்களையும், நீளாசக்தி தாமஸ குணமுடையவர்களையும் காப்பதாகக் கூறுகிறது.

விஹகேந்திர சம்ஹிதையில், கீர்த்தி, ஸ்ரீ, விஜயா, ச்ரத்தா, ஸ்மிருதி, மேதை, த்ருதி, க்ஷமா என்ற எட்டு சக்திகள் சொல்லப்படுகின்றன. அஹிர்புதநீய சம்ஹிதை வேறு பெயர்களில் எட்டு சக்திகளைக் குறிப்பிடுகிறது.

ஸாதவத சம்ஹிதை லக்ஷ்மி, புஷ்டி, தயா, நித்ரா, க்ஷமா, காந்தி, ஸரஸ்வதி, த்ருதி, மைத்ரீ, ரதி, துஷ்டி, மதி என்ற பன்னிரண்டு சக்திகளைக் குறிப்பிடுகிறது.

ஆதிகாலத்தில் கருத்தளவில் இருந்த விஷ்ணு தத்துவமும், லக்ஷ்மி தத்துவமும், வேதாந்தக் கருத்துக் களைக்கொண்டு விளக்கப்பட்டன. பின் மந்திர சாஸ்திர வழியைப் பின்பற்றிப் பெயர் உருவம் என்பன கொடுக்கப் பட்டன. பிறகு, ஆகமம் சிற்பம் இவற்றைப் பின்பற்றி பிம்பங்கள் செய்து ஆலயங்களில் மந்திரங்களால் பிர திஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன. வைணவ ஆசாரியர்கள் ஆண் பெண் உருவங்களை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய சம்பிரதாயக் கொள்கைகளை வளர்த்து விட்டார்கள். என்பனவற்றை வரலாற்று வாயிலாகக் காணலாம்

இயற்கைக்கப்பாலுள்ள இறைநிலையை ஆணுகவோ பெண்ணுகவோ வைத்து வழிபடுவது ஒருபுறமிருக்க, இயற்கையிலேயே வைத்து, இயற்கையின் அம்சங் களையே விசேஷமாக்கி வழிபடுவதைப் பார்க்கிருேம். கருத்தளவில் உள்ளதையும் உருவமுள்ளதாக்கி வழிபடு வதும் வேதத்தில்காணப்படுகிறது. பொதுவான கடவுளைத் தவிர அந்தந்த இயற்கையிலும் தனி தெய்வமிருப்பதாக ஒரு கொள்கையும் காணப்படுகிறது.

இயற்கையை வழிபடுதல்

அக்நி; வாயு, சூரியன், பசு, கருடன் முதலியவற்றை தனி தெய்வமாக வைத்து வழிபடும் பழக்கமும் காணப் படுகிறது. அறிவற்ற இயற்கையிடம் தெய்வசக்தியிருப் பதை யுக்தியால் நாம் ஒப்புக்கொள்ள முடியாது என்ரு லும் நூல்கள் இவ்வழிபாடுகளை வகுக்கின்றன. ஒவ் வொரு பொருளுக்கும் ஓர் அபிமான தேவதை உண்டு. அப்பொருளை வழிபடுவதன் வாயிலாக அறிவாற்றல்மிக்க அந்த அபிமான தேவதைக்கு அவ்வழிபாடு செல்வதால் அத்தெய்வம் பயன் தருகிறது. அந்த இயற்கைப்

பொருள்களுக்கு மந்திரங்கள் வாயிலாகத் தொடர்பு கொள்ளும் அபிமான தேவதைகள் தனித்தனியே தங்கள் உலகங்களில் உள்ளார்கள் எனவும், மறுமைக்கு உதவும் ஆற்றலற்ற அவர்கள் நமக்கு இம்மையிலேயே பேருதவி செய்வார்கள் எனவும், இவர்கள் ஆன்மாவுக்கு நலன் தரும் ஆற்றல் அற்றவர், பரம்பொருளுக்குக் கீழ்ப் பட்டு நம்மைப்போல் அப் பரம்பொருளை அண்டியே வாழ்ந்து வருபவர்கள் என்ற கருத்தும் இருந்துவருகிறது. சைவரோ வைணவரோ தங்கள் பரம்பொருளின் வழி பாட்டை ஆன்மலாபம் கருதி முதல்தரமாகக் கொண்டு, இயற்கைப் பொருளின் வழிபாடு இம்மைக்குப் பயன் தருவதால் அதனை இரண்டாந்தரமாகக் கொள்கின்றனர்.

பெண் தெய்வம்

கருத்தளவில் உள்ள கொள்கைகளுக்குப் பெண் உருவம் கொடுக்கப்பட்டதா அல்லது பெண் வடிவத்தில் இயல்பாகவே தெய்வம் உள்ளதா என்ற ஆராய்ச்சி எழுகிறது. ஸ்ரீ ஸுக்தத்தில் தேவி பொன் நிறமானவள். பொன்வெள்ளி மாலைகளை அணிந்திருப்பவள். குதிரை களையும், தேர்களையும், யானையின் ஒலியையும் கொண்ட வள் என்ற கருத்தமைந்த மந்திரங்களை நோக்க ஸ்ரீ அரசனுடைய சேனைகளின் உருவத்திலும் இருந்து வருவது உணரப்படுகிறது. ஒவ்வொரு பொருளிலும் அந்தந்தப் பொருளுக்கு அபிமான தேவதையாக லக்ஷ்மி இருந்து வருகிறாள். அல்லது இந்த இயற்கையின் தெய்வத் தன்மையே உருவமுள்ளதாக்கி வழிபடப் படுகிறது என்று கொள்ளவேண்டி வருகிறது.

அபிமான தேவதை என்ற கொள்கைபோல் அந்தந்த இயற்கையிலேயே உள்ள தெய்வத் தன்மை உருவ முள்ளதாக ஆக்கி வழிபடும் கொள்கையும் இருந்து வருகிறது என்பது கவனிக்கத்தக்கது

ஸ்ரீ ஸூக்தத்தின் முடிவில் லக்ஷ்மி தாமரைப்பூ உருவத்தில் உள்ளாள்; தாமரையில் வசிக்கிறாள்;

தாமரை இதழ் போன்ற கண்களை உடையவள் ; தாமரை யைக் கையில் கொண்டவள் என்று வருணிக்கப்படு கிறாள். இந்தப் பெண் தெய்வ வழிபாடு பிற்காலத்தில் ஒரு குறிப்பிட்ட பெண் தெய்வத்தை முழுமுதற் கடவு ளாகக் கொண்டு வணங்கவேண்டும் என்ற கருத்துக்கு அடிப்படையாக அமைகிறது.

பெண் — முழுமுதற் கடவுள்

சக்தியே பெண் உருவத்தில் வழிபடப்பட்டு வந்தா லும், தெய்வம் என்ற நிலையில் பிரம்மத்திற்கு உரிய இலக்கணம் இப் பெண் தெய்வத்திற்கு ஏற்றப்படவே சிவன், விஷ்ணு இவர்களைப் பரப்பிரும்மம் என்று கொள்வதுபோலச் சக்தியையும் பரப்பிரம்மம் என்று கொள்ளும் நிலை ஏற்பட்டது. ரிக் வேதத்திலுள்ள 'வாகாம்ப்ரிணி ஸூக்தம்' என்ற பெயருடைய சில மந்திரங்கள் ஒரு பெண்ணை ரிஷியாகக் கொண்டு, பேராற்றலை தெய்வக் கருத்தாகக் குறிப்பிடுவதால், இந்த ஸூக்தத்தைத் தேவிஸூக்தமாகக் கொண்டு பெண் வழி பாட்டிற்கு இம்மந்திரங்கள் அடிப்படை என்று கருது கிறோம். வேதக் கருத்தோடு பாமர வழிபாட்டுக்கொள்கை கலக்கவே உருவம், ஆயுதங்கள், வாகனங்கள் முதலியன சொல்லப்பட்டுப் பிர்மா, விஷ்ணு சிவன் என்ற தெய்வங் களோடு சேர்க்கப்பட்டுவிட்டாள். பின்வந்த மந்திர சாத் திரங்கள் தேவி வழிபாட்டை மிகவும் வளர்த்துத் தனி மதமாகவே ஆக்கிவிட்டன, பிர்மாவின் சக்தி சரசுவதி ; விஷ்ணுவின் சக்தி லக்ஷ்மி ; சிவனுடைய சக்தி பார்வதி ; இவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல் என்பனவற் றைச் செய்கின்றனர் என்ற கருத்தோடு, இம் மூன்று சக்திகளும் ஆதிபராசக்தியின் கூறுகள் என்று கூறும் அளவுக்குச் சக்தி தத்துவம் வளர்ந்துவிட்டது. இதைப் பற்றி எழுந்த புராணங்கள் சக்தியே தெய்வங்களில் உயர்ந்தவள் என்று பேசுகின்றன. வேதாந்தக் கருத்துப் படி பிரகிருதிதான் சக்தி என்று கூறினும் பொதுமக்கள் கருத்தில் சரசுவதி லக்ஷ்மி துர்க்கை என்ற கருத்துக்கள்

பரவிப் பின் நாளடைவில் சரசுவதியை விடுத்து விஷ்ணு சக்தி, லக்ஷ்மி, சிவசக்தி துர்க்கை என்று இணைந்து முறையே சாந்தத்தையும், பயங்கரத்தையும் விளக்கி அருள்பாலித்து வருகின்றன.

மகாலக்ஷ்மியின் உற்பத்தி

இதுபற்றிப் பலபுராணங்கள் பலவாகக் கூறுகின்றன. விஷ்ணுவினுடைய நெற்றியிலிருந்து தோன்றிய தாமரைப்பூவில் மகாலக்ஷ்மி தோன்றினாள். (பாரதம் 13/113) என்ற கருத்து காணப்படுகிறது.

நாராயணன் மடியில் மகாலக்ஷ்மி உட்கார்ந்திருப்பதை ருக்மணி தேவி பார்த்ததாகவும், அப்போது லக்ஷ்மி நாராயணனிடத்தில் தான் சரீரத்தோடு இருப்பதாகவும் ஏனைய நதிகள், தாமரைப்பூ, காளைகள், யானைகள், பெண்கள், ஆளும் அரசர்கள், நல்ல மனிதர்கள், வர்ணாசிரம தர்மங்களை மீறுமலும் சாதிக்கலப்பில் திளைக்காமலும் உள்ளவர்கள் ஆகியவர்களிடத்தில் தான் கருத்தளவில் இருப்பதாகவும் அவளிடம் கூறியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

விஷ்ணுபுராணம் (1815) விஷ்ணு தாமோத்தரம் (10772) இவற்றில் பிருகு மகரிஷிக்குக் கியாதிமூலம் பிறந்த லக்ஷ்மியை அவர் நாராயணனுக்கு மணம் செய் வித்த செய்தி அறிவிக்கப்படுகிறது.

மகாலக்ஷ்மி கடலிலிருந்து தோன்றினாள் எனப் பாரதம் கூறுகிறது. (11/434)

பசுச் சாணத்திலும் மூத்திரத்திலும் லக்ஷ்மி இருப்பதாக அநுசாசன பருவம் கூறுகிறது.

மகாலக்ஷ்மி பூமியின் செழிப்புக்குக் காரணமானவள் என்றும் உரங்களின் உருவமாகவும் உள்ளாள் என்றும் ஸ்ரீ ஸூக்தம் குறிப்பிடுகிறது.

கண்ணன் பெண்களிடையே 'ஸ்ரீ, கீர்த்தி' ஹ்ரீ, வாக்கு என்ற உருவங்களில் இருப்பதாகக் கீதையில் குறிப்பிடுவதால் ஸ்ரீ, ஹ்ரீ என்பன குறிப்பிட்ட குணங்களைக் குறிப்பிடுவதை அறிகிறோம்.

'ஸ்ரீ தண்டுலி' 'தான்யரக்ஷணி' என்ற சொற்கள் அரிசி பயிரிடுவதோடு, திருமகளைத் தொடர்பு படுத்துகின்றன. தூற்றப் படாத நெற்பொலிக்கு 'ஸ்ரீதேவி' என்பது பெயர். நெற் பயிருக்கு 'கிரிநாதன்' எனவும், நெல் பயிரிடுவதற்கு 'கங்காதேவி' எனவும், பெயர் காணப்படுகிறது. வில்வமரம் ஸ்ரீ விருக்ஷம் என்று சொல்லப்படுகிறது. செல்வத் தொடர்பு மிக்க வைசிகர்களுக்குப் பெயர்கள் ஸ்ரீ என்ற அடைமொழியோடுகூட ஸ்ரீ குப்தா, ஸ்ரீ பாலன் என்ருற்போல 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. புத்த ஜாதகக் கதைகளிலும் செல்வர்களான வணிகர்கள் மகாலக்ஷ்மியை வழிபட்ட செய்தியும் ஸ்ரீ என்ற அடைமொழியோடு ஸ்ரீவர்த்தகன், ஸ்ரீதாசன் என்ருற்போல வழங்கப்பட்டச் செய்தியும் அறிகிறோம். கதைகளில் மகாலக்ஷ்மியை விஷ்ணு கலியாணம் செய்து கொண்ட செய்தி விவரிக்கப்படுகிறது.

விஷ்ணு புராணம் மகாலக்ஷ்மி தானுகவே விஷ்ணுவை அடைந்த செய்தியைக் குறிப்பிடுகிறது. (19105)

புத்தருடைய மரபுப்படி லக்ஷ்மி பாரத வர்ஷத்தின் வடபகுதியை ஆண்ட 'தாதரத்தன்' என்பவன் மகளாகக் குறிக்கப்படுகிருள். புராணங்களில் அவள் பிர்மாவினுடைய பெண்ணுகவும் 'தாதா' 'விதாதா' இவர்களின் தாயாகவும் குறிக்கப்படுகிருள்.

விஷ்ணுபுராணம் லக்ஷ்மியை 'தாதா' 'விதாதா' இவர்களின் சகோதரியாகக் குறிப்பிடுகிறது.

சதபதத்தில் லக்ஷ்மி பிரஜாபதியின் பெண்ணாகச் சொல்லப்படுகிறாள் (S. B. 243). தக்ஷ பிரஜாபதியின் பெண்கள் பதின்மருள் ஒருத்தியான லக்ஷ்மி தர்ம தேவதைக்கு மணம் செய்துகொடுக்கப்பட்ட செய்தியும் காணப்படுகிறது.

விஷ்ணு புராணத்தில் (110790) தர்ப்பன் என்பவன் லக்ஷ்மியின் புதல்வனாகக் குறிப்பிடப்படுகிறான்.

மகாலக்ஷ்மியை இந்திரனோடும் மற்றவர்களோடும் சேர்க்கும் கதைகளும் புராணங்களும் காணப்படுகின்றன.

மகாபாரதம் ஆதிபருவத்தில் — லக்ஷ்மி இந்திரனுடைய பத்நி ஆதலால், பாண்டவர் ஐவரும் சென்ற பிறப்பில் ஐந்து இந்திரர்களாக இருந்ததால் லக்ஷ்மி அவதாரமான திரௌபதி அந்த ஐவரையும் ஒருசேர மணந்தது பொருத்தமே என்ற செய்தி காணப்படுகிறது.

மகாபாரதம் சாந்தி பருவத்தில் லக்ஷ்மி முதலில் அசுரர்களிடம் இருந்து பின் இந்திரனிடத்தில் வந்ததாகவும், இந்திரன் அவளுக்குப் பூமி, ஜலம், நெருப்பு, பிராமண விசுவாசம் ஆகியவற்றையும், அவற்றை உடையவர்களையும் இருப்பிடமாக வழங்கினான் என்ற கருத்து வெளியிடப்படுகிறது.

விஷ்ணுவையும் லக்ஷ்மியையும் தொடர்பு படுத்தி விஷ்ணுவுக்கு ஸ்ரீபதி, ஸ்ரீஸகா, ஸ்ரீவாஸ: ஸ்ரீதர: முதலிய பல பெயர்கள் ஸகஸ்ரநாமத்தில் சொல்லப்படுகின்றன. லக்ஷ்மீ என்ற பெயரும் விஷ்ணுவுக்குக் காணப்படுகிறது.

ஸ்ரீ ஸூக்தத்தில் லக்ஷ்மி தேவஸகன் (குபேரன்) கீர்த்தி, மணி இவற்றோடு தொடர்பு கொண்டிருக்கும் செய்தி காணப்படுவதால் லக்ஷ்மிக்குக் குபேரனுடைய தொடர்பும் அறியப்படுகிறது.

மகாபாரதத்தில் லக்ஷ்மி குபேரனுடைய அரச சபை யில் எப்பொழுதும் இருக்கிருள் என்ற செய்தி காணப் படுகிறது.

மகாபாரதம் வனபருவத்தில் ஸ்கந்தனுடைய மனைவி மார்களாகத் தேவசேனையோடு லக்ஷ்மி, சஷ்டி முதலிய வர்களும் குறிப்பிடப் படுகிருர்கள். இங்கு லக்ஷ்மி ஒரு சரீரத்தோடு ஸ்கந்தனை அடைந்த செய்தியைக் காண் கிருேம். பாரதத்தில் லக்ஷ்மி தேவசேனை என்ற உருவத் தோடு ஸ்கந்தனைக் கூடியிருக்கும் செய்தியும் குறிப்பிடப் படுகிறது. இக் கருத்து பாரத தேசத்தில் பரவியிருந்த செய்தி கி. பி. 2ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த யௌதேயர் களுடைய காசுகளின் ஒரு பக்கத்தில் அறுமுக முருகன் வடிவமும், மறுபக்கம் தாமரைப்பூவில் நின்றுகொண் டிருக்கும் லக்ஷ்மியின் வடிவமும் காணப்படுவதால் அறியலாம்.

ஸ்ரீ ஸூக்தத்தில் மகாலக்ஷ்மி பெண் மாஞகக் குறிக் கப்பட்ட செய்தியும் மக்களிடம் நன்கு பரவிட்டது என்ற செய்தியை கி. பி. 2ஆம்நூற்ருண்டைச் சேர்ந்த குனிந்தர் களுடைய காசுகளில் முன்பக்கம் சிவனுடைய உருவமும் பின்பக்கம் மானின் உருவமும் காணப்படுவதையும், முதல் நூற்ருண்டுக் காசுகளில் ஒரு பக்கம் மானும், மறு பக்கம் தாமரையில் இருக்கும் லக்ஷ்மியும் காணப்படுவ தையும் கொண்டு முடிவு செய்யலாம்.

பாஞ்சராத்ர சம்ஹிதைகளில் ஒன்ருன லக்ஷ்மி தந்த்ரத்தில் லக்ஷ்மி பல குணங்களாகச் சொல்லப்படுவ தோடு அவளிடமிருந்து உலகம் உண்டாகும் செய்தியும் உணர்த்தப்பட்டுள்ளது. இதே சம்ஹிதை 'பந்து கிருத்யம்' என்ற கொள்கையைப் பின்பற்றி, வாசுதேவ சங்கர்ஷன பிருத்யும்ந அநிருத்தர்களாக வியூகங்களுக்கு முறையே லக்ஷ்மி கீர்த்தி ஜயா மாயா என்ற சக்திகளை இணைத்து அவற்றிற்கெல்லாம் மூலமாக மகாலக்ஷ்மி இருப்பதாக குறிப்பிடுகிறது.

அகிர்புத்நிய சம்ஹிதையில் லக்ஷ்மி நாராயண சக்தி என்று கூறப்படுகிருள்.

இவையன்றித் தனியான லக்ஷ்மி அவதாரங்களும் கூறப்படுகின்றன. மகிஷாசுரமர்த்தினி, மகாகாளி, ரோகிணி, விந்த்யா வாஸினி, ரக்ததந்தி, சாகம்பரித, துர்க்கா, பீமா என்ற பலவும் லக்ஷ்மியின் தனி அவதாரங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவையன்றி,

ப்ரமை, இச்சை, அநுபவிக்கும் வித்தை, தந்தை முதலிய தத்துவங்கள் லக்ஷ்மியாகக் கூறப்பட்டுள்ளன.

பிரம்ம புராணத்தில் பகவானுடைய உருவமே ஆண் உருவமும் பெண் உருவமுமாக இருக்கும் செய்தி (நரநாகரீ மயோ ஹரி:) குறிப்பிடப்படுகிறது.

விஷ்ணு புராணத்தில் ஓரிடத்தில் லக்ஷ்மி விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள் என்ற கருத்தும், மற்ருேரிடத்தில் மாயையினுலே தனியே பொன் வடிவெடுத்துப் பகவானும் தானுமாக லக்ஷ்மி இருக்கிருள் என்ற கருத்தும், லக்ஷ்மி நாராயணன் என்ற தத்துவம் உலக நன்மைக்காக இரண்டாகப் பிரிந்த காட்சிகளுக்கும் ஒரே தத்துவம் என்ற கருத்தும். பகவான் மூன்று உலகங்களையும் கைக்கொண்டுள்ளது போல லக்ஷ்மியும் அம்மூன்று உலகங்களையும் கைக்கொண்டுள்ளதாகப் பூமி தேவியின் வாயிலாகக் குறிப்பிடப்படும் கருத்தும் காணப்படுகின்றன.

லக்ஷ்மி நாராயணன் இருவரும் ஒரே தத்துவம் என்று சில பிரமாணங்களும், வேறு வேறு தத்துவம் என்று சில பிரமாணங்களும் கூறுகின்றன.

கிருத ஸூக்தத்தில் ஸ்ரீ, லக்ஷ்மி, ஔபலா, அம்பிகா, சஷ்டி, ஜயா, இந்திரசேனு என்பவர்களும் மூன்று சந்தியா காலங்களிலும் மூன்று விதமாக உபாசிக்கப்படும் காயத்திரியும் லக்ஷ்மியின் அம்சம்தான் என்று வேதாந்த தேசிகர் குறிப்பிடுகிருர்.

விஷ்ணு புராணம் ச்ரத்தா, மேதா, சரஸ்வதி இவர்களையும் லக்ஷ்மியாக வருணிக்கவும், பிர்ம புராணம் லக்ஷ்மியை ஒப்புயர்வற்ற பிர்மமாகவே குறிப்பிடுகிறது.

தேவி வழிபாடு உச்ச நிலையை அடைந்த காலத்தை ஒட்டிப் பல புராணங்களும் தோன்றியதால் மகாலக்ஷ்மி தத்துவம் பல் வேறு விதமாக வருணிக்கப்பட்டுள்ளது.

புருஷனுக்கு ஸ்ரீ, லக்ஷ்மி இருவரும் பத்நிகள் என்று வாஜஸனேயி சம்ஹிதையும், ஹ்ரீ, லக்ஷ்மி இருவரும் பத்நிகள் என்று தைத்ரீய ஆரண்யகமும் கூறுகின்றன.

சாத்வத சம்ஹிதையில் பகவான் 'நான் அவளுக்கு ஆச்ரயமாக இருந்து வருகிறேன் எனினும் என்னுடைய சரீரம் அவளால் ஆகி அவள் உருவாக நிற்கிறது அவளாலேயே எனக்குப் பெருமை வருகிறது' என்று குறிப்பிடுகிறார்.

லக்ஷ்மி தந்த்ரத்தில் லக்ஷ்மி "என்னிடத்திலிருந்து உலகம் உருவை அடைவதால் என்னைப் பிரகிருதி என்று சொல்கிறார்கள். (ல. த. 451) பால் தயிராக ஆனால் பாலாய் இருக்கும் நிலை மாறி விடும். ஆனால் நான் உலகமாக மாறினாலும் என் இயற்கை நிலையை மாற்றிக் கொள்வதில்லை (230)" என்று கூறுகிறாள்.

சனத்குமார சம்ஹிதை 'ஆறு குணங்களை உடைய மகாலக்ஷ்மியாகிய பிரகிருதி, மூன்று குணங்களை உடைய பொதுவான பிரகிருதியினும் வேறுபட்டவள்' என்று விளக்குகிறது.

அகிர்புத்னிய சம்ஹிதை நாராயணனை அகம் எனவும் நாராயணீ சக்தியை 'அகம்தா' எனவும் சுட்டுகிறது.

சனத்குமார சம்ஹிதை பகவானுடைய கருணையை ஆக்கிரமித்த சக்திதான் மகாலக்ஷ்மி என்றும், மகாலக்ஷ்மியே எல்லா சக்திகளுக்கும் தலைவி என்று குறிப்பிடுகிறது.

பாஞ்சராத்ர சம்ஹிதைகளில் பொதுவாக, ஒளி, ஆசை, வித்தை, அநுபவிக்கவேண்டும் என்ற ஆசை ஆகிய இவைகளை மகாலக்ஷ்மி என்ற கருத்தைக் காண் கிறோம். 'ரஹஸ்யாம்நயாயம்' என்ற ஏகாயன வேதம் வித்தைதான் மகாலக்ஷ்மி என்று கூறுகிறது

பகவானுடைய இயற்கையிலேயே அமைந்திருக்கும் பெண் பாகமே லக்ஷ்மி என்றும், சந்திரனுக்கு நிலவு அமைந்திருப்பதுபோலப் பகவானிடம் லக்ஷ்மி அமைந் திருக்கிறாள் என்றும், மாயையினாலேயே பகவான் பெண் ணுருவத்தையும் எடுத்துத் தந்தையாகவும், தாயாகவும் இருந்து வருகிறான் என்றும் கருத்துக்கள் நிலவுகின்றன.

மத வேதாந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு லக்ஷ்மி ஸகஸ்ரநாமத்தில் பல பெயர்கள் காணப்படுகின்றன.

ந்ருசிம்மதாபனியோபநிடதம் மகாலக்ஷ்மியே உமை என்றும் குறிப்பிடுகிறது.

ஆதிலக்ஷ்மி, தனலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, ஐச்வரியலக்ஷ்மி, ஜெய லக்ஷ்மி என்ற அஷ்டலக்ஷ்மி தத்துவமும், வேறு வேறு உருவத்தில் உள்ள பெண் தெய்வங்கள் யாவும் லக்ஷ்மி யின் அம்சமே என்ற கருத்தும், அந்த அந்த ஊர்களில் உள்ள விஷ்ணுபத்நிகளும் லக்ஷ்மியின் அம்சமே என்ற கருத்தும் மிகப் பழமையான கருத்துக்களே.

விஷ்ணு தர்மோத்தரம் ப்ராம்மிலக்ஷ்மி, ஸ்வர்க்க லக்ஷ்மி, ஜயலக்ஷ்மி முதலிய பிம்பங்களை உண்டாக்கும் வழிகளைச் சொல்கிறது.

பாற்கடலில் தோன்றிய லக்ஷ்மிக்குத் திக்கஜங்கள் அபிஷேகம் செய்ததை அடிப்படையாகக் கொண்டு மகாலக்ஷ்மி தாமரைப்பூவில் இருக்க இருபுறமும் இரண்டு யானைகள் அமைந்த கஜலக்ஷ்மி உருவம் மிகப் பழமை யான இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும், காசு களிலும் காணப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதத்தில் மும்மூர்த்திகளிலும் மேம்பட்டவர் யார் என்பதைக் கண்டுபிடிக்க ஏனைய முனிவர்களால் அனுப்பப்பட்ட பிருகு முனிவர் மகாவிஷ்ணுவின் மார்பில் காலால் உதைக்கவே, அதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாத மகாவிஷ்ணுவை விடுத்து அவர் மார்பில் இருந்த லக்ஷ்மி பிரிந்து சென்றுவிட்டதாகக் கதை சொல்லப்பட்டுள்ளது. இந்தக் கதை வேங்கடாசல பதி மஹாத்மியத்திலும் இடம் பெற்றுள்ளது.

விக்ரஹங்களில் மஹாலக்ஷ்மியை விஷ்ணு விக்ரஹத்தின் மார்பில் பதியவைக்கலாம். ஆனால் மனித உருவில் இருக்கும் விஷ்ணுவின் மார்பில் எப்படி மஹாலக்ஷ்மி இருக்க முடியும். விஷ்ணுவின் மனதை கோவிலாகக் கொண்டுள்ளாள் என்றுதான் கொள்ளவேண்டும்.

பாரதத்தின் அநுசாசன பர்வதத்தில் உள்ள நாராயணீயம் பகவானுடைய மார்பில் லக்ஷ்மி வீற்றிருக்கும் செய்தியை 'லக்ஷ்மியாவாஸன்' 'ஸ்ரீவாஸன்' 'ஸ்ரீதரன்' என்ற தொடர்களால் தெரிவிக்கிறது. விஷ்ணு தர்மோத்தரம் ஸ்ரீதரன், ஜநார்த்தனன் வழிபாட்டை விளக்குகிறது.

ஆசாரியர்கள் மகாவிஷ்ணுவின் மார்பில் லக்ஷ்மியின் கால்களில் பூசப்பட்ட செம்பஞ்சுக் குழம்பின் அடையாளமிருப்பதால் அதைக் கொண்டே அவர் 'லக்ஷ்மீபதி' என்பதும் பரதேவதை என்பதும் முடிவு செய்யப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

சூரியன், வில்வமரம், லக்ஷ்மி இம்மூவருக்கும் நெருங்கிய உறவு இருப்பதும் நூல்கள் வாயிலாக அறியப்படுகிறது.

அடுத்து, லக்ஷ்மி தத்துவத்தைப்பற்றி அறிவதற்குக் கருவிகளாக அமைந்துள்ள கல்வெட்டுக்களை நோக்குவோம்.

குப்தர்கள் காலத்தில் விஷ்ணு - மகாலக்ஷ்மி இருவரும் சேர்ந்துள்ள அடையாளங்கள் பல கிடைத்துள்ளன.

ப்பாஹூத், சஞ்சி, புத்த கயை முதலியவற்றில் கஜலட்சுமியின் பழமையான சிற்பங்களைக் காணலாம்.

கி. மு 2ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த பிட்டல்கோரா (ஔரங்காபாத்) குகைச் சிற்பங்களிலும் கஜலட்சுமி பிம்பம் காணப்படுகிறது.

சுஜேஷ்டா என்ற அரசன் காசுகளில் மகாலட்சுமி வலக்கையில் ஒரு பூவை வைத்துக்கொண்டு தாமரைப் பூவில் நிற்பதுபோன்ற வடிவம் காணப்படுகிறது. இரு புறங்களிலும் குடங்களால் அவளை நீராட்டும் யானைகளின் வடிவத்தையும் காணலாம். அயோத்தி மன்னர்களான வாயுதேவன், விசாகதேவன், சிவதத்தன் என்பவர் காசுகளிலும் இத்தகைய கஜலக்ஷ்மி வடிவத்தைக் காணலாம்.

மதுராவில் காணப்பட்ட கோமித்ரன், பிரம்மமித்ரன், கோடிதத்தன், த்ரடமித்ரன் ஆகியோர் காசுகளிலும், சக அரசர்கள் மகா க்ஷத்ரபன், ரஞ்சுபூலன் என்பவர் காசு களிலும் 'அஸிஸ்நிஸஸ்' 'அஸிஸ்' 'அகாம்ஸா' இவர்கள் காசுகளிலும் கஜல்ட்சுமியின் உருவமே காணப்படுகிறது. இக்காசுகள் கி. மு. முதல் நூற்றுண்டுக்கும் கி. பி. 4ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்டவை. அஸிஸ் முதலியவர் காசுகளில் இந்த லட்சுமி தத்துவம் வெளிநாடுகளிலும் பரவிய செய்தி வெளியாகிறது.

ஹிந்து மதமேயன்றி பௌத்த மதமும் லட்சுமி தத்துவத்தை ஏற்றுக்கொண்ட செய்தி 'பிரம்ம ஜால ஸூக்தம் மிலிந்த ப்ரச்நம்' முதலியவற்றுல் போதருவ தால் அம்மதத்தைப் பின்பற்றிய வெளிநாட்டு மன்னவர் களும் லட்சுமி தத்துவத்தை ஏற்றுக்கொண்டமை அறியப்படுகிறது.

முதல் நூற்றுண்டைச் சேர்ந்த குஷான்மன்னர்கள் காலத்தில் லட்சுமி குபேரனுடு இணைந்துக் காணப் படுகிருள். வடமதுரையில் கண்டெடுக்கப்பட்ட குஷா னர் காலச் சிலை ஒன்றில் தாமரையைக் கையில் வைத் திருக்கும் லட்சுமி, பழத்தைக் கையில் வைத்திருக்கும் பத்ரா, கையில் குழந்தையை வைத்திருக்கும் ஹார்த்தி,

இவர்கள் உருவத்தோடு குபேரன் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. இதே குஷானர் காலத்துப் பாராங்கல் சிற்பம் ஒன்றில் அர்த்தநாரீசுவரன், விஷ்ணு, கஜலட்சுமி குபேரன் என்பவர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில்காணும் ஸ்ரீதரவர்மன் முதலியபெயர்களை நோக்கும்போது திருமால் மார்பில் திருமகள் வீற்றிருப்ப தான கருத்து மக்களிடை பரவியமை தெளிவாகிறது.

குப்தர்கள் காலத்தைச் சேர்ந்த அச்சுக்கள் பீட்டா என்ற இடத்தில் கிடைத்துள்ளன. ஒரு அச்சில் லட்சுமி தாமரைப்பூவில் நின்றுகொண்டு இடக்கையை கருடன் மேல் வைத்துக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். மற்றோரச்சில் மகாலட்சுமியின் வலக்கையில் சங்கும் இடக்கையில் ஒரு பரவையும் காணப்படுகிறது. இங்கு அவள் கஜலட்சுமியாகப் பொறிக்கப்பட்டிருக்கிறாள்.

குவாலியரைச் சேர்ந்த மிகிரகுலன் காலத்துக்கு கல்வெட்டொன்று மகாலட்சுமி விஷ்ணுவின் மார்பைப் பிரியாமல் சாசுவதமாக இருக்கிறாள் என்ற கருத்தை அடியொற்றி 'இந்தச் சூரியனின் ஆலயம் மகாலட்சுமி மகா விஷ்ணுவின் மார்பை அலங்கரிக்கும் வரையில் இருக்கும்' என்று குறிப்பிடுகிறது.

குப்தர்கள் காலச் சிலைகள் சிலவற்றில் லட்சுமியும் விஷ்ணுவும் தனித்தனி ஆசனத்தில் அமர்ந்திருப்பது போன்ற அமைப்பைக் காணலாம்.

ஜுனுக்கிருகம், குவாலியர் இவற்றிலுள்ள கல்வெட்டுக்கள் லட்சுமி விஷ்ணுவின் மார்பில் நித்யவாசம் செய்வதைக் குறிக்கின்றன.

கடம்பர்களுடைய கல்வெட்டுக்களும், ஆதித்த சேனன் முதலியோர் கல்வெட்டுக்களும் மகாலட்சுமியை வாசுதேவனுடைய மனைவி என்று தெரிவிக்கின்றன. குப்தர்காலத்தைச் சேர்ந்த ரகுவம்ச மகா காவியத்திலும் வாகாடக மன்னன் பிரவரசேனன் II-ன் இராவண

வத காவியத்திலும் மகாலட்சுமி விஷ்ணுவைப் பிரியாத துணையாக இருக்கும் செய்தி விவரிக்கப்பட்டுள்ளது.

ஸங்க்ஷோபன் என்ற அரசன் பிஷ்டாபுரி என்ற பெண் தெய்வத்தின் ஆலயச் செலவிற்காக ஒரு கிராமத்தைத் தானம் செய்த செயலும், சர்வநாதன் என்ற மன்னன் அவ்வாலய வழிபாட்டிற்காகப் 'புளிந்தபட்டன்' என்பானுக்கு ஒரு கிராமத்தை வழங்கிய செயலும் கல்வெட்டுக்களால் பெறப்படுகின்றன. இத் தெய்வம் மகாலக்ஷ்மியேதான்.

மத்தியப் பிரதேசத்தில் மகாலக்ஷ்மி துர்க்கை இருவரையும் ஒரே நிலையிலேயே வைத்து வழிபடுகின்றனர். மத்தியப் பிரதேச மலைகளில் லக்ஷ்மி உருவம் ஆங்காங்குச் செதுக்கப்பட்டுள்ளது.

சந்திரகுப்தன், குமாரதேவி ஆகியோர் காசுகளில் லக்ஷ்மி சிங்கத்தின் மீது அமர்ந்திருக்கும் தோற்றம் காணப்படுகிறது. குமாரகுப்தன் காசுகளிலும் மகாலக்ஷ்மி வாகனம் சிங்கமே.

'காஜுராஹோ' என்ற இடத்தில் காணப்படும் கஜலக்ஷ்மி போல் உள்ள நான்குக் கைகளை உடைய பிம்பத்தின் ஆசனத்தின்கீழ்ச் சிங்கம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

பாஞ்சராத்திரத்தின் பிற்பட்ட சம்ஹிதைகளில் லக்ஷ்மி தத்துவம் விரிந்த இடம் பெற்று, ஒரு காலத்துத் தனித்து இயங்கும் நிலை நீங்கி, இப்போது விஷ்ணுவோடு பிரிக்கமுடியாமல் இணைந்த தத்துவமாகக் கொள்ளப்பட்டுப் பயன்படுகிறது.

மோட்சம் பற்றிய கருத்து

மோட்சம் என்பதைச் சிலர் உலக வாழ்க்கையில் இருந்துவிடுதலை அடைவதை மட்டும்மோட்சம்என்றுகூறு கிறார்கள் ராமாநுஜர் இதுமட்டும்மோட்சம்இல்லை.பகவானை அடைவதுதான் மோட்சம் என்றார். ஆன்ம வர்க்கம் பகவானை அடைவது, அவனை அனுபவிப்பதற்காகவே. ஆன்ம வர்க்கங்கள் பகவானோடு கூட இருப்பதற்காக மட்டும் இருந்து வரவில்லை; பகவானுக்கு அடிமை செய்வதற்காகவும் இருந்து வரவில்லை; ஆனால் பகவானை அனுபவிப்பதற்காகத்தான் அவன் உள்ளான். உலகப் பொருள்களில் ஈடுபட்டுச் சிற்றின்பத்தை அனுபவித்து அலுத்துப்போன ஆத்மாவிற்கு அளவற்ற சுகம்வேண்டும் என்ற ஆசை இருந்து வருகிறது. ப்ரகிருதியோடு இருக் கும் வரையில் இந்திரியத்திற்கும் சரீரத்திற்கும் அடிமை யாக அவன் இருப்பதனால் இந்த வாய்ப்பு அவனுக்குக் கிட்டவில்லை. பிரகிருதி சம்பந்தம் விலகிய பிறகு பகவானை அடைவதே மோட்சம் என்று சொல்லுகிறார் ஈசாவாஸ்ய உபநிடதம் மோட்சத்தைப் பற்றிப் பேசும் போது ஸம்பூதி, விநாசம் என்ற இரண்டும் சேர்ந்துதான் மோட்சம் என்று கூறுகிறது.' ஸம்பூதி 'என்பதுபகவானை அடைவதைத் தெரிவிக்கிறது.' விநாசம்' என்பதுஇயற்கை யின் சம்பந்தத்தை அறுத்துக் கொள்வதைத் தெரிவிக் கிறது. மோட்சம் என்பது இருவிதமானது என்று தெரி கிறது. இவ்விதம் பக்தி மார்க்கத்தில் அடிப்படையான கொள்கை பகவானே. பகவானை தன்னுடைய நினைவில் பார்த்து, உணர்ச்சி நிலையில் அன்பைத் தெரிவிப்பதுதான் பக்தி. உபநிடதம் ப்ரும்மத்தை அறிய வேண்டும் எனச் சொல்லி வெறும் அறிவோடு நின்றுவிட்டது. இதிலிருந்து பக்திமார்க்கம் எழ இடமில்லை. ஏனென்றால் அறியப்படும் பொருள் ஆசைப்படவேண்டிய நிலைக்கு வாராது.

ஆனால் எந்தப் பொருள், இன்பத்தை உண்டாக்கு மோ, அதைத்தான் அடைய ஆசைப்படுவான். இந்தக் கொள்கையை உபநிடதம் மனத்தில் கொண்டு ப்ரும் மத்தை இருநிலையில் குறிப்பிடுகிறது. ஒரு நிலையில்

பிரும்மத்தைக் குணமில்லாததாயும், சிறப்பான எந்த அம்சமும் இல்லாததாயும், உருவம் இல்லாததாயும் சொல்லி அனுபவிக்க வேண்டிய ஒன்றும் இல்லாத களர் பூமியாகச் செய்துவிட்டது. இது ஞானிகளுக்குத்தான் பொருந்தும். அனுபவ நிலையில் ப்ரும்மத்தைக் கொண்டு வர நினைப்பவர்களுக்கு இந்த ஞானமார்க்கம் மட்டும் போதாது. அதற்காக ப்ரும்மத்தை ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடிய சுவை உருவில் உள்ள பொருளாகவும் உபநிடதம் கூறிற்று. (ரஸோ வைஸ:) ரஸத்தை அடைநதால்தான் ஆனந்தத்தை அடைய முடியும் என்பது இதன் பொருள். இந்த அடிப்படைதான் பக்தி மார்க்கத்திற்கு மூலமாக அமைந்துள்ளது.

பக்தர்களுக்கு பகவானை அறிவதைவிட அனுபவிப்பது முக்கியமானது. ("ரஸம்ஹி ஏவாயம் ஸப்த்வா நந்தீவதி") மோக்ஷக்கொள்கையை ராமனுஜர் ஏற்றதற்கு அவரின் பக்திக்கொள்கையே காரணம்.

அன்பு நெறியும், அனுபவமும்

உணர்ச்சி நிலையில் அன்பைக் காண்பிப்பது என்பது செயல் அளவில் சம்பந்தம் இல்லாத உணர்ச்சி அளவிலேயே இருப்பதனுல், பக்திபாலகம் பொது மக்களுக்குச் சுலபமான வழியாக அமைந்துவிட்டது. மனிதன் உலக வாழ்க்கையில் தன்னுடைய அன்பை உலக வழியில் செலுத்திஅல்லல்களை அடைகிருன்.இதைத்தவிர்க்க இந்த அன்பைக் கடவுளிடத்தில் செலுத்த வேண்டும் என்று பக்திமார்க்கம் கூறுகிறது.

பகவானைஅனுபவித்து ஆனந்தப்படப்பழகிவிட்டால் அவன் அதை விடமாட்டான். இதனுல்தான் சில பக்தர்கள் மோட்சம் கூட வேண்டாம் என்று சொல்லுகிருர்கள். அதனுல்தான் ஆண்டாள் பிறவி எடுப்பதைப் பற்றிப் பயப்படவில்லை எந்த பிறவியிலும் பகவத்தனுபவம் இருந்தால் போதும் என்று உறுதியாகப் பேசுகிருர். குலசேகர ஆழ்வாரும் இந்தக் கருத்திலேயே மோட்சம்

தனக்கு வேண்டா, எவ்வளவு பிறப்பு எடுத்தாலும் எனக்குப் பகவத்தனுபவம் இருந்தால் போதும் என்று கூறுகிறார். யார் எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும் பக்தர்கள் ஒரே மொழியில் பேசுகிறார்கள். ராமானுஜ ருடைய வேதாந்தம் பக்தியை அடிப்படையாகக் கொண் டது. பக்தி மார்க்கத்தின் பிதா என்று ராமானுஜரை சொல்லலாம். அவர் மோட்சம் என்ற சொல்லுக்குப் புரட்சிகரமானப் பொருளைக் கொடுத்தார். ராமானுஜருக்கு மோட்சம் என்பது பிரகிருதி சம்பந்தம் விலகுதல் மட்டும் அன்று.பகவானை அடைந்துசுவைப்பதும் மோட்சம்.என்ற இந்தக் கருத்து இவருக்குக் கீதையிலிருந்து கிடைக்கிறது. பகவான் கிருஷ்ணன் தன்னை அடைவதே மோட்சம் என்று தெரிவிக்கிறார். இந்தக் கருத்துப்படி பகவான் ஜீவ வர்க்கத்தின் அனுபவத்திற்காகத்தான் ஏற்பட்டிருக் கிறான் என்பது ஏற்படுகிறது. இதை ராமானுஜர் பின் பற்றி விட்டார். ராமானுஜர் சேஷ சேஷி பாவத்திற்கு எவ்வளவு முக்கியத்வம் கொடுத்தாரோ அவ்வளவு முக்கியத்துவத்தை ஜீவாத்மா கடவுளை அனுபவிப்பதற் காக இருக்கிறான் என்ற கொள்கைக்கும் கொடுத்தார்.

அவருடைய கருத்துப்படி ஜீவாத்மா இங்கும் அங்கும் எங்கும் கடவுளை அனுபவிக்கவே இருப்பவன். பரமாத்மாவும் ஜீவாத்மாவினால் அனுபவிக்கப்படுவதற் காக இருப்பவன். அதனால் மனிதன் பக்தி செய்யும் போதும் பகவானை அனுபவிக்கிறான். மோட்ச தசை யிலும் பகவானை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். பக்தி தசையில் அனுபவம் இயற்கையினால் கட்டுப்பட்டு விட்டது. இயற்கை சம்பந்தம் விட்டபிறகு கட்டுக்கடங் காத ஆனந்தத்தை அனுபவிக்கிறான். காலத்தினாலோ, தேசத்தினாலோ கட்டுப்படாத ஆனந்தத்தை (பரிபூர்ண ப்ரும்மானுபவம்) மோட்சம் என்று கூறிவிட்டார். மற்ற வர்கள் மோட்ச நிலை புரியாத நிலை என்று கூறுகிறார்கள். கடவுளோடு ஒன்றெனக் கலந்துவிடுவதே மோட்சம் என்று சிலர் கூறுகிறார்கள்.

மற்றும் சிலர் தனக்கு இயற்கையினுல் ஏற்பட்டுள்ள இன்ப துன்பம் விலக இயற்கைக்கு அப்பாலுள்ள நிலையில் இருந்து வருவதே மோட்சம் என்று கூறுகிருர்கள். ராமாநுஜர் ஒருவர்தான் மோட்சம் எப்படியிருக்கும் என்று சிந்தித்து மோட்சமும் பகவானை அனுபவிப்பது தான் என்று கூறுகிருர். உலக வாழ்க்கையில் பகவானை அனுபவிப்பவர்களுக்குப் பக்தி செய்யும் காலத்தில் சிறிது காலம் உலகம் கடந்த நிலை ஏற்படுகிறது. அப்போது ஆனந்தம் இருந்து வருகிறது. அந்த ஆனந்தத்தை இங்கு ஒருவாறு தெரிந்துகொண்டு மோட்சமும் இதே விதமாகவே எல்லையில்லாத ஆனந்தம் என்று கூறுகிருர். ராமாநுஜருக்குப் பிறகு வந்த ஆசாரியர்கள் இதனேடு நிற்க முடியவில்லை. அறிவை அனுபவம் வரையில் கொண்டுபோனதை அவர்கள் ஒப்புக்கொண்டு அதற்கு மேல் யுக்தியை வளர்த்து அனுபவத்தோடு நிற்கக் கூடாது, அதைச் செயலில் காண்பிக்கவேண்டும் என்று கருதி கைங்கர்யம் என்ற ஒரு கொள்கையை வகுத்து விட்டார்கள்.

பகவத் கைங்கர்யக் கொள்கை

மோட்சத்திலேயோ இங்கேயோ அனுபவிக்கும் கடவுள் உருவத்தோடு நிற்பதனுல், பத்தினியோடு நிற்பதனுல், பரிவாரங்களோடு நிற்பதனுல், ஓர் இடத்திலிருப்பதனுல் இந்த அன்பைச் செயலளவில் காண்பிக்க வேண்டும் என்று ஆசாரியர்கள் கூறிவிட்டார்கள். உலக வாழ்க்கையில் அன்பின்விளைவாகச்செயலில்ஈடுபடுவதை நாம் பார்க்கிருேம். செயல் என்ன என்பதை வர்ணித்துச் சொல்ல முடியாது. எந்த எந்தச் செயல்களுக்குத் தேவையிருக்கிறதோ அவை எல்லாவற்றையும் செய்கிருன் என்று கூறிவிட்டார்கள். வேதாந்த தேசிகர் 'ரஹஸ்யத்ரய ஸாரத்தில்' ஸ்ரீ வைகுந்தத்தில் பகவானுக்கு வேண்டிய கார்யங்களைச் செய்வதற்கு அடியார்கள் இருப்பதனுலும் மேலும் ஸ்ரீவைகுந்தத்தில் நித்யமான இடத்தில், இரவு பகல் என்ற காலப் பாகுபாடு இல்லாத

தனுல் இவர்கள் செய்வதற்கு ஒன்றுமேயில்லையே என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டு, பிறர் செய்யும் பணியைப் பார்த்து உகந்து ஆனந்தப்படுவார்கள் என்று சமாதானம் சொல்லுகிருர்.

ஆனுல் நியாய சித்தாஞ்சனத்தில் அங்கும் அந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் காலத்தை அனுசரித்துக் காரியங்களும் உண்டு என்று கூறிவிட்டார். ஸ்ரீவைகுந்தத்தில் கைங்கர்யம் செய்ய இடமுண்டு என்பதை வேதாந்ததேசிகர் ஒருவரே தர்க்கரீதியில் ஸ்தாபிக்கிருர்கள். ப்ரும்மம் பல உருவத்தை அங்கு எடுத்திருப்பது போல் கட்டுப்பட்ட கால ரூபத்தையும் எடுத்திருக்கலாம் என்பது வெளியாகிறது. உலக வாழ்க்கையில் இருக்கும் போது பகவானை ஓர் உருவத்தில் வைத்துப் பக்தர்கள் வழிபட்டுக் கைங்கர்யம் செய்வதும் ஸ்ரீவைகுந்தத்தில் செய்ய வேண்டிய கைங்கர்யத்திற்கு அடையாளமாக இருப்பதே என்று கூறுகிருர்.

ராமானுஜர் கைங்கர்யம்தான் மோட்சம் என்ற கொள்கையை ‘வேதார்த்த சங்கிரகத்தில், ஒப்புக் கொள்ளாமல் பகவானுக்கு அடிமை என்ற உணர்ச்சியைப் பெற்று ஆனந்தப்படுவதே மோட்சம் என்று கூறுகிருர். அடிமை உணர்ச்சி மற்ற இடங்களில் துக்கத்தைக் கொடுக்கும் என்றும், ஆனந்த ரூபமாக உள்ள கடவுள் இடத்தில் செலுத்தும் அடிமை உணர்ச்சி ஆனந்த ரூபமாகவே இருக்கும், அது இவனுக்கு ரஸத்தை உண்டு பண்ணும் என்றும் கூறுகிருர். ஸ்ரீ பகவானிடத்தில் நாம் காண்பிக்கும் அன்பை அவனைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவன் அடியார்களிடத்திலும் காண்பிக்கிருன். எம்பெருமானுக்கு அடிமையாக இருக்கவேண்டும் என்று ராமாநுஜா கூறிய கருத்தை விரிவாக்கிப் பகவானைச் சேர்ந்த பாகவதர்களுக்கும் அவன் அடிமையாகஇருக்கிருன் என்ற கருத்தை ஆசாரியர்கள் வெளியிட்டார்கள். அடியார்கள் பகவானுடைய அடிமையாக இருப்பதனுல் இந்த நிலையில் பகவானைச் சேர்ந்த பாகவதர்களிடத்தில்

அன்போடு இருப்பது அன்பின் முடிவான நிலை என்று கூறுகிறார்கள். இது ஆன்மாவினுடைய அகங்காரத்தைப் போக்குவிப்பதற்காக ஏற்பட்டுள்ள ஒரு கொள்கை; அதுமட்டுமன்று, செயல் அளவில் பகவத் கைங்கர்யம் போல், பாகவத கைங்கர்யமும் உயர்ந்தது என்று காண்பிப்பதற்காகவே பகவான் அவதாரம் செய்திருக்கும் அர்ச்சைகளுக்கும் செய்யும் தொண்டு பகவத் கைங்கர்யம் ஆனாற்போல், பாகவதர்களுக்குச் செய்யும் சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த பணியும். பாகவத கைங்கர்யம் என்று வளர்க்கப்பட்டுள்ளது. உலக வாழ்க்கையில் உருவத்தில், வீட்டிலோ, ஆலயங்களிலோ இருக்கும் பகவானுக்குச் செய்யும் ஆராதனைகளும் பகவத் கைங்கர்யம்தான்.

அவ்விதமே பகவானிருக்கும் இடமான ஆலயத்தைப் பெருக்கி மெழுகுவதும், மாலைகளைக் கட்டுதல், கோலமிடுவது இவை போல்வனவும், பகவத் கைங்கர்யத்தைச் சேர்ந்தனவே ஸ்ரீ ராமானுஜர் 'கீதாபாஷ்யத்தில்' பகவானுக்காகச் செய்யும் பணி என்று இதைக் குறிப்பிடுகிறார். இதற்குமேல் தனிப்பட்ட மனிதன் செய்யும் நித்திய நைமித்திக கர்மாக்களைப் பகவானின் ப்ரீதி வேண்டும் என்று எதிர்பார்க்காமல், அடிமையினுடைய கடமை என்று நினைத்துச் செய்தால் அவைகளும் கைங்கர்யமே என்கிறார். ஒரு கர்மாவைச் செய்து பகவானுடைய ப்ரியம் வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது ஒரு வகையில் காம்ய கர்மாவாக ஆகிவிடுகிறது. இந்தக் கர்மா செய்வதற்குப் பிரயோஜனம் பகவத் ப்ரீதி என்று சொன்னால் இதைச் செய்யாவிடில் பகவத் ப்ரீதி ஏற்படாது என்று அர்த்தமேற்படுகிறது.

இது எம்பெருமான் எப்பொழுதுமே ஜீவ வர்க்கத்தினிடத்தில் பிரியம் உள்ளவன் என்ற கொள்கைக்கு எதிராகவே நிற்கிறது. இதனால் இன்றும் தென்கலை சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் பகவானை வழிபடுவதாக இருந்தாலும் நித்ய, நைமித்திய கர்மாக்களையும், பகவத்

கைங்கர்யம் என்று குறிப்பிட்டே செய்கிருர்கள். வடகலே சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் வேறு வழியில் செல்லு கிருர்கள். பகவானுக்கு அடிமை செய்வதுகூட பகவா னுடைய ப்ரியத்தை எதிர்பார்த்துத்தான். அடிமையாக உள்ளவைக்கு மற்றவை வேண்டா என்று தோன்றிஞ லும் பகவானின் ப்ரீதியை வேண்டா என்று சொல்வது முடியாது. அதை எதிர்பார்த்துத்தான் இவன் நிற்கிருன். ப்ரீதி வேண்டும் என்ற கொள்கை பகவானிடத்திலுள்ள ப்ரியத்தை அனுபவிப்பதற்காக இவன் செய்யும் காரியம் ஆனதஞல் பகவத் ஆராதனமோ, நித்ய, நைமித்திக கர்மங்களோ செய்யும் காலத்தில் நாராயணனுடைய ப்ரீதிக்காகச் செய்கிரேம் என்று சொல்லுகிருர்கள். இவைகளில் யுக்திதான் முக்கியமாக நிற்பதாகும். அவ் ரவர்களுக்கு உகந்த யுக்தியைக் கொண்டு அவர்கள் இஷ்டப்படிச் செய்யலாம்.

பாகவத கைங்கர்யம்

பாகவதர்களிடத்தில் ப்ரியம் காண்பிப்பது பெரிதா? பகவானிடத்தில் ப்ரியம் காணபிப்பது பெரிதா? என்ற பெரிய சர்ச்சையும் காணப்படுகிறது. அடியார்கள் ப்ரத்தியட்சமாக நிற்கிருர்கள் உண்மையான நம் அன்புக்கும் போக்கிடமாக அவர்களே இருந்து வருகிருர் கள். மேலும் பக்வானே சில இடங்களில் தன்ஊக் காட்டிலும் தன் அடியார்களே பெரியவர்கள் என்று சொல்லுகிருன். அதஞல் பகவாஊக்காட்டிலும் பாகவதர் கள் வழிபட வேண்டியதில் முதன்மையாக நிற்கிருர்கள் என்பது வெளியாகுமே தவிர பகவாஊக் காட்டிலும் பாகவதர்கள் உயர்ந்தவர்கள் என்பது தத்வரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கை அன்று. அவ்விதமே எம்பெருமாஊ காட்டிக்கொடுத்த ஆசாரியர்கள் பெரியவர் களா? எம்பெருமான் பெரியவரா? என்ற பெரிய பிரச்சிஊ கிளம்ப, ஆசாரியர்கள் மூலமாகத்தான் பக வாஊ அறிவதாலும் அவர் மூலமாக அடைவதாலும் ஆசாரியர்களே உயர்ந்தவர் என்ற கருத்தை, வெளி யிட்டிருக்கிருர்கள்.

'கண்ணினுள் சிறுதாம்பினுல்' என்ற பதிகத்தில் பகவானைக்காட்டிலும் ஆசாரியர்கள் மிகவும் உயர்ந்த வர்கள் என்று வெகு அழகாக மதுரகவி ஆழ்வார் விளக்கு கிருர். ஸ்ரீ வேதாந்த தேசிகரும் ஆசாரியரைப்போன்ற தெய்வமே கிடையாது என்ற கருத்தைக்கூறி இன்பத்தில் இறைஞ்சுதலில்' என்ற பாசுரத்தில் ஆசாரியருடைய பெருமையை விளக்குகிருர். ஸ்ரீ வைணவ சம்பிரதா யத்தில் ஆசாரியர்களுக்குத் தனியான இடம் ஏற்பட்டுவிட்டது. ஆசாரியர்கள் தெய்வம்போல் வழிபடத் தக்கவர்கள் என்ற பொருளிலேயே இங்கு பெருமை விளக்கப்படுகிறது. அடிப்படை யில் எம்பெருமானைவிட உயர்ந்தவராக ஆகார். எம் பெருமானுடைய பெருமையை ஆசாரிய பக்தி விளக்குமே தவிர, இதனுல் எம்பெருமான் வேண்டாம்என்ருகிவிடாது. எம்பெருமானுக்காகத் தானே ஆசாரியர்கள் அவர்கள் வழிபடத்தக்கவர்என்ற முறையில் எம்பெருமானுக்குமேம் பட்டவர்களாகச் சொல்லுவதும் மிகைப்படுத்திப் பேசு வதே. ஒரு சம்பிரதாயத்திற்கு ஆசாரியர்கள் தூண்போ லிருப்பதினுல் அவர்களை மிகவும் கொண்டாடிப் பேசு வதைப் பார்க்கிருேம்.

மகரிஷிகள் நூல்களை எழுதி வைதிக மரபைக் காப்பாற்றினுர்கள். ஆனுல் இவர்கள் வெகு காலத்துக்கு முன்பிருந்தவர்கள். அவர்கள் நேருக்கு நேராக நமக்கு உதவியைச் செய்யவில்லை. ஆசாரியர்கள் அப்படி யில்லை. வைதிக நூல்களின் கருத்தைத் தம்முடைய ஆசரணைகள் வாயிலாக வெளியிடுகிருர்கள். குறிப்பிட்ட மனிதனுக்கு ஞானோபதேசம் பண்ணி உபாயானுஷ்டா னம் பண்ணி வைத்து மோட்சத்தை அடையச் செய்கிருர் கள். இதனுல் ஆசாரியர்கள் ஸ்ரீ வைணவ மரபில் தனித்த இடத்தைப் பெற்றுவிட்டார்கள். மற்ற எல்லாக் கொள்கையையும் விட ஆசாரியர்தான் எல்லாம் என்ற கொள்கை மிகவும் பரவிவிட்டது.ஆசாரியனுக்குச்செய்யும் பணியும், கைங்கர்யம் ஆகிவிட்டது. உலகம் எங்கும் கடவுள் பரந்துள்ளான் என்ற கருத்தில் பகவான்

கீதாசாரியன் உலக வாழ்க்கையில் நம்கடமையை நிறைவேற்றுவதும் ஒரு பகவத் ஆராதனம் என்று கூறு கிருன். ஒரு ஸ்ரீவைணவனுக்கு உலகக் கடமையை நிறைவேற்றுவது ஒரு கைங்கர்யமாக முடிகிறது. பகவத் ப்ரீதிகரமான காரியமாகவும் ஆகிறது. ஆனுல் ப்ரபன்னன் உலக வாழ்க்கையை மறந்துவிட்டதால் அவனுடைய மனே, வாக்கு, காயங்களை எம்பெருமான் விஷயத் திலேயே ஈடுபடுத்துகிருன்.

இதனுல் ஸ்ரீ வைணவக் கொள்கை பகவான், பாகவதர்கள், ஆசாரியர்கள் இவர்களோடு முடிந்து விடுகிறது. பகவானுக்கு அடிமை என்ற கொள்கை ஆழ்வார்களின் பாடல்களில் பரவியிருப்பதோடு பாகவதர் களுக்கு அடிமை என்ற கொள்கையும் தலைதூக்கி நிற்பதை பார்க்கிருேம். தன்னை பகவானுக்கு அடிமை என்று நேரில் சொல்லிக் கொள்வதைவிட அடியார் களுக்கு அடிமை என்று சொல்லிக் கொள்வதில் மிகவும் பெருமைப் படுகிருர்கள். 'அடியேன்' என்ற சொல் ஸ்ரீ வைணவச் சம்பிரதாயத்தில் சிறந்த சொல். ஆழ்வார் கள் தங்களை அடிக்கடித் தங்கள் அடிமைத்தனம் தோன்ற அடியேன் என்று சொல்லிக்கொள்கிருர்கள். நம்மாழ்வார் நம்முடைய தாழ்மையை நன்கு வெளியாக்க உன் அடியாரின் கீழ் வரும் ஏழாவது அடியாருக்கும் அடியேன் என்று கூறுகிருர்.

பகவான் வைணவ கோஷ்டியை உருவாக்க இந்தக் கொள்கை மிகவும் பயன்படுகிறது. 'அடியார்களிடமும் அடியார்கள் இடையிலும் மிகவும் நான் இருத்து வருகிறேன்' என்று பகவான் சொல்லுவதினுல் அடியார் களுக்குத் தனியான சிறப்பு வெளியாகிறது. சமுதா யத்தில் ஒரு தனியான கோஷ்டி உருவாகவும் இக்கருத்து காரணமாக இருந்து வருகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் வளர்ச்சி.

முன்னுரை:

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் என்ற பெயரால் சில கருத்துக்களை நாதமுனிகள் தொகுக்க ஆரம்பிக்க, மணவாள மாமுனிகள் வரையில் உள்ள ஆசாரியர் களால் அது உருவாக்கப்பட்டுள்ளது. இக் கருத் துக்களை நாம் வைஷ்ண சம்பிரதாயம் என்று சொல்லுகிறோம். வேதாந்ததேசிகர் வரையில் வந்துள்ள வடகலை சம்பிரதாயமும் அவருக்குப் பிறகு வந்த மணவாளமாமுனிகள் சம்பிரதாயமும் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் என்று சொல்லப் படுகின்றன. இவ்விருவருக்கும் இடையே பல ஆசாரியர்கள் வந்திருக்கின்றனர். பல நூல்களை எழுதியுள்ளார்கள். அவர்களுடைய ஐதியங் கள் பல நூல்களில் எழுதாத நிலையிலும் பாது காக்கப்பட்டுள்ளன. வைஷ்ணவ சம்பிரதாயம் என்ற வார்த்தை ஒரு கருத்தைக் குறிப்பிட்டாலும் இதற்குள் வேதாந்தக் கருத்துக்கள், மதக்கருத்துக் கள், அறநெறி, தவநெறி இவையெல்லாம் அடங்கியிருக்கின்றன. ஆசாரியர்கள் தங்க ளுடையக்கருத்தைவாதப்பிரதிவாதங்கள் மூலமாக நிலை நாட்டுவதால் வாதம் செய்யும் வகையையும் இவர்கள் தனியாகவே வகுக்கிறார்கள். ஏற்கனவே இருந்துள்ள வேதம் இதிகாச புராணங்கள் இவை களுக்கும் ஆழ்வார்களுடைய பாடல்களுக்கும் இந்தக் கருத்தைப் பின்பற்றி உரை கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்து ஒரே காலத்தில் ஒரே ஆசாரியரால் உருவாக்கப்படவில்லை.

ஆசாரிய பரம்பரை

நாதமுனிகள் ஆரம்பித்த ஸம்பிரதாயத்தை ஒரு பக்கம் வேதாந்த தேசிகர் வரையில் உள்ள ஆசாரியர்களும், மற்றொருபக்கம் லோகாசார் வரையில் உள்ள ஆசாரியர் களும் இதை வகுத்துள்ளார்கள். மணவாளமாமுனிகள் பெரும்பான்மையும்உரைஎழுதுவதிலேயே தம்முயற்சியை செலவிட்டிருப்பதால் லோகாசாரியரோடு தென்கலை சம்பிரதாயம் முடிந்து விடுகிறது என்பது மிகையாகாது. இவர்கள் எழுதிய நூல்கள் இருப்பதால் அந்தந்த நூல் களில் எந்தஎந்தக் கருத்துக்கள் உதயமாகின்றன என் பதை நிர்ணயம் செய்ய அகச் சான்றுகள் மிகவும் பயன் படுகின்றன.

ஆசாரியர்கள் கொள்கைகள்

வேதம் பொதுவாக எல்லா தேவதைகளைப் பற்றியும் பேசி, பலவிதக் கர்மாக்களையும் சொல்லுகின்றது. ஆனால் அந்த அந்தக் கர்மாக்களைச் செய்யும்போது பல தேவதை களைத் திருப்தி பண்ணி வைக்க, மந்திரங்களும் கர்மாக் களும் இருந்தாலும் அவைகளால் விஷ்ணுவே வழிபடப் படுகிறான் என்ற கொள்கையை வைணவர்கள் வகுக் கிறார்கள். வர்ணாச்ரம தர்மங்களை ஸ்மிருதிகளில் சொல் லப்பட்டவைகளை மட்டும் அப்படியே ஒப்புக்கொள்ளு கிறார்கள். ஒருசாரார் மட்டும் வைஷ்ணவனுக்கு ஜாதி கிடையாது என்று சொன்னாலும், அதை ஆழ்வார்கள் விஷயத்தில் மட்டும் ஒதுக்கிக்கொண்டு விட்டார்கள். பிற்காலத்தில் வந்தவர்களுக்குச் செல்லாது என்று கூறி விட்டார்கள் குரும்பப் பரம்பரை நூலில் ஸ்ரீ ராமாநுஜரோ மற்றவரோ வர்ண தர்மத்தையும் ஆச்ரம தர்மத்தையும் மீறி நடந்திருப்பதாக காணப்படுவதைச் சுட்டி அவர்கள் அது அவர்களுக்கே ஏற்கும், மற்றவருக்கு ஒத்துப் போகாது என்று சொல்லிவிட்டார்கள். உபநிஷத்தில் சொல்லப்படும் பிரம்மம், அறிவு வடிவாகவும், மெய்யுரு வாகவும், அளவில்லாததாகவும், ஆனந்த உருவாகவும்

இருப்பதாகச் சொல்லப்பட்டதை அங்கீகரித்து அதற்கு விஷ்ணு புராணத்தையும் மற்ற புராணங்களையும் பின்பற்றி விஷ்ணுவின் உருவைக் கொடுக்கிறார்கள். விஷ்ணு என்ற சொல்லை மட்டும் வேதம் கொடுக்கிறது. விஷ்ணு தான் முழுமுதற் கடவுள் என்ற கருத்தைப் பல புராணங்களும் சொல்லுவதால் அதையே அடிப்படையாகக் கொண்டுவிட்டார்கள். மற்ற புராணங்களில் சிவனுக்குப் பெருமை சொல்லியிருந்தாலும் எல்லாம் விஷ்ணுவின் மூலமே ஏற்பட்டது என்று கூறிவிட்டார்கள். ஒருவனையே கடவுளாக ஒப்புக்கொள்வதோடு மட்டுமின்று, விஷ்ணுவை வழிபடுபவரின் குழாங்களைப் படைக்க ‘பரமை காந்தி’ என்ற கொள்கையை வகுத்தார்கள்.

பரமை காந்திக் கொள்கை

அந்தக் கொள்கை நாராயணீயம் என்ற நூலிலிருந்து வருகிறது. பகவானையே லக்ஷ்யமாகக் கொண்டு உலக வாழ்க்கையை அடியோடு மறந்தவருக்குத்தான் பரமே காந்தி என்று பெயர். இவர்கள் பகவானைத்தவிர லக்ஷிய மாக ஒன்றையும் உலக வாழ்க்கையில் கொள்ளக்கூடாது. மத வாழ்க்கையிலும் பகவானைத் தவிர வேறு யாரையும் மனத்தால் நினைக்கவும்கூடாது. வேற்றுத் தெய்வங்களின் நாமத்தை வாயால்கூட சொல்லக் கூடாது, அவற்றை வணங்கவும் கூடாது. மோக்ஷத்திற்காவோ, ஏனைய பயன்களுக்காகவோ, வேறு எந்த தேவதையையும் வழிபடக்கூடாது.

விஷ்ணு தவிர மற்ற தெய்வங்களை ஒப்புவாரோடு நெருங்கக் கூடாது. அவர்களைப் பார்க்கக் கூடாது. அவருடன் பேசக் கூடாது. இவ்விதம் உள்ளவருக்குப் பகவானுடைய தரிசனம் கிடைக்கும் என்ற கருத்துக்கள் நாராயணீயத்திலிருந்து கிடைக்கின்றன. பரமை காந்திகள் தங்களுக்குத் தனியான பாஷை, தனியான வேஷம், தனியான போக்கு உடையவர்கள். அவருடைய ஆசரணைகளில் பரமை காந்தித் தன்மை வெளியாக

வேண்டும். ச்வேதத்தீபம் என்ற இடத்தில் உள்ள பெரியார்களுக்குத் தான் இது முடியும். அவரைப் பின் பற்றுபவர்கள் அவர்களைப்போல் இருந்தால்தான் முடியும் என்று நாராயணீயம் கூறுகிறது. அவர்கள் தங்களுடைய அன்றுடக் கார்யங்களை ஐந்தாகப் பிரித்துள்ளனர். அபிகமனம் - உபாதானம் - இஜ்யை-ஸ்வாத்யாயம்; யோகம் என்று இவைகளுக்குப் பெயர்.

பிரதிதினம் செய்ய வேண்டிய கர்மாக்கள் பலவிதமாக இருந்தாலும் நடுப்பகலில் செய்யப்படும் விக்ரக வழிபாடு முக்கியமாகவும், மற்றவை அதற்கு அங்கமாகவும் இருந்து வருகின்றன என்று கூறுகிறார்கள்.

நாராயணனே முதல் ஆசாரியன்

வைணவ சம்பிரதாயம் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய மனத்திலிருந்து உருவாகவில்லை என்று காண்பிப்பதற்காக நாராயணனே முதலாசாரியன் என்று சம்பிரதாயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இங்கு பகவான் ஆசாரியன் என்ற நிலை வேதக் கருத்துகளுக்கு விளக்கம் கூறுவதன் மூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை. வைணவக் கொள்கைகளை அவன்தான் முதலில் கண்டுபிடிக்கிறான். அதை மகாலக்ஷ்மிக்கு உபதேசிக்கிறான். இந்தக் கருத்து பாஞ்சராத்திரம், பகவானுடைய சாஸ்த்ரம் என்று பெருமை படுத்திக் கூறுவதில் உண்டாகும் கருத்து என்று தெரிகிறது. மறையில் ஸ்தானத்தில் பகவான் இருக்க முடியாது. ஆசாரியர்களும் யாரும் இருக்க முடியாது. ஆகவே மறையின் பொருளை மட்டும் கடவுள் விளக்கலாம். கொள்கைகளை உருவாக்கி ஒரு மரபைப் படைக்கலாம். மகாலக்ஷ்மியிடமிருந்து வைணவக் கொள்கைகளை விஷ்வக்சேன (சேனைமுதலியார்) உபதேசம் பெறுகிறார். விஷ்வக்சேனர் என்பவரிடமிருந்து நம்மாழ்வார் உபதேசம் பெறுகிறார். சேனை முதலியாரிடமிருந்து எப்படி நம்மாழ்வார் உபதேசம் பெற்றார் என்பது விளங்கவில்லை.

அநாதியான வேதத்தை மூலமாகக் கொண்டு பல யுகங்களில் வாழ்ந்த பலமஹரிஷிகளாலும் அரசர்களாலும் பின்பற்றப்பட்டு வந்த வைணவம், கி. பி. 9-வது நூற்ருண்டில் வாழ்ந்த நாதமுனிகள் உருவாக்கியதாகவும், நாதமுனிகளுடைய ஆசார்யராக நம்மாழ்வாரைக் குறிப்பிட்டு விஷ்வக்சேன, லக்ஷ்மீ இவர்கள் மூலம் பகவானிடம் ஸம்பிரதாயம் சென்றுவிடுவது ஸம்பிரதாயத்துள்ள புதுமையையும் பகவத் ஸம்பந்தத்தால் வந்த ஏற்றத்தையும் தெரிவிக்கிறது. நாதமுனிகளின் வரலாற்றைத் தெரிவிக்கும் குருபரம்பரை நம்மாழ்வாரின் பிரபந்தங்களைப் பெறவே *கண்ணின் சிறுதாம்பு* என்ற மதுர கவிகளின் பதிகத்தை 12000 தடவை உருச் செய்ததாகவும் யோக தசையில் நம்மாழ்வார் தோன்றி ரகஸ்யார்த்தங்களையும் திருவாய் மொழியையும் உபதேசித்தாகவும் கூறுகிறது.

ஆசாரிய பரம்பரையும் சம்பிரதாய விரிவும்

நம்மாழ்வாரிடமிருந்து நாதமுனிகள் உபதேசம் பெற்ருர். யோக தசையில் நம்மாழ்வாரை நேரில் கண்டு நாதமுனி உபதேசம் பெறுகிருர். நம்மாழ்வாருக்கு முன்னுல் வைணவ சம்பிரதாயக் கொள்கைக்கு ஆசாரியர்கள் இல்லாமல் இல்லை. ஏதாவதொரு காரணத்தினுல் அந்தச் சம்பிரதாயம் மறைந்துவிடவே நாதமுனிகள் நாம்மாழ்வாரிடம் சொல்கிருர் என்று வேதாந்த தேசிகர் 'சம்பிரதாய பரிசுத்தி' என்ற ரஹஸ்யத்தில் கூறுகிருர் கலியுகத்தில் பிரம்ம நத்தியாதிகளுக்குப் பிறகு நம்மாழ்வார் சம்பிரதாயத்திற்கு ஆசாரியராகிருர் என்று கூறுகிருர். நாதமுனிகள் காலம் வரை எப்படிச் சம்பிரதாயம் உருவாகிறது என்பதற்கு நூல் சான்றுகள் இல்லாததனுல் அவைகளைப் பற்றி நாம் பூர்ணமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. நாத முனிகளுக்குப் பின் வந்துள்ள ஆசாரியர்கள் நூல்களை எழுதியிருப்பதனுல்தான் அவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள முடிகிறது. வேதாந்த தேசிகரோ லோகாசாரியரோ சொல்லும் கொள்கை அப்

படியே ஆதிகாலத்தில் இருந்தது என்று ஒப்புக்கொள்ள நூல்கள் இடம் தரவில்லை. ராமானுஜர் காலத்திலிருந்த வைணவக்கொள்கைகள் வேறு. ராமானுஜர் காலத்துக்குப் பிறகு வந்த ஆசாரியர்கள் வளர்ந்த கொள்கை உருவத்தில் வேறாக நிற்பதை நாம் பார்க்கிறோம். வைதிக மதத்தைச்சேர்ந்த நூல்களும் (ஸ்மிருதி, இதிகாச புராணங்கள்) ஆழ்வார்களுடைய பாடல்களும், பாஞ்சராத்ர ஆகமும் ஆகிய மூன்றும் தனித்தனியாக உற்பத்தியாகி இதில்வந்து சேர்கின்றன. மற்றும் சேர்ந்துதான் பிற்கால வைணவமாக உருவாகிறது. இதைப் பிற்கால வைணவ ஆசாரியர்கள் நூல்கள் வெளிப்படுத்தும்.

ஆகமங்களும் ஆழ்வார் பாசுரங்களும்

தனிப்பட்ட தெய்வக் கொள்கையோடு, வேதாந்தக் கொள்கையோடு, வழிபாட்டுக் கொள்கையோடு பிறந்த தனித்து நிற்கும் ஆகமங்கள் — தெய்வக் கொள்கை, விக்ரஹ வழிபாட்டுக் கொள்கை இவைகள் விஷயத்தில் மட்டும்தான் தமிழ்நாட்டு வைணவத்திற்கு உதவுகின்றன. ஆழ்வாருடைய பாடல்கள் பொதுவாக எம்பெருமானிடத்தில் அன்பைச் செலுத்தவேண்டும் என்பதற்கு உதாரணமாக இருப்பதுடன் வைணவ ஒழுக்கக் கொள்கைகளுக்கு ஆலய வழிபாட்டிற்கும் மூலாதாரமாக உள்ளன.

பிரஸ்தானத்திரயம்

வர்ணாச்சிரம தர்மம் வைதிக கர்மாக்கள் இவைகளுக்கு வேதங்கள் ஆதாரமாக இருக்கின்றன. மற்ற மத வேதாந்திகள் ப்ரஸ்தானத்ரயம் என்று தங்களுடைய கொள்கைகளை உருவாக்க மூன்று நூல்களை முக்கியமாக நம்புகிறார்கள். ஒன்று உபநிடத்து, இரண்டு ப்ரம்ம சூத்திரம், மூன்றாவது கீதை. மூன்றையும் ஏன் ஒன்று படுத்தினார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் இவைகளுள் ப்ரும்ம சூத்திரமே தலைசிறந்து நிற்கிறது. உபநிடதங்களின் கருத்துக்களுக்கும், கீதையின் கருத்துக்

களுக்கும் இங்குதான் வேற்றுமையைக் காண்கிறேம். ஆனல் ப்ரம்ம சூத்திரம் ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்திற்குச் செய்யும் உபகாரம் மிகச் சிறியது. ப்ரம்ம சூத்திரத்தில் உபநிடதங்களில் உள்ள உபாசனங்களின் சர்ச்சையே ப்ரதானமாக நிற்கின்றது. உபநிடதங்களுக்கு 'சாங்கியர்கள்' சொல்லும் கருத்தைக் கண்டிக்கவும் வந்திருக்கின்றது. மோட்சத்தை சூத்திரக்காரர்கள் ஒரு வகையாக வகுக்கிருர்கள். ஆனல் இந்த ப்ரம்ம சூத்திரத்தில் 'அத்வைதிகள்' தங்கள் கொள்கைகளைப் பார்க்கிருர்கள். 'த்வைதிகள்' தங்கள் கொள்கைகளைப் பார்க்கிருர்கள். 'விசிஷ்டாத்வைதிகள்' தாங்களும் தங்கள் கொள்கைகளைப் பார்க்கிருர்கள். சங்கரர் காலத்திற்குப் பிற்பாடு வந்த வேதாந்திகள் எல்லோரும் தங்கள் தங்கள் கொள்கைகளுக்குப்ரும்மசூத்திரத்தைஎதிர்பார்க்கிருர்கள். ஆனல் வைணவ சம்பிரதாயம் வேதாந்தக் கொள்கையோடு மட்டும் நிற்காமல், தெய்வக் கொள்கைகள், மதக் கொள்கைகள், ஆசரணை, ஒழுக்கங்கள், சரணுகதி தத்துவம் இவைகளை விரிவாக விளக்குவதாக உள்ளதால், அதற்கு ப்ரம்மசூத்திரத்திஞல் ஏற்படக்கூடிய உதவி மிகச் சிறியது. ஆழ்வார்களுடைய பாடல்கள் மிகவும் நெருங்கியவையாக ஒப்புக்கொள்ளப்பட்டாலும் தெய்வக் கொள்கை ஒன்றுக்கு மட்டுந்தான் அவை பயன் படுகின்றன.

சம்பிரதாயத்துக்குப் பயன்படும் நூல்கள்

பக்திப் பாடல்களில் வேதாந்த விளக்கத்தைக் காண முடியாது. அவ்விதமே ஆகம நூல்களும் தனி சம்பிரதாயமாக இருந்து வருவதால் அவற்றை அப்படியே அப்பட்டமாக ஏற்றுக்கொள்ளவும் வழியில்லை. அவ்விதமே ஆசாரியர்களுடைய நூல்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கிலே அமைந்திருப்பதிஞல் ஒவ்வொருவித ஆசாரியரிடமிருந்து ஒவ்வொருவித கருத்துத்தான் கிடைக்கிறது.

நம்மாழ்வார்

ஆசாரியர் 'ப்ரபன்ன சந்தான கடஸத்தரான நம்மாழ்வாருடைய நூல்கள் பாடல்கள் உருவத்தில் ப்ரத்யட்சமாக இருந்து வருகின்றன. அவரைப்போன்ற மற்ற ஆழ்வார்கள் இருந்தும் அவர்களுடைய பாடல் களுக்குத் தனித்த இடத்தைக்கொடுத்து ஆழ்வார்களுள் இவர் ஒருவரே ஆசார்ய பரம்பரையில் சேர்க்கப்பட்டுள் ளார். நாராயணனை இஷ்ட பரதேவதையாகக் கொள்ளு மிவர், வாஸுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்ற ஆகமப் பெயர்களைக் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பூமகள் — மண்மகள் — ஆயர்மகள் இவர்களை மனைவிகளாகச் சொல்லுமிவர் மஹாலக்ஷ்மிக்கு தனியர்க ஒரு பாடலைக்கூட அர்ப்பணம் பண்ணவில்லை. பட்டர் குறிப்பிட்டபடி பகவானைச் சொல்லுமிடங்கள் இவனையும் சொல்லியதாக நினைக்கிறார் போலும். சரணாகதி பண்ணுபவர்கள் முதலில் லக்ஷ்மியை சரணாகதி பண்ணவேண்டும். லக்ஷ்மீதான் புருஷகாரம் என்ற கருத்துக்கள் இங்கு இடம் பெறவில்லை. இவர் தன் பாசுரங்களில் பகவானைக் கருணைக் கடலாகவே அநுபவித் துப் பேசுவதால் புருஷகாரம் என்ற கொள்கையே இவருடைய கருத்துக்கு எதிரானதென்று தெரிகிறது. அவ்விதமே இவருடைய நூல்களில் காணப்படும் சரணா கதி எல்லா நூல்களிலும் சொல்லப்படும் சரணாகதியே. உபாயமாகப் பற்றப்பட்டதில்லை. மேலும் இவரை ப்ரபந்த ஸந்தானகூட ஸ்தராக எல்லா ஆசாரியர்களும் வர்ணிக்கிறார்கள். உண்மை அப்படி இல்லை. இவர் பக்தியோக நிஷ்டர்தான். இவரது பக்தி ராமாநுஜர் கூறும் உபநிஷத்தைப் பின்பற்றிய உபாசனை இல்லை. புராணங்களில் சொல்லப்பட்டுள்ள கடவுளிடம் அன்பைச் செலுத்துவதே நம்மாழ்வார் பக்தியோக நிஷ்டர் என்று தான் திருக்குறுகைப் பிரான் பிள்ளான் கூறுகிறார்.

பத்தாவது பத்தில்உள்ள ஒரு பாசுரத்திற்கு விளக்கம் கூறும்போது 'பத்துடைய அடியவர்க்கெளியன்' என்ற

பாசுரத்தில் ஆரம்பித்த பக்தியோக சுலபத்வத்தை நிகமிக்கிருர் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிருர். இதனுல் ஆருயிரப்படி உரைப்படி நம்மாழ்வார் பக்தியோக நிஷ்டர் தான். இவர் மோட்சோபாயமாகக் கர்ம ஞான பக்திகளை மட்டும் குறிப்பிடுகிருர். ப்ரபத்தியை உபாயமாக நேருக்கு நேராகக் குறிப்பிடவில்லை. ப்ராசீனமாக பன்னீராயிரப்படி வரை இதே கருத்து தொடர்ந்து வருகிறது. ஆனுல் இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாருயிரப்படி வியாக்கியானங்களில் புதுவழி ஆரம்பிக்கப்படுகிறது. "மயர்வற மதிநலம் அருளினன்" என்ற இடத்தில் ஆரம்பித்த ப்ரபத்தியோக சுலபத்வத்தை இங்கு நிகமிக்கிருர் என்று அவர்கள் கூறுகிருர்கள்; இது ஒரு புதிய திருப்பம். ராமானுஜருக்கு அந்தரங்கராயிருந்த பிள்ளான் கூறிய வழியை மீறிப் புதிய வழியை ஏன் கண்டுபிடிக்கிருர் என்பது புரியவில்லை. ஆனுல் ஒன்று தெளிவாகிறது. வைணவ சம்பிரதாயத்தில் ராமானுஜர் பக்தியை வற்புறுத்துகிருர். பிற்காலத்தவர்கள் ப்ரபக்தியை வற்புறுத்துகிருர்கள்.

ஆகவே பிற்கால ஆசாரியர்கள் ப்ரபக்தி விஷயமாக இந்தப் பாசுரத்தை விளக்கி நம்மாழ்வாரையும் ப்ரபத்தி யோக நிஷ்டராக கூறுவதில் ஆச்சரியமில்லை. நம்மாழ்வாருடைய பக்தி உபநிடதத்தில் சொல்லப்படும் பக்தியில்லை. புராணங்களில் காணப்படும் விபவாவதாரங்களில் ஈடுபடுவது பக்தி என்று இவர் நினைப்பதாகத் தெரிகிறது. ராமாநுஜர் உபநிடதத்தில் சொல்லப்பட்டுள்ள உபாசனங்களையே பக்தி என்கிருர். இந்த விஷயத்தில் ஆழ்வாருடைய கருத்தும் ராமானுஜருடைய கருத்தும் ஒத்துப் போகவில்லை. ராமானுஜர் உபநிடதத்துக் கொள்கைகளை வற்புறுத்துகிருர். ஆழ்வார்கள் எல்லா மக்களுக்கும் பொதுவான பக்தியைச் சொல்லுகிருர்கள். ஆழ்வார்கள் அடிக்கடி எம்பெருமானைச் சரணம் புகுகிருர்கள். அர்ச்சாவதாரத்திலேயே சரணுகதி

பண்ணுகிருர்கள் என்றும் லோகாசாரியார் கூறுகிருர். ஆனுல் இந்தச் சரணுகதி பாஞ்சராத்ர ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ள சரணுகதியாகத் தெரியவில்லை. உலக வழக்கத்தைப் பின்பற்றியதே இதிகாச புராணங்களிலும் உலக வாழ்க்கையிலும் சரணமடைவது என்ற கொள்கை ஸ்தூலமாகக் காணப்படுகிறது.

ஆனுல், ஆழ்வார் நிலை வைணவ சம்பிரதாயத்தில் ஒப்புக்கொளளப்பட்ட சரணுகதியில் ஒரு அம்சமே தவிர, பூர்ணமான சரணுகதியாக ஆகாது. சரணுகதியைப் பற்றி உள்ள கருத்துக்கள் பாஞ்சராத்ர ஆகமத்திலேயே வளர்க்கப்பட்டுள்ளன. அந்தக் கருத்துக்களுக்கு இங்கு பேச்சில்லை. ஐந்து அங்கங்களோடு கூடினது சரணுகதி என்று ஆழ்வார் எங்கும் வெளியிடவில்லை. மேலும் 'த்வயம்' என்ற மந்திரம் சரணுகதிக்கு மிகவும் முக்கிய மானது. உரையாசிரியர்கள் நம்மாழ்வாருடைய பாடல் களுக்கு உரை கூறுங்கால் த்வயத்தினுடைய விளக்க மாகவே அவை அமைந்திருப்பதாகக் கொள்கிருர்கள். ஆனுல் எட்டு எழுத்து என்ற அஷ்டாக்ஷரத்தைச் சொல்வதுபோல் ஆழ்வார்கள் த்வயத்தைப் பற்றிச் சொல்லவேயில்லை. ஆழ்வார்கள் பக்தியோக நிஷ்டர்கள் அல்லர் என்று அறுதியிட்டுக் கூறும் பெரியவாச்சான் பிள்ளையும், வடக்குத் திருவீதிப் பிள்ளையும் ஆழ்வார்கள் வேறு ஜாதியில் பிறந்திருப்பதால் உபநிடதத்தில் சொல் லப்பட்டுள்ள பக்தியோகத்திற்கு இவர்கள் அதிகாரிகள் அல்லர் என்று கூறிவிட்டார்கள். இவ்விதம் வைணவ சம்பிரதாயத்திற்குக் கொள்கைகளை வழங்கும் மூன்று வகை நூல்களும் ஒவ்வொன்றும் தனித்தனியே அமைந் திருப்பதைப் பார்க்கிருேம்.

வைதிக வைணவம்

இனி இவை ஒன்றுசேர்ந்து உருவாகும் காலத்தில் எப்படிக் கருத்துக்கள் வளர்கின்றன எனக் காண்போம். நாதமுனிகள், ஆளவந்தார், ராமாநுஜர் இம்மவர்கள்

இடமும் ஒரு குறிப்பிட்ட கொள்கையோடு உள்ள வைணவத்தைப் பார்க்கிறோம். இவை முழுவதும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வேத நூல்களை, வைதீக நூல்களை அடிப்படையாகக் கொண்டது, இதை வைதீக வைணவம் என்றும் கூறலாம். நூலகள் அமைந்துள்ள முறையைப் பற்றிய செய்திகளைக் கவனித்தால் நாதமுனிகள் யோகாப்பியாசத்தைக் கடைப் பிடித் பிடித்துள்ளார் எனத் தெரிகிறது. திருக்குருகைப் பிரான் பிள்ளானும் இந்த வழியிலேயே நிற்கிறார் என்று வேதாந்த தேசிகர் கூறுகிறார் இவர்கள் யோக மகிமையால் தத்வத்ரயத்தையும் பார்த்தார்கள் என்று கூறுகிறார்.

நாதமுனிகள் நூல்கள்

நாதமுனிகள் எழுதிய யோக ரஹஸ்யம் என்பது ராமானுஜர் காலத்திலேயே மறைந்துவிட்டது என்றும் தெரிகிறது. அவர் எழுதிய நியாய தத்வம் என்ற நூலிலிருந்து மேற்கோள்களை வேதாந்த தேசிகர் எடுக்கிறார் இந்த நூல் வாதப் போரில் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கைகளைப் பற்றியது. நாதமுனிகள் காலத்தில் பாஞ்சராத்திர ஆகமம் மக்களால் ஆதரிக்கப்படவில்லை என்றும், இதை ஆதரிக்க அவர் பிரசாரம் செய்தார் என்றும் அறிகிறோம். ஆகமப் பிரண்யத்தின் முடிவில் ஆளவந்தார் இதைக் கூறுகிறார்.

ஆளவந்தார் நூல்கள்

ஆளவந்தார் எழுதிய நூல்களில் சித்தித்ரயம் என்ற நூல் அத்வைதிகளின் வேதாந்தக் கருத்துக்களைக் கண்டித்துச் சங்கரருக்கு முன்னிருந்த டங்கர் முதலானவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி எழுதப்பட்ட நூல். 'ஆகமப் ப்ராமாண்யம்' என்ற நூல் பாஞ்சராத்ர ஆகமத்தையும் அதனுடைய கொள்கைகளையும் பாதுகாக்க எழுதப்பட்ட நூல். பாஞ்சராத்திகள் தங்களுக்கு ஏகாயன சாகை என்ற வேதத்தை மூலமாகக்கொண்டு தங்கள் வழியிலேயே கர்மாக்களைச்

செய்து வருவதாலும், வைதீக கர்மாக்களைச் செய்துவரும் சிலர் அவர்களைப் பின்பற்றுவதனுலும், அவர்களை அங்கீ கரிப்பதில் தவறில்லை என்று அந்நூலில் கூறுகிருர். ஆகமப் ப்ராமாண்யம் என்ற நூல் பாஞ்சராத்ர ஆகமங் களை ஆதரித்து முதல் முதலாக எழுதப்பட்ட நூல். அதி லிருந்து ஆகமங்கள் இருந்து வருவதையும், இந்த ஆகம நூல்களை பின்பற்றி வைணவ ஆலயங்களில் பூஜை நடை பெறுவதையும், இந்த ஆலயங்களை அரசர்களே கட்டினுர் கள் என்பதையும் தெரிந்து கொள்ளுகிருேம். ஆகமக் காரர்களுடைய கொள்கைகல் முழுவதையும் ஸ்ரீ ஆள வந்தார் ஏற்றி அனுஷ்டித்து வந்தாரா என்பது அந்த நூலிலிருந்து விளங்கவில்லை. ஸ்தோத்திர ரத்னம் என் பது ஓர் உயர்ந்த நூல். இதில் ஆளவந்தார் வாழ்நாளில் உள்ள கஷ்டங்களை நினைத்துக் கரைந்து உருகித் தெய் வத்தைப் பாடியுள்ளார்.

இந்த நூல் என்னுல் ஒன்றும் செய்ய முடியவில்லை 'நீதான் என்னை ரட்சிக்க வேண்டும்' என்ற கருத்தை வெளியிட்டுச் சரணுகதி தத்துவத்தைப் பல வழிகளில் விளக்குகிறது. பிரபத்தி சம்பிரதாயத்தில் ப்ரபத்தி செய் கிறேன் என்ற சொல்லை இங்குப் பார்க்கிருேம். இதுதான் பிற்கால ப்ரபத்தி சம்பிரதாயத்தின் முக்கியமான இடத் தைப் பெறுகிறது. இவருடைய நூல்களுக்கு உரை கூறுவதிலேயே கருத்து வேற்றுமை ஏற்பட்டுச் சம்பிர தாயம் இரு கூருகப் பிரிகிறது. பகவானுடைய பெரு மையை விளக்குவதைவிடத் தன்னுடைய தாழ்மை யையும் குறைகளையும் எடுத்துக் கூறித் தன்னைக் காப் பாற்றவேண்டும் என்று கடவுளை வேண்டுவது சிறந்ததும் எளியதுமாகும் என்பது வெளியாகிறது. மகாலக்ஷ்மிக்கு கணவனுன நாராயணனே பரதேவதை என்ற கொள்கை யும் இங்கு வெளியாகிறது.

மஹாலக்ஷ்மியைப் பற்றி 'சதுஸ ஸ்லோகி' என்ற நூல் எழுதியுள்ளார். இதுதான் வைணவ சம்பிரதாயத் தில் மகாலக்ஷ்மியை வழிபடும் முதல் நூல். இங்கு மகா

லக்ஷ்மியின் பெருமையை விளக்குகிறார். ஆனால் பிற் காலத்தில் தோன்றிய புருஷகார கொள்கைக்கு இவர் காலத்தில் ஒரு இடமேயில்லை. ஸ்ரீ என்ற சொல்லால் மகாலக்ஷ்மி கூறப்படுகிறாள். அவளுடைய பெருமையை அவளுடைய பர்த்தாவான நாராயணன்கூட அறிய முடியவில்லை என்று வர்ணிக்கப்படுவது கவனிக்கத் தக்கது.

'புருஷ நிர்ணயம்' என்ற நூலில் ஸ்ரீய:பதியான நாராயணனே புருஷன் என்ற சொல்லால் சொல்லப் படுகிறான் என்று விளக்கப்படுகிறது.

இராமானுஜர் நூல்கள்

அடுத்தாற்போல் ராமானுஜர் வருகிறார். இவருடைய நூல்களில் சூத்திர பாஷ்யம், ஸீதாபாஷ்யம், வேதாந்த சங்கிரகம் இவை முக்கியமானவைகளாக நிற்கின்றன. மூன்று நூல்களும் அத்வைதிகளின் கருத்தைக் கண்டித் துச் சங்கரருக்கு முன்னாலிருந்த வேதாந்திகளான போதா யனர் முதலானவர்களின் வழிகளைப் பின்பற்றி விசிஷ்டாத் வைதம் என்ற கொள்கையை ஸ்தாபிக்கின்றன. உப நிடதத்தில் சொல்லப்பட்டுள்ள ப்ரும்மத்தைப் புராணங் களில் சொல்லப்பட்டுள்ள நாராயணனோடு ஒன்று படுத்திச்சொல்வதே இவருடைய முக்கியமானகொள்கை. ஞானானந்தஸ்வரூபனான ப்ரும்மத்தை நாராயண உருவத் தில் ஸ்தாபித்தது மட்டுமல்லாமல் அவருக்குப் பத்நீ பூஷண பரிச்சின்னம் ஸ்தன விசேஷம் இவைகளையும் ஸ்தாபிக்கிறார். பத்னியை ஒப்புக்கொள்ளும் இவரும் இவருடைய வேதாந்தக் கருத்துக்களை வெளியிடும் நூல் களில் சொல்லவில்லை. புருஷகாரம் என்ற சொல்லை இவர் உபயோகப் படுத்தவேயில்லை. பக்தியினால் மோட்சம் என்று முதல் முதலாக இவர்தான் குறிப்பிடுகிறார்.

உலகம், ஆத்மவர்க்கம் இவை பகவானுக்கு சரீரமாக அமைந்துள்ளன என்பது இவருடைய சிறப்பான கொள்கை. மோட்சம் என்பது அனுபவவிசேஷம் என்று

தான் இவர் அருதியிட்டுச் சொல்லுகிறுர். அநேகமாக ராமாநுஜர் வைதிகக் கொள்கைகளை அப்படியே பின்பற்று வதால் அவருடைய ப்ரும்ம சூத்திர பாஷ்யத்திற்கிணங்க உபநிடதங்களிலுள்ள உபாசனங்களைச் செய்பவருக்கே மோட்சம் எனத் தெரிகிறது. கீதைக்கு உரை எழுதும் காலத்தில் எல்லோராலும் சரணுகதியை வெளியிடும் இடமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ‘சரமஸ்லோகம்’ என்பதற்குப் பொருள் கூறும் காலத்தில் பக்திக்கு அங்க மாக உள்ள சரணுகதியை இந்த ஸ்லோகம் வெளியிட்டுள்ளதாகவே உரை எழுதிவிட்டார். இது பிற்காலத்து ஆசாரியர்களுக்கு முக்கியமான ப்ரமாணமாக இருப்பதிஞல் இதற்குப் பொருள் கூற வந்த ஆசாரியர்கள் ராமாநுஜர் வழியை விட்டு வேறு வழியிலேயே திரும்பி விட்டார்கள். ஒரு சிலர் மறைமுகமாக ராமாநுஜர் கருத்துக்களைக் கண்டித்தும் இருக்கிருர்கள். ‘கத்யங்கள்’ என்ற நூல்கள் வசன நடையில் அமைந்துள்ள நூல்கள். சரணுகதியைப் பற்றியும், ஸ்ரீரங்கத்தைப் பற்றியும், ஸ்ரீ வைகுண்டத்தைப் பற்றியும் வர்ணித்துப் பேசுகிறது. இந்த நூல் ராமாநுஜருடைய நூல்தான் என்று பெரிய வாச்சான் பிள்ளை, வேதாந்த தேசிகர் உள்ளிட்ட சகல ஆசாரியர்களும் ஒப்பிப் பேசுகிருர்கள். பெரியவாச்சான் பிள்ளை, வேதாந்த தேசிகர் இவர்கள் இவைகளுக்கு உரையும் எழுதியுள்ளார்கள்.

ஆனுலும், ராமாநுஜரின் மற்ற வேதாந்த நூல்களில் காணப்படும் கொள்கைகளுக்கும் இதற்கும் வேற்றுமை காணப்படுகிறது. இது ராமானுஜருடையது அன்று என்று நினைக்கவும் வேண்டி வருகிறது. மூன்று கத்யங்களில் மூன்ருவது கத்யத்தில் மங்களச்லோகம் காணப்படுகிறது. இது வைகுந்தத்தை வர்ணிப்பது. ஒவ்வொரு நாளும் அநுசந்தானம் பண்ணப்படவேண்டியது. இந்த நூலை ராமாநுஜர் பக்தி யோகம் என்றுகூறினர். கத்யங்களுக்குத் தனியான எண்ணத்தை கற்பிப்பவர்கள் வேதாந்த தேசிகர் காலத்திலேயே இருந்திருக்கிருர்கள் என்று தெரிகிறது.

பொதுவாகக் கவனிக்குமிடத்தில் ராமாநுஜருடைய நூல்கள் பிற்காலத்து ஆசாரியர்களின் கருத்துக்களுக்கு முழுவதுமே ஒத்து நிற்கவில்லை. ராமாநுஜர் தம்முடைய நூல்களில் ஓரிடத்திலாவது ஆழ்வாருடைய பாசுரங்களை எடுக்கவும் இல்லை, விளக்கவும் இல்லை. பிற்காலத்தில் வந்த ஆசாரியர்கள், எப்படி ஆழ்வார்களுடைய பாடல் களை உதாரணமாகக் கொண்டார்களோ அப்படி உதாரண மாகக் கொள்ளவில்லை. பாஞ்சராத்ர ஆகமங்களை ஒப்புக் கொண்டாலும், அவற்றினுடைய கொள்கைகளை அடிப் படையாகக்கொண்டு தமது நூல்களில் விளக்கம் கூற வில்லை. ஆகமங்களைப் பற்றிச் சொல்லுங் காலத்தில், அர்ச்சாவதாரம் என்று கொள்கையிருப்பதாகத் தெரிவிக்க வில்லை. அவர் காலத்தில் வடமொழி நூல்கள் எவ்வெவை இருந்தனவோ, அவைகளைக் கொண்டுதான் தம்முடைய கொள்கைகளை ஸ்தாபிக்கிருர். பிறகு வந்த ஆசாரியர் களுக்கு ராமானுஜருடைய நூல்களிலிருந்து கிடைக்கும் உதவி மிகக் குறைவாக உள்ளது. ராமாநுஜருடைய நூல்களிலிருந்து அவர் எங்கு பிறந்தார், எங்கு வளர்ந் தார் என்ற விவரங்களையும் நாம் காண முடியவில்லை. பொதுவாக ப்ரபத்தி சம்பிரதாயம் வளர்ச்சி அடைந்த பிறகு ராமானுஜருடைய நூல்களுக்கு முக்கியத்துவம் குறைந்துவிட்டது. அதனுலேயே அவர் "பிறரைத் திருப்தி பண்ணிவைக்க ராமாநுஜர் ஸ்ரீபாஷ்யம் எழுதினர்.

அதன்பிறகு அவராலேயே 'கத்யத்ரயம்' கஷ்டப் படுகிறவர்களின் மனத்தைச் சமாதானம் பண்ண ஏற்பட் டுள்ளது என்று கூறுகிருர்கள் என்று ஸ்ரீ வேதாந்த தேசிகர் தெரிவிக்கிருர். ராமாநுஜரைப் பற்றிய பல கதைகள் குரு பரம்பரைகளில் காணப்படுகின்றன ராமாநுஜர் சம்பந்தமுள்ள பல ஐதீகங்களும் நூல்களிலும் காணப்படுகின்றன. ஆனுல் ராமாநுஜருடைய பெரு மையை விளக்க இவை ஏற்பட்டுள்ளன என்று கொள்ள லாமே தவிர, அடிப்படையான கொள்கைகளை இவை விளக்குவனவாகக் கொள்ள முடியாது. 'ராமாநுஜர்

வர்ண 'தர்மத்தை வெறுத்தார்' என்று விளக்கும் கதை கள் கணக்கற்று இருக்கின்றன. ஆனால், அவர் வர்ணாச் சிரம தர்மத்தை அப்படியே வற்புறுத்துபவர். 'அபசூத் ராதிகரணி பாஷ்யம்,' ராமாநுஜரின் ஜாதிக் கொள்கைக்கு ஏடுத்துக்காட்டாக நிற்கிறது. 'அவருடைய நூல்களி லிருந்து கிடைக்கும் சான்றுகள் ராமாநுஜர் வைதிக தனி வழியிலேயே நிற்கிறார் என்பதைத் தெரிவிக்கின்றன.

சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு உண்டான குரு பரம் பரைக் கதைகளை, கொள்கைகளை விளக்கி சொல்லும் கதையாகத்தான் கொள்ளவேண்டி யிருக்கிறது குரு பரம்பரை சம்பந்தமான நூல்கள் இரண்டு சம்பிரதாயத் திலும் இருந்து வருகின்றன (தென்கலை, வடகலை). இவைகளில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகளும் உள்ளன. ஒன்றில் இல்லாமல் மற்றொன்றில் வரும் கதைகள் குழப்பத்தைத்தான் உண்டுபண்ணுகின்றன. ராமாநுஜருடைய கதைகள் ராமாநுஜர் ஜாதியை வெறுத் ததைத் தெரிவிக்கின்றன என்று காலம் சென்ற சர். சி. சங்கரய்யர் அவர்கள் போன்ற சமூக சீர்திருத்தவாதிகள் வெளியிட்டுப் பேசுகிறார்கள்.

அப்பொழுதே இரு சம்பிரதாயத்தைச் சேர்ந்த பெரியார்களும் ஒரு வகையாக எழுச்சியை அடைந்து குரு பரம்பரைகளில் காணும் கதைகளுக்குப் பலவிதமான விளக்கம் கூறினார்கள். காலம் சென்ற மகரிஷி வாசு தேவாச்சாரியார் வேதார்த்த சங்கிரகம் என்ற நூலில் மொழி பெயர்ப்பின் முகவுரையில் ராமாநுஜர் சாஸ்த்திர விருத்தமான காரியங்களைச் செய்தார் என்று கூறும் கதை களை ஒப்புக்கொள்ள முடியாது என்று கூறுகிறார். காலஞ் சென்ற வைணவ ஆசாரிய புருஷர் ஐயா கிருஷ்ண தாத்தாச்சாரியார் ஸ்வாமி ராமாநுஜருடைய குரு பரம் பரையிலுள்ள சாத்திர விருத்தமான அனுஷ்டானத்தைத் தெரிவிக்கும் கதைகள் ராமாநுஜருடைய விரோதி களால் எழுதப்பட்டவை என்று 'சம்பிரதாய பரிசுத்தி' என்பதன் உரையில் கூறுகிறார். எது எப்படியிருந்தாலும்

ராமாநுஜருக்குப் பிறகு வைணவ சம்பிரதாயம் புது உருவைப் பெற்றுப் புதுக்கொள்கையோடு வாழ்ந்து வருகிறது என்பதைப் ப்ரத்யட்சமாகப் பார்க்கிறோம். ராமாநுஜருடைய நூல்களையும், பிற்கால ஆசாரியர் களுடைய நூல்களையும் ஒன்று சேர்த்துப் படித்துப் பார்த் தால் இந்த உண்மை நன்கு விளங்கும். ராமாநுஜருடைய கொள்கைகளைப் பின்பற்றுவதுதான் வைணவம்; மற்றவை வைணவம் அல்ல என்று யாரும் சொல்ல முடியாது. ராமாநுஜருக்குப் பிறகு வந்த ஆசாரியர்களால் வைணவக் கருத்தை வளர்க்க முடியாது என்று யாரும் சொல்ல முடியாது. ராமாநுஜருடைய கருத்துக்கள் பிற்கால ஆசாரியர்களுக்கு ஒரு வகையில் அடிப்படை யாக அமைந்திருக்கின்றன என்பதையும் யாரும் மறுக்க முடியாது. பிற்கால ஆசாரியர்களுடைய கருத்துக்கள் ஏற்கத் தக்கன அல்ல என்றோ ஆதாரமற்றன என்றோ யாரும் சொல்ல முடியாது. ஆனால் பிற்காலத்தில் உரு வாகி வளர்ந்துள்ள கொள்கைகளை ராமாநுஜருடைய நூல்களிலோ கொள்கைகளிலோ ஏறிட்டுப் பேசுவதைத் தான் ஆராய்ச்சியாளர்கள் மறுக்கிறார்கள். பிற்கால வைணவக் கொள்கைகளை மிகவும் வளர்த்ததற்கு ஆசாரியர்களுக்கு எல்லோரும் கடமைப் பட்டுள்ளார்கள்.

ராமாநுஜருக்குப் பின் வைணவம்

ராமாநுஜருக்குப் பிறகு பல ஆசாரியர்கள் வைணவத் தைப் பற்றி சிந்தித்துத் தனி நூலாகவும், உரை நூலாக வும், ரஹஸ்ய நூலாகவும் பல நூல்களை எழுதியிருக்கிறார் கள். இவருடைய கருத்தெல்லாம் ஆழ்வார்களுடைய பாடல்களுக்கு உரை எழுதுவதிலும், ஸ்ரீ வைணவ சம்பிர தாயத்திற்கு முக்கியமான மூன்று மந்திரங்களுக்கு உரை எழுதுவதிலுமே ஈடுபட்டுள்ளது. வெகு சிலர் ராமாநுஜ ருடைய வேதாந்த நூல்களுக்கு உரை எழுதியள்ளார்கள் வேதாந்தக் கருத்துக்களை விளக்கியும் நூல் எழுதியுள் ளார்கள். வேதாந்த நூல்கள் எல்லாம் வடமொழியில்

எழுதப்பட்டுள்ளன. ஆழ்வார்களுடைய பாடல்களுக்கு உரை நூல்கள் ரஹஸ்யங்கள், இவை மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன.

வேதாந்த தேசிகர்

நூல்கள்

இங்கு ராமாநுஜரின் அந்தரங்க கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்த மடைப்பள்ளி ஆச்சான் என்ற பெரியார் வழியாக ஒரு சம்பிரதாயம் வளர்ந்து வேதாந்த தேசிகரோடு முடிவடைந்து விட்டது. இந்த வழியில் கடைசியில் வந்த வேதாந்த தேசிகர் சிறிதும் பெரிதுமான நூற்றுக் கணக்கான நூல்களை வடமொழியிலும் தமிழிலும், மணிப்பிரவான நடையிலும் தனி நூலாகவும், உரை நூலாகவும் ஸ்தோத்திர நூலாகவும் எழுதியிருக்கிறார். ராமானுஜர் சித்தாந்தத்தைப் பாதுகாக்க தர்க்க ரீதியில் பல நூல்களை எழுதியிருக்கிறார். இவர்கள் வழியிலும் தத்வஹித புருஷார்த்தக் கருத்துக்களிலும் பலவித வளர்ச்சிகளைப் பார்க்கிறோம்.

கூரத்தாழ்வார் மரபு

ராமாநுஜர் வழியாக வந்த சீடர் பரம்பரையில் சீடரான கூரத்தாழ்வார், பட்டார் நஞ்ஜீயர், நம்பிள்ளை, லோகாச்சாரியர், மணவாள மாமுனிகள் இவர்கள் வரை வந்தநூல்களில் பெரும்பான்மையானவை மணிப்பிரவாள நடையில் உள்ளவை பட்டர் வரை நூல்கள் வடமொழியிலேயே காணப்படுகின்றன. நம்பிள்ளை ஆழ்வார்களுடைய பாடல்களுக்கு மிக அழகாக உரை எழுதியுள்ளார்கள். வடக்குத் திருவீதிப் பிள்ளையின் சீடரான பெரியவாச்சான் பிள்ளை ஆழ்வார்களுடைய எல்லாப் பாடல்களுக்கும் விரிவான உரை எழுதியுள்ளார். ஆங்காங்குப் பல அபூர்வமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். நம்பிள்ளையிடம் தான் கேட்டுள்ள கருத்துக்களை, வடக்குத் திருவீதிபிள்ளை என்ற ஆசாரியன் ஈடு முப்பத்தாருயிரப்படி என்ற உரையில் வெளியிட்டுள்ளார்.

பெரியவாச்சான் பிள்ளை நம்மாழ்வார் பாசுரங்களுக்கு 24 ஆயிரப்படி உரை எழுதியுள்ளார். வடக்குத்திருவீதி பிள்ளைசீடர் லோகாசாரியர்ரஹஸ்ய சம்பிரதாயத்தை நூல்களாக உருவாக்கினவர். அவருடைய நூல்களுக்கெல்லாம் மணவாள மாமுனிகள் அழகான விரிவான விளக்கத்தை எழுதியுள்ளார். விசதவாக் சிகாமணி என்று அவர் போற்றப்படுகிறார்.

வைணவப் பிரசாரம்

லோகாசாரியர் ஆசாரியராக இருந்தும், மணவாள மாமுனிகள் தம் சீடர்களான எட்டுப் பெரியவர்கள் மூலம் (அஷ்டதிக் கஜங்கள்) பிற்கால வைணவத்தைப் பரப்பப் பெரு முயற்சி எடுத்திருப்பதால் வைணவ சம்பிரதாயத்தில் மணவாள மாமுனிகள் ஒரு தனியான இடத்தைப் பெற்றுவிட்டார். ராமாநுஜருக்குப் பின் இருநூறு வருடங்களில் சிந்தனைகள் மிகவும் முதிர்ச்சியை அடைந்துவிட்டன. பொதுமக்கள் எல்லோரிடமும் இவற்றைப் பரப்ப வாய்ப்பு கிடைத்தது. துரதிர்ஷ்டவசமாக ஒரு மடமோ ஒரு ஸ்தாபனமோ தனியாக இல்லாததனால் தனிப்பட்ட முறையிலேயே அவரவர்கள் நூல் எழுதியும், உபதேசம் பண்ணியும் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள்.

ரகஸ்ய நூல்கள்

தமிழ்நாட்டு வைணவத்திற்கு ரகஸ்யம் என்ற வகையைச் சேர்ந்த நூல்கள் நடுநாயகமாக இருந்து வருகின்றன. பிறருடைய காதில் படாமல் கேட்கப்படவேண்டியதாக இருப்பதால் ரகஸ்யம் என்று சொல்லப்படுகிறது. இங்கு சித் (ஆன்மா) சுசித் (இயற்கை உலகம்) ஈச்வரன் (நாராயணன்) என்று மூன்று தத்வங்களும் விளக்கப்படுகின்றன. வடமொழி நூல்களில் ஆங்காங்கு காணப்படும் கருத்துக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. சில ரகஸ்யங்கள் திருவஷ்டாக்ஷரம் த்வயம் - சாமச்லோகம் என்ற மந்திரங்களுக்கு உரை நூலாக அமைந்துள்ளன.

இங்கு வைணவக் கருத்துக்கள் மந்திரங்களில் ஏறிட்டுக் காண்பிக்கப் படுகின்றன. பெரியவாச்சான் பிள்ளை, லோகாசாரியர் வேதாந்த தேசிகர் இவர்கள் இந்தநூல்களை எழுதியுள்ளார்கள். ரகஸ்ய நூல்கள் காலத்தில் வடகலை தென்கலை ஸம்பிரதாயக் கருத்துக்கள் இணைக்க முடியாத படி பிரிந்து வளர்ந்துவிட்டதால் அவரவர்கள் தங்கள் கருத்தை உருவாக்கி மந்திரங்களுக்கு உரை எழுதும் வியாஜத்தில் அவைமீது ஏறிட்டுக் காண்பிக்கிருர்கள். கருத்துக்கள் ஏற்கனவே நூல்களில் காணப்பட்டவை யாக இருந்தாலும், மந்திரங்களின் எழுத்துக்கள் சொற்கள் இவைமீது ஏறிட்டுச் சொல்லும் வழி ரகஸ்யமாக வைக்கப் பட்டிருப்பதால் ரகஸ்யம் என்ற பெயரை பெறுகின்றன. இவைமணிப்பிரவாள நடையில் உள்ளன.ரகஸ்யங்களுள் வேதாந்த தேசிகரின் ரகஸ்யத்ரய ஸாரம் மிகப் பெரியது. ஸ்ரீவசந பூஷணம் வைணவத்திற்கடிப்படையான சில கருத்துக்களை விளக்குகிறது. ஆசார்ய ஹ்ருதயம் ஆழ் வாரின் பாடல்களின் கருத்தை விளக்க ஏற்பட்டது. லோகாசார்யரின் தம்பியான அழகிய மணவாளப் பெரு மாள் நாயனுர் எழுதியது. திருவாய்மொழிக்குப் பல இடங்களுக்கு ஸ்வாபதேசப் பொருள் சொல்லுவது.ஆனுல் புரட்சிகரமான வைணவத்தின் கருத்தை இங்கு நாம் பார்க்கிருேம். வேதத்தின் இடத்தில் திராவிட வேதத் தையும், ரிஷிகள் இடத்தில் ஆழ்வார்களையும், வர்ணு ச்ரமத்தினித்தில் ஜாதிக்கலப்பிலா வைஷ்ணத்வத்தையும் அளித்து வைணவத்தை உருவாக்கிய பெருமை இந் நூலுக்கு உண்டு. வைதிக மதத்தின் பல அடிப்படை கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த நூல் இது.

ஆலயமும் வைணவமும்

வைணவ சம்பிரதாயம் ஆலய வழிபாட்டுக் கொள் கையை உட்கொண்டு பேசினதால், ஆலயத்தோடு அதுவும் சேர்ந்து வளர இடம் ஏற்பட்டுள்ளது. ஆனுல், ஆகமத்தைப் பின்பற்றும் ஆலயங்களுக்கும் ஆசாரியர் களின் வைணவத்திற்கும் தொடர்பே கிடையாது ›ன்பது

தெளிவு. கருத்தளவிலேயே நூல்களிலேயே சிந்தனையிலேயே கொள்கைகள் வளர்ந்துகொண்டே வந்ததனுல் வெளி உலகத்தோடு சம்பந்தம் இல்லாமலேயே போய் விட்டது. பொதுவாகத் தென்னிந்தியாவில் பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள் விஜயநகரத்து அரசர்கள் இவர்கள் அரசியல் உலகில் பல போர்களை நடத்தியுள்ளார்கள். பல்லவ அரசர்கள் விட்டு விட்டு ஐநூறு ஆண்டுகள் ஆண்டிருக்கிருர்கள். பிறகு அவர்கள் மறைந்துவிட்டார்கள். பிற்காலச் சோழர்கள் முந்நூறு வருடங்களுக்குமேல் ஆண்டிருக்கிருர்கள். அவர்களும் மறைந்துவிட்டார்கள். பாண்டியர்களும் பல நூற்ருண்டுகள் அதிகாரத்திலிருந்து ஆட்சி புரிந்தார்கள். இவர்கள் எல்லோரும் சிவ பக்தாகளாகவோ, விஷ்ணு பக்தர்களாகவோ இருந்து புதிய ஆலயங்களைக் கட்டியும், பழைய ஆலயங்களைப் புதுப்பித்தும், நந்தா விளக்கு எரிவதற்கும், சாத்துப்படிக்கும், அமுதுபடிக்கும், ஆராதணைக்கும், திருவிழாக்களுக்கும் ஏற்பாடு செய்துள்ளார்கள். அவர்கள் அரசியல் உலகிலேயே சஞ்சரித்து வந்ததால் ஆசாரியர்களுடைய ஸ்ரீ வைணவ கருத்து அவர்கள் உள்ளத்தில் சென்று ஒன்றும் செய்யவில்லை. அரசர்கள் தங்களை வைணவர்கள் என்றும் (சிலர்) கூறிக் கொள்கிருர்கள். சிலர் தங்களைச் சிவபாதசேகரர் என்றும் சொல்லிக்கொள்கிருர்கள்.

ஆனுல் சில பக்தர்கள் விஷ்ணு ஆலயத்தைப் புதிது புதிதாகக் கட்டியுமுள்ளார்கள்; புதுப்பித்தும் உள்ளார்கள். நிபந்தங்களையும் ஏற்படுத்தி உள்ளார்கள். அவர்களுக்கு விஷ்ணு பக்தியோ, சிவ பக்தியோ தீவிரமாக இல்லை எனத் தெரிகிறது. சோழ அரசர்கள் பல்லவர்கள் காலத்திற்குப் பிறகு ஜைன ஆலயங்கள் பல ஏற்பட்டுள்ளன. சிவாலயம், விஷ்ணு ஆலயங்களைப் போற்றிப் பேணி வந்த அரசர்களே ஜைன ஆலயங்களையும் பாது காத்து வந்தனர். அரசர்கள் நிலையில் அவர்கள் பொதுவாக இருந்து வந்திருக்கிருர்கள் என்று தெரிகிறது.

வைணவமும்,
சைவமும்

ஆலயங்களில் நேருக்கு நேராக சம்பந்தப் பட்டுள்ள காரியங்களில் வைணவ சம்பிரதாயத்திற்குத் தனியாக ஒரு இடமும் கிடையாது. வைணவ சம்பிரதாயத்தோடு கலந்த பாராயணம், சாத்துமுறை, கோஷ்டி என்பவை பூஜையோடு சம்பந்தப்பட்டவையல்ல. அவை பூஜகர் செய்யும் கிரியைகளில் உள்ளடங்கியதில்லை. பாராயணம் முதலியவை வெளியார் செய்யும் அவர்களின் தொழில், பூஜகர்களுக்கும், பூஜைக்கும் இங்கு ஸம்பந்தமே கிடையாது. வைணவக் கருத்து ஒரு கட்டுப்பாடான நிலையில் படித்த பிராம்மணர்களிடையில் நானூறு வருடங்களாக உருவாகி வளர்ந்துவிட்டது. அதுபோல் சைவம் வளரவே இல்லை. நாட்டு அரசர்களின் அதிகாரம் மறைந்த பிறகு அதிகாரி யார் என்று புரியாமல் இந்த காலத்தில் வைணவம் கோவிலில் புகுந்துவிட்டது. சிவ ஆலய வழிபாட்டிற்கு வழி உண்டு. சிவ வழிபாடு உண்டு. நாயன்மார்களுடைய பக்திப் பாடல்கள் வெளி வந்தவுடனே அவற்றை ஆலயங்களில் பாட ஏற்பாடு செய்தார்கள். ஆனால் வைணவம் இப்படிக்கட்டுப்பாடாக வளர்ந்தது போவுலம் பலர் நூல் எழுதிப் பல சிஷ்யர்கள் ஆசாரிய பரம்பரையில் வளர்ந்தது போலவும், சைவம் வளரவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பொதுமக்களுடைய ஆதரவையே சைவம் நம்பி வந்துள்ளது. வைணவ ஆலயங்களும் பொது மக்களுடைய பலத்தையே விஜயநகர சாம்ராஜ்யம் வரையில் நம்பி வாழ்ந்துள்ளன எனத் தெரிகிறது. ஆசாரியர்கள் வளர்த்துள்ள கருத்துக்கள் படித்தவர்களிடம் வளர்ந்து வந்தன.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் பிற்காலத்தில் வந்த சில அரசர்களும், அதற்கும் பிறகு வந்த சில நாயக்கர்களும் வைணவ சம்பிரதாயத்திலும் ஆலயத்திலும் சேர்த்து

சிரத்தைக் காண்பிக்க ஆரம்பித்தார்கள். அது கி. பி. பதினொருவது நூற்றாண்டாக இருக்கலாம். அரசர்கள் வை ணவ சம்பிரதாயப்படி, வைணவதீக்ஷை'செய்துகொண்டு ஆசாரியர்களிடம் மந்திரோபதேசம் பெற்றுத்தாங்களும் வைணவர்களாகி ஆசியைப் பெற்று ஆலயங்கள் வைண வச்சம்பிரதாயத்தோடு சேர்ந்துவாழ வழி கோலினார்கள். ராமானுஜகூடம் ஒரு காலத்தில் தனியாக இருந்தது. அங்கு ராமானுஜரைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு ஆலயத்திலுள்ள பிம்பங்களுக்குக் கைங்கர்யம் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களும் துறவிகளாக இல்லாது போனாலும் ஏகாங்கி என்று சொல்லப்பட்டு வந்தார்கள். அவர்களுடைய சாப்பாட்டுக்குப் பல அரசர்கள் ஏற்பாடுசெய்துள்ளார்கள். விஜய நகரத்து அரசர்களுக்கு முன்னால் வந்த மாலிக் காபூர் என்ற முகமதிய போர்த் தளபதி மதுரை வரை வந்துவிட்டுத் திரும்பி போயிருக்கிறான். அவன் ஆலயங்களை எவ்வளவு தூரம் தாக்கினான் என்பதற்கு உறுதியான சான்று ஒன்றும் கிடைக்கவில்லை. குழப்பம் இருந்திருக்கும் என்பது மட்டும் தெரிய வருகிறது. ஆலய சம்பிரதாயங்களை ஆங்காங்குப் பல நூல்கள் வெளியிடுகின்றன. ஸ்ரீரங்கத்தின் 'கோயி லொழுகு' என்ற நூலும், திருப்பதியின் 'வெங்கடாசல இதிகாசமாலா' என்ற நூலும் ராமானுஜரையும் ஆலயங் களையும் சம்பந்தப்படுத்தப் பல கதைகளை எழுதியுள்ளன ராமானுஜரே ஆலய வழிபாட்டை உருவாக்கினார் என்று கூறுகின்றன. இவைகளுடைய வரலாற்று முக்கியத் துவம் ஒருபுறமிருக்க இவைகளில் காணாத பல நிகழ்ச்சி களையும் இன்று நாம் பார்க்கிறோம். அரசர்கள் தங்க ளுடைய பெயரால் தங்கள் பிறந்த நாளில் பல திருவிழாக் கொண்டாடச் சொல்லியிருக்கிறார்கள். புதிதான பல பிம்பங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். இவற்றை நோக்கக் கோயில் நடைமுறை அரசர்களின் சிரத்தையாலும், அரசியல் அதிகாரிகளின் பராமரிப்பாலுமே நன்கு பாதுகாக்கப் பட்டன என்பது போதரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைணவ சம்பிரதாயம்

சம்பிரதாயக் கருத்துக்கள்

சம்பிரதாயம் என்ற சொல் பரம்பரையாக வந்துள்ள ஆட்சேபிக்கப்படாத கருத்துக்களைக் குறிக்கும். ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தின் வேதாந்தக் கருத்துக்கள், மதக் கருத்துக்கள், தெய்வக் கொள்கை சம்பந்தமான கருத்துக்கள், ஒழுக்கம் சம்பந்தமான கருத்துக்கள், இவை அடங்கியுள்ளன. வேதாந்தம் என்ற சொல் முடிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள தத்துவங்களைக் குறிக்கும்.

வேதாந்தத் தத்துவம் —
முப்பொருள்கள்

இந்த தத்துவங்களை மூன்றாக ஆசாரியர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தத்துவம் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. மூவ்வகையான உலகத்தின் மூலப்பொருள்களும் மூன்றே. இது தத்வத்ரயம் என்று சொல்லப்படுகிறது. ப்ரகிருதி — ஜீவாத்மா — பரமாத்மா — இறைவன் என்று இவைகளுக்குப் பெயர்.

பலவிதமாகக் காணப்படும் உலகம் பிரகிருதி என்று சொல்லப்படுகிறது. ஜடப் பொருளுக்கு ஏதோ ஒன்று

காரணமாக இருக்கவேண்டும். அது மூல ப்ர்கிருதி என்று சொல்லப்படுகிறது. அவ்விதமே 'நான்' என்ற விவகாரம் உலகில் காணப்படுகிறது. இந்தச் சொல்லுக்கு கருத்தென்னவென்று புரியவில்லை. ஒரு சமயம் என்னுடை சரீரம் என்கிறுன்; இங்கு சரீரம் வேறு, நான் என்பது வேருகத் தோன்றுகிறது. மற்ருென்று நான் நடக்கிறேன் என்று, நான் என்பதையும் நடக்கும் சரீரத்தையும் ஒன்று படுத்திப் பேசுகிறுன்.

இந்த உலகானுபவத்தை பரிசோதனை பன்னும் போது சரீரம் வேறு, ஆன்மா வேறு என்ற ஆத்மா என்ற பரிசுத்தமானவன் தோன்றுகிறுன். அந்த ஆத்மாவிற்கு காரணமாகிய ஜீவாத்மா ஒருவன் தோன்றுகிறுன். ஜீவாத்மா, ப்ரகிருதி இவை இரண்டும் யுக்தியை மூலமாகக் கொண்டு ஏற்படுகின்றன. அவ்விதமே இவை இரண்டையும்இயங்க வைக்கும் கடவுள்என்ற தத்துவமும் யுக்தியால் கிடைக்கிறது. ஆனுல் யுக்தியால் கிடைக்கும் கொள்கைகள் பலவழிகளில் குறையுள்ளவைகளாக இருப்பதால் ஆசாரியர்கள் தங்களுடைய முழுக்கருத்துக்களுக்கும் நூல்களையே அண்டுகிறுர்கள்.

உலகத்திற்குக் காரணமாகவும் உலகத்திற்கு ஆதாரமாகவும் கடவுள் கிடைக்கிறுன். இந்த மூன்று தத்துவங்களுக்கு 'தத்வத்ரயம்' என்று பெயர். இவை 'சித்', 'அசித்', 'ஈசுவர' என்று விளக்கப்படும். 'சித்' என்பது அந்தச் சரீரத்திலுள்ளஅறிவுள்ள ஆத்மாவைக் குறிக்கும். 'அசித்' என்பது சரீரம் உள்ளிட்ட ஜடமான வெளிப் பொருள்களைக் குறிக்கும். 'ஈசுவர' என்ற சொல் இவை இரண்டையும் இயங்கவைக்கும் கடவுளைக் குறிக்கும். முப்பொருள்களுக்கும் ஒன்றுக்கொன்று உறவு என்ன என்று கவனித்தால் மூன்றும் சுதந்திரமாக இயங்காததனுல் மூன்றும் ஒன்று சேர்ந்துள்ளன என்று தெரியவருகிறது. ப்ரகிருதி என்ற ஜடப் பொருள் தானுகவே இயங்காது. ஆகவே அதை இயங்கச் செய்ய ஒரு அறிவுள்ள ஆன்மா

வேண்டும். அவ்விதமே ஆன்மாவினுடைய நிலையை நன்கு பரிசோதித்துப் பார்த்தால் ஒவ்வொரு சரீரத்திலுள்ள ஆத்மாவும், அறிவுள்ளவனுக இருந்தும் தானே இயங்குவது கிடையாது என்று தெரிகிறது. அறிவுள்ள ஆத்மா தன்னிஷ்டப்படி இயங்கித் தான் விரும்பியதை பெற்றுக் கொண்டு வந்திருந்தால் அவனுக்குமேல் கடவுளைப்பற்றி நினைக்கவேண்டிய அவசியமில்லை. ஆனல் மனிதன் எப்பொழுதுமே உண்மையான உணர்வைப் பெறுவது கிடையாது. பல இடங்களில் தவறுகிருன். தான் விரும்பியதைப் பெற முடிவதில்லை. அதனுல் இவைகளை இயங்கவைக்கும் ஒரு கடவுள் தத்துவத்தை ஒப்ப வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

விசிஷ்டாத்துவைதம்

இவற்றுள் ஈசுவர தத்துவம் மற்ற இரண்டைக் காட்டிலும் சுதந்திரமாயும் தானே இயங்கக் கூடியதாயும் இருப்பதால் அதை முக்கியமாகக் கொண்டு மற்றவைகள் அதை நம்பி வாழ்வன என்று ஒப்புக் கொண்டு உலக வாழ்க்கையில் சரீரத்திற்கும் ஆத்மாவிற்குமுள்ள உறவை எடுத்துக் காட்டாகக் கொண்டு பரமாத்மாவை நம்பி ஜீவனும் ப்ரகிருதியும் இருப்பதினுல் ஜீவாத்மா, ப்ரகிருதி இவைகளோடு சேர்ந்த பரமாத்மா ஒரே பொருளதான் என்று சொல்லுகிருர்கள். இதற்குத்தான் ‘விசிஷ்டாத்வைதம்’ என்று பெயர். “ஜீவாத்மா ப்ரகிருதி இரண்டும் சேர்ந்துள்ள பரமாத்மா ஒருவனே” என்று கொள்வதால் தான் இதற்கு இந்த பெயர் வந்தது. விசிஷ்டம் என்ற சொல் சேர்ந்துள்ளது என்ற பொருளில் வந்துள்ளது. மூன்று தத்துவங்களும் இயற்கையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. ப்ரகிருதி ஜடமானது ஜீவாத்மா அறிவு வடிவுள்ளவன், அறிவுள்ளவனுக இருப்பவன், பரமாத்மா போல் நிறைந்த சக்தியோ, நிறைந்த ஞானமோ இல்லாதவன். இவனுக்குப் பரவுதலும் கிடையாது. ஜீவாத்மா அணுவாக ஒப்புக்கொள்ளப்பட்டதால் அவன் சரீரத்திற்குள் ஓரிடத்தில் இருந்து வருகிருன். மற்ற

இடங்களில் உணர்வு மூலம் பரவுகிருன். கடவுள் அப்படி இல்லை. எங்கும் பரந்து நிற்கும் அழிவில்லாத பொருள். பரமாத்மா என்ற இறைவன் அளவற்ற அறிவு, அளவற்ற இயல்பு உள்ளவனுகவும் மற்ற இரண்டையும் இயங்கச் செய்பவனுகவும் இருக்கிருன்.

அர்த்த பஞ்சகம்

தத்வத்ரயம் என்பதுபோல் 'அர்த்த பஞ்சகம்' என்று ஒருவகை நிரூபணத்தையும் ஆசாரியர்கள் சொல்லுகிருர்கள். அதன்படி ஐந்து பொருள்களை ஒவ்வொருவனும் தெரிந்துகொள்ளவேண்டும்.

அவைகளாவன:— அடையவேண்டிய ப்ரும்மத்தின் ஸ்வரூபம் (இறைநிலை) அதை அடையும் ஆத்மாவின் நிலை. பகவானை அடைவதற்கான "உபாயம்" (வழி) அடைந்தால் ஆத்மாவிற்கு ஏற்படக்கூடிய "பயன்" இதுவரை ஆத்மாவிற்கு அது கிடைக்காமல் செய்து கொண்டிருந்த "இடையூறு" என்று அர்த்த பஞ்சங்களை விவரிக்கிருர்கள். ஜீவாத்மாவைப் பற்றியும் பகவானைப் பற்றியும் தெரிந்துகொண்டு பகவானை விட்டு ஜீவாத்மா பிரிந்து நிற்பதற்கான காரணத்தையும் தெரிந்துகொண்டு அதை விலக்கிக் கொண்டு பகவானை அடைவதற்கான உபாயத்தைச் செய்து பகவானை அடைந்து மோக்ஷமாகிற பயனைப்பெறுகிருன் என்பது அர்த்த பஞ்சகத்தின் திரண்ட முடிவு.

தன்னைப்பற்றி அறிதல்

ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தில் ஏன் தன்னைப்பற்றித் தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்கு அடிப்படையான சில கருத்துக்களைத் தெரிவிக்கிருர்கள். அவைகளை நாம் கவனிப்போம். ஜீவாத்மா உலக வாழ்க்கையில் அனுபவிக்கும் சுகதுக்கங்களைஉணர்கிருன். இயற்கையில் பரமாத்மாவோடு ஸ்ரீவைகுந்தத்திலிருந்து பகவத்தநுபவம் பண்ணிக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருந்தவன்

ஏதோ ஒரு காரணத்தால் பகவானின் ஆணையை மீறி நடக்க, அதற்குத் தண்டனையாக பகவானை விட்டுப் பிரிந்து உலகத்தில் சரீரத்தை அடைந்து பிறந்து வாழ்ந்து பகவானை மறந்து உலக போகங்களையே போக்யமாக நினைத்து வாழுங்காலத்தில் ஒரு ஆசார்ய னுடைய ஸம்பந்தத்தைக் கொண்டு பெற்று உலகஸுகம் ஸுகமே இல்லை நச்வரமானது என்று தெரிந்து நித்ய மாகவும், பேரின்ப வடிவாகவும் உள்ள பகவானை அடைய உபாயத்தைச் செய்து சரீரம் போனபிறகு ப்ரகிருதி ஸம்பந் தத்தை அடியோடு விட்டு ஸ்ரீவைகுந்தம் வந்து பகவானை அடைந்து தான் இழந்த பேரின்பத்தை மறுபடியும் பெறு கிறான். ப்ரகிருதியோடுஇயல்பாகவேஉறவுள்ளவன்என்று நினைக்கிறான் அதனால் அல்லல்படுகிறான். இதை மறந்து தனக்கும் பகவானுக்கும் உள்ள இயற்கையான ஸம்பந் தத்தை அறிகிறான். விடுதலை அடைந்து பகவானை பெறுகிறான். இதைத்தான் நூல்கள் விளக்குகின்றன. ஆசார்யனும் விளக்கி உபதேசம் பண்ணுகிறான். அஞ்ஞா னத்தால் உடலையும் ஆன்மாவையும் ஒன்றுபடுத்தி நினைத்து கஷ்டப்படுகிறான். தேகம் வேறு ஆத்மா வேறு என்ற அறிவு இவனைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்கிறது

சுகம் என்றால் என்ன? துக்கம் என்றால் என்ன? என்று பகுத்தறிவோடு விசாரம் செய்கிறான். அதனால் அவன் உலக வாழ்க்கையில சுகமேயில்லை என்ற முடிக்கு வருகிறான். விஷயங்களிலிருந்து வரும் எந்தச் சுகமும் அழியக்கூடியதாக இருப்பதனால் அழிவில்லாத சுகத்தை அடைய நினைக்கிறான். அஞ்ஞானம் போய் விட்டால் தானாகவே ஞானம் உதயமாகிவிடும். அஞ் ஞானம் காரணமாகவே இவனுக்குப் பிறப்பு இறப்பு ஏற்படுகின்றன. ஒரு சரீரத்தை விட்டுவிட்டு வெளியேறு கிறான். மற்றொரு சரீரத்தை அடைகிறான். ஆத்மா நித்யமானவன். அவ்வப்போது ஒவ்வொரு சரீரத்தை எடுக்கிறான். பிறகு விட்டுவிட்டுப் போகிறான். ப்ரகிருதி தன்னுடைய வழியில் இயங்குவதால் இயற்கையில் நடக்

கும் காரியங்களைத் தன்மேல் ஏறிட்டுக் கொண்டு தான் செய்கிறேன் என்ற அஞ்ஞானத்தை அடைந்து தன்னை யும் சரீரத்தையும் ஒன்றுபடுத்திக்கொண்டு சரீரத்தைப் பாதுகாப்பதற்காகக் காரியங்களைச் செய்துகொண்டு இதன் விளைவாக இன்ப துன்பங்களை அடைந்து கஷ்டப் படுகிறான். இவ்விதம் சுகம் துக்கம் இரண்டும் உள்ள வாழ்நாளின் உண்மை புரியாமல் இருக்கும் காலத்தி லேயே ஒரு பிறப்பு முடிந்து விடுகிறது. தன்னைப் பற்றிய உண்மை நிலையை என்று தெரிந்து கொள்கிறானோ அன்று தான் சுக துக்கங்களைத் தாண்டினவனாக ஆகிறான். இதை விளக்கமாகத் தெரிந்துகொள்வதற்காக ஒரு ஆசாரி யரிடம் போகிறான். ஆசாரியன் அவனுக்குத் நூலில் உள்ள தத்துவ ஹித புருஷார்த்தங்களை உபதே சிக்கிறான். தத்துவம் என்ற சொல் முடிவான உண்மை குறிக்கும் பொருளை ஹிதம் என்றால் அதை அடையும் வழி. புருஷார்த்தம் என்றால் அதனால் ஏற்படக்கூடிய பயன்.

மனிதன் தெரிந்துகொள்ளவேண்டிய கருத்துக்களைச் சாத்திரங்கள் இவ்விதமே சுருக்கமாகக் குறிப்பிடுகின்றன. ஜீவாத்மா ஞானஸ்வரூபம். அவன் ஏதோ ஒரு காரணத் தினால் சரீரத்தை அடைந்து ஜடமான ப்ரகிருதிக்கு அடி மையாகி அது காண்பித்த வழியிலேயே சென்றுகொண்டு அது கொடுத்தவைகளை உண்டு வருகிறான். "நான்" "என்னுடையது" என்ற எண்ணத்தை அடைந்து ஈச்வரனை மறக்கிறான். உண்மையில் ஆத்மாவிற்கு உலக வாழ்க்கையில் ஆநந்தம் கிடையாது. ஏனென்றால் உலக வாழ்க்கையில் கிடைக்கும் ஆனந்தம் இயற்கை யோடு நின்றுவிடுகிறது.

இயற்கை, இயற்கையின் தொடர்பான பொருள் களால் கிடைக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணுமே தவிர, ஆத்மாவிற்கான ஆனந்தத்தை உண்டுபண்ணாது. ஆகவே அவனுக்கு உண்மையான ஆனந்தம் வேண்டு மானால் சிற்றின்பத்தைக் கொடுக்கும் பொருள்களை

மறத்து பேரின்பத்தை அடைய அவன் முயலவேண்டும். இப்பொழுது இயற்கையோடு சம்பத்தப்பட்டிருப்பதனுல் இங்கு சிற்றின்பம்தான் கிடைக்கும். பேரின்பம் கிடைக் காது. இதை விலக்கிக் கொண்டு பகவானை அடைய வேண்டும். பகவானுக்கும் ஆத்மாவிற்கும்தான் உண் மையான உறவு உண்டு. ஆத்மாவும், பரமாத்மாவும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். இருவருக்கும் அறிவு, ஆனந்தம் இரண்டும் பொதுவானவை. பகவானேடுகூட இருந்து அந்த ஆனந்தத்தை அனுபவிக்க ஆன்மா இட்டுப் பிறந்தவன். அதை மறந்து ஒரு புரியாத காரணத்தால் ப்ரகிருதியோடு சேர்ந்து அல்லல் படுகிருன். இந்த நிலை நீங்கி இயற்கை உள்ள சம்பந்தத்தை விட்டுப் பகவானை அடைந்து பேரின்பத்தை அடைய ஆசாரியன் தத்துவ ஞானத்தை உபதேசித்துப் பேரின்பத்தை அடைய வழி கோலுகிருன். இம்மூன்று தத்துவங்களும் தெரிந்துகொள்ளப்பட வேண்டியவை. மூன்று தத்துங் களும் பல விதமாக இருப்பவை. அவைகளைப் பற்றி விளக்குவோம். அவைகளில் முதலில் ஈசுவர தத்துவத் தைப் பற்றி விரிவாகக் கவனிப்போம்.

ஈசுவர தத்துவம்

ஈஸ்வர தத்துவத்தின் இலக்கணத்தை ப்ரம்ம சூத்திரக்காரர் "படைத்தல், காத்தல், அழித்தல் (சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம்) இவைகளைச் செய்பவன் ஈசுவரன்" என்று கூறுகிருர், ஈசுவர ஸ்வரூபத்தில் அடிப்படையான அம்சம் "ஸத்யம், ஞானம், அனந்தம், ஆனந்தம், அமலம்" என்னும் இவைகளே. இவை கள் ஸ்ரூபக நிரூபக தர்மம் என்று கூறப்படுகிறது. அதைத் தெரிந்து கொள்ளாவிடில், ப்ரும்மத்தைத் தெரிந்துகொள்ளமுடியாது. இவைகளைக் கொண்டு தமன் இறைநிலை உணரப்படுகின்றது. மற்ற எல்லா அம்சங்களும் இறைநிலைக்கு குணங்களாக அமைந் துள்ளன. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், இவைகளைச் செய்வது கூட இறைவனின் குணத்திஞல் ஏற்பட்டுள்ள

காரியமாக ஆகிறது. பகவானுக்குக் குணங்கள் உண்டு என்று ராமாநுஜர் அங்கீகரித்து அந்தக் குணங்கள் அவனுக்கு விசேஷமாக அமைந்துள்ளன என்கிருர். அவனிடம் அவைகள் பொதுவாக இருந்தாலும் முழு வதும் நல்ல குணங்களே இருந்து வருவதாகக் கூறப் படுகிறது. இந்தக் குணங்களும் கணக்கற்றன. இவை 'அனந்த கல்யாண குணங்கள்' என்று ராமாநுஜர் கூறுகிருர். குணங்கள் உண்டு என்று பொதுவாகச் சொன்ஞல் கெட்ட குணங்கள் சேர்ந்துவிடும் என்ற பயத்தால், கெட்ட குணங்கள் கிடையா என்று தனி யாகச் சொல்லப்படுகிறது. "ஹேயப்பிரத்யனீகம்" என்றும் சொல்லப்படுகிறது. உலக இயற்கையில் மனித னிடம் நல்ல குணங்களையும் கெட்ட குணங்களையும் பார்க்கிருேம். ஆகவே, பகவானுக்குக் கெட்ட குணங் கள் கிடையா என்று தனியாகக் குறிப்பிடுவதில் தவறு இல்லே. இவ்வித நல்ல குணங்கள் கணக்கற்றவை களாக இருந்தாலும் இவைகளில் சிறப்பானவை ஆறு குணங்கள் என்று ஒப்புகிருர்கள். ஞானம், பலம், ஐசு வர்யம், வீர்யம், தேஜஸ், சக்தி என்று இவைகள் சொல்லப்படுகின்றன. பகவானுடைய குணங்களுக்கு அளவில்லே என்று கூறிஞலும் ஞானம், சக்தி என்ற இரண்டு குணங்கள் முன்னிற்கின்றன. ஞானம் என்பது இயற்கை அளவில் உள்ள பகவானுடைய அறிவைத் தெரிவிக்கிறது. அறிவு வடிவில் பகவான் இருந்தாலும் அறிவு அவனுக்கு குணமாகவும் அமைந்துள்ளது. இது எப்பொழுதும் அளவற்றதாக இருப்பது.

அறிவு வடிவிலுள்ள அவன் அறிவாளியாகவும் இருக்கிருன். இது ஈசுவரனிடத்தில் எப்போதும் இருக் கும், ஒரே நிலேயில் உள்ளது. இதைச் செயல்படும்படிச் செய்யச் சக்தி ஆற்றல் வேண்டும். இந்த அறிவு ஆற்றல் இரண்டுக்கும் கட்டுப்பாடு இல்லாததிஞல் பகவான் அளவற்ற அறிவுள்ளவன் என்றும், அளவற்ற சக்தியுள்ளவன் என்றும் கூறப்படுகிறது. மனித உரு

வில் பகவானை ஒப்புக்கொண்டு அவனுக்கு அளவற்ற அறிவையும் அளவற்ற சக்தியையும் கொடுத்ததால் அவனுடைய பெருமை விளங்குகிறது. ஆன்ம வர்க்கங்கள் அவனையே அண்டி நிற்பதால் அவை களுக்கு இவ்வளவு பெருமை கிடையாது என்பதும் தெரிகிறது. அதனால் ஆத்மா பரமாத்மாவை நெருங்கி அடைந்து தான் தன் பேற்றைப் பெற வேண்டும். அதற்காகச் சாத்திரங்கள் பகவானுக்கும் பெருமைக்கான குணங்கள் எவ்வளவு இருந்தாலும் ஜீவாத்மா அவனை நெருங்குவதற்கு அடிப்படையான சில குணங்களையும் சொல்லுகின்றன. அவற்றில் தலை சிறந்து விளங்குவது 'எளிமை' (சௌணப்யம்) என்ற குலம். இதைப் பின்பற்றி சௌசீல்யம் (தாழ்மை பாராது எப்பொழுதும் கீழ்ப் படிபவர்களிடம் பழகுவது) வாத்ஸல்யம், காருண்யம் முதலான குணங்கள் வருகின்றன.

இறை நிலையின் குணங்களின் இரு கூறுகள்

இறை நிலையினுடைய குணங்களை இரு கூருக ஆசாரியர்கள் பிரித்துள்ளார்கள். ஒருவகைக் குணங்களுக்கு எம்பெருமானுடைய உயர்வோடு உறவு இருந்து வருகிறது. மற்றொரு வகைக் குணங்களுக்கு எம்பெருமானுடைய எளிமையோடு உறவு இருந்து வருகிறது. கடவுளுக்கு உயர்வு இல்லாது போனால் அவனை யாரும் மதிக்கமாட்டார்கள். எளிமை இல்லாமல் போனால் யாரும் அவனை நெருங்க மாட்டார்கள். ஜீவாத்மா பரமாத்மாவை அண்டியே நிற்பதனால் எம்பெருமானுக்கு பெருமையும் வேண்டியிருக்கிறது எளிமையும் தேவைப் படுகிறது.

சேஷ சேஷி பாவம்

மேலும் ராமாநுஜர் ஜீவாத்மா, பரமாத்மா உறவை சேஷ, சேஷி பாவம் என்று மெய், உயிர் என்ற உறவில் சொல்லுகிறார். இது பல கருத்துக்களை உட்கொண்டது.

நம் முடைய உயிரால் மெய் தாங்கப்படுகிறது. உயிரால் மெய் இஷ்டப்படி இயங்கச் செய்யப்படுகிறது உடலும் உயிரும் சேர்ந்து ஒரே பொருள். அவ்விதமே ஆன்மாவும் பரமாத்மாவும் ஒரே பொருள். பரமாத்மா சேஷி, ஆன்மா சேஷன்.

அதனுல் கடவுள் (தாரகனுயும்), தாங்குபவனுயும், இயக்குபவனுயும், மூலப்பொருளாகவும் இருப்பது வெளியாகிறது. இறைவனே மூலப்பொருள் என்பது ராமாநுஜருடைய கொள்கைகளில் ஒரு முக்கியமானது. இயற்கை ஜீவாத்மா இவைகள் இயற்கையில்வேறுபட்டிருந்தாலும், கடவுள் ஒன்றுதான் என்ற கொள்கையை நிலை நாட்ட ஜீவ வர்க்கங்களையும், ப்ரகிருதியையும் இறைவனேடு சேர்த்துவிடுகிருர்கள். இவை இரண்டும் சேர்ந்த கடவுள் ஒருவனே என்று கூறுகிருர்கள். ஆனுல் உயிர், மெய் உறவில் இவைகள் இரண்டும் பகவானுக்கு மெய்யாக இருந்து வருகின்றன. கடவுள் உயிராக இருந்து வருகிருர். ஒரு பொருள் ஒரே உருவத்தோடுதான் இருக்க வேண்டும். இந்த நிலையில் கடவுள் என்ற தத்துவம் ஒன்றுதான் என்ற தத்துவம் ஒருமையைச் சொல்ல ஆரம்பத்தால் கடவுள் ஒரே இயற்கையோடு இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனுல் அவ்விதம் இல்லை. கடவுளுடைய இயற்கை வேறு, ஆன்மாவினுடைய இயற்கை வேறு, ப்ரகிருதியின் இயற்கை வேறு. இவை தனியான தங்கள் இயற்கையை விடாமலே கடவுளுடைய அம்சமாக இருந்து வருகின்றன.

இவை இரண்டும் கடவுளுக்குச் சரீரம் என்று சொல்லும் காலத்தில் உலகத்தில் சரீரம் மனிதனுக்கு எப்படிப் பயன்படுகிறதோ, அவ்விதம் பகவான் இயங்க இவை உதவி புரிகின்றனவோ என்ற சந்தேகம் வருகிறது. உண்மையில் அப்படியில்லை. மெய் உயிரை அண்டி நிற்கிறது என்ற அடிப்படைக்காக மட்டும் தான் உயிர் மெய் உருவை ராமாநுஜர் சொல்லுகிருர். இவை இரண்டும் வேறுபட்ட இயற்கை உள்ளவைகளாக இருந்தாலும்

பகவானின் பங்காக இருப்பதனுல் பகவான் முழுப் பொருள் என்றும் இயற்கை ஆத்மா இரண்டும் இறைவனின் பங்குகள் என்றும் சொல்லுகிருர்கள். முழுவதான பொருளுக்குச் சேஷி என்று பெயர் சேஷி என்ற சொல் பல பங்குடைய ஒரே பொருளேச்சொல்லுகிறது.

ஜீவாத்மா, ப்ரகிருதி இரண்டும் வேறுபட்ட இயற்கையோடு உள்ள கடவுளின் பங்குகள். அவைகளில் ஜீவாத்மா அறிவுள்ளவன். இயற்கை அறிவில்லாதது. இரண்டையும் கடவுள் இயங்க வைக்கிருர். பொதுவாக ஜீவாத்மா, பங்கு என்ற முறையில் கடவுளின் அம்சமாக இருந்தாலும் அறிவுள்ளவன் என்ற முறையில் கடவுளுக்கு இவன் அடிமையாக இருக்கிருன். இது ஸ்வாமி தாஸ பாவமாக (யஜமானர்அடிமை) என்ற உறவாக மாறுகிறது.

தத்துவ ரீதியில் சேஷ, சேஷி என்று சொல்லப் பட்டாலும் அறிவுள்ளது என்ற முறையில் ஜீவாத்மா தாஸனுயும் பரமாத்மா ஸ்வாமியாயும் சொல்லப்படுகிருன். உலகத்தில் அடிமை தன் எஜமானனேயே அண்டி நிற்கிருன். எஜமானுடைய பேறே இவனுக்குப் பேறு இவனுக்குத் தனியான இருப்பு கிடையாது. தன் பேருக எஜமானன் இவனேப் பாதுகாக்கிருன். இவை போன்றக் கருத்துக்கள் கிடைக்க பொதுவாக இருந்த பங்கு என்ற கொள்கை ஜீவாத்மா விஷயத்தில் ஸ்வாமி, தாஸ பாவ மாக மாறுகிறது. பகவான் தன்னுடைய இயற்கையினுலும் ஸங்கல்பத்தினுலும் இவைகளேத் தாங்குகிருன். ஸ்வருபத்தினுல் தாங்குவது என்பது அவன் இல்லாவிடில் இவன் இல்லேஎன்ற நிலே ஏற்படுவது. சங்கல்பத்தினுல் தரிப்பது என்பது அவனுடைய விருப்பத்தைப் பொறுத்து இவைகளுடைய இருப்பு இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது. சேஷ, சேஷி பாவம் என்பது இயற்கை நிலேயில் ஏற்பட்டுள்ள கொள்கை.

பரமாத்மாவை ஸ்வாமியாகவும், ஜீவனே தாஸனுயும் கூறுகிருர்கள். அறிவுள்ளவர்கள். பண்பாடுள்ளவர்

என்ற நிலையில் இப்படி ப்ரகிருதி, ஆத்மா இவைகளைச் சரீரமாகக் கொண்ட முழுப்பொருள் படைப்புக்கு முன்னால் ஒன்றாகவே இருக்கிறது என்றும் படைப்புக்குப் பிறகு உலகமாக ஆகிவிடுகிறது என்றும் கூறுகிறார்கள். கடவுள் உலகமாக மாறினாலும் அவனுடைய இயற்கையில் மாறுதல்களே கிடையாது. ஸத்ய, ஞான, அனந்த ஆனந்த இயற்கையோடு படைப்பிலும் இருந்து வருகிறான்.

படைப்புக்கு முன்னும் பின்னும் இறைநிலை

ஆனால் படைப்பு என்பது ப்ரகிருதி ஜீவாத்மா இவைகள் சம்பந்தப்பட்ட வரையில் மாறுபட்ட கருத்தில் இருந்து வருகிறது. இயற்கை ஸம்பந்தப்பட்ட வரை படைப்பு என்பது இயற்கையின் உருவத்தில் ஏற்படும் மாறுதலைத்தெரிவிக்கிறது. ஜீவாத்மாஸம்பந்தப்பட்டவரை அறிவு அவன் வடிவாக இருப்பதால் படைப்பில் உருவ மாறுதல் கிடையாது. ஆனால் சிந்தனையிலேயே ஆன்மா மாறுதலை அடைகிறான். அவ்விதமே இறைவன், உருவை அடைந்து, மாறுதலை அடையாத ப்ரகிருதியோடும், சிந்தனையில் மாறுதல்களை அடையாத ஜீவாத்மாவோடும் இருப்பதுதான் ஸூக்ஷ்ம நிலை; இது படைப்புக்கு முன்னுள்ள நிலை. ப்ரகிருதியை உருவாக்கி மாறுதலையடையச் செய்து, ஜீவாத்மாவை ப்ரகிருதியோடு சேர்த்துச் சிந்தனையளவில் மாறுதலை அடையச் செய்து அதன் மூலம் தானும் மாறுதலை அடைவது படைப்பு. ஆன்மா ஒன்றில்லை, இரண்டில்லை கணக்கற்றவை. கணக்கற்ற ஆத்மாக்கள் எல்லாம் படைப்புக்கு முன்னால் கடவுளோடு நேரில் சம்பந்தப்பட்டு கடவுள் அம்சமாகவே (பங்காகவே) இருந்து வருகின்றன.

படைப்புக் காலத்தில் இவை தனியாக ஒரு சரீரத்தை அடைந்து நிற்கின்றன: சரீரத்தை அடைந்த பிறகு கடவுளுக்கும் தனக்கும் உள்ள உறவை மறந்து ப்ரகிருதி

யோடு தனக்கு ஏற்பட்டுள்ள உறவை மட்டும் ஆன்மா முக்கியமாகக் கொள்ளுகிறுன். ஆத்மாவின் அறிவில் இந்த மாறுதல் ஏற்படுவது ஆத்மா சம்பந்தப்பட்ட வரையில் படைப்பினுல் நிகழ்வதாகும். ப்ரகிருதி பலவித உருவத்தில் பலவித மாறுதல்களைப் படைப்பில் அடைகிறது. தனுபவளுதிகள் என்று இவை குறிப்பிடப்படுகின்றன. உபநிடதங்கள் படைக்கப்பட்டுள்ள பொருள் தோறும் பகவான் உள்ளே நுழைந்து இருந்துவருகிறுன் என்று கூறுகின்றன. உள்ளே நுழைந்தாலும் கூட பகவான் தன்னுடைய இயற்கையை விடுவதில்லை. உயர்ந்த வஸ்துக்களில் இருந்தாலும், தாழ்ந்த வஸ்துக்களிலிருந்தாலும் இடத்திற்குத் தகுந்தாற்போல் உள்ள ஏற்றத் தாழ்வுகளோ தோஷங்களோ பகவானை அண்டுவதில்லை. இந்த இயற்கையோடு பகவான் எல்லாப் பொருள்களிலும் இருந்து வருகிறுன். பொருள்களில் மாறுதல்கள் ஏற்படும்போதும் இவன் அவற்றோடு சென்றே வருகிறுன். பகவான் ஸ்வபாவத்தில் இயற்கைக்கு அப்பால் உள்ளவன். தன் இயற்கையை விடாமலே ப்ரகிருதியில் இருந்து வருகிறுன். பகவான் எந்தக் காலத்திலும் ஜீவவர்க்கம் ப்ரகிருதி இவைகளை விட்டு விலகி தனியாக இருப்பதில்லை. படைப்புக்கு முன்னுல் அவன் ஒருவனே இருக்கிறுன்.

'இயற்கையின் சூக்ஷ்மமும்' ஆத்ம வர்க்கங்களும் பகவானுடன் இருந்து வருகின்றன. படைப்புக்குப் பிறகு பிரகிருதி பெரிதாக ஆகிப் பரிணுமத்தை அடைகிறது. ஜீவாத்மா அதன் உள்ளே புகுகிறுன். பரமாத்மாவும் ஜீவனைப்பற்றிப் ப்ரகிருதியில் உள்ளே புகுகிறுன். பகவான் ப்ரகிருதிக்கு அப்பாலிருப்பதுபோல் ப்ரகிருதிக்குள்ளேயும் இருந்து வருவதால் உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் பகவானுகவே ஆகிவிடுகின்றன. பகவானுக்கு சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளுக்குத் தேவையான எல்லா குணங்களும் இருக்கின்றன. அந்த அந்தக் குணங்கள் அவ்வப்போது ப்ரகாசத்தை

அடைகின்றன. மற்ற குணங்களும் அவனிடம் இருந்தே வருகின்றன. அவன் இறைநிலையில் (சுபாச்ரயன்) இதற்கு எப்போதும் சுபமாகவே இருப்பவன் உபாஸிக்க தகுந்தவன் என்று பொருள்.

இறைவனின் உருவம்

பகவானுக்கு எப்போதுமே அழகான உருவம் உண்டு என்று ராமாநுஜர் கூறுகிறுர். ஆனுல் இந்த உருவம் ஞானனந்த ஸ்வரூபமானது, எம்பெருமானை விளக்கும் காலத்தில் ஸ்வரூப, ரூப, குண, விபூதி, ஐசுவர்ய என்று ஆசாரியர்கள் சொல்லுகிறுர்கள். ஸ்வரூபம் என்பது பகவானுடைய வடிவத்தைக்குறிக்கும். குணம் என்பது பகவானுடைய இயற்கையைக் குறிக்கும் ரூபம் என்று நல்ல குணங்களைக் குறிக்கும். விபூதி என்பது அவனுடைய மாண்பைக் குறிக்கும். ஐசுவர்யம் என்பது அவனுடைய செல்வத்தைக் குறிக்கும். இவ்விதம் உள்ள பகவான் உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கிறுன்.

சிருஷ்டி காலம்

அவ்விதமே சிருஷ்டி காலத்தில் பொருள்கள்தோறும் உட்புகுந்து உலகமாக ஆகி நிற்கிறுன். உலகம் முழு வதும் அவனுகவே தோன்றுகிறது. ப்ரகிருதி ஜீவாத்மா இவை இரண்டும் அவனையே அண்டி நிற்பதால், அவை களுக்கு தனி இருப்பு கிடையாது. பகவான் எதற்காக உல கைப் படைக்கிறுன்? எதற்காக உலகைப் பாதுகாக் கிறுன்? எதற்காக உலகை அழிக்கிறுன்? எல்லாம் அவனே, அவனுக்காகவே செய்துகொள்கிறுன். இது ஸ்ரீ வைணவக் கொள்கைகளில் அடிப்படையானது. ப்ரகிருதி ஜடமானதினுல் தானுகவே இயங்க முடியாது. ஜீவாத்மா ப்ரகிருதி இரண்டையும் கருவியாகக்கொண்டு கடவுள் விளையாடுகிறுன். உலகத்தைத் தனக்கு விளை யாடுமிடமாக பகவான் வைத்துக்கொண்டிருப்பதினுல் இந்த உலகம் 'லீலா விபூதி' என்று சொல்லப்படுகிறது.

போக விபூதி

இவ்விதமே தனக்கு மட்டுமே என்று வகுத்துக் கொண்டு ஓர் உலகத்தை வைத்துக்கொண்டிருக்கிறுன். அது அவனுக்கு 'போக விபூதி'; அதுதான் ஸ்ரீவைகுந் தம் எனப்படுகிறது. மனித உருவில் இறையை ஆசாரியர் கள் ஒப்புக்கொண்டு இருப்பதால் தன் இயற்கைக்குத் தகுந்தாற்போலுள்ளமனைவி பரிவாரங்களோடுகூட இவன் அங்கு இருந்து வருகிறுன். பகவான் உருவம் அங்கு இருப் பவருடைய உருவம் இவை ஞானனந்த ஸ்வரூபமாக உள்ளவை. பகவானுக்கு எந்தத் தத்துவம் இயற்கை யாக அமைந்துள்ளதோ அதே இயற்கையிலேயே வைகுந்தமும் அமைந்துள்ளது.

உபய விபூதி நாயகன்

இந்த இரண்டு உலகங்களுக்கும் இயக்குபவனுகக் கடவுள் இருப்பதனுல் கடவுளை 'உபய விபூதி' நாயகன் (இரண்டு வகை உலகமுடையவன்) என்று ஆசாரியர், கள் சொல்லுகிறுர்கள். இந்த உலகத்தில் நடக்கும் காரியங்கள் ஜீவாத்மா அவன் செய்த புண்ணிய பாபங் கள் இயற்கையின் நியதி இவைகளைப் பின்பற்றி நிற்ப தனுல் இங்கு நடக்கும் எந்தக் காரியமும் பகவானுக்கு லீலா ரஸத்தையே உண்டுபண்ணுகிறது.

அவதாரம்

இப்படி உலகத்தோடு விளையாடுவதோடு மட்டும் நிற்காமல் தன்னுடைய இயற்கையை விடாமலே தானும் பலவித மாறுதல்களை அடைகிறுன். இதுதான் அவதாரம் என்று கூறப்படுகிறது. அவதாரம் என்பது சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளைச் செய்வதோடு தானும் பல உருவங்களை எடுத்துக்கொண்டு பல பெயர்களில் பிறப்பதாகும். இந்த அவதாரங்கள் ஐந்து விதமானவை. இவை பர, வ்யூக, விபவ, ஹார்த்த அர்ச்சை என்பன. அவதாரம் என்பது பகவான் கருணை காரணமாகச் செய் யும் கார்யம். பகவானுடைய கருணைதான் ஜீவாத்மா

விற்கு வேண்டியது. கருணை காரணமாக ஏற்படும் அவதாரங்கள் ஜீவ வர்க்கத்தைப் பாதுகாக்கவே ஏற்படு கின்றன. ஸ்ரீவைகுந்தத்தில் தனியாக இருந்த கடவுளைக் கருணை விண்ணிலிருந்து இறங்கச் செய்கிறது. அதனு லேயே பகவானுடைய செயல்களில் பாதுகாத்தல் என்பது முக்கியமாக இருந்துவருகிறது. பகவான் ரட்சிக் கிறுன். தானுகவே தனக்காகவே ரட்சிக்கிறுன். எல்லோ ரையும் ரட்சிக்கிறுன். எப்போதும் ரட்சிக்கிறுன். எல்லா இடங்களிலும் ரட்சிக்கிறுன். எல்லா வழிகளிலும் ரட்சிக் சிக்கிறுன். 'ரக்ஷணத்தில்' ஏற்படக்கூடிய பல வழி களாலும் ரட்சிக்கிறுன் என்று கூறப்படுகிறது. எம்பெரு மானுடைய காரியங்களில் ஜீவரக்ஷணம் தான் தலை சிறந்து விளங்குகிறது. ஜீவாத்மா தன்னை எம்பெருமான் பாதுகாக்க உட்பட்டாலும் சில சமயங்களில் அதை அவன் அங்கீகரிக்காமலிருக்கிறுன்.

எம்பெருமான் ரட்சிக்கத் தயாராக இருந்தும், அதை அவன் பயன்படுத்திக்கொண்டிருக்கத் தயாராக இல்லை. இதனுல் அவனைத் திருத்தவேண்டிய அவசியம் ஏற்படு கிறது. அங்கு பகவான் அவனை திருத்திப் பணி கொள்ளு கிறுன். அதை 'நிக்ரஹம்' என்ற சாத்திரங்கள் கூறு கின்றன. ஜீவாத்மா செய்துள்ள தவறுதல்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டிய அவசியம் வருகிறது. பகவானுடைய குணங்களில் சர்வஞ்ஞத்வம், சர்வேசுவர ரத்னம், ஸர்வ சக்தி மத்வம் இவை ஜீவாத்மாவைத் தண்டிப்பதற்கும், அநுக்ரஹம் பண்ணவும் பயன்படு கின்றன. ஜீவாத்மாவைப் பகவான் தண்டிக்கலாமா? தண்டிக்கவேண்டியது அவசியம்தானு? என்ற கேள்வி களுக்குப் பலவிதமான சமாதானங்கள் கூறப்படுகின்றன. கருணை என்பது தலைப்புக்கால் தெரியாதது அன்று. ஆனுல் கருணை என்பது பகவானுடையதாக இருந்தாலும் இயற்கை நியதிக்குட்பட்டே ஆகவேண்டும். இந்த நிலையில் தன் கருத்தை ஆன்ம வர்க்கம் மீறி நடந்தால் அவர்களை பகவான் தண்டிக்க வேண்டியிருக்கிறது.

அவனிடத்தில் கட்டளையை மீறுபவர்களிடத்தும் கருணை யைக் காண்பிப்பது ஒப்புக்கொள்ளக் கூடியதேயில்லை. தண்டனை கொடுப்பதும் தயையின் விளைவாக ஏற்பட்டது என்றுதான் ராமாநுஜர் கூறுகிறார். ஆனால் பின் வந்துள்ள ஆசாரியர்கள் பகவானை அண்டினவர்கள் தப்புக்களைச் செய்தாலும் தண்டிக்கமாட்டான் என்று கூறுகிறார்கள்.

பகவான் 'தண்டநாயகன்' ஆனாலும் அளவற்ற கருணையுள்ளவன். எந்த விஷயத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கின்றனவோ அங்கு பகவான் தயை கொண்டு இயங்குகிறானா? தண்டனைத் தத்துவத்தைக் கொண்டு இயங்குகிறானா? என்ற கேள்வி பிறந்த காலத்தில் பகவான் தண்டனை தத்துவத்தைப் பயன் படுத்துவதே கிடையாது. அது விஷயத்தில் தான் பயன் படுகின்றது. அடியார்களிடத்தில் அவர்கள் தவறுதல் கள் செய்தாலும் பகவான் அவற்றைப் பொருட்படுத்துவ தில்லை. உண்மையான அடியவர்கள் தவறுதல்களையே செய்யமாட்டார்கள். தவறுதல்செய்தாலும் சில தண்டனை யுடன் மன்னித்து விடுகிறான் என்றும் கூறுகிறார்கள். ஒரு சிலர் அடியார்கள் தவறு செய்வதைப் பகவான் வரவேற்கிறார் என்றும் கூறுகிறார்கள். ஏனென்றால் இது பகவானுடைய ஒரு கருணைக்கு உரைகல்லாக விளங்கு கிறது. வேறுவிதமாகச் சொன்னால் பகவானுடைய கருணையின் பெருமைக்கு அடியார் செய்யும் தவறுகள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன என்றும் கூறலாம். கருணை என்பது குணத்தையோ தோஷத்தையோ எதிர் பாராமல் இயற்கையாக இயங்குவதுதான்

பரம்

கருணையைக் காரணமாகக் கொண்டு பகவான் செய்யும் அவதாரங்களில் முதல் அவதாரம் 'பரம்' என்ற அவதாரம் ஆகும். இதற்கு "உயர்ந்தது" என்று பொருள். இது பகவானுடைய போக வீபூதியான ஸ்ரீ வைகுந்தத்திலேயே இருப்பது. இங்கு பகவான்

திவ்யமான ரூபத்தோடு இருந்து வருகிறார். "ஸ்ரீ" "பூமி" "நீளா" போன்ற மனைவிகளோடு இருந்து வருகிறான். இந்த உருவம் பகவானுக்கு எப்போதும் இருக்கும். நித்ய சூரிகளும் பூமியிலிருந்து வைகுந்தத்தை அடைந்துள்ள பக்தர்களும் அனுபவிப்பதற்காகப் பகவான் எடுத்துள்ள திருமேனி இது.

வ்யூகம்

இரண்டாவதாக உள்ளது வ்யூகம். இங்கு பகவான் பிரிந்து நிற்கிறான். மூன்று விதமாகவோ நான்கு விதமாகவோ நிற்கிறான். இவைகளுக்கு வாசுதேவ சங்கர்ஷண, ப்ரத்யும்நன், அநிருத்த என்று நான்கு பெயர்கள் உண்டு. வாசுதேவனுக்கு தனித்த நிலை கிடையாது என்று வைத்துக்கொண்டு மற்ற மூன்று வ்யூகங்கள் மட்டும் உண்டென்று சொல்லுவார்கள். இந்த வ்யூகங்கள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்வதற்காகப் பகவான் எடுத்த ரூபம். இந்த மூன்று வ்யூகங்களில் ஆறு குணங்களும் இருந்து வருகின்றன. ஆனால் ஒவ்வொரு ரூபத்திற்கும் இரண்டு இரண்டு குணங்கள் முக்கியமானவைகளாக இருக்கின்றன. ஞானம், பலம் என்பன சங்கர்ஷணனிடத்தில் முக்கியம், ஐச்வர்யம், வீர்யம் இவை ப்ரத்யும்நனிடத்தில் முக்கியம், சக்தி, தேஜஸ் என்பன அநிருத்தனிடத்தில் முக்கியம். சங்கர்ஷண உருவம் உலகை அழிப்பதற்காக ஏற்பட்டது. அநிருத்த உருவம் பாதுகாப்பிற்காக ஏற்பட்டது. இவைகள் புராணங்களில் சொல்லப்படும் ப்ரம்மா, விஷ்ணு ருத்திரன் என்ற மும்மூர்த்திகள் போன்றவை. கேசவன் முதலான பன்னிரண்டு திருவுருவங்களும் வெவ்வேறு வழியில் வெவ்வேறு நோக்கமுள்ள வ்யூகங்கள்.

விபவம்

விபவாவதாரம் என்ற அடுத்த அவதாரம் முப்பதுக்கு மேற்பட்டுள்ளன. மச்ய, கூர்மாதி அவதாரங்கள் ஒரு

குறிப்பிட்ட நோக்கத்தோடு விஸ்தாரமான இதிகாசத்தோடு இருப்பதால் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. பகவான் தன்னை அண்டினவர்களைக் காப்பாற்றுவதற்காகத் தேவர்களிடையும், மனிதர்களிடையும், விலங்குகளிடையும் பிறக்கிறான். அந்த அந்த அவதாரத்திற்குத் தகுந்தாற்போல், அந்த அந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் வேண்டின குணங்களை வேண்டியபோது மறைத்தும், வேண்டியபோது வெளியிட்டும் விபவம் நடத்தும். இப்படியே இந்த அவதாரங்களுள் உட்பிரிவு கணக்கற்றவை. சில இடங்களில் பகவான் உருவத்தை மட்டும் எடுக்கிறான். ஆனால் சில இடங்களில் ஜீவாத்மாவில் தன் சக்தியை மட்டும் இறங்கச் செய்கிறான். இவை எல்லாமே விபவாவதாரத்தைச் சேர்ந்தவைதான்.

அந்தர்யாமி

யோகிகள் த்யானம் செய்து தங்கள் ஹிருதயத்தில் காணவேண்டும் என ஆசைப்பட்டு வேண்டினால் அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்ற அவர்களுடைய ஹிருதயத்தில் அவர்களுக்கு மட்டும் புலப்படும்படி ஒரு உருவத்தை எடுக்கிறான். அதுதான் அந்தர்யாமி அவதாரம் என்பது. சர்வந்தர்யாமியாய் உள்ள திவ்யாத்ம ஸ்வரூபத்தில் ஈடுபட நினைப்பவர்களுக்கு இது இழியும் துறை.

அர்ச்சை

பர, வ்யூக, விபவாதிகளில் இறைவன் அடியார்கள் விரும்பியபடி மண்ணாலோ, பொன்னாலோ, கல்லாலோ, உலோகத்தாலோ அவர்கள் செய்துவைத்த உருவத்திற்குத் தகுந்தாற்போல் ஒரு உருவத்தை எடுத்து அங்கு இறங்கி வருகிறான். இதுதான் "அர்சாவதாரம்" என்பது. மனோ வாக்குக் காயங்களால் நாம் செய்யும் வழிபாட்டை (கைங்கர்யத்தை) நேருக்கு நேராகப் பெற்றுக்கொள்வதற்காக இந்த அவதாரம்ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீட்டிலுள்ள பிம்பங்களிலும் இது இருப்பது ஆலயங்களிலும் இது இருந்து வருகிறது. இங்கு பகவான் எடுக்கும் உருவங்களுக்கு அடிப்படையாக நிற்பது சுத்தஸத்வம்தான். பார்ப்பதற்கு ஓர் உருவாகத் தோன்றினாலும் இது ஞானனந்தமயமானது.

ஈசுவர லீலை

அவதாரங்களைச் செய்வதற்கு ஈசுவரனுடைய விருப்பமே காரணம். தர்ம ரட்சணம் பண்ண வேண்டிய காலமே காலம். நல்லவர்களைப் பாதுகாப்பதும், கெட்டவர்களை அழிப்பதும் இவைகளுக்கு நோக்கம்- இப்படி ஈசுவரன் நல்ல குணங்களைக் கொண்டு பல கார்யங்களைச் செய்கிறார். இவற்றை லீலை என்று நாம் சொல்லுகிறோம். கல்யாண குணங்களைக் கொண்ட கடவுள் " பிறர்நோவு கண்டால் 'ஐயோ' என்று இரங்கி அவர்களுக்கு எப்போதும் ஒத்த நன்மையே சிந்தித்து தனக்கேயாயிருத்தல், தனக்கும் பிறருக்கும் பொதுவாயிருத்தல் செய்யாதே. நிலா தென்றல், சந்திரன், தண்ணீர்போல பிறருக்காகத் தன்னை அண்டினவர் பக்கத்தில் பிறப்பு, அறிவு, ஒழுக்கம், ஆற்றல் இவைகளால் உண்டான தாழ்மையைப் பாராதே தஞ்சம் இல்லாதபோது தஞ்சமாய் " சரியானது செய்தும் " விரும்பப் பட்டவைகளைத் தலைக் கட்டியும் முன்பில்லாதவைகளையும் உண்டாக்கியும் அவரவர்களுடைய சொந்த சொத்துப் போலிருக்கத் தன்னையும் தன் உடைமையையும் வழங்கி அண்டினவர்களுடைய காரியத்தைத் தான் தலைக்கட்டினால்தான், தான் செய்ய வேண்டியவற்றைச் செய்தவனாகக் கருதி, தான் செய்த நன்மைகள் ஒன்றையும் நினையாது, காருண்யத்தையும் தான் நினையாது, அவர்கள் செய்த சிறுசிறு நற்காரியங்களையே நினைந்து, அநாதகாலமாக நிற்கும் வாசனையோடு இருக்கிற ரணங்களை மறுக்கும்படி எல்லாத் தசைகளிலும் இனியவனாய், குற்றங்களை நினையாது யார் குற்றங்களைச் சுட்டிக் காட்டினாலும் அவற்றை மதித்து அவருடைய அவருடைய தோஷங்களை போக்கியமாகக் கொண்டு

அல்லது தோஷங்களை காணுமல் அவருடைய பங்கில் 'கரணத்ரயத்தாலும்' செவ்வியனுய், பிரிந்தால் அவர் களுடைய விசனம் குளப்படி என்றுதான் ஈடுபட்டு, அவர்களுக்குப் பாங்காகத் தன்னைத் தாழவிட்டு, அவர் கள் தன்னைக் கட்டவும் அடிக்கவும் ஆகும்படி எளியனுய், அன்று ஈன்ற கன்றுக்குத் தாய் இரங்கி முன்னிலைக் கன்றையும் புல்லிட வந்தவர்களையும். கொம்பிலும் குளம் பிலும் ஏற்குமாப்போலப் பெரிய பிராட்டியாரையுப், சூரி களையும் விட்டுச் சிநேகிப்பான். இவன்தான் சர்வ ஜகத் திற்கும் காரணமாகிறுன். அவித்யை, கர்மம் முதலான வையில்லாமல் தன்னிச்சையிலேயே தன் சங்கல்பத்தா லேயே காரணமாகிறுன். அல்லது அவித்யை கர்மம் இவைகளை வியாஜமாக கொள்ளுகின்றுன்.

இதுதான் அர்த்தமற்று இருக்கும். இதற்குப் பிரயோஜம் கேவலலீலை. ஸம்ஹாரமும் லீலைதான். இவன்தானே ஜகத்தாகப் பரிணமிக்கையாலே உபாதான முமாயிருக்கும் கடவுளின் இயற்கையில் மாறுதல் இல்லாத தால் "நிர்விகாரம்" என்னக் குறையில்லை. சேர்ந்த நிலையிலேயே ஒன்றை முன்னிட்டுக் கொண்டுதான் பரிணமம் உண்டாகிறது. ஒரு சிலந்திக்கு உண்டான ஸ்வபாவம் சர்வ சக்திக்கு கூடாது ஒழியாதது ஏன்? பகவான் தான் படைத்த உலகைப் பாதுகாக்கும் காலத் தில் படைக்கப்பட்ட பொருள்களில் பயிருக்கு நீர் நிலை போல் அனுகூலமாகப் பிரவேசித்துச் சர்வ ரட்சணம் பண்ணுவது, ஸம்ஹாரமாவது அவிநீதனுன புத்திரனைப் பிதா விலங்கிட்டு வைக்குமாப் போலே விஷயாந்திரங் களிலே கை வளர்க்கிற காரணங்களைக் குலைத்திட்டு வைக்கை."

மகாலக்ஷ்மி

ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தில் பகவானைப் போல் பகவானுக்குப் பத்னியாக மகாலெக்ஷ்மியையும் ஒப்புக் கொண்டிருக்கிறுர்கள். பூமி நீளா இவர்கள் மகாலக்ஷ்மி

யின் அம்சங்கள். ராமானுஜர் தம்முடைய ஸ்ரீ பாஷ்யத்திலும் கீதா பாஷ்யத்திலும் ஸ்ரீயைப் பற்றித் தான் கூறுகிறார். மகாலக்ஷ்மிக்குத்தான் ஸ்ரீ என்பது பெயர். ஆசாரியர்கள் ஸ்ரீ என்ற பெயருக்கு முக்கியம் கொடுத்துப் பேசுகிறார்கள். ஸ்ரீய: பதி என்று பகவானைக் குறிப்பிடுவதில் அவர்களுக்குத் தனியான சந்தோஷம். தமிழ் மொழியில் உயர்ந்த தகுதியைச் சேர்ந்த பெண் என்ற முறையில் பிராட்டியார் என்று கூறுகிறார்கள். பெண்ணான ஸ்ரீயும் புருஷனான நாராயணனும் தம்பதிகள். புருஷன் மனைவி என்ற நிலையிலிருக்கிறார்கள். உலகிலுள்ள தம்பதிகள் போல் இவர்கள் இல்லை என்பதைக் காண்பிக்கத் திவ்ய தம்பதி என்று குறிப்பிடுகிறார்கள். வேதத்தில் சொல்லும் யாகங்களைக் கணவனும் மனைவியுமாக இருந்து தான் செய்யவேண்டும். அவ்விதமே உலக காரியங்களில் இவர்கள் இருவர்களும் ஈடுபடுகிறார்கள். தம்பதி என்ற கருத்து ஆண் பெண் இருவருக்கும் பிரிக்க முடியாத நிலைமை இருப்பதைத் தெரிவிக்கிறது. அவ்விதமே இவர்கள் பிரித்துபேச முடியாதவர்கள். இருவரும் சேர்ந்து ஈஸ்வரர்கள். பகவானுக்குள்ள விசேஷங்கள் எல்லாம் இவளுக்கும் உண்டு. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களிலும் இவளுக்குச் சம்பந்தம் உண்டு. உலகில் பரவி நிற்பதிலும் இவளுக்குச் சம்பந்தம் உண்டு. ஆன்ம வர்க்கங்களை ரட்சிப்பதிலும், மோட்சத்திற்கு உபாயமாக இருப்பதிலும் இவளுக்குச் சம்பந்தம் உண்டு.

புருஷகாரமும் ஸ்ரீ என்பதன் பொருளும்

சில ஆசாரியர்கள் பகவான்போல் இவள் விபுவாயும், ஈசுவரியாயும், உபாயமாயும், இருக்க முடியாது என்று கருதி இவளுக்குப் பத்நித்துவம் இருந்தாலும் இவள் புருஷ காரணமாகத்தான் இருக்க முடியும் என்று கருதுகிறார்கள். புருஷகாரம் என்பது கடவுளுக்கும் ஆன்ம வர்க்கத்திற்கும் நடுவில் நின்று பரிந்து பேசுவது. ஸ்ரீ இல்லாமல் போனால் ஆத்ம வர்க்கத்திற்குக் கதியே

கிடையாது. ஸ்ரீ என்ற சொல்லுக்கு ஆறுவிதமான பொருள்களை ஆசாரியர்கள் தெரிவிக்கிறார்கள். ஆன்ம வர்க்கங்களின் குறைகளைக் காது கொடுத்துக் கேட்கிறாள். கேட்டவைகளைப் பகவான் கேட்கும்படிச் செய்கிறாள். அவளை அண்டினவனின் பாபத்தை போக்கடிக்கிறாள். அவளுடைய சேர்க்கையால் உலகம் குணத்தையடைகிறது. உலகத்தார் அவளை ஆச்ரயிக்கிறார்கள். அவள் எம்பெருமானை அண்டி நிற்கிறாள் என்பது முதலான கருத்துக்களைத் தெரிவித்துக் கடவுளுக்கும் மனிதனுக்கும் நடுவில் இருந்துகொண்டு மாதாவான ஸ்ரீ எப்படி உதவுகிறாள் என்ற கருத்தை விளக்குகிறார்கள்.

புருஷகாரத்துக்கு உரிய குணங்கள்

ராமாயணம் புருஷகாரமாக அமைந்துள்ள தேவியின் பெருமையை வெளியிடுகிறது என்று கருதுகிறார்கள். சீதை என்பவள் மகாலக்ஷ்மியின் அவதாரம். ஸ்ரீ புருஷகாரமாக ஆனால் மூன்று குணங்கள் வேண்டும். ஒன்று க்ருபை, இரண்டாவது பாரதந்தரியம் மூன்றுவது அனந்யார்ஹத்துவம். க்ருபை — பிறருடைய துன்பத்தைப் பொருக்காமை, பாரதந்தரியம் என்பது பிறரை அண்டியே நிற்பதைக் குறிக்கும், அநந்யார்ஹத்துவம் என்பது பகவானைத் தவிர வேறு எவனுக்கும் உரிமை பூணாமல் இருப்பது. ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிக் கஷ்டப்படுகிற ஜீவ வர்க்கங்களை ஈச்வரனோடு சேர்ப்பதற்கு வேண்டிய முயற்சி எடுக்கக் க்ருபைவேண்டும். சுதந்திரனாக உள்ள ஈசுவரனைத் தன் வயமாக்குவதற்காகப் பாரதந்த்ரியம் வேண்டும். நம்மை ஒழிந்த ஒரு விஷயத்துக்கு உரித்தானதாக இல்லாமல் நமக்காகஅதிசயகரமாயிருக்கும் பொருள் என்று அவன் நினைக்கும்படி அநந்யார்ஹத்வம் வேண்டும். ராமாவதாரத்தில் மூன்று தடவை ஸீதை ராமனை விட்டுப் பிரிந்தது, இந்த மூன்று கருத்துக்களையும் வெளியிடவே என்பது உணரப்படும். முற்படப் பிரிந்தது க்ருபையை வெளியிடுவதற்காக, நடுவில் பிரிந்து

பாரதந்த்ரியத்தை வெளியிடுவதற்காக, கடைசியில் பிரிந்தது. அநந்யார்ஹத்துவத்தை வெளியிடுவதற்காக, சேர்க்கையிலும் பிரிவிலும் புருஷகாரத்துவம் தோன்று கிறது. சேர்ந்திருக்கும் காலத்தில் ஆன்மவர்க்கங்களிடம் அபிமுகமாக இருக்கவேண்டும் என்று விமுகனை எம் பெருமானை திருத்தும். விச்லேஷ தசை சேதனனைத் திருத்தும். இருவரையும் உபதேசத்தாலே திருத்தும் பிராட்டியினுடைய உபதேசத்தைக் கேட்டுஜீவாத்மா, பரமாத்மா இவ்விருவருடைய கர்ம பார தந்திரியம் குறை யும். உபதேசத்தாலே மீளாதபோது சேதனர்களை அரு ளாலே திருத்தும். ஈச்வரனை அழகாலே திருத்தும். தோஷத்தையும் குறை ஹானியையும் பார்த்து உபேட்சி யாமல் அங்கீகாரத்திற்கு அவை தன்னையே பச்சையாக் கிக்கொள்ளும், அதாவது தன்னிடத்திலுள்ள தோஷங் களையும் குண ஹானியையும் பார்த்துப் பகவானை விட்டு விலக ஆத்ம வர்க்கம் நினைக்கும் காலத்தில் இதையே ஸாதனமாகக் கொண்டு பகவானுடைய அங்கீகாரத் திற்கு வழிகோலும் வாத்ஸல்யம் தாயான ஸ்ரீயிடம் பூர்ண மாக வெளியாகிறது.

ஆன்மவர்க்க நிலை

''பிறப்பு மாறுதல் அழிதல் இவை இல்லாதவன் பகவானுல் ஏவப்படுபவன் அணு, உருவில்லாதவன், தாங்கப்படுபவன். சேஷன் பகவானுக்கு அடிமை. இயற்கையில் கர்த்தா இல்லை. ஆனுல் ப்ரகிருதி சம்பந் தம் ஏற்பட்டதும் கர்த்தாவாக ஆகிருன். அவனுடைய அறிவு ஈசுவரனுல் இயக்கப்படுவதால் இவனுடைய கர்த்துருத்துவம், ஈசுவராதீனம். இவன் கர்த்தாவாக இருந்தாலும், ஈசுவரனுல் ஏவப்பட்டுத்தான் காரியங் களைச் செய்கிருன். சேதனர்களுடைய புத்திப் பூர்வ மான ப்ரயத்னத்தை அபேட்சித்து ஈசுவரன் அனுமதி பண்ணுகையாலே ஒவ்வொரு காரியத்திலும் அதனுல் ஏற்படும் விளைவுகளிலும் இவனுக்கே பொறுப்புண்டு. இவன் ஒரு சரீரத்தை எடுப்பதுதான் பிறப்பது என்பது. ஒரு சரீரத்தை விடுவதுதான் இறப்பு என்பது.

இவனுடைய அறிவு உலக வாழ்க்கையில் குறுகினதாக நிற்கும். மோட்ச தசையில் இவை விரிவடையும். பகவானுக்குத் தாஸபூதனான இவன் ஆணுமல்லன், பெண்ணுமல்லன். எடுக்கும் சரீரத்தைப் பின்பற்றி இவனை ஆண் என்றும் பெண் என்றும் சொல்லுகிறோம்.

ஆன்மாவின் மூன்றுவகை

ஆன்மாக்கள் மூன்று விதமானவர்கள். பத்தன், முக்தன், நித்யன் என்று இவர்கள் வகுக்கப்படுவர். ஸம்ஸாரி சேதனர்கள் பத்தர்கள்; பகவானுடைய கருணையினாலே ப்ரகிருதி சம்பந்தத்தை விலக்கிக்கொண்டு, மோட்சத்தை அடைந்தவர்கள் முத்தர்கள். ஸ்ரீவைகுந்தத்திலேயே நித்யமாக இருப்பவர்கள் நித்யர்கள். பத்தர்கள் தாங்கள் செய்த புண்ணிய பாவத்திற்குத் தகுந்தாற்போல் சுக துக்கங்களை அனுபவிப்பார்கள். இவன் சரீர சம்பந்தத்தை அடைந்தால் அஞ்ஞானத்தை அடைந்து அவனால் கர்மாக்களைச் செய்து செய்து பழக்கம் ஏற்பட்டு அந்த வாசனையிலேயே பிறப்பை அடைந்து கஷ்டப்படுகிறான். பகவானோடு கூட இருந்து பகவானை அனுபவித்துக்கொண்டிருந்தவன் அநாதியான கட்டளையை மீறினது காரணமாகப் பகவந் நிக்ரஹத்திற்கு இலக்காகி இவனுடைய பரந்த ஞானம் குறுகிவிடுகிறது. ஒரு சரீரத்தை விட்டுப் புறப்படும்போது புண்ணிய பாபங்களுடன் சேர்ந்து புறப்படுகிறான். புண்ணிய பாபம் செய்தவர்கள் மேலுலகத்திலும் கீழுலகத்திலும் சென்று அவைகளின் பலனை அனுபவித்துப் புண்ணிய பாப சேஷத்துடன் மறுபடியும் இங்கே வந்து பிறக்கிறார்கள். மோக்ஷோபாயத்தைச் செய்தவர்கள் மறுபடியும் இங்கு வந்து பிறப்பதில்லை.

பிரகிருதி

ப்ரகிருதி என்பது ஜடமான உலகத்திற்கு மூலமாக இருப்பது. அதற்கு சத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று

குணங்கள் உண்டு. இவை சமமாக இருந்தால் ப்ரளயம் என்று கூறுகிறுர்கள். ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் சிருஷ்டி என்று சொல்லுகிறுர்கள். இது மகதம் அகங் காரம் ஐந்து "தன்மாத்திரைகள்" இவைகளாக வளர்ந்து மனிதனுடைய இந்திரியங்கள் மனம் சரீரம் இவையாகப் பரிணமித்து வெளியுலகமாகவும் பரிணமிக்கிறது. இது ஈசுவரனுக்கு லீலா ரஸத்தை உண்டாக்குகின்றது. இது இயற்கையில் அசேதனம். உருவ மாறுதல்களைப் பலவிதமாக அடைவது. அவனவனுடைய புண்ணியத் திற்குத் தகுத்தாற்போல் பல பொருளாக மாறி நிற்பது. இது ஸ்தூல திருஷ்டியில் மாறுதல் அடைந்தாலும் சூக்ஷ்ம திருஷ்டியில் அவ்விதம் அவ்வியக்தம் என்ற முறையில் நித்யமாகவே இருக்கும். இந்த நிலையிலேயே இது பகவானுக்குச் சரீரமாக அமைந்து நிற்கிறது. சுத்தஸத்வம் தனியான பொருளென்று ஆகமங்கள் கூறுகின்றன. அந்த வழியில் இதற்கு முக்குணங்கள் கிடையா.

இது பரிணாமத்தை அடையக் கூடியது. இது பகவா னுக்கு உரித்தான உலகத்தில் மண்டப, கோபுர, ப்ராகா ராதி உருவத்தில் மாறி நிற்பது. பகவானுடைய திரு மேனியும் சுத்தஸ்தனத்தால் ஆனதுதான். இது ஸ்ரீவைகுந்தத்தில் இருப்பவருடையவும், முக்தர்களுடைய வும் விருப்பத்திற்கிணங்க வேறுபாட்டைப் பெறும்.

காலதத்துவம்

காலம் என்பது ஜடமான வஸ்து. அறிவில்லாத பொருள். இது நிமிஷம் முதற்கொண்டு யுகபர்யந்தமான வேறுபட்ட உருவைப் பெற்றுள்ளது.

தத்துவஞானத்தின் பயன்

இவ்விதம் தத்துவ ஞானம் பிறந்தவன் விஷ்ணுதான் பரதேவதை என்ற உறுவியைப் பெறவேண்டும். மற்ற தேவதைகளோடு இவனை ஒன்றுக நினைக்கக்கூடாது.

மும்மூர்த்திகளில் ஒருவனாகவும் நினைக்கக்கூடாது. மும்மூர்த்திகளுக்கும் மேலானவனாக நினைத்து மும்மூர்த்திகளும் அவருடைய அம்சம் என்றும் நினைக்கக்கூடாது. மோட்சத்தை அடையவேண்டும் என ஆசைப்படுபவருக்கு மோட்சத்தைக் கொடுக்கும் சக்தியுள்ள விஷ்ணு தான் பரதேவதை என்ற கொள்கை வேண்டும். மற்றவர் யாருக்கும் மோட்சத்தைத் தர அதிகாரம் கிடையாது. இப்படி தத்வஞானம் பிறந்தவன் தன்னுடைய அகங்கார மமகாரங்களை மாற்றிக் கொள்ளுகிறான். சரீரம், அதைச் சேர்ந்த பொருள்களிடம் வரும் அகங்கார மம காரங்களையும் தேகத்தைக் காட்டிலும் வேறுபட்டுள்ள பொருள்களிலுள்ள மமகாரங்களை பிறருக்கு அடிமை என்பதாலும் எனக்கு மற்றவன் அடிமை என்பதினாலும் வரக்கூடிய அகங்கார மமகாரங்களையும், தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏற்படக் கூடிய செயல்கள் வரையிலும் வரக்கூடிய தன்னுடைய அகங்கார மமகாரங்களையும் உபயாந்தரங்களில் வரக்கூடிய ஆசையையும் அடியோடு மறந்து பகவானை அடைய வேண்டும் என்று பகவானையே நினைக்கிறான். யாருக்கு உடனே மோட்சம் வேண்டும் என்று ஆசை வருகிறதோ, அவன், தாமதித்து மோட்சத்தைக் கொடுக்கும் பக்தியை விட்டுப் பிரபத்தியைக் கைப்பற்றுகிறான். கர்மயோகம், ஞான யோகம் இவைகளை விட்டுப் பிரபத்தியைப் பின்பற்றுகிறான்.

பிரபத்தி மார்க்கம்

இந்த ப்ரபத்தி என்பது ஐந்து அங்கங்கள் அல்லது ஆறு அங்கங்களைக் கொண்டது. ஆபரணத்தை உடையனுக்கு அவன் தானே ரட்சித்துப் பூணக் கொடுக்குமாப் போல ஆத்ம நிட்ஷேபம் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலும் தனக்கு அதிகாரம் கிடையாது. தன்னால் ஆகக்கூடியதொன்றில்லை என்று பதேப்ரபத்தியன் அடிப்படை. சில ஆசாரியர்கள் ப்ரபத்தி என்று செய்யவேண்டியது கிடையாது, அது ஞானவிசேஷம் என்று தான் சொல்லு

கிறுர்கள். வேதாந்த தேசிகர் இது செய்யப்படவேண்டிய காரியம் என்று சொல்லுகிறுர். ஆன்மாவை பகவானிடம் கொடுத்துவிடுவது இங்கு முக்கியமானது. பகவானுக்கு அநுகூலமானதையே செய்ய ஸங்கல்பிப்பது, எதிரானதை செய்யாமல் விட்டுவிடுவது, பகவான் ரக்ஷிப்பான் என்ற நம்பிக்கையைப் பெறுவது, ரக்ஷிக்க வேண்டுமென்று பகவானைவரிப்பது, தன்ஞல் ஆகக்கூடிய தொன்று மில்லை என்று நினைப்பது என்ற ஐந்து கருத்துள்ளது. இதை அனுஷ்டித்தால் மோக்ஷத்தைப் பெறலாம். இதைத்தானே நேரில் செய்யலாம். பிறருடைய உக்திகளை கேட்டுச் செய்யலாம். மந்திரங்களை உபதேசம் பண்ண ஆசாரியன் மூலம் செய்யலாம். ஒரு பாகவதன் மூலமும் செய்யலாம். இப்படி மோட்சத்தை அடைவதற்காக ப்ரபத்தியைச் செய்துகொண்ட ஆத்மாதான், பிறப்பு எடுத்ததிஞல் செய்யவேண்டிய காரியத்தைச் செய்து கிருதகிருத்யனுகிறுன்.

பிரபன்னனின் சுபாவம்

இவன் ப்ரபன்னனுன பிறகு இவனுடைய ஒழுக்கம் இருக்கும் வகையைக் கவனிப்போம். யாராவது பிறர் வைதால் அவர்கள் வசைகள் யாவும் தேகத்தோடு நிற்பன. ஆத்மாவிற்கு எட்டா என்றும் நினைக்க வேண்டும். பிறர் வசையைக்கேட்டு அவர்களிடம் கரைபுரண்ட கிருபையோடு நன்றியறிதலைச் சொல்ல வேண்டும். தன்னுடைய தோஷங்களை அவர்கள் ஞாபகப்படுத்துகிறுர்கள் என்றே, இன்புறும் விளையாட்டுடையவனுல் ஏவப்பட்டு அவர்கள் இக்காரியத்தைச் செய்கிறுர்கள், என்றே மாறுதலடையாத மனத்துடன் உணர்ந்து பகவானுக்குப் பரதந்திரனுக இருப்பதனுல் பகவான் செய்யும் காரியத்தை ஆட்சேபிக்க முடியாது என்று இருக்கவேண்டும். பகவானுக்கு ப்ரீதிகரமான காரியத்தையே செய்து வரவேண்டும். வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூஜித்தும் பொழுதைப்

போக்கவேண்டும். ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும். தன்னுடைய பெருமையை நினைப்பது, பிறருடைய தாழ்மையை நினைப்பது ஆகிய படுகுழிகளில் விழாமல் முன்னடி பார்த்து நடக்கவேண்டும். எவ்வளவு பெருமை வந்தாலும் ஆகின்சின்யத்தை அழியமாறாதே, கார்ப்பண்யத்தில் கவுடுகளெல்லாம் அவலம்பித்துப் போகவேண்டும். சென்றதற்குச் சோகியாதே, சென்ற அயோக்கிதையைக் கண்டு அகலப்பாராமலே சரண்யனுடைய ப்ரபாவத்தால் பிறந்த யோக்கிதையைக் கண்டு, வருகிற நீருக்கு அணை கோலுகிற கணக்கிலே இவ்வவஸ்தைக்கு அனுரூபமான கைங்கர்யங்களிலே இந்திரியங்களைச் செலுத்தி வாழ்நாளை நடத்தவேண்டும். பகவத் கைங்கர்யத்தை பாகவத கைங்கர்ய பர்யந்தமாகச் செய்ய வேண்டும். சாத்திரங்களில் சொல்லப்பட்டுள்ள மார்க்கங்களை அப்படியே பின்பற்ற வேண்டும். ஏதாவது நேர்ந்தாலும் அதற்கு அப்போதைக்கப்போது பரிகாரத்தைக் காணவேண்டும். உகந்தருளிய திவ்ய தேசங்களிலே வசிக்கவேண்டும். பகவத் பாகவத அபிமான விஷயமான க்ஷேத்திரத்திலே வசிக்கை உசிதம். வேறு வழியில்லாதபோது ஏதேனும் ஒரு தேசத்திலே வசித்தாலும் போதும்.

இவ்வாறு வீடுபேற்றை விழையும் ஆன்மாவை ஆற்றுப்படுத்தும் ஆசாரியர்கள் வாழ்வதற்கான வழிகளை விரிவாக வகுத்துள்ளார்கள். ஆனல் காலம், தேசம், மனித இயற்கை இவைகளில் உள்ளமாறுதல் காரணமாக சில பழக்கத்தில் வேறு உருவத்தை அடைந்துவிடுகின்றன.

மோக்ஷம், பேரின்பம் பெறுவது

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் மோக்ஷம் என்ற சொல்லுக்குப் பொருள் வேறு. மோக்ஷ நிலையும் தனிச் சிறப்போடு விளங்குகிறது. மோக்ஷம் என்ற சொல் வெறும் விடுதலையைச் சொல்லவில்லை. ப்ரகிருதியிலிருந்து விடுபட்டு பகவானை அடைவதையும் குறிப்பிடுகிறது. அவ்விதமே எவ்வளவு அஞ்ஞானியாக இருந்தாலும், எவ்வளவு பக்தனாக இருந்தாலும், இந்த உலகில் அவனுக்கு பரிபூர்ண ப்ரஹ்மானுபவம் ஏற்படாது. சரீரத்தை விட்டுவிட்டு அர்சிராதிமார்க்கம் வழியாக ஸ்ரீ வைகுண்டம் போய் அங்கு எம்பெருமானை அநுப விப்பதே மோக்ஷ நிலை. மோக்ஷ நிலை மனதின் நிலை இல்லை. தேச விசேஷமான ஸ்ரீ வைகுண்டம் போய் முடிவில்லாத பகவதநுபவத்தை பெறுவதே. அநுபவத்தின் விளைவாக பகவத் கைங்கர்யம் பண்ணு கிறான். அநுபவம் எல்லையற்றது. எல்லா காலங்களிலும் எல்லா தேசங்களிலும் எல்லா அவஸ்தைகளிலும் பக வானை கணக்கற்ற உருவங்கள், குணங்கள், சேஷ்டிதங் கள் இவைகளை போக்யமாக அநுபவிக்கிறான். பகவதநு பவத்தில் மூழ்கியுள்ளான். எம்பெருமானுக்கு ஸமமான அநுபவமுண்டு. உபயவிபூதி நாயகரை வைத்தே அநு பவிக்கிறான். பகவான் போக்யமாக ஆகிவிடுவதால் அவனைச் சேர்ந்ததென்ற முறையில் இந்த உலகமும் போக்யமாக ஆகிவிடுகிறது.

பகவானின் ஸ்வரூபம், குணம், விபவ சேஷ்டிதம் இவை போக்யமாகின்றன. ஸ்ரீ வைகுண்டமும் போக்ய மாகிறது. பரமபதத்தை அடைந்தான் என்பது சுருக்க மான விளக்கம். பரமபதம் என்ற சொல்லால், ஸ்ரீ வைகுண்டம் என்ற இடம் பகவான் அவனுடைய ஸ்வரூபருப குணங்கள் அவனை அநுபவிக்கும் ஜீவாத்மா வின் ஸ்வரூபம் இவைகள் பரமபதம் என்ற சொல்லால்

சொல்லப்படுகின்றன. அநுபவத்தின் விளைவாக கைங்கர்யம் செய்கிறான். ஸ்ரீ வைகுண்டம் போனவன் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பவும் பிறக்க உலகத்திற்கு வருவதில்லை. வேதாந்தக் கருத்துப்படி பரி பூர்ண ப்ரஹ்மாநுபவம் ஏற்படுகிறது. ஸாலோக்யம், ஸாரூப்யம் ஸார்ஷடிஸாயுஜ்யம் இவை முழுவதுமாக பகவானை எல்லா காலங்களிலும் எல்லா விதத்திலும் அநுபவித்து பகவானுக்கு சமமான ஆனந்தத்தை அடைவதே வேறு வழியில் விளக்குகின்றன.

ஆநந்தாநுபவத்தில் பகவானுக்கு சமமாக ஆகிறான். படைப்பு, காத்தல், அழித்தல் என்பவைகளை இவன் செய்யாது போனாலும், பகவான் செய்வதைப் பார்த்து இவன் ஆனந்தப்படுகிறான். பகவனோடு ஒன்றாகக் கலந்து அவனாக ஆகிவிடுவதில்லை. பகவானிடம் புகுந்து தன்னை மறந்துவிடுவதில்லை. ஆநந்தாநுபவத்தில் மட்டும் பகவானுக்குச் சமமாக ஆகிவிடுகிறான். பகவத்நுபவத்தை இரண்டாம் தரமாக்கி தன்னுடைய பரிசுத்மஸ்வரூபத்தை பகவானுடைய தொடர்போடு அநுபவிப்பது கைவல்யம். இதை அபேக்ஷிப்பவர்களுக்கு இதுவும் ஸ்ரீ வைகுண்டத்தில் கிடைக்கும். பிறப்புக் காரணமான கர்மாவில்லை. இவனும் பகவானைஅடைய ஆசைப்பட்டு வந்துள்ளான். ஆன்மாவிடமுள்ள அளவற்ற பிரியத்தால் தன்னிடம் எப்பொழுது ஆன்மா வரப்போகிறான் என்று பகவான் எதிர்பார்க்கிறான். இந்த நிலையில் ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தவன் திரும்பிவர இடமில்லை.

ஸ்ரீவைகுண்டம் இயற்கையான உலகத்திற்கு அப்பாலிருக்கும் நாடு. ஆனால் க்ஞநாநந்த மயமானது. ஆகமப்படி சுத்த ஸத்வத்தால் ஆன்து தனி ஊர் என்ற முறையில் இங்கு இருப்பதுபோதுபோல் மண்டபம் ப்ரகார கோபுர வாசல் கூபங்கள் முதலியன உண்டு. பலவித நூல்கள் பலவிதமாக ஸ்ரீ வைகுண்டத்தை வர்ணிக்கின்றன. பொதுவான பெயர் பரமபதம் என்பது. பகவானை அனுபவிப்பதோடு தன்னிஷ்டப்படியும் அனுபவிக்கிறான்.

சரீரத்தை வைத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டு மென்று தோன்றினல் சரீரத்தை எடுத்துக்கொண்டு அநுபவிக்கிருன். ஆனல் அந்த சரீரம் ஞாநாநந்த மய மயமான சரீரம். சரீரம் வேண்டாம் என்று தோன்றினல் சரீரத்தை எடுக்காமலே அனுபவிக்கிருன் பகவானைத் தவிர வேறு யாருக்கும் கட்டுப்படுவதில்லை. குருக்கள் குழாங்களோடு பேரின்பத்தை அனுபவிக்கிருன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய மோக்ஷம் மனிதப் பண் பின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே பாமர மக்களுக்கும் புரியும் வகையில் அமைந்திருப்பது அதன் தனிச் சிறப்பை வெளியிடுகிறது. மனிதப் பண்பாட்டைப் பின்பற்றி ஸ்ரீ வைகுண்ட வாழ்க்கை அமைந்திருப்பதால் பகவாநு பவத்தில் போட்டியிட்டு பிணங்கிப் பேசுவது பகவானுக்கு எப்போழுது என்ன ஆபத்து வந்து விடுமோ என்று காரணமில்லாமல்பயப்படுகிறது போன்றவைகளும் கற்பிக்கப்படுகிறன.

உண்மையில், இது மிகைப்படுத்திப் பேசுவதே ஸ்ரீவைகுண்டத்தில் அவனிடம் கோபம், பயம் இவை களுக்கு இடமேது.

பகவானிடத்தில் அளவற்ற அன்பும், அடியார் குழாங்களின் சேர்க்கையும் இருந்தால் ஸ்ரீவைகுண்டம் எதற்கு, இங்கேயே இருப்போம் என்பது மிகைப்படுத்தும் பேச்சு. ஐம்பூதங்களால் ஆன உலகில் ஐம்புலன்களுக்கு அடிமையாகி வாழ்வதா? ஐம்பூதங்களாலான உலகில் பரிபூர்ண பிரஹ்மாநுபவத்திற்கு இடமேது? இங்கு சாத் திரத்தை கணக்காக வைத்துக்கொண்டநுபவிக்கிருன். ஸ்ரீவைகுண்டத்தில் நேரில் பகவானுடைய உள்ளத்தை தெரிந்துகொள்ளுகிருன். ஐம்பூதங்களாலான உலக வாழ்க்கையில் சாத்திரத்தை மீறி நடக்க இடமில்லை.

ஆசார்யர்களின் கருத்தின் சுருக்கத்தை இங்கு காணலாம். சில இடங்களில் அவர்களின் சொற்றெடர் களையே எழுதினேம்.

மோட்சத்திற்கு இடையூறுகள்

மோக்ஷத்தை இதுவரை ஆன்மா அடையாமல் போனதற்கு இடையூறு என்ன என்பதை ஆசாரியார்கள் விளக்குகிருர்கள். ஜீவாத்மா பரமாத்மாவுடன் கூட இருந்தவன். அவனுடைய ஆணையை மீறியதால் பகவானுடைய நிக்ரஹத்திற்கு இலக்காகிப் பகவானை விட்டு விலகினன். ஆணையை மீறியதால் ஒரு பயபாவம் இவனுடைய அறிவை மறைக்கிறது. அறிவு மறைந்ததால் அக்ஞானம் ஏற்படுகிறது. தன்னை பகவானேடு சம்பந்தமில்லாத தனிப் பொருளாகக் கொள்கிருன். அதனுல் சாத்திரங்கள் விலக்கியவைகளைச் செய்கிருன். செய்து மறுபடியும் பாபத்தைச் சேர்க்கிருன். இப்படிப் பல தடவைகள் செய்து வேற்றுமை வாசனையைப் பெறுகிருன். அது தவறுதலான வழியிலேயே போகச் செய்கிறது. கடவுள் வாழ்க்கையில் சாத்திரங்களைப் பின்பற்றி நடந்தால் கடவுளின் அருள் கிட்டும். மீறி நடந்தால் நிக்கிரஹம் ஏற்படும். பகவானுடைய நிக்ரஹம் எப்படி ஆத்மாவை பகவானிடமிருந்து பிரிக்கிறது என்று கவனிப்போம். அது முக்குணமுள்ள பிரகிருதியோடு உறவை உண்டாக்கி உடல் புலன்கள் இவைகளுக்கு ஆன்மாவை அடிமையாக்கி விடுகிறது. சில காலத்தில் அறிவு நிரம்ப இல்லாத விலங்குப் பிறப்பை எடுக்கச் செய்கிறது. மனிதப் பிறப்பைப் பெற்ருலும் சாத்திரங்களிலிருந்து உண்மை அறிவை உண்டாக்காமல் சிறிய இன்பங்களுக்குள்ளாக்கி சாத்திரங்களை மதிக்காமல் மீறி நடக்கச் செய்கிறது. பகவானிடம் அபராதப் படுகிருன். அதனுல் பிறப்பு, இறப்பு திரும்பவும் திரும்பவும் வந்துகொண்டிருக்கின்றன.

ஒருகால் நல்லறிவு இருந்தாலும், அல்லறிவு மற்ருெரு ஆன்மாவை (பகவானைத் தவிர வேறு தெய்வங்களை) அடையச் செய்கிறது. அவர்களுடைய தொடர்பு வீடு பேற்றை விடுத்து ஏனைய இன்ப ருசியை உண்டுபண்ணும். இதற்கும் மேல் பேரின்பமுண்டு என்ற அறிவு வளர்ந்தாலும் தெய்வத்தினிடம் இயற்கை உறவு இல்லாத

தால் அல்லறிவு ஆத்மாவை பகவானை அநுபவிக்கும் வழியை விட்டு மற்ற எல்லா வழிகளையும் அனுபவிக்கச் செய்யும். பகவானுடைய நிக்ரஹ ஸங்கல்பத்தைச் சரணாகதி மூலமாகவே தவிர்க்கலாம். ஆகவே பகவானை அடைய முக்கிய விரோதியாக நிற்பது,ஆணையைமீறுவது மூலம் பகவானிடம் ஏற்பட்ட நிக்ரஹ ஸங்கல்பமே. பகவானுடனேயே எப்பொழுதும் கூட இருந்த ஆத்மா எப்பொழுது, பகவானுடைய ஆணையை மீறினான் என் பது விளக்க முடியாததாகும். இவற்றால் ஆன்மா இறை வனை அடைவதில் ஏற்படும் தடையை நீக்குமாறும், தடையை நீக்கினால் கிடைக்கும் மோக்ஷத்தின் சிறப்பும் ஒருவாறு உணர்த்தப்பட்டன. இனி, ஜீவாத்மா, பரமாத்மா தொடர்பையும் சிறிது கூறி இப்பகுதியைத் தலைக்கட்டுவோமாக.

பகவானுக்கு ஜீவாத்மா அடிமை என்ற கருத்து வைணவ ஸம்பிரதாயத்தின் அடிப்படையானது. இந்த அடிமைத்தனம் இயற்கையாகவே அமைந்துள்ளது. ஜீவாத்மா பரமாத்மா இருவருக்கும் உள்ள உடல் உயிர் என்ற நிலையில் இருப்பதோடு மட்டுமிருந்தால் இது இயற் கையான உறவாகவே நிற்கும். ஆனால் இருவரும் அறி வாளிகளாக இருப்பதால் யஜமானன், அடிமை என்ற நிலையில் இயற்கையான உறவு உருவாகிறது. ஜீவாத்மா தன்னுடைய தாழ்வையும் பகவானுடைய மேன்மையை யும் கண்டுதான் அடிமையாகிறான் என்று சொல்ல வேண்டி வருகிறது.

இந்த உணர்ச்சியில் ஏற்படும் உறவு ஆத்மாவைப் பரமாத்மாவுக்கு அடிமையாகச் செய்யமட்டும் பயன்படு கிறது. வேதாந்தக் கருத்தை அடிப்படையாக்கி இயற்கை உறவு ஒருபுறமிருக்க, பக்திமார்க்கத்தைக் கொண்டும் அடிமை என்ற உணர்வு ஏற்படுகிறது என்றும் ஆகிறது. பக்தி மார்க்கக் கொள்கைப்படி கடவுள் இறைவனாக மட்டுமில்லை. பேரின்பத்தை உண்டு பண்ணக் கூடிய பொருளாகவும் இருந்து வருகிறார். இதனால்

பகவான் அடியவனைத் தன் பக்கம் இழுக்கிறான். இயற்கை தன் பக்கம் இழுக்கும் காலத்தில் அதைத் தவிர்த்துக்கொண்டு அடியவன் பகவானுடைய பக்கம் திரும்புகின்றான்.

பகவானுடைய குணங்களில் தோற்று அடிமையாகு வதையே குணத்தால் ஏற்பட்ட அடிமைத்தனம் என்று கூறுகின்றனர். பகவானுடைய இயற்கையான உறவும், குணங்களும் ஆத்மாவை அவனுக்கு அடிமையாகப் பண்ணுகின்றது. இயற்கையான உறவோடு அநுபவிப் பவன் என்ற முறையில் ஆன்மாவுக்கும் குணங்கள் இருக்கின்றன என்ற கொள்கை குணமுள்ள பொருள் களாகிய இருவருக்கும் உள்ள உறவைச் சிறப்பாகத் தெரிவிக்கிறது.

இப்பகுதியில் தென்னாட்டு வைணவம், பேரறிவாளி களான சிந்தனையாளர்களின் அயராத உழைப்பால் எவ் வாறு உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் பலவற்றையும் உள்ளடக்கி பெருங்கடலாகக் காட்சியளிக்கின்றது என்பதும், இம்முறையில் தென்னாட்டு வைணவம் பாரத தேசத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படும் வைண வத்தைவிடத் தத்துவரீதியில் மஹோந்நதமான உயர்வை எய்தியுள்ளது என்பதும் விளக்கப்பட்டுள்ளன.

ஆழ்வார்களின் பாடல்கள்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

தமிழ் நாட்டு வைணவத்திற்குத் தூண்போல நிற்பன—பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், மதுர கவியாழ்வார், ஆண்டாள் என்ற பன்னிருவரும் பகவானுடைய அர்ச்சாவதாரத்திலும், வியூகவிபவாவதாரங்களிலும், பரத்துவத்திலும் ஈடுபட்டு அவனுடைய ஸ்வருப, ரூபகுண, விபூதி ஐச்வரியங்களைப் புகழ்ந்து அவனுடைய நேர்மை, நீர்மை, எளிமை இவற்றில் ஆழங்காற்பட்டு அவனுடைய உருவங்களை அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் கண்டு உருகிப் பாடிய பாடல்களின் தொகுப்பாகிய நாலாயிர திவ்வியப் பிரப்ந்தமேயாகும். திருவரங்கத்தமுதனார் பிற்காலத்து இராமாநுஜரைப் பற்றிப் பாடிய இராமாநுஜ நூற்றந்தாதியும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது,

ஆழ்வார் அநுபவத்திறம்

ஆழ்வார்களுள் பெரியாழ்வாரும் நம்மாழ்வாரும் பகவானுடைய கேசவன் முதலிய பன்னிரண்டு வியூகங்களையும் முறையே குறிப்பட்டுப் புகழ்ந்து பாடியுள்ளனர் எனினும், கோயில்களில் மூர்த்திகளைப் புறக்கண்ணால் தரிசித்த அளவில் பொதுவாக ஆழ்வார்கள் அகக்கண்ணுக்கு இராமவதார, கிருஷ்ணாவதார லீலைகளே தோற்றம் வழங்குவதால் அவதாரங்களுள் இவ்விரண்டையுமே விரிவாக வருணித்து நரசிம்மம், வாமனன், திருவிக்கிரமன் ஆகியவற்றை ஆங்காங்குக் குறிப்பிட்டு ஏனைய அவதாரங்களை அருகியே பாடியுள்ளனர்.

திருக்கடைக்காப்பு

மூர்த்திகளை அடிப்படையாகக் கொண்டு புராண இதிகாசக் கருத்துக்களையும், வேதம், ஸ்மிருதி இவற்றின் செய்திகளையும் தொகுத்துக் கவிபாடும் இவர்களில் சிலர் ஒவ்வொரு பதிகத்தின் திருக்கடைக் காப்பிலும் பலச்ருதி சொல்லுவது இப்பாடல்களில் ஈடுபடுவதற்குப் பொது மக்கள் உள்ளத்தை ஈர்க்கப் பயன்படுகிறது. உலகத்துக்கு அப்பாலாக இருக்கும் பகவான், உலகமாகவும் நிற்கும் திறத்தை இவர்கள் பாடல்களில் காணலாம்.

பரிபாடலும்
ஆழ்வார் பாடலும்

தமிழில் உள்ள பாடல்கள் பழங்காலத்தில் ஆசிரியம், வெண்பா, கலி, விஞ்சி பரிபாடல், மருட்பா என்ற அறு பகுப்புக்களுள் அடங்கின. அவற்றுள் கலியும் பரிபாடலும் காம இன்பமாகிய அப்பொருளுக்கே உரிமை உடையன. அக் காமத்தை எப்பொருட்கும் ஆதியாம் சோதியினிடத்தே ஆருத காதலாக மாற்றிப் பரிபாடல்கள் என்ற சங்கப் பாடல்கள் வேதம் ஸ்மிருதி புராண இதிகாசச் செய்திகள பழவற்றையும் இணைத்துத் திருமாலைப் பற்றி விரிவாகப் பாடத் தொடங்கின. ரிக் வேதக் காலத்திற்குப் பிறகு தெய்வங்களை வருணித்துப் பாடும் பாடல்கள் தமிழிலுள்ள பரிபாடல்களே. இப் பரி பாடல்களே ஆழ்வார்களுக்குத் தெய்வத்தைப் பற்றிப் பாட வழி வகுத்துக் கொடுத்தன.

வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவி அல்லேன். 'ஆய்கொண்ட சீர்த்தி ஆழிப்பிரான் எனக்கே உளன்' என்ற உறுதியுடன் தெய்வத்தையே பாட முற்பட்ட ஆழ்வார்கள் 'ஆம் முதல்வன் இவன் என்று தந்நேற்றி எந்தன், நாமுதல் வந்து நல்லின் கவிகள் தூமுதல் பக்தர்க்குத் தன்னைத்தான் சொன்ன வாய்முதல் அப்பன்' 'பாட்டினுல் உன்னை என்நெஞ்சத்து இருந்தமை காட்டி

ஞய் கண்ணபுரத்து அம்மானே' என்றுற்போலப் பக வானே இப்பாடல்களைத் தங்களைக் கருவியாகக் கொண்டு தங்கள் வாயிலாகப் பாடி வெளிப்படுத்தினுன் என்ற கருத்துடையவர்கள். இவர்கள் பாடல்களில் வேதமும், வேள்வியும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. அந்த அந்தத் தல வருணணையில் வேதங்களும், வேள்வி களும் தக்க இடம் பெறுகின்றன. வைதிக மார்க்கத்திலும் சிரத்தை காட்டும் இவர்கள் பகவானை அனுபவித்துப் பாடும் இப் பாடல்களில் அந்த அந்தத் தலத்து அர்ச்சை யிலே ஈடுபடும்போதே பகவானுடைய அவதாரங்களிலும் ஈடுபட்டுத் தாம் பெறும் பேரானந்த அனுபவத்தைப் பகவானை 'கன்னல் அமுதம் மணி முத்து' என்றுற்போலக் குறிப்பிடும் வாயிலாக வெளிப் படுத்துகிறுர்கள்.

கூட்டமும் பிரிவும்

அர்ச்சனைகளைப் பாடாமல் பொதுவாகப் பகவா னுடைய பண்பு நலன்களையும் திருவிளையாடல்களையும் பாடிய பாடல்களும் உள்ளன. தங்கள் தூய உள்ளத் தால் பகவானை அகக்கண்முன் கொண்டுவந்து அனுப விக்கும்அனுபவம் சிந்திக்கும்போது இவர்கள் அடையும் மகிழ்ச்சியையும், அந்த அனுபவம் தடைப்படும்போது இவர்கள் படும் துன்பத்தையும் இவர்களுடைய பாடல் களில் ஆங்காங்குக் காணலாம். எம்பெருமானேடு கூடு வதும் பிரிவதும் அகத்துறை நிகழ்ச்சியே. வெளித் துறையில் உள்ள விக்ரகங்களைப் பற்றியதில்லை. இறை வனுடைய பலவகைப் பெருமைகளையும் புகழ்ந்து பாடும் இவர்கள் தங்கள் தாழ்வையும் அடுத்தடுத்துக் கூறி வருவதைக் காண்கிறேம்.

சடகோபர் பொதுநோக்கு

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரும் திருமங்கை மன்னனும் ஆகிய இருவரும் ஒவ்வொருவரும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களையும், பெரியாழ்வார்

ஐநூற்றுக்கு மேற்பட்ட பாடல்களையும் அருளிச் செய்துள்ளனர். நம்மாழ்வார் திருவாய் மொழியின் முதல் இரண்டு பதிகங்களில் தம்முடைய அடிப்படையான கருத்துக்களை வெளிப்படுத்தி, மும்மூர்த்திகளும் சமம் என்ற கருத்தைத் திருவாய்மொழியில் ஆங்காங்குப் புலப்படுத்தி வேதாந்தக் கருத்துக்களுக்கும் சமய சமரசக் கருத்துக்களுக்கும் இடையிடையே இடம் அளித்து, பகவானையே பரம்பொருளாகக் கொள்பவர் ஆனாலும் மற்ற தேவதைகளையும் மறுக்காமல் புகழ்ந்து பேசி 'அரியை அயனை அரனை அலற்றி அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்' என்ற நிலையில் திருவாய்மொழியை முடிக்கும் திறன் இவருடைய பரந்த மனப்பான்மையைத் தெளிவாக எடுத்துரைக்கிறது கடல் ஞாலம் (5—6) என்னுமிடத்தில் தன்னை அடியோடு மறந்து கடவுள் கருத்தில் அவருடைய சொல்லால்பேசுவது தனிச்சிறப்போடு விளங்குகிறது.

நாராயணனின் ஒரு கூருகச் சிவபெருமான் உள்ளான் என்று குறிப்பிடும் நம்மாழ்வாரின் தெய்வக் கருத்தைக் கண்டுபிடிப்பதில் பிற்காலத்தவரான திருவாய்மொழி உரையாசிரியர்கள் மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகின்றனர்.

பாடற் செய்திகள்

திருமங்கையாழ்வார் முதல் பதிகத்திலேயே நாராயணன் என்ற பெயரைக் குறிப்பிடுகிறார். திருமழிசையாழ்வார் நாராயணனைத் தவிர ஏனைய தெய்வங்களைப் பரதெய்வமாக ஏற்க மறுக்கிறார். ஆனால் நம்மாழ்வார் பாடலகளில் உள்ள பல உயர்ந்த கருத்துக்களை நோக்கி, அவருக்கு மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் ஏற்றம் கொடுத்து, அவரை ஆசாரியனுகவும் ஏற்றுக்கொண்டு விட்டனர். நம்மாழ்வாருடைய திருவிருத்தம் தமிழ் இலக்கிய மரபைப் பின்பற்றி அகப்பொருளில் அமைந்தது. திருமங்கை மன்னனுடைய இரண்டு மடல்

பிரபந்தங்களும், மகளிர் மடல் ஊர்வதற்குத் தமிழ் இலக்கணம் இடம் தராததால் வடநெறியைப் பின்பற்றி வரையப்பட்டனவாக அவரால் குறிப்பிடப்படுகின்றது.

அகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு தூது விடுதல், பிரிதல் துன்பம், ஊடல், கூடல், தாய் கூற்று, தோழி கூற்று என்பனவற்றின் மூலம் பகவானுடைய சிறப்பை விளக்கும் முறை நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் இவர்களிடம் விரிவாகக் காணப்படுகின்றன. பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் முறையில், வைணவத்தைக் கண்ணனை அனுபவித்து வெளியிடுகிறார். ஆண்டாள் கண்ணனுடைய அவதாரத்தில் ஆழங்காற்பட்டுப் பாடுகிறாள். பாவைப் பாடல்கள் வாயிலாகத் தன்னுடைய பகவத் அநுபவத்தை வெளியிட்டமை இவளுக்குத் தனிச் சிறப்பைத் தருகிறது.

பாடல்களில் மன்னன் பெயர்

ஆழ்வார்களுடைய பாடல்களில் பாண்டியன், சோழன், பல்லவன் ஆகிய மரபைச் சார்ந்த மன்னர்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருப்பது அவர்கள் காலத்தை ஆராய்ந்து முடிவு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கிறது. இவர்கள் பாடல்களால் பாரதவரலாற்றில், சிறப்பாகத் தமிழ் நாட்டில் கி. பி. 5ஆம் நூற்றுண்டு முதல் 9ஆம் நூற்றுண்டு வரை காணப்பட்ட தெய்வக் கொள்கை, ஆலய வழிபாட்டு முறை இவற்றை அறிய முடிகிறது.

தல புராணங்கள்

ஆழ்வார்கள் காலத்தில் அந்தந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்குத் தனிப்பட்ட பெயர் கிடையாது. ஆராவமுதன், பொன்னப்பன், தன்ஒப்பார் இல் அப்பன் என்பன இறைவனை அனுபவிக்கும் தம் அனுபவத்தால் அவர்கள் மனம்கொண்டு பேசும் அன்புச் சொற்களே. தலங்கள் தோறும் பகவானுக்கும்

தேவிக்கும் தனித்தனித் திருநாமங்கள் தலப்புராணங் களிலேயே காணப்படுகின்றன. ஆழ்வார்கள் காலத்தில் தல புராணங்கள் பெரும்பான்மையும் தோன்றவில்லை. அருகி ஒன்றிரண்டு தோன்றியனவும் பிரபலமாகவில்லை என்பது உறுதி. ஆனால் இப்பொழுது ஆலயங்களில் உள்ள மூர்த்தியின்பெயர், தாயார் பெயர், புகழ் முதலியன தல புராணங்களை ஒட்டியே கூறப்படுவதைக் காண் கிறோம். ஆழ்வார்கள் பாசுரங்களில் திருமகள், மண் மகள், ஆயர் மடமகள் ஆகிய ஸ்ரீ பூமி நீளா தேவிகள் சிற்சில இடங்களில் பகவானோடு சேர்த்துப் பேசப்படு கிறார்களேயன்றி அவர்களுக்கெனத் தனியாக ஒரு பாசுர மும் இல்லை. திருவெட்டெழுத்தைக் குறிப்பிடும் ஆழ் வார்கள் துவயம்பற்றிக் குறிப்பிடவேயில்லை. இவர்கள் காலத்து வழிபாடும் மலர்கள், தூபம், தீபம் இவற்றைக் கொண்டு இறைவன் புகழ்பாடுவதனோடு அமைந்து விடுகின்றன்றது.

பரிபாடல் வேண்டுவது

'கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்
கொடும்பாடு அறியற்க எம்அறிவு எனவே' என்றும்

'காமரு சுற்றமொடு ஒருங்குநின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிகென
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்' எனவும்

'யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல
நின்பால், அருளும் அன்பும் அறனும் மூன்றும்' எனவும்

பரிபாடல் வேண்டும் வேண்டுகோளே ஆழ்வார்கள் பாசுரங்களில் சில விரிவுகளோடு காணப்படுகின்றன.

தாமும் பரமனிடம் காதலாகிக் கசிந்து ஈடுபட்டுப் பொதுமக்களையும் அவ்வாறு ஈடுபடுமாறு ஆழ்வார்கள் வேண்டுகின்றனர்.

'நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் உண்டோ வீறுபெறு துவக்கம்'

என்ற பரிபாடல் கருத்தை விரித்து ஸ்ரீ வைகுந்தத்தை அடைந்து ஆங்கு பகவத் அநுபவம் பண்ணுவதாகிய வீடுபேற்றையே மேம்பட்ட உறுதிப்பொருளாகப் பேசுகின்றனர். வீடுபேற்றைவிட பகவத் கைங்கர்யத்தில் மிகவும் ஆசைப்படுகிறார்கள். 'எம்மா வீட்டுத் திறம் செப்பம்: நின் செம்மா பாதபற்புத் தலைசேர்த்து' என்று வேண்டுகிறார்கள். இறைவனுக்கு அடிமை செய்வதோடு அடியார்க்கும் அடிமையாக விரும்புகிறார்கள். இந்த எளிமையான சரணாகதியே ஆழ்வார்களுடைய பாசுரங்களில் காணப்படுகின்றது. இறைவனிடத்துள்ள அளவு கடந்த ஆசையால் அவன் இறைமையையும் மறந்து அவன் நலம் குறித்துப் பெரியாழ்வார் பல்லாண்டு பாடுகிறார். மதுரகவியாழ்வார் 'தேவு மற்று அறியேன் குருகூர் நம்பி, பாவின் இன்னிசை பாடித்திரிவனே' என்று அடியார்க்கு அடிமையே விரும்பி மேற்கொள்கிறார். 'அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும், தன்மையான் சடகோபன்' என்று ஆழ்வாரிடத்திலேயே இறைமையைக் காண்கிறார்.

குரு பரம்பரையும், வரலாறும்

குரு பரம்பரையில் கூறப்படும் ஆழ்வார்களின் காலம், வரலாற்றுணர்ச்சி கொண்ட இக்காலத்தார் உள்ளத்துக்குச் சற்றும் ஏலாது. காலத்தால் முற்பட்டவர்கள்தாம் பெரியோர்களாய் இருப்பர் என்பதும் நேரிய கருத்தன்று. எந்தக் காலத்தில் தோன்றினாலும் சான்றோர் சான்றோர்களே. அப்படி நோக்குமிடத்து, ஆழ்வார்கள் பாசுரங்களில் காணப்படும் அரசர்கள் பெயரைக் கொண்டு அவர்கள் காலம் கி. பி. 5 முதல் 9ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்டது என்று வரலாற்றறிஞர் கூறும் முடிவே ஏற்கத் தக்கது.

பெரியாழ்வாரை ஞானாசாரியனாகக் கொண்ட நெடுஞ்சடையான் பராந்தகனுடைய அமைச்சன் மாறன் காரி ஆனைமலையில் கட்டிய கோயில் நீர்தெளிப்பு

(சம்புரோக்ஷணம்) அவன் தம்பி காலத்திலேயே நிகழ்ந்தமை, வரகுண பாண்டியன் பெயரால் அமைந்த வரகுணமங்கை, ஸ்ரீவரமங்கலம் என்ற ஊர் ஆலயங்களைப்பற்றி நம்மாழ்வார் பாடுகின்றமை, வரகுண விண்ணகரம் சடகோப விண்ணகரம் என்றும் அழைக்கப்படுகின்றமை (Madras Epi. A. R. 1920) சடகோபன் என்ற பெயர் அமைந்துள்ள முதற் கல்வெட்டு இதுவே, முதலிய வெளிப் படையான சான்றுகளைப் புறக்கணித்தல் இயலாது. எனவே ஆழ்வார்கள் காலம் 1200 ஆண்டுகளுக்கு முன் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

வியாக்யானங்கள்

ஆழ்வார்களுடைய பாடல்களுக்குப் பிற்காலத்தில் உரை வரைந்த பேரறிஞர்கள் நம்காலத்து வைணவக் கருத்துக்களுக்கெல்லாம் அப்பாடல்களில் இடம் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தால் பல வடமொழி நூற் செய்திகளையும் ஆழ்வார்கள் பாடல்களின் கருத்துக்களாக வலிய அமைத்து, உரை செய்துள்ளனர். தமிழ் மொழி இலக்கணம், நிகண்டு, மொழி இலக்கியமாக மரபு இவைகளைக்கொண்டே ஆழ்வார்களின் பாடல்களுக்கு விளக்கம்கூறவேண்டி இருக்க இதனைவிடுத்து வடமொழி வான்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் கூறுவதின் காரணம் புரியவில்லை. இவற்றைத் திவ்யபிரபந்த உரை என்பதைவிட வைணவ சம்பிரதாயத்தை விரித்துக் கூறும் நூல் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானது.

ஆழ்வார் பாடல்களுக்கு ஏற்றம்

பகவான் ஆலயங்களில் பிம்பங்களாக இருந்து அருள் செய்கின்றான். திருமகள், மண்மகள், ஆயர்மடமகள் மூவரும் அவனுக்குத் தேவிகள் என்று குறிப்பிடும் ஆழ்வார்கள் தத்துவ ஹித புருஷார்த்தங்களைத் தங்கள் கருத்தில் பட்டவாறு சுதந்திரமாக பேசுகிறார்கள்.

ஆழ்வார்களுடைய பாசுரங்களுக்கு வரலாற்று ரீதியிலே இடம் இருந்தாலும் ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தில் ஆழ்வாருடைய பாசுரங்களை வேத அங்க உபாங்கங்களா கவே கொண்டுவிட்டனர், ஆசார்ய ஹிருதயம் என்ற நூல், நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு நூல்களையும் நான்கு வேதங்களாகவும், திருமங்கையாழ்வார் அருளிச் செய்த ஆறு நூல்களையும் ஆறு அங்கங்களாகவும், ஆழ்வார்கள் ஏனைய பதின்மருள் மதுரகவியாரை நம்மாழ்வாருள்ளும், ஆண்டாளைப் பெரியாழ்வாருள்ளும் அடக்கி எண்மராக்கி எண்மர் நூல்களும் எட்டு உபாங் கங்களும் போல அமைந்திருக்குந் திறந்தை 'இந்நாலுக் கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும், மற்றை எண்மர் நன்மாலைகளும் வேத அங்க உபாங்கம் போலே' என்ற தொடரால் விளக்குகிறது. வடமொழி வேத வேதாங்க புராண இதிகாசக் கருத்துக்கள் பலவும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் காணப்படுகின்றன என்ற கருத்தை விளக்கவந்த ஆசாரியர்களாகிய உரை யாசிரியர்கள் வேதக் கருத்துக்கள் இவற்றில் பொதிந்து கிடக்குமாற்றை விளக்கிக் கூறியுள்ளார்கள். இவற்றுள் திருவாய்மொழிக்கு மாத்திரம் ஆறுயிரப்படி முதல் முப்பத் தாறுயிரப்படிவரை பல வியாக்கியானங்கள் உள்ளன. ஏனைய பாசுரங்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக் கியானம் மாத்திரம் உள்ளது.

மணிப்பிரவாள நடை

வேதங்களுக்குப் பிறகு கடவுளைப் பாடிய நூல்கள் பரிபாடல்முதல் திவ்வியப் பிரபந்தம், சைவத் திருமுறை கள்முதலாகத்தமிழிலேயே முதல்முதல் தோன்றியுள்ளன. இப்பாடல்கள் நல்ல தமிழில் இயற்றப்பட்டபோதிலும் வேதக்கருத்துக்கள் முதலிய இவற்றில் பொதிந்துகிடக்கும் திறத்தை விளக்கவந்த உரையாசிரியர்கள் வடமொழி மேற்கோள்களையும் வடமொழி மரபுகளையும் ஒட்டி வட மொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையிலேயே உரை எழுதிவிட்டதனால் பொதுமக்கள் இவ்வுரைகளின்

அருமை பெருமைகளை எளிதின் உணர இயலாது போயிற்று எனினும் பக்திநெறி பரவுவதற்கு ஆழ்வா ராதிகள் அருளிச் செயல்கள் தமிழ்நாட்டிற்கு அழியாத பெருஞ் செல்வம் என்பதில் ஐயமில்லை.

நெற்றியில் போட்டுக்கொள்ளும் அடையாளம்.

(தென்கலை வடகலை நாமங்கள்)

இன்று இருவைணவக் கொள்கைகளைச் சேர்ந்தவர்களும் நெற்றியிலும் உடம்பிலும் அடையாளமிட்டுக் கொள்கிறார்கள். தென்கலை மரபைச்சேர்ந்தவர்கள் ஒரு விதமாகவும் வடகலை மரபைச்சேர்ந்தவர்கள் ஒருவிதமாகவும்போட்டுக்கொள்ளுகிறார்கள். அடையாளத்தில் மாறுபாடுஇருந்தாலும் வெண் மண்ணையும் மஞ்சள் அல்லது சிகப்பாக ஆக்கப்பட்டுள்ள மஞ்சள் பொடியையும் இட்டுக்கொள்ளுகிறார்கள். வெண் மண்ணைத் 'திருமண்' என்றும் சிகப்பாகவோ மஞ்சளாவோ இருப்பதை 'ஸ்ரீசூர்ணம்' என்றும் சொல்லிவருகிறார்கள். இந்த இரண்டிற்கும் பலவிதப் பொருள்களையும், கருத்துக்களையும் கூறுவதை நாம் பார்க்கிறோம்.

ஒரு ஆகம வசனம் வெண்மை கலப்படமில்லாத தான சுத்தஸத்வம் (தெய்வத்தன்மை) என்பதையும் மஞ்சள் அல்லது சிகப்பு மஹாலக்ஷ்மியையும் குறிக்கும் என்றும் அவ்விருவர்களையும் சேர்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாக வேறு வேறு நிறத்தில் குறிகளையிடுவதாகக் குறிக்கிறது. இவ்வித அடையாளம் போடுவது தமிழ் நாட்டு வைணவத்தின் ஒழுக்கத்தில் சிறந்த இடத்தைப் பெற்றுவிட்டது. மேலும் இவ்வித அடையாளமிடுவது மனித உடம்பில் மட்டுமல்லாமல் கோயில்களிலுள்ள கடவுளின் உருவத்திலும் இருக்கவேண்டியதாக சொல்லப் படுவதால் எந்தக்

கொள்கையோடு இந்தக்குறியை மனிதன் போட்டுக் கொள்ளுகிறுன்? என்பதைக் கவனிப்பது அவசியமாகிறது இன்றுகாணும்உருவத்திலேயேஇந்தக்குறி ஆரம்பமுதலே இப்படியே இருந்து வருகிறது என்று நினைக்கமுடியாது· மக்களுடைய அன்ருட வாழ்க்கையோடு இது சேர்ந்து விட்டதால் அவனுடைய சிந்தனையின் விளைவுகளை இங்கு காண்கிறேம்.'அகச்சான்று' 'புறச்சான்று'களைக்கொண்டு பார்க்கும் காலத்தில் இது ஒருவிதமாக ஆரம்பித்து ஒரு க ரு த் தோ டு பிறந்து பல கருத்துக்களோடு கலந்து வளர்ந்து இன்று இவ்வுருவத்தில் இருந்து வருவதாக நினைக்கவேண்டி வருகிறது. இந்தக்குறி சம்பந்தமாக கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்காது போனுலும் சமீப காலத்தில்ஸ்ரீரங்கம் ரங்கநாதன்மூலபிம்பத்திற்கு ஏற்பட்ட விபத்தின்போது பிம்பத்தின் நிஜ உருவைப் பார்க்கும் காலத்தில் ஓர் உ ண் மை வெளியாயிற்று. ரங்கநாத பிம்பத்தின் முகத்தில் 'தீபசிகை' விளக்கின் ஒளியின் உரு போன்ற அடையாளம் நெற்றியில் பதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவரலாயிற்று. இந்ததகவலை அப்போது நிர்வாக அ தி கா ரி யா க இருந்த கே. கே. மேனன் அவர்களே வெளியிட்டார். இப்பொழுது பார்க்கப் பட்டுள்ள அ டை யா ள த் து ட னே யே எழுநூறு வருடங்களுக்கு முன்பும் ரங்கநாதன் இருந்திருக்கலாம் என்று எண்ண இடம் இல்லை என்று ஏற்படுகிறது. ஸ்ரீ வேதாந்த தேசிகர் வைணவ ஒழுக்கத்தை விளக்கி ஸச்சரிதராக்ஷை என்ற ஒருநூலை எழுதியுள்ளார். அந்த நூலில் முதல் பாகம் நெற்றியில் குறியிடுவதைப் பற்றி விசாரம் செய்ய ஏற்பட்டது. அங்கு வைணவக் கோயில் பிம்பங்களின் நெற்றியில் தீபசிகை போன்ற அடையாளம் தான் இருந்துவந்திருக்கிறது.என்று தெளிவாகக்கூறுகிறுர். (நமது அர்ச்சாவதாரேஷுதீப சிகா காரஸ்ய ஊர்த்தவ புண்ட்ரஸ்ய தரிசனுத்) ஆகவே ஒருகாலத்தில் வைணவ ஆலயங்களில் மூ ர் த் தி யி ன் நெற்றியில் 'தீபசிகை' போன்ற அடையாளம் தான் இருந்து வந்திருக்கிறது என்பது திண்ணம். பிம்பங்களின் நெற்றியில் இன்ன

உருவத்தில் தான் குறியிடவேண்டும் என்று ஆகமங்கள் சொல்லவில்லை என்றும் வேதாந்த தேசிகர் அந்நூலில் கூறுகிருர். அவர் பாஞ்ராத்ர ஆகமங்களில் அவர் காலத்தில் கிடைத்தவைகளைக் கொண்டு நன்கு ஆராய்ந்து ஆகம ஒழுக்கங்களுக்கும் வைணவத்தில் இடம்கொடுக்க நூல் எழுதியவர். அவருடைய கருத்தைப் புறக்கணிக்க முடியாது. மேலும் அவர் இது வெறும் அணி கலமாகத்தான் தெய்வத்தின் நெற்றியில் இருப்பதால் இந்த உருவத்தில்தான் இருக்கவேண்டும் என்று கட்டுப் பாடு இல்லை எப்படிக் குறியிட்டால் அழகு நிறைந் திருக்கும் என்று நினைக்கிருர்களோ அப்படிக் குறியிடலாம் என்று கூறுகிருர். மேலும் பாரதநாட்டில் மற்ற இடங் களில் இருந்துவரும் வைணவர்கள் ஒவ்வொரு உருவம் உள்ள அடையாளத்தைப் போட்டுக் கொள்ளுவதால் இந்தக்குறி எப்படி வேண்டுமானுலும் இருக்கலாம் என்பது தெரிகிறது. தமிழ்நாட்டு வைணவர்கள் இட்டுக்கொள்ளும் குறிக்குத் தமிழ்நாட்டு வைணவத்தோடு தான் தொடர்பு இருக்கிறது என்பது வெளியாகிறது, தங்கள் நூலில் இருவைணவ மரபைச் சேர்ந்த ஆச்சாரியர்களும் இதைப் பற்றிச் சர்ச்சை செய்யாததனுல் அவர்கள் காலத்தில் நெற்றிக்குக் குறியிட்டுக் கொள்ளுவதில் கருத்து வேற்றுமை இல்லை என்பது ஏற்படுகிறது. தம்முடைய நூலில் வைணவர்கள் எந்தக் குறியை இடவேண்டும் என்று சர்ச்சை செய்யும் காலத்தில் பலமேற் கொள்கை களை எடுத்து விளக்குகிருர்கள். அவைகளைப் பார்த்தால் பலவிதக் குறிகள் அந்தக்காலத்தில் வைணவர் களிடையே இருந்தது என்பது தெரியவருகிறது.வேதாந்த தேசிகர் ஸச்ரித்திரரக்ஷையில் 'சாம்பலைக்' கொண்டு நெற்றிக்குறி இடக்கூடாது என்று கூறுவதிலேயே முனைந்து விளக்கம் கூறுகிருர். "ஊர்த்துவபுண்ட்ரம்" என்ற குறிதான் மோட்சத்தைக் கொடுக்கும் என்றும் கூறுகிருர். முடிவாக பகவானுடைய திருவடிபோல் நெற்றிக்குறி அமைய வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்துகிருர். பகவானுடைய பாதம் போலுள்ள

குறியிலும் இடைவெளி வேண்டும் என்றும் கூறுகிருர் குறிக்கு அடையாளத்திற்காக பகவானுடைய பாதம் சொல்லப்படுவதால் இரண்டு பாதங்கள் என்று பொருள் கொள்ள இடமில்லே. இதைப்பார்த்தால் இப்பொழுது இட்டுக்கொள்வது போலப் பெரிய இடைவெளிக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லே. மகாலெக்ஷ்மியை அர்ச்சனே செய்து அவருடைய பிரசாதமாகக் கிடைத்ததைக் நடுவில் வைத்துக்கொள்ளவேண்டும் என்பது ஏற்படுகிறது. அவருடைய நூல்களிலிருந்து கிடைக்கும் மற்ருெரு கருத்தும் நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது. ஆழ்வார் களின் பாடல்களில் சாம்பலால் குறியிட்டுக் கொள்வதுதான் சொல்லப்பட்டிருக்கிறது என்று வேதாந்த தேசிகர் காலத்தில் ஒரு கருத்து இருந்து வந்திருக்கிறது. என்பது தெரிகிறது. இந்த ஆட்சேபத்திற்குப் பதில் அளிக்க முன்வரும் காலத்தில் வேதாந்த தேசிகர் கூறுவது கவனிக்கத்தக்கது. ஆழ்வார்களின் பாடல்களுக்கு திருநீர் என்ற சொல் இருந்தாலும் வடமொழி நூல்களில் காணப் படும் வசனங்களேயும் அவைகளின் மரபுகளேயும் கொண்டே பொருள் கூறவேண்டும். மொழி தமிழாக இருந்தாலும் வடமொழி மரபில் இது வளர்ந்திருப்பதனுல் அப்படியேத்தான் பொருள் கூறவேண்டும் என்கிருர். 'நீறு' என்ற தமிழ்ச்சொல்லிற்கு வடமொழி நூல்களின் மரபைக்கொண்டே விளக்கம் கூறவேண்டும் என்று நினேக்கிருர். சூலம்போல் 'ஆமை' போல் குறியிடலாம் என்று பலவிதக் குறிகளுக்கு வசனங்கள் இடங்கொடுக் கின்றன. ஆனுல் இந்தக் குறிக்கு என்ன பெயர் என்று கவனித்தால் ஒன்றும் முடிவாகத்தெரியவில்லே. இன்று திருமண் என்ற சொல் சிலரால் வழங்கப்படுகிறது. ஆனுல் இது குறியின் மூலப்பொருளே குறிக்குமே தவிரக்குறியின் உருவைக் குறிப்பிடாது. குறியின் பெயரை 'நாமம்' என்று குறிப்பிடும் பழக்கமும் இருந்துவருகிறது. ஆனுல் இந்தச் சொல்லும் குறியின் உருவைக் குறிப்பிடவில்லே. ஆனுல் பன்னிரன்டு குறிகளுக்கும் கேசவன் முதலாக பன்னிரன்டு

பெயர்கள் இருப்பதால் அந்த அந்தப் பெயரைச் சொல்லி அந்த அந்தக் குறிகள் இடப்படுவதால் குறிக்கே நாமம் என்று பெயரிட்டுவிட்டார்கள். இந்தக்குறிக்கு வடமொழியில் 'ஊர்த்துவ புண்ட்ரம்' என்று ஒரு பெயர் இருந்து வருகிறது. சிறிதளவு குறியின் உருவை இது குறிப்பிடுகிறது என்று ஒப்புக்கொள்ளலாம். 'ஊர்த்துவ புண்ட்ரம் என்ற சொல்மேல் நோக்கியுள்ள தாமரைப் பூவின் இதழைக் கருத்தில் கொண்டு ஏற்பட்ட பெயர். இதனுல் குறியும் அவ்விதம் இருக்கலாம் என்று நினைக்க இடம் உண்டு குறிகளைக் குறிப்பிடும் சொற்களில் 'ஊர்த்துவ புண்ட்ரம்' என்ற சொல்தான் மிகவும் பழமையானது. தமிழ்நாட்டுத் தென்கலை வடகலை நாமத்தை இடுபவர்கள் இதை திலகம் என்றுதான் கூறுகிருர்கள். அதனுலேயே நெற்றியில் குறுக்காக அடையாளமிட்டாலும் 'த்ரியக் புண்ட்ரம்' என்றுதான் சொல்லுகிருர்கள். எதைக்கொண்டு குறியிட வேண்டும் என்பதிலும் பலவகையான வசனங்கள் இருந்து வருகின்றன. போதாயனர்பஸ்மதாரணம் வேதத்திலேய சொல்லப்பட்டிருப்பதாக நினைக்கிருர். வைகாஸனர் அக்நியில் கர்மா முடிந்ததும் பஸ்மத்தை எடுத்து உடலில் இட்டுக்கொள்ள சொல்லுகிருர். மண், சந்தனம் முதலிய பலபொருள்கள் குறியிடப் பொருளாக சொல்லப்படுகின்றன. ஆகவே நெற்றியில் குறியிடுவது என்பது பலசிந்தனையாளர்களின் கருத்தில் உருவாகிக்காலப் போக்கில் பலவித மாறுதல்களை அடைந்து இன்று இவ்விதம் இருந்து வருகிறது. ஆதலின் இந் நெற்றிக்குறியின் குறிக்கோள் பற்றி சர்ச்சையில் ஈடுபடுவது பயனில் செயலாகும்.

சம்பிரதாய கதைகளின் நிலை

ஐதிகங்களை வெளியிடும் குரு பரம்பரைப்ரபாவம் என்று ஒரு நூல் அடிக்கடி சொல்லப்படுகிறது. வேதாந்த தேசிகரோ லோகாசாரியரோ இவ்வகையான நூல் ஒன்று இருப்பதாக ஒப்புக்கொண்டு

பேசுவதாகத் தெரியவில்லை. அதனாலேயே குரு பரம்பரைப் ப்ராபவம் இரண்டாகப் பிரிந்துவிட்டது. தென்கலை குரு பரம்பரைப் ப்ராபாவத்தை பின்பு அழகிய மணவாள ஜீயர் என்ற ஆசாரியர் இயற்றியுள்ளார். இவர் ராமாநுஜருக்கு வெகுகாலம் கழித்துவந்தவர் அதேவிதமாகவே ப்ரம்ம தந்த்ர பாகால ஸ்வாமி ஒரு குரு பரம்பரையை எழுதியுள்ளார். பல இடங்களில் இரண்டும் வேறுபட்டுப்பேசுகின்றன. ராமாநுஜாரியசரிதம் ப்ரபந்நாமிருதம் போன்ற ராமாநுஜருடைய சரித்திரத்தை விளக்கும் நூல்களும் இருந்து வருகின்றன. பலவித ஐதீகங்கள் ரகஸ்யங்களிலும், ஆழ்வார்களின் பாடல்களின் உரையிலும் காணப்படுகின்றன். ஒரு வகுப்புக்காரர்களின் நூலில் காணப்படும் ஐதீகம் மற்ற வகுப்பு குரு பரம்பரை நூலில் காணப்படவில்லை. குரு பரம்பரையைப் பார்த்தால் ராமாநுஜர் ஒரு மாபெரும் குழுவோடு சுற்றி வைணவப் பிரசாரம் செய்து வந்ததாக ஏற்படுகிறது. ஆனால் அவ்வித ஸ்தாபனம் ஒன்றும் ராமாநுஜருக்குப் பிற்காலத்தில் தொடர்ந்து வரவில்லை. மேலும் ஐதீகங்களில் வைணவத்தை எல்லா மக்களுக்கும் பொதுவாக நடக்கும் முயற்சியே முன்நிற்கிறது. முக்கியமாக வைணவம் ஜாதிக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்று கொள்கையை விளக்கும் கதைகள் பலவாகக்காணப்படுகின்றன. ஆனால் சம்பிரதாயத்தில் இதற்குக் கதையளவில்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வைணவத்திற்கு ஜாதி கிடையாது என்ற கொள்கை குரு பரம்பரையில் காணப்படுவது பின்பற்றப்பட்டிருந்தால் வைணவர்களின் ஜாதிப் பேச்சுக்கு இடமே இருக்காது. வைணவர்களுக்கு ஜாதி கிடையாதென்பது உறுதியாக நின்றிருக்குமானல் வைணவம் உதயமாகி இருக்கும்

குரு பரம்பரை காலத்திற்குபின் வந்தவர்கள் வர்ணமுறையை ஏதாவது ஒரு முறையில் அப்படியே பின்பற்றி வருகிறார்கள். அதனால் குரு பரம்பரை முக்கியத்துவம் கதையளவிலேய நின்றுவிடுகிறது. வைணவத்தின் அடிப்படையான கருத்துக்கள் கதைகள் மூலம் விளக்கப்படுகின்றன் என்பது மறுக்காமல் ஏற்கக்கூடியது. பெரியாழ்வாரை பற்றிப் பேசும் காலத்தில் அவரைக் 'கல்ப சூத்ர வியாக்கியாதர' என்று வேதாந்த தேசிகர் குறிப்பிடுகிறார். இந்த உண்மை ஒரு குரு பரம்பரையிலிருந்தும் கிடைக்கவில்லை. குரு பரம்பரையிலுள்ள கதைகள் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல என்று பதினேழாவது நூற்றாண்டில் வந்த 'வேங்கடாத்வரி' என்ற பெரியவரே கூறுகிறார்.

வைணவ தீக்ஷை

வைணவ தீக்ஷையில் மிகவும் எளிதானது பஞ்ச சம்ஸ்காரம். இந்த இரண்டு சம்பிரதாயத்தின் ஆசாரிய புருஷர்கள் இன்றும் செய்து வருகிறார்கள். ஆனால் பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் இது ஆலய நெருப்பிலேயே செய்யப்படுகிறது என்று குறிப்பிடுகிறார். பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடியாட்சி செய்கின்றோம். இதைக்கொண்டு பார்த்தால் கோயில்களிலேயே பூஜகர்களே கோயில் பொறியால் பஞ்ச சம்ஸ்காரங்கள் செய்து வந்தனர் என்பது தெரிகிறது.

திருமங்கை மன்னன் சொல்லும் புதுக்கதைகள்.

'வாள்வலியால் மந்திரங்கொண்ட வள்ளல்' என்று திருமங்கை மன்னனே ஒரு கதையைத் தன்னுடைய பாடலில் தெரிவிக்கிறார். திருமங்கை மன்னனே முக்கியமாக நினைக்கும் இந்தக் கதை ஏன் குரு பரம்பரைகளிலோ மற்ற நூல்களிலோ காணப்படவில்லை என்பது புதிராகவே இன்றும் இருந்து வருகிறது.

“துளங்கு நீண்முடி அரசர்தம் குரிசில் தொண்டை மன்னவன் திண்திறல் ஒருவற்கு உளங்கொளன்பினோ டின்னருள் சுரந்தங் கோடு இதிலிருந்து தொண்டை மண்டலத்து மன்னன் ஒருவனுக்கு இறைவன் அன்பினோடு இன்னருள் சுரந்தானென்றும் ஏழு நாழிகையோடு இருப்ப வளங்கொள் மந்திரத்தை அருளிச் செய்தானென்றும் விளங்குகிறது. ஆனால் இந்தத் தொண்டை மன்னன் யார்? எங்கிருந்தான்? அவனுக்குக் காலங்கள் வீணாகப் போய்க்கொண்டிருக்கும் காலத்தில் ஏழு நாழிகை இருந்து மந்திரத்தை அருளிச் செய்தவாறு எப்படி என்பன மற்ற நூல்களால் விளக்கப்படவில்லை இது திருமங்கை மன்னன் காலத்தில் நடந்து பெரிய நிகழ்ச்சி என்று தெரியவருகிறது. இது திருமங்கை மன்னனுக்கு கண்ணைத் திறந்திருக்கிறது.

வைணவத்தில் பகவானின் பெயர்களுக்குள் இடம்.

"ஒருவனே தெய்வம்" 'மோட்சமே குறிக்கோள்" "அவனை அடைவதே மோட்சம்" என்று எங்கும் ஒருமையை வற்புறுத்திய வைணவம் கடவுளுடைய பெயரில் மட்டும் ஒருமையை ஏன் வற்புறுத்தாமல் விட்டு விட்டது. வைணவம் என்ற பெயர் விஷ்ணுவே முழு முதற் கடவுள் என்று தெரிவிக்கிறது. ஆனால் நாராயணன் என்ற பெயர் உள்ள கடவுள் தான் எல்லோருக்கும் மேம்பட்ட தெய்வம் என்ற கருத்து சம்பிரதாய நூல்களில் வற்புறுத்தப் படுகிறது. விஷ்ணு என்ற சொல் வேறு; நாராயணன் என்ற சொல் வேறு. அடிப்படையில் உள்ள இந்த வேற்றுமை ஒருபுறமிருக்க வைணவ சம்பிரதாயத்தில் கடவுளுக்கு இருக்கும் பெயர்களை அளவிட்டு சொல்ல முடியாது. ஆகமங்கள் வைணவ சம்பிரதாயத்திற்கு தலைமை தெய்வமாக் வாசுதேவன் என்ற பெயருள்ள தெய்வத்தை அளித்துள்ளது. சகஸ்ரநாமத்தில் ஆயிரம் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இவைத்தவிர அவதாரங்கள் காலத்தில் பலபெயர்கள் புராணங்களில் சொல்லப் படுகின்றன. அதோடுகூட ஆழ்வார்கள் அன்பினால் பல பெயரிட்டு அழைக்கின்றார்கள். புகழ் பெற்ற புராணங்கள் ஸ்தல புராணங்கள் இவை பல பெயர்களை கொடுக் கின்றன. சில இடங்களில் உருவமாற்றத்தையும் நாம் காண்கிறோம். சிற்ப சாஸ்திரங்கள்களும் பல உருவங் களை விஷ்ணுவுக்கு கொடுக்கின்றன. அவ்விதமே மந்திர சாஸ்திரங்களும் பல உருவங்களைக் கொடுத்து த்யானம் பண்ணச்சொல்லுகின்றன. இந்நிலையில் விஷ்ணுவின்

சம்பந்தத்தோடு காணப்படும் உருவம் பெயர் இவைகளில் ஒற்றுமைக்கு இடமுண்டா? இல்லையா? அல்லது பல உருவங்கள் பல பெயர்களிலேயே இருந்து கொண்டு ஏதாவது ஒருவழியில் விஷ்ணுவோடு உறவைப்பெற்று திகழ்கின்றனவா என்பது பெரியபிரச்சனை. இங்கு ஆசாரியர்கள் கடைபிடிக்கும் வழியை கவனிப்போம். இது சம்பந்தமான சில கருத்துக்களை முன்பே ஆங்காங்கே எழுதியுள்ளோம்

ஆசாரியர்களின் வழி.

வைணவ ஆசாரியர்கள் தங்களுடைய பரதேவதைக்கு பல பெயர்கள் பல உருவங்கள் இருப்பதை அங்கீகரிக்காமல் பேசவில்லை. ஆனால் பகவானுக்குள்ள பெயர்களில் நாராயணன் என்ற பெயரே மிகவும் பொருத்தம் உள்ளது என்று பொருக்கி எடுத்துக் கொண்டுள்ளார்கள். இந்த பெயர் ஜீவாத்மா பிரகிருதி இவைகளால் ஆன உலகத்திற்கும் பகவானுக்கும் உள்ள உறவை சேர்த்து சொல்லுவதால் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டார்கள். ஸ்ரீ வேதாந்த தேசிகர் ரகஸ்யத்ரயசாரத்தில் பகவானுக்குள்ளபலவிதபெயர்களில் விஷ்ணுநாராயணன் வாசுதேவன் என்ற மூன்று பெயர்கள்தான் பொருத்தம் உள்ளவை என்று கூறி அவன் எங்கும் இருக்கிறான். அவனிடம் உலகம் அடங்குகிறது என்ற கருத்திற்கு இந்த மூன்று பெயர்கள்தான் இணைந்து வருகின்றன. இவைகளுள் நாராயணன் என்ற சொல்லைத்தான் பெரியோர்கள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள் என்று சொல்லுகிறார். நாராயணன் என்ற சொல்லும் கடவுள் என்ற சொல்லும் கருத்தளவில் ஒற்றுமையோடு இருப்பது கவனிக்கத்தக்கது. நாராயணன் என்ற சொல்லாலேயே கடவுளை வழிபடவேண்டும் என்றும் வற்புறுத்தி பேசுகிறார் இந்த நிலையில் மற்ற பெயர்களுக்கு சம்பிரதாயத்தில் எந்தவழியில் சமாதனாம் சொல்லுகிறார்என்று கவனிப்பது அவசியமாகிறது. ஒரே நாராயணனையேபலகருத்துக்களைக் கொண்டு அவரவர்கள் பல்பெயரிட்டு அழைக்கின்றார்கள்

அவரவர்களுக்கு எந்த உருவத்தில் ஈடுபாடோ அந்த உருவத்தை விரும்பி வழிபடுகிறார்கள். நாராயணன் ஒருவனே என்ற அடிப்படையிலேயே விஷ்ணுவிற்குள்ள பலபெயர்களும் உருவங்களும் அடங்கிவிடுகின்றன என்று இவர்கள் கருதுகிறார்கள். இது வேத வழிபாட்டுப் பண் பாட்டை அடிப்படையாகக்கொண்டது.

கடவுளுக்கு குறிப்பிட்ட உருவமில்லை; குறிப்பட்ட பெயரில்லை என்ற கருத்து வேததெய்வக் கொள்கைக்கு அடிப்படையாக இருப்பதால் வழிபடுபவர்கள் தங்களிஷ் டப்பட்ட பெயரையோ உருவத்தையோ கொடுக்க முடிகிறது. இந்த அடிப்படையிலேய வைணவம் தன் னுடைய தெய்வக்கொள்கையையும் வகுத்துக்கொண் டிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. ஒரு பாஞ்சராத்ர ஆகமவசனம் வேதம் போனவழியிலேயே போய் உனக்கு உருவமும் கிடையாது; பெயரும் கிடையாது; ஆயுதமும் கிடையாது; இருப்பிடமும் கிடையாது. ஆனால் பக்தர்களை அனுக்கிரகிக்க இவைகளை நீ பெறுகிறாய் என்று கூறுகிறது (நதேரூபம் நசாகார நாயுதானி நசா ஆஸ்பதம்)

பிற பெயர்கள்.

வேதத்திலிருந்து விஷ்ணு என்ற பெயர் வந்தாலும், *பாஞ்சராத்ரஆகமத்திலிருந்து வாசுதேவன் சங்கர்ஷணன்* ப்ரத்யும்நன், அநிருத்தன் என்ற பெயர்கள் கிடைக் கின்றன. அவ்விதமே கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன் திரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன், ரிஷிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்ற *12 எண்ணிக்கையுள்ள மற்றொரு வகைப் பெயர்* களும் வருகின்றன. இதைத்தவிர பகவான் என்ற ஒரு புதிதான சொல்லும் ஆகமங்கள் புராணங்கள் மூலமும் வருகிறது. இவைகளில் வாசுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்ற பெயர்களை ஆகமப்படி *வ்யூகங்களாகவே ஒப்புக்கொண்டு அந்தந்த பெயருக்குத்*

தகுந்தாற்போல் உருவங்களும் ஆயுதங்களும் பத்னிகளும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது ஒரே பகவானே தன்னை இவ்விதம் பலவழிகளில் வகுத்துக் கொண்டிருப்பதால் இது வ்யூகம் என்று சொல்லப்படுகின்றது. ராமாவதாரம் கிருஷ்ணாவதாரம் போன்ற உருவங்களில் காணப்படும் மாறுதல்களும் பெயர்களில் காணப்படும் மாறுதல்களும் அவதாரப்பெயர்கள் என்று சொல்லப்படுகின்றன. இங்கு வேறுவேறு உருவத்தை கடவுள் அப்போதைக்கப்போது எடுப்பதும் அந்தந்த அவதாரம் தனியாக நிற்பதும் கவனிக்கத்தக்கது. ஆகமக்காரர்கள் தங்களுடைய ஆகமப்படியுள்ள பெயர்கள்தான் தங்கள் தெய்வத்தின் மூலப்பெயர் என்று வற்புறுத்தி அவைகளுள் வாசுதேவன் என்ற பெயருள்ளவனே முழுமுதற் கடவுள் என்று வற்புறுத்துகிருர்கள். ஆகமப்படி நடக்கும் ஆலயங்களில் வாசுதேவன் முதலான பெயர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து மற்ற மூர்த்தங்கள் பெயர்கள் இவையெல்லாம் ஆகமத்தில் காணப்படும் பெயர்களின், உருவங்களின் விரிவே என்று கூறுகிருர்கள். ஆனால் வைணவ ஆசாரியர்கள் இந்தக் கருத்தை ஏற்கவில்லை. வாசுதேவன் என்ற சொல்லை அவர்கள் கைவிட்டது மட்டுமில்லாமல் வாசுதேவ மந்த்ரத்தையும் புறக்கணித்து விட்டார்கள்.

அஷ்டாக்ஷரியும் துவாதசாக்ஷரியும்.

பாஞ்சராத்ர ஆகமம் வாசுதேவன் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்ட துவாதசாக்ஷரத்தை வேதத்திற்கு போட்டியாக ஒப்புக்கொள்ளுகிறது. (துவதசாக்ஷர வித்யைவதேஷாம் வித்யா நசத்ரயி) ஆலயங்களில் இந்த வழக்கமே பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் வைணவ ஆசாரியர்கள் வாசுதேவன் என்ற சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது மட்டுமல்ல அந்த மந்திரத்தையும் தங்களுக்கு வேண்டாம் என்று ஒதுக்கி விட்டார்கள். "விஷ்ணு வாசுதேவ, நாராயண என்ற சொற்கள் அமைந்துள்ள மூன்று மந்த்ரங்களில் மற்றவை

களை கழித்து நாராயணனை முக்கியமாக கொண்ட மந்திரத்தை ஒப்புக்கொண்டபிறகு விஷ்ணு என்றசொல்லுள்ள மந்த்ரத்தையும் வாசுதேவன் என்ற சொல்லுள்ள மந்த்ரத்தையும் கைவிட்டு விட்டார்கள். இவைகளைசான்றோர்கள். ஆதரிக்கவில்லை என்று கூறுவதும் கவனிக்கத்தக்கது. (மற்றவை இரண்டிற்கும் அசிஷ்ட்ட பரிக்கிரகமும் அபூர்த்தியுமுண்டு முஷீப்படி (திருமந்த்ர பிரகரணம்) இதனால் பாஞ்சராத்ர ஆகமும் வைணவ சம்பிரதாயமும் ஒத்துப்போக இடமில்லை என்று தெளிவாகிறது. அஷ்டாக்ஷரத்தில் வரும் நாராயணன் என்ற சொல்லையே முக்கியமாகக்கொண்டு ரகஸ்யங்களில் விளக்கம்கூறப்படுகின்றது. வாசுதேவன் என்ற சொல்லை விஷ்ணுபுராணம் வேதாந்தக் கருத்துக்கிணங்க விளக்கி பொருள் கூறியும் வைணவ ஆசாரியர்கள் அதைவிட்டு நாராயணன் என்ற சொல்லையே விரும்பி விட்டார்கள். ஆழ்வார்களும் ஆங்காங்கு நாராயணன் என்ற சொல்லுக்கே முக்கியத்துவம் கொடுத்து எட்டெழுத்து என்று அதன் மந்த்ரத்தையும் குறிப்பிடுகிறார்கள். நாராயணன் என்ற சொல் திடீரென்று எப்படி முக்கியத்துவத்தை பெற்றது என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். பன்னிரண்டு வ்யுகங்களில் நாராயணன் என்ற பெயரும் ஒரு பெயராகவே கொள்ளப்படுகிறதே தவிர தனியான முக்கியத்துவத்தை பெறவில்லை. விஷ்ணு என்ற பெயர் பெயரளவிலேயே நின்றுவிட்டது. நாராயணன் விஷ்ணு வாசுதேவன் என்ற மூன்று பெயர்களுக்கும் தனியான முக்கியத்துவம் கொடுத்து வேதம், ஆகமம், ஆழ்வார்களின் மரபு, இவைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டு வைணவம் அமைந்திருப்பதை தெரிவிக்கின்ற.

பகவான் என்ற பெயர்.

பாஞ்சராத்ர ஆகம சம்பிரதாயமே பாகவத சம்பிரதாயம் என்று கூறப்படுகிறது. வைணவர்களை பாகவதர்கள் என்றும் குறிப்பிடுகிறோம். பாகவதம் என்ற

பெயரில் விஷ்ணுவின் பெருமையை விளக்கும் நூலும் இருந்து வருகிறது. பல இடங்களில் பகவான் என்ற சொல்லும் விஷ்ணுவோடு சேர்த்துச் சொல்லப் படுகிறது இந்த சொல் எங்கிருந்து வருகிறது. பாஞ்ச ராத்ர ஆகமத்திலும் பகவான் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறப்படுகிறது. விஷ்ணு புராணத்திலும் பகவான் என்ற சொல்லை விஷ்ணுவோடு சம்பந்தப் படுத்தி விளக்கம் கூறப்படுகிறது. அது ப-க-வ-ந என்று சொல்லின் எழுத்துக்களை பிரித்துக்கொண்டு விஸ்தாரமாக பொருள கூறுகின்றது. ஆனால் ராமானுஜர் ஒருவர்தான் ஸ்ரீ பாஷ்யத்தில் பகவான் என்ற சொல்லுக்கு விஷ்ணு புராணத்தைப் பின்பற்றி விளக்கம் கூறுகிறார். ஆனால் இதேபகவான் என்ற சொல்லுக்கு பாஞ்சராத்ர ஆகமம் ஞானம், பலம், ஐஸ்வர்யம், வீரியம், சக்தி, தேஜஸ் என்ற ஆறு குணங்கள உள்ளன என்று பொருள் கூறி அவைகள் சங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் இவர்களிடையில் வகுக்கப்பட்டு நிற்பதையும் விளக்கு கிறது. வைணவ சம்பிரதாய ரகஸ்ய நூல்களும் ஆகம வழியிலேயே போகின்றன. இந்த சொல்லின் சரித்திரமே விசித்ரமானது. இந்த சொல்லையும் மதங்களுக்கு வேதம் தான் அளித்தது. பகவான் என்ற சொல் வேதத்திலேயே காணப்படுகிறது. 'பகன்' என்ற பெயரிலேயே ஒரு தேவதையும் இருந்து வருகிறான். பொதுவாக பார்க்கு மிடத்து பகவான் என்ற சொல் சகல சௌபாக்கியமும் நிறைந்தவன் என்ற பொருளை கொண்டது என்று தெரிகிறது. 'லக்ஷ்மி' என்ற சொல் போல் பகவான் என்ற சொல்லுக்கும் கருத்தளவிலேயே முக்கியத்துவம் உண்டு. என்று தெரிகிறது. இது தெய்வங்களுக்கும் பெரியோர் களுக்கும் அடைமொழியாகவும் இன்றுவரை பயன் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட தெய்வம் என்ற முறையில் விஷ்ணுவையும் இது குறிப்பிடுகிறது என்று தெரிகிறது.

கடவுள் இலக்கணம்.

வேதத்தின் தெய்வக் கொள்கையை விளக்க ஆரம்பித்த பிரம்ம சூத்திரக்காரர் படைப்பு, பாதுகாத்தல், அழித்தல் இவைகளை யார் செய்கிருரோ அவர்தான் முழு முதற்கடவுள் என்று கூறினர். இதை எல்லோரும் இலக்கணமாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். முத்தொழில்களோடு ஆகமங்கள் இரண்டு அதிகப்படியான தொழில்களையும் சேர்த்துக்கொண்டன. 'திரோதானம்' (ஆன்மாவின் உண்மை உருவத்தை மறைப்பது) அனுக்கிரகம் (அதை விலகச்செய்வது) இவையும்சேர்த்து ஐந்து தொழில்களாக ஆகமத்தைச்சேர்ந்த பெரியோர்கள் கொண்டார்கள். ஆனல் இவ்வித இலக்கணம் கடவுளுக்கும் உலகத்திற்கும் இடையில வேற்றுமையை அடிப்படையாகக்கொண்டு பேசுகிறது. உலகம் கடவுளின் உருவே என்ற கருத்திற்கு இது போதாதனல் இந்த இலக்கணத்தை வைத்துக்கொண்டு "உலகம் எங்கிருந்து வருகிறதோ" "எதனல் உலகம் இருந்து வருகிறதோ" "முடிவில் உலகம் எங்கு முடிவடைகிறதோ" அது கடவுள் என்ற இலக்கணத்தையும் சேர்த்தார்கள். இந்த இலக்கணம் உபநிஷத்தின் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டது. மண்ணிலிருந்து மண் குடம் உருவாகிறது. குடம் உடைந்தால் மறுபடியும் மண்ணுகவே ஆகிவிடுகிறது. ஆக மண்ணைத்தவிர குடத்தில் வேறு ஒன்றும் கிடையாது என்று தெளிவாகிறது. மேலும் பகவானுடைய அடிப்படையான தத்துவத்தைப் பற்றி பேசும்கால் சத்யம் (உண்மை) ஞானம் (அறிவு) அனந்தம் (அளவற்றநிலை) ஆனந்தம் இவை கடவுளின் இயற்கைக்கு அடிப்படை என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. வேதத்தைப் பின்பற்றின சைவமோ வைணவமோ இந்த இலக்கணம் இயற்கை இவைகளை அடிப்படையாக கொண்டுதான் தங்களுடைய கடவுளை விளக்கவேண்டும். இந்த நிலையில் இதற்கு பெயர் உருவம் ஒன்றுமில்லை. அதனுலேயே இந்த

அடிப்படையில் உள்ள தத்துவத்தை விஷ்ணு என்று வைணவர்கள் கூறுகிறார்கள். சிவபெருமான் என்று சைவர்கள் கூறுகிறார்கள். அம்பாள் என்று சாக்தர்கள் கூறுகிறார்கள். முத்தொழில்களை ஒருவரிடமே வைக்கக் கூடாது என்ற கருத்து புராணங்களில் வளரவே முத் தொழில்களுக்கும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகள் சொல்லப்பட்டுள்ளார்கள். ஆனால் மும் மூர்த்திகளிடையில், உள்ள விஷ்ணு, சிவன் இருவர்களை முழுமுதற் கடவுளாகவைணவர்களும்,சைவர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அவர்கள் மும்மூர்த்திகளுக்கிடையில் உள்ள சிவ விஷ்ணு தத்துவம் குறிப்பிட்ட காரியத்திற்காக ஏற்பட்டிருப்பதால் இவர்கள் முழுமுதற்கடவுள் இல்லை என்று சொல்லி இவர்களுக்குமேல் ஒரு தத்துவத்தைச் சொல்லி சைவர்கள் அவரையே சிவபெருமான் என்றும் வைணவர்கள் அவரையே விஷ்ணு என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவரே முழுமுதற்கடவுள். அவர் மும்மூர்த்திகளுக்கிடையில் ஒரு காரியத்தைச் செய்ய இருந்து வருகிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல், உலகமாக ஆகுவது போன்ற இலக்கணங்களும் சத்யம், ஞானம், அநந்தம், ஆனந்தம் என்ற சொரூபமும் சிவபெருமானை வழிபடு பவர்களுக்கும், விஷ்ணுவை வழிபடுபவர்களுக்கும் பொதுவாகயிருப்பதால் இரண்டு மதங்களின் கருத் தளவில் உள்ள ஒற்றுமை நன்கு வெளியாகிறது. பெயரள விலேயே வேற்றுமை காணப்படுகின்றது. முழுமுதற் கடவுளாக சிவனை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் விஷ்ணு அவனால் படைக்கப்பட்டவன். என்று கூறுகிறார்கள். விஷ்ணுவை முழுமுதற்கடவுளாக ஒப்புக்கொண்டவர்கள் சிவபெருமானை விஷ்ணுவினால் படைக்கப்பட்டவர்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் கடவுள் இலக்கண அளவில் வேற்றுமையை பார்க்க முடியாது. பெயர் உருவங்களில் ஏற்படும் மாறுதல்கள் கடவுள் கருத்தில் மாறுதலை உண்டுபண்ணுததினால் விஷ்ணு, நாராயணன், வாசுதேவன் என்ற பெயர்களில் காணும் வேறுபாடு

களும் வேற்றுமையை உண்டு பண்ண முடியவில்லை. பாஞ்சராத்ர ஆகமத்தைப் பின்பற்றி சொல்லப்படும். ஆறு குணங்களும் விஷ்ணு, நாராயணன், வாசுதேவன் என்ற மூன்று பெயர்களில் நிற்கும் கடவுளுக்கும் பொதுவாக நிற்பதால் இங்கும் பெயரளவிலேயே வேற்றுமை காணப்படுகிறது.

இவ்விதமே புராணங்களிலோ வேதங்களிலோ சொல்லப்படும் அக்னி, இந்திரன் போன்ற தெய்வங்கள் நாராயணனுக்கு பரிவாரங்களாக சொல்லப்படுகின்றனர் அவ்விதமே கடவுள் இலக்கணத்தோடு பொருந்தியுள்ள சொல் எந்தப் பெயரைக் குறிப்பிட்டாலும் நாராயணனையே குறிப்பிடுகிறது என்று வைணவர்கள் கருதுகிறார்கள். எல்லோருக்கும் உள்ளிருந்து ஆட்சிபுரியும் (அந்தர்யாமி) கடவுளாக நாராயணனை ராமானுஜர் ஒப்புவதால் கடவுள் இலக்கணம் இல்லாத இடங்களிலும் அந்தந்த தெய்வங்கள் மூலம் நாராயணன்தான் வழிபடப்படுகிறான் என்று சொல்லப்படுகிறது. இதனால் வைஷ்ணவர்கள் விஷ்ணு அல்லாதவர்களை வழிபட வழிகூறி ஒற்றுமையை காப்பாற்றி விட்டார்கள்.

கீதைச் செய்தி

கீதையில் பகவான், யார் எந்தப் பெயருள்ள தெய்வத்தை உபாசித்தாலும் தான் எங்குமிருப்பதால் தன்னையே தான் அவர்கள் உபாசிப்பதாக கொள்ளுகிறேன் என்று கூறுகிறார். இதுவும் ஒருவழியில் ஒரே தெய்வம் என்ற கொள்கையுடன் நெருங்கி நிற்கிறது. ஆனால் இங்கு பகவான் தன்னுடைய பெயரை குறிப்பிடாமல் இருப்பது கவனிக்கத்தக்கது. அதுமட்டுமல்ல ஆதித்தியர்களுள் தான் விஷ்ணுவாக இருப்பதாக கூறுகிறார். (ஆதித்யானும் அஹம் விஷ்ணு) அவ்விதமே விருஷ்ணிகளுக்குள் தான் வாசுதேவனாக யிருப்பதாகக் கூறிக்கொள்கிறார். இதனால் வாசுதேவன் என்ற பெயரும் விஷ்ணு என்ற பெயரும் தனித்து நிற்பது வெளியாகிறது.

முடிவுரை.

இந்நூலில் தென்னாட்டு வைணவம் பேரறிவாளி களான சிந்தனையாளர்களின் அயராத உழைப்பால் எவ்வாறு உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் பலவற்றையும் உள்ளடக்கிய பெருங்கடலாகக் காட்சியளிக்கின்றது என்பதும், இம்முறையில் தென்னாட்டுவைணவம் பாரத தேசத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படும் வைணவத் தைவிடத் தத்துவரீதியில் மஹோந்நதமான உயர்வை எய்தியுள்ளது என்பதும் விளக்கப்பட்டுள்ளன.

எதனையும் வரலாற்றுக்கண்கொண்டு விஞ்ஞான முறையில் ஆராய்ந்து அனுபவிக்கும் மேனாட்டு முறைக் கல்விவல்லாருக்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்னரே தோன்றி முறையாக வளர்ச்சி பெற்றுப் பாரததேசம் முழுதும் கடல் கடந்தும் பரவி விக்கிர வழிபாடு, ஆலய வழிபாடு இவற்றை மையமாகக் கொண்டு மக்கள் உள்ளத்தில் நிலைத்த இடம் பெற்றுச் சித்தனையாளர்களுடைய அருமையான நூற்றுக்கணக் கான நூல்களால் தத்துவவிளக்கங்களை முறையே பெற்றுத் தென்னாட்டில் ஆழ்வார்களின் அருளிச் செயல் களால் புது மெருகு பெற்று விளங்கும் வைணவ சமய வரலாறு பற்றிய இச்சிறுநூல் பெருவிருந்தாகி, இத்துறை யில் விரிவான பல நுல்கள் யாப்பதற்கு அடித்தளமாக அமையும் எனவும் நம்புகிறேன்.

'காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருளை
ஆய்தல் அறிவுடையார் கண்ணத்தே'

வரலாற்றில் பிறந்த வைணவம்

சில சொற்களின் விளக்கம்.

பக்கம் 1

மதம் :- அறிவிற்கு அப்பால் உள்ள ஒன்றை ஒப்பி அதற்கும் தனக்கும் உள்ள உறவை உணர்ந்து செயல் படவேண்டிய முறைகளை வகுக்கும் தத்துவம்.

,, 2

வேதம் : இந்துக்களின் மதவேதாந்த கருத்துக்களுக்கு மூல நூலாகவும், புனித நூலாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இது இருவகையானது. மந்திரம், பிராம்மணம் என்று இவைகளுக்குப்பெயர். மந்திரம், வழிபாட்டிற்காக கையாளப்படும் வாக்கியங்கள். பிராம் மணம், வழிபாட்டு வகையை வகுப்பது. மந்திரம், ரிக், யஜுஸ், ஸாமம் என்று மூன்று வகையானது. ரிக் :- செய்யுள் நடையில் அமைந்து கடவுளைப்புகழ்ந்து வழி பட உதவுவது. யஜுஸ் :- வேள்விகளை செய்யுங்காலத் தில் சொல்ல வேண்டிய வசன நடை உள்ள வாக்கியங் கள். ஸாமம் :- இசையுடன் இணைந்துள்ள ரிக்குகள். மந்திரங்கள் மூன்று வகையாக இருந்தாலும் வேதம் நான்கு விதமாக நிற்கிறது. ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் என்று நான்கு வகை யானது. மந்திரங்கள் மூன்று விதமாக இருந்தாலும், சாந்தி, புஷ்டி இவைகளை அடைய மனிதவர்க்கத்திற்கு உதவி செய்யும் மந்திரங்கள், அதர்வ மந்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன. இவை அதர்வவேதத்தில்

தனியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மற்ற மூன்று வேதங்களில் கடவுளை வழிபடவும் வேள்விக்கான மந்திரங்களும் பிராம்மணங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

,, 3 யுகங்கள் : பிரளயம்

ஹிந்துமத நம்பிக்கைப்படி உலகம் அநாதியானது. முடிவும் இல்லாதது. அனுல் அப்போதைக்கு அப்போது ஓர் உருவத்தை அடைந்து மறைவது. நீரிலிருந்து நிலம் உருவாகிறது. நிலத்தில் செடி கொடிகள் உண்டாகி மனிதவர்க்கமும் உருவாகிறது பண்பாடும் உருவாகிறது. உருவான நிலம் சிலகாலம் இருந்து மறைந்துவிடுகிறது. அப்போது நீர்தான் மிஞ்சியிருக்கிறது. இதைப் பிரளயம் என்று சொல்லப்படுகிறது. உலகமே நீரில் மூழ்கி இருக்கும் காலத்தை பிரளயம் என்று சொல கிறோம். பிரளயம் என்ற சொல்லுக்கு அடங்குமிடம் என்று பொருள். பிராணி வர்க்கங்களோடு நிலம் நீரில் அடங்கி விடுவதால் பிரளயம் என்று சொல்லப்படுகிறது. ஒரு தடவை நீரிலிருந்து நிலம் உருவாகி அசைவன, அசையாதென்ப ஆகிய பொருள்களும் வளர்ந்து மனித வர்க்கமும் வளர்ந்து, மனிதப் பண்பாடு வளருங்காலத்தை, யுகம் என்று சொல்லுகின்றோம். கிருதயுகம், த்ரோதாயுகம், துவாரயுகம், கலியுகம் என்று நான்கு வகையானது. கிருதயுகத்தில் நூற்றுக்கு நூறு நற்காரியங்கள் நடக்கும். த்ரேதாயுகத்தில் 75பங்கு நற்காரியமும் துவாபரயுகத்தில் 50 பங்கு நற்காரியமும், கலியுகத்தில் 25 பங்கு நற்காரியமும் நடக்கும் மனித பண்பாட்டின் உச்சநிலை க்ருத யுகத்திலிருந்து பிறகு குறைய ஆரம்பிக்கிறது. இவ்வித நான்கு யுகங்களும் சுற்றிக்கொண்டே வருகின்றன. ஊழி என்பது அநேக நான்கு யுகங்களைக் கொண்டது. ஒரு ஊழியில் நடப்பதுதான் மற்றொரு ஊழியில் நடக்கும். ஊழி என்பது நீரிலிருந்து நிலம் உருவாகும் காலத்தில் ஆரம்பிக்கிறது. மறுபடியும் நீரில் நிலம் மூழ்கும் வரையில் இதன் காலம். யுகங்கள் இலட்சக்கணக்கில் வருஷங்கள் உள்ளவை. மனிதப்

பண்பாட்டில் ஏற்படும் மாறுதல்கள் நான்கு யுகங்களோடு நின்று விடுகின்றன. மறுபடியும் மற்றொரு நான்குயுகம் ஆரம்பிக்குங் காலத்தில் பண்பாட்டின் உச்சநிலை துவங்குகிறது.

,, 4 முத்தொழில்கள் :

கடவுள், செய்யும் படைத்தல், காத்தல் அழித்தல் என்ற தொழில்கள்.

பரிணமம் : உண்டான பொருள் தன் உருவத்தில் தானகவே மாறுதல் அடைவது.

,, 5 அவதாரம் :

தன் உருவை விட்டு வேறு உருவில் கடவுள் வருவது பிர்மா படைத்தல் தொழிலை செய்பவர் பாதுகாக்கும் தொழில் செய்பவர் விஷ்ணு. அழிக்கும் தொழிலை செய்பவர் ருத்ரன். புராணங்கள் முத்தொழிலைச்செய்ய மூம்மூர்த்திகளை சொல்லுகின்றன.

தமிழ்நாட்டு வைணவம் : நாத முனிகள் காலத்திற்குப் பிறகு வேதாந்த தேசிகர்வரை ஆசார்யர்கள் எழுதியுள்ள நூல்களில் உருவாகியுள்ள விஷ்ணு வழிபாட்டுக் கொள்கை. தனி வடமொழியிலும், வடமொழியும், தென்மொழியுங் கலந்த மணிப்பிரவாள மொழியிலும் உள்ள நூல்களில் கருத்துக்கள் காணக்கிடக்கின்றன.

,, 6 வைணவம் : விஷ்ணுவையே முழுமுதற் கடவுளாகக்கொண்டு வளர்ந்துள்ள கொள்கைகள்.

,, 7 தெய்வாம்சம் : தெய்வம் என்ற சொல் மனிதத்துவத்திற்கு எதிராக நிற்பது. மனிதனிடத்திலுள்ள குறைகள் இல்லாதது. இது சிறிது இருக்குமிடம் தெய்வாம்சம்.

,, 8 வேதமதம் : வேதநூல்களை அடிப்படையாகக்கொண்டு நிற்கும் கடவுள் கொள்கை.

உபநிடதங்கள் : ஆன்மாவைப்பற்றியும் பிரம்மத்தைப் பற்றியும் மட்டும் விளக்கும் வேதத்தின் பாகங்கள்.

(பக்தி) கடவுளிடம் அன்பைச் செலுத்தி அதன் அடையாளமாக மனோவாக்கியங்களில் செயல்படுவது.

(சரணாகதி) வேறு வழியில்லாமல் ஒன்றைப் பற்றுவது.

(சடங்கு)சிறிதும், பெரிதுமான வேள்விகள். நெருப்பில் ஹோமம் பண்ணுவது இங்கு முக்கியம். (ஞான மார்க்கம்) கடவுளை தெரிந்துகொள்வதாலேயே மோக்ஷத்தை அடைய நினைப்பது. (பக்தி மார்க்கம்) கடவுளிடம் காதலைச் செலுத்தி அதன் மூலமாகவே மோக்ஷத்தை அடைய நினைப்பது.

(ப்ரபத்திமார்க்கம்) தன்னால் ஒன்னும் செய்யமுடியவில்லை என்று உணர்ந்து கடவுளையே புகலிடமாகக் கொள்வது. இதனாலேயே மோக்ஷத்தை அடைய நினைப்பது ப்ரபத்திமார்க்கம்.

(கர்மா) வேதத்தில் சொல்லப்படும் வேள்விகள் (அறவழிப்பண்பாடு) அறநெறியை அடிப்படையாகக் கொண்ட பண்பாடு.

(வேதவித்து) வேதத்தை ஓதியவர்கள்.

,, 9 கர்மதத்துவம் : வேத வேள்விகளை முக்யமானவை என்று நினைப்பது. (வர்ணம்) ஜாதிக்கட்டுப்பாடு. வேதாந்திகள் : யுக்தியை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்பவர்கள் (மதாசாரியர்கள்) தெய்வக் கொள்கையை உருவாக்குபவர்கள். அர்ச்சாவதாரம் : வழிப்பாட்டிற்காக கல்லுருவத்திலேயோ மண்ணுருவத்திலேயோ பகவான் இறங்கி நிற்பது.

,, 10 பூர்வபக்ஷம் : வாதப்போரில் முதலில் கருத்துக்களைச் சொல்லுவது.

,, 11 நாமசங்கீர்த்தனம் : கடவுளை அனுபவிக்க பெயர்களை மட்டும் வாயால் சொல்வது (சுத்தாத்

வைத வேதாந்தம்) கடவுளே உண்மையாக உலகமாக தோற்றமளிக்கிருர். முடிவில் கடவுள் தான்மட்டும் நிற்கிருன் உலகம் பொய்யில்லை. (த்வைதம்) உலகம், ஆன்மா, கடவுள் மூன்றையும் வேறு வேருக ஒப்புக் கொண்டு ஆன்மாக்களிடம் வேற்றுமையை ஒப்புவது. (அசிந்த்யபேதாபேதம்) ஆன்மா, கடவுள் இவர்கள் இருவருக்கும் இடையில் உள்ள உறவு சிந்தனைக்கு எட்டாத ஒற்றுமை வேற்றுமை என்பது.

,, 13 (உபயவேதாந்திகள்)

வடமொழி வேதாந்தம் உபநிஷத் ஆழ்வார் களுடைய அருளிச் செயல்கள் இரண்டையும் வேதாந்த மாக ஒப்புவார்கள்.

,, 14 (காலக்ஷேப கூடங்கள்) பிறர் காது களுக்கு கேட்காமல் சிஷ்யனுக்கு ரஹஸ்ய உபதேசம் செய்யுமிடம்.

(உபாசனம்) உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட வழியில் பிரம்மத்தை தியானம் பண்ணுவது.

,, 15 (திவ்யப்ரபந்தம்) ஆழ்வார்களுடைய பாடல்கள்.

(பக்தியோக நெறி) பக்திநெறியில்நிற்பது.

(பிரபத்தியோக நிஷ்டர்கள்) ப்ரபத்திசெய்வதிலேயே நிற்பவர்கள்.

(தமிழ்நாட்டுப் பக்தி மார்க்கம்) தமிழ்மொழி பேசும் மக்களிடத்தில் மட்டும் இருந்துவரும் பக்திநெறி.

,, 20 (சித்தித்திரயம்) ஆளவந்தாருடைய ஆத்ம சித்தி, சம்த் சித்தி, ஈஸ்வர சித்தி என்ற மூன்று நூல்கள்

(தத்வத்திரயம்)ஆன்மா,கடவுள், இயற்கை என்ற மூன்று அடிப்படைக்கொள்கைகள்

(சரீரசரீரபாவம்)ஆன்மாவையும், இயற்கையையும் இறைவனுக்கு சரீரமாக சொல்லுவது. இது இராமாநுஜரின் தனிக்கொள்கை.

(மோக்ஷ உபாயங்கள்)மோக்ஷத்தை அடைய கடை பிடிக்கவேண்டிய வழிகள்.

(கர்ம ஞானபக்திகள்)வேள்விகளைச்செய்வது. அறிவில் கடவுளைக் காண்பது. கடவுளிடம் அன்பைச் செலுத்துவது.

,, 21 (ரகஸ்ய சம்ப்ரதாயம்) நூல்களில் ஏருத கர்ண பரம்பரையாக வந்துள்ளது.

ப்ரபன்ன சந்தான கூடஸ்தர்: பிரபத்தி செய்பவர் களுடைய வழியில் வந்த மூலபுருஷர்.

,, 22 (ஆலயம்) கடவுளின் உருவத்தை மண்ணு லோ, கல்லாலோ ஆக்கி பொதுமக்கள் வழிபடும் இடம்.

,, 23 (நித்ய நைமித்திககிரியை) அன்றுடம் செய்யவேண்டியதும் விசேஷ காலங்களில் செய்ய வேண்டியதுமான ஆலயவழிபாடு. (நிர்க்குணபிரம்மம்) கடவுளை ஒப்புக்கொண்டு குணமில்லை என்று சொல்வது.

,, 24 (சிந்தனை செயல்) சிந்தனையில் மட்டும் ஈடுபடுவது.

55 (பஞ்சவீரர்) வீரர்களான கிருஷ்ணன் பலராமன் வ்ருத்யுமனன், அநிருத்ன், சாம்பன் இவர்களை கடவுளாக நினைத்து வழிபடுவது.

85 (த்ரிராத்ரம்) மூன்று தினங்களில் செய்யப்படும் வேள்வி.

(யூபஸ்தம்பம்)யாகங்களில் முன்னல் நாட்டப்பட்டது தூண்போல் உள்ளது. (வைதிக கர்மா) வேதத்தில் மட்டும் சொல்லப்பட்ட வேள்விகளை விஷ்ணுவின் ப்ரீதிக்காக செய்வது.

,, 91 (பலிசத்ரா) பலிபோடுவதற்காகவும், அன்னதானத்திற்காகவும் செய்யப்பட்ட ஏற்பாடு.

,, 109 (ஏகாயனம்) ஒருவனையே தெய்வமாகச் சொல்லும் வேதம்.

,, 111 (பஞ்சகாலப்ரகிரியை) அபிகமனம், உபாதானம், இஜ்யை ஸ்வத்யாயம், யோகம், என்று ஐந்துவிதமாக அன்றுட அனுஷ்டாங்களை வகுத்துச் செய்வது.

,, 116 (சத்திரம்) பன்னிரண்டு நாட்களுக்கு மேல் செய்யப்படும் வேள்வி.

,, 122 (விருஷ்ணி) கிருஷ்ணனுடைய இனத்தார்.

,, 129 (பஞ்சாயதனபூஜை) ஐந்து வகை தெய்வங்களை ஒரேஇடத்தில் வழிபடுவது.

,, 133 (சாதுராத்மிய உபாசனம்) கடவுளை நான்கு விதமாக வைத்து வழிபடுவது.

,, 189 (சித்தோபாயம்) பகவானையே உபாயமாக நினைப்பது.

,, 191 (சிரவணம்) கடவுளைப்பற்றி காதால் கேட்பது. (மனனம்) யுக்திகளால் கேட்டவற்றை சிந்தனைசெய்து நிலை நாட்டிக்கொள்வது (தியானம்) கேட்டதை திரும்பத் திரும்ப இடைவிடாது சிந்திப்பது.

,, 194 (லகுசித்தாந்தம்)ராமநுஜரின் ஸ்ரீபாஷ்யத்தில் காணப்படும் சிறிய சித்தாந்தத்தை சொல்லுமிடம்.

,, 195 (ப்ரபத்தி சரணகதி) மோக்ஷத்தை அடைவதற்காக வைணவர்கள் பின்பற்றும் உபாயம். இது பலகருத்துக்களைக் கொண்டது. பல பெயரால் அழைக்கப்படுகிறது.

,, 195 (சிவை) சிவ என்றசொல்லின் பெண்பால்.

,, 206 (லயார்ச்சை, போகார்ச்சை, காம்யார்ச்சை) விஷ்ணு ஆலயங்களில் அம்பாளினுடைய உருவம் இருக்கும் வகை.

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	25	என்பது	என்பதும்
6	29	நிகழ்வதாகலின்	நிகழ்வதாதலின்
7	24	ஹெரட்டிஸ்டன்	எடிங்டன்
9	6	ஹிந்துமதம்	ஹிந்துமதத்தின்
9	29	மேன்மேல்	மேன்மேலும்
10	28	அஸ்ருவோளுரு	வேறுஒரு
10	27	அநுவாதம்	அநுவாகம்
11	5	Worhip	Worship
12	29	மாசுயோயே	மாஅயோயே
13	7	வீடுபேறு	வீடுபேறு
16	12	அருதியாவது	அருகியாவது
18	12	பாஞ்சராத்தர	பாஞ்சராத்திரா
19	12	ஏராத	ஏருத
20	2	தத்வாரயத்திற்கு	தத்வத்திரயத்திற்கு
20	14	தெறிகிறது	தெரிகிறது
21	32	நிலைவேறுடைய	நிலைபேறுடைய
21	12	கருந்துக்களை	கருத்துக்களை
24	26	சிநதனையின்	சிந்தனையின்
25	5	என்று	என்றும்
25	13	ஈசாவாகிய	ஈசாவாஸ்ய
25	26	சிறிய	சீரிய
25	20	பராசுமு	பரர்சமு
25	26	நினைவுகூறத்தக்கது	நினைவுகூரதக்கது
27	8	நிறைசெய்து	நிறைவுசெய்து
27	30	முடிக்கு	முடிவுக்கு
28	19	முருகாற்றுப்படை	திருமுருகாற்றுப் படை
29	6	குறிப்பிட்	குறிப்பிட்ட
30	6	இருந்த	குருந்த
31	7	தமதுமது	தமதம் (து)
31	9	நிலமையன்னெ	நிலமையென்ன

31	10	அறிவுஅரிய	அறிவு (அ)ரிய
31	11	நிலைமையென்ன	நிலைமையென்ன
35	25	வைகுந்தவாஸனுதன்	வைகுந்தவாஸனுனை
37	4	ஒவ்வோரு	ஒவ்வொரு
38	26	தானுபாய்	தாயுமாய்
39	4	தன்மயமாக்கு	தன்வயமாக்கு
44	9	என்ற	என்பதற்கு
44	9	சொற்பொருள்	சொல்லின்பொருள்
45	15	பொருப்புணர்ச்சியை	பொறுப் புணர்ச்சியை
47	1	கொடுக்	கொடுக்க
48	16	முனபிருந்த	முன்பிருந்தே
49	9	அலர்சடை	அவிசடை
49	11	யுரையும்	புரையும்
49	12	அடலலெம்	அடல்வம்
49	21	21ம்	31ம்
50	2	ஓகந்தார்சந்து	ஓகத்தூர்சத்து
50	4	திறுமுருகாற்றுப் படை	திருமுருகாற்றுப் படை
50	15	அல்லது	அல்லதை
•50	16	உண்டோ	எளிதோ
51	3	வெங்க்டம்	வெங்கடம்
51	14	வால்வளை	வால்வளை
51	14	நேமிவாலியோன்	மேனிவாலியோன்
51	20	உவகைச்	உவனச்
52	8	மானிடம்	மானுடம்
54	16	பளித்தளனர்	பளித்தனர்
54	9	முன்னேறிவிட்டன	முன்னேறிவிட்டது
55	15	சைண	சமண
55	16	சைணமே	சமணமே
55	17	சைணர்கள்	சமணர்கள்
56	3	சைணக்கோயில்	சமணக்கோயில்
48	2	வென்றுடை	வெண்குடை
58	25	சலசயனப்	தலசயனப்
58	2	நிமும்செங்கோல்	நிமல்செங்கோல்
59	16	புண்டரீகாக்ஷி	புண்டரீகாக்ஷ
60	25	பல்லேசுவர	பல்லவேசுவர
63	14	முதலன	மூலதன
63	12	மருப்ம	பிரும்ம

64	3	பாண்டியகால	பாண்டியர்கால
64	19	வேள்விக்கு	வேள்விக்குடி
64	30	பட்டாரகளை	பட்டாரகரை
66	7	மூலப்பிருத்தியன்	மூலபிருத்தியன்
66	17	சேதியரான்	சேதியராயன்
66	25	நடந்து	நடத்து
67	8	முதலியவற்றிக்கு	முதலியவற்றிற்கு
68	1	சுந்தரப்பாண்டியன்	சுந்தரபாண்டியன்
68	11	இன்னத்தூர்	குன்னத்தூர்
68	30	எறிய	ஏறிய
72	13	சாத்துமாலை	சாற்றுமுறை
75	22	அகளங்கண்	அகளங்கன்
75	2	இராமாஜர்	இராமானுஜர்
77	4	ஹிராக்ஸ்	ஹிராக்கல்
77	6	யோனஸஸ்	யோனிஸஸ்
85	16	ஷிஸா	ஹிஸார்
87	22	பங்கூறு	பங்கூரா
88	23	சேர்த்தவன்	சேர்ந்தவன்
93	19	பௌப்லி	பொப்லி
95	4	கருடாரு	கருடாருப
96	12	ஆவீர	ஆபீர
103	18	கொள்கைள்	கொள்கைகள்
104	18	அவ்விதமே	அவ்விதமே உலக
		மற்றவர்கள்	வாழ்க்கையில்
104	27	அனைய	அடைய
104	28	ஆம்லய	ஆலய
106	15	வல்லுனர்கள்	வல்லுநர்கள்
106	31	சேர்ந்துள்ளார்கள்	சேர்த்துள்ளார்கள்
107	14	மத்திரம்	மந்திரம்
107	27	அப்பையத்	அப்பைய
		தீக்ஷதர்	தீக்ஷிதர்
108	8	கருத்துக்	கருத்துக்
		கருத்துக்களையும்	களையும்
108	21	தோன்றிபது	தோன்றியது
109	9	பாஞ்ச	பாஞ்சராத்தி
		ராத்திலுள்ள	ராத்திரத்திலுள்ள
110	22	ஆகமப்பரா·	ஆகமப்ராமன்
		யண்யத்தில்	யத்தில்
111	16	ஆசரணைகள்	ஆசரணைகள்

111	20	ஆப்டே	ஆப்தே
112	7	வைதகி	வைதீக
113	3	பாடுடன்	பாட்டுடன்
112	8	இதனுல்	பாஞ்ச
		பாஞ்சராத்ர	ராத்ர
113	13	சய்பவர்	செய்பவர்
111	18	நைமித்திசு	நைமித்திக
119	11	ப்ரத்யும்மண ன்	ப்ரத்யும்னன்
119	17	பரக்க	பரக்கப
121	23	உருவமாக்கி	உருவாக்கி
121	18	நிர்பந்திந்த	நிர்பந்திக்க
122	31	நிர்புந்தம்	நிர்ப்பந்தம்
123	17	என்று	என்ற
123	14	மேலிடத்தில்	மேலிடத்தில்
		வஸ்து	உள்ளவஸ்து
124	2	தனியாக	அதுதனியாக
124	8	பரவிட்ட்து	பரவிவிட்டது
124	14	வ்யூகங்	வ்யூகங்கள்
		களிலிவிருந்து	விருந்து
124	28	இக்ஷவாகுக்	இக்ஷிவாகுக்
		கும்	கும்
124	31	மறைந்போன	மறைந்துபோன
125	32	ஸீக்த்தந்தின்	ஸிக்தத்தின்
127	12	வைகான	வைகானச
129	9	வளர்த்து	வளர்ந்து
129	12	சிந்தாந்தங்கள்	சித்தாந்தங்கள்
129	19	பிராயசித்தம்	பிராயச்சித்தம்
130	27	கவடையே	கவட்டையே
130	17	தந்திராந்திரம்	தந்திராந்திரம்
		பெயர்	என்றுபெயர்
133	5	அவர்களிட	சாத்தவர்களிட
		மிருந்து	மிருந்து
134	24	கர்மாவைதான்	காமாவைத்தான்
135	13	உறவில்	உருவில்
136	18	இருந்தாக	இருந்ததாக
136	21	வாஸு	வாஸு
		தேனுக்கு	தேவனுக்கு
137	1	வழிபாடோடு	வழிபாட்டோடு
138	7	வந்திருப்பதை	வந்திருப்பதையும்

139	30	நூற்ருண்டு களுக்கு.பிறகு	நூற்ருண்டு களுக்குப்பிறகு
139	32	தேரிந்ததே	தெரிந்ததே
140	32	பக்கத்தில்	பக்ஷத்தில்
141	11	புராதணத்துவம்	புராதனத்துவம்
141	24	மைலன்	மைசூர்
142	10	சாதுமாத்மிய	சாதுராத்'மிய
142	19	வேற்றுக்கும	வேற்றுமைக்கும்
142	23	பின்பறி	பின்பற்றி
142	25	அர்வைத	அத்வைதக்
143	19	விலக்கப் பட்டது	விலகி நிற்பது
143	13	பிரப்பிரம்மம்	பரபிரமமம்
145	18	வேதங் களிவிருந்து	வேதங் களிலிருந்து
145	8	அவதார மாகக்	அவதார மாகக்
145	7	பெயர்கள்	பெயர்கள்
147	29	சஸ்கா	சகஸ்ப,
148	21	வடபாவ	வடவாவ
149		கதிரசின்	க்த்ர
149	13	இவற்றில்	சிலவற்றி
149	28	வாமண்ன்	வாமனன்
149	8	போகநாத	லோகநாதன்
149	9	காந்தாத்மர்	சாந்தாத்மன்
149	11	நயக்குராத	நியோக்குரோத
149	12	கெங்குஸ் காதமன்	கெசிருங் காத்மன்
140	27	நாராயனனி டத்தில்ஹம்சம்	ஹம்சம், கூர்மம்
150	5	கல்கிவிருக்ஷங்கள்	கல்கி இவை
150	1	விச்வக்சேந	விஷ்வக்சேந
153	29	பாதுகாக்கச் செய்யும்	பாது காக்கும்
154	19	கருவரை	கருவறை
155	22	ச்ரியப்ப	ச்ரியப்பதி
157	9	தேவையானது	தேவையானவை
157	17	தனத்தில்	மனத்தில்
157	17	மனதில்	மனதை

157	18	ஜயம்	ஐபம்
163	24	அதுதான் பெயரோடு மதம்	அது பெயரோடு. ஒரு மாதமாக
165	32	உபநிடதத்தில்	உபநிடதத்தில்
168	9	உபநிஷ ் துக்களிவ்	உபநிஷத்துக்களில்
169	2	வேதாந்திகளூல்	வேதாந்திகளுள்
170	28	கடைபிடித்த	கடைப்பிடித்த
171	28	வைணவந்தில்	வைணவத்தில்
,,	22	பிற்பற்றுவதா	பின்பற்றுவதா
172	10	அத்வைதக்	த்வைதக்
173	1	ஆகமங்களுடைய கருத்திற்கும்	கருத்திற்கும்
,,	24	தக்கரீதியில்	தர்க்கரீதியில்
		ஏ்ழுதப்பட்ட	விளக்கிஎழுதப்பட்ட
,,	1	ஆகமங்குளுடைய ஆகமங்குளுடைய	ஆகமங்குளுடைய கருத்து
175	16	தங்களின்படி	தங்கள் இஷ்டப்படி
178	8	ஆசார்யன்என்	ஆசார்யன என்ற,
,,	9	பூனூல்	பூணூல்
,,	31	லோகசாரியார்	லோகாசாரியார்
,,	8	என்சொல்பல	என்ற சொல்
179	26	சோதிக்கும்	சோசிக்கும்
,,	10	அசகதனுக்கு	அசக்தனுக்கு
180	21	கருத்துக்ளாகிற	கருத்துக்களாகிற
181	11	பெருரும்போது	பெருகும்போது
182	25	கொள்சிறார்	கொள்கிறான்
,,	21	எம்படியாவது	எப்படியாவது
,,	28	கிரு	திரு
186	7	உபநிடந்து	உபநிடத்து
187	21	ஜிக்	ஜிக்ஞாஸீ
,,	22	அர்த்தார்தீஞாஸ	அர்த்தார்த்தி
188	16	அன்புக்கு	அன்பினுல்
189	20	சேஷிபாதத்தில்	சேஷிபாவத்தின்
190	2	இருந்தாலும்	விருந்தாலும்
191	10	பன்னினுலும்	பண்ணினுலும்
,,	27	தமிழ்நாடு	தமிழ்நாட்டு
,,	30	கேட்டது	கேட்பது
,,	32	யுக்தியில்	யுக்தியின்
194	13	மனம்	மனனம்
197	6	உதாகணத்தில்	உதாகரணத்தில்

,,	24	தலை தூக்கினுல்	தலை தூக்கினுலும்
,,	8	அங்கார	அகங்கார
,,	25	எங்கு	எங்கும்
,,	31	பிரந்த	பிறந்த
200	32	சேர்ந்த	சேர்த்த
201	2	புராணங்களின்	புராணங்களில்
203	2	கூறுகிருன்	கூறுகிருள்
,,	4	அவண்ங்கு	அவனுக்கு
,,	2	ஸ்ரீஸ்தத்தில்	ஸ்ரீ ஸ்தவத்தில்
206	25	வெகுபிற்பட்டே	வெகுகாலம் பிற்பட்டே
207	9	ஆளவத்தார்	ஆளவந்தார்
,,	17	ஸ்ரீ குண ரத்த் கோசம்	ஸ்ரீ குண ரத்தன கோசம்
,,	24	இவ்வித	இவ்விதக் கருத்துக்கள்
208	6	ச்வரித்தன்மையை	ஈஸ்வரித்தன்மையை
,,	14	ஸ்ரீஸூக்தர்	ஸ்ரீஸூக்தம்
,,	22	ஓத்தில்லை	ஓத்ததில்லை
209	19	பாதத்தில்	பாசுரத்தில்
,,	30	கத்யரயம்	கத்யத்ரயம்
210	3	மருதவேண்டியுள்ளது	கருதவேண்டி வருகிறது
211	3	நிலையி	நிலையில்
212	13	ருஹி	குஹி
,,	27	பூமிளபூம்ளா	பூமிர்பூம்ஞ
,,	11	என்று	என்ற
214	13	ஆராய்சியாளர்	ஆராய்ச்சியாளர்
,,	22	வைகுண்டபது	வைகுண்டேதுபரே
,,	3	என்ற	என்று கூறும்
215	8	பெயா	பெயரால்
216	1	ஸாதவத	ஸாத்வத
219	19	தாமோத்தரம்	தர்மோத்ரம்
220	11	வைசிகர்	வைசியா
221	1	சத்பதத்தில்	சதபதத்தில்
222	17	பரவிட்டது	பரவிவிட்டது
223	12	நாகரீரி	நாரீ
,,	15	பொன்	பெண்
225	3	இவைகளை	இவைகள்
228	2	யார்ரங்கல்	யாரூங்கல்

,,	13	பரவையும்	பறவையும்
231	20	பக்திபாலகம்	பக்திமார்க்கம்
,,	14	ஸப்த்வா	வப்தவா
,,	15	மோக்ஷகொள்கை	இவ்வித மோக்ஷ கொள்கை
,,	30	பகவத்தனு	பகவதனு
232	2	பகவத்தனுபவம்	பகவதனுபவம்
236	5	உள்ளனவைக்கு	உள்ளவனுக்கு
,,	33	கருத்தை	கருத்தையும்
238	24	பகவான்வைஷ்னவ	வைஷ்ணவ
239	19	னுடையக்கருத்தை	னுடையகருத்தை
,,	12	ஐதியங்	ஐதிகங்
240	26	குரும்பப்பரம்பரை	குருபரம்பரை
241	10	மட்டுமின்று	மட்டுமின்றி
242	31	நம்மாழ்வார்உ	நம்மாழ்வார்உப
,,	25	மறையில்	மறையின்
,,	30	விஷ்வக்சேன	விஷ்வக்சேனர்
243	25	நத்தி	நந்தி
,,	11	கண்ணின் சிறுதாம்பு	கண்ணினுன் சிறுத்தாம்பு
244	8	ஆகமும்	ஆகமமும்
246	1	கடஸத்தராண	கூடஸ்தரான
247	9	மயாவர	மயர்வற
,,	17	ப்ரபந்தியை	ப்ரபத்தியை
249	21	பிரண்யத்தின்	பிரமாண்யத்தில்
,,	21	ரார்த்திகள்	ராத்ரிகள்
,,	8	பிடித்படித் துள்ளார்	பிடித்துள்ளார்
250	10	கொள்கைகல்	கொள்கைகள்
,,	11	எற்றி	எற்று
251	13	ஷீதாபாஷ்யம்	கீதாபாஷ்யம்
,,	13	வேதாந்த	வேதார்த்த
,,	3	ஒருஇடமே	இடமே
,,	25	ஸதனவிசேஷம்	ஸ்தானவிசேஷம்
,,	24	பரிச்சின்னம்	பரிஜனம்
252	1	அருதியிட்டு	அறுதியிட்டு
,,	12	இருப்பதினுள்	இருப்பதினுல்
254	18	சங்கரஐயர்	சங்கரநாயர்
256	12	பிரவர்ன	பிரவாள

256	17	சீடர்பரம்பரையில் சீடரான	சீடர்பரம்பரையில் கூரத்தாழ்வார்
257	21	அஷ்டாஷரம்	அஷ்டாக்ஷரம்
258	24	ச்ரமத்தினித்தில்	ச்ரமத்தினிடத்தில்
,,	24	வைஷ்ணத்வத் தையும்	வைஷ்ணவத் வத்தையும்
259	7	ஐநூறு	ஐந்நூறு
,,	30	ஏற்பட்டுன்ன	ஏற்பட்டுள்ளன
260	15	இக்ருத	இருந்த
,,	21	போவுவம்	போவவும்
263	9	பன்னும்	பண்ணும்
,,	10	வேறு என்ற	வேறு என்னும்
,,	10	என்ற	என்றும்
265	17	பஞ்சங்களை	பஞ்சகங்களை
266	6	கொண்டுபெற்று	பெற்றுக்கொண்டு
,,	24	முடிக்கு	முடிவுக்கு
267	14	உண்மைக் குறிக்கும்	உண்மைப் பொருளைகுறிக்கும்
268	1	மறத்து	மறந்து
,,	28	ஸ்ருபக	ஸ்ருப
270	12	குலம்	குணம்
,,	12	சௌனப்யம்	சௌலப்யம்
,,	8	பகவானுக்கு	பகவானுடைய
271	20	ஆரம்பத்தால்	ஆரம்பித்தால்
,,	7	மூலப்பொருள்	முழுப்பொருள்
272	3	முழுவதான	முழு
,,	34	அறிவுள்ளவர்கள்	அறிவுள்ளது
,,	32	பண்பாடு உள்ளவர்	பண்பாடுஉள்ளது
274	6	தனுபவனாதி	தனுப்புவனாதி
275	13	என்று	என்பது
275	14	அவனுடைய	அவனுடைய
266	3	ஓர்	ஒரு
277	4	விண்ணில் இருத்து	விண்ணில்இருந்து
,,	10	இரட்சிக்சிக்கிறான்	இரட்சிக்கிறான்
,,	24	சர்வேசுவரரத்னம்	சர்வேசுவரத்வம்
278	13	அதுவிஷயத்தில்	அதுவிரோதி விஷயத்தில்.
,,	1	அவனிடத்தில்	அவருடைய

279	21	ப்ரதயும் எனிடத்தில்	ப்ரத்யும்ன னிடத்தில்
281	33	அவருடைய தோஷங்களை	தோஷங்களை
282	8	பிராட்டி யான்ரயுப்	பிராட்டியாரையும்
,,	15	ப்ரயோஜம	ப்ரயோஜனம்
283	18	பிரித்துபேச	பிரித்துப்பேசப்பட
,,	30	காரணம்	காரம்
,,	13	பாகங்களை	யாகங்களை
284	20	பொருக்காமை	பொறுக்காமை
285	6	தசை	தசையில்
,,	21	பிறப்பு	ஜீவாத்மா பிறம்பு
286	17	அவனுல்	அதனுல்
287	3	மகதம்	மகத்
,,	21	தத்தஸ்தலத்தால்	சுத்தஸத்துவத்தால்
,,	10	தகுத்தாற்போல்	தகுந்தாற்போல்
,,	30	உருவியை	உறுதியை
288	11	மமகாரங்களை	மமகாரங்களையும்
,,	9	எல்லாம தேகத்	எல்லாம்
290	17	மூகிக்யமானது	முக்கியமானது
291	9	அர்கிறுதி	அர்ச்சிராதி
,,	29	ஸ்வரூபனுப	ஸ்வரூபரூப
,,	29	அதுபவிக்கும்	அனுபவிக்கும்
292	16	பகவத்நு	பகவதநு
,,	29	இருப்பதுபது போல்	இருப்பதுபோல்
,,	8	அடைவதே	அடைவதை
,,	17	பரிசுத்ம	பரிசுத்த
,,	29	போதுபோல்	போல்
293	14	எப்போமுதும்	எப்பொழுதும்
,,	26	கணக்காக	கண்ணுக
,,	27	ஞனநந்தமய்மய	ஞானாநந்தமய
,,	12	பகவாநு	பகவதநு
,,	19	இடமே	இடமேது ?
294	15	கடவுள் வாழ்க்கையில்	வாழ்க்கையில்
,,	28	அல்லறிவு	அவ்வறிவு
295	1	அல்லறிவு	அவ்வறிவு
,,	6	பகவானிடம்	பகவானுக்கு

297	7	விபவறலதரங்	விபுவாவதாரங்
,,	14	ப்ரப்ந்தமேயாகும்	பிரபந்தமேயாகும்
,,	22	குறிப்பிட்டு	குறிப்பிடப்பட்டு
298	13	விஞ்சி	வஞ்சி
,,	14	அறு	ஆறு
,,	15	அப்பொருளுக்கே	அகப்பொருளுக்கே
,,	19	பழவற்றையும்	பலவற்றையும்
,,	25	மானிடம்	மானுடம்
299	6	வருணையையில்	வருணனையில்
,,	24	அர்ச்சனைகளை	அர்ச்சைகளை
300	10	அரணை	அரனை
,,	1	ஐநூறு	ஐஞ்நூறு
301	1	மகளிர்	குலமகளிர்
302	16	விடுகின்றன்றது	விடுகின்றது
303	8	அடியார்கும்	அடியார்க்கும்
,,	16	அந்தணாய்	அத்தனாய்
304	8	முதலிய	இதுபோன்ற
304	13	நம்காலத்து	தம்காலத்து
,,	18	இலக்கியமாக மரபு	இலக்கியமரபு
305	11	திறநதை	திறத்தை
,,	29	முதலிய	முதலியன
307	14	விக்கிரவழிபாடு	விக்கிரகவழிபாடு
,,	16	சித்தனையாளர் களுடைய	சிந்தனையாளர் களுடைய
,,	24	கண்ணத்தே'	கண்ணதே;'
309	24	மேற்கொள்கை	மேற்கோள்
311	18	போதாயரர்	போதாயனர்
,,	20	வைகாசனர்	வைகானசர்
312	3	அழகியமணவாள ஜீயர்	பெருமாள்ஜீயர்
,,	29	வைணவம்	புதுவைணவம்
315	2	பெயர்களுக்குள்	பெயர்களுக்குள்ள



ஸ்ரீ ராமா பிரிண்டிங் ஓர்க்ஸ், கும்பகோணம்.